மகாபாரதச் சுருக்கம்

துரோண பருவம்



65
3065
6

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-90

மகாபாரதச் சுருக்கம்

ஏழாவது

துரோண பருவம்

பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது

Mahabharatha Curukkam,

Drona Parvam

உரையாசிரியர் - பதிப்பாசிரியர்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்

M.A. (Hist.) M.A. (Tamil), L.T., P.O.L.,

Dipl. Geog. Vidvan.

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகாநந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4.

(U.G.C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090.

1986

மகாபாரதச் சுருக்கம்

ஏழாவது

துரோண பருவம்

பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது

Mahabharatha Curukkam,

Drona Parvam

உரையாசிரியர் - பதிப்பாசிரியர்

பேராசிரியர் C. ஜெகந்நாதாசார்யர்

M.A. (Hist.) M.A. (Tamil), L.T., P.O.L.,

Dipl. Geog. Vidvan.

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகாநந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4.

(U.G.C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090.

1986

மகா மகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்-97

முதற்பதிப்பு 1986 - 1000 பிரதிகள்

(C) மகாமகோபாத்தியாய
டாக்டர் உ-வே-சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர், சென்னை-600090

விலை: ரூ, 25/

Published with the Financial Assistance
of the Government of India.
Dept. of Edn, and Culture, New Delhi.

Printed at Sudha Printers, Royapettah, Madras-600 014

உள்ளடக்கம்

பதிப்பாளர் குறிப்பு	....	vii-viii
Introduction	...	ix-xiv
முகவுரை	....	xv-xvi
நூல்	....	1-278
பதினோராம் போர்ச்சருக்கம்	...	1-23
பன்னிரண்டாம் போர்ச்சருக்கம்	...	24-47
பதின்மூன்றாம் போர்ச்சருக்கம்	...	49-132
பதினான்காம் போர்ச்சருக்கம்	...	133-253
பதினைந்தாம் போர்ச்சருக்கம்	...	254-278
அபிதான சூசிகையகராதி	....	279-287
அரும்பதவகராதி முதலியன	....	288-299
சில அருந்தொடர்கள்	....	300-301
செய்யுண்முதற்குறிப்பகராதி	....	302-312

பதிப்பாளர் குறிப்பு

முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே
இயற்றுவாய் எம்மொடுநீ கூடி - நயப்புடைய
நாவீன் தொடைக்கிளவி யுள்பொதிவோம் நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ்.

(நம்மாழ்வார்)

இந்தத் துரோண பருவம் மகாபாரதத்துள் ஏழாவதாக உள்ளது. இப்பருவத்தில் பலவகைத் தர்மங்களும், நீதிகளும், சரித்திரங்களும் கூறப்பட்டுள்ளபோதிலும் விரிவாகக் கூறப்படுவது போரின் சிறப்பே அதிகம். பதினெட்டு நாட்போரில் இடையிலுள்ள ஐந்து நாட்களில் நடந்த கடும்போரைப் பற்றிக் கூறுவது இப்பருவம்.

பாண்டவர்கள் வில்வித்தையில் சிறப்படைந்தமைக்குக் காரணகர்த்தாவான துரோணர் படைக்குத் தலைமை தாங்கிப்போர் செய்ததும், அபிமன்யு, பகதத்தன், கடோத்கசன் முதலானவர்களுடைய கடும் யுத்தமும், ஷோடசராஜகீயம் (பதினாறு அரசர்களின் கதை) ஜயத்ரதவதம், இரவில் யுத்தம் ஆகிய அரிய விஷயங்களை இப்பருவம் விளக்கிக் கூறுகின்றது. இப்பருவத்தில் துரோணாபி - ஷேக பருவமும், ஸம்சப்தகவத பருவமும், அபிமன்யுவத பருவமும், கடோத்கசவத பருவமும், துரோணவத பருவமும், நாரயணாத்திர மோட்ச பருவமும் அடங்கியுள்ளன.

கடும்போர் நடக்கும்போது இக்கட்டான சமயங்களில் இருதிறத்து வீரர்களும் மந்திராலோசனை செய்வதும் சமயத்துக்குத் தக்கபடி காரியங்களைச் செய்வதும் இருதிறத்து வீரவாதங்களும், வீரச்செயல்களும் மனத்தில் பதியும்படி விரிவாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளன.

பதினான்காவது நாள் யுத்தத்தில் சூரியாஸ்தமனத்திற்குள் ஜயத்ரதனைக் கொல்லவேண்டும்; சூரியன் மேற்குத்திக்கில் சாய ஆரம்பித்துவிட்டான்; அருச்சுனனுடைய குதிரைகள் களைப்படைந்து நடக்கச் சக்தியற்றவைகளாயின. அவ்வமயம் அருச்சுனனால் ஏற்படுத்தப்பட்ட குளத்தில் குதிரைகளுக்குத் தண்ணீர்காட்டிக் களைப்பாற்றித் தேய்த்துப் புண்களுக்குச் சிகிச்சை செய்து, மணலில் புரளவிட்டுத் தேரில் பூட்டி அருச்சுனனைத் தேரில் ஏற்றிக்கொண்டு விரைவாகத் தேரைச் செலுத்தியமையைப் படிக்கும்போது

கண்ணன் அடியார்களுக்கு எளியவன் என்பதை நன்கு அறிந்து கொள்ளலாம். பக்தர்களுக்குப் பரமாத்மா கட்டுப்பட்டவன் என்பதை இப்பருவ நிகழ்ச்சியின் மூலமாக நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அருச்சுனன் பிறருக்குத் தெரியாமல் தனக்கு அநுகூலமாக நின்று போர்புரிபவர் யாரென்று வியாசரைக் கேட்டதும், வியாசர் அவர் பசுபதி என்று சொல்லி அவர் மகிமைகளை நூற்றுநாற்பத்து நான்கு சுலோகங்களில் கூறுவதும் இப்பருவமேயாகும்.

இந்நூலில் இப்பருவம் 278 செய்யுட்களைக் கொண்டது. இந்தப் பருவத்தினைத் திருமதி ருக்மிணிதேவி அவர்களால் நிறுவப்பட்டுத் திருவான்மியூரில் இலங்கிக் கொண்டிருக்கும் **டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்** சுவடியிலிருந்து அச்சேற்றித் தமிழுலகத்திற்கு அளிக்கின்றது,

இந்தப்பருவத்திற்கும் பதவுரை, விளக்கவுரை முதலியவற்றை உள்ளன்போடு எழுதிக்கொடுத்தவர் திரு. C. **ஜெகந்நாதாசார்யர்** அவர்கள். அன்னாருக்கு நூல்நிலையத்தின் சார்பில் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மத்திய அரசு இப்பதிப்புக்கு மானியம் அளித்தமைக்கு நன்றி.

இந்நூலினை நன்கு அச்சிட்டுக்கொடுத்த சுதா அச்சக உரிமையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித் துறைப்பிரிவு,
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்.

சென்னை-90
3-7-1986

Introduction

Man is considered to be paragon of animals. He is undoubtedly the apex of creation. In apprehension he is like a God. But all these things will carry no weight unless he realises the goal of life. This goal of life can be determined only if he has recourse to "Shastras" or codes of law. These codes are to be found in the Vedas, Smrithis, Itihasas and Puranas. But to go through all these texts in a life-time is a herculean task and hence if one takes into his head to go through the Itihasas alone it is tantamount to have gone through all the scriptural texts mentioned above. These Itihasas are two in number, the Ramayana and the Mahabharata.

Our Bharat is the Punya Bhoomi which produced these two mounmental works. The Ramayana is by Valmiki and the Mahabharata by Vyasa. Both are sages of a high order. Of the two, Vyasa is considered to be Vishnu incarnate; c.f. "Vyasaya Vishnu rupaya Vyasa rupaya Vishnave". His work, the Mahabharata consists of nearly a lakh of slokas, divided into eighteen 'Parvas'. The amanuensis for this colossal work is none other than Vinayaka, the Lord of 'the Ganas'. This work includes the Bhagavat Gita in Bhishma Parva and the Vishnu Sahasranama Stotra in the Anusasanika Parva. Hence the sancity of the work is emphasised in more ways than one. Though apparently, the work seems to deal with the history and lives of the Kings of the Kuru dynasty who carried an internecine war resulting practically in total annihilation, yet it contains the panacea for all the evils in this world, guiding us at the same time in the right path to face the problems of life which may arise in diverse situations.

Now, I shall briefly give the essence of Drona Parva.

DRONA PARVA

This is the Seventh of the eighteen Parvas (Sections) of the Mahabharata. This consists of five sargas or Carukkams. (Sub-sections starting from Pathinoram - Por-Carukkam and ending with Pathinaintam - Por - Carukkam (i.e. the fifteenth - day battle). This Parva deals about the five days' battle between the Kauravas and the Pandavas. The Kaurava army was led by Drona, as its generalissimo. The important events and details dealt with in this Parva can be briefly analysed as follows.

(i) **On the Eleventh Day**: Drona was requested by Duryodhana to be the generalissimo and to take Dharmaputra Captive - Fight between Sakuni and Sahadeva - Salya's march against Bhima - Nakula intercepted him and conquered him - Fight between Drupada and Bhagadatta - Sikandi defeated Somadatta - fight between Abhimanyu and Lakshanakumara, son of Duryodhana. Abhimanyu overpowered him and tied him in his chariot. At that time Jayatradha and Karna surrounded Abhimanyu but got themselves defeated and retreated. Salya came to fight but Bhima felled him. Meanwhile Lakshanakumara escaped from the clutches of Abhi - manyu, Kritavarma came to save him and took him away to their camp The sun set. Duryodhana spent a sleepless night. The Samsaptakars under Trikartha made a vow to prevent Arjuna from joining and helping his brother Dharmaputra. The sun rose.

On the Twelfth Day : Samsaptakars challenged Arjuna. Drona came on Dharmaputra, but Drishtadyumna checked him. Fight between Drona and Dharma and Drona retreated. Fight between Bhima and Bhagadatta. Later Bhagadatta and Arjuna fought and Bhagadatta was killed. Fight between Sakuni and Dharma and Sakuni retreated, Fight between Drona and Bhima and Drona retreated. The Pandavae returned to their camp victoriously. The sun set, and ross the next day.

On the Thirteenth Day : Drona defeated Drishtadyumna. Dharma commanded Abhimanyu to destroy the Chakra-Vyuha and Abhimanyu went to the battle-field. All warriors including Drona, Aswathama, Karna, Kritavarma, Kripa, Sakuni, Salya and brothers of Duryodhana retreated before Abhimanyu, not able to fight with him. Sakuni's son and Salya's son both died in the fight, Drona himself praised the valour of Abhimanyu. Duschasana entered the field but was defeated and he retreated.

Bhima criticised Dharma for sending the young boy Abhimanyu to fight against mighty opponents and then he himself came forward to help him. Bhima on the way killed many opponents. Duryodhana wanted to separate Bhima from joining hands with Abhimanyu and Jayatradha overcame all obstacles because of the boon got from Siva.

Abhimanyu was surrounded by all heroes. Lakshana-Kumara died at Abhimanyu's hands, This made the Kaurava army to take a vow to dispose of Abhimanyu somehow. Drona chopped off his hand with scimitar and Karna shattered his shield. At last Duschani, son of Duschasana put an end to Abhimanyu but himself died in the endeavour. All bemoaned for the death of Abhimanyu, a youth of rare courage and indeed a great hero. The sun set and Vyasa came to console Dharma.

Arjuna's return to the camp and he moaned over the loss of his son Abhimanyu. He took a vow to dispose of Jayatradha before sunset. The Kauravas, on the other hand, took a pledge to protect Jayatradha till sunset. Then both Arjuna and Krishna went to Kailas in their night's dream to learn the art of handling the bows and arrows - the sun rose.

On the Fourteenth Day : Dharmaputra gave Arjuna as a refuge to Krishna to be protected by him. Arjuna enjoined on Satyaki to guard Dharmaputra. Arjuna was confronted by Dunmarshanan but he retreated before Arjuna. So also Duschasana came to fight with Arjuna and retreated. Then

Sudhayu fought with Arjuna and he threw a mace at Arjuna but Krishna received the mace on his chest and as a consequence Sudhayu died. Arjuna dug a tank in the battle-field to quench their thirst as well as that of the horses.

Drona presented an impenetrable armour (Kavacha) to Duryodhana for a fight with Arjuna. Drona was confronted by Satyaki. Nakula conquered Vikarna and Sahadeva conquered Dunmuka. Then Gatothkacha fought with Alambusa - Duryodhana fought with Arjuna and Krishna gave a javelin and with that weapon he pierced the Kavacha and broke it into shreds.

Bhima and Satyaki joined Arjuna and Krishna - later Vikarna challenged Bhima but died in the encounter. Fight between Karna and Bhima and Karna jeered at him. Meanwhile Satyaki killed Purisrava. Karna confronted Arjuna. Now Krishna planned the strategy to **conceal the sun** by his disc (Chakrayudha) and thus created an artificial sunset. Out came Jayatradha from his concealment and at once Arjuna aimed an arrow at him and it killed him. After this, Krishna removed the disc and the sun shone bright.

Thus Arjuna fulfilled his vow.

Then Drona killed Drishtaketu, son of Drishtadyumna and confronted Bhima. Aswathama Killed Anjanapadman, son of Gatothkacha. Bhima killed Bahulika, father of Somadatta.

Night-Battle

Aswathama entered the arena, and got himself defeated by Gatothkacha. Sadanika defeated Salya and Karna made Sahadeva retreat. Then Karna was encountered by Drishtadyumna - Meanwhile Gatothkacha killed Alambusa. Alayudha, an Asura fought with Gatothkacha. Gatothkacha proved his immense prowess by taking various shapes because of his magical powers and now Karna killed him with a javelin presented by Indra. Drona chopped off the head of both

Virata and Drupada - All took rest and went to sleep in the battle - field itself as per the directions of Arjuna. The sun rose the next day.

On the Fifteenth Day : Arjuna disposed of Balabhima, a prince in Duryodhana's camp, Kuntibhoja attacked Drona but the Pandava forces were defeated. At that time, sages approached Drona and advised him to renounce war. He obliged. Krishna took the opportunity and compelled Dharmaputra to tell a seeming lie. Dharma refused, Krishna convinced him about the ultimate aim and Dharma obliged by uttering, no doublt, a truth but Krishna blew his conch and in its sound, the truth degraded itself to a seeming lie. Drona's 'prana' passed through his head like a 'jothi' and at that time Drishtadyumna aimed an arrow which took off Drona's head. Thus ended Drona's life.

Aswathama's grief over the loss of his illustrious father and his unabated anger knew no bounds, Meanwhile Arjuna chastised Drishtadyumna for killing Drona but Bhima took sides with Drishtadyumna. At that time Dharma interfered and pacified all the three.

Then Aswathama aimed the Narayanastra and it attacked Bhima who had not laid down his weapons. Krishna advised Bhima to throw off his weapons. so as to escape from harm, but the arrow began to lose its power because of its association with an evil cause and bad rule. Aswathama sent the Agneyastra and Arjuna by his Brahmastra made it lose its potency and Aswathama became vexed. Now Vyasa came and reconciled Aswathama by his 'upadesa'. The sunset and both the contending sides retired to their respective tents.

This in short is the essence of this Parva. Philosophical truths and moral values are stressed in the Parva in the course of its narration and I have done may best to bring them into limelight.

The work of writing a Commentary on all the Parvas of the "Mahabharatha Curukkam" was enjoined on me by the authorities of Dr. U. Ve. Swaminatha Iyer Library and I am grateful to them for this honour conferred on me. By the grace of the Mahamahopadyaya Dakshinadhya Kalanidhi Dr. Iyer and by the benign benediction of my esteemed Guru, Sri. U. Ve. V. M. Gopalakrisnamachariar, the modern Patanjali, I ventured to write this explanatory commentary. I have given the meaning for words, their explanation, allusions, the grammatical peculiarities, the kind of prosody used in the course of the composition, and the rhetoric set like gems now and then.

My thanks are due to Sri K. Subramania Iyer, Honorary Curator of Dr. U. Ve. S. Iyer Library and to his associate Sri. S. Balasaranathan for the encouragement they have given me. In fine, I express my gratitude to the Sudha Printers, Royapettah, Madras -14 for their excellent co-operation.

Triplicane,
Madras-5.
10-7-1986.

C. Jagannathachariar
Commentator & Editor

முகவுரை

அருந்தமிழன்பர்காள் !

பாரதம் பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது. அவற்றுள் ஏழாவது இந்தத் துரோணபருவமாகும். இந்தப் பருவம் ஐந்து சருக்கங்களைக் கொண்டமைந்தது. பதினோராம் போர்ச்சருக்கம் முதல் பதினைந்தாம் போர்ச்சருக்கம் வரையில் உள்ளது. துரோணன் துரியோதனனுதியர் சேனைத்தலைவனுய் நின்று ஐந்து நாள் போரை நடத்தி இறுதியில் திட்டத்துய்மனுல் உயிர்துறந்தமை வரையில் கூறும் கதைப் பகுதியைக் கொண்டது.

இந்தப்பருவத்துப் பதினன்காம் போரன்றுதான் "பாராழி யவலமறப் பாண்டவர்தம் இடர்தீரப் பார்த்தன் வாழப், பேராழி யணைதுயிலும் பெருமிதமும் உடன்மறந்து பிறந்த மாயோன், ஓராழி யெழுபரித்தே ருடையானை மாயையினு லொழிக்கத் தன்கைக் கூராழி பணித்தது. "கொற்றம் வெய்யோன் ஓராழித் தேர்மறைத் தானை எஞ்ஞான்றும் உரை நெஞ்சமே" என்று உபதேசித்தார் திவ்யகவி, இந்தத் துரோண பர்வத்துப் போர்ச்சருக்கங்களில் நகுலன், சகதேவன், அபிமன்யு, கடோற்கசன், சயத்திரதன் திட்டகேது, இலக்கணகுமாரன், துச்சாதனன், விகர்ணன், துர்ச்சயன், துன்மருடணன், துச்சனி, உத்தமோசா, உதாமன், அலம்புசன், சோமதத்தன், சுதாயு போன்ற இளைய வீரர்களின் சாகசங்களும், தருமன், வீமன், அருச்சுனன், அசுவத்தாமன், கர்ணன், துரியோதனன், சாத்தகி, பகதத்தன், திட்டத்துய்மன், சல்லியன், சகுனி, கிருதவன்மன், கிருபன் போன்ற தனிப்பட்ட வீரர்களின் வல்லபமும், அனைத்தினும் மேலாக குருதேவராகவும் வில்லாசிரியராகவும் முதியோராகவும் விளங்கிய ஆரியன் துரோணரின் போரிடுந் திறனும் வெகுசிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.

அறிவுரைகள் பல கொண்டுள்ள இந்தப் பருவத்துக்கு அடியேனை உரையெழுதும்படி பணித்த மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல் நிலையத்தார்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயரவர்களின் ஆசியின் பலமும், அடியேனுக்கு ஞானுசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி அவர்களின் அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரையெழுதத் துணிந்தேன்.

இந்தத் துரோணபருவவுரையில் பல அரிய விடயங்கள், இலக்கண நுணுக்கங்கள், உரைவிசேடங்கள், போர்க்குறிப்புக்கள் மேற்கொள்ள வேண்டிய நற்பண்புகள் முதலியன காட்டியுள்ளேன். மற்றும், பயில்வோர்க்குப் பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் அபிதானசூசிகையகராதி, அரும்பதவகராதி முதலியன, அருந் தொடர்கள், செய்யுண்முதற்குறிப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய சுதா பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்கும் அடியனை இந்நற்பணியிற் கூவியேவல் கொண்ட ஸ்ரீ.க. சுப்பிரமணிய ஐயர் அவர்களுக்கும் என்றும் நன்றியறித லுடையேன்.

திருமகள் கொழுநனான திருமால் தனது சரிதையாகிய இப்பாரதத்தில், அடியேனுக்கு மனம் பதியுமாறு செய்து இந்நூலின் துரோண பருவத்திற்கு நல்லுரை வெளியிடுதலாகிய இந்த நற்பணிக்குத் தோன்றாத்துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்தி லீடுபட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்,

மூன்றுருவாய் அப்பால் முதலுருவே றில்லாத
சான்றுருவாய் அப்பால் தருமுருவாய்த் - தோன்றி
அணையாக நாகத் தறிதுயில்வா னென்றுந்
துணையாக நெஞ்சே தொழு.

அக்ஷய ஹூ
ஆனி மீ", 26
10-7-1986

இங்ஙனம்
சி. ஜெகந்நாதாசார்யர்
உரையாசிரியர் - பதிப்பாசிரியர்

டாக்டர் ஐயரவர்கள்

1855 - 1942

ஏழாவது

துரோண பருவம்

துரோணனது சம்பந்தமான பருவமென்று ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்க. இனி, இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுந் தொக்க தொகையாக, துரோணனைப் பற்றிய பருவ மெனினும் அமையும். துரோணன் துரியோதனுதியர் சேனைத் தலைவனாய் நின்று ஐந்து நாள் போரை நடத்திய கதையைக் கூறும் பாகமென்று பொருள்.

பதினோராம்

போர்ச் சருக்கம்

பத்து+ஒன்று - பதினொன்று! உம்மைத்தொகையில் நிலைமொழி யிற்று உயிர்மெய்கெட இன்சாரியை தோன்றிற்று: (நன்: உயிர்: 47) ஒன்று+ஆம் - ஓராம்: ஒன்று ஈற்றுயிர்மெய்கெட்டு னகரம் ரகமாய் முதல் நீண்டது; (நன்: உயிர்: 38, 39.)

வேறு.

1. கிருஷ்ண ஸ்துதி

ததிக்குடை முல்லை யண்டர்
தருமத ரரிக்கண் நல்லார்
நதிக்குடை வேலை நாண
நாகங்க டருக்கொண் டெற்றி
மதிக்குடை யவன்றே ரார
மலைகளுங் காட்டித் துவாரைப்
பதிக்குடை யாயென் றேற்பப்
பணித்துளா னுளத்துளானே.

(இ-ள்) ததி குடை - தயிரைக் கடைகின்ற, முல்லை அண்டர் தரும் - முல்லை நிலத்து ஆயர் பெற்றெடுத்த, மதர் அரி கண் நல்லார் - செருக்கிய வரிகளோடு கூடிய கண்களைக் கொண்ட கோபியர்கள், நதி குடை வேலை நாண - ஆறுகள் உட்புகுகின்ற கடலலைகள் வெட்கும்படி, நாகங்கள் - நற்றூசுகளை, தருக்கொண்டு - களிப்புக்கொண்டு, எற்றி - வீசி, மதி குடையவன் தேர் - சந்திரனைக் குடையாகக் கொண்ட மன்மதனுடைய தேர்த் தட்டாகிய அல்குலினையும், ஆரம் மலைகளும் - சந்தனம் பூசப்பெற்ற குன்றுகள் போன்ற தனங்களையும், காட்டி -, துவாரைப்பதிக்கு உடையாய்!- துவாரகை நகர்க்கு அதிபனே!, என்று ஏற்ப-என்று விருது கூறி வரவேற்கும்படி, பணித்துளான் - ஆணையிட்டுள்ள ஸ்ரீகிருஷ்ணன், உளத்துளான் - என் மனத்தில் கோயில்கொண்டுள் ளான். (எ.று)

'உளத்துளான்' என்றதால் அவனைத் தியானிப்பேன் என்றபடி, ததிக் குடை நல்லார் என இயையும். குடைதல் - கடைதல், உட்புகுதல் என்ற பொருள்களில் முறையே வந்துள்ளது. நாகம் - நல்ல வஸ்திரங்கள்: பாம்பின் தோல்மேல் மெல்லியதாயிருக்கும் ஆடையினைக் காட்டும்: ''அரவுரியன்ன அறுவை நல்கி'' (பொருந: 83) தருக்கு - களிப்பு: மகிழ்ச்சி. வஸ்திரங்களை வீசுதல் மகிழ்ச்சி மிகுதியால். கடலலைகள் ஒன்றன் பின்னொன்று வரிசையாக மடங்கி வருதலும் பின்னிடையும்படி நல்லாடைகள் அபரிதமாக ஒன்றன் பின்னொன்று வரிசைப்பட வீசுப்பட்டன என்றபடி. நாணுதல் - வெட்குதல், பின்னிடைதல். பெரியோர்களை வரவேற்கும்போது

மகிழ்ச்சி மீக்கூரத் தூசு வீசுதல் மரபு.மதிக்குடையவன்-மன்மதன்: அவனுக்குக் குடை சந்திரனுவன்: அவனுக்குப்படை மகளிராதலின் அவர்களின் அல்குலினைத் தேர் என்றது: அல்குலின் பரப்புக்குத் தேர்த்தட்டினையுவமை கூறுவர். ஆரம் - முத்துமாலை யென்னவு மாம். ஈற்றடியில். பிராசம்.

இதுமுதல் பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும் மற்றை நான்கும் மாச்சீர்களு மாகிய அறுசீராசிரிய விருத்தங்கள்: இவற்றில் மூன்று ஆருஞ் சீர்கள் தேமாச்சீர்களாகவே நிற்கும். (1)

2. வைசம்பாயனன் ஜெனமேஜயனுக்குக் கூறத் தொடங்குதல்.

அருந்தவ னுரைத்தல் கேளா
அகமகிழ்ந் தப்பாற் செய்கை
தெரிந்திட வுரைத்தி யென்னுச்
சேயரி மழைக்கட் செவ்வாய்
திருநதிழை வபுட்டை கேள்வன்
சேவடி வணங்க மற்ருேன்
பரிந்துரைத் திடுவான் வேந்தே
பரிதியைப் பணிந்து காலை,

(இ - ள்) அருந்தவன் - வைசம்பாயன முனிவன், உரைத்தல் கேளா - சொன்னதைக்கேட்டு, அகமகிழ்ந்து - மனங்களிப்புற்று, அப்பால் செய்கை - மேல் நடந்த நிகழ்ச்சியை, தெரிந்திட -(யான் நன்கு) தெரிந்துகொள்ளும்படி, உரைத்தி - சொல்வாயாக, என்னு - என்று பிரார்த்தித்து, சேய் அரி மழைக்கண் செவ்வாய் திருந்து இழை வபுட்டை கேள்வன் - சிவந்தவரிகளோடு குளிர்ந்த கண்களையும் சிவந்த வாயினையும் திருத்தப்பட்ட ஆபரணங்களையும் உடைய வபுஷ்டமை யென்பவளின் கணவனுகிய ஜெனமேஜயன், சேவடி வணங்க - திருப்பாதங்களில் பணிய, மற்ருேன் - அந்த வைசம்பாயனன், பரிந்து உரைத்திடுவான் - அன்புகொண்டு சொல்லலானுன். (அஃது பின் வருமாறு) : வேந்தே! - அரசனே; பரிதியைப் பணிந்து காலை - சூரியனை நமஸ்கரித்துக் காலையில்; (எ-று) "சென்றிடும் அரசன்பாங்கர்" என மேலைக் கவியில் குளகமாய்த் தொடரும்.

வபுஷ்டமை யென்பவள் காசிதேசத்து ராஜாவாகிய சுவர்ண வர்மா என்பவனின் மகள் : இவளை அந்த அரசன் பரீட்சித்து

மகன் ஜனமேஜயனுக்குத் திருமணஞ்செய்து கொடுத்தான். கேளா - உடன்பாட்டெச்சம். - உரைத்தி - முன்னிலை வியங்கோள். சேயரி, செவ்வாய், சேவடி - பண்புத்தொகைகள். (2)

3. கண்ணன் துரியோதனனிடம் வீரவாதம் பேசுதல்.

செங்கள மனிகத் தோடுஞ்
சென்றிடு மரசன் பாங்கர்
அங்கர்கோ னெய்த வேந்தர்
ஆரியன் அவன்சேய் வன்னி
இங்கிவ ரன்றிப் பார்த்தன்
எதிரினிற் பவரா ரென்ன
வெங்கதிர் மதலை யானே
வெல்வனென் றுறுதி கூறி.

(இ-ள்) அனிகத்தோடும் - (தனது) சேனையோடும், செங்களம் - சிவந்த போர்க்களத்திற்கு, சென்றிடும் - போகின்ற, அரசன் பாங்கர் - துரியோதனன் பக்கத்தில், அங்கர்கோன் எய்த - கர்ணன் வந்துசேர, (அவனை நோக்கித் துரியோதனன்) வேந்தர்-துணையாகவந்துள்ள மன்னர்கள், ஆரியன் - துரோணாசாரியன், அவன் சேய் அவன் மகனாகிய - அசுவத்தாமன், வன்னி - வீடுமன், (ஆகிய) இவரன்றி - இவர்களேயல்லாமல் இங்கு - இப்போது இவ்விடத்து, பார்த்தன் எதிரில் நிற்பவர் ஆர் என்ன - அருச்சுனனுக்கு எதிராக எதிர்த்து நிற்பவர் யாருளர் என்று வினவ, (அப்போது) வெங்கதிர் மதலை - சூரிய புத்திரனாகிய கர்ணன், யானே வெல்வன் என்று - நானொருத்தனாகவே நின்று (அவனை)ச் செயிப்பேனென்று, உறுதி கூறி - துணிவான வார்த்தை சொல்லி; (எ.று) "...பிதாமகனிடம் புக்கு" என மேலைக்கவியில் இயையும்.

செங்களம் - குருக்ஷேத்திரம். பாங்கர், அர் - போலி. யானே, ஏகாரம் - தேற்றம். (3)

4. கன்னன் வீடுமனிடம் செல்ல, அவன் கடமை கூறியனுப்புதல்.

பின்றிரி பதகை சேயாம்
பிதாமக னிடம்புக் கேத்தி
நின்றனை வீழ்த்தோ ராவி
நீக்குவன் விடைநல் கென்ன

குன்றுறழ் புயத்தோ னென்னைக்
கொன்றிடுங் கொடுமை கூறேல்
உன்றனை நம்பி நின்ரேற்
குலகரு ளிகல்வென் றென்ருன்.

(இ-ள்) பின் - பிறகு (கர்ணன்) திரிபதகை சேய் ஆம் - கங்காபுத்திரனுகிய, பிதாமகன் - வீடுமன், இடம் புக்கு - இருக்கும் இடத்தைச் சேர்த்து, ஏத்தி - (அவனைப்) போற்றி, 'நின்தனை - உன்னை, வீழ்த்தோர் - ஒடுங்கச் செய்தவர்களின், ஆவி - உயிரை, நீக்குவன் - போக்குகின்றேன்; விடை நல்கு - அனுமதி கொடுப்பாயாக', என்ன - என்று பிரார்த்திக்க, (அதற்கு) குன்று உறழ் புயத்தோன் - மலைபோன்ற தோள்களையுடைய வீடுமன், 'என்னைக் கொன்றிடும் கொடுமை கூறேல் - என்னைக் கொன்று விட்டார்களென்று கொடிய வார்த்தையைச் சொல்லாதே; (அதற்கு மாருக) உன்தனை நம்பி நின்ரேற்கு - உன்னை நம்பியிருக்கின்ற துரியோதனனுக்கு, இகல் வென்று - (அவனது) பகைவர்களைச் செயித்து, உலகு அருள் - இந்நிலவுலக ஆட்சியை நிலை பெறச் செய்வாய்', என்ருன் - என்று கூறி முடித்தான்; (எ-று).

திரிபதகை - கங்கை. வீழ்த்தோர் - வினையாலணையும் பெயர். உறழ் - உவமவுருபு. கூறேல் - முன்னிலை எதிர்மறை வினைமுற்று. (4)

5. துரியோதனன் துரோணனைச் சேனுபதியாயிருக்க வேண்டுதல்.

அவ்வுரைக் கிருதோ ளோங்கி
யடைந்தவக் கன்னன் பின்னேன்
சவ்பல னெடுமாய்ந் தண்ணல்
தனுவலா ரியனைத் தாழ்ந்து
வெவ்வமர் தனில்யார் நின்னை
வெல்பவ ருளம்வை யென்னுச்
செவ்வியோன் வெல்வ னென்னைச்
சேனைநா யகனுக் கென்ருன்.

(இ-ள்) அ உரைக்கு-(வீடுமன் கூறிய) அந்த வார்த்தையைக் கேட்டு, இருதோள் ஓங்கி - (தனது) இரண்டு தோள்களும் (வீரக் களிப்பினுல்) பூரித்து, அடைந்த - (தன்னிடம் வந்து) சேர்ந்த, அ கன்னன் - அந்தக் கர்ணனேடும், பின்னேன் - (தன்) தம்பியாகிய

துச்சாதனனோடும், சவ்பலனொடும் - சகுனிமாமனோடும், அண்ணல்- துரியோதனன், ஆய்ந்து - ஆலோசனை பண்ணி, (அதன் விளைவாக) தனு வல் ஆரியனைத் தாழ்ந்து - வில்லில் வல்ல துரோணாசாரியனை வணங்கி, 'வெவ் அமர் தனில் - கொடிய இந்த யுத்தத்தில், நின்னை வெல்பவர் யார்? - உன்னை ஜெயிக்கும் வல்லமையுடையவர் எவர்? (ஒருவருமிலர்) உளம் வை - மனங்கொண்டு அருளவேண்டும்' என்னு - என்று கூற(அதுகேட்ட)செவ்வியோன் - துரோணாசாரியன், 'என்னைச் சேனைநாயகன் ஆக்கு - என்னைச் சேனாபதியாக நியமிப் பாய்: வெல்வன் - ஜெயித்துத் தருகிறேன்', என்றான் - என்று தன்- முடிவினைக் கூறினான்; (எ. று.)

அண்ணல் ஆய்ந்து என மாறுக. துட்டசதுட்டர் தம்முள் ஆய்ந்தனரென்றபடி. வை - முன்னிலை வியங்கோள். வெல்வன் - தன்மையொருமை ஆக்கு - முன்னிலையேவல். உளம் வைத்தல்- கிருபை செய்தல். (5)

6. தருமனையகப்படுத்தித் தரத் துரியோதனன் துரோணனை வரம் வேண்டுதல்.

அவ்வணஞ் சேனை நாதன்
 ஆரியன் றன்னை யாக்கி
வெவ்வர வுயர்த்த கோமான்
 வீழ்ந்தடி பணிய வாசான்
எவ்வரம் வேண்டு மென்ன
 வேந்தன்மெய் விரதன் றன்னை
வவ்விநல் குவதே யெற்கு
 வரமென மறையோன் சொல்வான்.

(இ-ள்) அ வணம் - அவன் சொன்னபடியே, ஆரியன் தன்னை - துரோணாசாரியனை, சேனை நாதன் ஆக்கி - சேனாதிபதியாக நியமித்து, வெவ் அரவு உயர்த்த கோமான் - கொடிய பாம்புக் கொடியையுயரத்தூக்கிய துரியோதனராசன், வீழ்ந்து - தரையில் விழுந்து, அடி பணிய - பாதங்களில் நமஸ்கரிக்க, ஆசான் - துரோணாசாரியன், 'எ வரம் வேண்டும்' என்ன - நீ என்ன வரம் கேட்கிறாய்; என்று வினவ, வேந்தன் - துரியோதனராசன், 'மெய் விரதன் தன்னை - தருமபுத்திரனை, வவ்வி – கைப்பற்றி அகப் படுத்தி, நல்குவதே - (என் கையிற்) கொடுப்பதே,எற்கு - எனக்கு, வரம் என - நீர் கொடுக்க வேண்டிய வரம் என்ன, (அதற்கு) மறையோன் - துரோணாசாரியன், சொல்வான் - கூறுவானாயினான்; (எ.று).

தருமபுத்திரனுக்குச் 'சத்தியவிரதன்' என்றும் ஒரு பெயருண்டு. அஃது 'மெய்விரதன்' என இங்கே வந்துளது. (6)

7. தருமனை யகப்படுத்தினால் நீ செய்வதென்னை என்று துரியோதனனைத் துரோணன் வினவல்,

தெவ்வைவென் றரசீ யென்னச்
செப்பிடா தறம் வல்லானை
வவ்விநல் கென்று யார்க்கும்
வயப்பட லரிதா மூழால்
அவ்விய மில்லா னென்கை
யகப்படி லவனை நீ செய்
வெவ்வினை புகறி யென்ன
வேந்தர்வேந் துரைசெய் வானால்.

(இ-ள்) [துரோணாசாரியன்] தெவ்வை வென்று - பகைவர்களைச் செயித்து, அரசு ஈ என்ன - அரசாட்சியை எனக்கு நிலைநிறுத்திக் கொடுப்பாயாக' என்று, செப்பிடாது - சொல்லாமல், அறம்வல்லானை - தருமத்தில் ஊற்றமுடைய தருமனை, வவ்வி - கைப்பற்றி யகப்படுத்தி, நல்கு என்று - (என்னிடம்) கொடுப்பாயாக' என்று கூறினாய்: (ஆனால் அவன்) யார்க்கும் - எவர்க்கும், வயப்படல் அரிதாம் - கைப்பற்றப்பட்டு அவன் வசமாதல் கூடாததாம்: ஊழால் - (ஒருகால் அவனது) விதிப்பயனால், அவ்வியம் இல்லான் - வஞ்சனையில்லாத தருமன், என் கை அகப்படில் - என்னுடைய வசம் சிக்கினால், அவனை - அந்தத் தருமனை, நீ -, செய் வெம் வினை புகறி - செய்யநினைத்துள்ள கொடிய செய்கை இன்னதெனச் சொல்வாய், என்ன - என்று வினவ, வேந்தர் வேந்து - மன்னர் மன்னனாகிய துரியோதனன், உரை செய்வான் - பதில் கூறுவானாயினன்; (எ-று) அவன் கூறியதை மேலைக்கவியிற் காண்க. ஆல் - ஈற்றசை.

தெவ் - பகைமையுணர்த்தும் உரிச்சொல்; இது - இங்கே, பகைவர்க்குப் பண்பாகுபெயர். ஈ, நல்கு - முன்னிலை வியங்கோள். இல்லான் - குறிப்புவினையாலணையும்பெயர். புகறி - புகல் - பகுதி, இ - விகுதி, த் - எழுத்துப்பேறு. (7)

8. துரியோதனன் கூறிய உத்தரம்.

தருமனைச் செகுக்கிற் பார்த்தன்
 தளமுழு திகுப்ப னுமை
வரையடி னம்மை மாயோன்
 வதைத்தர சுதவும் குந்திக்
கரசனைக் கொணரிற் சூத
 மாடிக்கான் புகுத்தி யெற்கிவ்
விருநிலம் புரப்பா னெண்ணம்
 எனமுனி நகைத்துக் கூறும்.

(இ-ள்) தருமனைச் செகுக்கின் – தருமனைக் கொல்வோமாயின், பார்த்தன் - அருச்சுனன், தளம் முழுது இகுப்பன் - நம் சேனைமுழுவதையும் அழித்து விடுவன்: நாம் -, ஐவரை அடின் - பாண்டவரைவரையும் கொல்வோமாயின், நம்மை -, மாயோன் - கிருஷ்ணன், வதைத்து - கொன்று, குந்திக்கு - குந்திதேவிக்கு, அரசு உதவும் - அரசாட்சியைக் கொடுத்திடுவான்: (ஆகவே அரசனைக் கொணரின் - தருமனைச் சிறைபிடித்துக் கொண்டு வந்தால், (மறுபடியும்) சூதம் ஆடி - சூதாட்டம் ஆடி, கான் புகுத்தி - (நாம் வென்று) காட்டுக்குச் செல்ல வைத்து. (பிறகு) இ இருநிலம் புரப்பான் - இந்தப் பெரியவுலகத்தை ஆட்சி செய்வோம் என்பது, எற்கு - எனக்கு, எண்ணம் - நினைவு, என - என்று (துரியோதனன்) கூற, முனி – துரோணன், நகைத்து - சிரித்து, கூறும் - சொல்வானாயினான் (எ-று) துரோணன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

'தருமனையோ ஐவரையோ கொல்வதிற் பயனில்லை; நமக்கு அரசு கிட்டாது. நம் அனைவரையும் கிருஷ்ணன் கொன்று விட்டு நாட்டாட்சியைக் குந்திக்குத் தந்திடுவான். ஆகவே, தருமனை யகப்படுத்திக் கொணர்ந்தால் அவனை மறுபடியும் சூதாடவைத்துக் காட்டுக்கு ஒட்டுவோம்' என்று துரியோதனன் தான் எண்ணி யுள்ள கருத்தைக் கூறினன் என்க. துரோணன் நகைத்தது - அவன் பேதைமை கண்டு இகழ்ச்சியாக என்க. உதவும், கூறும் - செய்யு மென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. (8)

9. துரோணன் கூறியது.

கைதவ மனேகங் கோடி
 கருதினு மென்னு லந்த
மெய்தரு மரசைப் பற்றி
 விசித்துற முடியா தந்தப்

பொய்தவிர் வான்பாற் பார்த்தன்
பொருந்துரு னென்னிற் பற்றி
எய்துவ னென்ன மன்ேனு
டிளை ஞரு மிறைஞ்சி யார்த்தார்.

(இ-ள்) அனேகம் கோடி கைதவம் கருதினும் - பல கோடிக் கணக்கான கபடங்களைச் செய்ய (நீ) நினைத்தாலும், என்னுல் - அந்த மெய்தரும் அரசை - சத்தியவிரதனுன அந்தத் தருமராசனை, பற்றி - சிறைபிடித்து, விசித்துற - கட்டியழைத்துவர, முடியாது - இயலாது: (ஒருகால்) அந்தப் பொய்தவிர்வான்பால் - அந்தத் தருமராசன் பக்கத்தில், பார்த்தன் - அருச்சுனன், பொருந்துருன் என்னில் - வராமலிருப்பானுனல், பற்றி எய்துவன் - (அந்தத் தருமனைக்) கைப்பற்றி வருவேன், என்ன - என்று சொல்ல, (அது கேட்டு) மன்னேடு இளைஞரும் - துரியோதன ராசனேடு அவன் தம்பியரும், இறைஞ்சி - (துரோணனை) வணங்கி, ஆர்த்தார் - ஆரவாரஞ் செய்தார்கள்; (எ.று).

தருமன்பால் அருச்சுனனைச் சமீபித்து வரவொட்டாதபடி செய்வோமானுல் அப்போது அத் தருமனைக் கைப்பற்றலாம் என்ருன் துரோணன். அதுகேட்டு ஆர்த்தது - தாங்கள் அருச் சுனனைத் தருமன்பால் பொருந்துருதபடி தகைவதுபற்றியென்க. கைதவம் - கபடம், வஞ்சனை. பொய் தவிர்வான் - வினையாலணை யும் பெயர். எய்துவன் - தன்மையொருமை. (9)

10. ஒற்றரால் அறிந்த தருமன் அருச்சுனனை உக்கிரமாகப் பொரச் சொல்லுதல்.

தருமனிச் செயல்க ளொற்றர்
சாற்றிட நரனுக் கோதி
வரனிறைக் குதவு மாசான்
வவ்வுற வெணவந் துற்ருற்
குருவென வஞ்சேல் தன்னைக்
கொலவரிற் சுரபி யேனும்
இருநிலத் தறமாய்ந் தோரும்
இகுப்பரா தலிற்கொல் லென்ருன்.

(இ-ள்) இ செயல்கள் - இந்த நிகழ்ச்சிச் செய்திகளை, ஒற்றர் சாற்றிட - வேவு பார்ப்போர் (வந்து) சொல்ல, (அவற்றைக் கேட்டு) தருமன் -, நரனுக்கு ஓதி - அருச்சுனனுக்குச் சொல்லி,

இறைக்கு வரன் உதவும் ஆசான் - துரியோதனராசனுக்கு உறுதிமொழி [வரம்] கொடுத்த துரோணுசாரியன், வவ்வுற - கைப்பற்றிப் போதற்கு, எனே வந்து உற்ருல் - என்னை வந்து நெருங்கினல், குரு என அஞ்சேல் - (நமது) ஆசிரியராயிற்றே எனப் பயந்து நிற்காதே: தன்னேச் சுரபியேனும் கொலவரில் - தன்னேப் பசுவேயாயினும் கொல்லவரின், இருநிலத்து - இந்நில வுலகத்து, அறம் ஆய்ந்தோரும் – தருமந்தெரிந்த சான்ருேர்களும், இகுப்பர் ஆதலின் - அந்தப் பசுவைக் கொல்வர் ஆகையால், (நீயும்) கொல் - (ஆசிரியரைக்) கொல்வாய், என்ருன் - என்று (உறுதி) கூறினன்; (எ.று).

பசுவதை கூடாது என்றது தரும சாத்திரம்; அந்தத் தரும சாத்திரங்களே நன்கறிந்த தருமவான்களும் தம்மேல் பசு கொல்லப் பாய்ந்து வருமாயின் அதனே வதைப்பரேயன்றி வாளா பார்த்துக் கொண்டிரார். அஃதே போல் ஆசிரியரேயாயினும் போர்க்கு வந்தால் அஞ்சாது கோறலே தருமம் என்ருன் தருமன் அருச்சுனனுக்கு என்க. இது ஏதுவணியின் பாற்படும். வரன் - வரம்; மகரனகரம் மாறி வருஞ்சொல். அஞ்சேல் - எதிர்மறையேவல். ஆய்ந்தோரும், உம்மை உயர்வு சிறப்பு. கொல் - முன்னிலேயேவல். (*10*)

11. தருமனுக்கு அருச்சுனன் கவலே நீக்க, கிருஷ்ணன் கூறலுறல்.

தவர்வல முனிவல் லானே?
சம்பரி யலரோ னேனுங்
கவர்வரோ நினேயான் மேவக்
கவலலென் றிளேயோன் சொன்ஞன்
இவர்முகில் வண்ணன் வன்னி
யாக்கைவீழ்த் திடலா லிற்றைக்
கவிர்கதிர் மதலே யெய்தும்
அமர்முனே யான்மாத் தாமன்.

(இ-ள்) தவர் வல முனி வல்லானே! - வில்லில் வல்ல துரோணுசாரியர் [என்னேயெதிர்க்க] வல்லமையுடையவரோ? (அன்று): (அவரிருக்கட்டும்] சம்பு - சிவபிரான், அரி - விட்டுணு, அலரோன் - பிரமன், ஏனும் - எனினும், நினே - உன்னே, யான் -, மேவ- பொருந்தியருகிலிருப்ப, கவர்வரோ-கைப்பற்ற முடியுமோ? (முடியாது): (ஆகவே) கலலல் - நீ கவலேப்படவேண்டா, என்று- என்று [தேற்றமாக], இளேயோன் - தம்பியாகிய அருச்சுனன்,

சொன்னுன் -: (பிறகு) இவர் முகில் வண்ணன் - மேலெழும் மேகம் போல் கருநிறம்பொருந்திய கிருஷ்ணன், 'வன்னி - வீடுமன், இற்றைக்கு - இன்றையதினத்தில் (உத்தராயணத்தில்), யாக்கை - தனது உடம்பை, வீழ்த்திடலால் - விட்டுச் செல்லுவதால், அவிர் கதிர் மதலே எய்தும் - விளங்குகின்ற சூரியகுமாரனுகிய கர்ணன் [போர்க்களம்] வருவான்: (ஆனல்)மாத்தாமன் - அசுவத்தாமன், அமர் முனேயான் – போர்க்களம் வரமாட்டான்; (எ.று) '...என்ருன்' என மேலேக்கவியில் இயையும்.

திரிமூர்த்திகளாலும் தருமனேக் கவரமுடியாது என்றபடி. வீடுமன் இறந்தபின்தான் போரிடவருவேன் என்று கர்ணன் கூறியுள்ளதை நினேக. அசுவத்தாமன் அமர் முனேயான் என்றது கிருஷ்ணன் முன்னரே பேதித்திருத்தல் பற்றி. வல்லானே, ஓ - வினு: எதிர்மறை. சம்பரியலரோன் - உம்மைத்தொகை. கவலல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள். முகில் வண்ணன் - உவமைத் தொகை. எய்தும் - செய்யுமென் முற்று. (11)

12. தருமன் போர்க்களங் குறுகுதல்.

தெவ்வரை யினியாம் வென்று
　　செகதலம் பெற்ருே மென்ருன்
அவ்வுரைக் கிருதோ ளோங்கி
　　ஆழியந் தேர்மா தங்கம்
வெவ்விய இவுளி வீரர்
　　மேவமெய் விரத ஞர்க்கும்
பவ்வமொத் தியங்க ளார்ப்பப்
　　படுகளங் குறுகி ஞனே.

(இ-ள்) 'தெவ்வரை - பகைவர்களாகிய கௌரவர்களே, இனி - இனிமேல், யாம் - நாம், வென்று - செயித்து, செகதலம் பெற்ருேம் - பூமியை (நமதாகப்) பெற்று விட்டோம்,' என்ருன் - என்று (கிருஷ்ணன்) கூறிமுடித்தான்: அ உரைக்கு - அந்த வார்த்தையைக் கேட்டு, இரு தோள் ஓங்கி - இரண்டு தோள்களும் [மகிழ்ச்சியால்] பூரித்து, மெய்விரதன் - தருமபுத்திரன், ஆழி அம் தேர் - சக்கரங்களேக் கொண்ட அழகிய தேர்கள், மாதங்கம் - யானேகள், வெவ்விய இவுளி - கடிய குதிரைகள், வீரர் - காலாட் படையினர், (ஆகிய சதுரங்கங்களும்) மேவ - (தன்னுடன்) பொருந்திவர, இயங்கள் - போர்வாச்சியங்கள், ஆர்க்கும் பவ்வம் ஒத்து ஆர்ப்ப - ஒலிக்கின்ற கடலேயொத்துப் பேரொலி

யெழுப்ப, படுகளம் குறுகினன் - போர்க்களத்தையடைந்தான்; (எ.று)

பெற்றேம் - துணிவுபற்றி வந்த காலவழுவமைதி. தேர் மாதங்கம்இவுளிவீரர் - உம்மைத்தொகை. நான்காமடியில் உவமையணி. ஆர்க்கும் - பெயரெச்சம். (12)

13. திட்டத்துய்மன் தன்சேனையைக் கிரௌஞ்சவியூகமாக வகுக்க, துரோணன் தன்சேனையைச் சகடவியூகமாக வகுத்தல்.

வன்னியி லுதித்தோன் றானை
வாரியைக் கிரவுஞ்ச யூகம்
என்னவங் கியற்றி யேற்றான்
இறையொடு மிளைஞர் மாமன்
கன்னன்மற் றெவருஞ் சூழக்
கடுஞ்சமர் முனைபுக் காசான்
தன்னனி கங்க டம்மைச்
சகடயூ கஞ்செய் தேற்றான்.

(இ-ள்) வன்னியில் உதித்தோன் - (யாக) அக்னியினின்று தோன்றிய திட்டத்துய்மன், தானை வாரியை - (தனது) சேனா சமுத்திரத்தை; கிரவுஞ்சயூகம் என்ன அங்கு இயற்றி - கிரௌஞ்ச யூகமாக அப்போது வகுத்து, ஏற்றான் - போரினையேற்று நின்றான்: (அதே சமயத்தில்) ஆசான் - துரோணாசாரியன், இறையொடும் - துரியோதனனோடும், இளைஞர் - (அவனது) தம்பியர், மாமன் - சகுனி, கன்னன் - கர்ணன், மற்று எவரும் சூழ - மற்றுமுள்ள துணைவேந்தர் யாவரும் சுற்றிவர, கடும் சமர் முனை புக்கு - கொடிய போர்க்களத்தைச் சேர்ந்து, தன் அனிகங்கள் தம்மை - தன்னுடைய சேனைகளை, சகட யூகம் செய்து - சகட வியூகமாக வகுத்து, ஏற்றான் - போரினையேற்று நின்றான்; (எ.று.)

கிரவுஞ் சகடயூகங்களின் அமைப்பைப் பீஷ்மபருவத்து ஆறு ஏழாம் போர்ச்சருக்கம் முதற் செய்யுளுரையில் முறையே காண்க. தானைவாரி — உருவகம். (13)

14. இருதிறத்துச் சேனைகளும தம்மிற் பொருதல்.

வாய்ந்தவா கினிகள் சூழ
வணக்கிவில் வாளி தூவிப்
பாய்ந்தன ரிருவர் சேனா
பதிகளுந் தருமன் றானை

வீய்ந்திட மறையோன் கொன்றுன்
விசயனே வளைந்தங் கேசன்
காய்ந்தபோர்க் கஞ்சி யும்பர்
கண்கையாற் புதைத்திட் டாரால்.

(இ-ள்) (பிறகு) இருவர் சேனுபதிகளும் - இருபக்கத்துச் சேனைத் தலைவர்களும், வாய்ந்த வாகினிகள் சூழ - பொருந்திய சேனைகள் தம்மைச் சூழ்ந்துவர, வில் வணங்கி வாளி தூவி - (தத்தமது) விற்களை வளைத்து அம்புகளைச் சொரிந்து, பாய்ந்தனர் - தாக்கினுர்கள். (அப்போது) மறையோன் - துரோணன், தருமன் தானை - தருமனுடைய சேனை, வீய்ந்திட - ஒழியும்படி, கொன்றுன் - நாசமாக்கினுன்- (அதே சமயத்தில்) அங்கேசன் - கர்ணன், விசயனை வளைந்து - அருச்சுனனைச் சூழ்ந்து, காய்ந்த போர்க்கு - சினங்கொண்டு செய்த போரினுக்கு, அஞ்சி - பயந்து, உம்பர் - தேவர்களும், கண் - தங்களது கண்களை, கையால் புதைத்திட்டார் - தங்கள் கைகளால் மூடிக் கொண்டனர்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

அங்க + ஈசன் = அங்கேசன்; குணசந்தி. உம்பர் - தேவர்க்கு இடவாகுபெயர். (14)

15. சகுனியும் சகதேவனும் பொருதல் கூறும்.

சகுனிமீ தைவர் பின்னேன்
சமர்புரிந் தவன்விற் றேர்மா
மிகுகொடி துணிப்ப மற்றேன்
மீளவோர் தண்ட மேந்தி
நகுலனுக் கிளையோன் போர்வெந்
நல்கிடப் பொருது மீண்டான்
இகலுடை யிராச ராசன்
எதிர்ந்தனன் வீமன் மீதே.

(இ-ள்) ஐவர் பின்னேன் - சகதேவன், சகுனிமீது சமர் புரிந்து - சகுனியின் மேல் போர் செய்து, அவன் வில் தேர் மா மிகுகொடி துணிப்ப - அவனுடைய வில் தேர் குதிரை உயரத் தூக்கிய துவசம் இவற்றை வெட்டித்தள்ள, மற்றேன் - அந்தச் சகுனி, மீள ஓர் தண்டம் ஏந்தி - மறுபடி ஒரு கதாயுதங் கொண்டு, நகுலனுக்கு இளையோன் - சகதேவன், போர் - போரில், வெந் நல்கிட - முதுகு காட்டியோட, பொருது - சண்டையிட்டு,

மீண்டான் - (வெற்றியொடு) திரும்பினுன்; (இதற்குள்) இகல் உடை இராசராசன் - (பாண்டவர் மீது) பகைமையுடைய துரியோதனராசன், வீமன் மீது எதிர்ந்தனன் - வீமசேனன் மேல் போர்க்கு எதிரிட்டனன்; (எ.று.)

ஐவர் பின்னேன் - ஐவர்க்குள் பின்னேன் என்றபடி. வெந் - முதுகு. வெந்நல்கிடல் - புறமுதுகிடல். நல்கிடல் என்றதால் தானே பின்னிடலை யேறிட்டுக் கொண்டபடியென்க. (15)

16. துரியோதனனை வீமன் வெல்ல, அதுகண்ட சல்லியன் வீமன் மேல் வர நகுலன் அவனைத் தகைதல்,

விடவகிக் கொடியும் வில்லும்
வீழ்த்தியங் கவன்பா னின்று
படைபுரி யரசர் தானை
படப்பொரும் வீமன் மீது
கொடியிர தத்தை மத்திரர்
கோன்விட நகுலன் காணு
அடுசம ரியற்றென் னேடென்
றவற்றகைத் தமர்செய் தானுல்.

(இ-ள்) அகிக்கொடியும் - பாம்புக்கொடியும், வில்லும் - (கைப் பிடித்த) வில்லும், விட - போகட்டுப் போம்படி, வீழ்த்தி - தரையில் விழச்செய்து, அங்கு அவன் பால்நின்று - அவ்விடத்தினின்று அவனை நீங்கிப்போய், படை புரி அரசர் தானை பட - போர்க்கருவிகளைக்கொண்டு யுத்தஞ்செய்கின்ற துணைவேந்தர்களது சேனைகள் ஒழிய, பொரும் - போரிடுகின்ற, வீமன் மீது - வீமசேனன்மேல், மத்திரர்கோன் - மத்திரதேசத்தார்க்கு மன்னனுகிய சல்லியன், கொடி இரதத்தை விட - கொடிகட்டிய தேரினைச் செலுத்த, (அதனை) நகுலன் காணு - நகுலன் கண்டு, 'என்னேடு அடு சமர் இயற்று' என்று -' என்னுடன் கொல்லும் போரைச் செய்ய வா' என்று வீரம் பேசி, அவன் தகைத்து - அவனைத் தடுத்து மறித்து, அமர்செய்தான் - போரிட்டான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

பானின்று, நின்று - ஐந்தாம் வேற்றுமை நீக்கப் பொருளில் வந்த சொல்லுருபு. காணு - உடன்பாட்டெச்சம். அடுசமர் - வினைத்தொகை. (16)

17. நகுலன் சல்லியனை வெல்லுதல்.

தளமுத லிழந்து நொந்து
சல்லியன் பதாதி யாகிக்
களமிசை நடப்ப வெண்ணில்
கவந்தமங் காடப் பார்த்தன்
இளவலு மிலைந்தான் வாகை
இரவிசேய் விராட னின்னேர்
அளவிலா சுகம்விட் டும்பர்
அதிசயித் திடப்போர் செய்தார்.

(இ-ள்) சல்லியன்-, தளம் முதல் இழந்து - (தனது) சேனைத் தலைவனையிழந்து, நொந்து - மனம் வருந்தி, பதாதியாகி - கால் நடையினனுய், களம் மிசை நடப்ப - யுத்த பூமியில் நடந்து வர, எண்ணில் - கணக்கற்ற, கவந்தம் அங்கு ஆட - தலையற்ற உடற் குறைகள் களத்தில் கூத்தாட, பார்த்தன் இளவலும் - அருச்சுனன் தம்பியாகிய நகுலனும், வாகை மிலைந்தான் - வெற்றிமாலை சூடினுன்: (வெற்றி பெற்ருன் என்றபடி): (இஃது இங்ஙனுக) இரவி சேய் - கர்ணன், விராடன் - விராடராசன், இன்னேர் - இவர்களைச் சேர்ந்தவர்கள், அளவில் ஆசுகம் விட்டு - கணக்கற்ற அம்புகளைச் செலுத்தி, உம்பர் அதிசயித்திட-தேவர்கள் வியப்புறும் படி, போர் செய்தார் - போரிட்டார்கள்; (எ.று)

கவந்தம் - தலையற்ற உடல்: போர் செய்துநின்ற வீரர்களின் உடம்புகள் தலையறுபட்டபின்பு பதைபதைத்துக் கைகால்கள் துடிப்பனவற்றைக் கைகளாலும் கால்களாலும் ஆடுவனவாகக் குறித்தார். வெற்றி பெற்ருேர் வாகைப்பூச் சூடுவர். ஆசுகம் - விரைந்து செல்லுவது என அம்புக்குக் காரணப் பெயர். (17)

18. துருபதனும் பகதத்தனும் பொர, சிகண்டி சோமதத்தனை வெல்லுதல்.

வேட்கினை துருப தேயன்
வெங்கரு ணிப்பே ரோங்கற்
ருேட்பக தத்த னேடு
தொடங்கினன் சோம தத்தன்
வாட்சமர் புரிந்த னேக
மன்னவ ரோடு மந்த
ஞாட்பினெய்த் தோடக் காலன்
நடுங்குறச் சிகண்டி வென்ருன்.

(இ-ள்) வேட்கு இணை துருபதேயன் - மன்மதனுக்கு நிகரான (அழகுடைய) துருபதராசன், வெம் கருணி - கொடிய மலையைப் போன்ற, பேர் ஓங்கல் தோள் - பெரிய ஓங்குதலையுடைய தோள்களைக் கொண்ட, பகதத்தனோடு - தொடங்கினன் - போரிடலானான்: (அதே சமயத்தில்) சோமதத்தன் - , வாள் சமர் புரிந்து - வாட்போரைச் செய்து, அநேக மன்னவரோடும் (தனக்குத் துணையாக வந்த) பல அரசர்களோடும், அந்த ஞாட்பின் எய்த்து ஓட - அந்தப் போர்க்களத்தில் இளைத்துப் பின்னிட்டோடவும், காலன் நடுங்குற - யமனும் அஞ்சும்படியும், சிகண்டி வென்றான் - சிகண்டி ஜெயம் பெற்றான்; (எ.று.)

துருபதனைத் துருபதேயன் என்றார். கருணி - மலை: மலை போன்ற தோளையுடையவன் பகதத்தன் என்றது - அவன் பதினாயிரம் யானை வலியுடையானாதலின். சோமதத்தன் - குருவமிசத்தவனான பிரதீபனுடைய புத்திரர் மூவருள் ஒருவனான பாலீகனுக்குப் புதல்வன்: கலிங்க நாட்டரசன் என்பாருமுளர். ஞாட்பு - போர்க்களம். காலன் என்பதன் பின் சிறப்பும்மை தொக்கது. ஓங்கல் - தொழிற்பெயர். கருணித்தோள் என இயையும்: உவமைத்தொகை. (18)

வேறு.

19. அபிமன்யுவும் லட்சணகுமாரனும் பொருதல்.

தேரணி முதலிய சேனைசூ ழச்சிலை
காரெனச் சொரிகணை ககனமூ டிடவொளிர்
ஈரசி யபிமனு மிலக்கணக் குமரனும்
நேரெவ ரெனவமர் நேர்தருங் காலையில்.

(இ-ள்) தேர் அணி முதலிய சேனை சூழ - தேர் வரிசை முதலாகிய படைகள் சூழ்ந்துவர, சிலை - விற்கள், கார் என சொரி கணை - மேகம் என்னும்படி பொழிகின்ற அம்புகள், ககனம் மூடிட - ஆகாயத்தை மூட, ஒளிர் ஈர் அசி அபிமனும் - விளங்குகின்ற கூரிய வாளையேந்திய அபிமன்யுவும், இலக்கணக்குமரனும் - லட்சணகுமாரனும், எவர் நேர் என - எவர் நமக்குச் சமானமாவர் என்று, (உக்கிரமாக) அமர் நேர்தருங்காலை - போர் செய்யும் போது; (எ.று)

இலக்கணகுமரன் - துரியோதனன் மகன். நேர்தரல்- எதிர்த்தல். ஈர்மை - நுண்மை, கூர்மை. வாளபிமன் ஆதலின், 'அசியபிமன்' என்றது. அசி - வாள். என - உவமவுருபு. சொரிகணை - வினைத் தொகை.

இது முதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் எல்லாச்சீர்களும் விளச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள் (19)

20. அபிமன் லட்சணகுமாரனைத் தன் தேரிற் பிணித்தேக, அப்போது சயத்திரதனும் கர்ணனும் அபிமனை வளைதல்.

மதனைவென் றருளழ கபிமன்மன் னவனருட்
சுதனைவன் சந்தனத் தூணிஞர்த் தேகினுன்
அதனைநேர் கண்டுசிந் தரசுமங் கேசனும்
புதனைநேர் குமரனைப் போய்வளைந் தமர்செய்தார்.

(இ-ள்) மதனை வென்றருள் அழகு அபிமன் - மன்மதனையும் கீழ்ப்படுத்தும் பேரழகுபடைத்த அபிமன்யு, மன்னவன் அருள் சுதனை - துரியோதனன் பெற்ற மகனுகிய இலக்குமணகுமாரனை, வன் சந்தனத்தூணின் - வலிய தேர்க்கம்பத்தில், ஆர்த்து - பிணித்து, ஏகினுன் - (அவனையெடுத்துச்) சென்றான்: அதனை நேர் கண்டு - அந்தச்செயலைக் கண்ணெதிரில் பார்த்து, சிந்து அரசும் - சயந்திரதனும், அங்கேசனும் - கர்ணனும், புதனை நேர் குமரனை - (சந்திரனின் மகனுகிய) புதனையொத்த அபிமனை; போய் வளைந்து அமர் செய்தார் - கிட்டிச்சூழ்ந்து போரிட்டனர்; (எ.று)

சயத்திரதன் சிந்துதேசத்தரசனுதலால், ஸைந்தவன் எனவும் படுவன்: துச்சளையின் கணவன். சந்திரன் தாரையைக் கண்டு காதல் கொண்டு அன்னுளோடு கூடிப் புதனென்ற புதல்வனைப் பெற்றான். புதன் சிறந்த அறிவாளிக்கு ஒப்பு. [தாரை - வியாழனென்னும் தேவ குருவின் பத்தினி] வென்றருள், அருள் - துணைவினை. (20)

21. எதிர்த்து வந்த இருவரையும் அபிமன் முதுகு கொடுத்தோடச் செய்ய, அப்போது சல்லியன் வந்து அமர் செய்தல்.

மொய்த்தமன் னவருடன் முனையுமவ் விருவரும்
எய்த்துவென் கொளவெலும் அபிமன்மே
லேற்றடல்
மத்திரன் பதாதியாய் மண்ணடங் தோர்பெருஞ்
சித்திரத் தேரின்மேன் மீளவந் தமர்செய்தான்.

(இ-ள்) மொய்த்த மன்னவருடன் - தன்னேடு நெருங்க வந்த துணை வேந்தர்களோடு, முனையும் - போரிட வந்த, அ இருவரும் - அந்த இரண்டு பேரும் (சயத்திரதனும் கர்ணனும்),

எய்த்து - இளைத்து, வெந் கொள - முதுகுகாட்டிப் பின்னிட, வெலும் - வென்ற, அபிமன்மேல் - அபிமன்யுவின் மீது, ஏற்று - எதிரிட்டு, அடல் மத்திரன் - வலிமை பொருந்திய சல்லியன், (தோற்றுப்) பதாதியாய் மண் நடந்து- பாதசாரியாய்த் தரையில் நடந்து போய், ஓர் பெரும் சித்திரத் தேரின்மேல் - ஒரு பெரிய அழகிய தேரின் மீதேறி, மீளவந்து-திரும்பவும் (களம்) வந்து, அமர் செய்தான் - போரிட்டான்; (எ.று.)

அபிமன் தான் அதிரதனுதலால், ஒருவனுகவே தன்தேர் முதலியவற்றுக்கு அழிவுவராமற்காத்துப் பற்பலவீரர்களோடு பொருதான் என்க. வெந்-வென்; நகரனகர மாறி வந்தது. (21)

வேறு.

22. சல்லியனை வீமன் கதையால் தரையில் வீழ்த்த, அது தனக்கு இழுக்கென்று அபிமன் அயர்வுற, அப்போது இலக்கணகுமாரன் தப்பியோடித்தன் தேரிலேறிப்போக, சல்லியனைக் கிருதவன்மா உய்யக்கொண்டுபோக, துரியோதனன் தன் பாசறைதிரும்ப, சூரியன் அத்தமித்தல்.

தன்மகன்மீ தமர்புரிசல் லியன்றோ ளென்பு
தலைமகுட நெரிந்துவிழத் தண்டால் வாயு
வின்மகனங் கடித்தபொழு தவனோ டென்றன்
விறலென்ன வெனவபிமன் மெலிபோ தோடி
மன்மகன்தேர் புகுந்தகன்றான் கிருத வன்மன்
மத்திரனைத் தேர்கொடுசென் றனன்கண் ணற்ற
வன்மகன்வா கினிநிலைகெட் டழிந்தங் கோட
மலைந்தனன்மா ருதிபயந்து மறைந்தான்
வெய்யோன்.

(இ-ள்) (அப்போது) வாயுவின் மகன்- வீமன், தன்மகன்மீது - தன்னுடைய (தம்பி) பிள்ளையாகிய அபிமன்மீது, அமர்புரி சல்லியன் - போரிடுகின்ற சல்லியனது, தோள் என்பு தலை மகுடம் நெரிந்து விழ - தோள்களும் எலும்பும் கிரசில் தரித்த கிரீடமும் சிதறுண்டு விழும்படி, தண்டால் அங்கு அடித்தபொழுது - கதாயுதத்தால் அவ்விடத்து மொத்தியபோது, அபிமன் - அபிமன்யு, அவனோடு - தன் பெரியதந்தையான அவ்வீமனோடு, என்தன் விறல் என்ன - (நீ இவ்வாறு செய்தால்) என்னுடைய பராக்கிரமம் என்னவாகும்? [யாதுபயன்படுவதாம்?] என - என்று

கூறி, மெலி போது - அயர்வுற்றிருந்த சமயம், மன் மகன் - இலக்கணகுமாரன், தேர் புகுந்து அகன்றான் - (அவன் கையினின்று தப்பியோடித்) தனது தேர் மேலேறியோடிப்போனான்; (பிறகு) கிருதவன்மன் - கிருதவர்மா, மத்திரனை - சல்லியனை, தேர் கொடு சென்றனன் - தன்தேரிலேற்றி [அவனுய்ய]க் கொண்டுபோனான்; (இஃது இப்படியாக கண்ணற்றவன்) மகன் - குருடனாகிய திருத ராட்டிரனின் புத்திரனாகிய துரியோதனன், வாகினி நிலைகெட்டு அழிந்து - தன்னுடைய சேனை நிலைகுலைந்து சிதறி, அங்கு ஓட - அப்போர்க்களத்தினின்று ஓடும்படி, மாருதி மலைந்தனன் - வீமன் போர் செய்தான்; (அதுகண்டு) வெய்யோன் - சூரியன், பயந்து - (தானும்) அஞ்சி, மறைந்தான் - அத்தமித்தான்; (எ.று)

வீமனை 'வாயுவின் மகன்' என்றும், 'மாருதி' என்றும் இச் செய்யுளிற் குறித்தது, அந்த வாயுவின் பெருமைநோக்கியென்க. வாயுவுக்குப் பெருமை - எல்லாச் சரப்பொருள்களுக்கும் பிராண ரூபமாயிருத்தல். அபிமன் சுத்த வீரனாதலால்; வீமன் இடையிற் புகுந்து தன்பகைவனாகிய சல்லியனை வென்றதற்கு மெலிந்து வருந்தினான். கிருதவன்மா - துரியோதனன் கண்ணனைப் படைத் துணையழைக்கப் போனபொழுது, அவ்வெம்பிரானால் அவனுக்குத் துணையாகத் தந்த யாதவசேனைக்குத் தலைவனாக அனுப்பப் பட்டவன் இவன்; யதுகுலத்தில் இருதிகனென்பவனது 'குமாரன்'. சூரியன் இயல்பாக மறைந்ததற்கு, வீமனுக்கு அஞ்சி மறைந்த தாகக் கவி காரணங்கற்பித்துக் கூறினமையால், ஏதுத்தற்குறிப் பேற்றவணி. மன் மகன் - அரசகுமாரன்: எனவே இலக்கண குமாரன்.

இது முதல் இச்சருக்க முடியுமளவுள்ள நான்கு கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியவிருத்தங்கள். (22)

23. வென்றிகொண்ட பாண்டவர் படைவீட்டில் துயில, துரியோதனன் உறங்கானாய் தன்மகன் அபிமனிடம் அகப்பட்ட தாழ்வுக்கிரங்கி நொந்து துரோணனை நோக்கி 'நாளைத் தருமனையகப்படுத்தினால்தான் செற்றம் தீரும்' எனல்.

கொற்றமொடு மைவரும்போய்த் துயின்றார் பாடி
குறுகியுறங் காதரசர் கோமான் யாருஞ்
சுற்றுவிருந் தடலபிமன் கையிற் றன்சேய்
துன்னமரி லகப்பட்ட துயர்க்காற் றாளுய்

வெற்றிவிலா சிரியனைப்பார்த் தைய நாளை
வெஞ்சமரி லுயிரொடுமெய் விரதன் றன்னைப்
பற்றியிதற் கிணையாக நல்கி லெண்ணம்
பலிக்குமெனத் துரோணனிது பகர்வான் மன்னே.

(இ-ள்) ஐவரும் - பாண்டவரைவரும், கொற்றமொடு - வெற்றியோடு, போய் - (தமது பாசறை)சென்று, துயின்றார் - உறங்கினார்கள்: அரசர் கோமான் - துரியோதனராசன், பாடி குறுகி உறங்காது - படைவீடு சென்று துயிலாதவனாய், யாரும் சுற்ற இருந்து – அனைவரும் சூழ உட்கார்ந்திருந்து, அடல் அபிமன் கையில்—வலிமைமிக்க அபிமன்யுவிடத்தில், தன்சேய் - தன்மகன் இலக்கண குமாரன், துன் அமரில் அகப்பட்ட - நெருங்கிய யுத்தத்தில் அகப்பட்டுப் பிணிக்கப் பட்ட, துயர்க்கு ஆற்றானாய் - துன்பத்தினைத் தாங்க முடியாதவனாய், வெற்றி வில் ஆசிரியனைப் பார்த்து - வெற்றி பொருந்திய வில்லையுடைய துரோணாசாரியனைப் பார்த்து, 'ஐய - பெரியோனே! நாளை வெம் சமரில் – நாளை (நடக்கும்) கொடிய யுத்தத்தில், மெய் விரதன் தன்னை - தருமபுத்திரனை, உயிரொடு பற்றி—இதற்கு இணையாக நல்கில் -இந்த அவமானத்திற்கீடாகக் கொடுப்பாயானால், எண்ணம் பலிக்கும் - என் மனோரதம் நிறை வேறும், என - என்று சொல்ல, (அதற்கு) துரோணன்— இது - இந்த வார்த்தையை, பகர்வான் - சொன்னான்; (எ.று) மன், ஓ - ஈற்றசை. - துரோணன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

தருமனை உயிரோடு பிடித்திட்டாலல்லாமல் எனது துயரம் தணியாது என்றான் துரியோதனன். கவலையுற்றார்க்குத் தூக்கம் வாராது என்பது தெரிவிக்கப்பட்டது. (23)

24 :- துரோணன் கூறிய உத்தரம் கேட்டுத் திரிகர்த்தனாதி
சஞ்சத்தகர் அருச்சுனனைத் தருமனுக்கு உதவாதபடி
விலக்குவதாக வஞ்சினங் கூறுதல்.

இரண்டு கவிகள் - ஒரு தொடர்.

வன்றிறல்மா ருதிவிசயன் அபிமன் காப்ப
வைகுமுதிட் டிரனையெவர் வவ்வ வல்லார்
நன்றுரைத்தி யிப்பவத்தின் முற்று தாயின்
நாரணன் றூண் டிரதமுறு நரனன் னேன்பாற்

சென்றளியா மற்பிரிப்ப ருளரேல் நாளைத்
தினத்தவனைக் கொணர்வனெனத் திகத்தனாதி
வென்றிகொள்சஞ் சத்தகரிற் சிலர்வில் லோனை
விலக்கிலமேல் வழக்கோர முரைத்தார் பேறும்.

(இ-ள்) வன்திறல் மாருதி - மிக்க வலிமையையுடைய வீமன், விசயன் - அருச்சுனன், அபிமன் - அபிமன்யு ஆகிய இவ்வீரர்கள், காப்ப வைகும் உதிட்டிரனை - காப்பாற்ற வாழ்ந்து வரும் தருமனை, வவ்வ வல்லார் எவர் - கைப்பற்றியகப்படுத்தும் வல்லமையுடையார் எவருளர்? (ஒருவருமிலர்): (இது தெரியாது) நன்று உரைத்தி - நன்றாக எளிதிற் சொல்லி விட்டாய்: இ பவத்தில் முற்றாது - இந்தப் பிறப்பில் நிறைவேறாது: ஆயின் - எனினும், நாரணன் தூண்டு இரதம் உறும் நரன் - கிருஷ்ணன் செலுத்தும் தேரிலுள்ள அர்ச்சுனனை, அன்னோன்பால் - அந்தத் தருமனிடத்து, சென்று - போய், அளியாமல் (அவனைப்) பாதுகாக்காதபடி, பிரிப்பருளரேல் - விலக்குகின்றவர் இருப்பாராயின், நாளைத் தினத்து - நாளைய நாட்போரில், அவனைக் கொணர்வன் - அந்தத் தருமனையகப்படுத்திக் கொண்டு வருவேன், என - என்று சொல்ல, (அது கேட்டு) திகத்தன் ஆதி வென்றிகொள் சஞ்சத்தகரில் சிலர் - திரிகர்த்த ராசன் முதலாகிய வெற்றி கொள்ளும் (வல்லமை படைத்த) சம்சப்தகரிற் சில வீரர்கள், வில்லோனை - அருச்சுனனை, விலக்கிலம் ஏல் - தடுத்து வளைக்காமலிருப்போமாயின், வழக்கு - நீதிமன்றவழக்கில், ஓரம் உரைத்தார் பேறும் - பட்ச பாதமாகச் (சாட்சி) சொன்னோரடையும் பயனையும்; (எ-று) '..... பேறும் பெறுவோம்' என மேலைக்கவியில் தொடரும்.

இங்கு, வீமனை 'மாருதி' என்றும், தருமனை 'உதிட்டிரன்' என்றும் சொற்களிட்டுக் கூறினமை நோக்கத்தக்கது. வாயுவின் வலிமை பிரசித்தம்: 'பிதுச்சதகுணம் புத்ர: என்றவாறு அவ் வாயுவினும் மிகப்பல மடங்கு வலியவன் வீமன் என்க. இதனை 'வன்றிறல்மாருதி' என்றதாலும் அறியலாம். உதிட்டிரன் = யுதிஷ்டிரன்: போரில் நிலையாக நிற்பவன் என்று காரணப்பொருள் படும். அருச்சுனனது வெற்றிக்கு முக்கியகாரணம் கண்ணன்தேர் செலுத்துதலாதலால் 'நாரணன் தூண்டிரதமுறும் நரன்' என்றது. உளரேல் - அருமை குறித்து நின்றது. சஞ்சத்தகர் - ஸம்சப்தகர்: நன்றாகச் சபதஞ்செய்பவர் என்று பொருள்படும். அருச்சுனனை விலக்கோமாயின் மன்றோரஞ்சொன்ன பெரும் பாவத்தையடைவோம் என்பதாம். ஓரம் - பட்சபாதம். 'வேதாளம் சேருமே

வெள்ளெருக்கு பூக்குமே, பாதாள மூலி படருமே - மூதேவி, சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே, மன்ருேரஞ் சொன்ஞர் மனை' என்றதும் நினைக. மாருதி விசயன் அபிமன் - ஈற்றில் உம்மை தொக்கது. உரைத்தி-முன்னிலை வினைமுற்று. கொணர்வன் தன்மையொருமை வினைமுற்று. (24)

25. சபதமுரைத்தோர்க்குச் சிறப்புச் செய்து, துரோணனைப் பணிந்து, துரியோதனன் தன்னிடஞ்சேர, மறுநாட் சூரியோதயமாதல்.

பெற்றவருக் கனமளியா தில்லா ளோடும்
பீடுறவாழ் பவர்பே றும் பெறுவோ மென்னுச்
சொற்றனரிப் படிசபத முரைத்தோர்க் கண்ணல்
தூசுமுத லளித்தின்சொற்சொற்றுத் துரோணன்
பொற்பதந்தாழ்ந் தியாரையுமுய்த் தகம்போய்ப் புக்கான்
பொய்யறுவேந் தனையரசு புகன்ற வண்ணம்
பற்றிமுனி நல்கிடுமோ காண்டு மென்னப்
படர்வான்போற் குணக்கெழுந்தான் பரிதி மன்னே.

(இ-ள்) பெற்றவருக்கு - (தம்மைப் பெற்ற) தாய் தந்தையர்க்கு, அனம் அளியாது - சோறிடாமல், இல்லாளோடும் - (தமது) மனைவியரோடும், பீடுற வாழ்பவர் பேறும் - பெருமை தோன்ற வாழ்பவர்களடையும் பயனையும், பெறுவோம்-என்ன - என்று, சொற்றனர் - வஞ்சினங்கூறினுர்கள்: இப்படி சபதம் உரைத்தோர்க்கு - இந்த விதமாகச் சபதஞ்செய்த வேந்தர்க்கு, அண்ணல் - துரியோதனன், தூசு முதல் அளித்து - ஆடை முதலியன கொடுத்து, இன்சொல் சொற்று - இனிய வார்த்தைகளைப் பேசி, (பின்னர்) துரோணன் பொன் பதம் தாழ்ந்து - துரோணுசாரியரின் சிறந்த பாதங்களில் வணங்கி, யாரையும் உய்த்து - எல்லார்க்கும் செல்ல விடைகொடுத்து, அகம் போய் புக்கான் - தன்னிடத்தைச் சென்றடைந்தான்: (இப்படியாக) அரசு புகன்ற வண்ணம் - துரியோதனராசன் கூறியபடியே, பொய் அறு வேந்தனை - சத்தியவிரதனுன தருமனை, முனி பற்றி நல்கிடுமோ?- துரோணுசாரியன் அகப்படுத்திக் கொடுத்து விடுவனே? காண்டும் - பார்ப்போம், என்ன - என்று, படர்வான் போல் - வருபவன்போல, பரிதி – சூரியன், குணக்கு எழுந்தான் - உதித்தான்; (எ.று) மன், ஒ - ஈற்றசை.

"தாயர்பசி கண்டு நனி தன் பசி தணிக்கும், நாயனைய புல்லருறுநரகிலுறுவேனே" என்ற வில்லியார் வாக்கும் ஒப்பு நோக்குக. (பதின்மூன்றும்: 182) 'முதல்' என்றதால் ஆபரணங் களைக் கொள்க. அனம் - அன்னம் என்பதன் இடைக்குறை. காண்டும் - தனித்தன்மைப்பன்மை வினைமுற்று. ஈற்றடியில் ஏதுத் தற்குறிப்பேற்றவணி காண்க. (25)

பதினோராம் போர்ச் சருக்கம் முற்றிற்று.

பன்னிரண்டாம்

போர்ச் சருக்கம்

வேறு.

1. ஒற்றரால் துரியோதனனின் பாசறையில் நிகழ்ந்தவையறிந்து தருமன் தும்பைசூடிக் களம் புகுதல்.

பொய்யுடையா னெண்ணமெலாம் புகன்றிடுமொற் றுலுணர்ந்து
மெய்யுடையான் மாயனுக்கும் விசயனுக்கும் புகன்றவிர் வெண்
மையுடையா ரணிதும்பை வயமாலை வனைந்திரதம்
கையுடைமா வயம்வீரர் களுஞ்சூழக் களம்புகுந்தான்.

(இ-ள்) பொய்யுடையான் - துரியோதனனது, எண்ண மெலாம் - தீயகருத்துக்களனைத்தையும், புகன்றிடும் ஒற்றுல் உணர்ந்து - (தன்னிடம்) சொல்லிய வேவுகாரர்களால் தெரிந்து கொண்டு, மெய்யுடையான் - தருமன், மாயனுக்கும் விசய னுக்கும் - கிருஷ்ணனுக்கும் அருச்சுனனுக்கும், புகன்று - சொல்லி, அவிர் வெண்மையுடையார் - விளங்குகின்ற நீறுபூசியதால் வெள்ளிய நிறத்தையுடையவராகிய சிவபிரான், அணி தும்பை வயமாலை வனைந்து - தரிக்கின்ற தும்பையாகிய (போருக்கு) ஏற்ற மாலையைச் சூடி, இரதம் கையுடைமா அயம் வீரர்களும் சூழ - தேர் யானை குதிரை காலாட்படை வீரர்களும் (தன்னைச்) சூழ்ந்து வர, களம் புகுந்தான் - போர்க்களத்தையடைந்தான்; (எ.று).

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்" ஆதலின் சிவபிரானை 'அவிர் வெண்மையுடையார்' என்றது. தும்பைப் பூமாலை சிவபிரானுக்குரியது. வயம் - ஏற்றது: (உ-ம்: காற்று வயமாயிருக்கிறது). பெருவீரச் செயல் புரிவதன் குறியாக வீரர் போரிலணியும் அடையாளப் பூவாதலின், 'தும்பை வயமாலை' என்றது. ஆங்காங்கு நடப்பவற்றை ஒற்றியறிந்து வருவதால், ஒற்றர் என்று பெயர்: ஒற்றுதல் - அடுத்து நின்று உண்மையைக் கிரகித்தல். இவர் தூதரினும் வேறுபட்டவர்: வடமொழியில் 'சாரர்' எனப்படுவர். கை - தும்பிக்கை. அயம் – குதிரை. தருமன் சதுரங்கசேனை சூழக் களம் புகுந்தான் என்றபடி. பொய்யுடை

யான், மெய்யுடையான் - குறிப்புவினையாலணையும்பெயர்கள். உடையான் - உடைமையாகக் கொண்டவன்.

இதுமுதல் ஏழுகவிகள் - பெரும்பாலும் நாற்சீர்களும் காய்ச்சீர்களாகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்கள். (1)

2 :- பாண்டவசேனை மண்டல வியூகமாக வகுக்கப்பட, அதன் முன்புறம் முதலியவற்றில் அருச்சுனன் முதலோர் நிறுத்தப்பட்டமை.

தேரணியா தியவணியைச் செருவெலு மண்டலமாக்கி
ஏரணிபின் னவர்நிறுவி யிருமருங்கும் அருச்சுனனைத்
தாரணிவா ளபிமனைமுன் தண்டோனைப் பின்நிறுவிப்
பேரணியி னடுநின்றான் பிசகாத மொழியணிவான்.

(இ-ள்) தேர் அணி ஆதிய அணியை - தேர் வகுப்பு முதலாய யானை குதிரை காலாள் வகுப்புக்களையும், செரு வெலும் மண்டல மாக்கி - போரில் வெல்லும்படி மண்டல வியூகமாக வகுத்து, ஏர் அணி இருமருங்கும் பின்னவர் நிறுவி - அழகிய படைவகுப்பின் இருபக்கத்திலும் தம்பியர் இருவரையும் (நகுல சகதேவர்) நிற்கவைத்து, முன் -முன்புறத்தில், அருச்சுனனை - அருச்சுனனையும், தார் அணி வாள் அபிமனை - மாலையையணிந்த வாளினையுடைய அபிமன்யுவையும், (நிறுவி - நிற்க வைத்து), பின் - பின்புறத்தில், தண்டோனை நிறுவி - கதையையேந்திய வீமனை நிற்கவைத்து, பிசகாத மொழி அணிவான் - சொன்ன சொல் தவறாத தருமன், பேரணியின் நடு நின்றான் - பெரிய அணிவகுப்பில் (தான்) நடுவில் நின்றான்; (எ.று)

மண்டலம் - வியூகத்தின் வகை நான்கனுள் ஒன்றென்பர். நாற்புறத்தும் வட்டமாகச் சேனையை நிறுத்துவது மண்டல மென்றும், அது ஸர்வதோபத்ரம் துர்ஜயம் என இரண்டுவகைப் படுமென்றும் காமந்தகம் என்னும் வட நூல் கூறும். தனக்கு முன்புறத்து அருச்சுனனும் அபிமனும்: பின்புறத்து வீமன்; இரு பக்கத்தும் (வலமிடம்) நகுல சகதேவர்; தான் நடுவில்: இங்ஙனம் நின்ற நிலை கூறப்பட்டது. தேரணி, ஏரணி, தாரணி, பேரணி என்றதற்கேற்ப மொழியணி (வான்) என்றது சொன்னயம். (2)

3. துரியோதனன்பக்கத்துச் சேனை மகரவியூகமாக வகுக்கப்படுதல்.

இவ்வண்ண மிவரிருப்ப இவண்வணங் கலர்புகல்சூள்
அவ்வண்ண முடிப்பான்மை யாழியின்பல் லியமார்ப்பச்
செவ்வண்ணக் களமெய்தி சேனையுத தியையமருக்
கொவ்வண்ண மணிமகர யூகம்வகுத் தணிந்தாரே.

(இ-ள்) இ வண்ணம் இவர் இருப்ப - இந்த விதமாகப் பாண்டவர் வியூகம் வகுத்திருப்ப, இவண் - இவ்விடத்து (துரியோதனன் பாசறையில்), வணங்கலர் - யார்க்கும் பணியாதவர்களாகிய சஞ்சத்தகர். புகல் - சொன்ன, சூள் - சபதத்தை, அ வண்ணம் முடிப்பான் - [கூறிய] அப்படியே நிறைவேற்றும் பொருட்டு, மை ஆழியின் பல் இயம் ஆர்ப்ப - கருநிறக் கடலைப் போலப் பல இசைக் கருவிகள் ஒலிக்க, செவ் வண்ணக்களம் எய்தி - சிவந்த நிறமுடைய போர்க்களத்தையடைந்து, சேனை உததியை - சேனாசமுத்திரத்தை, அமருக்கு ஒவ்வண்ணம் - போர்க்குப் பொருந்தும்படி, அணி மகரயூகம் வகுத்து - படை வரிசைகளை மகர வியூகமாக வகுத்து, அணிந்தார் - நின்றார்கள்; (எ.று.)

மகரயூகம் இன்னதென ஆறும்போர்ச் சருக்கத்து முதற் செய்யுளுரையிற் காண்க. சேனையுததி - உருவகம். (3)

4 :- சஞ்சத்தகர் திகத்தர் முதலியோர் அருச்சுனனையறைகூவிப் பொருதல்.

நாரணகோ பாலரொடு நவில்சஞ்சத் தகர்திகத்தர்
பூரணனூர் தேரவனைப் போர்க்கறைகூ விடவசுரர்
மாரணன்றம் முனைக்காப்பான் வைத்தமர்வென்
மன்னரைத்தேர்
வாரணக்கை யான்கடவ மலைந்தனனங் கவர்மிசைபோய்.

(இ-ள்) நாரணகோபாலரொடு - நாராயணகோபாலரென்ற அரசர்களோடு, நவில் சஞ்சத்தகர் திகத்தர் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற சம்சப்தகர்களும் திரிகர்த்தர்களும், பூரணன் ஊர் தேரவனை - கிருஷ்ணன் செலுத்துகின்ற தேரிலுள்ள அருச்சுனனை, போர்க்கு அறைகூவிட - போரிடுதற்கு அழைக்க, அசுரர் மாரணன் - அசுரர்களுக்குக் காலனாகிய (அந்த) அருச்சுனன், தம் முனைக் காப்பான் - தன் அண்ணனைக் காக்கும் பொருட்டு, அமர் வெல் மன்னரை வைத்து - போரில் வெல்லுதலில் வல்ல அரசர்

களைத் துணையாக[ச்சூழ] வைத்து, (பின்பு) வாரணக்கையான் - தும்பிக்கை போன்ற நீண்ட கையையுடைய கிருஷ்ணன், தேர் கடவ - தேரினைச் செலுத்த, அவர் மிசைபோய் மலைந்தனன் - அறைகூவிய அவர்கள் மீது சென்று போரிட்டான்; (எ.று)

நாராயணகோபாலர் - துரியோதனன் கண்ணனைப் படைத் துணையழைக்கப் போனபோது அவனால் துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப்பட்டனர் இவர். அசுரர் - நிவாதகவசர் காலகேயர் போன்றவர். மாரணன் – மரணத்தை விளைவித்தவன்: காலன். வீமன் விராடன் துருபதன் பாண்டியன் நகுலசகதேவர் திட்டத்துய்மன் திட்டகேது முதலிய சோமகர் சிருஞ்சயர் கடோற்கசன் என்னும் இவர்களின் வசத்தில் தருமபுத்திரனை ஒப்பித்து அருச்சுனன் சென்றானென்று பெருந்தேவனார் பாரதத் தால் தெரிகிறது. துருபதராசன் மகனும் அதிரதனுமாகிய ஸத்தியஜித்து என்பவனைத் தருமனைக் காக்குமாறு அருச்சுனன் சொல்லிச் சென்றதாக வியாசபாரதம் கூறும். வாரணம் - யானை, கரம் – கை, துதிக்கை. திரட்சியாலும் நீட்சியாலும் உவமம், ''கரிக்கரம் பொருகைத்தலம்'' என்றார் கம்பரும். (அயோத்: கைகேசி: 50) பூரணன் - சகலகுணசம்பன்னன். முன் - முன் பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். கையான் - சினைப்பெயர் (4)

5. துரோணன் தருமன்மேல்வர அப்போது திருஷ்டத்யும்நன் துரோணனையெதிர்த்தல்.

முன்னவனை நரனகல முப்பதினா யிரமரசர்
தன்னுடன்தேர் கரிபரியாள் தனைச்சூழத் தனுர்வேதி
மன்னுமுர சுயர்த்தோன்மேல் வரற்காணு மகத்துதித்
தோன்
அன்னவன்மேற் பாஞ்சால ரளப்பிலரோ
டெதிர்த்தனனால்.

(இ-ள்) நரன் - அருச்சுனன், முன்னவனை - தமையனான தருமனை, அகல - விட்டுநீங்க, (அந்தச் சமயத்தில்) தனுர்வேதி - வில்வேதத்தில்வல்ல துரோணாசாரியன், முப்பதினாயிரம் அரசர் தன்னுடன் - முப்பதினாயிரம் துணைவேந்தரோடு, தேர் கரி பரி ஆள் தனைச் சூழ - நால்வகைச் சேனைகளும் தன்னைச் சூழ்ந்துவர, மன்னு முரசு உயர்த்தோன் மேல் - நிலைபெற்ற முரசக்கொடியை யுயர்த்திய தருமன்மேல், வரல் காணா - வருதலைப்பார்த்து, மகத்து உதித்தோன் - யாகாக்னியினின்று தோன்றிய திருஷ்டத்யும்நன், அன்னவன்மேல் - அந்தத் துரோணன்மீது, பாஞ்சாலர் அளப்

பிலரோடு - கணக்கற்ற பாஞ்சால வீரர்களோடு; எதிர்த்தனன் - எதிரிட்டான்; (எ.று) ஆல் - ஈற்றசை.

தேர்கரிபரியாள் - உம்மைத்தொகை. (5)

6. திருஷ்டத்யும்நனுல் சேனையழிதலைக்கண்ட துரோணன் எதிரிட்டு வந்து, துருபதன்சிலையைத்துணித்து மாற்ருர்பலரை மடிவித்தல்.

பூந்தார்ப்பாண் டவரனிக பூபனளப் பிலரிகுத்துக்
காந்தாரர் முதலியபல் காவலர்வென் னிடப்பொர நூல்
ஆய்ந்தான்கண் டதற்காற்ரு தவன்மிசைப்பாய்ந்
தவன் றந்தை
ஏந்தோர்வெஞ் சிலைத்துணியா வெண்ணிலரை விண்
ணுய்த்தான்.

(இ-ள்) பூந்தார் பாண்டவர் அனிக பூபன் - பூமாலையைத் தரித்த பாண்டவரின் சேனைத்தலைவனுகிய திருஷ்டத்யும்நன், அளப்பிலர் இகுத்து - கணக்கற்றவரையழித்து, காந்தாரர் முதலிய பல் காவலர் வென்னிட பொர - காந்தார தேசத்து வீரர்கள் முதலிய பல தேசவரசர்கள் முதுகுகாட்டியோடும்படி போரிட, (அதனை) நூல் ஆய்ந்தான் கண்டு - தநுர் வேதத்தில் வல்ல துரோணன் பார்த்து, அதற்கு ஆற்ருது - அங்ஙனம் புறமிடுதலைக் கண்டு பொருமல், அவன்மிசை பாய்ந்து - அந்தத் திருஷ்டத்யும் நன்மேலே விரைந்து சென்று, அவன் தந்தை ஏந்து ஓர் வெம் சிலை - அவனது தந்தையாகிய துருபதன் வைத்திருந்த ஒப்பற்ற கொடியவில்லை, துணியா - துணித்து, எண்ணிலரை - அநேகம் பேரை, விண் உய்த்தான் - வீரசுவர்க்கம் செலுத்திஞன் (கொன் ருன்); (எ:று) (6)

விண்ணுய்த்தான் - பிறிதினவிற்சி.

7. தருமன் துரோணனை யெதிர்த்தல்.

மாதேவ னிகர்முனிவன் மச்சர்முத லியர்நகுலன்
சாதேவ னுத்தமோசா சத்தியகே தனிகமொடும்
போதேவெந் தரநகைக்கப் புறமிடல்கண் டுதிட்டிரனப்
பூதேவன் மிசையெதிர்ந்தான் பொருதுமனம் பொங்கி
யரோ.

(இ-ள்) மச்சர் முதலியர் - விராட மன்னன் முதலிய அரசர்களும், நகுலன் சகாதேவன் உத்தமோசா சத்தியகேது, - [ஆகிய

இவர்களும்] அனிகமொடும் - தத்தம சேனையோடும், போதே- விரைவாகவே, வெந் தர - முதுகு காட்டி, மாதேவன் நிகர் முனிவன் நகைக்க - சிவபிரானையொத்த துரோணன் பரிகசிக்கும் படி, புறமிடல் கண்டு - பின்னிடைதலைப்பார்த்து, உதிட்டிரன் - தருமன், அ பூதேவன் மிசை - அந்த வேதியனாகிய துரோணன் மீது, மனம் பொறுது பொங்கி எதிர்ந்தான் - மனம் தாங்க முடியாமல் கோபித்து, எதிரிட்டு வந்தான்; (எ.று.) அரோ - ஈற்றசை.

எதிர்க்கும் பொருளைத் தவறாது அழித்தற்குத் துரோண னுக்குச் சிவனுவமை கொடுக்கப்பட்டது. சத்தியகேது - உண்மைக்குக் கொடிகட்டியுள்ளவனெனப் பொருள்படும். இவனைக் காசிராஜ வமிசத்தவனான விபுவின் தந்தையென்று கூறுகின்றனர். போத - விரைவாக, சீக்கிரமாக. முனிவன் நகைக்க என இயைத்துப் பொருள் கொள்க. (7)

வேறு.

8. தருமனும் துரோணனும் தம் சேனைகளைக் கொண்டு தம்மிற் பொருதல்.

தனிவரை புரைதிண் டேரினரும்
தறுகண்மதக்கைம் மாவினரும்
பனியலை நிகர்வெம் பரியினரும்
பாய்புலி யன்ன பதாதியரும்
குனிசிலை கொடுதத் தமினிகலிக்
கொடுசமர் செய்யச் செய்தனர்போர்
மனுநெறி யுணரு முதிட்டிரனும்
மறைநெறி முழுதுணர் முனிவனுமே.

(இ-ள்) தனி வரை புரை - ஒப்பற்ற மலையையொத்த திண் தேரினரும் - திண்ணிய தேரையுடையவர்களும், தறுகண் மதம் - அஞ்சாமையும் மதச் செருக்கும் கொண்ட, கைம்மா வினரும் - யானைகளையுடைய வீரர்களும், பனி அலை நிகர் - குளிர்ந்த அலைகளைப் போல் வரிசையாய் வருகின்ற, வெம் பரியினரும் - கொடிய குதிரைகளையுடைய வீரர்களும், பாய் புலி அன்ன - பாய்கின்ற புலியைப்போல் உக்கிரமுடைய, பதாதியரும் - காலாள் வீரர்களும், குனி சிலை கொடு - வளைத்த விற்களைக் கொண்டு, தத்தமின் இகலி - தங்களுக்குள் மாறுபட்டு, கொடு சமர் செய்ய - கொடிய போரைச் செய்யுமாறு, மனுநெறி

பிலரோடு - கணக்கற்ற பாஞ்சால வீரர்களோடு; எதிர்த்தனன் - எதிரிட்டான்; (எ.று) ஆல் - ஈற்றசை.

தேர்கரிபரியாள் - உம்மைத்தொகை. (5)

6. திருஷ்டத்யும்நனுல் சேனையழிதலைக்கண்ட துரோணன் எதிரிட்டு வந்து, துருபதன்சிலையைத்துணித்து மாற்ருர்பலரை மடிவித்தல்.

பூந்தார்ப்பாண் டவரனிக பூபனளப் பிலரிகுத்துக்
காந்தாரர் முதலியபல் காவலர்வென் னிடப்பொர நூல்
ஆய்ந்தான்கண் டதற்காற்ரு தவன்மிசைப்பாய்ந்
தவன் றந்தை
ஏந்தோர்வெஞ் சிலைத்துணியா வெண்ணிலரை விண்
ணுய்த்தான்.

(இ-ள்) பூந்தார் பாண்டவர் அனிக பூபன் - பூமாலையைத் தரித்த பாண்டவரின் சேனைத்தலைவனுகிய திருஷ்டத்யும்நன், அளப்பிலர் இகுத்து - கணக்கற்றவரையழித்து, காந்தாரர் முதலிய பல் காவலர் வென்னிட பொர - காந்தார தேசத்து வீரர்கள் முதலிய பல தேசவரசர்கள் முதுகுகாட்டியோடும்படி போரிட, (அதனை) நூல் ஆய்ந்தான் கண்டு - தநுர் வேதத்தில் வல்ல துரோணன் பார்த்து, அதற்கு ஆற்ருது - அங்ஙனம் புறமிடுதலைக் கண்டு பொருமல், அவன்மிசை பாய்ந்து - அந்தத் திருஷ்டத்யும் நன்மேலே விரைந்து சென்று, அவன் தந்தை ஏந்து ஓர் வெம் சிலை - அவனது தந்தையாகிய துருபதன் வைத்திருந்த ஒப்பற்ற கொடியவில்லை, துணியா - துணித்து, எண்ணிலரை - அநேகம் பேரை, விண் உய்த்தான் - வீரசுவர்க்கம் செலுத்தினுன் (கொன்ருன்); (எ:று) (6)

விண்ணுய்த்தான் - பிறிதினவிற்சி.

7. தருமன் துரோணனை யெதிர்த்தல்.

மாதேவ னிகர்முனிவன் மச்சர்முத லியர்நகுலன்
சாதேவ னுத்தமோசா சத்தியகே தனிகமொடும்
போதேவெந் தரநகைக்கப் புறமிடல்கண் டுதிட்டிரனப்
பூதேவன் மிசையெதிர்ந்தான் பொருதுமனம் பொங்கி
யரோ.

(இ-ள்) மச்சர் முதலியர் - விராட மன்னன் முதலிய அரசர் களும், நகுலன் சகாதேவன் உத்தமோசா சத்தியகேது, -[ஆகிய

இவர்களும்] அனிகமொடும் - தத்தம சேனேயோடும், போதே-விரைவாகவே, வெந் தர - முதுகு காட்டி, மாதேவன் நிகர் முனிவன் நகைக்க - சிவபிரானேயொத்த துரோணன் பரிகசிக்கும்படி, புறமிடல் கண்டு - பின்னிடைதலேப்பார்த்து, உதிட்டிரன் - தருமன், அ பூதேவன் மிசை - அந்த வேதியனுகிய துரோணன் மீது, மனம் பொருது பொங்கி எதிர்ந்தான் - மனம் தாங்க முடியாமல் கோபித்து, எதிரிட்டு வந்தான்; (எ.று.) அரோ - ஈற்றசை.

எதிர்க்கும் பொருளேத் தவருது அழித்தற்குத் துரோணனுக்குச் சிவனுவமை கொடுக்கப்பட்டது. சத்தியகேது - உண்மைக்குக் கொடிகட்டியுள்ளவனெனப் பொருள்படும். இவனேக் காசிராஜ வமிசத்தவனுன விபுவின் தந்தையென்று கூறுகின்றனர். போத - விரைவாக, சீக்கிரமாக. முனிவன் நகைக்க என இயைத்துப் பொருள் கொள்க. (7)

வேறு.

8. தருமனும் துரோணனும் தம் சேனேகளேக் கொண்டு தம்மிற் பொருதல்.

தனிவரை புரைதிண் டேரினரும்
 தறுகண்மத கைம் மாவினரும்
பனியலே நிகர்வெம் பரியினரும்
 பாய்புலி யன்ன பதாதியரும்
குனிசிலே கொடுதத் தமினிகலிக்
 கொடுசமர் செய்யச் செய்தனர்போர்
மனுநெறி யுணரு முதிட்டிரனும்
 மறைநெறி முழுதுணர் முனிவனுமே.

(இ-ள்) தனி வரை புரை - ஒப்பற்ற மலேயையொத்த திண் தேரினரும் - திண்ணிய தேரையுடையவர்களும், தறுகண் மதம் - அஞ்சாமையும் மதச் செருக்கும் கொண்ட, கைம்மாவினரும் - யானேகளேயுடைய வீரர்களும், பனி அலே நிகர் - குளிர்ந்த அலேகளேப் போல் வரிசையாய் வருகின்ற, வெம் பரியினரும் - கொடிய குதிரைகளேயுடைய வீரர்களும், பாய் புலி அன்ன - பாய்கின்ற புலியைப்போல் உக்கிரமுடைய, பதாதியரும்- காலாள் வீரர்களும், குனி சிலே கொடு - வளேத்த விற்களேக் கொண்டு, தத்தமின் இகலி - தங்களுக்குள் மாறுபட்டு, கொடு சமர் செய்ய - கொடிய போரைச் செய்யுமாறு, மனுநெறி

உணரும் உதிட்டிரனும் - மனு கூறிய தரும வழியை யறிந்த தருமனும், மறைநெறி முழுதுணர் முனிவனும் - வேதமார்க்கத்தை முற்றும் அறிந்த துரோணனும், போர் செய்தனர் - (தமக்குள்) சண்டை செய்தார்கள்; (எ.று)

இருவர் தமக்குள் செய்த போரைக் கண்டு இருவர் சேனைகளும் தத்தமக்குள் இகலிக் கொடு சமர் செய்தனர் என்றபடி. வரை தேருக்கும், அலை ·பரிக்கும், புலி பதாதியர்க்கும் ஒப்பு. மனுநெறி - மனுதர்ம சாத்திரவழி. மனு - நல்லொழுக்கத்திலேயே தான் ஒழுகுதலோடு எல்லோரையும் அங்ஙனம் நடப்பித்து எல்லா நற்குணங்களோடுங் கூடிப் பிரசித்தி பெற்றவன். ஈற்றடி சுவையுடைத்து. புரை, நிகர், அன்ன - உவமவுருபுகள்.

இது முதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் கருவிளச்சீர்களும், இரண்டாஞ்சீரும் ஐந்தாஞ்சீரும் தேமாச்சீர்களும், மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் கூவிளங்காய்ச்சீர்களுமாக வந்த அறுசீராசிரியச்சந்தவிருத்தங்கள். 'தனத்தன தந்த தானதன தனத்தன தந்த தானதன' என்பது, இவற்றிற்குச் சந்தக்குழிப்பாம். (8)

9. தருமனுக்கும் துரோணனுக்கும் கைகலந்த போர்.

ஆடநி வந்தம் கவந்தம்பேய்
அம்பொடெ ழுந்துகள் வான்மூட
ஓடவ ருந்தி யுறுந்தானை
யுற்றவர் சொர்க்கம் பெற்றிடமா
பாடந வந்தா ரிருதோண்மேற்
பலபணி விம்ம விற்பிறைபோற்
கோடமு னைந்தார் யாரிணையிக்
கூவிலெ னப்பண் ணவர்சொலவே.

(இ-ள்) கவந்தம் பேய் - தலையற்ற உடல்களும் பேய்களும், நிவந்தம் ஆட - நிபந்தனையோடு கூத்தாடவும், அம்பொடு எழும் துகள் - அம்புகள் [தரையில் விழுதலாலே] மேலெழுப்புகின்ற புழுதிகள், வான் மூட - ஆகாயத்தை மூடவும், ஓட வருந்தி - முதுகுகாட்டியோடுதற்கு அஞ்சித்துயருற்று, உறும் தானை உற்றவர் - பொருந்திய சேனையிலுள்ளவர்கள், சொர்க்கம் பெற்றிட - இறந்து வீரசுவர்க்கம் அடையவும்; மா - வண்டுகள்,

பாட - இசைபாடும்படி, நவம் தார்-புதிய மாலைகளைத் தரித்த, இரு தோள் - இரண்டு தோள்களும், மேல் பல பணை விம்ம - மேலே பல தரம் உயர்ச்சி பெற்றுப் பூரிக்க, வில் - கைப்பிடித்த வில்லானது, பிறை போல் கோட - பிறைச்சந்திரனைப் போல நன்கு வளைய, இ கூவில் - இந்தப் பூமியில், யார் இணை என - இவ்விருவர்க்கும் ஒப்பு எவருளர் (ஒருவருமிலர்) என்று, பண்ணவர் சொல - தேவர்கள் சொல்லும்படி முனைந்தார் - போரிடலானார்.

ஆட, மூட, பெற்றிட முனைந்தார் எனவும்; விம்ம, கோட முனைந்தார் எனவும் இயைத்துப் பொருள் கொள்க. பணை - உயர்ச்சி. கூ - பூமி. (9)

10 :- படையிழந்த துரோணனைத் தருமன் ஏகுமாறு சொல்ல, தோற்றோடிய அவன் வேறொரு தேரிலேறி வருதல்.

பற்றிட முனையில் வருமுனியைப்
பரிரதப் பாகன் பதாகைசிலை
அற்றிட மூவைந் தம்பேவி
அகனீ இயஞ்ச லெனத்தருமன்
சொற்றிட வென்னிட் டோடிமறைத்
துரோணன ழன்றோர் தேரேறி
யுற்றிட வதுகண் டபிமன்முத
லுறுமன்கு மாரர் வளைந்தனரால்.

(இ-ள்) முனையில் - போர் முனையில், பற்றிட - தன்னையகப் படுத்த, வரு முனியை - வந்த துரோணனை, பரி ரதம் பாகன் பதாகை சிலை அற்றிட - குதிரை தேர் சாரதி கொடி வில் முதலியன சிதையும்படி, மூ ஐந்து அம்பு ஏவி - பதினைந்து அம்புகளைச்செலுத்தி, நீ அஞ்சல் - நீ பயப்படாதே, அகல் - அப்புறம் போ, என - என்று, தருமன் சொற்றிட - தருமன் சொல்ல, (அது கேட்டு) மறைத் துரோணன் - வேதம் வல்ல துரோணன், வென்னிட்டு ஓடி - புறமுதுகு காட்டியோடி, அழன்று - கோபித்து, (பிறகு) ஓர் தேர் ஏறி- பிறிதொரு தேரின்மேலேறி, உற்றிட - (போர்க்களத்து) வர, அது கண்டு - அந்தச் செயலைப் பார்த்து, அபிமன் முதல் உறு மன் குமாரர் - அபிமன் முதலாகப் பொருந்தியுள்ள அரசகுமாரர்கள், வளைந்தனர்-(அந்தத் துரோணனைச்) சூழ்ந்துகொண்டனர்; (எ.று) ஆல் - ஈற்றசை.

அகல் நீ அஞ்சலெனச்சொல்லி விடுத்தது - தழிஞ்சியென்னும் புறப்பொருள் துறையின்பாற்படும். அது சாய்ந்தவர்மேல் செல்லாமல் தழுவுவது. அகனிஇ - அளபெடை அலகுபெற்றது. அஞ்சல் எதிர்மறை வினைமுற்று. பரிரதப்பாகன் பதாகைசிலை - உம்மைத் தொகை. மூவைந்து - பண்புத்தொகை. *(10)*

வேறு.

11. இதுமுதல் மூன்று கவிகள் - இருதிறத்துச் சேனை வீரர்களும் திரள, போர் நிகழ்ந்தது கூறும்.

குந்தி போசர் மச்ச ராதி கொற்ற மன்ன ரொடுநரன்
மைந்த னாதி குமரர் வர்க்கம் வளைதல் கண்ட வற்குநீள்
சிந்து தேய மாதி யான தேய மன்னர் அனைவரும்
முந்து தானை நாலி னோடு முதவி யாயி னரரோ.

(இ-ள்) குந்திபோசர் - குந்திபோஜ தேசத்தவர், மச்சர் - மச்சதேசத்தவர், ஆதி - முதலாகிய, கொற்றம் மன்னரொடு - வெற்றிபொருந்திய அரசர்களோடு, நரன் மைந்தன் ஆதி குமரர் வர்க்கம் - அருச்சுனகுமாரனான அபிமன் முதலாகிய அரசகுமரர் கூட்டமும், வளைதல் கண்டு - போர்க்குச் சூழ்ந்து வரல் கண்டு, அவற்கு - அந்தத் துரோணனுக்கு, நீள் சிந்து தேயம் ஆதியான தேய மன்னர் அனைவரும் - நீண்ட (பெரிய) சிந்துதேசம் முதலாய தேசத்து அரசர்கள் எல்லோரும், முந்து தானை நாலினோடும் - முற்பட்டு வருகின்ற நால்வகைச் சேனையோடும், உதவியாயினர் - துணையாக வந்தார்கள்; (எ.று) அரோ - ஈற்றசை.

குந்திபோசன் -பாண்டவர் தாயாகிய குந்தியின் உடன்பிறந்த முறையாகுபவன்: இவன் பெயர் 'புரஜித்' என்பதை முதனூலால் அறிக. இவன் தேசத்தவர் குந்திபோசர். மச்சர் - மத்ஸ்ய தேசத்தவர் மச்சம் - வடசொற்சிதைவு; நீர்வள மிகுதியால் எங்கும் மீன்கள் மலிந்திருத்தல்பற்றி, மத்ஸ்யதேசம் எனப் பெயர் பெறும். சிந்துதேய மன்னன் - சயத்திரதன்.

இதுமுதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். *(11)*

12. இருதி றத்து நின்ற மன்ன ரிடியு நாண வார்த்தெதிர்ந்
தரிதி றத்து மிஞ்சு வீர வாண்மை கூறி வாங்கிய
வரிதி றத்தின் வில்லின் மேகம் வாளி மாரி பெய்யவே
பொருதி றத்தை நோக்க வஞ்சிப் புலவர் கண்கை பொத்தினர்.

(இ-ள்) இரு திறத்து நின்ற மன்னர் - இரண்டு பக்கத்திலும் போரிட நின்ற அரசர்கள், இடியும் நாண ஆர்த்து - இடியும் கீழ்ப் படும்படி பேராரவாரஞ் செய்து, எதிர்ந்து - எதிரிட்டு, அரி திறத்து - (தமது) பகைவரிடத்து, மிஞ்சு வீர ஆண்மை கூறி - அவரினும் மிக்க வீரப் பிரதாபத்தைச் சொல்லி, வாங்கிய - வளைத்த, வரி திறத்தின் வில்லின் மேகம் - வரிந்து கட்டப்பட்ட வில்லாகிய மேகம், வாளி மாரி பெய்ய - அம்பு மழையைப் பொழியும்படி, பொரு திறத்தை நோக்க அஞ்சி - போரிடுகின்ற சாமர்த்தியத்தைப் பார்க்கப் பயந்து, புலவர் - தேவர்கள், கண் - தமது கண்களை, கை பொத்தினர் - கையால் மூடிக்கொண் டார்கள்; (எ.று.)

போர்காண வந்த தேவர்களும் திகைத்துக் கண்புதைக்கும்படி வெகு உக்கிரமாகப் போரிட்டனர் என்றபடி- இடியும், உம்மை - சிறப்பு. அரி - பகை, சத்துரு: (பிங்கலந்தை) வில்லின் மேகம், வாளி மாரி - உருவகம். வில்லின், இன் - சாரியை. பொரு திறம் - பெயரெச்சத் தொடர். (12)

13. படையெ டுத்தெ திர்ந்த மன்னர் படைகள் போக
வற்றதை
முடியெ டுத்து மடியெ டுத்து முனிவி னோடு
மெற்றுவார்
அடியெ டுத்து வைக்க வஞ்சி யாவி போன
வானைமா
வுடலெ டுத்து றுப்பை மூடியுற்ற னேக ருய்குவார்.

(இ-ள்) படை எடுத்து எதிர்ந்த மன்னர் - ஆயுதங்களை யெடுத்து எதிரிட்ட அரசர்களின், படைகள் போக - சேனைகள் அழிய, அற்றதை - (அழியாமல்) எஞ்சியதை, முடி எடுத்து - தலையைக் குடுமிபிடித்துத் தூக்கியும், மடி எடுத்து - மடியைப் பிடித்து இழுத்தும், முனிவினோடும் - கோபத்தோடும், எற்றுவார் - வீசியெறிவார்கள்; [இஃது இங்ஙனக] அநேகர் - பல வீரர்கள், அடியெடுத்து வைக்க அஞ்சி - களத்தில் (தங்களது) பாதங்களைக் கீழ் வைக்கவும் பயந்து, ஆவி போன ஆனை மா - உயிர் நீங்கிய யானை குதிரைகளின், உடல் எடுத்து - உடம்பினைத் தூக்கி யெடுத்து, உறுப்பை மூடி - தமது அங்கவுருவங்களை மறைத்துக் கொண்டு, உற்று - பொருந்தி, உய்குவார் - தப்பிப் பிழைப்பார் கள்; (எ.று)

முடி - தலைமுடி: "பாறுமயிர்குடுமி யெண்ணெய் நீவி" என்றது புறமும். இறந்து போன யானை குதிரைகளின் உடலை மறைவாகக் கொண்டு தப்பியோடி அநேகர் உய்ந்தனர் என்றுர். அற்றது - குறிப்புவினையாலணையும்பெயர். ஆனை-யானை யென்பதன் மரூஉ. (13)

14. அபிமனும் காவன்மன்னரும் செய்த போரினுக்குப் புறங்கொடுத்துத் துரோணன் துரியோதனனிடம் சார்ந்து கூறுதல்.

இந்த வா று சமர்செய் காலை யேற்ற மன்ன ரபிமனும்
தந்த போரி னுக்கு டைந்து தானை யோடு மாரியன்
வந்து மன்னோ டறன்ம கன்செய் வல்ல பங்கள் கூற
லால்
அந்த மன்னன் னொந்தெ ரிந்த னேக ரோடு மணுகினுன்.

(இ-ள்) இந்த ஆறு சமர்செய்காலை-இந்த விதமாகப்போரிடும் போது, ஏற்ற மன்னர் - துணையாகப் பொருந்திய அரசர்களும், அபிமனும்,- தந்த - செய்த, போரினுக்கு உடைந்து - போர்க்குப் பின்னிட்டு, தானையோடும் - (தனது) சேனையோடும், ஆரியன் - துரோணுசாரியன், வந்து - புறங்காட்டி வந்து, மன்னோடு - துரி யோதனனோடு, அறன்மகன் செய் வல்லபங்கள் கூறலால் - தரும புத்திரன் செய்த சாகசங்களைப்பற்றிச் சொன்னதால் (அவற்றைக் கேட்டு) அந்த மன்னன் - அந்தத் துரியோதனன், நொந்து - மனம் வருந்தி, எரிந்து - வயிறெரிந்து, அநேகரோடும் - பல துணைவேந்தர் களோடும், அணுகினுன் - போர்க்களங்குறுகினுன்; (எ.று)

சேனுவீரர்கள் செய்யும் வல்லபங்களனைத்தும் அவர்தம் தலைவர்க்கே சேருமாதலின், 'அறன்மகன் செய் வல்லபங்கள்" என்றது. (14)

15. துரியோதனனோடு அவன் சேனைமன்னரும் துரோணனும் இரியும்படி அபிமன் போரிடும்போது பகதத்தன் யானைச்சேனையோடு வரல்.

வந்த மன்னர் மன்ன னுதி மன்ன ரோடு துரோணனும்
முந்து தேரொ டங்கை வில்லொ ழிந்தி ரிந்தி டக்கணை
சிந்தி வான்கொ ளபிம னுடல் செய்யு மெல்லை யானைமேல்
இந்தி ரற்கு நண்ப னெண்ணி லிபதளத்தொ
டெய்தினுன்.

(இ-ள்) வந்த மன்னர் மன்னன் ஆதி மன்னரோடு - போரிட வந்த துரியோதனன் முதலாகிய அரசர்களோடு, துரோணனும் -; முந்து தேரொடு - முற்பட்டுச் செலுத்தி வந்த தன் தேரினோடு, அம் கை வில் ஒழிந்து - அழகிய கையிலிருந்த வில்லும் முறி பட்டொழிந்து, இரிந்திட - பின்னிடும்படி, வாள்கொள் அபிமன் - வாளைப்பிடித்த அபிமன்யு, கணை சிந்தி - அம்புகளைச் சொரிந்து, ஆடல் செய்யும் எல்லை - சண்டை செய்யும்போது, யானைமேல் - தனது பட்டத்து யானையாகிய சுப்பிரதீகத்தின் மீது, இந்திரற்கு நண்பன் - இந்திரனுக்குச் சிநேகிதனாகிய பகதத்தன், எண் இல் - கணக்கற்ற, இப தளத்தொடு - யானைப்படைகளோடு, எய்தினன் - எதிர்த்து வந்தான்; (எ.று)

பகதத்தனை இந்திரற்கு நண்பன் என்றதன் விவரம் பின் வருமாறு - ஒரு காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் தோல்வியடைந்த தேவேந்திரன், திருமாலின் பௌத்திரனும் நரகாசுரனது மகனும் அவன் காலத்திற்குப்பின் கண்ணனால் இளமையில் பரிபாலனஞ் செய்யப்பட்டவனும் ஆகிய பகதத்தனைத் துணையழைக்க, இவன் அவ்விந்திரன் வேண்டு கோளின்படி சென்று அசுரரையொழித்து இந்திரனுக்கு அரசாட்சியை நிலைநிறுத்தினன் என்பது. வில்லிபுத்தூரரும், பகதத்தனைப் பற்றிக் கூறும்போது, "முருகனென வெற்றி நேமி முகிலென முரணவு ணருக்கு வாழ்வு கெடவுயர், சுரபதி தனக்கு வாழ்வு வரும் வகை சுரருல களித்த தோழ னிவனரோ" என்று கூறுவர், (துரோண:பன்னிரண்:46) ஆடல் - தொழிற்பெயர். (15)

வேறு.

16-17. இரண்டு கவிகள் - பகதத்தனுக்கும் வீமனுக்கும் நிகழ்ந்த போரினைக் குறிக்கும்.

உததியி னுதித்த யானை யுருபுவி
யுறுசிர மெடுத்த வேழ வலிமழை
மதகரி நடத்தி வீம னெவனவன்
மணிமுடி துணித்து மீள்வ னெனவரும்
எதிரில்பக தத்தன் வாகு முறிபட
இகல்கொடு வளைத்து மார்பு கிழிதர
கதுமென விடித்த வானை நுதன்மிசைக்
கழல்பட வுதைத்து வாயு மகனரோ.

(இ-ள்) உததியின் உதித்த யானை உரு - திருப்பாற்கடலில் தோன்றிய யானையின் உருவம் (ஐராவதத்தின் வெண்மையான உருவம்), புவி உறு - பூமியிலே வந்து, சிரம் எடுத்த - தலையைத் தூக்கியதென்னும்படி, வேழம் - (வெள்ளிய) சுப்ரதீகம் என்னும் (யானையாம்), வலி மழைமத கரி நடத்தி - வலிமையுடைய மழையைப்போல் மதநீரைச் சொரிகின்ற யானையைச் செலுத்தி, 'எவன் வீமன் - வீமனென்பவன் யாவன்? அவன். மணி முடி துணித்து - அவனது அழகிய தலையை வெட்டித்தள்ளி, மீள்வன் - வெற்றியோடு திரும்புவேன்' என - என்று வீரவாதங் கூறிக் கொண்டு, எதிரில் வரும் பகதத்தன் - எதிரிட்டு வருகின்ற பகதத்தனின், வாகு முறிபட - தோள்கள் முறியும்படி, இகல் கொடு வளைத்து - வலிமையோடு (தன் கைகளாற் பிடித்து) மடக்கி விட்டு, மார்பு கிழிதர - (அவன்) மார்பு பிளவுபடும்படி, கதுமென இடித்து - விரைவாக(த் தன் கைகளால்) குத்தி, (மேலும்) அ ஆனை நுதல்மிசை - அந்தச் சுப்ரதீகத்தின் நெற்றியின்மீது, வாயுமகன் - வீமன், கழல் பட உதைத்து - (தனது வலிய) கால்களால் உதைத்து; (எ.று) இது மேலைக்கவியில் 'இரதத்திலேறி' என்பதோடு இயையும். அரோ - ஈற்றசை.

பகதத்தனது பட்டத்து யானையாகிய சுப்பிரதீகம் ஐராவதம் போல் வெண்மைநிற முடையது; இது தேவயானையென்றும், இந்திரனால் இவனுக்கு அளிக்கப்பட்டதென்றுங் கூறப்படும். இது நூறாயிரம் யானை பலமுடையதென்று பெருந்தேவனார் பாரதத்து உரைநடையால் தெரிகிறது. (பகதத்தன் பதினாயிரம் யானைப் பலமுடையான் என்பது நினைக). வாகுவளைத்தல் - தோள்களைத் தழுவுதலுமாம்; 'மார்பு - சுழிதர' எனவும் பாடம்.

இதுமுதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் ஒன்று நான்கு ஐந்து எட்டாஞ்சீர்கள் கருவிளச்சீர்களும், இரண்டு மூன்று ஆறு ஏழாஞ் சீர்கள் தேமாச்சீர்களும் ஆகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியச்சந்த விருத்தங்கள்: 'தனதன தத்த தான தனதன தனதன தத்த தான தனதன' எனச் சந்தக்குழிப்புக் காண்க. (16)

17. பகதத்தனும் அவனது யானையும்
வீமன் சேனையை யழித்தல்.

பரிகொளி ரதத்தி லேறி யவனெதிர்
பரியவில் வணக்கி யேவு கணைமிசை
வருமுனம் விலக்கி மீள யவனிவன்
வருதினி படுக்கு மேல்வை யவனிபம்

இருபிறை மருப்பி லூரு திகிரியை
யெறிகையி லிபத்தை வாலி லிவுளியை
உரனிகர் பதத்தில் வீரர் அணிகளை
யொழிதர வழித்த தோது மளவதோ.

(இ-ள்) (வீமன்) பரிகொள் இரதத்தில் ஏறி - குதிரைகட்டிய தேரிலேறி, அவன் எதிர் பரிய வில் வணக்கி – அந்தப் பகதத்தனுக்கு எதிராகப் பருத்த வில்லினை வளைத்து, ஏவு கணை - செலுத்திய அம்பு, மிசை வரு முனம் விலக்கி - தன்மேல் வருதற்கு முன்னமேயே அதனையப்புறப்படுத்தித்தள்ளி, மீள - மறுபடியும், அவன் - அந்தப்பகதத்தன், இவன் வருதினி படுக்கும் ஏல்வை - இந்த வீமனது சேனைகளையழிக்குஞ் சமயத்தில், அவன் இபம் - அவனது யானையாகிய சுப்ரதீகம், இரு பிறை மருப்பில் - பிறை போன்ற தனது இரண்டு தந்தங்களால், ஊரு திகிரியை - தேர் ஊர்ந்து வருவதற்குரிய சக்கரத்தை, எறிகையில் - வீசியெறிதலால், இபத்தை - யானைகளையும், வாலில் - வாலினுல், இவுளியை - குதிரைகளையும், உரன் - மார்பினுலும், நிகர் பதத்தில் - [தம்முள்] ஒத்திருக்கின்ற கால்களாலும், வீரர் அணிகளை - காலாட்படை வகுப்புக்களையும், ஒழிதர – இறந்துபோகும்படி, அழித்தது - சிதைத்ததொழில் தன்மை, ஓதும் அளவதோ - (எவராலேனும்) சொல்லுதற்குத்தக்க அளவுள்ளதோ (அளவினதன்று); (எ.று).

வீமன் பகதத்தன் என்ற இரண்டு பேரும் ஒருவரெய்த அம்பு மற்றொருவர்மேற் படாதபடி ஊக்கத்தோடு எதிரம்பு கோத்துப் பொருதனர் என்பது முதலிரண்டிகளால் பெறப்படும், அவன் இபம் - சுப்ரதீகம் : ஸுப்ரதீகம் என்ற வடசொல் - ஸு - நல்ல, ப்ரதீகம் - அவயவங்களையுடையது எனப் பொருள்படும். திகிரி - தேர்ச்சக்கரம். மருப்பில், எறிகையில், வாலில், பதத்தில் - இல், ஐந்தனுருபு ஏதுப்பொருளது. அழித்தது - தொழிற்பெயர், அளவதோ, ஓ - எதிர்மறை. (17)

18. தம் சேனை படுதல் கண்டு தருமன் ஸ்ரீகிருஷ்ணனை நினைக்க, அவன் அருச்சுனனிடம் தருமன் செய்தியைக் கூறுதல்.

இணையில்பக தத்த னுலு மவன் விடும்
இகலுடை யிபத்தி னுலு மெதிர்படை
அணிபட லறிந்து கால னருண்மகன்
அனுசனி ரதத்தி லான வலவனைப்

பணிதர வுணர்ந்து மிக்க மிடல்கொடு
படைபுரி திகத்த ராதி நிருபரைப்
பிணமலை படுத்து வென்ற நரனொடு
பெரியவ னெடுத்து ரைக்கு மிஃதரோ.

(இ-ள்) இணையில் - ஒப்பற்ற, பகதத்தனுலும்—, அவன் விடும் - அவன் ஏறிச்செலுத்தும் இகல் உடை இபத்தினுலும் - வலிமையுடைய சுப்ரதீகத்தினுலும், எதிர்படை அணி - அவனை யெதிர்த்த தனது சேனை வகுப்புகள். படல் அறிந்து - இறந்து படுதலைத் தெரிந்து, காலன் அருள் மகன் - தருமபுத்திரன், அனுசன் இரதத்தில் ஆன வலவனை - தம்பியாகிய அருச்சுனனின் தேரிலிருக்கும் சாரதியான ஸ்ரீகிருஷ்ணனை, பணிதர - தியானித்து வணங்க, பெரியவன் உணர்ந்து - பெருமை பொருந்திய கிருஷ்ணன் செய்தியறிந்து, மிக்க மிடல்கொடு - அதிக வலிமை கொண்டு, படைபுரி திகத்தராதி நிருபரை - போரிடுகின்ற திரிகர்த்தராசன் முதலிய அரசர்களை, பிணமலைபடுத்து வென்ற நரனொடு - பிணக் குவியலாகும்படி கொன்று வெற்றிகொண்ட அருச்சுனனோடு, இஃது எடுத்து உரைக்கும் - இந்தத் தருமன் செய்தியை விவரமாகக் கூறினன்; (எ.று) அரோ - ஈற்றசை.

ஆபத்து சமயத்தில் வந்து உதவுபவனுதலின் கிருஷ்ணனைத் தியானித்தான் தருமன் என்க. 'பெரியவன் உணர்ந்து' என இயையும். திரிகர்த்தராசன் – சஞ்சத்தகரிற் சேர்ந்தவன். உரைக்கும் - செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. (18)

வேறு.

19. ஸ்ரீ கிருஷ்ணன் அருச்சுனனோடு பகதத்தனை யணுகுதல்.

இவணுற்ற வரையட்ட சிலைவிக்கி ரம! கொற்ற
விமனொத்த பகதத் தனல்
அவணுற்ற திரள்பட்ட தறனெச்ச மெலிவுற்ற
தணுகுற்ற வணையுற் றுயிர்
கவர்தற்கு வருகிற்றி யெனநத்தை யிதழ்வைத்து
கடவுற்ற விரதத் தினில்
புவனத்தி னிகரற்ற நரனுற்ற முனையுற்று
பொருகொற்ற வனைமுட் டினன்.

(இ-ள்) இவணுற்றவரை - இவ்விடத்து வந்த பகைவர்களை, அட்ட - கொன்றொழித்த, சிலை விக்கிரம !—விற்றொழிலிற் பராக்கிரமத்தையுடைய விசயனே ! கொற்றம் இமன் ஒத்த பகதத்தனல் - வெற்றி பொருந்திய யமன் போன்ற பகதத்தனல், அவன் உற்ற திரள் பட்டது - அங்கே (தருமன்மாட்டு) உள்ள (நமது) படைத்தொகுதி யழிந்தது : (மற்றும்) அறன் எச்சம் மெலிவுற்றது - தருமனேடுள்ள மிச்சப்படையும் தளர்வடைந்தது : அணுகுற்றவனை - (அந்தத் தருமனைக்) கிட்டிப் போரிட்ட பகதத்தனை, உற்று - (எதிரிட்டுப்) பொருந்தி, உயிர் கவர்தற்கு - உயிரை யொழித்தற்கு, வருகிற்றி - (உடன்) வருவாய், என - என்று, நத்தை இதழ்வைத்து - (பாஞ்சசன்னியம் என்னும் தனது) சங்கத்தை வாயில் வைத்து ஊதி, [சங்கநாதத்தோடு] கடவுற்ற - செலுத்திய, இரதத்தினில் - தேரினில், புவனத்தில் நிகரற்ற - நிலவுலகத்தில் ஒப்பில்லாத, நரன் - அருச்சுனன், உற்றமுனை உற்று - (தருமன்) இருந்த களத்தினையடைந்து, பொரு கொற்றவனை - (தருமனேடு) போரிட்டிருந்த பகதத்தனை, முட்டினன் - தாக்கினன் ; (எ.று)

விக்கிரமம் - பராக்கிரமம். விக்கிரம! - விளி இமன் - யமன், எச்சம்-மிச்சம், (சேமப் படை எனலாம்) அணுகுற்றவன் - வினையாலணையும்பெயர். வருகிற்றி - முன்னிலையேவல். நந்து - சங்கு. நத்து - வலித்தல், சங்கநாதஞ்செய்தது தமது வருகையைத் தருமனுக்குத் தெரிவித்தற்காக. இச்செய்யுளில் வல்லிசை வண்ணம் பயிலுதல் காணலாம்.

இதுமுதல் நான்குகவிகள் - பெரும்பாலும் முதலைந்து சீர்கள் புளிமாங்காய்ச் சீர்களும், ஆறுஞ்சீர் புளிமாச்சீரும் ஏழாஞ்சீர் ஓரசைச்சீரும் ஆகிய எழுசீராசிரியச்சந்தவிருத்தங்கள். இவற்றிற்கு தனதத்த தனதத்த தனதத்த தனதத்த தனதத்த தனதத் தன'' என்பது சந்தக்குழிப்பு எனலாம். (19)

20. அருச்சுனன் தன்பராக்கிரமத்தைக் காட்ட
அப்போது பகதத்தன் எறிந்த வேல் கிருஷ்ணன்
மார்பில் மாலையாய் விளங்குதல்.

மிசையுற்ற சிலைமீளி விடுமேவில் வில்லற்று
மெய்யிட்ட கவசம் பிளந்
தசைவற்ற கரிமன்னன் நெடுகொற்ற வடிவேலை
யவன்வெட்டி யிபவா கினி

திசைமுற்றும் விழ நூற வவனொந்து விண்ணிந்தி
ரன்சத்தி யொன்றேவ மால்
விசையற்க தணுகாமல் நினைவுற்ற படிவாகு
மிசையுற்ற தணியார மாய்.

(இ-ள்) மிசையுற்ற - மேலெதிர்த்து வந்த, சிலை மீளி - வில்விசயன், விடும் ஏவில் - செலுத்திய அம்பினால், வில் அற்று - (தன்னுடைய) வில் அறுபட்டு, மெய்யிட்ட கவசம் பிளந்து - உடம்பிலே தரித்திருந்த கவசம் பிளக்கப்பட்டு, அசைவு அற்ற- சலனமில்லாது திகைத்து நின்ற, கரி மன்னன்-யானைத்தலைவனாகிய பகதத்தனது, நெடு கொற்றம் வடி வேலை - நீண்ட வெற்றி பொருந்திய கூரிய வேலாயுதத்தை, அவன் வெட்டி - அந்த அருச்சுனன் துண்டித்து, இபம் வாகினி - (அவனது) யானைச்சேனை, திசைமுற்றும் விழ - எல்லாத் திக்குக்களிலும் சிதறும்படி, நூற - அழிக்க, (அதனைக்கண்டு) அவன் நொந்து – அந்தப் பகதத்தன் மனம் வருந்தி, விண் இந்திரன் சத்தி ஒன்று ஏவ – தேவலோகத்து இந்திரனளித்த சக்தியாயுதமொன்றைச் செலுத்த, (அப்போது) மால் - கிருஷ்ணன், அது - அந்தச் சக்தியாயுதம், விசையற்கு அணுகாமல் - அருச்சுனனை நெருங்காதபடி, நினைவுற்றபடி - தான் சங்கற்பித்தபடி, அணி ஆரமாய் - அழகிய மாலையாய், வாகு மிசை உற்றது - தோளின்மேல் பொருந்திற்று; (எ.று)

மீளி - ஆண்பாற் சிறப்புப் பெயர். இந்திரன் தந்த சக்தியாயுதமாயினும், அது திருமாலினது திருவவதாரமான கிருஷ்ணனை ஒன்றும் ஊறு செய்யமாட்டாது அவனது சங்கல்பத்தின்படி ஒரு மாலையாக அவன் மார்பில் விளங்கிற்று என்க. இனி, ஆரம் இரத்தினஹாரம் என்னவுமாம். இதுவரையிலும் இந்திரசத்தியாயுதம் எறியப்பட்டாரைக் கொல்லாது தவறியதில்லையாதலின், கிருஷ்ணன் அதனைத் தன்மார்பில் மாலையாய் விளங்கும்படி ஏற்றான் என்க. (20)

21. அருச்சுனனுக்குக் கிருஷ்ணன் இந்திரன் பகதத்தனுக்கு ஈந்திருந்த வரம் உணர்த்தல்.

புயமுற்ற வயிலணியி னொளிருற்ற பொழுதினரி
புகழண்டர் கொண்டா டினர்
யமுற்றி டுஞ்சமரி லிடைநிற்ற லறனலென
மலைவச்சிரன் மகன்முனி யமால்

அயில்கொற்ற வசியுடையர் மிசையுய்க்கி னுயிர் கவரு
மவையற்ற கரர்மிசை விடின்
பயசொக்கும் மகபதிதன் வரமித்தை யுணர்துமெதிர்
பகதத்த னுயிர்கவ ரவே.

(இ-ள்) புயம் உற்ற அயில் - (கிருஷ்ணனது) தோளில்பட்ட சத்தி வேலானது, அணியின் ஒளிர் உற்ற பொழுது - மாலையாக விளங்கியபோது, அரி - கிருஷ்ணனை, புகழ் - புகழ்ந்து, அண்டர் - தேவர்கள், கொண்டாடினர் - பாராட்டினர்கள்; (அப்போது) மலை வச்சிரன் மகன் - போரிடுதற்கான வச்சிராயுதத்தையுடைய இந்திரனின் குமாரனாகிய அருச்சுனன், (கிருஷ்ணனை நோக்கி) வயமுற்றிடும் சமரில் - வெற்றிக்காக இடும் போரில், இடை நிற்றல் - நடுவே வந்து குறுக்கிட்டு நிற்றல், அறன் அல் என - தருமமாகாது என்று கூறி, முனிய - கோபிக்க (அதற்கு) மால் - கிருஷ்ணன், [அருச்சுனனை நோக்கி] 'அயில் - இந்தச் சத்திவேலை, கொற்ற அசியுடையர்மிசை உய்க்கின் - வீரம் பொருந்திய படைக் கலங்களையேந்தியவர் மீது எறிந்தால், உயிர் கவரும் - அவருயிரை (த்திண்ணம்) போக்கிவிடும்: அவை அற்ற கரர்மிசை விடின் - அந்தப் படைக்கலங்களில்லாத கையர் (நிராயுதபாணியர்) மேல் செலுத்தினல், பயசு ஒக்கும் - நீர்போல் உருகிப்போகும்; (இது) மகபதிதன் வரம் - இந்திரன் பகதத்தனுக்குக் கொடுத்த வரமாகும்: இத்தை உணர்தி - இதனை நீ தெரிந்துகொள்: (இனி) எதிர் - எதிர்த்துப் போரிடுகின்ற, பகதத்தன் உயிர் கவர - பகதத்தனுடைய உயிரைப் போக்குதற்கு; (எ.று) ...''இது பெறுகிற்றி'' என மேலைக்கவியிலியையும்.

இருவர் பொருதல் உலகியற்கையா யிருக்கும்போது இடையிலே ஒருவர் குறுக்கிட்டு உதவ வருதல் போர்த்தருமமாகாதே என முனிந்தான் அருச்சுனன் என்க. அசி - வாள், படைக்கலம். [வசி என்றுலும் வாள்.] பயசு - பயஸ்; பால், நீர். உணர்தும் - முன்னிலை வினைமுற்று. (21)

22. பகதத்தனுயிரைக் கவர்தற்கு இதுதான் சமயமென்று கிருஷ்ணன் அம்பு கொடுக்க, அருச்சுனன் அது கொண்டு பகதத்தனைக் களிற்றுச் சேனையோடு வீழ்த்தியமை கூறும்.

அதியுக்கிர முடையதிது பெறுகிற்றி யென்றுரைகணை
யடன்மிக்க விசயற் களித்
திதுபக்கு வங்கொலென அவனந்த பகதத்தன்
இருதோடிண் முடிதத்தி யூர்

மதவெற்பி ஞெடுவீழ வுடனந்த வம்பேவி
மதயானை யீரயுத மும்
சிதைவுற்றி டப்பொருது வயமுற்ற னன்றனது
திறமன்னர் கொண்டா டவே.

(இ-ள்) இது - இந்த அம்பு, அதி உக்கிரமுடையது - அதிக கொடுமையுடையது: பெறுகிற்றி - (நீ) பெறுவாயாக, என்று - என்று சொல்லி, ஓர் கணை - ஒரு அம்பை, அடல் மிக்க விசயற்கு அளித்து - வலிமை மிகுந்த அருச்சுனனுக்குக் கொடுத்து, இது பக்குவம் - இது தக்கபொழுது, கொல் - (பகதத்தனைக்) கொல்வாயாக, என - என்று (மேலும்) சொல்ல, அவன் - அருச்சுனன், அந்த பகதத்தன் - அந்தப் பகதத்தனது, இருதோள் - இரண்டு தோள் களும், திண் முடி - திண்ணிய கிரீடத்தோடு தலையும், தத்தி - சிதறி, ஊர் மத வெற்பிஞெடு வீழா - தான் ஏறி வந்த மதயானையோடு தரையில் விழ, உடல் நந்த - உடல் சாக, அம்பு ஏவி - (கிருஷ்ணன் கொடுத்த) அந்த அம்பினைச் செலுத்தி, (மற்றும்) மதயானை ஈர் அயுதமும் - மதம்பிடித்த யானைகள் இருபதினுயிரத்தையும், சிதைவுற்றிட பொருது - இறந்தொழியுமாறு போரிட்டு, தனது திறம் மன்னர் கொண்டாட - தன்னுடைய வல்லமையை வேந்தர்கள் பாராட்டும்படி, வயம் உற்றனன் - வெற்றியடைந் தான்; (எ-று)

இங்கே, கிருஷ்ணன் கொடுத்தது, தனது நாராயணுஸ்திரம். "விரிகடல் வண்ணன்றன் வெவ்வாளி யேவப் புரிகடல்சூழ் பூதலத்துப் பொங்கிக் - கரியுண், மலைதுமிக்கு மால்யானை மன்னு பகதத்தன், தலைதுமியப் போயிற்றே தான் "என்ற பாரத வெண்பாவையறிக. "பகதத்தனுயிர்கவரவிது பக்வமென விசய னேடுரைசெய்து" என்ருர் வில்லியும். (பன்னிரண்டாம் 65) நந்துதல் - சாதல், கெடுதல். அயுதம் - பதினுயிரம். பெறுகிற்றி, கொல் - முன்னிலையேவல். (22)

வேறு.

23. காந்தாரர் அருச்சுனனைப் புடைசூழ, அவன்
தனதம்பால் அவர்களைத் தொலைத்து, சகுனியையும்
சூதரிழந்து வென்னிடப் பொருதல்.

கவளக் களிறும் பகதத்தக்
கழற்கா வலனும் படப் பொருத
தவளப் பரியோன் றனைவளைந்து
தடிவோ மெனக்காந் தாரர்படை

துவளப் பொருதார் அவனவரைத்
தொலைத்தே சகுனி சுதரிழந்துள்
ளுவளத் தனது சிலையிரத
மொழிந்தே வென்தந் திடப்பொருதான்.

(இ-ள்) கவளம் களிறும் - திரளுணவுகொள்ளும் யானை சுப்ரதீகமும், பகதத்தக் கழற்காவலனும் - வீரக்கழலையணிந்த அரசனாகிய பகதத்தனும், பட - இறந்தொழியும்படி, பொருத - போரிட்ட, தவளம் பரியோன்தனை - வெள்ளைக்குதிரைகளைக் கொண்ட அருச்சுனனை, காந்தாரர் - காந்தார தேசத்து அரசர்கள், வளைந்து - சூழ்ந்து கொண்டு, தடிவோம் - அவனைக் கொல்வோம், என - என்று வீரவாதங் கூறி, படை துவளப் பொருதார் - (அருச்சுனனது) சேனை வருந்தும்படி சண்டையிட்டார்; (ஆனால்) அவன் - அந்த அருச்சுனன், அவரைத் தொலைத்தே - அந்தக்காந்தார அரசர்களை யழித்து, (மேலும்) சகுனி - (காந்தார தேசத்தினனாகிய)சகுனியையும், சுதர் இழந்து - அவன் தனது பிள்ளைகளையிழந்து, உள் உவள - மனம் சலிக்கும் படியும், தனது சிலை இரதம் ஒழிந்து - தன்னுடைய வில்லும் தேரும் சிதைந்து, வென் தந்திட - முதுகுகாட்டியோடும் படியும், பொருதான் - சண்டையிட்டான்; (எ.று)

சகுனியின்சுதர் இருவர் இறந்தனர் என்றார் வில்லியார் அவர்கள் பெயர் - விடசெயன் (வ்ருஷஜயன்) செயன். (ஜயன்) என்பன, சகுனிக்கு இப்பெயர்களுடன் புத்திரர் இருவர் இருந்ததாக வியாச பாரதத்தால் தெரியவில்லை. காண்டவதகனத்தின்போது அக்கினி தேவனால் அருச்சுனனுக்கு நான்கு வெள்ளைக்குதிரைகள் கொடுக்கப் பட்டன என்பது நினைக. தடிவோம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

இது முதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் மூன்றாஞ்சீரும் ஆறாஞ்சீரும் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (23)

24. பின்னிட்ட சகுனி தருமனுடன் போர்புரியப் புகுந்து அவனுக்கும் தோற்றுப் பின்னிட, மற்றொருபால் துரோணன் முதலியோர் வீமனுடன் எதிரிட்டு வென்னிடுதல்.

பின்னிட் டகலுஞ் சகுனியறன்
பெற்றோன் மிசையேற் றவனாலும்
வென்னிட் டகலும் அரசரொடும்
மிகநொந் தகற லால்வீமன்

முன்னிட் டாசான் சுதனங்கர்
முதல்வன் துரியோ தனன்முதலோர்
மின்னிட் டெழுமம் புயத்தவனால்
விற்றே ரற்றே வென்னிட்டார்.

(இ-ள்) பின்னிட்டு அகலும் சகுனி - (அருச்சுனனுக்கு) முதுகு காட்டிச் சென்ற சகுனி. (பின்னர்) அறன் பெற்றோன்மிசை ஏற்று - தருமபுத்திரன் மேலும் எதிரிட்டுச் சென்று, அவனாலும் - அந்தத் தருமனாலும், வென்னிட்டு அகலும் அரசரொடும் - (தோற்கடிக்கப் பட்டு) முதுகாட்டியோடும் அரசர்களோடும் (தானும் சேர்ந்து), மிக நொந்து அகறலால் - பெரிதும் துன்பப்பட்டு நீங்கியதால், (அது கண்ட) ஆசான் - துரோணன், சுதன் - அசுவத்தாமன், அங்கர் முதல்வன் - கர்ணன், துரியோதனன்—, முதலோர், முதலியவர்கள், வீமன் முன்னிட்டு - வீமனை [மற்றொருபக்கத்தில்] எதிரிட்டு, மின்னிட்டு எழும் அம் புயத்தவனால் - ஒளிவிட்டுக் கிளர்ந்தெழும் அழகிய தோள்களையுடைய அவ் வீமனால், வில் தேர் அற்று - (தங்களுடைய) வில்லையும் தேரையும் இழந்து, வென்னிட்டார் - புறமுதுகிட்டார்கள்; (எ.று)

'வீமன்' என்பதன் பின் இரண்டனுருபு தொக்கது. வீமன் தோள்வலியுடையன் என்பது பிரசித்தம். (24)

25. வீமனையெதிர்த்தவர் புறங்கொடுத்தல்.

துரியோ தனன்பின் னவர்வெகுளி
தூண்ட வடல்வீ மனைவளையா
அரியோ டெதிருங் கரியெனநொந்
தகன்றார் மீட்டு மிசையேற்ற
குருவோ டவன்சேய் கன்னன்முதற்
கூறுமரச ரனிக மொடும்
ஒருபோ தினும்போர்க் குற்றேமிவனோ
டோகோ வெனமா ருதிவென்றான்.

(இ-ள்) துரியோதனன் பின்னவர் - துரியோதனன் தம்பி மார்கள், வெகுளி தூண்ட - கோபம் மூள, அடல் வீமனை வளையா - வலிமைமிக்க வீமனைச் சூழ்ந்து கொண்டு, அரியோடு எதிரும் கரி என - சிங்கத்தோடு எதிரிடுகின்ற யானை போல, நொந்து - துயருற்று, அகன்றார் - போனார்கள்; மீட்டும் - மறுபடியும், மிசை

ஏற்ற குருவோடு - (தன்) மேல் எதிரிட்டு வந்த துரோண ளுேடு, அவன் சேய் - அவனது மகன் அசுவத்தாமன், கன்னன் முதல் கூறும் அரசர் - கர்ணன் முதலாகக் கூறப்படும் அரசர்கள் (இவர்களை), அனிகமொடும் - தத்தம் சேனைகளோடும், ஓகோ - ஐயோ, இவனோடு - இந்த வீமனோடு, ஒரு போதினும் போர்க்கு உரேம் - (இனி) ஒரு காலும் சண்டையிட 'வரமாட்டோம்' என - என்று (வாய் விட்டுக்) கதறிக்கொண்டு ஓடும்படி, மாருதி வென்றுன் - வீமன் செயித்தான்; (எ.று)

வீமனுக்கு அரியும், பின்னவர்க்கு - கரியும் ஆன உவமைப் பொருத்தம் காண்க. போர்க்கு உரேம் - சிறிதும் போர்செய்ய வல்லோமல்லோம் என்றபடி. ஓகோ - அவலச்சொல்: இரக்கம் பற்றியது. (25)

வேறு.

26. பாண்டவர் வெற்றியோடு பாசறை சேர, சூரியாஸ்தமனமாக, கர்ணன் துரோணனைப் பரிகசித்தல்.

சதாகதிசந் ததிக்கிளையா வனிக மோடுஞ்
சதுமறையோன் புகப்பாடி சயங்கொண் டைவர்
பதாகினியோ டடைந்தனர்மேற் கிரவி புக்கான்
பலநிருபர் முனங்குருவைப் பழித்து வேந்தன்
கதாயுதன்முன் னவற்கிளைத்தங் கவன்மீ தன்பாற்
கவராதுற் றனையெனவே கன்னன் வாய்மை
நிதானமறை யவர்க்கேதென் றிகழ வாசான்
நிந்தித்தென் கபடுடைய நினைவி னேனே.

(இ-ள்) சதாகதி சந்ததிக்கு - வாயுபுத்திரனாகிய வீமனுக்கு, இளையா - தளர்ந்து, சதுமறையோன் - துரோணாசாரியன், அனிக மொடும் - (தனது) சேனையோடும், பாடி புக-(தனது) பாசறையிற் புக (அதே சமயத்தில்) ஐவர் - பாண்டவர்கள், சயம் கொண்டு - வெற்றி பெற்று, பதாகினியோடு- (தமது) சேனையோடு, அடைந்த னர்- (தமது) பாசறையிற் சேர்ந்தனர்;(அப்போது) இரவி-சூரியன், மேற்கு புக்கான் - மேலைத்திசையில் அத்தமித்தான்; வேந்தன் - துரியோதனன், பல நிருபர் முனம் - பல அரசர்கள் முன்னிலையில், குருவைப் பழித்து - துரோணாசாரியரை நிந்தித்து, (மேலும்) கதாயுதன்முன் – வீமனுக்குமுன்னே (போரிடமுடியாமல்) அவற்கு இளைத்து - அவனுக்குத் தளர்ந்து, அங்கு - அவ்விடத்து, அவன்மீது அன்பால் - அவ்வீமனிடத்துக் கொண்ட பாசத்தால், கவராது -

(தருமனை) அகப்படுத்தாது, உற்றனை - நீ (வெறுங்கையோடு) வந்து சேர்ந்தாய், என - என்று குறைகூற, (அதனைக் கேட்ட) கன்னன்-கர்ணன், மறையவர்க்கு . பிராமணர்க்கு, வாய்மை நிதானம் ஏது - சொன்ன சொல்லை நிறைவேற்றும் நேர்மை ஏது? (கிடையாதே), என்று இகழ - என்று பரிகசிக்க,(அதற்கு) ஆசான்-துரோணாசாரியன், கபடு உடைய நினைவினேனை - வஞ்சனையுடைய கருத்துடைய என்னை, நிந்தித்து என் - பழித்தலாற் பயனென்னை; (எ.று) ''என்று உருத்து'' என மேலைக்கவியில் தொடரும்.

சதாகதி - எப்பொழுதுஞ் சஞ்சரித்தலுடையவன். இங்கே வீமனை 'சதாகதி சந்ததி' என்றது - பிதுச் சதகுணம் புத்ர : என்றவாறு தந்தையாகிய வாயுவினும் பலமடங்கு அதிகமாக விரைந்து நடந்து தொழில் செய்யும் வல்லமையுள்ளான் மைந்தனுன வீமனென்பதற்கு; கருத்துடையடைகொளி, சந்ததி - மகன். இளையா – உடன்பாட்டெச்சம். நிதானம் - நேர்மை. துரோணனை முன்னிட்டுக் கர்ணன் பொது வாக மறையவரைக் குத்திக்காட்டியபடி. இந்தச் செய்யுளினால், துரியோதனன் கர்ணன் இருவருடைய இழிதகைமையும் நன்கு தெரிவித்தபடி, 'கபடுடைய நினைவினேன்' என்று துரோணன் தன்னைத்தானே இழித்துக் கொண்டது அவ்விரு நீசர்க்கும் நல்ல புத்தி வருவதற்காக என்க.

(26)

27. துரோணன் எதிர்மொழி கூறிச்செல்ல, துரியோதனன் அரசர்க்கு விடைகொடுத்துத் துயில, மறுநாட் சூரியோதயமாதல்.

என் றுருத்துப் பலவாய்மை யியம்பி நாளை
யெனைவென்ற வுதிட்டிரன்கை யேவி னாண்மை
சென் றமரி லுணர்ந்தவனைக் கொணர்மி னென்றே
சிலைமுனிவ னகலமணிச் சிரங்கொ ளுகம்
ஒன் றுயர்த்தோன் விடையரசர்க் களித்துத் தானும்
உறுமமளி யடைந்தனந்த லுற்றான் செய்ய
மன் றல்கமழ் முளரிப்போ தன்பன் கீழ்பான்
மணியிரத மருணன்விட வந்துற் றானால்.

(இ-ள்) என்று உருத்து - என்று கோபித்து, பல வாய்மை இயம்பி - பல வார்த்தைகளைச் சொல்லி, நாளை - நாளைய தினம், எனை வென்ற உதிட்டிரன் கை ஏவின் ஆண்மை - என்னைச் செயித்த தருமனின் கையிலுள்ள அம்பின் வீரியத்தை, அமரில்

சென்று உணர்ந்து - போரினுக்குச் சென்று அறிந்து, அவனைக் கொணர்மின் - அந்தத் தருமனையகப்படுத்திக் கொண்டு வாருங்கள், என்று - என்று கூறி, சிலை முனிவன் - துரோணன், அகல - (அவ்விடம் விட்டு) நீங்கிப்போக, மணி சிரம் கொள் நாகம் ஒன்று உயர்த்தோன் - மாணிக்கத்தைத் தலையிற் கொண்டுள்ள பாம்பினைக் கொடியிலுயர்த்தியவனாகிய துரியோதனன், அரசர்க்கு - தன் துணைவேந்தர்களுக்கு, விடை அளித்து - அனுமதி கொடுத்து, (பின்பு) தானும் —, உறும் அமளி அடைந்து - பொருந்திய படுக்கையைச் சேர்ந்து, அனந்தல் உற்றான் - துயிலலானான்; (இரவுகழிய) செய்ய - சிவந்த, மன்றல் கமழ் - வாசனை வீசுகின்ற, முளரிப்போது-தாமரை மலரின், அன்பன் - கணவனாகிய சூரியன், கீழ்பால் - கிழக்குத் திசையில், அருணன் மணி இரதம் விட - அருணனாகிய சாரதி அழகிய தனது ஓராழித் தேரைச் செலுத்த, வந்துற்றான் - உதயமாயினான்; (எ.று) ஆல் - ஈற்றசை.

'நேற்று நான் சபதஞ்செய்து இன்று தவறிப்போனேனென்று இகழ வேண்டா : உங்களில் வல்லவர் எவரேனும் நாளை தருமனைப் பிடித்து வருக: வந்தால், அவனின் மிக்க வீரன் ஒருத்தருமில்லை.'' என்று துரோணன் கூறினனென்பதாம்.

சூரியனைக் கண்டால் தாமரை மலருமாதலின் அதற்கு 'அன்பன்' என்றது: தாமரைக்கணவன் என்று சூரியனை வழங்குவர். முளரி - தாமரை. முளரிப்போது - இருபெயரொட்டு. 'முள்ளரைப் போதன்பன்' எனவும் பாடம். (27)

பன்னிரண்டாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

சுபம்

பதின்மூன்றும் போர்ச் சருக்கம்

வேறு.

1-2. துரோணன் பதுமவியூகம் வகுக்க, திட்டத் துய்மன் மகரவியூகம் வகுத்தல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

தினகர னைத்தொழு தாசிரி யன்பல
சேனையொ டெய்தியடற்
றனதொரு மைந்த னலம்ப னருக்கன்
தனையன்வின் மத்திரனும்
முனையுறு கருணிகை யாவுற மைத்துனன்
முதலிய ரகவிதழாப்
புனைசிலை வல்லசு தாயுவை யாதியர்
புறவித ழா நிறுவி.

(இ-ள்) ஆசிரியன் - துரோணாசாரியன், தினகரனைத் தொழுது-சூரியனை வணங்கி, பல சேனையொடு எய்தி-பல படைகளோடு [போர்க்களம்] வந்து, அடல் தனது ஒரு மைந்தன்-வலிய தனது ஒப்பற்ற குமாரனாகிய அசுவத்தாமன், அலம்பன்-அலாயுதன், அருக்கன் தனையன்-சூரிய குமாரனாகிய கர்ணன், வில் மத்திரனும்-வில்லில்வல்ல சல்லியன் ஆகிய இவர்களும், உறு கருணிகை ஆ உற-தக்க பொகுட்டாக அமையவும், மைத்துனன் முதலியர்-சயத்திரதன் முதலானவர்கள், அக இதழா - உள்ளிதழ்களாகவும், புனை சிலை வல்ல சுதாயு ஆதியரை-தரித்த வில்லில் வல்ல சுதாயு முதலிய வீரர்களை, புற இதழா-வெளியிதழ்களாகவும், நிறுவி-(அணிவகுத்து) நிற்கவைத்து, (எ-று) 'பதும வியூகம் வகுத்து' என மேலைக்கவியில் தொடரும்.

பதின்மூன்றும் நாளில் துரோணன் பதும வியூகம் வகுத்ததாகவும் அதனுள் அபிமன் அகப்பட்டு இறந்ததாகவும் பிரசித்தம். இங்ஙனமே முதனூலாகிய வடமொழி வியாச பாரதத்திலுமுள்ளது. அலம்பன்-அலாயுதன் என்னும் அரக்கன்: கலப்பையைப் படைக்கலமாகவுடையவனென்று பொருள்படும். கருணிகை-தாமரைப் பொகுட்டு. மைத்துனன்-துச்சளை கணவனாகிய சயத்திரதன். சுதாயு-காம்போசராசன் மகன் என்ப. சுதாயுவையாதியர்-ஐகாரம் இறுதியில் கூட்டப்பட்டது. ஆ-ஆக என்பதன் விகாரம்.

இது முதல் ஐந்து கவிகள்-பெரும்பாலும் ஆருஞ்சீரொன்று கூவிளங்காய்ச் சீரும், மற்றையைந்தும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. விதிமுறை யின்றிர ளுநலும மைத்தெதிர்
மேவலர் சோபமுறப்
பதுமவி யூகம்வ குத்தொரு விற்குரு
பரியிர தத்துறவெண்
மதிமர புற்றவு திட்டிர னாதிய
மன்னரொ டுற்றனிக
வுததியை மகரவி யூகம ணிந்தனன்
உயர்துரு பதன்மகனே.

(இ-ள்) விதிமுறையின்-போர் முறையின்படி, திரள் நாலும் அமைத்து-நான்கு வகைப் படைத் தொகுதிகளையும் சித்தமாக்கி, எதிர் மேவலர் சோபம் உற- எதிர்ப்பக்கத்து நிற்கும் பகைவர் துக்கமடையும்படி, பதும வியூகம் வகுத்து-தாமரை போன்ற வடிவுடைய வியூகமாக அணிவகுத்து, ஒரு-ஒப்பற்ற, வில் குரு-துரோணாசாரியன், பரி இரதத்து உற-குதிரைபூட்டிய தேரினில் ஏறியிருப்ப, (அப்போது) வெண் மதி மரபு உற்ற உதிட்டிரன் ஆதிய மன்னரொடு-வெண்மையான சந்திரனின் வமிசத்திலுதித்த தருமன் முதலாகிய அரசர்களோடு, உயர்துருபதன் மகன் உற்று-மேன்மையுற்ற திட்டத்துய்மன் வந்து, அனிகம் உததியை-தன் சேனை சமுத்திரத்தை, மகர வியூகம் அணிந்தனன்-மகர வியூகமாக அணிவகுத்தனன்; (எ-று)

முன்னே பயகாரணமுள்ளபொழுது மகர வியூகம் அமைக்கத்தக்கதென்றும், அது நான்கு கால்களையும் நீண்ட பருத்த முகத்தையும் இரண்டு வாயையுமுடையதென்றும் சுக்கிரனார் கொள்கை:

திரள் நாலு - ரதகஜதுரகபதாதிகள். சோபம்-துக்கம்: பின்னுல் அபிமன் இறக்கப்போவதைக் குறிப்பதெனலாம். அனிகவுததி-உருவகம். (2)

3. சஞ்சத்தகர் அருச்சுனனை அறைகூவ அவன் போரிடச்செல்ல, ஒரு பக்கத்தில் துரோணன் திருஷ்டத்யும்நனுடைய துவசத் தோடுவில் கவசமழித்தல்.

வார்முர சாதியி யங்கள்க றங்கிட
மண்டிரு தானைகளும்
போர்செய வறைகூ வச்சஞ் சத்தகர்
பொங்கிந ரன்றிருமால்
தேர்விட வுற்றமர் செய்தனன் இங்கடு
சிலைமுனி மீதமர்செய்
தார்தழல் வந்தவன் மெய்க்கவ சஞ்சிலை
யணிதுச மற்றனனே.

(இ-ள்)வார் முரசு ஆதிஇயங்கள் கறங்கிட-நீண்ட பெரியமுரசம் முதலாய இசைக் கருவிகள் ஒலி செய்ய, இரு தானைகளும் மண்டி-இரண்டு [பக்கத்துச்] சேனைகளும் நெருங்கி, போர் செய - போரிடும் படி, சஞ்சத்தகர் அறை கூவ-சம்சப்தகர்கள் வலிவிற் போருக்கு அழைக்க, நரன்-அருச்சுனன், பொங்கி-கோபித்து, திருமால் தேர் விட உற்று-ஸ்ரீ கிருஷ்ணன் தேர் செலுத்த வந்து, அமர் செய்தனன்-போரிட்டனன்; இங்கு-இவ்விடத்து [ஒரு பக்கத்தில்] அடுசிலை முனி மீது-கொல்லுந் தன்மையுள்ள வில்லையுடைய துரோணன்மேல், ஆர் அழல் வந்தவன்-மிக்க யாகாக்னியில் தோன்றிய திட்டத் துய்மன், அமர் செய்து-போரிட்டு, மெய் கவசம்-(தனது) உடற் கவசத்தையும், சிலை-(கைப்பிடித்த) வில்லையும், அணிதுசம்-அழகிய தேர்க் கொடியையும், அற்றனன்-[அழிக்கப்பட்டு] இழந்தான் (எ-று).

தன்னைப் போருக்கு அழைப்பாரோடு தவருமற் பொருதலை விரத மாகப் பூண்டவனுதலால், அருச்சுனன் இங்ஙனஞ் செல்பவனுனன்-சஞ்சத்தகரோடு போரிட்டது தென்திசையிலென முதனூலால் தெரி கிறது. அடுசிலை-வினைத்தொகை, கவசஞ்சிலைதுசம்-உம்மைத் தொகை. (3)

4: துரோணன் திறனை அனைவரும் புகழ, தருமன் திட்டத்துய்மனைத் தழுவி இதஞ்சொல்லிப் பின் அபிமனை வரவழைத்தல்.

துருபதன் மைந்தனை வென்றமு னிப்புகழ்
துதிபுரி யாரெவரே
பொருபடை முற்றுமு டைந்திட வென்கொடு
புக்கிய மைத்துனனைத்
தருமனு ரத்தொட ணைத்தித மோதித
ளர்வக லென்றமர்யார்
புரிபவ ரென்றெதி ருறுமொரு பார்த்தன்பு
தல்வனை வருகவெனா.

(இ-ள்) துருபதன் மைந்தனை-திட்டத்துய்மனை, வென்ற முனிப் புகழ்-செயித்த துரோணனது கீர்த்தியை, துதி புரியார் எவர்? கொண்டாடாதவர் யார்? [யாருமிலர்?:] (இது நிற்க) பொருபடை முற்றும் உடைந்திட-போரிட்ட சேனை முழுவதும் தோற்றுப் போக, வென் கொடு-புறமுதுகிட்டு, புக்கிய-(பாசறை) சேர்ந்த, மைத்துனனை-திட்டத்துய்மனை, தருமன்-தருமபுத்திரன், உரத்தொடு அணைத்து-மார்போடு தழுவி, இதம் ஓதி-உபசார வார்த்தைகளைச் சொல்லி, தளர்வு அகல் என்று-சோர்வு நீங்குவாயாக என்று ஆறுதல் கூறி, (இனி) யார் அமர் புரிபவர்-போரிட வல்லவர் யாவர்? என்று-என்று எண்ணி, எதிர் உறு ஒரு பார்த்தன் புதல்வனை-எதிரிலே வந்த ஒப்பற்ற அருச்சுனனின் மகனான அபிமன்யுவை, வருக எனா-வருவாயாக என்று அழைத்து; (எ-று)

பொருபடை-வினைத்தொகை. புக்கிய - பெயரெச்சம். அகல்-முன்னிலை வியங்கோள். (4)

5. 'நீ சக்கர வியூகத்தைப் பிளந்து வெல்க' என்று அபிமனைத் தருமன் தழுவி யனுப்புதல்.

முக்கண னேடடல் வச்சிர பாணிமு
குந்தநி கர்ப்பவனீ
இக்கண மங்கவர் சக்கர வியூகம
திகல்கெட வேகுகென

அக்கண மீன்றவன் முன்னவ னைப்பணி
யாவிடை தாவெனமன்
மெய்க்கண ணைத்தபி மாவக லென்றிட
விரைவின டந்தனனே.

(இ-ள்) முக்கணனேடு - சிவபெருமானேடு, அடல் வச்சிர பாணி—வலிய வச்சிரப்படையைக் கையிலேந்திய இந்திரன், முகுந்தன் - (சக்கரப்படையேந்திய) விட்டுணு (இவர்களை) நீ நிகர்ப்பவன் - நீ ஒப்பவனுவாய்: (ஆகையால்) இக்கணம் - இப்போதே, அங்கு - அவ்விடத்து, அவர் சக்கரவியூகம் அது - அப் பகைவரது சக்கர வியூகத்தின், இகல் கெட - வலிமையொழியும்படி செய்ய, ஏகுக என - போய்வருவாயாக என்று கூற, அக்கணம் - அந்த நொடியிலேயே, ஈன்றவன் முன்னவனை - தன்னைப் பெற்ற தந்தையாகிய அருச்சுனனின் தமையனுன தருமனை, பணியா - பணிந்து, விடை தா என -(எனக்கு) அனுமதி கொடுப்பாயாக என்று வேண்ட, மன் - தருமன், மெய்க்கண் அணைத்து - தன் உடம்போடு தழுவி, அபிமா - அபிமனே! அகல் - செல்வாயாக, என்றிட - என்று விடை நல்க, விரைவில் நடந்தனன் - (அந்த அபிமன்) வேகமாக (ப் போரிட)ச் சென்றுன்; (எ.று.)

முகுந்தன் என்பதற்கு-முத்தியுலகவின்பத்தையும் இவ்வுலகவின் பத்தையும் (தன் அடியார்க்குத்) தருபவனென்று பொருள்: மு-முக்தி, கு-பூமி, த-கொடுப்பவன். ஏகுகென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். ஈன்றவன் -வினையாலணையும்பெயர். தா-முன்னிலை வியங்கோள். அகல்-முன்னிலையேவல். (5)

வேறு.

6. **அபிமன் யுத்த சன்னத்தனுய்ச் செல்லல்.**

அம்ப ருதகூ டுற்ற வெஃனினன்
ஆய்ந்த வாண்முதற் படையினன்
செம்பொ னுரமி லங்கு மெய்யினன்
சிலையெ டுத்தக ரத்தினன்

தும்பை மாலைமி லைந்த மார்பினன்

சுபத்தி ரைச்சுதன் பரிதிபோல்

வெம்ப ரிச்சயந் தனமி வர்ந்திது

விளம்பு வான்வல வற்கரோ.

(இ-ள்) அம்பு அருத கூடு உற்ற வென்னினன் - அம்பு நீங்காத தூணீரத்தை முதுகில் கோத்தவன்: ஆய்ந்த வாள் முதல் படையினன் - ஆராய்ந்தெடுத்த வாள் முதலாகிய ஆயுதங்களை யுடையவன்; செம்பொன் ஆரம் இயங்கு மெய்யினன் - சிவந்த பொன்னினாலாகிய மாலை விளங்குகின்ற உடம்பினையுடையவன்; சிலை எடுத்த கரத்தினன் - வில்லையெடுத்த கையினை யுடையவன்: தும்பை மாலை மிலைந்த மார்பினன் - தும்பைப் பூமாலையைச் சூடிய மார்பினையுடையவன்: [இவ்வாறு யுத்தசன்னத்தனாகிய] சுபத்திரைச்சுதன் - அபிமன்யு, பரிதி போல் - சூரியனைப் போல, வெம் பரி சயந்தனம் இவர்ந்து -கடிய குதிரைகள் பூட்டிய தேரின்மிசையேறி, வலவற்கு - (அத்)தேர்ச்சார திக்கு. இது விளம்புவான் - இதனைக் கூறுவான்; (எ. று) அரோ - ஈற்றசை. அபிமன்யு கூறியதை மேலைக்கவியிற் காண்க.

தும்பைமாலை-பகைவரோடு போர் செய்யும் வீரர் சூடுவது: 'அதிரப் பொருவது தும்பை' சூரியனுவமை - விரைந்தோடுஞ் சிறந்த தேர் மீது ஏறுவதற்கும், விளக்கத்துக்கும், பகையிருளொழித்தற் குமாம். ஆரம்-இரத்தினமாலை எனலாம். சயந்தனம்-தேர்.

இதுமுதற் பதினைந்து கவிகள்-பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (6)

7. அபிமன் சாரதியைத் தேரினைச் செலுத்தச் சொல்ல, அவன் அபிமனுக்குக் கூறுதல்.

ஆரி யன்சுத னங்கர் பூபதி

யாதி மன்னவர் பொடிபடத்

தேரி னைக்கட வென்ன லுஞ்சுமித்

திரனெ னும்பெயர் வலவனும்

தீர னுந்தையும் வென் றி டற்கருந்
தேசி கன் முத லோ ரொடும்
போரி யற்றுத லரிது னக்கெனப்
புகல வாளபி மன் சொல்வான்.

(இ-ள்) ஆரியன்-துரோணன், சுதன்-(அவனது) மகன் அசுவத்தாமன், அங்கர் பூபதி ஆதி மன்னவர் - கர்ணன் முதலாகிய அரசர்கள், பொடிபட, - இறந்தொழிய, தேரினைக் கடவு-(என்) தேரினைச் செலுத்துவாயாக,என்னலும் என்று கட்டளையிட்டவுடன், சுமித்திரன் எனும் பெயர் வலவனும்-சுமித்திரன் என்னும் பேரைக்கொண்ட சாரதியும், (அபிமனை நோக்கி) 'தீரன்-சூரனுகிய, உந்தையும்-உன் தந்தையாகிய அருச்சுனனும், வென்றிடற்கு அரும்-ஜெயித்தற்கரிய, தேசிகன் முதலோரொடும்-துரோணுசாரியன் முதலானுரொடும், போர் இயற்றுதல்-யுத்தஞ்செய்வதென்பது, உனக்கு அரிது-உன்னுல் இயலாது', என-என்று, புகல-சொல்ல, (அதற்கு) வாள் அபிமன்-வாளாயுதத்தையேந்திய அபிமன்யு, சொல்வான்-(உத்தரம்) கூறுவானுயினுன்; (எ.று.)-அவன் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

'தேரினைச்செலுத்து' எனவே, சாரதி 'நீ சிறுவனுதலின், சக்கர வியூகத்தைப் பிளத்தலரிது' என்ருனென்க. ஆரியன் சுதன் பூபதி மன்னர் - இவற்றினிறுதியில் உம்மை தொக்கது. கடவு-முன்னிலை யேவல். எஜமானனுக்குத் தேர்ச்சாரதி உறுதிகூறுதல் இயல்பு. (7)

8. அபிமன் சாரதியை நோக்கிக் கூறிய உத்தரம்.

ஐவர் விஞ்சையயோ டமலன் விஞ்சையும்
அலாயு தன்கதை விஞ்சையும்
கைவ லேற்கிவ ரொருபொ ருட்டலக்
ககன ராசுர ரென்னினும்
தெய்வ வாளிவிட் டிரிய வெல்குவன்
தெரிதி யென்னவே வலவனும்
பைவரும் பணிக் கேதன் வாகினிப்
பறிய வுய்த்தன னிரதமே.

(இ-ள்) ஐவர் விஞ்சையோடு - பாண்டவர்களுடைய [ஆயுத] வித்தைகளையும், அமலன் விஞ்சையும் - கண்ணபிரானது [போர்த்திற] வித்தைகளையும், அலாயுதன் கதை விஞ்சையும் - பலராமனின் கதாயுதவித்தையையும், கை வல் ஏற்கு - கற்றுக் கைதேர்ந்த வல்லமையையுடைய எனக்கு, இவர் ஒரு பொருட்டு அல - (நீ கூறிய) துரோணன் முதலியோர் ஒரு பொருள் அல்லர் (நிகராகார்) ககனர் ஆசுரர் என்னினும் - வானோர் அசுரர் யாவராயினும், [அவர்களை யான்] தெய்வ வாளி விட்டு - தேவாஸ்திரங்களை (அபிமந்திரித்து) விட்டு, இரிய வெல்குவன் - அவர்கள் சிதறியோடும்படி வெல்வேன், தெரிதி - தெரிந்து கொள்வாய், என்ன – என்று [உத்தரங்] கூற, வலவனும் - சாரதியும், பை வரும் பணிக்கேதன் வாகினி பறிய - படத்தையுடைய பாம்பினைக் கொடியிலெழுதியேந்திய துரியோதனன் படைகள் நிலைகெடும்படி, இரதம் உய்த்தனன் - தேரினை (விரைவாகச்) செலுத்தினான்; (எ. று.)

பாண்டவர்கள் கிருஷ்ணன் பலராமன் அனைவருடைய போர்த்திற வல்லமைகளையும் தான் ஒரு சேரப் பெற்றுள்ளான் அபிமன் என்பது தேர்ந்தபொருள், ககனம் - ஆகாசம், வானம்: ககனர் - வானோர், தேவர். தெரிதி - முன்னிலையேவல். பறிதல் - ஓடிப்போதல், நிலைகெடுதல், வலேற்கு - தன்மையொருமைப் பெயர். (8)

9. அபிமனம்பினால் சக்கர வியூகத்து அணிசிதற, துரோணனும் எதிர்த்துத் தோற்றல்.

அட்ட திக்கக லம்பரம் புவி
யதிர யாவருஞ் செவிடுற
வட்ட விற்குண வோதை செய்துபன்
மன்னர் விண்ணுற வாகினி
கெட்ட ழிந்திட விட்டு பல்கணை
கிட்டி மேல்வரு துரோணனும்
விட்ட தேர்சிலை யற்று வென்றர
வென்ற னன்றிறல் வேளனான்.

(இ-ள்) அட்ட திக்கு - எட்டுத்திக்குக்கள், அகல் அம்பரம் - பரந்த ஆகாயம், புவி - நிலவுலகு [ஆகிய இவற்றிலுள்ளோர்], யாவரும் – அனைவரும், அதிர-நடுங்கும்படியும், செவிடுற -(காதுகள் செவிடாகும்படியும், விட்ட - செலுத்திய, வில் குண ஓதை செய்து- வில்லின் நாணின் டங்காரத்தொனியையெழுப்பி, பல் மன்னர் விண்ணுற - பல அரசர்கள் வீரசுவர்க்கம் அடைந்திட, வாகினி கெட்டு அழிந்திட-(அவரது)சேனைகள் சிதைந்து அழிந்திட, பல்கணை விட்டு - பல அம்புகளைச்செலுத்தி, (மற்றும்) கிட்டி - தன்னை நெருங்கி, மேல் வரு துரோணனும் - எதிர்த்து மேல்வந்த துரோணா சாரியனும், விட்ட - தான்செலுத்திய. தேர் - இரதமும், சிலை – வில்லும், அற்று - முறிந்து, வென் தர - புறமுதுகிடும்படி, திறல் வேள் அனான் - வலிமைமிக்க முருகனைப்போன்ற வீரனாகிய அபிமன், வென்றனன் - ஜெயித்தான் ; (எ. று.).

'பல்கணைவிட்டு' என்றவிடத்து வைஷ்ணவாஸ்திரம் உட்பட எனக்கொள்க. ''அச்சுதப்பெயர்மாதுலன்புகலரியமந்திரம் அன் பினோடுச்சரித்தொரு நொடியினிற்பலகோடி பாணமுடற்றினான்'' என்றார் வில்லியும், செய்து உற அழிந்திட விட்டு என இயைத்துப் பொருள் கொள்க. (9)

10. படைஞர் பலரும் அபிமனுக்குத் தோற்றழியவே, துரியோதனன் தன்சேனையரசரை யழைத்தல்.

குருவி ளைத்திட மன்னர் வாகினி
குலைகு லைந்திட வவ்வழி
நரன ளித்தவ னுட்பு குந்தொரு
நால்வ கைப்படை யாவையும்
செருநி லத்தழி பிணம தாக்கியே
சீதை நாயகன் போலவே
பொருதல் கண்டிகல் அரவ கேதுளம்
பொங்கி மன்னரைக் கூவியே.

(இ-ள்) குரு இளைத்திட-துரோணாசாரியன் சோர்வடைய, மன்னர் வாகினி குலைகுலைந்திட-(அவனுக்குத் துணை வந்த) வேந்தர் படைகள் பதறிப்போக, அ வழி - அவ்விடத்து, நரன்

அளித்தவன் - அருச்சுனன் பெற்ற அபிமன், உள் புகுந்து - படைவியூகத்தினுட்சென்று, ஒரு நால் வகை படை யாவையும் - ரதகஜதுரகபதாதி யனைத்தையும், செரு நிலைத்து அழி பிணமது ஆக்கி - போர்க்களத்தில் இறந்துபோகச்செய்து பிணக்குவிய லாக்கி, சீதை நாயகன் போல - சீதாபிராட்டியின் கணவனாகிய இராமபிரானைப் போல, பொருதல் கண்டு - போரிடுதலைப் பார்த்து, இகல் அரவகேது - பகை கொண்டுள்ள துரியோதனன், உளம் பொங்கி - மனங் (கோபத்தால்) கொதித்து, மன்னரைக் கூவி துணைவேந்தர்களை யழைத்து ; (எ. று).

இலைத்திட குலைந்திட ஆக்கிப்பொருதல் கண்டு என இயையும், இராமபிரான் சீதைக்காகப் பொருது தென்னிலங்கை கட்டழித்தமை பிரசித்தம். போல என்றது உவமவுருபு. உவமை யணி காண்க. (10)

11. துரியோதனன் கூறியது கேட்டு அவன் பக்கத்தினர் அனைவரும் அபிமனைச் சூழ்ந்து கொள்ளல்.

ஒருவ னுநரன் சிறுவ னுற்றள
மொழித னன்றுநன் றவனையாம்
பொருது ஆவிகாண் குறுவம் வம்மெனப்
பொருவின் மத்திர னங்கர்கோன்
கிருப னச்சுவத் தாமன் மைத்துனன்
கிருத வன்மன்பின் னவர்முத
லரசர் யாவருஞ் சூழ வாரியன்
அணுக வெய்தின னறமிலான்.

(இ-ள்) நரன் சிறுவன் ஒருவனுல் - அருச்சுனனின்மகன் அபி மன்யு ஒருத்தனுல், தளம் ஒழிதல் - (நமது) படைகளனைத்தும் அழிந்துபோதல், நன்று நன்று - மிகவும் நன்ருயிருக்கின்றது ! (இது பழிப்புக்குரியதாகும்) : அவனை – அந்தஅபிமன்யுவை, யாம் - நாம் (அனைவரும்ஒருசேர), பொருது - போரிட்டு, ஆவி காண்குறுவம் - உயிரைக்கவர்ந்துவிடுவோம், வம் - வாருங்கள், என - என்று அழைக்க, (உடனே) பொரு இல் மத்திரன் - ஒப்பற்ற சல்லியன், அங்கர்கோன் - கர்ணன், கிருபன் - கிருபாசாரியன், அச்சுவத் தாமன் - அசுவத்தாமன், மைத்துனன் - சயத்திரதன், கிருத

வன்மன் - கிருதவர்மா, பின்னவர் - தம்பியர், முதல் - முதலாக, அரசர் யாவரும் - துணைவேந்தர்கள் அனைவரும், சூழ - தன்னைச் சுற்றிலும்வர, ஆரியன் அணுக - துரோணசாரியன் கிட்டிவர, அற மிலான் எய்தினன் - துரியோதனன் (போர்க்களத்து) வந்தனன்; (எ. று.),

ஒருவனதுயிர்கவரப் பலர் சூழவந்தமையால் அபிமனது போர் வீரம் தெரிவித்தபடி. மற்றும் ஒருத்தனது உயிரைக்கவரப்பலரை யழைத்து வந்தமையால் துரியோதனனை 'அறமிலான்' என்றதும், கருத்துடையடைகொளியணி. நன்றுநன்று - பிறகுறிப்பு; அடுக்கு நாணம் பற்றியது. காண்குறுவம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மைவினைமுற்று; உறு - துணைவினை. வம் - முன்னிலையேவல் வினை. சூழ, அணுக எய்தினன் என இயையும். (11)

12. அபிமன் பொருது அனைவரையும் வென்றமை கூறும்.

வந்து மாயவன் தங்கை மைந்தனை
வளைந்த னேகமா சுகமழை
சிந்தி னாரரி யேற னானொரு
சிலையி னிற்றடுத் திரதமா
உந்து பாகுதன் அங்க மும்பரித்
தும்ப ரம்மவென் றிடவெதிர்
முந்து வார்க்கெலா முரங்கு ளிப்பமும்
மூன்று வெங்கணை யேவினான்.

(இ-ள்) வந்து - துரியோதனனுள்ளிட்ட அனைவரும் வந்து, மாயவன் தங்கை மைந்தனை - கிருஷ்ணனது தங்கையாகிய சுபத் திரையின் மகனாகிய அபிமன்யுவை, வளைந்து - சுற்றிக்கொண்டு, அநேகம் ஆசுகம் மழை சிந்தினார் - பல அம்புமாரியைப்பொழிந் தனர்; (அப்போது) அரி ஏறு அனான் - ஆண்சிங்கத்தையொத்த அபிமன்யு, ஒரு சிலையினில் தடுத்து - ஒரு வில்லினையெடுத்து அதனால் (அந்த அம்புமாரியைத்) தடுத்து, (அதேசமயத்தில் தனது) இரதம் மா உந்து பாகு தன் அங்கமும் - தேர் குதிரை (அவற்றைச்) செலுத்தும்பாகன் தன்னுடைய தேகம் ஆகியவற் றையும், பரித்து - (ஊறுபடாதபடி) தாங்கிக்காத்து, உம்பர் - தேவர் கள், அம்ம என்றிட - 'அம்ம' என்று கூறியதிசயிப்ப, எதிர்

முந்துவார்க்கு எலாம் - எதிரிட்டுவந்து முந்திக்கொண்டவரனை வர்க்கும், உரம் குளிப்ப - மார்பில் புதையும்படி, மும்மூன்று வெம் கணை - ஒன்பது கொடிய பாணங்களை, ஏவினான் - செலுத்தினான்; (எ. று.).

ஆசுகமழை - உருவகம். அங்கமும் - உம்மை பிரித்து முன்னரும் கூட்டிக்கொள்க. அம்ம - வியப்பினாலாகிய கிளவி. முந்துவார் - வினையாலணையும்பெயர். மும்மூன்று, வெங்கணை - பண்புத்தொகை. (12)

13. துரோணன், அசுவத்தாமன், கர்ணன் மூவரும் அபிமனுக்குத் தோற்றமை.

பட்டு வாளிமார் புதிரம் வார்தரப்
பலரும் வென்றர வேதியன்
கிட்டி மேலமர் கெட்ட கன்றனன்
கேழ்கொள் வெம்பரித் தாமனும்
விட்ட னேகமம் பமர்செய் தங்கவன்
விடுக ணைக்குடைந் தோடினான்
மட்டில் வாளிக டொட்ட கன்னனும்
வைகு தேரொடு மேகினான்.

(இ-ள்) வாளி மார்பு பட்டு - (அபிமன்விட்ட) அம்புகள் மார்பில் வீழ்ந்து, உதிரம் வார்தர - இரத்தம் பெருக, பலரும் வெந் தர - எதிரிட்டோர் பலரும் புறமுதுகிட, வேதியன் கிட்டி - துரோணாசாரியன் நெருங்கி, மேல் அமர்கெட்டு - அபிமன்மேல் வந்துசெய்தபோரில் தோற்று, அகன்றனன் - நீங்கினான்; (பிறகு) கேழ் கொள் வெம் பரித்தாமனும் - விளக்கம் பொருந்திய கடிய அசுவத்தாமனும், அனேகம் அம்புவிட்டு அமர்செய்து - பல அம்புகளைச்செலுத்திப் போரிட்டு, அங்கு - (அப்போது) அவ்விடத்து, அவன் விடு கணைக்கு - அந்த அபிமன் விடுத்த அம்புகளுக்கு, உடைந்து ஓடினான் - தோற்றுப்பின்னிட்டான்; மட்டு இல் வாளிகள் - கணக்கற்ற அம்புகள், தொட்ட - தொடுத்துவிட்ட, கன்னனும் - கர்ணனும், (அபிமனுக்கு முன்நிற்கமாட்டாமல்) வைகு தேரொடும் - தான் ஏறிய தேரினோடும், ஏகினான் - புறங்காட்டிப் போயினான்; (எ. று.).

அபிமன் தன்னையெதிர்த்துவந்த மன்னர்கள், துரோணன், அசுவத்தாமன், கர்ணன் முதலியோர் புறமிடும்படி வீரமொடு போர்செய்தான் என்ருர். வார்தரல் - பெருகுதல்; தா - துணை வினை. கேழ் - ஒளி, விளக்கம். - விடுகணை - வினைத்தொகை. தொடுதல் - விடுத்தல், செலுத்துதல். (13)

14. கிருதவன்மன், கிருபன், சகுனி, துரியோதனன் தம்பியர், சல்லியன் இவர்கள் அபிமனுக்குத் தோற்க, சகுனி மகனும் சல்லியன் மகனும் உயிரிழத்தல்.

கிருத வன்மனும் கிருப னுஞ்சிலை
கெட்டி ரிந்தனர் சகுனியும்
பொருது தன்மகன் மடிய வம்புரம்
புதைய மீண்டனன் மாருதி
உரைசெய் சூளினு லரசி ளைஞரும்
உயிர்கொ டோடினர் சல்லியன்
வரிவின் மெய்க்கவ சம்பிளந்திள
வலையி ழந்தகன் ருனரோ.

(இ-ள்) கிருதவன்மனும் - கிருதவர்மாவென்னும் யதுகுலத்தரசனும், கிருபனும் - கிருபாசாரியனும், சிலை கெட்டு இரிந்தனர் - வில்முறிந்து பின்னிடைந்து போயினர்: சகுனியும் பொருது - சகுனியும் (தன்மகனேடும்கூடிவந்து) போரிட்டு, (அப்போரில்) தன் மகன் மடிய - தனதுகுமாரனுகிய உலூகன் இறந்துபோக, (தானும்) அம்பு உரம் புதைய - (அபிமன்விடுத்த) அம்பு தனது மார்பில்தைக்க, (அதனல்) மீண்டனன் - (களத்தினின்று) திரும்பினுன்: மாருதி - வீமன், உரைசெய் - சொன்ன, சூளினல் - வஞ்சினத்தால், (அபிமன்கொல்லாதுவிட) அரசு இளைஞரும் - துரியோதனன் தம்பியரும், உயிர்கொடு - தத்தம் உயிரோடு, ஓடினர் —: சல்லியன் - சல்லியனும், (போரிடவந்து) வரி வில் - கட்டமைந்த (தனது) வில்லும், மெய்க் கவசம் - உடம்பிலிட்டகவசமும், பிளந்து - பிளக்கப்பட்டு, (மேலும்) இளவலை இழந்து - தன்மகனுகிய உருமித்திரனையும் (போரில்) இழந்து, அகன்ருன் - (களத்தினின்று) நீங்கினுன்; (எ. று.) அரோ - ஈற்றசை.

சகுனிமகன் உலூகனென்றும், அவனைச் சகதேவன் கொன்ருனென்றும், வியாசபாரதத்தால் தெரிகின்றது. துரியோதனனை

அவன் தம்பியருட்படக் கொல்வதாக வீமன் சபதஞ்செய்திருத்த லால்,துரியோதனன் தம்பியரைக்கொன்றிடாதுஉயிர்கொண்டு போக அபிமன் விட்டான் என்றுர். வில்கவசம் - உம்மைத்தொகை. சல்லி யன்மகன் உருமித்திரன் என்பது வில்லிபாரதத்தால் விளங்கும். (துரோண : பதின்மூன்றும் : 73) (இவன் மூத்தமகன். மற்றொரு மகன் இறத்தலைப்பின்னர் 28-ஆஞ் செய்யுளிற் காணலாம்) (14).

15. துரோணனே அபிமன் வீரச்செயலைப் பாராட்ட, துரியோதனன் பலரை அபிமன் மேல் ஏவ, அவர்களைத் தடுத்துத் துச்சாதனன் தான் எதிரிட வருதல்.

சென்னி யோடுகை கால்க ளற்றுடல்
சின்ன பின்னம தாய்ப்பல
மன்னர் வீழ்தல்கண் டதிச யித்தபி
மன்செய் சேவக மன்னெதிர்
பன்னு மாரிய னைப்ப ழித்தவன்
பலரை யேவினன் அவர்தமைக்
கன்னி யாடைதொட் டவன்ம றித்துயிர்
கவர்வன் யானென வபிமன்மேல்.

(இ - ள்) பல மன்னர் - பல அரசர்கள், சென்னியோடு - (தங்களது) தலையோடு, கை கால்கள் - கைகளும் கால்களும், அற்று - வெட்டப்பட்டு, உடல் சின்ன பின்னமதாய் - தேகமும் துண்டுதுண்டாகச் சிதைத்ததாய், வீழ்தல் கண்டு - (தரையில்) விழுவதைப் பார்த்து, அதிசயித்து - ஆச்சரியமுற்று, அபிமன் செய் சேவகம் - அபிமன்யு செய்கின்ற வீரச்செயல்களை, மன் எதிர் பன்னும் - துரியோதனராசனது முன்னிலையில் சொல்லிப் பாராட்டுகின்ற, ஆரியனை - துரோணுசாரியனை, அவன் பழித்து - அந்தத் துரியோதனன் இழித்துப்பேசி, பலரை ஏவினன் - பல வீரர்களை (அபிமன் மேல்) அனுப்பினன் : கன்னி ஆடை தொட் டவன் - திரௌபதியைத் துகில்பற்றியிழுத்த துச்சாதனன், அவர் தமை மறித்து - அந்த வீரர்களைத் தடுத்து நிறுத்தி, யான் உயிர் கவர்வன் - நான் (போய்) உயிரைப் போக்கு வேன், என - என்று [வீரம்] பேசி, அபிமன்மேல் - அபிமன்யு மீது ; (எ. று). ‘‘வந்து’’ என மேலைக்கவியில் தொடரும்,

பகைவர் சேனுபதியே தன்னைப் பாராட்டும்படி வீரச் செயல்களைச் செய்தான் அபிமன் என்று அவன் வென்றிச்சிறப்புக்கிளந்தவாறு. கன்னியாடை தொட்டவன் உயிர்கவர்வன் என்றது நகைப்பிற்குரியது என்பது அறிக: வில்லியாரும் துச்சாதனனை ''வெம்புய வலியால் மாதை விரிதுகிலுரிந்த வீரன்'' என்று பரிகசித்தது நினைக. (15)

16. துச்சாதனன் அபிமனுக்குத் தோற்றமை.

வந்த னேகமம் பேவி ஞனரி
மருகன் அங்கவன் வரிவிலோ
டுந்து மேவையு நூறி மாருதி
யுரைசெய் சூளினு லுனதுயிர்
தந்து ளேனக லென்ருேர் வெங்கணை
தான்வி டுத்தனன் சாரதி
சந்த னத்தொடு கொண்டு போயினுன்
தளர்தல் கண்டயர் வாறவே.

(இ - ள்) வந்து - (துச்சாதனன் அபிமனெதிர்) வந்து, அனேகம் அம்பு ஏவினுன் - பல அம்புகளை விடுத்தான்; அங்கு - அப்போது அவ்விடத்து, அரி மருகன் - கிருஷ்ணனுக்கு மருமானுகிய அபிமன், அவன் வரி விலோடு - அந்தத்துச்சாதனனது சுட்டமைந்த வில்லோடு, உந்தும் ஏவையும் நூறி -(அவன்) விடுத்த அம்பையும் அழித்து, (அவனை நோக்கி) 'மாருதி - வீமன், உரை செய் சூளினுல் - சொன்ன சபதமொழியால், உனது உயிர் தந்துளேன் - 'உன்னுடைய உயிரை (வாங்காமல் உனக்குக்) கொடுத்துள்ளேன்: அகல் - நீங்கிப் போவாயாக', என்று - என்று கூறி, ஓர் வெம் கணை தான் விடுத்தனன் - ஒரு கொடிய அம்பினைச் செலுத்தினுன்: (அதனுல்) தளர்தல் கண்டு - சோர்வடைதலைப் பார்த்து, சாரதி - (அவனது) தேர்ப்பாகன், அயர்வு ஆற - அத்தளர்ச்சி நீங்க, சந்தனத்தொடு – (அவனை) அவன் ஏறியிருந்த தேரினேடு, கொண்டு போயினுன் - (வேருெரு சேமமான இடத்திற்குக்) கொண்டு சென்ருன்; (எ. று.)

துச்சாதனனுயிரைப் போக்குவேன் என்று வீமன் சபதங் கூறியுள்ளானுதலின், உன்னை உயிரோடு விட்டேன் என்று

அபிமன் துச்சாதனனை நோக்கிக் கூறி விடுத்தான் என்க. தந்துளேன்-தன்மையொருமை, அகல் - முன்னிலையேவல். அரி மருகன்-நான்கனுருபுதொக்கது. தளர்தல், அயர்வு - தொழிற்பெயர்கள். (16)

17. கன்னனையும் துரியோதனனையும் பிறரையும் அபிமன் வென்றமை கூறும்.

தரணி மைந்தனேற் றுருவி மார்பகஞ்

சாய வெங்கணை யேவிவெஞ்

செருவி யற்றிய வதிர தன்சுதன்

சிரம றுத்துமீ தேற்றிடும்

அரச னாதிய நிருபர் வென்னிட

அப்பு மாரிபெய் தரிகொடேர்

கருணி வெம்பரி யணியு நூறினன்

கந்த னொத்தவம் மைந்தனே.

(இ-ள்) (பின்பு) தரணி மைந்தன் - சூரியகுமாரனாகிய கர்ணனை, ஏற்று - (போரினில்) எதிரிட்டு, வெம் கணை - கொடியதோர் அம்பை, மார்பகம் உருவி சாய ஏவி - (அவனது) மார்பினிடத்தை யூடுருவி (ப்பாய்ந்து) அவன் தரையில் விழும்படி விடுத்து, (மற்றும்) வெம் செரு இயற்றிய - கொடியபோரினைச்செய்த, அதிரதன்சுதன் சிரம் அறுத்து - அதிரதனென்னுமொருவன் மகனின் தலையை யறுத்து, (மேலும்) மீது ஏற்றிடும் - தன்மீது போரிட எதிர்த்துவந்த, அரசன் ஆதிய நிருபர் வென்னிட - துரியோதனன் முதலிய அரசர்கள் முதுகிடும்படி, அப்பு மாரி பெய்து - அம்புமழையைப் பொழிந்து, கந்தன் ஒத்த அ மைந்தன் - முருகனையொத்த அந்த அபிமன், அரி கொள் - பகைவர்கொண்டுள்ள, தேர் - தேர்களையும், வெம் பரி - கொடிய குதிரைகளையும், அணியும் - காலாட்படைகளையும், நூறினன் - அழித்தனன் ; (எ. று.).

தரணி - சூரியன். அதிரதன் - பூரிசிரவா என்னலாம். அவன் மகன் அவனொடு துரியோதனன் பக்கத்துச் சேர்ந்திருப்பன் என்க. அப்புமாரி - உருவகம். கரிணி = கருணி ; யானை. தேர்கரிணிபரி - உம்மைத்தொகை. கந்தன் தேவசேனாபதியாயிருந்து சூரபதுமன் முதலானோரைவென்றவனாதலின் அவனுக்கு அபிமனை ஒப்புச் சொன்னபடி. ஏவி, அறுத்து, பெய்து நூறினன் என முடியும். (17)

18. துரோணன் துரியோதனனை ஏசுதலும், வீமன் தருமனையணுகு தலும் கூறும்.

பொன்றி டாதுயிர் கொண் டிரிந்திடும்
பூப னுதிய ரைக்குரு
பின்ரெ டர்ந்தொரு சிறுவ னுக்குடை
பெற்றி நன்றென வேசினுன்
நின்று தன்னெதி ரமரு டற்றிய
நிருப ராவிகொண் டம்முனே
வென்று வாகைகொள் வீமன் வந்துமெய்
விரத னைப்பணிந் தோதுவான்.

(இ-ள்) பொன்றிடாது - (போர்க்களத்து) இறவாமல், உயிர் கொண்டு இரிந்திடும் - உயிரைக்காப்பாற்றிக் கொண்டு (புறமுதுகிட்டு) ஓடும், பூபன் ஆதியரை - துரியோதனன் முதலான அரசர்களை, குரு - துரோணன், பின்தொடர்ந்து - தானும் பின்னே சென்று, 'ஒரு சிறுவனுக்கு உடை பெற்றி நன்று - ஒரு வாலிபனுக்குத் தோற்றிடும் தன்மை நேர்த்தியானது' என - என்று குத்திக்காட்டி, ஏசினுன் - பரிகசித்தான் : (இஃது இங்ஙனுக) தன் எதிர் நின்று - தன்னையெதிரிட்டு நின்று, அமர் உடற்றிய - போரினைச்செய்த, நிருபர் ஆவி கொண்டு - அரசர்களுடைய உயிரைப் போக்கி, அ முனை வென்று - அந்தப்போர்முனை யிடத்துச் செயித்து, வாகைகொள் வீமன் வந்து - வெற்றிவாகைசூடிய வீமன் வந்து, மெய்விரதனை - தருமபுத்திரனை, பணிந்து - வணங்கி, ஓதுவான் - கூறுவான் ; (எ. று.) வீமன் கூறியதை மேலேக்கவியிற் காண்க.

துரோணன் ஏசியதுபோலவே வில்லிபாரதத்தில் கடோற்கசனும் "துரியோதனனை நோக்கி" இருவரெதிரெதிர் தம்மிலிகல் பொருதல் உலகியற்கையாருங்கூடிப், பருவ முருத்தனிக்குதலைப் பாலகனுக்காற்ருமற் பறந்துபோனீர்" என்று ஏசியதும் ஒப்பு நோக்குக. (பதின் : 241). நன்று - பிறகுறிப்பு. வாகை -"செரு வென்றது வாகையாம்" (18)

19. பலரோடு போரிட ஒரு சிறுவனை யனுப்பியது குறித்துத் தருமனை வீமன் நொந்து, தான் களம் புகுந்து பலரை மாய்த்தல்.

எண்ணில் சேவகர் நண்ண மாக்களத்
தெண்ணி லாதொரு சிறுவனை
அண்ண லுய்த்தமை யென்கொ லோவிடை
யருடி யென்றனி கங்களும்
மண்ணின் மன்னரும் மண்ட லீகரும்
வரந டந்துவெங் கதைகொளா
நண்ண லார்படை மன்ன ரெண்ணிலர்
நாக முற்றிட மோதினன்.

(இ - ள்) எண் இல் சேவகர் நண்ண - கணக்கற்ற போர் வீரர்கள் கிட்டிச்சூழ்ந்து கொள்ள, மா களத்து - பெரிய போர்க் களத்துக்கு, எண் இலாது : ஆராய்ந்து பாராமல், ஒரு சிறுவனை - ஒரு பாலகனை, அண்ணல் !- பெரியோனே ! (நீர்) உய்த்தமை என்கொல் ஓ-அனுப்பியது என்ன குறித்தோ?, (அது போகட்டும் இப்போது எனக்கு) விடை அருள்தி - அனுமதி கொடுப்பாயாக : என்று - என்று கூறி [வேண்டிப் பெற்று] அனிகங்களும் - (தனது) படைகளும், மண்ணின் மன்னரும் - பூபாலர்களும், மண்டலீகரும் - மண்டலாதிபர்களும், வர - துணையாகச் சூழ்ந்துவர, நடந்து - சென்று, வெம் கதை கொளா - வலிய கதாயுதத்தைக் கையிற் கொண்டு, நண்ணலார்படை - பகைவரது சேனைகளையும், எண்ணிலர் மன்னர் – கணக்கற்ற பகையரசர்களையும், நாகம் உற்றிட - விண்ணுலகம் சேரும்படி, மோதினன் - தாக்கிப் போர் செய்தான் ; (எ. று)

பெரிய போர்க்களத்திற்கு ஒரு சிறுவனைப் பலரொடு போரிட அனுப்பியது ஆகாது என்று வீமன் தருமனை நொந்து கொண்டான் என்றபடி, அண்ணல் -விளி. கொல், ஓ - அசையெனினுமாம். அருடி : - அருள் - பகுதி: இ: -முன்னிலைவிகுதி: த் எழுத்துப்பேறு : அருளுதி என்றபடி, கதை - சத்ருகாதிநி என்பது. கொளா - உடன்பாட்டெச்சம். நாகம் உற்றிட - பிறிதினவிற்சி. (19)

20,- வீமன் பகைசெற்ற வலிமை கண்டு துரியோதனன் துரோண னுக்குக் கூறுதல்.

அத்தி தேர்பரி மொய்த்த தானையின்
அணிகு லைந்துபல் லவனிபர்
செத்தை யொத்தனர அத்த னொத்தவன்
தீயை யொத்தனன் திசையெலாம்
மொய்த்த வாகினி செற்ற மாருதி
மொய்ம்பு கண்டுளம் வெம்பியே
துத்தி வெம்பணி யுற்ற கேதுறு
துரோண னுதியர்க் கோதுவான்.

(இ-ள்) அத்தி தேர் பரி மொய்த்த தானையின் - யானைதேர் குதிரை முதலியன செறிந்த படையின், அணி - வகுப்புக்கள், குலைந்து - சிதறி, பல் அவனிபர் - பல வேந்தர்கள், செத்தை ஒத்தனர் - சருகுக்குப்பைபோல் ஆயினர்: அத்தன் ஒத்தவன் - தன் தந்தையாகிய வாயுவை யொத்த வீமன், தீயை ஒத்தனன் - அக்னியைப போலாயினுன்! (அப்போது) துத்தி வெம்பணி உற்ற கேது - புள்ளிகள் கொண்ட படத்தையுடைய கொடிய பாம்பு எழுதப்பட்ட கொடியினையுடைய துரியோதனன், திசை எலாம் மொய்த்த வாகினி - திக்குக்களிலெல்லாம் நெருங்கியிருந்த சேனைகளை, செற்ற - அழித்த, மாருதி - வீமனது, மொய்ம்பு - வலிமை, கண்டு - (பிரதியட்சமாகப்) பார்த்து, உளம் வெம்பி - மனங்கொதித்து, உறு துரோணன் ஆதியர்க்கு - தன்னிடம் வந்த துரோணன் முதலிய தலைவீரர்களுக்கு, ஓதுவான் - கூறுவானுயினுன்; (எ. று.) துரியோதனன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

தன்னுடன் எதிர்த்தாரை வீமன் அழித்த வலிமையை நேரே கண்கொண்டு பார்த்த துரியோதனன் மனங்கொதித்தான் என்ற படி, செத்தை - குப்பை : சருகு : வைக்கோல் எனினுமாம்'' ''எரி முன்னர் வைத்தூறு போலக்கெடும்'' என்ருர் வள்ளுவரும், அத்தன் -தகப்பன் : வாயு: வலிமையிற் சிறந்தவனென்பது பிரசித்தம் துத்தி - புள்ளி. கேது - கொடி ; அதனையுடையானுக்கு அன்மொழித் தொகை. (20)

வேறு.

21, வீமன் அபிமன் இருவரையும் பிரித்தே பொருதல் நலமென்று துரியோதனன் கூற, அவன் தம்பியர் அசுவத்தாமன் முதலியோர் அபிமனைச் சூழ்ந்து பொருதல்.

நமதனிக முற்று நூறு மபிமனை
நணுகில்வளி மைந்தன் தீயோ டனிலமுஞ்
சமமுறுமி வன்கண் வீம னணுகுருச்
சமர்பொருது மென்ன வோது நிருபனோ
டமைவுறும வன்பி னோர்கண் முதலிய
அரசர்குரு மைந்த னாடு முனைபுகுந்
திமமிரவி மொய்த்தல் போல வவன்வளைந்
திகல்கொள்சம ரஞ்செய் தார்கள் படையொடே.

(இ-ள்) நமது அனிகம் முற்றும் நூறும் அபிமனை - நம்முடைய சேனைகள்முழுவதையும் அழிக்கும் அபிமன்யுவை, வளி மைந்தன் - வாயுபுத்திரனாகிய வீமன், நணுகில் - சேர்வானானால், தீயோடு அக்னியோடு, அனிலமும் - காற்றும், (சேர்வதற்குச்) சமம் உறும் - சமமாகும் : (ஆகையால்) இவன்கண் - இந்த அபிமனிடத்து, வீமன் அணுகுரு - வீமன் வந்து சேராதபடி, (செய்து) சமர் பொருதும் - போர் செய்வோம், என்ன - என்று, ஓதும் நிருபனோடு - சொன்ன துரியோதனராசனோடு, அமைவுறும் - (அவனுக்குச்சேரப்) பொருந்திய, அவன் பினோர்கள் முதலிய அரசர் - அவன் தம்பியர்கள் முதலிய அரசிளைஞர்கள், குரு மைந்தன் - அசுவத்தாமன் - (இவர்களும்) ஆடு - போரிடுகின்ற, முனைபுகுந்து - இடத்தினையடைந்து, இமம் - பனியானது, இரவி மொய்த்தல் போல - சூரியனைச் சூழ்ந்து கொண்டது போல, அவன் வளைந்து - அந்த அபிமனை வளைந்து கொண்டு, படையொடு - (தத்தம்) சேனைகளோடு, இகல் கொள் சமரம் செய்தார்கள் - வலியபோரினைச் செய்தார்கள் ; (எ. று.).

துரியோதனன் தன்சேனையோரை நோக்கி அபிமனும் வீமனும் சேர்ந்தால் நெருப்பும் காற்றும் - சேர்ந்ததுபோலாகி நாம் அனைவரும் அழிவோம் : ஆதலின், அவர்களைப் பிரித்தே பொருதல் வேண்டும் என்ன, அவன் தம்பியர்களும் அசுவத்தாமனும் படையொடு அபிமனை வளைந்துகொண்டனர் என்றபடி. பனிக்கு இவர்களையும் சூரியனுக்கு அபிமனையும் ஒப்புக்கூறியது, சூரியனைக் கண்ட பனிபோல இவர்களும் இரிந்து விலகுவர் என்றபடி. முதலடியில் தீயினுக்கு அபிமனையும், அனிலத்துக்கு வீமனையும் ஒப்புச்

சொன்னபடி. அனலொடு அனிலமும் சேர்ந்தால் அனைத்தும் உருமாய்ந்தொழிந்திடும் என்பது வெளிப்படை. பொருதும் - உளப் பாட்டுத் தன்மைப்பன்மை. பினோர் - பின்னோர் என்பதன் தொகுத்தல். ஆடு முனை - போர்முனை. ஆடு - அடுதல் ; தொழிற் பெயர். ஈற்றடியில் உவமையணி.

இதுமுதல் எட்டுக்கவிகள் - பெரும்பாலும் ஒன்று ஐந்தாஞ் சீர்கள் கருவிளங்காய்ச்சீர்களும், இரண்டு மூன்று ஆறு ஏழாஞ் சீர்கள் தேமாச்சீர்களும், நான்கு எட்டாஞ்சீர்கள் கருவிளச்சீர் களும் ஆகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியச் சந்த விருத்தங்கள். இங்கு இருவகைச் சந்தக்குழிப்பு விரவி வந் துள்ளது எனலாம்.

தனதனன தத்த தான தனதன தனதனன தத்த தான தனதன என்பது ஒன்று.

தனதனன தந்த தான தனதன தனதனன தந்த தான தனதன என்பது மற்றொன்று. (21)

22 : தன்னுடன் எதிர்த்தாரை வீமன் அழித்து, துரியோதனன் கர்ணன் இவர்களொடு அமர் செய்தல்.

விழிகனலு குப்ப வாகு துடிதர
மிகவெகுளி கொண்டு வீம னவரவர்
பொழிகணைவி லக்கி யாக முழுவதும்
புதையவிசி கங்க டூவி யணியுறு
மழைமதவி பங்க ளாள்கள் பரியணி
வகையறவொ ழித்து மீள வளவறு
கழனிருபர் சொர்க்க மேற மகிபதி
கருணன்முத லியர்க ளோட வமர்செய்தான்.

(இ-ள்) (ஒரு பால்) வீமன்—, விழி கனல் உகுப்ப - கண்கள் நெருப்பினைச்சிந்த, வாகு துடிதர - தோள்கள் துடிக்க, மிக வெகுளி கொண்டு - மிக்க கோபங்கொண்டு, அவரவர் பொழி கணை விலக்கி - அவரவர்கள் சொரிந்த அம்புகளைத் தடுத்து, (மற்றும் அவர்களது) ஆகம் முழுவதும் - உடம்பு முற்றிலும், புதைய - பொத்தும்படி,, விசிகங்கள் தூவி - அம்புகளைச் சொரிந்து, அணி உறு - வகை செய்யப்பட்ட, மத மழை இபங்கள் - மத

நீராகிய மழையைப் பெருக்குகின்ற யானைகள், ஆள்கள் - காலாட்கள், பரி அணி - குதிரைப்பந்திகள், [இவைகளை] அழித்து, மீள - மேலும், அளவு அறு கழல் நிருபர் - கணக்கற்ற வீரக்கழலைக்கட்டிய அரசர்கள், சொர்க்கம் ஏற - இறந்துபட, மகிபதி - துரியோதனன், கருணன் - கர்ணன், முதலியர்கள் - முதலானவர்கள், ஓட - புறமிட, அமர்செய்தான் - போரிட்டான்; (எ. று.).

வீமன் நாற்படைகளையும் அழிக்க, அவனையெதிர்த்துவந்த துரியோதனன் கர்ணன் முதலியோர் புறமிட்டனர் என்றபடி. விழிகனலுகுத்தல், வாகுதுடிதரல் - இவை வெகுளியின் மெய்ப்பாடுகள். விலக்கி, தூவி, ஒழித்து ஏற, ஓட அமர்செய்தான் என முடியும். சொர்க்கம் ஏற - மங்கலவழக்கு. (22)

23. வீமன் அபிமனொடு சேராதபடி விலக்கத் துரியோதனன் சயத்திரதனைச் சொல்ல அவன் அதன்படியே போரில் முடுகுதல்.

தேர்முதலி ழந்து பாறு நிருபரைச்
சிலவசைமொ ழிந்து சேற லழகென
நேர்குறுகு சிந்து ராச திலகனை
நிலவுதவழ் வேணி யாதி வரமதிற்
போர்குறுகி யெய்தி வீம னபிமனைப்
புகுமுனம்வி லக்கல் வேண்டு மெனவித
மார்மொழிநி கழ்த்தி யேவு மரசனை
அவனடிப ணிந்து போரின் முடுகினன்.

(இ-ள்) தேர்முதல் இழந்து - தேர்முதலானவற்றைவிடுத்து, பாறும் - நிலைகெட்டோடிய, நிருபரை - அரசர்களை, சேறல் அழகு என - (நீங்கள் உங்களுடைய) படைவீட்டினைச்சேர்தல் நேர்த்தியாகும் என்று, சிலவசை மொழிந்து - சில பழிச்சொற்களைச் சொல்லி, (பின்னர்) நேர் குறுகு - தன்னைநேரே கிட்டிவந்த, சிந்து ராச திலகனை - சைந்தவனை (சயத்திரதனை), நிலவு தவழ் வேணி ஆதி - சந்திரன்பொருந்திய சடைமுடியினையுடைய சிவபிரானின், வரமதில் - வரபலமதனால், போர்குறுகி எய்தி - (நீ) போர்க்களம் கிட்டி அடைந்து, வீமன் அபிமனைப் புகுமுனம் விலக்கல் வேண்டும் -

வீமன் அபிமன்யுவைச்சேரும் முன்னம் (அவன் சேராதபடி) தடுத்தல் வேண்டும், என - என்று, இதம் ஆர்மொழி நிகழ்த்தி - (தனக்கு) நன்மை நிறைந்த வார்த்தையினைச்சொல்லி, ஏவும் அரசனை - தன்னை (ஆணையிட்டு) அனுப்பும் துரியோதனனை, அவனடி பணிந்து - அவன் பாதங்களில் வணங்கி, போரில் முடுகினன் - போர்செய்தற்கு விரைந்தான் ; (எ. று.).

சிவபிரான் வரமதில் விலக்க வேண்டும் என்றது - சிவபிரான் அருளிய கொன்றைமாலையால் விலக்க வேண்டும் என்றது. ஈண்டு அறிய வேண்டிய விவரம் பின்வருமாறு — பாண்டவர் வனவாசஞ் செய்கையில் ஒருநாள் வேட்டைக்குப் போயிருக்குஞ் சமயம்பார்த்துச் சயத்திரதன் (சைந்தவன்) சென்று ஆசிரமத்தில் தனித்திருந்த திரௌபதியை வலியக்கவர்ந்து தேரேற்றிக்கொண்டு செல்ல, பின்பு மீண்டுவந்து செய்தியுணர்ந்த பாண்டவருள் வீமன் சினந்து அருச்சுனனோடும் எதிர்த்துச்சென்று சைந்தவனின் வலியழித்து, பின்தருமன் கட்டளையிட்டபடி ஐங்குடுமிவைத்துப் பங்கப்படுத்தி அனுப்பிவிட, அங்ஙனம் அவமானப்பட்ட சைந்தவன் இமயகிரியிற்சென்று தவஞ்செய்து சிவபிரானைத்தியானிக்க, அவர் பிரதியட்சமாக, அப்போது அவரை நோக்கி அவன் ''பாண்டவர்களைவரையும் யுத்தத்தில் ஜயிக்கக்கடவேன்'' என்று வரம் வேண்ட, அக்கடவுள் அவனை நோக்கி 'அர்ச்சுனனைத்தவிர மற்றப்பாண்டவர்களை யுத்தத்தில் நீ 'தடுப்பாய்' என்றுவரமீந்து தமது கொன்றைப்பூ மாலையையும், பகைவெல்லவல்ல ஒரு கதாயுதத்தையும் கொடுத்தருளினர் என்பது. இந்தக்கொன்றை மாலையைத்தான் அபிமனுக்கு வீமன் துணைபுகாதவாறு விலக்க இருவரிடையில் இட்டுத்தகைந்தான். சேறல் அழகு - நிஷ்டூரமான வார்த்தை. சிந்துராசன் - சைந்தவன் : சயத்திரதன் எனவும் படுவன். ஆதி - முதற்கடவுள் : சிவபிரான். பாறுதல் - நிலைகெடல், அழிதல் : ''பழவினைகள் பாறும்வண்ணம்'' என்றது திருவாசகம். (51, 1) (23)

24. சயத்திரதனால் தன் சேனைவீழ்வது கண்டு தருமன் நேரில் வந்து முடுகுதல்.

கயரதது ரங்க வீரர் புடைவரக்
கதிர்மதிய ணிந்த வேணி யொருவனைச்
சயமுறநி னைந்து நாணி னொலிசெயாச்
சரமழைபொ ழிந்து மீறி யெதிர்தரு

புயவலிகொள் சிந்து ராசன் அமரினிற்
பொருதனிக முற்றும் வீழ்வ துபொரு
வயமுடைய மன்னர் தானை யொடுமடு
மறலிமகன் வந்து நேரின் முடுகினான்.

(இ-ள்) கய ரத துரங்க வீரர் புடைவர - யானை தேர் குதிரை காலாள்கள் பக்கத்தில் சூழ்ந்துவர, கதிர் மதி அணிந்த வேணி ஒருவனை - ஒளிவிடுகின்ற சந்திரனையணிந்த சடையை யுடைய ஒப்பற்ற சிவபெருமானை, சயம் உற - (போரில்) வெற்றி யடையும்படி, நினைந்து - தியானித்து, நாணின் ஒலி செயா - வில்லின் நாண் கயிற்றினால் டங்காரத்தொனிசெய்து, சரம் மழை பொழிந்து - அம்புமழையைச் சொரிந்து, மீறி - வரம்புகடந்து, எதிர் தரு - எதிரிட்டுவருகின்ற, புயம் வலி கொள் சிந்துராசன் - தோள் வலிமை கொண்ட சைந்தவன், அமரினில் பொருது - போரினில் தாக்குதலால், அனிகம் முற்றும் வீழ்வது பொரு - (தனது) சேனை முழுவதும் அழிவது கண்டு பொறுக்காமல், அடு மறலி மகன் - (உயிர்களைக்) கொல்லுகின்ற யமனின்மகனாகிய தருமன், வய முடைய மன்னர் தானையொடும் - வலிமையுடைய துணைவேந்தர் சேனையோடும், நேரின் வந்து - (தானே) நேராகப் போர்க்களத்து வந்து, முடுகினான் - விரைந்தான்; (எ. று.).

தனது நாற்படையும் அழிதலைக்கண்டு தருமன் தானே நேரில் துணைமன்னரோடும் களம் வந்து சைந்தவனோடு போரிடலானான் என்றார். நாணின் ஒலிசெய்தல் - போர்தொடங்குதற்கு அறிகுறி. "வயவலியாகும்" (தொல். சொல்: உரி: 70). மறலிமகன் - நான்கனுருபு தொக்கது. (24).

25. சிவனருளால் சைந்தவன் அனைவரையும் விஞ்சுதல்.

வார்முரச கேதி னோடு கனதயவன்
வரிவிலிர தங்க னாறி மகனொடு
போர் முயலும் யாக சேன னிரிதரப்
புயனிறவி டும்பி சேயொ டவனிபர்
கார்முகமெ டுத்த மாய னிளவலும்
கறையுடலு குப்ப வோட மதகரி

தேர்பரிது ணிந்து வீழ வரமருள்

சிவனிலொரு சிந்து பூப னமர்செய்தான்.

(இ-ள்) வார் முரச கேதினோடு - நீண்ட முரசவாத்தியத்தைக் கொடியிலெழுதியேந்திய தருமனோடு, கதையவன் - வீமன் (இவர்கள் இருவருடைய) வரி வில் இரதங்கள் நூறி - கட்டமைந்த வில் தேர்கள் முதலியவற்றைச்சிதைத்து, (பின்னர்) மகனொடு - திட்டத் துய்மனோடு, போர்முயலும் யாகசேனன் - போர்தொடங்கும் துருபதன், இரிதர - பின்னிடைய, புயல் நிற இடும்பி சேயோடு - மேகம்போல் கறுத்த நிறமுடைய இடும்பியின் மகனை கடோற்கசனோடு, அவனிபர் - துணையரசர்களும், கார்முகம் எடுத்த மாயன் இளவலும் - வில்லினையேந்திய சாத்தகியும், கறை - இரத்தம், உடல் உகுப்ப - (தங்களது) உடம்பினின்று பெருகும்படி, ஓட - புறமுதுகிட்டோட, மதகரி தேர் பரி துணிந்து வீழ - மத யானைகள் தேர்கள் குதிரைகள் துணிக்கப்பட்டுத் தரையில் விழும் படி, ஒரு சிந்து பூபன் - ஒப்பற்ற சிந்துராசனை சைந்தவன், வரம் அருள் சிவனில் - (தனக்கு) வரமீந்த சிவபிரானைப் போலவே, அமர் செய்தான் - போரிட்டான்: (எ. று.).

கதையவன் என்பதன்பின் ஆறனுருபு தொக்கது. நூறி, இரிதர, உகுப்ப, வீழ அமர்செய்தான் எனமுடியும். கேதினோடு - இன் - சாரியை. புயனிறம் - உவமைத்தொகை: இருவர்க்கு மொக்கும். கறை - இரத்தம்: "புறங்கறையொழுகு செம்புண்ணில்" (பிரபுலிங்: துதி. 15). கரிதேர்பரி - உம்மைத்தொகை. சிவனில், இல் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. சிவனருளால் சயத்திரதன் போரில் விஞ்சினான் என்பது மனக்கொள்க. (25).

26. சயத்திரதன் ஒருபுறம் மும்முரமாகப் போரிட மற்றொரு புறம் அபிமனைத் துரோணன் துரியோதனன் உள்ளிட்ட பலர் வளைந்து கொள்ளல்.

தருமனனி கங்கள் சூறை வெளியிடை

சருகெனவ லைந்து போக விழியிலி

மருகன்மலை கின்ற போதி லவனெதிர்

வருதினிகள் பொன்ற நூறு மபிமனை

அருமறையு யர்த்த துரோண னனுசர்கள்
அரிதரும மைந்த னாதி நிருபர்கள்
குருமணிர தங்க ளானை பரியொடு
குருபதிவ ளைந்து போரை நடவவே.

(இ-ள்) தருமன் அனிகங்கள் - தருமனது படைகள், சூறை வளியிடை - சூறைக்காற்றிலேயகப்பட்ட, சருகென - உலர்ந்த இலைகளைப்போல, அலைந்து போக - சிதறியோடிப்போகும்படி, விழியிலி மருகன் - திருதராட்டிரனுடைய மருமகனாகிய சைந்தவன், மலைகின்ற போதில் - போரிடுகின்ற சமயத்தில், அவன் எதிர் - அவனுக்குப் போட்டியாக, வருதினிகள் பொன்ற - கௌரவசேனைகள் அழிய, நூறும் அபிமனை - கொல்லும் அபிமன்யுவை, அருமறை உயர்த்த துரோணன் - அரியவேதத்தைக் கொடியாகத்தூக்கிய துரோணாசாரியன், அனுசர்கள் - (துரியோதனனின்) தம்பியர்கள், அரி தரும் அ மைந்தன் - சூரியன் அருளிய அந்தக் குமாரனாகிய கர்ணன், ஆதி - முதலிய, நிருபர்கள் - அரசர்கள், (இவர்களோடு) குருபதி - துரியோதனராசன், குரு மணி ரதங்கள் - நிறம்பெற்ற மணிகள்கட்டியுள்ள தேர்கள், ஆனை - யானைகள், பரியொடு - குதிரைகள் இவைகளோடு, வளைந்து - சூழ்ந்துகொண்டு, போரை நடவவே - போரினைச்செய்யவே ; (எ.று.).

துரியோதனன் துரோணன் கர்ணன் தன் தம்பியர் துணை வேந்தர்கள் முதலாய அனைவரோடும் நாற்படை கொண்டுசென்று அபிமனை வளைந்து போரிடலானான் என்றபடி. சிதறியோடிப் போதற்கு - சூறையிடைசருகு உவமை. எனவே முதலடியில் உவமையணி. திருதராட்டிரன் தன்மகள் துச்சளையைச் சைந்தவனுக்கு மணம்புரிவித்தனனாதலின், சைந்தவனை 'விழியிலி மருகன்' என்றது, அந்தணர்க்கு மறைக்கொடியுரித்து. அரி - சூரியன் (பிங்கலந்தை). அ - பிரசித்தி காட்டுவது. ''குருவுங் கெழுவு நிறனாகும்மே'' (தொல்: சொல்: உரி : 5) என்ற சூத்திரப்படி, குரு நிறமென்னும் பண்புணர்த்திற்று. (26).

27. அபிமன் மிக்க வீரத்தோடு போரிட்டுப் பலரையழிக்க, அது கண்டு கர்ணன் உக்கிரத்தோடு எதிர்த்து வருதல்.

பரிரதவி பங்கள் ஆள்கள் துணிபட
பலபலர்சி ரங்க டோள்க டறிபட
வரிசிலைச ரங்க ணணி யொடுமற
வனைகவசம் விண்டு மார்பு கிழிபடக்

குருதிநதி மூழ்கி யாட வலகைகள்
குருபதித ளங்க ளோட வமர்பொரு
மொருமொறும டங்க லோடு சமர் செய
வுறுதியொடெ திர்ந்து பானு மதலேயே.

(இ-ள்) (துரியோதனனின்) பரி ரத இபங்கள் ஆள்கள் துணிபட - நாற்படைகளும் துண்டிக்கப்பட, பலர்பலர் சிரங்கள் தோள்கள் தறிபட - பலபேர்களுடைய தலைகளும் தோள்களும் வெட்டப்பட, வரிசிலே சரங்கள் - வரிந்துகட்டப்பட்ட விற்களும் அம்புகளும், நாணியொடும் அற - (வில்) நாண்கயிற்ருேடும் அறுந்துவிழ, வனே கவசம் விண்டு - தரித்த கவசம் பிளக்கப்பட்டு, மார்பு கிழிபட - மார்பும் கீறுபட, அலகைகள் - பேய்கள், குருதி நதி மூழ்கி ஆட - இரத்தவாற்றினில் முழுகிக்களித்துக் கூத்தாட, (இறவாது எஞ்சிய) குருபதி தளங்கள் - துரியோதனனின் சேனே கள், ஓட - புறங்காட்டியோட, (இவ்வாறு), அமர் பொரும் - போரிடுகின்ற, ஒரு மொறு மடங்கலோடு - ஒரு உக்கிரமான சிங் கம்போன்ற அபிமனேடு, சமர் செய - போரிடுதற்கு, பானுமதலே - சூரியபுத்திரனுகிய கர்ணன், உறுதியொடு எதிர்ந்து - மனேதிடத் தோடு எதிரிட்டுவந்து; (எ. று.) "மீள" என மேலேக்கவியிலி யையும்.

துணிபட, தறிபட, அற, கிழிபட, ஆட, ஓட என்பன அடுக்கி, 'அமர் பொரும்' என்பதோடு முடியும். மொறு - Rough: அடக்கமுடியாத உக்கிரம் எனலாம். மடங்கல் - சிங்கம்: பிடரி மயிர் மடங்கியிருப்பதுபற்றிவந்த காரணக்குறி: இங்கு அது அபி மனுக்கு உருவகம். (27).

28. அபிமனுல் அடிபட்டுச் சிலரிறக்க, பலர் நொந்து மீளுதல்.

கொடிசிலேது ரங்க நாலு மறுபடக்
குருதியுடல் சிந்த மீள மகபதி
அடலனுசர் நொந்து போத முனிவனும்
அவன்மகனு முற்று நீடு சிலேரதம்
பொடிபடவி ரிந்த போது துன்முகன்
பொருதுதலே யற்று வீழ விகலவர்க்

கிடிபுரையு மத்தி ரேசன் மகன்விழ
விதயமிக நொந்து மீளு மளவிலே.

(இ-ள்) (கர்ணன் தனது) கொடி - கொடியும், சிலை - வில்லும், துரங்கம்நாலும் அறுபட - நான்கு (வெள்ளைக்) குதிரைகளும் துண்டிக்கப்பட்டுவிழ, உடல் (தனது) உடம்பு, குருதி சிந்த - இரத்தம் பெருகிச்சிந்த, மீள -(போர்க்களத்தினின்று) தனது பாசறைக்குத் திரும்ப, மகபதி - மகதமன்னனும், அடல் அனுசர் - துரியோதனனின்வலிய தம்பியரும், நொந்து போத - வருந்தித்திரும்ப, முனிவனும் - துரோணனும், அவன் மகனும் - அசுவத்தாமனும், உற்று-போரில் பொருந்தி, (தமது) நீடு சிலை ரதம் பொடிபட - நீண்ட விற்கள் தேர்கள் துகளாக, இரிந்த போது - பின்னிட்டபோது, துன்முகன் - துர்முகனென்பவன், பொருது - அபிமனோடு போரிட்டு, தலையற்று வீழ - தலைதுணிந்து தரையில்விழ, (மற்றும்) இகலவர்க்கு இடி புரையும் மத்திரேசன் - பகைவர்க்கு இடியையொத்த சல்லியன், மகன் விழ - தனது (மற்றொரு) புதல்வனும் இறக்க, இதயம்மிக நொந்து - மனம் மிகவும் வருந்தி, மீளும் அளவில் - (தனதுபாசறைக்குத்) திரும்பும் சமயத்தில்; (எ. று) ''......விழ'' என மேலைக்கவியிலியையும்.

கர்ணன் தேர்க்குதிரைகள்நாலு என்பதை வில்லியாரும் குறித்துள்ளார். (பதின்மூன்றும் : 64) இவை வெள்ளைக்குதிரைகள் என்று வியாசபாரதத்தில் கூறியுள்ளது. மகததேசத்து சராசந்தன் மகன் சகதேவன் என்பவன் தருமன் பக்கத்தினன் என்று இந்த ஆசிரியரால் சஞ்சயன் தூதுசருக்கத்துக் கூறப்பட்டிருத்தலால், (உத்தி சஞ் : 36) இந்த மகபதி வேறொரு மகதவரசனெனக் கொள்க. அதுபோலவே 'மத்திரேசன் மகன்விழ' என்ற விடத்தும், முன்னொரு மகனைச்சல்லியன் இழந்திருத்தலின் (செ : 14) இவன்வேறொருவன் எனக்கொள்க. இனி 'துன்முகன் தலையற்று வீழ' என்றதால், இது அப்பெயர் கொண்ட ஓர் அரசனைக் குறித்ததாகக் கொள்ளவேண்டும். துரியோதனன் தம்பியாகிய துர்முகன் என்று கொள்ளக்கூடாது. ஏனெனில், நூற்றுவரையும் கொல்வேனென்று வீமன் செய்துள்ள சபதம் பொய்க்குமாதலின் என்க. இனி 'தலை' என்பதை 'முடி'க்கு இலக்கணையாக்கி, ''கிரீடம்'' எனப்பொருள் கொண்டால் அஞ்ஞான்று துரியோதனன் தம்பிக்கு ஆக்கலாம் எனினும், அது சிறவாது. ஏனெனில் மேல் 'மகன்விழ' என்பதோடு ஒப்பு நோக்குக. கொடிசிலை - உம்மைத்தொகை. மீள, போத இரிந்தபோது, வீழ, விழ, நொந்து மீளும் என முடியும். (28)

வேறு.

29. அபிமன் வில்லினுல் நாற்படைகளும் களத்தவிதல் கூறும்.

பற்பலம தக்கரிகள் பற்பலவ யப்பரிகள்
பற்பலர தங்கள் விழநீள்
பற்பலவி தக்கணைகள் பற்பலகொ டிக்குடைகள்
பற்பலப டைக்க லம்விழப்
பற்பலமு டித்தலைகள் பற்பலபு யக்கிரிகள்
பற்பலப தங்கள் விழவே
பற்பலபு விக்கதிப ரிப்படிக ளத்தவிய
பற்குனியொர் கைச்சி லையிலே.

(இ-ள்) பற்பல மதக்கரிகள் - பலப்பல மதயானைகள், பற்பல வயப்பரிகள் - பலப்பல வலிய குதிரைகள், பற்பல ரதங்கள் - பலப்பல தேர்கள், விழ - அழிந்து விழ; நீள் - நீண்ட, பற்பல விதம் கணைகள் - பலப்பலவிதமான அம்புகள், பற்பல கொடி குடைகள் - பலப்பல கொடிகள் குடைகள், பற்பல படைக்கலம் - பலப்பல ஆயுதங்கள், விழ - சிதைந்து விழ; பற்பல முடித்தலைகள் —பலப்பல கிரீடங்களையணிந்த தலைகள், பற்பல புயக்கிரிகள் - பலப்பல மலைகள் போன்ற தோள்கள், பற்பல பதங்கள் - பற்பல கால்கள், விழ - துணிக்கப்பட்டு விழ; இப்படி - இந்த விதமாக, பற்பல புவிக்கு அதிபர் - பலப்பல நாட்டு மன்னர்கள், களத்து அவிய - போர்க்களத்தில் இறந்தொழிய, பற்குனி – அபிமன், ஓர் கை சிலையில் - (தன்)கையிற்பிடித்த ஒரு வில்லினுல் ; (எ. று.) அமர் செய்தான் என்பது சொல்லெச்சம்.

அபிமனின் விற்றிறம் சிறப்புறக் கிளந்தபடி- பல + பல=பற்பல. ''அகரம் ஏக லகரம் றகரமாகலும்'' என்பது விதி. (நன் : எழுத் : உயிரீற் : 20) சிலையில், இல் - ஐந்தனுருபு ஏதுப்பொருளது : இனி மூன்றனுருபின் கருவிப்பொருளில் வந்தது எனலுமாம்; அஞ்ஞான்று உருபுமயக்கமாகும். விழ, விழ, விழ, அவிய என்ற எச்சங்கள் அடுக்கி 'அமர் செய்தான்' என்ற சொல்லெச்சத்தோடு முடியும் என்க. 'பற்பல' என்ற ஒரே சொல் ஒரே பொருளில் பலதரம் வந்தது- சொற்பொருட்பின் வருநிலையணி. பற்குனி —தத்திதாந்தநாமம் : பற்குனன் மகன் பற்குனி யென்றபடி : இராவணன் மகன் இந்திர ஜித்தை 'இராவணி' என்பது போல,

இதுவும் அடுத்த கவியும் - பெரும்பாலும் முதலைந்துசீர்கள் விளங்காய்ச்சீர்களும் ஏனைய இரண்டும் மாச்சீர்களுமாகிய எழுசீ ராசிரியவிருத்தங்கள். (29)

30. பல அரசிளங்குமரர்கள் அபிமனொடு பொருது புறமுதுகிட்டமை கூறும்.

மைந்துடைய மன்னனுள நொந்துபல மன்குமரர்
வர்க்கமொடு தன்ம கனையும்
உந்தவவர் வந்தொரடல் சிங்கமொடெ திர்த்தபல
உம்பலின் வளைந்து விசிகஞ்
சிந்தியமர் செய்தயில்கொள் கந்தனென நின்று பொரு
செம்மல்விடு வெங்க ணைகளால்
தந்திரமி ழந்துடல நொந்துயிரு டன்முதுகு
தந்தனரி ரிந்த னர்களே.

(இ-ள்) மைந்து உடைய - வலிமையுடைய, மன்னன் - துரியோ தனன், உளம் நொந்து - மனம் வருந்தி, பல மன்குமரர் வர்க்க மொடு - பல அரசகுமாரர் குழுவோடு, தன் - மகனையும் - தன் இலக் கண குமாரனையும், உந்த - (போர்க்கு) அனுப்ப, அவர் வந்து - அவ் வரசகுமரர் வந்து, ஓர் அடல் சிங்கமொடு எதிர்த்த பல உம்ப லின் வளைந்து - ஒரு வலிய சிங்கத்தோடு எதிரிட்ட பல யானைகளைப் போலச்சூழ்ந்துகொண்டு, விசிகம் சிந்தி – அம்புகளைப் பொழிந்து, அமர் செய்து - போரிட்டு, அயில் கொள் கந்தன் என நின்று - வேலைக்கையிற் கொண்டுள்ள முருகனைப்போல நிலையாக நின்று, பொரு - போரிடுகின்ற, செம்மல் - சிறந்த அபிமன், விடு வெம் கணை களால் - செலுத்திய கொடிய அம்புகளால், தந்திரம் இழந்து - (தமது) சேனைகளையிழந்து, உடலம் நொந்து - தேகம் வருந்தி, உயிருடன் முதுகு தந்தனர் - (தமது) உயிரோடு, புறங்காட்டின ராய், இரிந்தனர்கள் - ஓடிப்போயினர் : (எ.று.)

'சிங்கமொர்டெதிர்த்த பல உம்பல்' -என்ற உவமையால் அபிமன் பலரையும் வெல்வன் என்றது பெறவைக்கப்பட்டது, "கோவிலங்கு பொர அஞ்சுமோ கரட-குஞ்சரங்கள் பகை கொண்ட கால்' என்ருர் வில்லியும் (உத்தி:கிருட்:122) பலரையும் வீரமொடு எதிர்த்துப்புறங்

காட்டி யோடச்செய்து வென்ற அபிமனுக்குக் கந்தன் சாலச்சிறந்த உவமையாவன். செம்மல் - ஆண்பாற்சிறப்புப் பெயர். தந்தனர் - முற்றெச்சம், (30)

வேறு.

31. **துரியோதனன் தேர்ப்பாகன் அபிமனை உயிர்கவர்தற்கு இது சமயம் எனக்கூறல்.**

அருணனிற்றேர் கடவியமன் வலவ னோக்கி
அரிமருக னிவரமருக் கஞ்சி யோடி
மரணமகன் றனரெனவங் கவனீ யுங்கை
யவயம்பெற் றனைநின்பால் வருவா னெய்தும்
முரணறன்சேய் கதையவனை மறிக்குஞ் சிந்து
முதல்வனுயிர் கவர்தற்கம் முனையிற் செல்லத்
தருணமிது வெனவவனங் கிசையத் தேரச்
சவமலையுங் கறையாறுந் தாண்டிற் றன்றே.

(இ-ள்) அருணனின் தேர் கடவிய - சூரியசாரதியான அருணனைப்போலத் தேரைச் செலுத்தி வந்த, மன் வலவன் நோக்கி - துரியோதனனின் பாகன் அவனைப் பார்த்து, 'இவர் - இந்த அரசிளங்குமரர், அரிமருகன் அமருக்கு அஞ்சி ஓடி - அபிமனோடு போரிடுதற்குப் பயந்து ஓடி, அங்கு - அவ்விடத்து. மரணம், அகன்றனர் - உயிர்தப்பினர்,' என - என்று கூறி, (மேலும் இனி) அவன் - அந்த அபிமன், நீயும் கை அவயம் பெற்றனை - நீயும் கையோடு (துண்டிக்கப்படாமல்) இருக்கிறாய்; (அதனால்) நின்பால் - உன் மேலும், வருவான் - எதிர்த்து வரக்கூடும்: (மற்றும்) முரண் அறன்சேய் - பகைமைகொண்டுள்ள தருமபுத்திரனும், எய்தும் - வருவன்: (அனைத்துக்கும் மேலாக) சிந்து முதல்வன் - சைந்தவன், கதையவனை, மறிக்கும் - வீமனை (அபிமனொடு சேரவொட்டாமல்) தடுத்திடுவன்: (ஆதலால்) உயிர் கவர்தற்கு - அபிமனுயிரை யொழித்தற்கு, அ முனையில் செல்லத் தருணம் இது - அந்தப் போர் முனைப்பக்கத்துப் போக நல்ல சமயம் இதுவே, என - என்று சொல்ல, அவன் - துரியோதனன், அங்கு இசைய - அப்போது சம்மதிக்க, தேர் - அவனுடைய தேர், அ சவமலையும் - அந்தப் பிணமலைகளையும், கறை ஆறும் - இரத்தவாற்றினையும், தாண்டிற்று - கடத்து போயிற்று; (எ-று) அன்றே - ஈற்றசை.

அபிமன் உன்னை எதிர்க்க வருவன் : தருமனும் வருவன் : வீமனை இவர்களோடு சேரவொட்டாமல் சைந்தவன் தகைந்திடுவன்: ஆதலால் இதுவே அபிமனையுயிர்கவர்தற்கு ஏற்றசமயம் என்றான் துரியோதனனிடம் அவன் தேர்ப்பாகன் என்க. எய்தும் - செய்யு மென்முற்று ஆண்பாலுக்கு வந்தது.

இதுமுதல் ஆறுகவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களு மாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (31)

32. துரியோதனனும் அவன் மகனும் அபிமனொடு போரிடல்.

ஒருசிலையிற் றமைவென்றோ னிரதஞ் சேறல்
உணர்ந்துரக கேதுபல ரோடு மேற்றான்
அரிகரிமேற் செலல்போல்வந் தபிமன் வாங்கும்
அடற்சிலையொன் றாலகன்றார் அநேக மைந்தர்
பொருதுபதா தியரில்சில ரிறந்தார் வேந்தன்
புதல்வனபி மன்றேர்மேற் றன்றே ரோட்டிச்
செருமலைந்தான் ஆண்மையுரைத் திவனும் வீரஞ்
சிலபுகன்று பலவாளி சிந்தி னானால்.

(இ - ள்) ஒரு சிலையில் தமை வென்றோன் - ஒரு வில்லினாலே தங்களனைவரையும் ஜெயித்தவனாகிய அபிமன், இரதம் சேறல் உணர்ந்து - தேரிலேறியிருத்தலையறிந்து, உரக கேது - துரியோதனன், பலரோடும் ஏற்றான் - பல வீரர்களோடும் (அவனை) எதிர்த்தான் ; (அப்போது) அபிமன் —, அரி — சிங்கமொன்று, கரி மேல் செலல் போல் - (பல) யானைகள் மேல் எதிர்த்துப் போதல் போல, வந்து - அவர்களெதிரில் வந்து, வாங்கும் - தான் வளைத்த, அடல் சிலை ஒன்றால் - வலிய வில்லொன்றினால், அநேக மைந்தர் அகன்றார் - பல அரசிளங்குமரர்கள் களத்தினின்று விலகிப் போனார்கள் ; பதாதிய ரில் சிலர் - காலாட்படையினரில் சிலபேர், பொருது - (அபிமனொடு) போரிட்டு, இறந்தார் - மாண்டுபோயினர் :(அதுகண்டு) வேந்தன் புதல்வன் - துரியோதனன் மகனாகிய இலக்கண குமாரன், அபிமன் தேர்மேல் - அபிமன்யுவின் தேரின்மேல், தன் தேர் ஓட்டி - தன் னுடைய தேரைச் செலுத்தி, ஆண்மை உரைத்து - பராக்கிரமமாகப் பேசி, செருமலைந்தான் - போரிடலானான் : இவனும் - இந்த அபி மனும், வீரம் சில புகன்று - வீர வார்த்தைகள் சிலவற்றைப்பேசி, பல வாளிசிந்தினான் - பல அம்புகளைச் சொரிந்தான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

ஆண்மை — பராக்கிரமம். வீரம் - வீரவார்த்தைகளுக்கு ஆகு பெயர். சேறல் - தொழிற்பெயர். சில பல - முரண்தொடை (32)

33. அபிமன் இலக்கணகுமாரனை யழித்தல்.

இலக்குவனு மிராவணியு மெதிர்ந்தா ரென்ன
இருவருமெண் டிசையதிர விமையோ ரஞ்ச
அலக்கணுற்றச் சேடனுமெண் ணிபமு நாட்ட
மழற்காலச் சினமீற வடல்வில் வாங்கா
விலக்கிவரு கணையிரத மானை மாவாள்
விழவமர்செய் திடுமமையம் விசயன் மைந்தன்
சிலக்கணைவிட் டிலக்கணன்றேர் வலவன் மாவில்
சிதைத்தவன்றோ ளுடன்மவுலிச் சிரமும் வீழ்த்
தான்.

(இ-ள்) இலக்குவனும் இராவணியும் எதிர்ந்தார் என்ன - இலக்குமணனும் இந்திரசித்தும் போரிட்டது போல, இருவரும் - அபிமனும் இலக்கணகுமாரனும், எண்திசை அதிர - எட்டுத்திக்கிலுள்ளாரும் நடுங்க, இமையோர் அஞ்ச - தேவர்கள் பயப்பட, அ சேடனும் - அந்த ஆதிசேடனும், எண் இபமும் - அட்டதிக்கு யானைகளும், அலக்கண் உற்று - வருத்தமடைந்து, நாட்டம் - தமது கண்களிலிருந்து, அழல் கால - நெருப்பினைக்கக்க, சினம் மீற - கோபம் விஞ்ச, அடல் வில் வாங்கா - வலிய வில்லினை வளைத்து, வரு கணை விலக்கி - தங்கள்மேல் வந்த அம்புகளை (மேற்படாதவாறு) தள்ளி, இரதம் ஆனை மா ஆள் விழ - நாற்படைகளும் கெட்டுவிழ, அமர் செய்திடும் அமையம் - போர்செய்திடுஞ்சமயத்தில், விசயன் மைந்தன் - அபிமன், சில கணைவிட்டு - சில அம்புகளைச் செலுத்தி, இலக்கணன் தேர் வலவன் மா வில் சிதைத்து - இலக்கண குமாரனுடைய தேர் பாகன் குதிரை வில் முதலியவற்றையழித்து, (இறுதியில்) அவன் தோளுடன் மவுலிச்சிரமும் வீழ்த்தான் - அவனுடைய தோள்களுடன் கிரீடம் தரித்த தலையையும் துண்டித்து வீழ்த்தினான்; (எ-று.)

அபிமனுக்கு இலக்குமணனும், கொல்லப்படுபவனான கொடிய இலக்கணகுமாரனுக்கு இந்திரசித்தும் உவமையெனக்காண்க : இதில், அயோக்கியனான இராவணன் துரியோதனனுக்கு ஒப்புமை

யாதலும் ஏற்கும். ஆதிசேடன் பூமியைக் கீழிருந்து தாங்குபவ ருதலாலும், அட்டதிக்கு யானைகள் பூமியைத் தாங்கிநிற்பதாலும் இவர்களிட்ட போர் மும்முரத்தில் அவைகளின் தலைகள் நெளிய, அவை அலக்கண் உற்றுக்கோபத்தால் கண்களில் தீப்பொறிகள் சிந்தின என்க. இராவணி - இராவணன் மகன் : தத்திதாந்த நாமம். திசை - திசையிலுள்ளார்க்கு இடவாகுபெயர். அதிர அஞ்ச கால மீற வாங்கா என முடியும். வாங்கா - உடன்பாட்டெச்சம். இரத மானமாவாள், தேர்வலவன்மாவில் - உம்மைத்தொகை : சிலக்கணை - மிகுதல். (33)

34. புதல்வனிறந்தது கேட்டுத் துரியோதனன் புலம்பி 'என் மைந்தனைக் கொன்றவனைக் கொல்லாவிடின் இவ்வரசு முதலியன வேண்டா' என்ன, அபிமனைக் கொல்வதாக அவர்கள் சபதஞ் செய்தல்.

மைந்தனிறந் திடவோர்ந்து சோர்ந்து மன்னன்
மலர்விழியின் மணியிழந்தான் மான மாழ்கி
அந்தணனோ டரசரைப்பார்த் தபிம னாவி
அரைநொடியிற் கவர்கிலிரேல் அரசென் வாழ்வென்
எந்தனுயி ரினிவேண்டே னெனக்கேட் டியாரும்
இஃதரிதே லெமதாண்மை யென்னென் றோதி
வந்துவளைந் தோரொருவர் கோடி வாளி
மழைபெய்தா ரபிமன்மிசைப் பிழைசெய் தாரே.

(இ-ள்) மைந்தன் இறந்திட ஓர்ந்து - தன்மகன் இலக்கணன் இறந்திட்டதையறிந்து. மன்னன் - துரியோதனன், சோர்ந்து - தளர்ந்து, மலர் விழியின் மணி - தாமரை மலர்போல் அழகிய கண்ணினுள் மணியை, இழந்தான் மான - நீங்கினவன் போல, மாழ்கி - அழுது புலம்பி, (பின்பு) அந்தணனோடு அரசரைப்பார்த்து - துரோணனோடு துணைவேந்தர்களையும் நோக்கி, 'அபிமன் ஆவி - அபிமன்யுவின் உயிரை, அரை நொடியில் கவர்கிலிரேல் - அரைக்கணத்தில் பறிக்காமற்போவீரேல், (எனக்கு) அரசு என் - அரசாட்சி எதற்கு? (வீண்) வாழ்வு என் - வாழ்வது எதற்கு? (வீண்) : (யான்) இனி-,

எந்தன் உயிர் வேண்டேன் - என்னுடைய உயிரை விரும்பேன் : என - என்று இரங்கியதை, கேட்டு - செவியுற்று, யாரும் - (கூடியிருந்த) அனைவரும், "இஃது அரிதேல் - நீ சொன்ன இந்தக்காரியம் (எங்கட்குச்) செய்யக்கூடாததாயின், எமது ஆண்மை என் - எங்களுடைய பராக்கிரமம் எதற்காகும்? (வீண்) : என்று ஓதி - என்று (சபதஞ்செய்து) சொல்லி, வந்து - அபிமனிடம் வந்து, வளைந்து - (அவனைச்) சூழ்ந்து கொண்டு, ஒரொருவர் - ஒவ்வொருத்தரும், அபிமன்மிசை - அவ் அபிமன் மேல், கோடி வாளிமழை பெய்தார் - மிகப்பல அம்புகளை மழையாகப் பொழிந்தனர்: (அதன்மூலம்) பிழை செய்தார் - தவறு செய்தார்கள் : (எ-று.) ஏ - இரக்கக்குறிப்பினது.

பலருங்கூடி ஒருவனைச் சூழ்ந்து மிகப்பல அம்புகளால் வருத்தியமையால் பிழை செய்தபடி, "இருவரெதிர் பொருதல் உலகியற்கை" யாதலின் என்க. கண்ணின் மணியிழந்தால் கண்ணழகு போகும்: பார்வை போகும்: குருடனென்றும் பொட்டைக் கண்ணன் என்றும் ஏசப்படுவான் : "கண்ணிலான் பெற்றிழந்தாலென உழந்தான்" என்ற கம்பர் வாக்கும் ஈண்டு ஒருசார் நினைவு கூர்க. (பால : கையடைப் : 11) மலர் விழி - உவமைத்தொகை. மான - உவமவுருபு. கேட்டியாரும் - குற்றியலிகரம். வாளிமழை - உருவகம். பெய்தார் செய்தார் —பிராசம். (34)

35. அபிமன் கடுமையாகப் பொரப் பலர் ஆவிமாள, சகுனி கிருபன் முதலியோர் புறங்காட்டி மீண்டமை கூறும்.

பிரளயத்தி லெழுமுகிலுங் கடலேழ் மாந்தி
பெய்மழைபோ லெண்ணில்சிலை பெய்யும் வாளி
வருவதெலா மொருசிலையாற் றடுத்தி யாரும்
மதிமயங்க வபிமனும்பல் வாளி யெய்தான்
பொருதுமனு குலத்தரசன் கேக யன்சேய்
பூபாலர் பலரரசர் புதல்வர் கோடி
மரணமடைந் தனர்சிலைபோய் கிருபன் போனான்
மலைசகுனி சுதர்துணைவர் மடிய மீண்டான்.

(இ - ள்) பிரளயத்தில் எழுமுகிலும் - யுகாந்த காலத்தில் (முழங்கியெழும்) சப்தமேகங்களும், ஏழ் கடல் மாந்தி - சப்த சமுத்திரங்களையும்உண்டு, பெய்மழைபோல்-பெய்கின்ற சோனைமாரிபோல,

எண் இல் சிலை பெய்யும் வாளி - கணக்கற்ற விற்கள் பெய்த அம்புகள், வருவது எலாம் - (தன்மேல்) வருவனவற்றையெல்லாம், ஒரு சிலையால் தடுத்து - ஒரு வில்லினாலேயே (தன்மேனியிற்படாமல்) தடுத்து, (மற்றும்) யாரும் மதி மயங்க - அனைவரும் புத்தி கலங்கும் படி, அபிமனும், பல்வாளி-பல அம்புகளை, உய்த்தான்-செலுத்தினான்- (இங்ஙனாக) மனுகுலத்தரசன் - சோழன், கேகயன் - கேகய நாட்டரசன், சேய் -அவன் மகன், பூபாலர் பலர் - பல பேரரசர்கள், அரசர் புதல்வர் கோடி - அரசகுமரர் அநேகர், பொருது - போரிட்டு, மரணமடைந்தனர் - இறந்தனர் : கிருபன் - கிருபாசாரியன், சிலை போய் – வில்லையிழந்து, போனான் - புறங்காட்டிப் போயினான் : மலை சகுனி - போரிட்ட சகுனி, சுதர் துணைவர் மடிய - (தனது) மகார் துணைவந்தோர் இறந்துபோக, மீண்டான் - புறங்காட்டித் திரும்பினான் ; (எ. று.)

முகில் ஏழு - சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்ற ஏழு மேகங்கள். கடல் ஏழு - உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், கட்கடல் நெய்க் கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பன. சோழ குலத்து ஆதிமுதல்வன் மனுவாதலின், சோழனை "மனுகுலத்தரசன்" என்றது. கேகயன் - இவன் பெயர் விந்தன் என்ப. கோடி - பன்மை குறிப்பது. வருவதெலாம் - ஒருமைப்பன்மைமயக்கம் - தடுத்தியாரும்- குற்றியலிகரம். (35)

36. துரியோதனன் விடுப்பக் கர்ணன் அபிமனுடன் பொரச் சென்று தோற்றுப் புறந்தரல்.

அரசிளைஞர் வெந்தந்தார் அடல்விற் றேர் போய்
அளப்பிலர்விண் ணடைந்தார்தேர் யானை மாவாள்
திரளுடைந்து வரல்காணா வெரிந்து மன்னன்
தினகரன்சேய் விடுப்பவவன் சென்று போர்செய்
தொருசிறுவன் விடுங்கணையாற் றேர்கை விற்போய்
உடைந்தகன்று மீளவொரு வுருள்தேர் தூண்டிப்
பொருதுவடல் அபிமன்கைக் கணையான் மீட்டும்
பொற்றேர்வெஞ் சிலையிழந்து புறந்தந் தானால்.

(இ - ள்) அரசிளைஞர் - அரசிளங்குமரர், வெந்தந்தார் - முதுகு காட்டியோடினர்: அடல் வில் தேர் போய் - வலிய வில்லும் தேரும் சிதைந்து, அளப்பிலர் - கணக்கற்றபேர், விண் அடைந்தார். வீரசுவர்க்கம் புகுந்தனர் : தேர் யானை மா ஆள் திரள் உடைந்து - நாற்படைகளின் தொகுதி பின்னிடைந்து, வரல் காணு - வருதலைப் பார்த்து, மன்னன் - துரியோதனன், எரிந்து - வெம்பிச் சினங் கொண்டு, தினகரன் சேய் விடுப்ப - சூரிய புத்திரனுகிய கர்ணனை யனுப்ப. அவன் சென்று - அவன் போய், போர் செய்து - போரிட்டு, ஒரு சிறுவன் விடும் கணையால் - ஒரு பாலகன் விடுத்த அம்புகளால், தேர் கைவில் போய் - (தனது) தேரும் கையிற் பிடித்த வில்லும் இழந்து, உடைந்து - தோற்று, அகன்று - களத்தினின்று நீங்கி, மீள மறுபடியும், ஒரு உருள் தேர் தூண்டி-சக்கரம் பூண்டதோர் தேரிலேறி (அதனைச்) செலுத்தி, பொருது - (அபிமனோடு) போரிட்டு, அடல் அபிமன் கைக் கணையால்- வலிமை பொருந்திய அபிமன்யு கையினுல் விடுத்த அம்பினுல், மீட்டும் - மறுபடியும், பொன் தேர் - அழகிய (தனது) தேரையும், வெம் சிலை - கொடிய (தனது) வில்லையும், இழந்து - விட்டு நீங்கி. புறந்தந்தான் - முதுகிட்டுத் திரும்பினுன்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

வில்தேர், தேர்யானைமாவாள், தேர்வில், தேர்சிலை - உம்மைத் தொகைகள். விண்ணடைந்தார் -பிறிதினவிற்சி. வரல்-தொழிற்பெயர் காணு - உடன்பாட்டெச்சம். பொற்றேர், வெஞ்சிலை - பண்புத் தொகைகள். (36)

வேறு.

37. கர்ணன் அபிமனின் கைவில்லைத் துணிக்க, ஏனையோர் அவன் தேரைச் சிதைத்தல்.

கொள்ளைதந் திரதஞ் சாபங்
குலைந்தகல் கன்னன் வேருேர்
கிள்ளையந் தேர்மேற் கொண்டக்
கிரீடிமா மதலை தேர்ப்பின்
கள்ளனிற் படர்ந்தோ ரம்பாற்
கைச்சிலைத் துணித்தான் மற்றங்
குள்ளவ ரிரதம் அச்சு
முருள்பரி பாகும் வீழ்த்தார்.

(இ-ள்) கொள்ளை தந்து - படைகளையிழந்து, இரதம் சாபம் குலைந்து - (தனது) தேரும் வில்லும் சிதைந்து, அகல்- (போர்க் களத்தினின்று நீங்கிய, கன்னன் - கர்ணன், வேறோர் கிள்ளை அம் தேர் மேற்கொண்டு - குதிரைகள் பூட்டப்பட்ட வேறொரு தேரின் மேலேறிக் கொண்டு, அ கிரீடி மா மதலை தேர் பின் - அந்த அருச் சுனனின் சிறந்த புதல்வனாகிய அபிமனின் தேரின் பின்னே, கள்ள னில் படர்ந்து - திருடனைப்போலத்தொடர்ந்து சென்று, ஓர் அம்பால் - ஒரு அம்பினால், கைச்சிலை துணித்தான் - அவன்கையி லிருந்த வில்லைத் துண்டித்தான் : (அப்போது) அங்கு உள்ளவர் - அங்கிருந்த (கர்ணனைச்சேர்ந்த) படைஞர்கள், இரதம் - (அபிமன்) தேரினது, அச்சும் - அச்சுப்பகுதியையும், உருள் - சக்கரத்தையும், பரி - குதிரையையும், பாகும் - பாகனையும், வீழ்த்தார் - அழிய விழச் செய்தார்கள் ; (எ. று.).

கொள்ளை - செல்வம் : இங்கே படைச்செல்வத்தைக் காட் டிற்று. கிள்ளை - குதிரை. கள்ளனில், இல் - ஐந்தனுருபு, ஒப்புப் பொருளது, (அபிமன் இரதம் கோங்குமரக் கொடியையுடையது) : அபிமனின் தேர்ப்பாகன் சுமித்திரன் என்று வடநூலால் தெரி கிறது.

இதுமுதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான் காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைநான்கும் மாச்சீர்களுமாகிய **அறு சீராசிரியவிருத்தங்கள்** : இவற்றில் மூன்று ஆருஞ்சீர்கள் தேமாச் சீர்களாகவே நிற்கும். (37).

38. தேரழியவே அதனை விட்டு அபிமன் வாளேந்தித் தரையிலிழிதல்

ஆயிர மிரதர் தேரை
அங்கர்கோன் சிலையை வீழ்த்த
ஞாயிறிற் கலன்மெய் மின்ன
நாகம்விட் டிபங்கண் மீப்பாய்
சீயமொத் தரசர் மீது
சீறிவாள் பரிசை யேந்தி
மாயவன் மருகன் பாய்ந்தான்
வையம்விட் டவனி மீதே.

(இ-ள்) ஆயிரம் இரதர் - ஆயிரம் தேர்வீரர்கள், தேரை - (தன்) தேரினையும், அங்கர்கோன் - கர்ணன், சிலையை - (தன்) வில்லையும், வீழ்த்த - சிதைக்கவே, மாயவன் மருகன் - அபிமன், ஞாயிறின் கலன் மெய் மின்ன - சூரியனைப்போல ஆபரணங்கள் தன் உடம்பில் சொலிக்க, நாகம் விட்டு - (தன் குகையிருக்கும்) மலையை விட்டு, இபங்கள் மீப் பாய் சீயம் ஒத்து - யானைகள்மீது பாய்கின்ற சிங்கத்தைப் போன்று, அரசர்மீது சீறி - பகைவேந்தர்மேல் கோபித்து, வாள் பரிசை ஏந்தி - வாட் படையையும் கேடகத்தையும் கையிலேந்தி, வையம் விட்டு - (சிதைந்த) தன் தேரினை நீங்கி, அவனிமீது பாய்ந்தான் – பூமியின் மேல் குதித்து விரைந்தான் ; (எ. று.).

நாகம் - மலை. மலை தேரினுக்கும், சீயம் - அபிமனுக்கும், இபங்கள் - பகையரசர்களுக்கும், உவமையாக வந்துள்ளது. கிருஷ்ணனின் தங்கை சுபத்திரையின் மகனாதலின், அபிமனை 'மாயவன் மருகன்' என்றார், வையம் - தேர். ஞாயிறின், இன் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. பரிசை - கேடகம் ; எதிரிகள் எறியும் ஆயுதங்களைத் தன்மேற்பட வொட்டாமல் தடுப்பதொரு கருவி. (38).

39. அப்பொழுது பகையரசரனைவரும் ஒருசேர அபிமன்மேல் நெருங்கி அம்புகளைப் பெய்தல் கூறும்.

குதித்தலுஞ் சுழற்றி வாளைக்
　　கோளரிக் குருளை யன்னான்
மதித்திடா தெதிர்ந்த போது
　　மைந்தனை யினிநாம் போரிற்
சிதைத்திட லாமென் றியாருஞ்
　　சேர்ந்தொரு முகமாய் வந்து
கொதித்திடுங் கடலி னார்த்துக்
　　கொண்டலிற் கணைகள் பெய்தார்.

(இ-ள்) குதித்தலும் - தரையில் குதித்தவுடன், வாளைச் சுழற்றி - (தன் கைப்பிடித்த) வாளினைச்சுற்றி, கோளரிக் குருளை யன்னான் - சிங்கக்குட்டிபோன்ற அபிமன், மதித்திடாது - பகைவரை லட்சியஞ்செய்யாமல், எதிர்ந்த போது - எதிரிட்டசமயத்தில், யாரும் - பகையரசர்கள் அனைவரும், இனி—, நாம்—, மைந்தனை- அபிமனை, போரில் சிதைத்திடலாம் - யுத்தத்தில் அழித்துவிடலாம்,

என்று - என்று முடிவுகட்டி, சேர்ந்து - ஒன்றுகூடி, ஒரு முகமாய் வந்து - ஒருமுனையிடத்திலே ஏகோபித்து வந்து, கொதித்திடும் கடலின் ஆர்த்து - பொங்கியெழும் கடலைப்போல ஆரவாரித்து, கொண்டலின் கணைகள் பெய்தார் - மேகம்போல அம்புமழையைப் பொழிந்தார்கள் ; (எ. று.).

கோளரி - சிங்கம் : மிருகங்களுள் அரசாகிய சிங்கம்போல, இராசகுமாரர்களுள் சிறந்தவனென்றபடி. குருளை - இளமைப் பெயர். ஒருமுகமாய் - ஏகமுகமாய் : ஒருவழிப்பட்டு, கடலின் கொண்டலின், இன் - ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. (39).

வேறு.

40. அபிமனொடு துரோணன் பொருது தோற்றுக் கால்நடையினனுதல்.

விடுவாளிகள் பொடியாயுக விண்ணுேடுற மண்ணுேர்
வடிவாள்கொடு சமர்செய்நரன் மகனுேடமர் புரியாத்
தொடுவார்சிலை யிரதம்பரி சூதன்பட வாசான்
படிமீதினி லடிசேப்புறப் படர்ந்தா னுடல்சுமந்தே.

(இ-ள்) (அபிமன்மேல் அனைவரும்கூடி) விடு வாளிகள் - செலுத்திய அம்புகள், பொடியாய் உக - துகளாகச்சிந்த, மண்ணுேர் விண்ணுேடு உற - தரையினின்று போரிட்டவீரர்கள் சுவர்க்கம் புக, வடி வாள் கொடு சமர் செய் - கூரிய வாளைக்கொண்டு போரிடும், நரன் மகனுேடு - அபிமனுேடு, அமர்புரியா - (தானும்) போரிட்டு, ஆசான் - துரோணுசாரியன், (தனது) தொடு வார் சிலை - தொடுத்து விடுகின்ற நீண்டவில்லும், இரதம் பரி சூதன் - தேரும் குதிரையும் பாகனும், பட - இற்றெழிய, படிமீதினில் - பூமியின் மேல், உடல்சுமந்து - உடற்பாரத்தோடு, அடி சேப்புற - பாதங்கள் சிவக்கும்படி, படர்ந்தான் - (பாதசாரியாய்) நடந்து போயினுன் ; (எ. று.).

அடிசேப்புறப் படர்தல் - பாதசாரியாதல். விடுவாளி - வினைத்தொகை. வடிவாள். வார்சிலை - உரிச்சொற்றொடர்கள். புரியா - உடன்பாட்டெச்சம். சிலைஇரதம்பரிசூதன் - உம்மைத்தொகை. உடல்சுமந்து - தோற்றவனுக்கு உடல் ஒரு பாரமாகத் தோற்றுதல் இயல்பு.

இதுமுதல் ஆறுகவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றைமூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (40).

41. அபிமனெடு பொருது மும்முறை தோற்ற துரோணன் அவன் கைவாளினைத் துணிக்க, கர்ணன் கேடகத்தைப் பயனில தாக்குதல்.

இவ்வா றமர் முக்காலடைந் திரதஞ்சிலை யிழவா
வெவ்வாசிகொ டேர்வேறினின் மீட்டெய்துபு துரோணன்
ஒவ்வாவிற லபிமன்கரத் துறுவாள்துணி செய்தான்
அவ்வேலையில் பரிசைக்கட வழித்தான்கதி ரளித்தோன்.

(இ-ள்) இவ்வாறு - இந்தப்படி, அமர் - போர்க்கு, முக்கால் அடைந்து - மூன்றுமுறை வந்து, துரோணன் —, இரதம் சிலை இழவா - (தனது) தேரையும் வில்லையும் இழந்து, (பின்பு) வெவ் வாசி கொள் தேர் வேறினில் - கடியகுதிரைகளைக்கொண்ட தேர் வேறொன்றினில் ஏறி, மீட்டு எய்துபு - மறுபடியும் (போரிட) வந்து, ஒவ்வா விறல் அபிமன் கரத்து - நிகரற்ற வலிமையையுடைய அபிமனின் கையில், உறு - பொருந்திய, வாள் - வாளினை, துணி செய்தான் - துண்டித்து விழுத்தினான்; அ வேலையில் - அதேசமயத்தில், கதிர் அளித்தோன் - கர்ணன், பரிசைக் கடவு அழித்தான் - (அபிமன்) கேடகத்தை எடுத்து உபயோகித்தலை நீக்கினான்; (எ. று.).

'கரத்துறுவாள் துணிசெய்தான்' என்று இவ்வாசிரியர் வாளினை மட்டும் கூறியிருப்பினும், வில்லியார் 'வாளொடு கையும் விழும்படிவிட்டான்' என்று கூறியுள்ளார். பரிசை - கேடகம். கடவு= கடவுதல் - செலுத்துதல், பிரயோகித்தல்: தொழிற்பெயர். கடவு அழித்தல் - உபயோகிக்கமுடியாதபடி செய்தல். எய்துபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஒவ்வா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (41).

42. தேருருளையைச் சக்கரப்படையாகக் கொண்டு அபிமன் பொர, அதனை அசுவத்தாமனும் கர்ணனும் துகளாக்குதல்.

வாள்கேடயம் துகளாயுக மான்முன்புகல் மறையால்
வேள்போன்றவன் தேர்வண்டிலை வெல்சக்கர மாய்க்
கொண்
டாள்மாகரி தேர்மன்னவ ரழியும்படி பொரலாற்
கோள்சக்கரந் துகளாக்கினர் குருசேயொடு கதிர்சேய்.

(இ-ள்) வாள் கேடயம் துகளாய் உக - வாளும் கேடகமும் தூளாகப்போய்ச்சிந்த, முன் மால் புகல் மறையால் - முன்னொரு காலத்தில் கண்ணன் உபதேசித்தருளிய மந்திரத்தால், வேள் போன்றவன் - முருகன்போன்ற அபிமன், தேர் வண்டிலை - (தன்) தேர்ச்சக்கரத்தையே, வெல்சக்கரமாய்க் கொண்டு - (பகைவரை) வெல்லுஞ் சக்கரப்படையாகக்கொண்டு, ஆள் மா கரி தேர் - (அவரது) நாற்படைகளையும், மன்னவர் - துணைவேந்தர்களையும், அழியும்படி பொரலால் - இறக்கும்படி யுத்தஞ்செய்ததால், (அதனைக்கண்டு) குருசேயொடு கதிர்சேய் - அசுவத்தாமனோடு கர்ணனும், கோள்சக்கரம் - (அபிமன்) கைக்கொண்ட சக்கரத்தை, துகளாக்கினர் - பொடிப்பொடியாக்கினர் ; (எ. று.).

''இவ்வகை துரோணாசாரியனால் தோளறுப்புண்டு மற்று அதற்குத் துளங்காது மானத்தேரின் மணியாழியை மற்றைக் கையாற் பறித்துக்கொண்டு சக்கரபாணியிடைத் தான் பயின்ற அபியோகத்தினால் ஆங்கு அதனை அபிமந்திரித்து அங்குலிப் படுத்தி அந்தரத்திடைத் திரித்துவிடுதலும்'' என்பது பாரதவெண் பாவின் உரைநடை. வண்டில் சக்கரம் : wheel. ஆள்மாகரிதேர் - ரதகஜதுரகபதாதி என்ற தொடர் மாருடியபடி. கோள் - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். இனி, வலிமை எனப்பொருள் கொளலுமாம். (42).

43. அபிமன் கதாயுதத்தால் தேர் முதலியன அழிக்க அசுவத்தாமன் புறமிட, அபிமன் சங்கநாதஞ்செய்தல்.

எறிசக்கரம் பறிபோனபின் எடுத்தோர்கதை முனிவன்
சிறுவன்பரி தேர்நூறவுஞ் சென்றானுயிர் கொண்டே
நிறைதேர்கரி பரியாள்பல நிலமன்னவர் வீழ
அறைவெங்கதை சுழற்றுநர னளித்தோன் வளைகுறித்
தான்.

(இ -ள்) எறிசக்கரம் பறிபோன பின் - தானெறிந்த சக்கரப் படை சிதைந்துபோனபின், ஓர் கதை எடுத்து - ஒரு கதாயுதத்தை யெடுத்து, (அதனுல்) முனிவன் சிறுவன் - அசுவத்தாமனது, பரி தேர் நூறவும் - குதிரை தேர் இரண்டையும் அழிக்கவும், (அவன்) உயிர் கொண்டு சென்ருன் - உயிர்தப்பிப் பிழைத்துப் புறமிட்டான் : (பின்னர்) நரன் அளித்தோன் - அபிமன், நிறை தேர் கரி பரி, ஆள் - நிறைந்த நாற்படைகளும், பலநிலமன்னவர்-பல புவியரசர்களும், வீழ - வீழ்ந்திறக்க, (அப்போது) அறை - சிறப்பித்துப் பேசப்படுகின்ற, வெம் கதை சுழற்ரு - கொடிய கதாயுதத்தைச் சுழற்றி, (வெற்றிக்கறிகுறியாக) வளை குறித்தான்- சங்கநாதஞ்செய்தான். (எ. று.)

அசுவத்தாமன் புறமிட. பல நிலமன்னர் வீழ, அபிமன் வெற்றிச்சங்கு ஊதினுனென்ருர். தேர்கரிபரியாள் - உம்மைத் தொகை. குறித்தல் — ஊதுதல். (43)

44. அபிமனும் துச்சாதனன் மகனும் கதை கொண்டு பொருதல்.

தொடையொன்றினி லடுவேனெனத் துச்சாதனன் மகன் வந்
தடல்தேர்சிலே பொடியாயுக அவனுங்கதை கொண்டான்
விடநாகமு நெளியக்கடல் விண்ணெண்டிசை யதிர
அடுகாலனு மிகவஞ்சிட வமர்செய்தன ரிருவோர்.

(இ - ள்) [அப்போது] துச்சாதனன் மகன் - துச்சாதனனுடைய குமாரனுகிய துச்சனி, தொடை ஒன்றினில் அடுவேன் என -ஒரு அம்பு தொடுப்பினில் கொல்வேனென்று, வந்து - (அபிமனே) எதிரிட்டுவந்து, (தனது) அடல் தேர் சிலே பொடியாய் உக - வலியதேர்வில் இவை துகளாகியுதிரவே, அவனும் - அந்தத் துச்சனியும், கதை கொண்டான் - (தன் கையில்) கதாயுதத்தை யேந்தினுன் : விடநாகமும் நெளிய - விஷம் பொருந்திய ஆதி சேடனும் (இவர்கள் பொரும் உக்கிரத்தால்) உடல் அசைய, கடல் விண் எண்திசை அதிர - கடலும் வானமும் அட்டதிக்குக் களும் நடுங்க, அடு காலனும் மிக அஞ்சிட - கொல்லுந்தன்மை யுள்ள யமனும் பெரிதும் பயப்பட, இருவோர் - அபிமனும் துச்சனியும், அமர் செய்தனர்:போரிட்டனர் ; (எ.று).

துச்சாதனன் மகன் - துச்சனியென்பவன். இப்பெயர் அடுத்த கவியில் விசதம். துச்சனியென்பது - துச்சாதனியென்பதன் திரிபுஆக இருக்கலாம். துச்சாசனனது மகன் சயசேனனென்று பெருந்தேவனுர் பாரதத்தால் தெரிகிறது. பூமியைக் கீழிருந்து தாங்குபவன், ஆதிசேடனுதலின் அவனுடல் நெளிந்தான். அவனும் கதை கொண்டான் என்ற உம்மையால், துச்சனியின் தேர்சிலே பொடியாயது அபிமன் கதையால் என்பது பெற வைத்தபடி. கடல்விண்ணெண்டிசை - உம்மைத்தொகை. காலனும், உம்மை- உயர்வுசிறப்பு. (44)

45. துச்சனி அபிமன் இருவரும் படுதல்.

துவர்வாயிதழ் மடியாவிழி சொரியக்கனல் முனியா
தவர்பற்குனி கதைபட்டிக றருதுச்சனி பட்டான்
உவன்வெங்கதை பட்டேமுக முதயத்தெழு கதிர்போல்
அவிரப்புவி மிசைச்சார்ந்துயி ரற்ருன்புகழ் பெற்ருன்.

(இ - ள்) துவர்வாய் இதழ் மடியா - பவளம் போற்சிவந்த வாயின் உதடுகளை மடித்துக் (கடித்து), விழி கனல் சொரிய - கண்களில் தீப்பொறி பறக்க, முனியா - கோபித்து, தவர் பற் குனி - வில்விசயன்மகனுகிய அபிமன் (சுழற்றிய), கதைபட்டு- கதாயுதம் மோதி. இகல் துச்சனி - பகைமைகொண்ட துச்சனி, பட்டான் - இறந்தான். (அதே சமயத்தில்) உவன் - (இறப்பதற்கு முன்) அந்தத் துச்சனியின், வெங்கதை முகம் பட்டு - கொடிய கதை (அபிமன்) முகத்திலே தாக்கி, (இரத்தத்தால் சிவப்பேற அந்த முகம்) உதயத்து எழு கதிர் போல் அவிர - அதிகாலே யில் உதிக்கின்ற சூரியனைப்போலச் செந்நிறமாய் விளங்க, புகழ் பெற்ருன் - கீர்த்தி வாய்ந்த அபிமன், புவி மிசை சார்ந்து உயிர் அற்ருன் -தரையின்மேல் விழுந்து இறந்து போனுன். (எ. று.)

துச்சனியின் கதையால் அபிமன் இறந்தான் என்ருர் இவ் வாசிரியர். இங்ஙன் கூறியது நல்லாப்பிள்ளை பாரதத்தின்படி. சயத்திரதன் (சைந்தவன்) சிவனருளால் பெற்ற கதையால் அபிமன் இறந்தான் என்பது வில்லிபாரதம் ; அங்ஙன் கூறுவது தான் பெருவழக்கு. உவன் - முன் நிற்பவன் : "பார்த்தானுவன்" (பரிபா : 12. - 55) : இங்கே முன்சொன்ன துச்சனியைக்காட்டும். மடியா, முனியா - உடன்பாட்டெச்சம். அற்ருன் .... பெற்ருன் - பிராசம். (45

வேறு.

46. அபிமன் போரிட்ட படுகளச்சிறப்பு.

கூளியொடு கவந்தங்கள் கூத்தாடப்
பந்தரிடக் குடிலம் புட்கள்
ஞாளியொடு நரியீர்ப்ப நரேசருடற்
கடற்பாய நதிபோற் சோரி
யாளியேறு உறழரச ரனேகரைவீழ்த்
துடல்சாய்ந்த அபிமன் தன்னை
மீளவெழுந் தமர்பொருமோ வெனக்கருதி
மெலிவுற்ருர் வேந்தர் எல்லாம்.

(இ-ள்) கூளியொடு - பேய்களோடு, கவந்தங்கள் - உடற்குறைகள், கூத்தாட - (எழுந்து) கூத்தினைச்செய்ய, குடிலம் - ஆகாசத்தில், புட்கள் - (கழுகுமுதலான) பறவைகள், பந்தரிட - பந்தல் போகட்டாற்போல (த்தமது) சிறகைவிரித்துப் பறந்திட, ஞாளியொடு - நாய்களொடு, நரி - நரிகளும் (தசைநசையால்) நரேசர் உடல் ஈர்ப்ப - இறந்தமன்னர்களுடைய தேகங்களையிழுத்துச்செல்ல, நதிபோல் சோரி - ஆறுபோல இரத்தம், (பெருக்கெடுத்து) கடல் பாய - சமுத்திரத்தினைச்சேர, ஆளி ஏறு உறழ் அரசர் அனேகரை வீழ்த்து - ஆண்சிங்கத்தையொத்த மன்னர் பலரை இறக்கச் செய்து, (இறுதியில்), உடல்சாய்ந்த அபிமன் தன்னை - தன் தேகத்தோடு [தரையில்] விழுந்த அபிமன்யுவை, வேந்தர் எல்லாம் - பகையரசர் அனைவரும், மீள எழுந்து - திரும்பவும் [உயிர்பெற்று] எழுந்து, அமர் பொருமோ - போரிடுவனே, என கருதி - என எண்ணி, மெலிவுற்ருர் - (மனம்) வருந்தினுர்கள் ; (எ. று.).

மிகப்பலர் இறக்கையில் கவந்தம் எழுந்தாடுமென்ப. குடிலம்- ஆகாசம். ஈற்றடியால் வேந்தர் கொண்டிருந்த அச்சத்தின் உச்ச நிலை காட்டப்பட்டது எனலாம்.

இதுமுதல் ஆறுகவிகள் — பெரும்பாலும் முதல்நான்கு சீர்கள் காய்ச்சீர்களும் ஏனைய இரண்டும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட அறுசீராசிரியவிருத்தங்கள். (46).

47. துரியோதனன்முதலிய நால்வர் தவிர யாவரும் அபிமனிறந்தமைக்கு இரங்குதல்.

நலம்புரியுங் கவுந்திசுதர் நந்தனனைப்
பலர்கூடி நலித்த னன்றே
நிலம்புரக்கு வேந்தருக்கு நெறியோவீ
தெனவிரங்கி நெடுங்கண் தாரை
சலம்பொழிய வந்தோவந் தோவெனவே
மிகவரற்றித் தளர்ந்து வீழ்ந்தார்
வலம்புரித்தா ரவன்கன்னன் மாமனிளை
யோனன்றி மற்றோ ரெல்லாம்.

(இ-ள்) நலம்புரியும் - நன்மையையே செய்துவரும், கவுந்தி சுதர் - பாண்டவரின், நந்தனனை - குமாரனை, பலர்கூடி - பகைவர்பலரும் ஒன்றுசேர்ந்து, நலித்தல் நன்றோ - வருத்திக்கொல்லுதல் நேர்த்தியானதோ? (அன்று): (மேலும்) நிலம் புரக்கும் வேந்தருக்கு - பூவுலகையாண்டுபாதுகாக்கும் மன்னர்களுக்கு, ஈது நெறியோ - இது தருமமோ? (இல்லை): என - என்று, இரங்கி-புலம்பிச்சோகித்து, வலம்புரி தாரவன் - துரியோதனன், கன்னன்-கர்ணன், மாமன் - சகுனி, இளையோன் - துச்சாதனன், அன்றி - தவிர, மற்றோர் எல்லாம் - மற்றைய அனைவரும், நெடுங்கண் தாரை சலம் பொழிய - (தங்கள்) நீண்டகண்களினின்று தாரையாகக்கண்ணீர் பெருக, அந்தோ அந்தோ என மிக அரற்றி - ஐயோ ஐயோ எனப் பெரிதும் கதறி, தளர்ந்து வீழ்ந்தார் - சோர்ந்து விழுந்தார்கள்: (எ. று.).

துட்டசதுட்டர்தவிர ஏனையோரனைவரும் அபிமனிறந்தமைக்கு இரங்கிக்கதறிக் கண்ணீர்வடித்தனர் என்றார். 'ஓரிரண்டுவயவர் முனைந்துடன் பொருதலுலகியற்கை யாதலின்' 'பலர்கூடி நலித்தல் நன்றோ' என்றும், 'வேந்தருக்கு நெறியோ' என்றும் கூறியிரங்கினர். நன்றோ, நெறியோ, ஓகாரம் - எதிர்மறை. அந்தோ - அந்தோ - அடுக்கு அவலம்பற்றியது. வலம்புரித்தார் - நந்தியாவட்டமாலை; இது துரியோதனனுக்குரியது. (47)

48. அபிமன் இறந்தமையைத் தருமன் கேட்டுப் புலம்பலைக்கூறும்.

இவ்வாறிங் கிவரிரங்க வேவுமட
லுதிட்டிரப்பே ரிறைவன் பாரில்
ஒவ்வாத விறலபிம னுயிரொழிந்தான்
எனக்கேட்டே யுருகி யுள்ளம்
எவ்வாறியா மினியுய்வோ மெமதாவி
மகனேசென் றிகலோர் செற்ற
அவ்வாறிங் கடைந்துரையா தடைந்தனைவிண்
ணழகோவென் றரற்றி வீழ்ந்தான்.

(இ-ள்) இவ்வாறு - இந்தப்படி, இங்கு - இவ்விடத்து, இவர் இரங்க - இவரனைவரும் வருத்தமுற்றுத்தளர, ஏவும் அடல் உதிட்டிரப்பேர் இறைவன் - (அவனைப்போரிடுதற்கு) அனுப்பிய வலிய தருமராசன், பாரில் ஒவ்வாத விறல் அபிமன் - பூமியிலே நிகரற்ற பராக்கிரமத்தையுடைய அபிமன்யு, உயிர் ஒழிந்தான் - உயிர் நீங்கினான், எனக்கேட்டு - என்று செவியுற்று, உள்ளம் உருகி - மனம் நைந்து, எமது ஆவிமகனே ! - எங்களது உயிர்போன்ற மகனே ! யாம் இனி எவ்வாறு உய்வோம் - நாங்கள் இனிமேல் எப்படி வாழ்வோம் ; சென்று - (நீ) போரினுக்குப்போய், இகலோர் செற்ற அ ஆறு - பகைவர்களையழித்த அந்த உபாயவகைகளை, இங்கு அடைந்து உரையாது - இவ்விடத்து (எங்களிடம்) வந்து சொல்லாது, விண் அடைந்தனை - வீரசுவர்க்கம் சேர்ந்தாயே ! (இது) அழகோ - நன்றாயிருக்கின்றதோ ? என்று அரற்றி வீழ்ந்தான் - என்று கதறிப்புலம்பித் தரையில் சாய்ந்தான் ; (எ. று.).

தருமன் சக்கரவியூகத்துக்கு வெளியே நின்றவனாதலால், 'கேட்டு' என்றார். ஆவிமகன் - உவமைத்தொகை. "இக்கணமங்கவர் சக்கரவியூகமதிகல் கெடவேகுக "என (செ :5) முன்னர் கூறியுள்ளனாதலின், இங்கு "ஏவும் அடல் உதிட்டிரன்" என்றது. (48)

49. வீமன்நகுலசகதேவர் புலம்புதல் கூறும்.

தந்தையுரைப் படிசென்று சக்கரத்தை
யுடைத்திகலைத் தடிந்த மைந்தா!
வந்துனக்குத் துணையாவான் வருங்காலை
யீசனருள் வரத்தால் என்னைச்
சிந்துபதி தடுத்திடலாற் சேர்ந்திலன்யான்
நீயிறந்த செயல்யா தென்றே
புந்தியழிந் தடல்வீமன் புலம்பினன் மத்
திரைசுதரும் புலம்ப மன்னோ.

(இ-ள்) தந்தை உரைப்படி சென்று - தருமன் சொன்ன படியே போய், சக்கரத்தை உடைத்து இகலைத் தடிந்த மைந்தா ! - சக்கரவியூகத்தைப் பிளந்து பகைவரையழித்த வலிய குமாரனே ! வந்து - (நீ போரிடும் முனைக்கு) வந்து, உனக்குத் துணையாவான் - [தனியனாய்ப் பலரொடும் போரிடும்[உனக்குத் துணையாகும்படி, வரும் காலை - நான் (படையொடு) வரும்போது, சிந்துபதி - சயத்திரதன், ஈசன் அருள் வரத்தால் - சிவபெருமான் [அவனுக்குக்] கொடுத்த வரபலத்தினால், என்னை தடுத்திடலால் - என்னைத்தடுத்தலால், யான் சேர்ந்திலன் – நான் உன்னோடு சேர வில்லை: (இது கிடப்ப) நீ இறந்த செயல் யாது ? - நீ இறந்த விதம் எப்படி ? என்று - என்று வினவி, அடல் வீமன் - வலிய வீமசேனன், (தன்னோடு) மத்திரை சுதரும் - நகுலசகதேவரும், புலம்ப - அழ, புந்தி அழிந்து - மதியிழந்து, புலம்பினன் அழுதான்: (எ. று.). மன் - ஓ - ஈற்றசை.

ஈசனருள் வரபலத்தால் தடுத்தலாவது - சிவபெருமானருளிய கொன்றைமாலையைச் சயத்திரதன் எறிந்து வீமனை அபிமனுக்கு உதவிசெய்ய வராதபடிதடுக்க, வீமன் அங்ஙனமே அம்மாலையைக் கடத்தற்கு அஞ்சி வெளிநின்றான் என்பதறிக. (49)

50. சூரியாத்தமனமும், இருதிறத்தாரும் தத்தம் பாசறை சேர்தலும்.

பொருதபிம ஞெருசிலைக்கே புறந்தந்தான்
பல்கால்தன் புதல்வ னென்னும்
பரிபவமீக் கூரநாணக் கடன்மூழ்கிப்
பரிதியுமேற் பவ்வ மூழ்க
குரைசெய்கடற் ருனையொடுங் குருமுதலோர்
வரப்பாடிக் குறுகிப் பின்னர்
வருசெய்கை யுணராதான் மகிழ்ந்திருந்தான்
தருமனும்போய் மன்னி ஞனல்.

(இ-ள்) பொருது - சண்டையிட்டு, அபிமன்—, ஒருசிலைக்கே - சிவனளித்த ஒரு வில்லின்பாணத்திற்கே, புறந்தந்தான் - (ஒரு தரம்) பின்னிடைந்தான்: (ஆனல்) தன் புதல்வன் - தனது மக ஞகிய கர்ணன், பல்கால் - பலதரம் (அபிமன்வில்லுக்குப் புறந் தந்தான்) என்னும் - என்கின்ற காரணத்தால், பரிபவம் மீக்கூர - அவமானம் தலைக்கேற, நாணக்கடல் மூழ்கி - வெட்கக்கடலில் ஆழ்ந்து, பரிதியும் - சூரியனும், மேல்பவ்வம் - மேற்குக்கடலில், மூழ்க - மறைந்து அத்தமிக்க, (அப்போது) குரு முதலோர் - துரோணன் முதலியவர், குரைசெய்கடல் தானையொடும் - ஒலிக் கின்ற சேனுசமுத்திரத்தோடும், வர - வந்து, பாடி குறுகி - (தமது) படைவீட்டினையடைந்து, பின்னர் வரு செய்கை உண ராதான் - பின்னுல் வரப்போகும் சோகநிகழ்ச்சியை யெண்ணிப் பாராமல், மகிழ்ந்திருந்தான் - களிப்புற்றிருந்தான்: [இஃது இங்ங ஞகை] தருமனும்—, போய் - தன்படைவீடுசென்று, மன்னினுன் - சேர்ந்தான்; (எ. று.).

சிவன்வில்லிற்குமட்டும் ஒருதரம் தோற்ருன் அபிமன்; என் மகன்கர்ணனே அபிமன் வில்லிற்கே பலதரம் புறந்தந்து தோற் ருனே என்று மிக்க அவமானம் அடைந்து மேலைத்திசையில் அத்தமித்தான் சூரியன் என்ருர்: இது ஏதுதற்குறிப்பேற்றவணி. ஒரு கடலில் முதலில் மூழ்கிப் பின் மற்றொரு கடலில் மூழ்கிஞ னென்பது நயம். நாணக்கடல் - உருவகம். மேற்பவ்வம் - மேலைக் கடல்: மேற்குத்திசையிலுள்ள கடல். பவ்வம் மூழ்குதல் - அத்த மித்தல். நாணம் மீக்கூர்ந்தார் தம்மை மறைத்துக்கொள்ளுதல் வழக்கு. கடல்தானை - உருவகம். வருசெய்கை - சயத்திரதன் மாண்டுபோதல் முதலியன. (50)

51. தருமனைத்தேற்ற வியாசமுனிவன் வருதல்.

வாரணமன் னவர்தேற்ற மனந்தெளியா
வுதிட்டிரன்றன் வருத்தந் தீர்ப்பான்
ஆரணஞ்சொன் முனியெய்தி யவர்கடன்கொண்
டாசிபுகன் றபிமன் வந்த
காரணமிவ் வளவேநீர் கலுழ்வதிலூ
தியமென்னூழ் கடந்தே யாயுட்
பூரணமாய் வாழ்ந்தவரியார் புரவலவென்
றிடநடுவன் புதல்வன் சொல்வான்.

(இ-ள்) வாரணம் அன்னவர் தேற்ற - யானைபோன்றதுணை வேந்தர் தேறுதல்கூறவும், மனம் தெளியா - உளந்தேருமலிருந்த, உதிட்டிரன் தன் வருத்தம் தீர்ப்பான் - தருமனது மனத்துயரத்தைப் போக்கும் பொருட்டு, ஆரணம் சொல் முனி எய்தி - வேதம் வகுத்த வியாசமுனிவன் வந்து, அவர் கடன் கொண்டு- அந்தப்பாண்டவரின் உபசாரங்களை யேற்றுக்கொண்டு, ஆசி புகன்று - ஆசிர்வாதமொழிகள் கூறி, 'அபிமன் வந்தகாரணம் இவ் அளவே - அபிமன் தோன்றிய காரணம் சக்கரவியூகத்தைப் பிளந்து தன் நிகரற்ற வீரத்தைக்காட்டிப் போகும் இவ்வளவே: (ஆதலின்) புரவல - அரசனே ! நீர் கலுழ்வதில் ஊதியம் என் ? - நீர் வருந்துவதில் பயன் என்ன ? ஊழ் கடந்து - (தமது) விதியை மீறி, ஆயுள் பூரணமாய் வாழ்ந்தவர் யார் ? - தமது வயதை முற்றிலும் வாழ்ந்துகாட்டியவர் எவருளர் ? (எவருமிலர்) என்றிட- என்றுசொல்லித்தேற்றமுயல, (அந்த வியாசனை நோக்கி), நடுவன் புதல்வன் - தருமபுத்திரன், சொல்வான் - கூறுவானாயினன் ; (எ. று.). தருமன் வினவியதை மேலைக்கவியிற்காண்க.

விதித்த ஆயுளையும் கடந்து மீறி வாழ்ந்தவர்யாருமிலர் ; ஆகவே மரித்தவன் பிழையான் என்று வியாசர் கூறித் தேற்ற முயன்றார் என்க. தெளியா - பெயரெச்சம். தீர்ப்பான் - வினையெச்சம் ; ஒருவனது ஆயுள்முடிவில் யமன் வந்தே தீருவன் என்கிற உண்மையை யறிந்தவனே தருமன் என்ற கருத்தைப் பெற வைக்க 'நடுவன் புதல்வன்' என்றார். இது கருத்துடையடைகொளியாகும். (51)

வேறு.

52-54. மூன்றுகவிகள் - ஒருதொடர் :— தருமனுக்கு வியாசன் மேற்கோள்காட்டித் தெளியவுபதேசித்துப் போதலைக் கூறும். நாரதர்கூறிய ஸ்வர்ணஷ்டீவியின் கதை, மருத்தன் முதலியோர் கதை இவற்றையெடுத்துக் கூறி வியாசர் தேற்றுதல்.

உலகுபுகழ் சுவணெட்டி யிறந்தே யுய்ந்தான்
 ஒருவருமின் றென்றனையென் றுரைப்பத் தூயோன்
இலகயிலோய்! மகவிலன்சிஞ் சயனும் வேந்தன்
 இசையாழ் நா ரதனருளா லேம நல்குங்
குலமகற்பெற் றவன்வாழ்நாள் ஏம நாளுங்
 கொடுக்குமொழி யோங்கிடலாற் குமரன் றன்னைச்
சிலரடைந்து கவர்ந்தவன்ற னகடு கீண்டு
 திரவியங்கண் டிலர்வீசித் திருடர் போனார்.

(இ - ள்) உலகு புகழ் சுவணெட்டி - உலகத்தாரால் புகழப்படுகின்ற ஸவர்ணஷ்டீவி யென்பவன், 'இறந்தே உய்ந்தான் - மரித்துப் பிழைத்தான்' : (அங்ஙனிருக்க), ஒருவரும் இன்று என்றனை - (நீர்) மரித்த ஒருவரும் பிழைத்ததில்லையென்று கூறினீர். (அஃது எப்படிப்பொருந்தும்) என்று உரைப்ப - என்று கேட்ப, (அதற்கு விளக்கமாக) தூயோன் - வியாசன் (கூறலானான்): இலகு அயிலோய் - விளங்குகின்ற வேலாயுதத்தையுடைய தருமனே! சிஞ்சயனும் வேந்தன் - ஸ்ருஞ்சயனென்னும் அரசன், மகவு இலன் - குழந்தையில்லாதிருந்தான். (பின்னர்) இசையாழ் நாரதன் அருளால் - சங்கீதத்தில் வல்ல யாழையுடைய நாரத முனிவர் கிருபையால், ஏமம் நல்கும் குலமகன் பெற்று - பொன் (தங்கம்) கொடுக்கின்ற ஒரு சிறந்த மகனைப் பெற்று, அவன் வாழ்நாள் - அந்த மகன் வாழ்ந்து வந்த நாளில், ஏமம் - தங்கத்தை, நாளும் - தினந்தோறும், கொடுக்கும் மொழி ஓங்கிடலால் - சுரந்து கொடுக்கும் வார்த்தை (வதந்தி) எங்கும் பரவியதால், குமரன் தன்னை - அந்த மகனை, திருடர் சிலர் அடைந்து - சில திருடர்கள் சேர்ந்து, கவர்ந்து - அவனை அபகரித்து, அவன் தன் அகடு கீண்டு - அவனுடைய வயிற்றினைக் கிழித்து (அதனுள்) திரவியங் கண்டிலர் - தங்கத்தைக் காணாதவராய் (ப்போகவே) வீசிப்போனார் - அவன் உடலத்தை வீசியெறிந்து சென்றார்கள் : (எ. று).

இங்கு அறியவேண்டிய விவரம் - ஸ்ருஞ்சயனென்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் சைப்யராஜனுக்கு மகன் : அவன் மகப்பேறற்றிருக்க, நாரத முனிவரருளால் நாடோறும் தன் தேகத்தினின்று தங்கம் உண்டாக்கித்தரும் பிள்ளையொருவனைப் பெற்றான். அதனால் அந்த மகனுக்கு 'ஸ்வர்ணஷ்டீவி' என்று பெயர். அவன் சரீரத்திலுற்பத்தியாகும் ஜலம் மலம் சளி வேர்வை இவைகளெல்லாம் தங்கமாக மாறும். அந்தக் குழந்தையின் வரப் பிரதானத்தினாலே அளவற்ற தனத்தை விருத்தி பண்ணுகையில், ஸ்ருஞ்சயராஜன் தான் இச்சித்த எல்லா வஸ்துவையும் தங்க மயமாகச் செய்வித்தான். இந்தக் குழந்தையின் சிறப்பு எங்கும் பரவவே, சில திருடர்கள் இந்தக் குழந்தை ஸ்வர்ணஷ்டீவியை யபகரித்துச் சென்று வயிற்றைக் கீறிப்பார்த்து அங்குத் திரவியங் காணாமையால், அவ்வுடலை வீசியெறிந்து போயினர் என்பது. (இதன் மேல் நடந்தவற்றை அடுத்த இரண்டு செய்யுட்களில் காணலாம்).

ஸ்வர்ணஷ்டீவி என்ற பெயர் சுவணெட்டி எனச்சிதைந்தது. இவன் முன் இறந்து பின் உயிர் பெற்றுப் பிழைத்தான். அந் நிகழ்ச்சி மாத்திரம் எப்படி விளைந்தது என்று தருமன் வியாசனைக் கேட்க அவர் இவன் வரலாற்றைக் கூறித்தெளிவித்தார். ஏமம் - பொன், தங்கம். கண்டிலர் போனார் முற்றெச்சம்.

இது முதல் பத்துக்கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும்' மற்றைய நான்கும் மாச்சீர் களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத் தங்கள். (52)

53. சோரரிகுத் தெறிபிணங்கண் டரற்றி வேந்தன்
சுதற்கீமக் கடனியற்றிச் சோர்த லோர்ந்து
நாரதன்வந் திறந்தவர்மீட் டுய்வ துண்டோ
நரேச! வற மகமெண்ணி னடத்தி மண்மேற்
சீருடன்வாழ்ந் திடுமருத்து சுகேந்திர னங்கன்
சிபிராமன் மாந்தாதா திலிபன் விந்தன்
ஆரிருந்தா ருருவுண்டே லழிவுண் டுள்ளத்
தணங்கொழிகென் றுரைத்தலுமவ் வரசன்
சொல்வான்.

(இ - ள்) சோரர் - திருடர்கள், இகுத்து - கொன்று, எறி பிணம் கண்டு - வீசியெறிந்த (மகனின்) பிணத்தைப் பார்த்து, அரற்றி - கதறியழுது, வேந்தன் - அரசனுகிய ஸ்ருஞ்சயன், அதற்கு - தன்மகன் ஸ்வர்ணஷ்டீவிக்கு, ஈமக்கடன் இயற்றி - இறுதிச்சடங்குகளைச் செய்து, சோர்தல் ஓர்ந்து - துயருறுதலைப் பா த்து, நாரதன் வந்து - நாரத முனிவன் (அவனிடம்) வந்து 'இறந்தவர் மீட்டு உய்வதுண்டோ ? - மரித்தவர் மறுபடியும் (உயிர்) பிழைப்பதும் உண்டோ ? (ஆகையால்) நரேச ! - அரசனே ! எண் இல் அறம் மகம் நடத்தி - அளவற்ற தருமயஜ் ஞங்களைச் செய்து, மண் மேல் சீருடன் வாழ்ந்திடு - இந்நில வுலகில் சிறப்புடன் வாழ்வாயாக. (மற்றும் கேள்) மருத்து — மருத்தன், சுகேந்திரன் - ஸுஹோத்ரன், அங்கன் - அங்கராஜன், சிபி - சிபி சக்கரவர்த்தி, ராமன் - இராமபிரான், மாந்தாதா—, திலிபன் - திலீபன். விந்தன் - சசிபிந்து, (இவர்களுள்) ஆர் இருந்தார் -மரித்தபின் உயிர்பிழைத்தவர் யார் ? (ஒருவருமிலர்) : (அதனுல்) உரு உண்டேல் அழிவு உண்டு - பிறப்புண்டேல் இறப்பு [நிச்சயம்] உண்டு : (மீண்டும் பிழைக்காது) .[எனவே] உள்ளத்து அணங்கு ஒழிக - மனத்துயரம் நீக்குக, என்று உரைத் தலும் - என்று கூறியதும், அ அரசன் சொல்லுவான் - அந்த ஸ்ருஞ்சயமன்னன் கூறுவான் ; (எ. று). மன்னன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

இந்தச் செய்யுளில், அறம் மகம் எண்ணில நடத்தி மண் மேல் சீருடன் வாழ்ந்து தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவர்ய மாகிய நான்கிலும் ஸ்ருஞ்சயனைக் காட்டிலும் மேன்மையுடைய வர்களும், அவனுடைய புத்திரனுகிய ஸ்வர்ணஷ்டீவியைக் காட்டிலும் மிக்க புண்ணியசாலியுமாயிருந்த மருத்தன் சுகேந்தி ரன் ஆதிய மன்னர்கள் எண்மர் வரலாற்றினைச்சுருங்க எடுத்துக் காட்டி ''அவர்களே மாண்டுபோயினர் : ஆதலின். ஸ்ருஞ்சுசய! விதிப்படி யாகஞ்செய்யாதவனும் தக்ஷிணைகளைக் கொடாதவனு மான உன்புத்திரனைக்குறித்து நீ பரிதாபப்படவேண்டாம்'' என்று நாரதர் கூறித்தேற்றுவித்தது ஈண்டு அறியவேண்டிய விவரம். அறம் மகம் நடத்துதலாவது - அன்னதானம், கோதானம், பூதானம், க்ஷேத்திரதானம், கன்னிகாதானம்,வெண்கலப்பாத்திரதா னம், இன்னோரன்ன தானங்களை முக்கியமாகப் பிராம்மணர்களுக்கு அபரிமிதமாகக்கொடுத்து மேலும் அதிமுக்கியமாகத் திருப்தி யாகும் வரையில் போஜனஞ் செய்வைத்துத் தக்ஷிணைகளால் திருப்திசெய்தல். உண்டோ, ஓ - எதிர்மறை. வாழ்ந்திடு, ஒழிக- முன்னிலைவியங்கோள். உருவுண்டேல் அழிவுண்டு - வேற்றுப் பொருள்வைப்பணியின் பாற்படும்.

[குறிப்பு : முதனூலின்படி நாரதர் ஸ்ருஞ்சயனுக்கு மேலும் பகீரதன், யயாதி, அம்பரீஷன், கயன், ரந்திதேவன், பரதன், பிருது, பரசுராமர் இவர்கள் கதையினையும் கூறித்தேற்றுவித்தான் என்பது பெறப்படும்]. ஸுஹோத்ரன், சசிபிந்து என்றபெயர்கள், சுகேந்திரன், விந்தன் என்று சிதைந்து வந்தன என்க. (53).

54. ஐயசுதன் கள்வர்கொல நரக மெய்தல்
அறமோவென் றுரைத்திடவு மருளாற் றூயோன்
வெய்யநர குறுமகன்மீட் டளித்துப் போனான்
வேந்துமகிழ்ந் துலகளித்தான் விளம்பும் மைந்தன்
வையமிசை புகழ்நிறுவிக் கதிசேர்ந் தானின்
மகனிகலோர்க் கடல்காட்டி வானஞ்சேர்ந்தான்
மெய்யிதுநீ யிரங்கேலென் றகன்றான் வியாதன்
விசயற்கென் புகல்வனென மெலிந்தான் வேந்தன்.

(இ-ள்) (நாரதரை நோக்கி) ஐய - பெரியோரே! கள்வர் கொல - திருடர்கள் கொன்றுபோட, நரகம் எய்தல் அறமோ ?- (என்மகன்) நரகத்திற்குப்போதல் தருமமாகுமா? என்று உரைத்திடவும் - என்று கேட்டிடவும், தூயோன் - நாரதமுனிவன், அருளால் - (தன்) கிருபையினால் வெய்ய நரகு உறும் மகன் - கொடிய நரகத்தில்சேர்ந்த ஸ்வர்ணஷ்டீவியை, மீட்டு அளித்துப் போனான் - (நரகினின்று) மீள்வித்து ஸ்ருஞ்சயனிடம் கொடுத்துச் சென்றான் : (பிறகு) வேந்து - ஸ்ருஞ்சயராஜன், மகிழ்ந்து உலகு அளித்தான் - சந்தோஷமாகப் பூவுலக ஆட்சி செய்தான்: விளம்பும் மைந்தன்-(தருமனே!) நீ கூறிய மைந்தன் ஸ்வர்ணஷ்டீவி, வையம் மிசை புகழ் நிறுவி-பூமியின் மீது புகழை நிலைபெறச் செய்து, கதி சேர்ந்தான்-நல்ல கதியை (சுவர்க்கத்தை) யடைந்தான் : [ஆகவே, அவனும் இறந்து உய்ந்தாலும் இறுதியில் பூரணமாய் வாழ்ந்தானில் லையே, அவனும் மறைந்தானன்றோ.] [இவன் கதை இப்படியாக] நின் மகன்-உன் குமாரனாகிய அபிமன்யு, இகலோர்க்கு அடல் காட்டி-பகைவர்க்குத் தன் வீரபராக்கிரமத்தைக் காட்டி நிரூபித்து, (இறுதியில்) வானம் சேர்ந்தான் - சுவர்க்கலோகத்தை யடைந்தான்: இது மெய்-இது உண்மையாகும்; நீ இரங்கேல்- நீமனம் வருந்தாதே, என்று-என்று கூறித் தேற்றி, வியாதன் அகன்றான் -

-வியாசமுனிவன் போயினுன்; (பிறகு) வேந்தன்—தருமன், விசயற்கு என் புகல்வன்-அருச்சுனனுக்கு என்ன சொல்லுவேன்?, என மெலிந்தான்-என்று தளர்ந்தான்; (எ.று)

ஸ்வர்ணஷ்டீவி முன் இறந்து பின் உயிர் பெற்றுனே என்று தருமன் கேட்ட விணுவிற்கு விடையிறுத்தபடி இச்செய்யுள். நாரதர் தமது அருளினுல் ஸ்வர்ணஷ்டீவியை மறுபடிஎழுப்பிக்கொடுத்தான்: அதனுல் உயிர் பிழைத்தாஞயினும் இறுதியில் அவனும் மாண்டு போயினவனே என்பதையுணரவைத்துத் தேற்றினுர் வியாசன் என்பதறிக. அபிமன் வானம் சேர்ந்தான் என்றவிடத்து-சந்திரனுடைய புத்திரஞன வர்ச்சஸினுடைய அம்சத்தினுல் அபிமன்யு பிறந்ததினுல் இவ்வாறு கூறப்பட்டது எனக்கொள்க. இரங்கேல்-முன்னிலை எதிர்மறையேவல். அறமோ, ஓ-விஞ, எதிர்மறை. (54)

55. பாசறை சேருமுன் ஸ்ரீகிருஷ்ணன் அருச்சுனனைக் கையில் ஆயுதமொன்றும் இல்லாதபடி செய்தல்.

தென்றிசையிற் றிகத்தனெடு மெதிர்ந்தோர் தம்மைத்
தென்றிசைக்குய்த் துறும்பாடிச் செல்லும் பார்த்தன்
தன்தனயன் பொன்றலுணர்ந் திட்டா லாவி
தன்படையா லொழிப்பனெனத் தனுமற் றெல்லாம்
ஒன்றுமிலா தெந்தையொழித் திட்டான் பார்த்தன்
உறுநெறியிற் றுன்னிமித்த முறுத னேக்கிக்
குன்றியுடல் அந்தியிற்செய் கடன்செய் துள்ளங்
குலைந்துயிர்நேர் நண்பனெடு கூறுவாஞல்.

(இ-ள்) தென்திசையில் - தெற்குத் திக்கில், திகத்தனேடு எதிர்ந்தோர் தம்மை-திரிகர்த்தராசனேடு கூடித் தன்னை எதிர்த்த சஞ்சத்தகரை, தென்திசைக்கு உய்த்து-யமதிசைக்கு அனுப்பி (கொன்று), (பின்னர்) உறும் பாடி செல்லும் பார்த்தன்-தான் தங்கியிருக்கும் படைவீட்டிற்குச் செல்லும் அருச்சுனன், தன் தனயன் பொன்றல் உணர்ந்திட்டால், - தன் மகனுகிய அபிமன் இறந்ததையறிந்திட்டால், ஆவி - தனது உயிரை, தன் படையால் ஒழிப்பன் என-தன் (கையிலுள்ள) ஆயுதத்தால் போக்கிக்கொள்வன் என்று, எந்தை-ஸ்ரீ கிருஷ்ணன், தனு மற்று எல்லாம் ஒன்றும் இலாது ஒழித்திட்டான்-வில் முதலாய எல்லா ஆயுதங்களையும் ஒன்றுகூட இல்லாதபடி தனியே பிரித்துவிட்டான்: (இப்படியாக) பார்த்தன் -

அருச்சுனன்,உறு நெறியில்-தான் வரும் வழியில், துன்னிமித்தம் உறுதல் நோக்கி-தீச்சகுனங்கள் உண்டாதலைப் பார்த்து, உடல் குன்றி-தேகம் மெலிந்து, அந்தியில் செய் கடன் செய்து-மாலைப் பொழுதில் செய்யவேண்டிய கடன்களைச் செய்து, உள்ளம் குலைந்து -மனம் நடுங்கி, உயிர் நேர் நண்பனோடு-தன் பிராண சிநேகிதனை ஸ்ரீகிருஷ்ணனோடு, கூறுவன்-சொல்லலானான்; (எ.று.) ஆல்-ஈற்றசை.

அருச்சுனன் பாசறையையணுகி அங்கு அபிமன் மரணத்தை. யறியும்பொழுது கையில் ஏதேனும் ஆயுதமுடையனாயிருந்தால் புத்திரசோகத்தைப் பொறுக்கமாட்டாமல் அவ்வாயுதத்தைக் கொண்டு தன்னைக் கொலைசெய்து கொள்ளக்கூடுமென்று முன்சாக் கிரதையாகக் கண்ணன் அவன் கைகளில் எந்த ஆயுதமுமில்லாதபடி ஒழித்தருளினனென்பதாம். "ஒளித்திட்டான்" எனவும் பாடம். தென் திசைக்குய்த்தல்—பிறிதினவிற்சி. பொன்றல், உறுதல்-தொழிற்பெயர். ஒழிப்பன் - தன்மையொருமை எதிர்கால வினைமுற்று. (55)

56. மங்களக் குறிகள் தோன்றாமைகண்டு, அருச்சுனன் கவன்று தருமன்முன் வந்து சேர்தல்.

ஓதமதி லொலித்திடுநம் பாடி யின்றே
ஓரிடத்துந் திகழ்விளக்கி னொளியு மின்றி
வேதவொலி கீதவொலி புகழ்வோ ரோதை
வெங்கரிமா வொலியியங்கள் விம்மு மோதை
ஏதுமிலா திருந்திடலா லெவர்க்கெத் தீங்கோ
என்செவியிற் கேட்குமுரை யென்னோ வென்று
மாதவனோ டுறையுளடைந் திரத நீங்கி
மன்னவர்சூழ் தருமனவை வந்து சேர்ந்தான்.

(இ-ள்) ஓதமதில் - சமுத்திரத்தைப் போல, ஒலித்திடும்-சப்திக் கின்ற, நம் பாடி-நமது பாசறை, இன்று-இன்றையதினம், ஓரிடத்தி லும்-ஓரிடத்திலேனும், திகழ் விளக்கின் ஒளியும் இன்றி பிரகாசிக் கின்ற தீபத்தின் ஒளியுமில்லாமல், (மற்றும்) வேத ஒலி-வேதகோஷம், கீதவொலி-பாடலின் ஒலி, புகழ்வோர் ஓதை-பாராட்டுபவர் பேச்சி னொலி, வெங்கரிமா ஒலி-கொடிய யானை குதிரையிவற்றின் பிளிறல் கனைப்பின் ஒலி, இயங்கள் விம்மும் ஓதை-வாச்சியங்கள் முழங்கும் பேரொலி, ஏதும் இலாது இருந்திடலால்-எதுவும் இல்லாது இருத்த

லால், எவர்க்குத் தீங்கோ - யாருக்காவது தீமை விளைந்திருக்குமோ? என் செவியில் கேட்கும் உரை என்னோ - என் காதால் கேட்கப் போகும் செய்தி வார்த்தை எதுவோ? என்று என்று-கூறிக்கொண்டு, மாதவனோடு - ஸ்ரீ கிருஷ்ணனோடு,உறையுள் அடைந்து-பாசறையுள் சேர்ந்து இரதம் நீங்கி-தேரினை விட்டு இறங்கி, மன்னவர் சூழ்- அரசர்கள் சூழ்ந்துள்ள, தருமன் அவை-தருமராசனது சபையிலே, வந்து சேர்ந்தான்—; (எ.று.)

மங்கலவொலியொன்றும் கேளாமையாலும், மற்றும் தீபவொளியும் இல்லாமையாலும் அருச்சுனன் மனங்கவன்றானென்க. புகழ்வோர்-சூதர், மாகதர் போன்றோர். தீங்கோ, என்னோ, ஓ-ஐயப் பொருளது. (56)

57. அபிமன் இறந்தமை கேட்டு அருச்சுனன் புலம்பி அரசரை வெகுளுதல்.

நித்தலுந்தன் எதிர்வருமா மகனைக் காணான்
நிருபரைப்பார்த் தபிமனெவ ணிகழ்த்து மென்ன
சித்திரமொத் தவரிருப்ப விமலன் விம்மிச்
செம்மலிறந் தனனெனவே திகைத்துப் பார்த்தன்
கைத்தலங்கொண் டெற்றிமுகத் தவனி வீழ்ந்து
கண்மணிநீ விண்ணடைதல் கண்டு மியாங்கள்
இத்தலத்தி லுறலழகே யினியுய்ந் தோமென்
றிரங்கிவெகுண் டரசர்தமை யிழித்துச் சொல்வான்.

(இ - ள்) நித்தலும் - தினந்தோறும், தன் எதிர் வரும் மா மகனைக் காணான் - தன்னெதிரிலே ஓடிவரும் சிறந்த குமாரனைக் காணாதவனாய், நிருபரைப் பார்த்து - அரசர்களைப் பார்த்து, அபிமன் எவண் - அபிமன் எவ்விடத்துள்ளான், நிகழ்த்தும் என்ன - சொல்லுங்கள் என்று வினவ, (அதற்கு) அவர் - அந்த அரசர்கள், சித்திரமொத்து இருப்ப - ஓவியம் போலப் பேசாது அசையாமலிருக்க, (அப்போது) விமலன் – தருமன், விம்மி - அழுது, செம்மல் - இறந்தனன் என - அபிமன் மாண்டு போயினான் என்று கூற, பார்த்தன் - அருச்சுனன், திகைத்து - மயங்கி, கைத்தலம் கொண்டு- தன் கைகளைக் கொண்டு, முகத்து எற்றி - முகத்தில் அறைந்து,

அவனி வீழ்ந்து - தரையில் (தளர்ந்து) விழுந்து, கண்மணி - கண்ணுள் மணி போன்றவனே ! நீ விண் அடைதல் கண்டும் - நீ வானுலகம் சேர்ந்ததைப் பார்த்தும், யாங்கள் - நாங்கள், இ தலத்தில் - இந்தப் பூமியில், உறல் - (உயிரோடு) இருத்தல், அழகே - அழகுதான் ! இனி உய்ந்தோம் - இனி பிழைத்தோம், என்று இரங்கி - என்று கதறிச்சோகித்து, (பின்னர்) அரசர்தமை வெகுண்டு - மன்னர்களைக் கோபித்து, இழித்துச் சொல்வான் - பழித்துப் பேசலானான்; (எ.று.)

அழகே, உய்ந்தோம் என்பன. பிறகுறிப்பு : அழகன்று, துஞ்சினேம் என்ற கருத்தைக்காட்டும். நிகழ்த்தும் - முன்னிலை வியங்கோள். கைத்தலம் - இருபெயரொட்டு. (57)

58. அருச்சுனன் அரசர்களைக் கோபித்துக் கொண்டமைகண்டு தருமன் கூறியது.

இத்தனைபே ரிருந்தளியா தபிமன் மாள
என்செய்தீர் அமர்பொருத தெங்கே சொன்மின்
அத்திரமென் கைச்சிலையென் குடையென் பூணென்
அரசரெனும் விறற்பெயரென் அழகுக்கோவென்
புத்திரனைச் செற்றவர்யார் என்ன யாரும்
புகலாம லிருப்பவறன் புதல்வன் சொல்வான்
வித்தகனே டகன்றபினீ தெவ்வர் யூகம்
வெலலரிதென் றபிமனையான் வெலவுய்த்தேனால்.

(இ - ள்) இத்தனைபேர் இருந்து - இவ்வளவு பேர்களும் அவனுடன் இருந்தும், அளியாது - காப்பாற்றாமல், அபிமன் மாள என் செய்தீர் - அபிமன் இறக்கும்படி என்ன செய்து கொண்டிருந்தீர். அமர் பொருத்து எங்கே - போரிட்டது எந்த விடத்தே, சொன்மின் - சொல்லுங்கள்; (உங்கட்கு) அத்திரம்என் - அம்பு எதற்கு ! கைச்சிலை என் - கையில் வில் எதற்கு ! குடை என் - கொற்றக்குடை எதற்கு ? பூண் என் - ஆபரணம் எதற்கு ? அரசர் எனும் விறல் பெயர் என் - மன்னர் என்ற சூரப்பெயர் எதற்கு ? அழகுக்கோ - வெறுஞ் சிறப்புக்கோ ? என் புத்திரனைச் செற்றவர் யார் ? - என் மகனைக் கொன்றவன் எவன் ? என்று - என்று வினவ. எவரும்-

யாரும், புகலாமல் இருப்ப - பதில் சொல்லாமல் வாளாவிருப்ப, (அப்போது) அறன் புதல்வன் - தரும புத்திரன், சொல்வான் - கூறினுன் ; நீ —, வித்தகனேடு அகன்ற பின் - கிருஷ்ணனேடு போரிடச் சென்ற பின், தெவ்வர் யூகம் வெலல் அரிது என்று - பகைவருடைய (சக்கர)வியூகத்தைச் செயித்தல் அரிதாகும் என்று எண்ணி, யான் - நான் தான், அபிமனே —, வெல - வென்று வரும்படி, உய்த்தேன் - அனுப்பினேன் ; (எ - று) ஆல் - ஈற்றசை.

அம்பு, வில், குடை, கழல், விருது ஆகியவை ஒரு பாலகனுயிரைக் காப்பாற்ருத அரசர்க்கு இருந்து என்னபயன்? வெறும் ஆடம்பர அணிகளோ என்று பழித்தான் அருச்சுனன் என்க. அபிமனது வீரத்தில் தருமனுக்கு எவ்வளவு உறுதியான நம்பிக்கையிருந்ததென்பது ஈற்றடியால் விளங்கும். சொன்மின் - முன்னிலேயே வற்பன்மை. 'என்' என்று ஐந்து முறை வினவியது நெஞ்சில் படுதற்கு என்க. அறன் புதல்வன் - நான்கனுருபு தொக்கது. (58)

59. தருமன் கூறிய உண்மையினைக்கேட்டு அருச்சுனன் தளர்ந்து வீழ்தல்.

சென்றணிசக் கரமுடைத்துட் புகுந்து வேந்தன்
சேய்முதற்பல் லரசர்சுதர் சேனை நூறித்
துன்றிரவி சுதன்குரவர் விற்றேர் பல்கால்
துணித்தோட்டித் துச்சனியைத் துணித்து மன்னுன்
தன்தண்டி லபிமனும்வீழ்ந் தனன்யாம் காப்பச்
சயத்திரதன் தடுத்திடலாற் றளர்ந்து நின்ருேம்
வென்றிலிரென் றிவரைவெறுத் தென்கொ லென்ன
வேரறுபா தவமெனமண் மீது வீழ்ந்தான்.

(இ - ள்) சென்று - அபிமன் போய், அணி சக்கரம் உடைத்து - சக்கரவியூகத்தைப்பிளந்து, உள் புகுந்து - அதனுள்ளே சென்று, வேந்தன் சேய் - துரியோதனன் மகனுகிய இலக்கணகுமாரன், முதல் பல் அரசர் சுதர் - முதலாகிய பல அரசகுமாரர்களையும், சேனை - படைகளையும், நூறி - அழித்து, துன்று இரவிசுதன் - நெருங்கிய கர்ணன், குரவர் - துரோணர் அசுவத்தாமன் போன்ருேர், (இவர்களுடைய) வில் தேர் பல்கால் துணித்து ஓட்டி - விற்களையும் தேர்களையும் பலதடவை சிதைத்து அவர்களைப் புறங்காட்டி

யோடச் செய்து, துச்சனியைத் துணித்தும் - துச்சனியை வெட்டி வீழ்த்தியும், (இறுதியில்) அன்னோன் தன் - அந்தத் துச்சனியின், தண்டில் - கதாயுதத்தினால் (அடிப்பட்டு), அபிமனும் வீழ்ந்தனன் - அபிமனும் இறந்து போயினான் : யாம் காப்ப - யாங்கள் (அவனைக்) காக்கச்செல்ல, (இடைவழியில்) சயத்திரதன் தடுத்திடலால் - சயத்திரதன் தடைசெய்தமையால், தளர்ந்து நின்றோம் -(அபிமனைக் காக்க முடியாமல்) சோர்ந்து நின்று விட்டோம் : (இது உண்மை ஆதலின்) இவரை - இந்த அரசர்களை, வென்றிலிர் என்று வெறுத்து - நீங்கள் (மகனைக் காவாது) தோற்றீர்களே என்று வெறுப்பதில், என்கொல் - என்னபயன் ?'' என்ன - என்று கூற (அதனைக் கேட்டு) வேர் அறு பாதவம் என - வேரற்றுச் சாயும் மரம் போல, மண்மீது வீழ்ந்தான் - பூமியின்மேல் விழுந்தான் (அருச்சுனன்) ; (எ.று.)

சயத்திரதன் தடைசெய்யாமலிருப்பானாயின் நாங்கள் காப்பாற்றியிருப்போம் என்பது /கருத்து. பாதவம் = பாதபம் : தாளால் நீரையுண்பது, மரம். புகுந்து, நூறி, ஓட்டி, துணித்து, வீழ்த்தனன் என முடியும். (59)

60. அருச்சுனன் சற்றே தெளிந்து புலம்பிக் கதறல்.

குறைந்தறிவு புலன்கலங்கி மதலை சோகக்
கொடு விடத்தாற் பொன்றினன்போற் குலைந்து வீழ்ந்து
நறுந்துளவோன் தருமனெடுத் தணைத்தங் காற்ற
நரன்தேற்றுத் தெளிநீர்போ னயனஞ் சற்றே
திறந்தபிமா ! வரசளிப்பை பகைவென் றென்றே
சிந்தித்த வெமையின்று நிந்தித் தேமண்
துறந்தும்பர் புகனன்றோ வமராற் றுண்மைச்
சொலவாரா யிதுவோ நின் றெந்த மந்தோ.

(இ-ள்) அறிவு குறைந்து - அறிவு தேய்ந்து, புலன் கலங்கி - அந்தக்கரணம் (மனம்) கலங்கி, மதலை சோகக் கொடு விடத்தால் - மகனையிழந்த துயரமாகிய கொடிய விஷத்தினால், பொன்றினன் போல் - (உயிரொடுங்கி) இறந்தவன்போல, குலைந்து வீழ்ந்து - நடுங்கித் தரையில் விழுந்து, நறுந்துளவோன் - வாசனை வீசும் திருத்துழாய் மாலையையுடைய கிருஷ்ணனும், தருமன் - தரும

ராசனும், எடுத்து அணைத்து அங்கு ஆற்ற - தூக்கியெடுத்துத் தழுவி அவ்விடத்து (அவனைத்) தேற்றுவிக்க, நரன் - அருச்சுனன், தேற்று தெளிநீர் போல் - தேற்றுங்கொட்டையால் தெளிந்த தண்ணீரைப் போலத் தெளிந்து, நயனம் சற்று திறந்து - கண்களைச் சிறிதே திறந்து, 'அபிமா! - அபிமனே !, பகை வென்று அரசு அளிப்பை என்று - பகைவர்களைச் செயித்து அரசாட்சியை (எங்கட்கு) வழங்குவாய் என்று, சிந்தித்த - எண்ணிக் கொண்டிருந்த, எமை - எங்களை, இன்று - இன்றைத்தினம், நிந்தித்து - அசட்டை செய்து இகழ்ந்து, மண் துறந்து - இந்தப் பூலோகத்தை விட்டு, உம்பர் புகல் நன்றே - வானுலகம் புகுதல் தகுதியோ ? அமர் - போரில், ஆற்று-நீ செய்த, ஆண்மை - வீரபராக்கிரமச்செயல்களை, சொல்- (எங்கட்குச்) சொல்லுதற்கு வாராய் : இதுவோ நின் தொந்தம் - இதுதானே நீ (எம்மோடு) கொண்ட சம்பந்தம் : அந்தோ - ஐயோ ? (எ. று.)

தேற்றுவிதை கலங்கல் நீரைத் தெளியச் செய்யும். தொந்தம் - தொடர்பு, சம்பந்தம். அந்தோ - அவலங்குறிக்கும் இடைச்சொல். சோகக் கொடுவிடம் –உருவகம். (60)

61. கிருஷ்ணன் நல்லறிவுகூறித்தெளிவித்தல்.

என்ன நரன் புலம்பவுடன் துணைவ ரேங்க

எழிலிவணன் அவர்தமைப்பார்த் திகலோர்வீட்டிப்

பொன்னுலகம் புகுந்தவொரு மதலைக் காகப்

புல்லறிவோர் போன்மயங்கிப் புலம்ப னன்றே

நன்னிலத்திற் சுகதுக்கஞ் சமமாய்க் கொண்டு

நளினமுநீ ரெனவாழ்தல் நல்லோர் கொள்கை

இன்னலொரீஇ மேற்செய்கை துணிதி ரென்றே

இடரொழித்தான் அரவின்வெகுண் டிசைப்பான் பார்த்தன்.

(இ-ள்) என்ன நரன் புலம்ப - என்று அருச்சுனன் அழ, உடன் துணைவர் ஏங்க - அவனுடன் பிறந்த சகோதரர்கள் வருந்த, (அப்போது) எழிலி வணன் - மேக நிறவண்ணனாகிய கிருஷ்ணன், அவர் தமைப் பார்த்து - அந்தப் பாண்டவரைப்பார்த்து, இகலோர் வீட்டி - பகைவர்களையழித்து, பொன் உலகம் புகுந்த ஒரு மதலைக்காக - சுவர்க்கலோகம் அடைந்த ஒரு குமரனுக்காக, புல்லறிவோர் போல் மயங்கி - அற்பபுத்தியுடையவரைப் போலக்

கலங்கி, புலம்பல் நன்ரே - அழுதல் தகுதியோ ? (தகுதியன்று): நன்னிலத்தில் - நல்ல பூமியில், சுகதுக்கம் சமமாய்க் கொண்டு - இன்பதுன்பங்களை ஒரு நிகராகப் பாவித்து, நளினமும் நீர் என வாழ்தல் - தாமரையும் தண்ணீரும் என்பதுபோல (ஒட்டாமல்) வாழ்ந்திருத்தல், நல்லோர் கொள்கை - சான்ரேருடைய கோட்பாடாகும் ; (ஆகவே) இன்னல் ஒரீஇ - துன்பத்தை நீக்கி. மேற் செய்கை - மேலே செய்யவேண்டிய காரியங்களை, துணிதிர் - செய்ய உறுதி கொள்ளுங்கள், என்று – என்று கூறித்தேற்றி, இடர் ஒழித்தான் - துயரத்தைப் போக்கிஞன் : (பிறகு) பார்த்தன் - அருச்சுனன், அரவின் வெகுண்டு - பாம்புபோற் சீறி, இசைப்பான் - கூறுவாஞயிஞன் ; (எ. று.). அவன் கூறியதை மேலைக் கவியிற் காண்க. தாமரையிலையில் தண்ணீர் இருந்தும் அது அதனேடு ஒட்டாமல் (சம்பந்தப்படாமல்) இருக்கும். அதுபோல ஒருவன் சுற்றத்தாரிடையே வாழ்ந்திருந்தும் அவர்களோடு ஒட்டற்று நிற்றல் (Detachment) வேண்டும். ஒரீஇ - ஒருவி : நீங்கி, அளபெடை அலகுபெறவில்லை. துணிதிர் - முன்னிலைப்பன்மையேவல். பொன்னுலகம் புகுதல் -மங்கலவழக்கு. (61)

வேறு.

62-64 - மூன்று கவிகள் — அடுத்தநாள் சூரியாஸ்தமனத்துக்குள் சயத்திரதனைக் கொல்வதாக அருச்சுனன்செய்யுஞ் சபதங்களைத் தெரிவிக்கும்.

இந்தமொழி கேட் டிடுமி னென் றனிம கன்போர்க்
குந்துதவி யாமவரை யுற்றெதிர்த டுத்த
சிந்துபதி சென்னிபரி திப்படுமு னூளை
சிந்திலனேல் வெந்தழலின் முந்தியுயிர் தீர்வன்.

(இ-ள்) 'இந்தமொழி கேட்டிடுமின் - (யான் கூறும்) இந்த வார்த்தைகளைக் கேளுங்கள். என் தனி மகன் போர்க்கு -என்குமரன் அபிமன்யு தனியொருவனுகச் செய்த போரினுக்கு, உந்து உதவி யாம் அவரை - உதவிசெய்ய வந்தவர்களை, உற்று - பொருந்தி, எதிர் தடுத்த - எதிர்த்துத் தடைசெய்த, சிந்துபதி சிந்து தேசராசனுன சயத்திரதனின், சென்னி - தலையை, நாளை - நாளைய தினம், பரிதிப்படுமுன் - சூரியன் அத்தமித்தற்கு முன்பு. சிந்திலனேல் -அறுத்து வீழ்த்தாமற் போனல், வெந்தழலில் - சொலிக்கின்ற அக்னியில், முந்தி -முற்பட்டுவீழ்ந்து, உயிர்தீர்வன் - உயிரைப் போக்கிக் கொள்வேன். (எ.று.)

சிந்துபதி கொன்றை மாலையிட்டுத் தடுத்தான் என்பது நினைக. கேட்டிடுமின் - முன்னிலைப்பன்மை வியங்கோள். தீர்வன் - தன்மை யொருமை வினைமுற்று.

இதுமுதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளங்காய்ச் சீர்களுமாகிய கலிவிருத் தங்கள், (62)

63. பரிந்தய லவர்த்தழீஇப் படுங்கருவ ழிக்க
மருந்துநுகர் வாரதைவ ழங்குவர ழைத்தே
விருந்தினில்வி டந்தனைவி ளைப்பவர்உ ளம்போற்
பொருந்துநரை வஞ்சனைபு ரிந்துயிர்வ தைப்பேன்.

(இ - ள்) பரிந்து - விரும்பிக் காதலித்து, அயலவர்த் தழீஇ -பிற ஆடவரைத் தழுவி, படும் - அப்புணர்ச்சியிலுண்டான, கரு - கருப்பத்தை அழிக்க - சிதைப்பதற்கு, மருந்து நுகர்வார் - (ஒருவகை) மருந்தினைச் சாப்பிடுவர்;- அதை வழங்குபவர் - அந்த மருந்தினை (அந்தப் பெண்டிர்க்கு)க் கொடுத்தவர்கள் : (மற்றும்) அழைத்து - வீட்டிற்கு வரும்படி யழைத்து, விருந்தினில் விடந்தனை விளைப்பவர் - தாமிட்ட விருந்துச் சோற்றில் விடங்கலந்து கொடுப் பவர்கள், (இவர்களது) உளம்போல் பொருந்துநரை -கொடிய வஞ்சக மனத்தையுடையவர்களை, [சயத்திரதனுள்ளிட்டகௌரவர்களை,] வஞ்சனை புரிந்து - (நான்) தந்திரமாகச் சூழ்ச்சி செய்து, வதைப் பேன் -கொன்றிடுவேன்; (எ று)

இச் செய்யுளிற் கூறியுள்ள பாதகச் செயல்களைப் படிக்கும் போதே உடலுள்ளம் அனைத்தும் நடுங்குகின்றன எனலாம். வஞ்சனை யாளரை வஞ்சனையாலேயே வதைப்பேன்: அஃது அறமேயாகும். என்றபடி. பொருந்துநர். ந்-பெயரிடைநிலை தழீஇ-தழுவி: சொல்லி சையளபெடை அலகு பெற்றது. (63)

64. பாவலர்த மிழ்க்குதவு பான்மையிலு லுத்தர்
கேவலமி ளைத்தவர்கெ டக்கருது கீழ்கள்
மேவளறில் யானுறுவன் மெய்ம்மையிது சிந்து
காவலனை நாளையமர் கண்டுவதை யேனேல்.

(இ-ள்) சிந்து காவலனை - சயத்திரதனை, நாளை அமர் - நாளைய போரில், கண்டு - எதிர்த்து, வதையேனேல் - கொல்லாமற் போவேனேயானால், - பாவலர் தமிழ்க்கு உதவும் பான்மையில் - புலவர்கள் படும் தமிழ்ப் பாடல்களுக்குக் கொடுக்கும் தன்மையில், உலுத்தர் - உலோபஞ்செய்பவர்கள், (மற்றும்) கேவலம் இளைத்தவர் கெட - முற்றிலும் மெலிந்து போனவர்கள் (மேலும்) கெட்டுப் போகும்படி, கருதும் - நினைக்கின்ற, கீழ்கள் - கயவர்கள், (இவர்கள்) மேவு - பொருந்தி வீழும், அளறில் - நரகத்தில், யான் உறுவன் - நானும் கீழ் - கீழ்மக் வீழ்வேன் : இது மெய்ம்மை - இது சத்தியம் ; (எ.று.)

தமிழ்ப் புலவர்களுக்குக் கொடுக்குந் தன்மையில் இவறுதல் செய்யும் உலோபிகள், வாடிய மெலிந்தவரை மேலும் வாட்டும் கயவர்கள் இவர்கள் நிச்சயம் நரகத்தில் வீழ்வர் என்றபடி, அந்த நகரத்தில் நானும் வீழ்வேன் என்கிருன் அருச்சுனன். அளறு - நரகம் : அளறு நிறைந்துள்ள நரகு 'அளறு' என்றே கூறப்பட்டது. கீழ் - கீழ்மக்கட்குப் பண்பாகுபெயர். (64)

65. வஞ்சினம் கூறிய அருச்சுனன் நாணொலியெழுப்பிச் சங்கநாதஞ் செய்தல்,

என்றுநரன் வஞ்சினமி யாவருந டுங்க
மன்றிடைபு கன்றருகின் மன்னுவர ளித்த
தன்றனுவ ளைத்தமரர் தான்வெருவ தூரி
யின்றெனிப டுத்திவளை மின்றெனியெ டுத்தான்.

(இ - ள்) என்று நரன் - என்று அருச்சுனன், (இவ்வாறு) வஞ்சினம் - சபதவார்த்தைகளை, யாவரும் நடுங்க - அனைவரும் நடுங்கும்படி, மன்றிடை புகன்று - சபையிலே சொல்லி, அருகில் மன்னுவர் அளித்த தனு - பக்கத்தில் இருந்தவர்கள் கொடுத்த வில்லினை, வளைத்து - வணக்கி, அமரர்தான் வெருவ - தேவர்களும் அஞ்சும்படி, தூரியின் தொனி படுத்தி - பறையின் சப்தம் போல நாணொலி யெழுப்பி, வளைமின் தொனி எடுத்தான் - சங்கினின்று ஒளிரும் நாதத்தை யெழுப்பினான் (சங்கு ஊதினான்) : (எ. று)

சங்கு ஊதியது போரினைத் தொடங்குவதற்கு அனைவரையும் சித்தமாக்குதற்கு என்க. தன் தனு - காண்டீபம். தூரி - தூரியம்: பறை, முரசு. இன் - உவமவுருபு. (65)

66. அனைவரும் சங்கநாதம் செய்ய அமரர் அருச்சுனன் சபதம் நிச்சயம் வெற்றிபெறும் என்று களித்தல்.

கொற்றவரி பாஞ்சசனி யத்தொனிகு றித்தான்
மற்றரசர் செம்பவள வாயில்வளை வைத்தார்
உற்றவொலி யாலமர ருட்கிவிசை யன்செய்
வெற்றிசப தங்கொலென விட்டனர்க ளையம்.

(இ - ள்) கொற்றம் அரி - வெற்றியையுடைய கிருஷ்ணன். பாஞ்சசனியத்தொனி - (தனது) பாஞ்சசனியத்தினின்று பேரொலியை, குறித்தான் - எழுப்பினான்: மற்று அரசர் - ஏனைய வேந்தர்கள், செம் பவளம் வாயில் - தமது சிவந்த பவழம் போன்ற வாயினால், வளை வைத்தார் - தத்தம் சங்குகளை ஊதினர்: (அதனால்) உற்ற ஒலியால் - எழுந்த பேரோசையால், அமரர் உட்கி - தேவர்கள் நடுங்கி, விசையன் செய் சபதம் வெற்றி - அருச்சுனன் செய்த வஞ்சினம் [நன்கு] வெற்றியோடு நிறைவேறும், என - என்று, ஐயம் விட்டனர் (தங்கள்) சந்தேகம் தீர்ந்தனர்; (எ. று) கொல் - அசை.

சங்கத் தொனி கேட்டவுடனே தேவர்கள் விசயன் சபதம் முற்றும் நிறைவேறும் என்று ஐயமறத் தெளிந்தனர் எனப் பின் வரும்விளைவினை முன்னரே குறித்தபடியெனக் கொள்க. கிருஷ்ணன் "பாரதத்துக் கந்தார் களிற்றுக் கழன்மன்னர் கலங்கச் சங்கம் வாய் வைத்தான்" என்ருர் திருமங்கையாழ்வாரும். விசயன் - விசையன் இடைப்போலி. (66)

வேறு.

67. கிருஷ்ணன் தருமனைத்தேற்றுதல்.

அடிபணிந் துதிட்டிரன் அனுசன் வஞ்சினம்
முடிவுரு தழற்புகின் முகுந்த ! நால்வரும்
உடனிறந் திடுவமென் றுளைய மன்னநீ
இடருறேல் வேறுமென் றெந்தை தேற்றினான்.

(இ - ள்) அடிபணிந்து - திருவடிகளை வணங்கி, உதிட்டிரன் - தருமபுத்திரன், முகுந்த! - ஸ்ரீ கிருஷ்ணனே! அனுசன் - என் தம்பியாகிய அருச்சுனன், வஞ்சினம் முடிவுருது அழல் புகின் - சபதம்

நிறைவேருதுஅக்னிப்பிரவேசஞ்செய்யின், நால்வரும்- நாங்கள் நான்கு பேரும், உடன் இறந்திடுவம் - கூடவே இறந்துபோவோம் -என்று, என்று கூறி, உளைய - வருந்த, (அப்போது) எந்தை - எம்பெருமாணுகிய ஸ்ரீ கிருஷ்ணன், மன்ன! - தருமராசனே! நீ இடர் உறேல் - நீ துன்பப்படாதே : வேறும் - (அருச்சுனன் - நிச்சயமாக) வெல்வன் என்று - என்று சொல்லி, தேற்றினுன் - தெளிவித்தான்; (எ. று) இதனுல் பாண்டவர் ஐவரும் உடல் வேறு உயிரொன்று என்னும்படி அந்நியோந்நியமாயிருப்பவரென்பது விளங்கும். நால்வரும் - தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. 'நால்வேமும்' என்றிருப்பின், வழாநிலையாம்.

இது முதல் ஏழு கவிகள் - பெரும்பாலும் மூன்ருஞ் சீரொன்றுமாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (67)

68. சயத்திரதன் அருச்சுனனின் வஞ்சினம் கேள்வியுற்றுத் துயருறுதல்.

ஒற்றினு மார்ப்பினும் உணர்ந்த சிந்துவேந்
துற்றவெந் துயரொடு முயிர்ப்ப வோடியே
கொற்றவ ரரசுழி குறுகிப் பற்குனன்
சொற்றிடு சபதமுஞ் சொல்லிச் சொல்லுவான்.

(இ - ள்) ஒற்றினும் - ஒற்றர்களாலும், ஆர்ப்பினும்-ஆரவாரத்தினுலும், உணர்ந்த - அறிந்த, சிந்துவேந்து - சயத்திரதன், உற்ற வெம் துயரொடு பொருந்தியமிக்க துன்பத்தோடு, உயிர்ப்ப-பெருமூச்சு விட்டு, ஓடி - விரைந்து, கொற்றவர் அரசு உழி குறுகி- அரசர்க்கரசனுகிய துரியோதனனிடத்துச் சென்று, பற்குனன் சொற்றிடு சபதமும் - அருச்சுனன் சொன்ன சபதவார்த்தைகளையும், சொல்லி - கூறி, (மேலும்) சொல்லுவான் - (தான்) கூறுவான்; (எ. று) அவன் கூறியதை மேலேக்கவியிற் காண்க. ஆர்ப்பு-சங்கநாதம் முதலியன (68)

69. துரியோதனன் சயத்திரதனைத் தேற்றிக் கூறுதல்.

தப்புரு னரன்மொழி சபத முற்றிடும்
எப்படி பிழைப்பனெங் கேகு வேனெனச்
செப்பிய மைத்துனன் சிந்தை தேற்றிவேந்
தப்பொழு தருகுறு மவர்கட் கோதுவான்.

(இ - ள்) நரன் மொழி தப்புருன் - அருச்சுனன் கூறிய வஞ்சின வார்த்தைகளைத் தவருது நிறைவேற்றுவான் : சபதம் முற்றிடும் - அவன் செய்த சபதம் வெற்றியாய் முடிந்திடும்: (ஆகையால்) எப்படி பிழைப்பன் - எப்படி உயிர் தப்புவேன்: எங்கு ஏகுவேன் - எங்குப் போவேன், என - என்று, செப்பிய மைத்துனன் - சொன்ன சயத்திரதனின்,சிந்தை தேற்றி - மனத்தைத் தெளிவித்து, வேந்து - துரியோதனன், அப்பொழுது - அந்தச் சமயத்தில், அருகு உறும் அவர்கட்கு - பக்கத்தில் இருக்கும் அரசர்க்கு, ஓதுவான் - கூறுவான்; (.எ.று.) அவன் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

தன் தங்கை துச்சளையின் கணவனுதலின், சயத்திரதனை "மைத்துனன்" என்றது (69)

70. துரியோதனன் துணையரசரை நோக்கிக் கூறியது.

நாளைமேற் றிசையினன் நண்ணு மட்டுநீர்
ஆளிநேர் சிந்துவேந் தளிக்க வல்லிரேல்
தூளழற் புகுநரன் துணைவர் மாய்வார்
மூளம ரிலைபுவி முற்றும் நம்மதே.

(இ - ள்) நாளை - நாளையதினம், இனன் - சூரியன் , மேல் திசை - மேற்குத்திக்கினை, நண்ணும் மட்டும் - சேரும் வரையில் (அத்தமனமாகும் வரையில்), நீர் - நீங்கள், ஆளி நேர் - சிங்கத்தை யொத்த. சிந்து வேந்து - சயத்திரதனை, அளிக்க வல்லிரேல் - காப்பாற்றச் சக்தியுடையீராளுல், நரன் - அர்ச்சுனன், தூள் அழல் புகும் - தூள்படுத்தும் நெருப்பில் மூழ்குவன்; (அவனிறக்கவே அதனைத் தாங்கமாட்டாமல்) துணைவர் - அவன் சகோதரர்களாகிய ஏனைய நால்வரும், மாய்வார் - இறந்துபோவார்கள்: (அப்போது) மூள் அமர் இலை - மூண்டு செய்யும் இந்தப் போர் இல்லையாகும்; (அதனுல்) புவி முற்றும் - நிலவுலகம் முழுவதும், நம்மது - நம் வசமாகும்; (எ.று,)

தூள்படுதலாவது - முற்றும் அழிதல். புகும் - செய்யுமென் வினைமுற்று. (70)

71. அனைவரும் சயத்திரதனைக்காக்கச் சம்மதித்தல்.

என்றர சுரைத்திட இரவி நந்தனன்
வென்றிகொ ளாரியர் வேந்த ரியாவரும்
நன்றிது செய்குதும் நரேச ! என்றகஞ்
சென்றனர் ஒற்றராற் றெரிந்த செங்கண்மால்.

(இ - ள்) என்று அரசு உரைத்திட - என்று துரியோதன ராசன் கூற, இரவி நந்தனன் - கர்ணன், வென்றி கொள் ஆரியர் - வெற்றியைப் பெறும் துரோணர், வேந்தர் - துணையரசர்கள், யாவரும் - எல்லோரும், நரேச!- அரசனே! இது நன்று - நீர் சொல்லுவது நல்ல உபாயம் : செய்குதும் - அப்படியே செய்வோம்; என்று-என்று கூறி, அகம் சென்றனர் - படைவீட்டினுள் போயினர்: (பிறகு) ஒற்றரால் - வேவுகாரர்களால், தெரிந்த - (விஷயத்தை) அறிந்த, செங்கண் மால் - அழகிய கண்களையுடைய கிருஷ்ணன்; (எ.று-)

செய்குதும் - தன்மைப்பன்மைவினைமுற்று. (71)

72. அருச்சுனன் யாவர் காக்கினும் சயத்திரதனை நாளை தினம் தவருமல் கொல்வேனெனல்.

பஞ்சவர்க் கவையெலாம் பகர்ந்து பற்குனன்
வஞ்சின முடித்திட வல்ல மோவென
அஞ்சன வண்ண ! நின் னருளுண் டாதலால்
வஞ்சகற் றுணிப்பன்யார் வந்து காக்கினும்.

(இ - ள்) பஞ்சவர்க்கு - பாண்டவர்க்கு, அவை எலாம் பகர்ந்து - [கிருஷ்ணன் ஒற்றரால்] அறிந்தவற்றையெல்லாம் சொல்லி, பற்குனன் - அருச்சுனன், வஞ்சினம் முடித்திட வல்லமோ? என - (தான் செய்த) சபதத்தை நிறைவேற்றவல்லனோ? என்று வினவ, (அதற்கு அர்ச்சுனன்) அஞ்சன வண்ண!- மைபோல் கறுத்தநிற முடைய கிருஷ்ணா!, நின் அருளுண்டு - உனது கிருபை (எனக்கு) உளது; ஆதலால்—, யார் வந்து காக்கினும் - யார் வந்து பாது காப்பாருனாலும், வஞ்சகன் துணிப்பன் -சயத்திரதனையொழிப்பேன்; (எ.று.)

கண்ணனருள் இருப்பதால் நிச்சயம் சபதம் நிறைவேறும் என்ற உறுதி பாராட்டத்தக்கது. காத்தல் - தடுத்தல் எனினுமாம்: "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்ற விடத்துப் போல. (72)

73. கிருஷ்ணன் அருச்சுனனோடு சுபத்திரையிடம் வருதல்.

என்னடற் காண்டியென் றியம்பப் பற்குனன்
தன்னுரை தகுமெனத் தரும னாதியோர்
மன்னுழி மன்னிட விடுத்து மானரன்
தன்னொடு சேய்க்கழுந் தங்கை பாற்புகா.

(இ - ள்) என் அடல் காண்டி என்று பற்குனன் இயம்ப- 'என் பராக்கிரமத்தைக் காணுங்கள்(என்று அர்ச்சுனன் கூறி முடிக்க, தன் உரை தகும் - அவன் சொன்ன சபதவார்த்தை நிறைவேறும், என - என்று, தருமன் ஆதியோர் மன்னுழி - தருமன் முதலியோர் [தங்களிடத்தில்) தங்கியிருப்ப, மன் இடம் விடுத்து- தருமனிடத்தினின்று நீங்கி, மால் - கிருஷ்ணன், நரன் தன்னொடு- அர்ச்சுனனோடு, சேய்க்கு அழும் - தன் மகனை அபிமனிறந் தமைக்கு அழுகின்ற, தங்கைபால் - சுபத்திரையினிடத்து, புகா - வந்து சேர்ந்து; (எ.று.).

தகும் - அங்கீகாரப் பொருளையுணர்த்தும். காண்டி - முன்னிலை வியங்கோள். (73)

வேறு.

சுபத்திரை புலம்பல்.

74. முன்னோனை நோக்கி யண்ணாவெ னக்கைம்
முறியாவி ழுந்துன் மருகன்
ஒன்னாரை யட்ட வடலாண்மை வந்திங்
கறையாம னம்மை யொருவா

பொன்னுட டைந்த தறனேகொ லைவர்
புவியாள வைப்ப தினியார்
என்னுவியுய்வ தழகன்று மைந்த
னிடனண்ண லெற்கு முறையே.

(இ - ள்) முன்னேனை நோக்கி - தமையனுகிய கிருஷ்ணனைப் பார்த்து, (சுபத்திரை) அண்ணு! என - என்று கதறி, கை முறியா விழுந்து - கைகளை நெரித்துக் கீழே விழுந்து, 'உன் மருமகன் - உனது மருமகனுகிய அபிமன், ஒன்னுரை அட்ட - பகைவர்களை யழித்த, அடல் ஆண்மை வந்து இங்கு அறையாமல் - மிக்க பராக்கிரமத்தை இங்கு நம்மிடம் வந்து சொல்லாமல், நம்மை ஒருவா - நம்மை விட்டுநீங்கி, பொன் நாடு அடைந்தது - வானுலகு சேர்ந்தது, அறனே கொல் - தருமமாகுமா? (ஆகாதே) : இனி - இனிமேல், ஐவர் புவிஆள வைப்பது யார் - பஞ்சவரை உலகாளும்படி வைப்பவர் யாருளர்? (எவருமிலர்) என் ஆவி உய்வது அழகன்று - என் உயிர் வாழ்வது நன்ருகாது: (ஆகவே) மைந்தன் இடன் நண்ணல்- (என்) மகனிருக்கும் வானுலக இடத்திற்குச் செல்லுதல், எற்கு - எனக்கு, முறை - தகுதியாகும்; (எ. று.)

இறந்த என் மகன் சென்ற இடத்திற்குச் செல்லுதல் தாயான எனக்கும் முறையாகும் என்று சுபத்திரை புலம்பினுளென்க. கைம் முறித்தல் - துன்பத்தினுல். ஒருவுதல் - விட்டு நீங்குதல்; பொன்னுடடைந்தது - மங்கல வழக்கு. அறனே, ஏ - வினு, கொல் - அசை. ஐவர் - தொகைக்குறிப்பு. நண்ணல் - தொழிற்பெயர்.

இதுமுதல் ஆறுகவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ் சீர்கள் காய்ச்சீர்களும், ஏனைய நான்கும் மாச்சீர்களுமாகிவந்த கழி நெடிலடி நான்கு கொண்ட எழுசீராசிரிய விருத்தங்கள். (74)

75. கலுழும் பெண்டிரைக் கிருஷ்ணன் தேற்றுதல்.

என்றேசு பத்திரை யெனுமாத ரற்ற
எரிதந்த பாவை கலுழ
இன்றேயி றப்ப னெனமச்ச நாட
னெழில்கோதை விம்ம விகலைக்

கொன்றேயி றந்த வரசர்க்க லாமை
குலமாதர் கொள்கை யெனமால்
நின்ருற்றி மீண்டு நரனேடு கங்குல்
நீள்சோலை யுற்று மொழிவான்.

(இ-ள்) என்று—, சுபத்திரை எனும் மாது அரற்ற - சுபத்திரை யென்பவள் கதறியழ, (அவளோடு) எரிதந்த பாவை - யாகாக்னியில் வந்த திரௌபதி, கலுழ - அழ, (அப்போது) மச்சநாடன் எழிற் கோதை - விராடராசனின் மகளாகிய அழகிய உத்தரை, இன்றே இறப்பன் என - இப்போதே உடனிறக்கப்போகிறேன் என்று கூறி, விம்ம - அழ, (அது கண்டு) மால் - கிருஷ்ணன், இகலைக் கொன்று - பகைவர்களைக் கொன்று, இறந்த - (அவர்களோடு செய்த போரில்) மாண்ட, அரசர்க்கு - மன்னர்களின் பொருட்டாக, அலாமை - ஏற்காது : (எது எனில்) குலமாதர் கொள்கை - குலப்பெண்டிர் (கடைப்பிடிக்க வேண்டிய) கோட்பாடு: (கணவனேடு உடனிறத்தல் என்பது) என - என்று கூறி, நின்று ஆற்றி - நிதானமாக (அம் மூவர் பெண்டிரையும்) தேற்றுவித்து, நரனேடு மீண்டு - அருச்சுனனேடு திரும்பி வந்து, கங்குல் நீள்சோலை உற்று - இராப் போதில் நீண்டதோர் சோலையையடைந்து, மொழிவான் - கூறுவாளுயினன்; (எ.று.). கிருஷ்ணன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

உத்தரை - அபிமனின் மனைவி : 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே' யாதலின், கணவனிறப்ப அப்பெண்டிர் தாமும் உடனிறப்பர் என்பது கொள்கையாயினும், அக் கொள்கை போரில் பகைவரைக் கொன்று தாமும் இறந்துபட்ட வீரர்களின் மனைவியர்க்கு ஏலாது என்று க்ஷத்திரியர்க்குரிய தருமத்தினை யெடுத்துக்காட்டி உடனிறத்தலைத் தவிர்த்துத் தேற்றுவித்தான் கிருஷ்ணன் என்பது அறியவேண்டுவது கோதை - மாலை ; மாலை போன்ருளுக்கு உவமவாகுபெயர். அலாமை - பொருந்தாமை, இல்லையாதல். அரற்ற, கலுழ, விம்ம என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'என ஆற்றி' என்பதோடு முடியும். இச்செய்யுளில் அரசர் குல மாதர்க்கு ஏற்ற கொள்கை வேறுபடக்காட்டியபடியால், அந்தந்த வருணங்களுக்கேற்பக் கொள்கைகளும் (தருமங்களும்) வேறுபடும் என்பது பெறவைக்கப்பட்டது என உணரவேண்டுவது. (75)

76. சிவனும்யானும் ஒருவரேயாதலின், என்னைப்பூசை புரியென்று கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சொல்ல, அவனும் அப்படியேசெய்து பின் குசையால் அமைத்த படுக்கையில் துயிலுதல்.

அரன்யானு மொன்ற தறிவிப்ப நின்னை
யயர்பூசை செய்தென் முடிமீ
தொருபூகு றித்தி யெனவந்த வண்ண
முரவோனி யற்ற மகிழா
விரிசோலை நீங்கிக் குசைகொண்டு வேய்ந்த
விரைமன்ற லுற்று மலர்சாந்
தொருநான்கு திக்கு முயத்தங்க னந்த
லுக்குள்ளி ருத்தி நரனை.

(இ-ள்) அரன் யானும் ஒன்று - சிவனும் (கிருஷ்ணனாகிய) நானும் ஒருவரேயாவாம்: அது நின்னை அறிவிப்ப - அந்த வுண்மையை உனக்கு அறிவிறுத்தற்கு,- அயர்பூசை செய்து - (சிவனைத்தியானித்து அவருக்குச்) செய்யவேண்டிய வந்தனையைச் செய்து, என் முடி மீது - என்னுடைய சிரசின்மீது, ஒரு பூ குறித்தி என - ஒரு புஷ்பத்தைச் சமர்ப்பிப்பாயாக என்றுகூற, அந்த வண்ணம் - அந்தப்படியே, உரவோன் இயற்ற - அருச்சுனன் செய்ய, மகிழா - சந்தோஷித்து, (பின்னர்) விரி சோலை நீங்கி - பரந்த சோலையிடத்தை விட்டு, குசை கொண்டு வேய்ந்த - தருப் பங்களைக் கொண்டு பரப்பிய, மலர் சாந்து விரை மன்றல் உற்று - புஷ்பங்கள் சந்தனம் சந்தம் இவைகளால் (மங்களகரமாக) அலங் கரிக்கப்பட்ட படுக்கையை அமைத்துக் கிட்டி, (பிறகு) ஒரு நான்கு திக்கும் உய - நான்கு திசையிலுள்ள உலகத்தாரனைவரும் இளைப் பாறியீடேறும்படி, தங்கு – ஏற்பட்டுள்ள, அனந்தலுக்குள் - தூக்கத் திற்குள், நரனை இருத்தி - அருச்சுனனை யாழ்த்தி; (தூங்கவைத்து); (எ.று.) "காப்ப வைத்து வந்து" என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும் - இதனுல் **'அரியும் அரனும் ஒன்று'** என்ற **அபேதசித்தாந்தம் விளக்கப்பட்டது.** சிவபிரானுக்கு அந்த ராத்மாவாக வுள்ளவனும் ஸ்ரீமந்நாராயணனே என்ற தத்துவம் குறிக்கப்பட்டதென உரைப்பர்: "சிவனுயனுய்", "முனியே நான்முகனே முக்கண்ணப்பா", "அவாவறச்சூழ் அரியையயனைய ரனையலற்றி" என்ற ஆழ்வார் அருளிச்செயலுங் காண்க. மன்றல் -

படுக்கை 'நால் குதிக்கும் உய்யத் தங்கும் அனந்தல்'' என்றது என்னையெனில், களைப்பு, இளைப்பு, ஆயாசம், சோகம் அனைத்தையும் தூக்கம் மறக்கச் செய்து மறைத்தலாதலின் என்க.',

''Sleep is a gentle thing, Beloved from Pole to Pole'' என்றதை நினைக. (76)

77. கிருஷ்ணன் தன் தேர்ச்சாரதியை நோக்கிக் கூறுதல்.

சிலராயு தங்க ளொடுகாப்ப வைத்தோர்
திடர்நேடி வந்து திருமால்
மலர்மன் றல் வைகு வருதார கற்கு
வலிபார்த்த னோது சபதம்
உலகோரின் முற்ற லரிதாகும் தானை
யுரவோனி ளைக்கி லமர்யான்
மலைவானி மைப்பின் மணிதேரொ டங்கென்
வளையோசை கேட்கின் வருதி.

(இ-ள்) சிலர் ஆயுதங்களொடு காப்ப வைத்து - சில வீரர்களைப் படைகளோடு (அருச்சுனனைப்) பாதுகாக்கும்படி நிறுத்தி, திருமால் - கிருஷ்ணன், ஓர் திடர் நேடி வந்து - ஒரு மேட்டு இடத்தைத் தேடி வந்து, (அந்தத்திடரில் தனக்கென அமைத்த) மலர் மன்றல் - பூக்களாலான படுக்கையில், வைகி - தங்கித் துயின்று, (பின்பு) வரு - தம்மிடம் வந்த, தாரகற்கு - தன் தேர்ச்சாரதிக்கு, 'வலி பார்த்தன் - வலிமையுள்ள அருச்சுனன், ஓது சபதம் - கூறிய வஞ்சினம், உலகோரின் - பூலோகத்தரசரின் சகாயத்தால், முற்றல் அரிதாகும் - நிறைவேறுதலென்பது சாத்தியமாகாது ; (ஆகவே) தானை – சேனையிடத்து, உரவோன்-அருச்சுனன், இளைக்கில் - சோர்வானால், அமர் - அப்போரினில், யான் - நான், மலைவான் - போரிடும்படி, இமைப்பின் - ஒரு நொடிப் பொழுதில், மணி தேரொடு - அழகிய மணிகள் கட்டிய (என்) தேரோடு, அங்கு -அந்தக்களத்திடத்து, என் வளை ஓசை கேட்கின் - என்னுடைய பாஞ்சசன்னியத்தின் கோஷத்தைக் கேட்பாயாயின், (உடனே) வருதி - வருவாயாக ; (எ. று.)

''ஆயுதபாணிகளான வாயில் காப்பவர்களை ரக்ஷகர்களாக வைத்துவிட்டுத் தாருகனால் பின் தொடரப் பெற்றுத் தன் சேனை

தங்கியிருக்குமிடம் சென்ருர் கிருஷ்ணன் என்றது வியாசபாரதம், "தான் சொன்ன உறுதிமொழி தவறினும் தன் அடியார் சொன்ன உறுதிமொழி தவறலாகாது" என்ற பகவத் சித்தாந்தம் காட்டப் பட்டது. தாருகன் - கிருஷ்ணன் தேர்ச்சாரதி. வளையோசை செய் தல் சாரதி தேரொடு வருவதற்கு. வருதி - முன்னிலையேவல். (77)

78. அருச்சுனன் கனவில் கிருஷ்ணன் வந்து தன் எண்ணம் சொல்லல்.

எனவங்கி யம்பி குசைபாயல் துஞ்சும்
இமையோர்க ணுதன் மதலைக்
கனவின்க ணெய்த வவன்மாலொ ழிந்து
கடிதங்கெ ழுந்து பணியா
உனதுள்ள முற்ற குறைதீர்ப்ப னன்ன
துரையென்ன முற்ற வொருசூள்
நினைவென்ன வெள்ளி மலையெய்தி னீது
நிறைவேறு மென்று திருமால்.

(இ - ள்) என - என்று, அங்கு - அத் திடரிடத்து, இயம்பி- (தாருகனை நோக்கிச்) சொல்லி (பின்) குசைபாயல் துஞ்சும் - தருப்பங்களாலான படுக்கையில் தூங்குகின்ற, இமையோர்கள் நாதன் மதலை - தேவேந்திரனின் மகனுகிய அருச்சுனனின், கனவின் கண் எய்த - கனுவிலே வந்து தோன்ற, அவன் - அந்த அருச்சுனன், மால் ஒழிந்து - தூக்க மயக்கம் நீங்கித் தெளிந்து, கடிது - விரைவாக, அங்கு - அப்போது, எழுந்து பணியா - எழுந்து வணங்கி, 'உனது உள்ளம் உற்ற குறை தீர்ப்பன் - உன்து மனத்திலே பொருந்தியுள்ள விருப்பத்தை நிறைவேற்றுவேன், அன்னது உரை - அதனைச் சொல்வாய்' என்ன - என்று தெரிவிக்க, (அதற்கு) திருமால் - கிருஷ் ணன் 'சூள் முற்ற - உனது சபதம் நிறைவேற, ஒரு நினைவு - ஒரு எண்ணம், என்ன - என்றபீடிகையிட்டு, 'வெள்ளிமலை எய்தின் - கைலாயமலையைச் சேர்வோமாளுல், ஈது நிறைவேறும் - நீ செய்த சபதம் முற்றுப் பெறும், என்று - என்று கூறி; (எ. று) ':.......... நடந்து என மேலைக்கவியில் தொடரும்,

கைலை சென்று சிவனருள் பெற்ருல் சபதம் நிறைவேறும் என்ருன் கிருஷ்ணனென்க. குறை - வேண்டுகோள். (78)

79. கிருஷ்ணூர்ச்சுனர் கைலே சேர்தல்.

நரனேடு தானு மரனீடு கைலே
நணுமாந டந்து வயமாக்
கரியோடும் வேங்கை சுரையாடு நவ்வி
கறுவாது தம்மின் மிகுநட்
பொருவாத வெள்ள ருவியோதை நீடு
முயர்வெள்ளி வெற்பை மருவ
இருநீல வோங்கல் படர்பான்மை யொப்ப
வினிதாக வுற்ற னர்களால்.

(இ - ள்) நரனேடு - அருச்சுனனேடு, தானும் - கிருஷ்ணனுகிய தானும், அரன் நீடு கைலே - சிவபிரான் எழுந்தருளியுள்ள உயர்ந்த கயிலேமலேயை, நணுமா(று)- கிட்டும்படி, நடந்து - (தமது காலால்) நடந்து, வயமா - சிங்கமானது, கரியோடும் - யானேயோடும், வேங்கை - புலியானது, சுரை ஆடு - கறவையாடு, நவ்வி-மான் இவற்ருேடும், கறுவாது - பகை கொண்டு மாறுபடாமல், தம்மின் - தமக்குள்ளே [பரஸ்பரம்] மிகு நட்பு - நெருங்கிய சிநேகிதம், ஒருவாத - (சிறிதும்) நீங்காததும், வெள் அருவி ஓதை - வெண்மையான (பளிங்கு போன்ற) நீரைக் கொண்ட அருவிகளின் ஒலி, நீடும் - நெடுந்தூரம் கேட்கும், உயர் வெள்ளி வெற்பை - உயர்ந்த கைலாய மலேயை, மருவ - போய்ச்சேர, இரு நீலஓங்கல் படர் பான்மை ஒப்ப - இரண்டு நீலநிறம் பொருந்திய மலேகள் பெயர்கின்ற தன்மையினே யொத்திருக்க, இனிதாக - சுகமாக, உற்றனர்கள் - வந்தடைந்தார்கள், (எ.று.) ஆல் - ஈற்றசை.

'நடந்து' என்பதற்குப் பதில் கருடன் தோளிலேறிச் சென்றனர் என்றது வில்லிபாரதம். கைலேயின் சிறப்பு - பகை விலங்குகளும் ஒன்றை யொன்று கறுவாது பகைமை நீங்கி நட்போடு சஞ்சரிக்கும் என்பது. இமிழ் கொண்ட அருவி" என்றது மலேபடுகடாம் (296) இரண்டு நீல மலேகள் - நீல நிறமுள்ள கிருஷ்ணனுக்கும் அருச்சுனனுக்கும் ஒப்பு. ஓங்கல்படர் பான்மையொப்ப-இல்பொருளுவமையணி (79)

வேறு.

80. சிவனும் உமையொடு எதிர்போந்து நோக்குதல்.

அம்பர வாணர்பல் லருந்த வத்தவர்
கிம்புரு டருமொளி கெழுமு விஞ்ஞையர்
அம்புய நாரதன் யாரும் போற்றிட
நம்பனு முமையொடு நண்ணி நோக்கினர்.

(இ - ள்) அம்பர வாணர் - தேவர்கள், பல் அருந்தவத்தவர் - பல அரிய தவத்தைச் செய்தவர்கள், ஒளி கெழுமு விஞ்ஞையர் - ஒளி நிறைந்த வித்தியாதரர்கள், கிம்புருடரும் - கிம்புருஷர் இவர்களும், அம்புயன் நாரதன் - பிரமன் நாரதன் இவகளும், யாரும் - (மற்றும்) அனைவரும், போற்றிட - துதிக்க, நம்பனும் - சிவபெருமானும் உமையொடு – பார்வதியம்மை யோடு, நண்ணி-எதிர்கொண்டு கிட்டி, நோக்கினர் - அருட்பார்வை வழங்கினர்; (எ. று)

அம்பரம் - வானம், தேவலோகம், வாணர்-வாழ்நர் என்பதன் மரூஉ. கிம்புருடர் - பதினெண்கணத்துள் ஒருவராய் மானுட முகமும் குதிரையினுடலும்படைத்த தேவசாதியர். விஞ்ஞையர் - பதினெண் கணத்துள் ஒருசாரார்: இது விஞ்சையர் என்பதன் மரூஉ. அம்புயன் - பிரமன்: [விஷ்ணுவின் நாபிகமலத்தில் தோன்றியவன்] அம்புயன் + நாரதன் = அம்புயநாரதன் -'சிலவிகாரமா முயர்திணை' 'கிம்புருடரும்' என்றவிடத்து உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. (80)

இதுமுதல் நான்கு கவிகள் - பெரும்பாலும் மூன்ருஞ்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்**

81.82 இரண்டு கருவிகள் :- கிருஷ்ணார்ச்சுனர் செய்யும் சிவஸ்தோத்திரம்.

கேசவ னரனிவர் கிரீசன் பொற்கழல்
வாசமா மலரடி வணங்கி யன்பர்கள்
நேசனே கைலையி னிலைகொள் வாசனே!
ஈசனே மாசிலா திலகு சோதியே.

(இ - ள்) கேசவன் - கிருஷ்ணன், நரன் - அர்ச்சுனன், இவர் - இவ்விருவரும், கிரீசன் பொன் கழல் - கயிலைநாதனின் அழகிய கழல் கட்டிய, வாசம் மா மலர் அடி - வாசனை பொருந்திய சிறந்த மலர் கொண்டருச்சிக்கப்பட்ட திருவடிகளை, வணங்கி - பணிந்து,- அன்பர்கள் நேசனே!- பக்தர்களின் துணைவனே!, கைலையில் நிலை கொள் வாசனே!- கயிலாசத்தில் நித்திய வாசஞ் செய்கின்றவனே!- ஈசனே!- அனைவருக்கும் தலைவனே! மாசு இலாது - குற்றம் (தோஷம்) இல்லாமல், இலகு - விளங்குகின்ற, சோதியே!- சுடரே! (எ-று.)

கேசியென்னும் அசுரனைக் கொன்றவனாதலின், கேசவன் எனப்பட்டான். பொன்கழல் - பொன்னாலாகிய கழல் எனினுமாம். மலரடி - மலரால் அருச்சிக்கப்பட்ட அடி - மூன்றனுருபும் பொருளும் உடன்றொக்கதொகை: இனி, உவமைத்தொகை எனவுமாம். 'ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெருஞ்சோதி'யாதலின் 'மாசிலா திலகு சோதியே! என்றது. சோதிக்கு மாசாவது - அந்தமுடைய தாயிருத்தல். (81)

82. அத்தனே யுயிர்க்குயி ராகி யார்தரு
நித்தனே நிமலனே நீற்றின் மேனியாய்
முத்தனே கதிதரு முதல்வ வென்றுளம்
ஒத்தெரி யிழுதென வுருகு காலையில்.

(இ - ள்) அத்தனே! - தலைவனே! உயிர்க்கு உயிராகி - ஜீவாத்மாக்களுக்கு அந்தராத்மாவாகி, ஆர்தரு - (எங்கும்) வியாபித்துள்ள, நித்தனே!- முக்காலத்திலும் ஒரே விதமாகவுள்ளவனே! நிமலனே!- ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் தொடர்ச்சியில்லாதவனே! நீற்றின் மேனியாய்!- விபூதியணிந்த திருமேனியையுடையவனே! முத்தனே!- முதலும் இறுதியும் சொல்ல முடியாத முத்தியுலகத்துக்கு உரியவனே! கதி தரு முதல்வ!- நற்கதி தருகின்ற ஆதியே! என்று - என்று இவ்வாறு துதித்து, உளம் ஒத்து - மனப்பூர்வமாக, எரி இழுது என - நெருப்பினில்பட்ட நெய்போல, உருகு காலையில் - உருகிநெகிழ்ந்த போது; (எ.று.).

மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியானாதலின் 'நீற்றின் மேனியாய்' என்றது, ஈற்றடியில் உவமையணி. (82)

83. சிவபெருமான் கேட்கும் வரம் ஈவேன் எனல்.

ஒவ்விலார் துதிதனக் குகந்து மாபதி
இவ்விர வினிலுற லியம்பி லிக்கணம்
அவ்வர மளித்துமென் றருள்செய் காலையிற்
செவ்விய தவத்தினர் செங்கை கூப்பியே.

(இ - ள்) ஒவ்வு இலார் - ஒப்பில்லாத கிருஷ்ணார்ச்சுனருடைய துதி தனக்கு - தோத்திரத்திற்கு, உமாபதி- சிவபெருமான், உகந்து, மகிழ்ந்து, இ இரவினில் உறல் இயம்பில் - இந்த நிசியில் (நீங்கள்) வந்ததற்குக்காரணம் சொல்லின், இக் கணம்-இந்த நொடியிலேயே, அ வரம் அளித்தும் - அந்த வரத்தைக் கொடுத்திடுவேன், என்று அருள்செய் காலையில் - என்று சொன்னபொழுது, செவ்விய தவத்தினர்-நேர்மையான தவத்தைச் செய்த அந்த இருவரும், செங்கை கூப்பி - சிவந்த தங்கள் கரங்களைக் குவித்துத்தொழுது; (எ.று,),

('தவத்தினர்' என்றது - நரநாரணர் என்னும்படி சிறத்தலின். உகந்து + உமாபதி = உகந்துமாபதி நிலைமொழியீற்றுஉகரம் வரு: மொழிஉகரம் முன் கெட்டது, அளித்தும் - தனித்தன்மைப்பன்மை. செங்கை - பண்புத்தொகை, (83)

வேறு.

84-85. சிவபெருமான் அங்குள்ளதோர் பொய்கையிலிருக்கும் வில்லும் அம்பும் கொணர்க எனல். இரண்டுகவிகள் - ஒருதொடர்.

அன்றருளு நின்படையா லசுரர்களை வென்றேம்
இன்றுமெரி முட்டிநிலை யெந்தையருள் செய்யில்
வென்றியமர் வெல்வமென வெவ்விடையு கைத்தோன்
என்றவரு மம்புமுள விங்கொருத டத்தில்.

(இ-ள்) அன்று [அருச்சுனன்] தவஞ் செய்த காலத்தில், அருளும் நின் படையால் - நீர் கொடுத்த பாசுபதத்தால், அசுரர்களை - நிவாதகவசர் காலகேயர் ஆகிய அசுரர்களை, வென்றேம் - ஜெயித்து அழித்தோம்: இன்றும் - இப்போதும், எந்தை - எம்

பெருமானே ! எரி முட்டிநிலை - (திரிபுரத்தை) எரித்த கைப்பிடி நிலையை, அருள் செய்யில் - பயிற்றுவித்தால், வென்றி அமர் - வென்றி நோக்கொடு செய்யும் போரில், வெல்வம் - ஜெயிப்போம், என - என்று கூறிப் பிரார்த்திக்க, விடை உகைத்தோன் - இடபவாகனனாகிய சிவபிரான், 'இங்கொரு தடத்தில் - இங்கேயுள்ளதொரு பொய்கையில், என் தவரும் அம்பும் உள - என் வில்லும் அம்பும் இருக்கின்றன : (எ.று.) "சென்றவை கொணர்ந்திடின் தெரித்தும்" என் மேலைக் கவியோடு இயையும்.

முன்னர் அருளிய பாசுபதம் முதலிய ஆயுதங்களினால் நிவாதகவசர் காலகேயராகிய அசுரர்களை வென்றேன் ; இப்போதும் நீர் திரிபுரமெரித்த காலத்தில் அவற்றையெரித்துச் சாம்பராக்கின முட்டிநிலையை (வில்லைக்கையால் பிடிக்கும் நிலையை) ப் பயிற்றுவிப்பீராயின், அமர் வெல்வது திண்ணம் என்று கூறிப் பிரார்த்திக்க, அருச்சுனனையும் கிருஷ்ணனையும் நோக்கி அங்குள்ளதொரு பொய்கையில் தன்னுடைய வில்லும் அம்பும் வைக்கப்பட்டுள்ளவற்றை எடுத்துவரச் சொன்னார் முட்டிநிலை பயிற்றுவித்தற்கு என விவரங் காண வேண்டுவது [முன்பு ஒரு காலத்தில் பரமசிவன் தேவர்க்குப் பகைவரானார் யாவரையும் பொருது அழித்து அவ்வில்லையும் அம்பையும் அமிருதசரசில் வைத்திட்டனனென்பது வரலாறு] அசுரரை வென்றவன் அருச்சுனனாயிருப்பவும், 'வென்றேன்' என்னாது, 'வென்றோம்' என்றது - கிருஷ்ணார்ச்சுனரின் வேற்றுமையின்மை நோக்கி. எந்தை - அண்மைவிளி. தவர் - வில். 'அரன்முட்டிநிலை' என்றும் பாடம்.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் எட்டுக்கவிகள் - பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளங்காய்ச் சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (84)

85. சென்றவை கொணர்ந்திடில் தெரித்துமஃ தென்ன
நன்றென நடந்தனர் தடக்கணிரு நாகம்
நின்றெதி ருருத்தடரு நீர்மைகொடு ணர்ந்தார்
அன்றுரக மெந்தைசிலை யம்பெனவு மன்றே.

(இ-ள்) சென்று - பொய்க்கைக்குப் போய், அவை கொணர்ந்திடில் - அந்த வில்லையும் அம்பையும் கொண்டு வருவாயானால், அஃது தெரித்தும் - அவற்றைப்பற்றித் தெரிவிப்பேன், என்ன -

என்று சொல்ல, நன்று என - அப்படியே கொண்டு வருவேன் என்று, நடந்தனர் - இருவரும் (பொய்க்கைக்குச்) சென்றனர் : தடக்கண் - அந்தப் பொய்கையிடத்து, இரு நாகம் - பெரிய நாகப் பாம்பொன்று, நின்று - வெளிப்பட்டு நின்று எதிர் உருத்து அடரும் நீர்மை கொடு - எதிரே சீறிவந்து தாக்கும் தன்மையைக் (கண்டு) கொண்டு, அன்று - [தேவர் பகையாயினுரையழித்த] அக்காலத்து, உரகம் - இந்த நாகம், எந்தை சிலை அம்பு எனவும் - எம் சிவ பெருமானுடைய வில்லும் அம்புமாயிருந்தது என்றும், உணர்ந் தனர் - தெரிந்து கொண்டனர் ; (எ.று.) மன், ஓ – ஈற்றசை.

பொய்கையிலெழுந்த நாகமே சிவனுக்கு வில்லும் அம்புமாய் உதவியது என உணர்ந்தனர். தெரித்தும் - தன்மையொருமை வினைமுற்று. (85)

86. நாகமாகிய அந்த வில்லம்பினைக் கொணர்ந்து சிவன் முன் வைத்தல்.

உருத்திரம தோர்சதமு ரைப்பவகி மீள
வரித்தனுவு மம்பெனவ யங்கிடம கிழ்ந்தே
உரைத்தனர்க பாலிபெய ரொண்குடிலை யோடும்
தரித்தனர்கை கங்கைமுடி சங்கரன்முன் வைத்தார்.

(இ-ள்) உருத்திரம் அது ஓர் சதம் உரைப்ப - உருத்திர மென்னும் சிறந்த மந்திரத்தை ஒரு நூறுதரம் ஜபிக்க, அகி - அந்த நாகம், மீள - மறுபடியும், வரி தனுவும் அம்பு என (உம்) வரிந்து - கட்டப்பட்ட வில்லும் அம்பும் என்னும்படி, வயங்கிட - விளங்கிட, மகிழ்ந்து - சந்தோஷித்து, கபாலி பெயர் - சிவபெரு மானின் திருநாமத்தை, ஒண் குடிலையோடும் - சிறப்பு மிக்க பிரணவத்தோடும் சேர்த்து, உரைத்தனர் - உச்சரித்தவராய், கை தரித்தனர் - (அந்த வில்லம்புகளைக்) கையில் ஏந்தினவராய், கங்கை முடி சங்கரன் முன் - கங்கையைச் சிரசில் தரித்த சிவபெருமான் முன்னிலையில், வைத்தார் - வைத்தார்கள் ; (எ.று.)

உருத்திரமந்திரத்தைச் செபிக்கவே அந்த நாகம் வில்லம்பு களாகவே வயங்கிற்று. 'ஓம் நமசிவாய' என்று பஞ்சாக்கர மந்திரத்தை யுச்சரித்துக் கொண்டே அந்த வில்லம்புகளை யேந்தி வந்தனர் என்றபடி, குடிலை - பிரணவம் : "குடிலையம் பொருட்கு" (கந்தபு : கடவுள், 14) உரைத்தனர் தரித்தனர் வைத்தார் — முற்றெச்சம். (86)

87. இருவரும் முட்டிநிலை தேர்ந்தபின் கிருஷ்ணன் அருச்சுனனுக்கு அதற்கேற்ற மறையினை யுபதேசித்தல்.

மட்டிதழி வேய்ந்தசடை மங்கையொரு பங்கன்
வட்டசிலை வாங்குபு வடிக்கணை மடுப்ப
முட்டிநிலை தேர்ந்தரியு முத்தனருள் கொண்டே
இட்டமறை காதினிலி சைத்தனன ரற்கே.

(இ-ள்) மட்டு இதழி வேய்ந்த சடை - தேன் பெருகும் கொன்றை மாலையைச் சூடிய சடையையுடைய, மங்கை யொரு பங்கன் - உமைபாகனாகிய சிவபெருமான். வட்ட சிலை வாங்குபு - மண்டலாகாரமான வில்லினை, வளைத்து, வடிக்கணை - கூரிய அம்பினை, மடுப்ப - தொடுத்துக் காட்ட, முட்டிநிலை தேர்ந்து - (இருவரும்) கைப்பிடி நிலையினையறிந்து, (பின்னர்) அரியும் - கிருஷ்ணனும், முத்தன் அருள் கொண்டு - சிவபிரானின் கருணையை முன்னிட்டுக் கொண்டு, இட்ட மறை - விரும்பத்தக்க உருத்திரமென்னும் மந்திரத்தை, நரற்கு - அருச்சுனனுக்கு, காதினில் இசைத்தனர் - (அவன்) காதினில் [இரகசியமாக] ஓதினர் ; (எ.று.)

சிலையை வளைத்துக் கணையைமடுத்து முட்டிநிலையைத் தெரிவித்தனர் சிவபெருமான் : பின்னர் உருத்திரமந்திரத்தை அருச்சுனனுக்குக் கிருஷ்ணன் இரகசியமாக உபதேசித்தார். இதழி — கொன்றை. இது முடி மாலையுமாகும்: 'கண்ணிகார் நறுங் கொன்றை' என்றது புறம். மட்டு - தேன் : 'தேன் வழங்கு கடுக்கை' என்றார் குமரகுருபரரும். மங்கையொரு பங்கன் - அர்த்தநாரீசுவரன். முத்தன் - முத்தியுலகத்திற்கு உரியவன். மந்திரோபதேசம் காதினில் இரகசியமாகச் செய்ய வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. வாங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வடிக்கணை - உரிச்சொற்றொடர். (87)

88. வில்லையும் அம்பையும் மீண்டும் பொய்கையில் இடுதல்.

தரியலரை வென்றமர் சயம்பெறுமி னென்றே
அரன்றனளி செய்திடவி லம்புதட முய்த்தே
பரன்றனடி மீண்டணுகி பத்திகொடு தாழ்ந்தார்
நரன்பரனை யன்பினுள நைந்துதுதி செய்தே.

தரியலரை வென்று - பகைவர்களைச் செயித்து, அமர்-போரில், சயம் பெறுமின் என்று - வெற்றி பெறுங்கள் என்று ஆசீர்வதித்து, அரன் - சிவபிரான், தன் அளி செய்திட - தன் கருணையைப் புரிய, (பின்பு அவ்விருவரும்) வில் அம்பு தடம் உய்த்து - வில்லையும் அம்பையும் (மீண்டும்) பொய்கையிலே செலுத்தி, மீண்டு - திரும்பி வந்து, பரன் தன் அடி அணுகி - சிவபிரானின் திருவடிகளைக் கிட்டி, பத்தி கொடு - பக்தியோடு, தாழ்ந்தார் - பணிந்தனர்: நரன் - அருச்சுனன், பரனை - சிவபிரானை அன்பின் - விசுவாசத்தோடு, உளம் நைந்து - மனமுருகி, துதிசெய்து - தோத்திரம் செய்து; (எ-று.) ,, ... தெளிந்தான்'' என மேலைக்கவியிலியையும்.

முட்டிநிலையைத் தெரிந்துகொண்ட பின் வில்லையும் அம்பையும் மீண்டும் பொய்கையிலேயே வைத்து விட்டனர் என அறிக. விலம்பு – உம்மைத்தொகை. (88)

89. தான்முன்பு கிருஷ்ணன்மேல் அணிந்த மலர்களைச் சிவபிரான் மீது கண்டு அருச்சுனன் இருவர்க்கும் பேதமில்லையெனத் தெளிதல்.

மைக்கட னிறத்தனிடை வைத்தமலர் யாவும்
முக்கணனி டத்திலுற மூதறிவி னோர்க்குச்
செக்கர்நிறன் மாலுமொரு தேவெனத்தெ ளிந்தான்
அக்கணம ரன்விடைய ளித்திடவ கன்றார்.

(இ-ள்) மைக்கடல் நிறத்தனிடை - கரியகடல்போன்ற நிறத்தையுடைய கிருஷ்ணன் திருமேனியின்மேல், வைத்த மலர் யாவும் - இட்டு அருச்சித்த புஷ்பங்கள் அனைத்தும், முக்கணனிடத்தில் உற - சிவபிரானிடத்தில்சேர (அவ்வதிசயத்தைக்கண்டு), மூதறிவினோர்க்கு - பேரறிவுபடைத்த சான்றோர்க்கு, செக்கர்நிறன் - சிவப்புநிறமுடைய சிவபிரானும், மாலும் - (கரிய) திருமாலாகிய கிருஷ்ணனும், ஒரு தேவு என - ஒரே தெய்வந்தான் என்று, தெளிந்தான் - அறிந்துகொண்டான்: அக்கணம் - அப்போது, அரன் விடை அளித்திட - சிவபிரான் அனுமதி கொடுத்திட, அகன்றார் - (அவ்விருவரும்) கயிலையைவிட்டுத் திரும்பினார்; (எ. று.).

கீழ் 76ஆஞ்செய்யுளில் "அரன்யானும் ஒன்றதறிவிப்ப நின்னை யயர்பூசை செய்தென் முடிமீது ஒருபூகுறித்தி'' என்று கிருஷ்ணன் சொல்லியபடியே இங்கு இருவர்க்கும் பேதமின்மை

கண்டானென்க. இதனுல், உலகத்துப் பரம்பொருள் ஒன்றே பலபடியாகத் தோன்றுவதென்று உணர்ந்தனன் அருச்சுனன் என்றவாறு. இங்குச் சிவபிரானது மகிமையைக் கூறுமிடமாதலால், அதற்கு ஏற்பச் செய்யுள் அமைக்கப்பட்டுள்ளது. இனி, இவ்வர லாறு வைஷ்ணவசம்பிரதாயத்திற் சிறிது வேறுபாடாக் கூறப் படும் : சிவனையருச்சிக்க விரும்பிய அருச்சுனன் கிருஷ்ணன் கட் டளைப்படி அப்பிரானது திருவடிகளிலேயிட்ட மலர்கள் பின்பு பரமசிவனது முடியின்மேல் காணப்பட, அதுகண்டு பார்த்தன் பரதத்துவமுணர்ந்தனனென்பது, "தீர்த்தனுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ், சேர்த்தியவையே சிவன்முடிமேல் தான்கண்டு, பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை, பேர்த்து மொருவராற் பேசக்கிடந்ததே ?" என்ற திருவாய்மொழியைக் காண்க. (2-8-6). செக்கர் - சிவப்பு. தீவண்ணனுதலின், சிவ பிரானைச் 'செக்கர் நிறன்' என்றது. (89)

90. கிருஷ்ணுர்ச்சுனர் கயிலையினின்று திரும்புதல். கனவுநிலை நீங்கித்துயிலெழுதல்.

வலஞ்செய்தர னாலயம்வ ணங்குபுவிண் ணாருய்ப்
பொலன்செய்நெடு பாசறைபு குந்தனர்க ளியாவும்
கலன்புனைந ரன்கனவு கண்டவனை யொத்தே
நிலந்தனிலு ணர்ந்தனன்நெ டுந்துயில கன்றே.

(இ-ள்) அரன் ஆலயம் வலம் செய்து - சிவபிரான் கோயி லைப் பிரதட்சிணம் செய்து, வணங்கி - (அப்பரமனைப்) பணிந்து, (பின்பு) விண் ஆருய் - ஆகாய மார்க்கமாய்த் திரும்பிவந்து, பொலன் செய் நெடு பாசறை - அழகிய நீண்ட படைவீட்டில், புகுந்தனர்கள் - புகுந்தார்கள் : யாவும் - இந்நிகழ்ச்சிகள் அனைத் தையும், கலன் புனை நரன் - ஆபரணங்களையணிந்திருந்த அருச் சுனன், கனவு கண்டவனை ஒத்து - கனுக்கண்டவனைப்போல (கண்டு), (பின்னர்) நெடும் துயில் அகன்று - ஆழ்ந்த தூக்கத் தினை நீத்து, நிலம் தனில் - படுத்திருந்த நிலத்தினின்று, உணர்ந் தனன் - எழுந்தான் ; (எ. று.).

கயிலைபோகும் போது நடந்து சென்றவர் (செ : 79) திரும்பும் போது ஆகாயமார்க்கமாய்வந்தனர் என்ருர். பொலன் -, பொலிவு, விளக்கம், அழகு. (90).

91. அருச்சுனன் முட்டிநிலையனைத்தும் மனத்தில் சிந்தித்து நிறுத்திச் சிவபிரானைத்துதிக்க, சூரியோதயமாதல்.

அச்சமுறு முட்டி நிலை யாவுமற லற்றே
நிச்சயம தாயுளநி னைந்துதுதி செய்தான்
செச்சைநிகர் மேனியரன் செய்தவரு ளென்னு
மெச்சிரவி வந்துதய வெற்பினிலெ ழுந்தான்.

(இ-ள்) அச்சம் உறு முட்டிநிலை யாவும் - பயமூட்டும்படியான வில்லின்கைப்பிடி நிலைகள் அனைத்தையும், மறல் அற்று - மறக்காதபடி, நிச்சயமதாய் உளம் நினைந்து - உறுதியாக்கி மனத்தில் சிந்தித்து வைத்து, - செச்சைநிகர் மேனி அரன் - வெட்சிப்பூவினையொத்த திருமேனியையுடைய சிவபிரான், செய்த அருள் என்று - பாலித்த கருணையாகும் (இது) என்று, துதி செய்தான் - தோத்திரஞ் செய்தான்: (அப்போது) மெச்சு இரவி - அனைவராலும் புகழப்படுகின்ற சூரியன், உதய வெற்பினில் - உதயகிரியிலே, வற்து எழுந்தான் - வந்து தோன்றினன் ; (எ.று.).

சிவபிரான் கருணைத்திறத்தினைப்போற்றி, அவர் கற்பித்த முட்டிநிலைகளனைத்தையும் மறவாது மனத்தில் தேக்கி உறுதியாக்கிக்கொண்டானென்றபடி. செச்சை - வெட்சிப்பூ : 'செங்கால் வெட்சி' (21) என்றது திருமுருகாற்றுப்படை. ''அரன்செய்தவருளென்னு துதிசெய்தான்'' என மாறுக. இனி, 'அரன்செய்தவருளென்னு இரவி யெழுந்தான்' எனப் பொருள் கொள்ளுதலுமாம். (91).

பதின்மூன்றும் போர்ச் சருக்கம் முற்றிற்று.

பதினன்காம் போர்ச் சருக்கம்

வேறு.

1. தருமன் அவையில் வீற்றிருப்ப, அருச்சுனன் வருதல்.

கங்குன்முற் றுறங்கா தெண்ணுறு தருமன்
காலையிற் கடனெலா முடித்து
மங்குலிற் ருன மறையவர்க் களித்து
மாறுரு பதன்முத லரசர்
தங்கவை புகுந்து தவிசில்வீற் றிருந்தான்
தனஞ்செய றன்கடன் நிரப்பி
அங்குவந் தெய்த அவன்முக மலர்ச்சி
யண்ணல்கண் டியாவையும் பகர்வான்.

(இ-ள்) கங்குல் முற்று உறங்காது - இரவு முழுவதும் தூங்காமல், எண்ணுறும் - (கவலையுடன்) நினைந்திருந்த, தருமன் - தருமபுத்திரன், காலையில் கடனெலாம் முடித்து - காலையில் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் நிறைவேற்றி, மங்குலின் - மேகம்போல, தானம் - (பல வகைத்) தானங்களையும், மறையவர்க்கு - பிராம்மணர்களுக்கு, அளித்து, கொடுத்து, (பிறகு) மால் - கிருஷ்ணன், துருபதன் - பாஞ்சாலன், முதல் அரசர் - முதலிய மன்னர்கள், தங்கு அவைபுகுந்து - கூடியிருக்கின்றசபையினுட்சென்று (ஆங்கிருந்த) தவிசில் - ஆசனத்தில், வீற்றிருந்தான் - உட்கார்ந்திருந்தான் : (அப்போது) தனஞ்செயன் - அருச்சுனன், தன் கடன் நிரப்பி - தன் காலைக்கடன்களை நிறைவேற்றி, அங்கு வந்து எய்த - அச் சபையிடத்து வந்து சேர, அவன் முக மலர்ச்சி - அவனது முகத்தின் பொலிவினை, அண்ணல் - தருமபுத்திரன், கண்டு - பார்த்து மகிழ, (அப்போது) யாவையும் - (தான் கனவிற்கண்ட) அனைத்தையும், பகர்வான் - கூறுவானாயினன் ! (எ-று,).

அருச்சுனன் செய்த சபதம் நாளை முற்றுமோ என்ற கவலையுடனிருந்தானாதலின், தருமன் அன்றிரவு தூங்காமலிருந்தான், கவலையுற்றார் கண்துஞ்சார் ஆகலின் என்க. கைம்மாறு கருதாது கொடுப்பதில் மங்குல் உவமை. மங்குலின், இன்-உவமவுருபு. 'கண்டு' என்பதன் பின் 'மகிழ' என்ற சொல்லெச்சம் கொள்க.

இது முதல் பத்துக்கவிகள்—பெரும்பாலும் இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகி வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. அருச்சுனன்கூறியதும், தருமன் அவனைக் கிருஷ்ணனிடம் அடைக்கலமீதலும்.

அவிரொளி கயிலை சென்றதும் அரன்மேல்
அரிக்கண் மலரிருந் ததுவும்
இவையெலாங் கனவிற் கண்டன மமரர்க்
கிலகுமா தவனருள் இஃதென்
றெவர்களு மகிழ நரன்சொலச் சபத
மினிதின்முற் றிடுமென விசைத்தார்
தவறிலான் திருமா றன்கர மளித்துத்
தம்பியை யின்றளி யென்றான்.

(இ-ள்) ஒளி அவிர் கயிலைசென்றதும்-தேஜஸ் பிரகாசிக்கின்ற கைலாயமலையை அடைந்ததும். அரன்மேல்-(அங்குச்) சிவபெருமான்மேல், அரிக்கண் மலர் - கிருஷ்ணனாகிய திருமாலினிடத்திட்ட புஷ்பங்கள், இருந்ததுவும் —, இவை எலாம் - இந்நிகழ்ச்சிகளையெல்லாம், கனவில் கண்டனம் - கனவில் பார்த்தோம்: இஃது - இத்தகையது, அமரர்க்கு இலகு மாதவன் அருள் - தேவர்க்கு [இலக்காகி] விளங்குகின்ற உமாபதியின் கருணையாலாகும், என்று - என்று கூறி, எவர்களும் மகிழ-அனைவரும் களிக்கும்படி, நரன் சொல-அருச்சுனன் சொல்ல, (அவர்களனைவரும்) சபதம் இனிதின் முற்றிடும் என இசைத்தார் - அருச்சுனன் செய்த வஞ்சினம் நன்றாக நிறைவேறும் என்று கூறினார்கள்: தவறிலான் - பிழையற்ற தருமன், தம்பியை - அருச்சுனனை, திருமால்தன் கரம் அளித்து - கிருஷ்ணன் கையில் (அடைக்கலப் பொருளாக) ஒப்படைத்து, இன்று - இன்றையநாட் போரில், அளி - (அவனைக்) காப்பாற்றுவாய், என்றான் - என்று பிரார்த்தித்தான்! (எ-று.).

மாதவன் என்பது - மாது அவன் எனப்பிரிந்து உமாபதியைக் காட்டும். தவறிலான் - சத்தியஸந்தன் என்றபடி. அளி - வியங்கோள், (2)

3. இருதிறத்தாரும் வியூகம் வகுத்தல்.

அந்திமுன் சிந்து பதிதுணித் தடைதும்
அஞ்சலென் றச்சுதன் கிரீடிச்
சந்தனம் புகுந்து கடவின னடற்பாஞ்
சாலன்சேய் போர்க்களங் குறுகி
உந்துநாற் படையை யிராசமண் டலமா
யுறும்படி வகுத்தன னாசான்
வந்தமர்க் களத்திற் சூசியின் யூகம்
வகுத்தனன் றொகுத்துநாற் படையை.

(இ-ள்) 'அந்தி முன் - மாலைவருவதற்குமுன், சிந்துபதி- சயத்திரதனை, துணித்து - கொன்று, அடைதும் - (வெற்றியொடு) வருவேம், அஞ்சல் - பயப்படாதே'. என்று - என்று அபயமளித்து, அச்சுதன் - கிருஷ்ணன். கிரீடி - அருச்சுனனின், சந்தனம் - தேரினில், புகுந்து - ஏறி, கடவினன் (அதனைச்) செலுத்தினான் : (அப்போது)பாஞ்சலன் சேய் - திட்டத்துய்மன், போர்க்களம் குறுகி- யுத்தகளத்தை யடைந்து, உந்து நாற்படையை - (தான்) செலுத்தி வந்த சதுரங்க சேனைகளை, இரர்சமண்டலமாய் உறும்படி - அரசர் கள் கூட்டம் [முகமாக] அமையும்படி, வகுத்தனன் - அணிவகுத் தான் : ஆசான் - துரோணன், அமர்க்களத்தில் வந்து - போர்க்களத் திற்கு வந்து, நாற்படையை தொகுத்து-சதுரங்க சேனைகளையும் ஒரு சேரத்திரளவைத்து, சூசியின் யூகம் வகுத்தனன் - சூசிகாவியூக மாக அணிவகுத்தான் : (எ.று.).

மாலையர்மளவில் சயத்திரதனை முடிப்போம் என்று அபயமளித் தான் கிருஷ்ணன் என்க. இராசமண்டலம் வகுத்தலாவது - அரசர்களை முகமாகவும், நால்வகைச்சேனைகளை மற்றை அவய வங்களாகவும் அமைத்து அணிவகுத்தல். இனி, மண்டலம் என்பது வியூகத்தின் வகை நான்கனுள் ஒன்று. நாற்புறத்தும் வட்டமாகச் சேனையை நிறுத்துவது மண்டலமாகும். சூசிகா வியூகமாவது - ஊசிமுனைபோல் முனை சிறுத்துவர அமைக்கும் படைவகுப்பு வகை.

இதற்கு எறும்பு வரிசை உவமை கூறப்படும். இது, பயமுண்டாகும் போது வகுக்கப்படுமென்பதை "சூசிகா வியூகத்தால் முன்னே பயமுண்டாகும்போதும்". என்ற தொடராலும் அறியலாம். (மனு, 7, 187) சூசி - ஊசி, 'தூசியின் யூகம்' என்றும் பாடம். (தூசிவியூகம் இன்னதென்பதை முன்னர் பீஷ்மபருவம் எட்டாம் போர்ச்சருக்கத்து முதற்செய்யுளிற் குறித்தாம்). அடைதும் - முன்னிலைப்பன்மை. அஞ்சல் - வியங்கோள். சூசியின், இன்- உவமவுருபு. (3)

4—5 : துரோணன் கௌரவசேனையை அணிவகுத்தலைக் கூறும். இரண்டுகவிகள் — ஒரு தொடர்.

சந்தனம் அறுப தாயிரங் கரிநாற்
பதின்சகத் திரம்பரி யிலக்கம்
மைந்துடற் பதாதி பதிற்றிலக் கமதாய்
வகுத்திடு தானையங் கடலை
அந்தணன் மூன்று யோசனை நிறுவி
யதனிடைச் சயத்திர தனைவைத்
துந்தர வுயர்த்தோன் முதலிய ரவனை
யோம்படைத் தணிமுனை நின்றான்.

(இ-ள்) சந்தனம் - தேர்கள், அறுபதாயிரம் —, கரி-யானைகள், நால்பதின் சகத்திரம் - நாற்பதாயிரம் : பரி - குதிரைகள், இலக்கம் லட்சம்: மைந்து அடல் பதாதி-வலிமையோடு போரிடும் காலாட்கள், பதிற்றிலக்கம் அது ஆய் - பத்து லட்சம் உடையதாய், வகுத்திடும்- அணிவகுப்புச்செய்திடும், தானை அம் கடலை - சேனாசமுத்திரத்தை, அந்தணன் - துரோணன், மூன்று யோசனை நிறுவ - முப்பது மைல்தூரம் நிற்கவைத்து, அதனிடை - அதன் நடுவில், சயத்திரதனை வைத்து - சயத்திரதனை நிற்கச்செய்து, உந்து அரவு உயர்த்தோன் முதலியர் - ஊர்கின்ற பாம்பைக் கொடியிலெழுதி உயரத்தூக்கிய துரியோதனன் முதலியவர்கள், அவனை ஓம்படைத்து - அந்தச் சயத்திரதனைக் காக்கும்படி வைத்து, (தான்) அணி முனை நின்றான். சேனையின் முகப்பில் நின்றான்! (எ.று.)

துரோணன் மிக்க காப்பு அமையும்படி அணிவகுக் கின்றனனென்க. அபிமனைக் கொன்ற சயத்திரதனை அருச்சுனன் சபதப்படி கொல்லவொண்ணாத வண்ணம் மாலைப் பொழுதளவும்

பாதுகாப்பதுவே துரியோதனனுதியரது முயற்சியாதலால் இங்ஙனம் துரோணன் அவனையிடைநிறுத்திச் சுற்றிலும் வெகுதூர மளவும் சேனைகளையும் அரசர்களையும் நிறுத்தி அணிவகுத்துத் தான் முன் முகப்பில் நின்றான் என்றார். ஓம்படுத்தல் - பாதுகாக்குமாறு சேர்த்தல்; 'சிறைப்புறமாக ஓம்படுத்தது '(தொல், பொ. 114, உரை) சகத்திரம் - சகஸ்ரம் : ஆயிரம். மைந்து - வலிமை. யோசனை - சுமார் பத்துமைல் தூரம். 'இருபதுயோசனை' என்றது வில்லிபாரதம். (4)

5. தேரிபம் பரியா ளோரிரண் டிலக்கம்
சேனையோ டடைந்துவே தியன்முன்
நேரலர் கரிபோற் றுன்மரு டன்நின்
றனிகநான் குடனே காப்பத்
தாரணி கிருத வன்மனுந் துச்சா
தனனுமங் கவன்முன ரடைந்தே
ஏருற வளித்தும் அந்திகா றியூகம்
இந்திரன் சூனடா தென்றார்.

(இ-ள்) தேர் இபம் பரி ஆள் - ரதகஜதுரகபதாதிகள், ஓர் இரண்டு இலக்கம் - இரண்டு லக்ஷம் அடங்கிய, சேனையோடு அடைந்து - படையோடு வந்து, வேதியன் முன் - துரோணன் நின்ற முனைக்கு முன்னாக, துன்மருடன் - துர்மர்ஷணனென்ற அரசன், நேரலர் கரிபோல் நின்று - பகைவர்களுக்கு யானை போல் (பெருமிதம் தோன்ற) நின்று, அனிகம் நான்குடனே காப்ப- நால்வகைப்படைகளோடும் [சயத்திரதனைக்] காப்ப, (அப்போது) தார் அணி - மாலையையணிந்த, கிருதவன்மனும் துச்சாதனனும் - கிருதவர்மாவும் துச்சாசனனும், அங்கு - அவ்விடத்து, அவன் முனர் அடைந்து – அந்தத் துர்மர்ஷணனுக்கு முன்னே வந்து 'யூகம் - இந்தச்சூசியூகத்தை, இந்திரன் சூனு அடாது - இந்திரன் மகனாகிய அருச்சுனன் அழிக்காதபடி, ஏர் உற அளித்தும் - நன்மையுறப் பாதுகாப்போம், என்றார் - என்று கூறினார்கள் ; (எ,று).

துரோணனோடு துர்மர்ஷணன், கிருதவன்மன், துச்சாதனன் முதலியோரும் சயத்திரதனைக் காக்க முற்பட்டனர் என்றபடி, அளித்தும்-முன்னிலைப் பன்மை வினைமுற்று. சூனு + அடாது = சூனடாது' ''முற்றுமற்றொரோவழி'' என்றது விதி. (நன் : உயிரீற் : 14) ஏர் - நன்மை :''ஏரளவில்லா வளவினர்'' (திருக்கோ : 308) (5)

6. அருச்சுனன் சாத்தகியைத் தருமனுக்குக் காப்பாக நிறுத்திப் போர்க்குச் சித்தனுதல்.

உற்றவிண் ணவரந் தணன்செயூ கத்தை
யுடைத்தட லருச்சுனன் சபத
முற்றலின் றரிதென் றுரைத்தனர் விசையன்
முராரிபின் னவன்முக நோக்கி
கற்றநூன் முனிவன் கவர்ந்திடா தரசைக்
காப்பதுன் கடன்சயிந் தவனைச்
செற்றலென் கடனென் றிருத்திமுன் னவர்தாள்
சென்னிசேர்த் தினிமைசொற் றியார்க்கும்.

(இ-ள்) உற்ற விண்ணவர் - (ஆகாயத்தில் போர் காணப்) பொருந்திய தேவர்கள், அந்தணன் செய் யூகத்தை - துரோணு சாரியன் வகுத்த சூசி வியூகத்தை, உடைத்து - பிளந்து, அடல் அருச்சுனன் சபதம் முற்றல் - வலிய அருச்சுனன் செய்த சபதத்தை நிறைவேற்றுதல், இன்று அரிது என்று - இன்றைய போரில் செய்ய வியலாது என்று, உரைத்தனர் - (தம்முள்) கூறிக்கொண்டனர்: (இஃது இங்ஙனுக) விசையன் - அருச்சுனன், முராரி பின்னவன் - கிருஷ்ணனின் - தம்பியாகிய சாத்தகியின், முகம் நோக்கி - முகத்தைப் பார்த்து, 'கற்ற நூல் முனிவன் - வில்வித்தை முதலிய சாத்திரங் களில் வல்ல துரோணன், அரசைக் கவர்ந்திடாது - தருமராசனைக் கைப்பற்றுதபடி, காப்பது - பாதுகாத்தல், உன் கடன் - உனக்குக் கடமையாகும்: சயிந்தவனை செற்றல் - சயத்திரதனையழித்தொழித்தல், என் கடன் - எனக்குக்கடமை' என்று-என்று வலியுறுத்தி, இருத்தி- (சாத்தகியைத் தருமனிடம்) நிற்க வைத்து, முன்னவர் தாள் சென்னி சேர்த்து - தருமன் போன்ற பெரியோரின் திருவடிகளைச் சிரசால் வணங்கி, யார்க்கும் - (கூடியிருந்த) அனைவர்க்கும், இனிமை சொற்று - இனிய வார்த்தைகளை இதமுறச்சொல்லி; (எ.று.) "....முழக்கி" என மேலைச்செய்யுளிலியையும்.

சாத்தகியைத் தருமனுக்குக் காப்பாக அருச்சுனன் வைத்தது என்னையெனில், தருமனைக் கையகப்படுத்துதலே பகைவர்க்கு முக்கிய நோக்கமாதலின் என்க. நூல் - முப்புரிநூல் எனினுமாம். காப்பது, செற்றல் - தொழிற்பெயர்கள். முன்னவர் - தமையன் தருமன் போன்றோர். (6)

7. அருச்சுனன் உத்தமோசா உதாமன் புடைசூழத் துன்மருடணனை யெதிர்த்தல்.

ஓதமொத் தியங்க ளொலிப்பவுத் தமோசா
உதாமம னாதியோ ரடுப்ப
நாதமார் தேவ தத்தமு முழக்கி
நாணொலி படுத்திவெள் ளியசங்
கூதுமா யனைத்துன் முகன்மிசை யிரதம்
ஓட்டென வோட்டலு மவன்றன்
மீதுருத் தெதிர்ந்தான் கார்முகம் வணக்கி
வெங்கணை மங்குல்போற் பொழிந்தே.

(இ-ள்) ஓதம் ஒத்து இயங்கள் ஒலிப்ப - கடலைப் போலப் போர் வாச்சியங்கள் கோஷிக்க, உத்தமோசா - உத்தமௌஜஸ் என்பவனும், உதாமன் மன்-யுதாமந்யு என்னும் (பாஞ்சால) ராசனும், ஆதியோர் அடுப்ப - முதலானவர்கள் நெருங்கி வர, (அருச்சுனன்) நாதம் ஆர் தேவதத்தமும் முழக்கி - ஒலி மிகுந்த தேவதத்தமென்னும் தனது சங்கையும் ஊதி, நாணொலி படுத்தி - வில்லின் நாணினின்று டங்காரத்தொனியெழுப்பி, (பின்பு) வெள்ளிய சங்கு ஊது மாயனை - வெண்மையான பாஞ்சசன்னியத்தை யூதிச் சங்கநாதம் செய்யும் கிருஷ்ணனை, (நோக்கி) துன்முகன்மிசை - துன்மருடணன் மேல், இரதம் ஓட்டு என - தேரையோட்டுவாயாக என்று சொல்ல, ஓட்டலும் - (கிருஷ்ணன் அப்படியே) செலுத்தவும், அவன்தன் மீது உருத்து - அந்தத் துன்மருடணன்மீது கோபித்து, கார்முகம் வணக்கி -காண்டீபவில்லை வளைத்து, வெங்கணை-கொடிய அம்புகளை, மங்குல் போல் பொழிந்து- மேகம் போலே சொரிந்து, எதிர்ந்தான் - எதிரிட்டுத்தாக்கினான்; (எ.று.)

உதாமன் - யுதாமந்யு: வடசொல் திரிபு: இவன் துருபதனுக்கு நெருங்கின உறவினனான பாஞ்சாலராசன்: இச்சொல் போரிற் கோபமுடையானெனக் காரணப்பொருள்படும். 'வெள்ளிய சங்கூது மாயன்' என்ற விடத்துப் "பந்தார்விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்கப் பாரதத்துக் கந்தார் களிற்றுக் கழன்மன்னர் கலங்கச் சங்கம் வாய்வைத்தான்" என்றார் திருமங்கை மன்னனும் என்பது நினைக. உத்தமோசா - பாஞ்சாலனான க்ஷத்திரியன். உதாமன் + மன் = உதாமமன்: 'சில விகாரமாமுயர்திணை' (7)

8. துன்மருடணன் புறமிடத் துச்சாதனன் வந்து எதிர்த்து அருச்சுனனிடம் தோற்றேடுதல்.

அப்படை களினு லெப்படை களும்போய்
அங்கமெங் குங்கறை பொழியத்
தப்பிவென் னிடத்துன் முகனது துச்சா
தனனுணர்ந் தெதிர்ந்தவன் ஷுடையாற்
கைப்படு சிலேதேர் முதலிழந் தோடக்
கண்டவன் றனேநரன் சவைக்கண்
ஒப்பறு மெமைநீ துரும்பென மதித்த
வுரனெவ னேடனே ருரைப்பாய்.

(இ-ள்) அப்படைகளினுல் - (அருச்சுனன் விடுத்த) அந்த அம்புகளினுல், எ படைகளும் போய் - எல்லா ஆயுதங்களும் துண்டிக்கப்பட்டுப் போய், அங்கம் எங்கும் கறை பொழிய - உடம்பெங்கும் இரத்தம் பெருக, தப்பி - உயிர்பிழைத்து, துன்முகன் வென்னிட - துர்மர்ஷணன் முதுகு காட்டியோட, அது - (அவன்) புறமிடுதலே, துச்சாதனன் உணர்ந்து - துச்சாசனன் அறிந்து, எதிர்ந்து - (அருச்சுனனே)எதிர்த்து, அவன் தொடையால் - அவன் விடுத்த அம்புகளால், கைப்படு சிலே - கையிற்பிடித்த வில்லும், தேர் முதல் - தேர் முதலானவற்றையும், இழந்து ஓட - தவறவிட்டு ஓட, கண்டு-(அதனேப்) பார்த்து, நரன் - அருச்சுனன், அவன் தனே- அந்தச் துச்சாசனனே (நோக்கி) 'சவைக்கண் - பல ஆடவர் கூடிய சபையிலே, ஒப்பு அறும் எமை - நிகரற்ற [பாண்டவராகிய] எங்களே, நீ - நீசனுகிய நீ, துரும்பென மதித்த - கூளம் என்று எண்ணிய, உரன் எவன் -வலிமை எங்கே ? ஓடல் - ஓடாதே (நில்); நேர் உரைப்பாய் - என்னே நேராகப்பார்த்துச் சொல்வாய்;' (எ.று.)

ஆடவர் சபையிலே எங்களேத் துரும்பெனத் துச்சமாக வெண்ணிய வலிமை இப்போது எங்கே போயிற்று, ஓடாதே நின்றுசொல் என அருச்சுனன் துச்சாதனனே யேசினுனென்க. எவன் - வினவினேக்குறிப்புமுற்று. ஓடல் - அல்லீற்று எதிர்மறை வினேமுற்று. ஓடல் + நேர் - ஓடனேர் : 'னல முன்றனவும்... தநக்க ளாயுங் காலே "என்பது விதி : (நன் : மெய்யிற் : 34). உரைப்பாய்- முன்னிலேயேவல். (8)

9. அருச்சுனன் எதிர்ச்சேனையையழித்துத் துரோணனை நெருங்குதல்.

என்றவன் பின்போ யிருகணை யெய்தான்
யாதுமோ திலனவன் முனிபாற்
சென்றனன் நரனூற் சிதைந்த வாகினியுந்
தேயமன் னவருமெண் ணிலநேர்
நின்றவா ரியன்மாட் டடைந்துகை குவித்து
நெறிவிடென் றருச்சுனன் றுதிப்ப
நன்றுரைத் தனையென் றவனகைத் திகற்போர்
நடத்திட வவனுமேற் றனனூல்.

(இ-ள்) என்று-என்று (அருச்சுனன்) கூறி, அவன் பின்போய் - அந்தத் துச்சாதனன் பின்னூலே தொடர்ந்து சென்று, இருகணை எய்தான் - இரண்டு அம்புகளை விடுத்தான்: அவன் - அந்தத் துச்சாதனன், யாதும் ஓதிலன் - ஒன்றும் பேசவில்லை : (நேரே) முனிபால் சென்றனன் - துரோணனிடத்துப் போயினூன் : நரனூல் - அருச்சுனனூல், சிதைந்த - அழிக்கப்பட்ட, வாகினியும்- சேனையும், தேயமன்னவரும் - பல தேசத்து அரசர்களும், எண்ணில - கணக்கிலடங்கா : அருச்சுனன்—, (பிறகு) நேர் நின்ற ஆரியன்மாட்டு அடைந்து - தன்னையெதிர்த்து நேராக நின்றிருந்த துரோணனிடத்துச் சேர்ந்து, கை குவித்து - (தனது இரு) கரங்களையும் கூப்பி வணங்கி, நெறிவிடு என்று - வழியை விடுவாயாக என்று பிரார்த்தித்து, துதிப்ப - தோத்திரிக்க, (அப்போது) அவன் - அந்தத் துரோணன், நன்று உரைத்தனை என நகைத்து - நன்ருகச் சொன்னூய் என்று கூறிச்சிரித்து, இகல் போர் நடத்திட - வலிய போரைச் செய்ய முன் வர, அவனும் - அந்த அருச்சுனனும், ஏற்றனன் - போர் மேற்கொண்டான்; (எ.று). ஆல் - ஈற்றசை.

கேட்டவிஞூவிற்குப் பதில் சொல்லாமல் ஓடவே அவனை நிறுத்துதற்காக இருகணை யெய்தபடியேயன்றி, புறமுதுகிட்டோடியவன்மேல் அம்பு தொடுத்ததாகக் கொள்ளக் கூடாது. கை குவித்து நெறிவிடு என்றது - 'நான் போரிடவரல்லை, வழிவேண்டி வந்தேன்' என்று பிரார்த்தித்தபடி. நகைத்தது - எள்ளல்பற்றியது. நன்றுரைத்தனை - பிறகுறிப்பு. (9)

10. அருச்சுனனும் துரோணனும் போரிட்டிருப்ப, கிருஷ்ணன் துரோணனைவிலகித் தேரைமுன் செலுத்துதல்.

துரங்கத்தே ரிரண்டு மிடம்வலந் திரிந்து
சுழன்றிடத் துரோணமோ ரிரண்டின்
சரங்களு மோரோர் கோடிவந் துதையச்
செல்லுமோ ரிரண்டெதிர்ந் தனபோற்
குரங்குயர்த் தவனுங் குருவும்வெஞ் சமரங்
கொட்டுபோ தமலன்பற் குனனே !
நெருங்கம ரிங்கிப் பொழுதிலேம் தொல்லை
நெடுங்கொடி யிரதமுன் விடுத்தான்.

(இ-ள்) துரங்கத் தேர் இரண்டும் - குதிரைகள் கட்டிய தேர்கள் இரண்டும், இடம் வலம் திரிந்து சுழன்றிட - இடசாரியாகவும் வலசாரியாகவும் மண்டலமாகவும் சூழ உலாவிவர, துரோணம் ஓர் இரண்டின் -விற்கள் இரண்டினின்று, ஓர் ஓர் கோடி சரங்களும் வந்து உதைய - ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடிக்கணக்கான அம்புகளை விரைந்து வந்து செலுத்த, செல்லும் ஓர் இரண்டு எதிர்ந்தன போல் - மேகங்கள் இரண்டு தமக்குள்(ஒன்றோடொன்று) எதிர்த்துப் போரிடுவதுபோல,குரங்கு உயர்த்தவனும்-அருச்சுனனும், குருவும் - துரோணனும், வெம் அமரம் - கொடிய போரை, கொட்டு போது - நடத்துகின்ற பொழுது, அமலன் - கிருஷ்ணன், பற்குனனே - அருச்சுனனே ! நெருங்கு அமர் - நெருங்கிச் செய்யும் போரை, இங்கு -இப்பொழுது, இலேம் - இவ்விடத்து இப்போது விடுவோம் : (என்று சொல்லி) தொல்லை - சயத்திரதனுள்ள (மூன்று யோசனை) தூரமுள்ள இடத்திற்கு, நெடுங்கொடி இரதம்-நீண்ட (குரக்குக் கொடியையுடைய தேரினை, முன் விடுத்தான்-(துரோணனது வியூகத்தின் உள்ளே பாய்ந்து செல்லும்படி) முன்னால் மிக விரைவாக ஓட்டினான்; (எ.று.)

இடம்-இடசாரி : இடப்பக்கமாகச் செல்லுதல். வலம்-வலசாரி ; வலப்பக்கமாகச் செல்லுதல். திரிதல் - மண்டலமாதல்; முழுவதும் சுற்றுதல். அம்பு மழை பொழிதலில் துரோணார்ச்சுனர்க்குக் காளமேகம் உவமை, செல்-மேகம். மேகம் ஓரிரண்டு எதிர்ந்தனபோல்-இல்பொருளுவமை.கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கி'சயத்திரதன் நின்றுள்ள இடம் இவ்விடத்துக்கு மூன்று யோசனை தூரமுள்ளது.

அங்ஙனிருக்கையில், இந்தத் துரோணனோடு திறங்காட்டிப் பொருது கொண்டிருந்தால் சபதத்தை நிறைவேற்றுதல் அரிதாய்விடும். ஆனது பற்றி, இப்பயனில்போரை இவ்வளவோடு நிறுத்துவாய் என்று குறிப்பாகச் சொல்லிக்கொண்டே தனது தேர்க்குதிரைகளைத் துரோணனை விலகி அவனது வியூகத்தினுட் பாய்ந்து சென்று சேரும்படி விரைவாக முன் செலுத்தினனென விவரம் இங்கு அறிய வேண்டுவது. துரோணம்-வில். இலேம்-உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. (10)

வேறு.

11. பின்பு துரோணன் அருச்சுனனைத் தொடர, அவன் விநயமொழி கேட்டு விட்டிடக் காம்போசன்முதலானோர் பொரவருதல்.

தேசி கன்றொ டர்ந்து பின்னெ திர்ந்த போது சிலைவலான்
மாசில் வேத னடிப ணிந்து வஞ்சி னங்கெ டாதருள்
நீசெய் கென்ன விடைகொ டுப்ப நின்றி டாது சென்று காம்
போச னாதி மகிபர் வந்து பொர வெதிர்ந் துளானரோ.

(இ-ள்) தேசிகன் பின் தொடர்ந்து - துரோணாசாரியன் பின் தொடர்ந்து வந்து, எதிர்ந்த போது - எதிரிட்டபோது, சிலைவலான் - வில்லில் வல்ல அருச்சுனன், மாசு இல் வேதன் அடி பணிந்து - குற்றமற்ற துரோணனின் திருவடிகளை வணங்கி, வஞ்சினம் கெடாது - (யான் செய்துள்ள) சபதங்கெடாதபடி, நீ அருள் செய்க என்ன - நீ கிருபை செய்வாயாக என்று பிரார்த்திக்க, (அதற்கிசைந்து) விடை கொடுப்ப –அனுமதி கொடுக்க, நின்றிடாது சென்று - எங்கும் [இடையில்] நிற்காமற் போய், (பின்னர்) காம்போசன் ஆதி மகிபர் வந்து பொர - காம்போசமன்னன் முதலிய அரசர்கள் (தன்மேல்) வந்து போரிட, எதிர்ந்துளான் - (அவர்களை) எதிர்க்கலானான்; (எ.று) அரோ - ஈற்றசை.

"உமது சீடனாகிய அடியேன் செய்த சபதத்தை நிறைவேறச் செய்தல், குருவாகிய உமக்கு முறையன்றோ?" என்று அருச்சுனன் வணக்கமாகச் சொல்லி வேண்டவே, துரோணன் அவனுக்குச் செல்ல விடையளித்தனனென்க, இங்கே 'காம்போசன்' என்றவன் பெயர், ஜலசந்தனென்று முதனூலால் தெரிகின்றது. இவனும் கிருதவர்மாவும் துரியோதனனும் கர்ணனும் சூசிவியூகத்திற் பிரதானமாக நின்றனரென்று அந்நூலிற் கூறப்பட்டுள்ளது.

இதுமுதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள். (11)

12. அருச்சுனனைக் கிருதவன்மன் எதிர்த்தல்.

புக்க னேக தேய மன்னர் புறமி டச்செய் தணியுறை
மிக்க வீர ரோடு தானை வெள்ள நூறி யேறல்கண்
டக்க ணங்கி ருத வன்ம னமரு டற்ற வெம்பிரான்
இக்க ணங்கொல் விசய வென்ன விவனும் வாளி யேவினான்.

(இ-ள்) புக்கு - களத்திற்புகுந்து, அநேக தேயம் மன்னர் புறமிடச் செய்து - பல தேசத்தரசர்களையும் முதுகிட்டோடச் செய்து, உறை அணி மிக்க வீரரோடு - கவசமிட்ட பல வீரர்களோடு, தானை வெள்ளம் நூறி - சேனாசமுத்திரத்தை அழித்து (வற்றச் செய்து), ஏறல் கண்டு - மேலும் அருச்சுனன் முன்னேறி வருதல் கண்டு, அ கணம் - அந்தப்பொழுதிலே, அங்கு-அவ்விடத்து, ,கிருதவன்மன் அமர் உடற்ற - கிருதவர்மா போரினை (மேற் கொண்டு) செய்ய, எம்பிரான் - ஸ்ரீகிருஷ்ணபகவான், இ கணம் - இந்த க்ஷணத்திலே, விசய - அருச்சுனனே! கொல் - இந்தக் கிருதவர்மாவைக் கொல்வாயாக' என்ன-என்று சொல்ல, இவனும் - இந்த அருச்சுனனும், வாளி ஏவினான் - அம்பினைச் செலுத்தினான்;

உறை-கவசம். வெள்ளம்-ஒரு பெருந்தொகை என்னவுமாம். கிருதவன்மன்-நீட்டல். கொல்-முன்னிலையேவல்.

இதுமுதல் நான்கு கவிகள்-அந்தாதித் தொடை யமையப்பாடப் பட்டிருக்குமாறுகாண்க. இது - பொருட்டொடர்நிலையிடையிலே வந்த சொற்றொடர்நிலை. (12)

13. தளர்ந்த கிருதவன்மன் எழுந்து மீண்டும் போரிட்டு அருச்சுன னுக்கு உட்கவே, சுதாயு அருச்சுனனோடு பொருதல்.

ஏவு வாளி பட்டு மார்பி லிரதமீ தளர்ந்தவன்
ஆவி பெற்றெ ழுந்து தார்ம ணுதி மன்ன ரோடுபோர்
ஓவு ருது செய்து சைவ சாசி யம்பி லுட்கலும்
தூவி யம்பு விசயன் மேற்சு தாயுவந் தெதிர்ந்துளான்.

(இ-ள்) ஏவு - (அருச்சுனன்) விடுத்த, வாளி - அம்பு, மார்பில்- (தனது) மார்பில், பட்டு - பொருந்தி, இரதம் மீ- (தனது) தேரின் மீது, தளர்ந்து - சோர்ந்து (விழுந்து) அவன் -அந்தக் கிருதவன்மன், (மீண்டும்) ஆவி பெற்று எழுந்து - (ஒடுங்கிய மூச்சு வர) உயிர் பெற்றவன் போலெழுந்து, தார் மன் ஆதி மன்னரோடு - வலம்புரிமாலையையுடைய துரியோதனன் முதலாய அரசர்களோடு கூடி, (அருச்சுனனோடு) போர் ஓவுருது செய்து - போரினையொழியாமல் (மேலும் மேலும்) செய்து, (இறுதியில்) சைவசாசி அம்பில்-சவ்வியசாசியின் (அருச்சுனனின்) அம்பினால் (அடிபட்டு), உட்கலும் - அஞ்சிநடுங்கவும், (அதுகண்டு) சுதாயு-சுதாயு என்பவன், வந்து - போரேற்று வந்து, விசயன் மேல் - அருச்சுனன் மீது, அம்பு தூவி - பாணங்களை மிகுதியாகச் சொரிந்து, எதிர்ந்துளான் - எதிரிட்டு நின்றான் ; (எ.று.)

தார்-வலம்புரிமாலை : நஞ்சாவட்டைமாலை : இதனையுடையவன் துரியோதனன். சைவசாசி-சவ்வியசாசி என்பதன் சிதைவு. சவ்வியசாசி-ஸவ்யஸாசீ : வலக்கையினால் மாத்திரமன்றி இடக்கையினாலும் அம்பு தொடுப்பவன் : அருச்சுனன். சுதாயு - வருணபகவானுக்குப் பன்னவாதையென்பவளிடம் பிறந்த சிறந்த புத்திரனென்பர். ஓவு- தொழிற்பெயர் : ஓவுதல்-ஒழிதல். (13)

14. அருச்சுனன் அம்புகள் சுதாயுவின் உடம்பைத் துளைபடுத்தாமல் உதிர, அந்தச்சுதாயு அருச்சுனன் கலங்கும்படி ஒரு கதாயுதத்தை எறிதல்.

எதிர்ந்த போது சைவ சாசி யெய்யு மம்பு டற்படா
துதிர்ந்த மீள வெய்த வம்பு முவன்வி லக்கி வில்லிவில்
லதிர்ந்தி டச்செய் தங்க மார்ப கங்க லங்க வெஞ்சின
முதிர்ந்து மீள லவன்மீ தங்கொர் முனைக்கொ டண்ட
மேவினான்.

(இ-ள்) எதிர்ந்த போது - சுதாயு எதிர்த்தபோது, சைவசாசி- அருச்சுனன், எய்யும் அம்பு - செலுத்திய அம்புகள், உடல் படாது உதிர்ந்த - தேகத்தில் படாமலேயே (பட்டமாத்திரத்திலேயே என்றபடி) ஒடிந்து வீழ்ந்தன : (அருச்சுனன்) மீள எய்த அம்பும்- திரும்பவும் விடுத்த அம்பினை, உவன் விலக்கி - அந்தச் சுதாயு தடுத்து, (மேலும்) வில்லி - அருச்சுனனின், வில், காண்டீபத்தை, அதிர்ந்திடச் செய்து - நடுங்க வைத்து, வெஞ் சினம் முதிர்ந்து-

கொடிய கோபம் அதிகரித்து,(அருச்சுனனது) அங்கம் மார்பு அகம் கலங்க - உடம்பு மார்பினிடம் இவை வலிமை குலையும்படி, மீள - (மேலும்) அவன் மீது - அந்த அர்ச்சுனன் மேல், அங்கு - அப்பொழுது அவ்விடத்து, முனை கொள் ஓர் தண்டம் - கூரிய நுனியைக் கொண்ட ஒரு கதாயுதத்தை, ஏவினுன் - செலுத்தினுன்; (எ.று).

வரபலம்பெற்ற சுதாயுவின்மேல் அருச்சுனன் எய்த பாணங்களெல்லாம் அவனுடம்பைப் பிளந்து உட்சென்று ஊறுபடுத்த மாட்டாமல், அவனது வலிய உடம்பிற் பட்ட மாத்திரத்தால், தாம் கூர் நுனி மழுங்கிக் கீழ் விழுந்திட்டன என்பதாம். சுதாயு பகையைத் தவருமல் அழிக்க வல்லதொரு கதாயுதத்தையெடுத்து அருச்சுனன் மேலெறிந்தான். கொள் + தண்டம் = கொடண்டம்: "ளள வேற்றுமையில் றடவும், அல்வழியவற்ருேடுறழ்வும்" என்பது விதி, (நன் மெய்யீற் : 24). (14)

15. **சுதாயுவின் கதையைக் கிருஷ்ணன் மார்பில் ஏற்றலும் சுதாயு இறக்க, தேவர்கள் கிருஷ்ணன்மீது பூமழைபொழிதல்.**

ஏவு தண்ட மாசை பத்து முட்கு மாறு வருதல்கண்
டாவி சைவ சாசி யுய்ய வையன் மார்ப மேற்றலும்
மேவு தண்ட மீண்டெ றிந்த வீரன் சென்னி வீழ்ந்ததத்
தேவன் மீது பூவின் மாரி சிந்தி யும்பர் வாழ்த்தினுர்.

(இ-ள்) ஏவு தண்டம் - சுதாயுஎறிந்த கதாயுதம், ஆசை பத்தும் உட்குமாறு - திசைகள் பத்தும் அஞ்சி நடுங்கும்படி, வருதல் கண்டு- (அருச்சுனன் மீது) வருதலைப் பார்த்து, ஐயன் - கிருஷ்ணன், சைவகாசி - அருச்சுனன், ஆவி உய்ய - உயிர்பிழைத்திருக்கும்படி, மார்பம் ஏற்றலும் - (தன்) மார்பில் (அதனை) ஏற்றுக்கொள்ளவும், (உடனே) மேவு தண்டம் ஈண்டு எறிந்த வீரன் - பொருந்திய கதாயுதத்தை இங்கு வீசிய சுதாயுவின், சென்னி - சிரசு, வீழ்ந்தது - (தரையிலே) விழுந்திட்டது : (அதனைக்கண்டு) அ தேவன் மீது - அந்தக் கிருஷ்ணன் மீது, உம்பர் - தேவர்கள், பூவின் மாரி சிந்தி- பூமழைபொழிந்து, வாழ்த்தினுர், : (எ.று).

அருச்சுனன் மேலெறிந்த கதையை அவனுக்குப் பாகனுய் முன்நின்ற கண்ணன் தன்மார்பிற்படும்படி வலிய ஏற்றுக் கொண்டதன் சூழ்ச்சியென்னவென்பது மேலைக்கவியிற் குறிக்கப் படும். அஃதாவது - சுதாயு அழியாத வரம்பெற்ற காலத்தில், தன் ஆயுதம் நிராயுதர்மேற் பட்டால்மாத்திரம் தான் இறந்திடும்படி

விலக்கும் பெற்றவனுதலால், யாவு மறிந்த கிருஷ்ணபகவான், அருச்சுனனைத் தவருமற் கொல்லும்படி அவன் மேற் சுதாயு எறிந்த கதையைத் தன்மார்பில் ஏற்றுக் கொள்ள, கையிலாயுதமில்லாத அப்பெருமான்மேல் அப்படைக்கலம் பட்டமாத்திரத்திலே சுதாயு கீழ் விழுந்து இறக்க, அருச்சுனன் பிழைத்திட்டான்: இங்ஙனம் அடியவனைக் காத்தற்பொருட்டுச் சர்வஜ்ஞனுகிய கிருஷ்ணன் வரம்புகடந்து செய்த பெருங்கருணைத்திறத்தைக் கொண்டாடித் தேவர்கள் பூமாரி சொரிந்து வாழ்த்துக் கூறினரென்பதாம்.

ஆசை - திசை, திக்கு; திக்கிலுள்ளார்க்கு இடவாகுபெயர் பத்து திசைகள் - அட்டதிக்கும் மேலும் கீழும் ஆகியவை. உம்பர் - மேலிடம் : மேலிடத்திலுள்ள தேவர்க்கு இடவாகுபெயர். (15)

வேறு.

16. சுதாயுசெய்தியைக் கிருஷ்ணன் கூற, பின் சதாயு முதலியோர் அருச்சுனனையெதிர்த்து அழிதல்.

விடுமவனைப் படையடல்யா தெனமால் பார்த்த!
வெம்படைநி ராயுதர்மேல் விடிற்ற ஞவி
படவரமச் சுதாயுபெற் ருனென் ருன்முன்
பட்டதுணர்ந் தாற்ருது பார்த்தன் மீது
மிடலமர்செய் நயுதாயு சதாயு வென்போர்
விற்சுதரோ டிறந்தனர்வேல் வீரங் கூறி
அடுகணைமா மழைபெய்காம் போசன் வீந்தான்
அருச்சுனனே டெதிர்ந்தாவி யார்பெற் ருரே.

(இ-ள்) விடும் அவனை - கதாயுதத்தைச் செலுத்திய அந்தச் சுதாயுவையே, படை அடல் யாது என - அந்தக்கதை கொன்றது எப்படி என்று வினவ, மால் - ஸ்ரீ கிருஷ்ணன், பார்த்த! - அருச்சுனனே! வெம்படை - அந்தக் கொடிய கதையை, நிராயுதர் மேல் விடில் - ஆயுதமில்லாதவர் மீது எறிந்தால், தான் ஆவி பட- தன் உயிர் நீங்கும்படியான, வரம் - வரத்தை, சுதாயு பெற்ருன் - சுதாயு பெற்றிருந்தான், என்ருன் - என்று [காரணம்] கூறினுன்: (பிறகு) முன்-முன்பிறந்த தமையனுகிய சுதாயு, பட்டது உணர்ந்து - இறந்ததையறிந்து, ஆற்ருது - பொறுக்கமுடியாமல், பார்த்தன் மீது-

அருச்சுனனின் மேல், மிடல் அமர் செய் - வலிய போரிணைச்செய்த, நயுதாயு சதாயு என்போர் - நயுதாயு சதாயு என்னும் (சுதாயுவின்) இரு தம்பியர், வில் சுதரோடு - வில்லைப்பிடித்துத்தாமும் போரிட்ட தமது பிள்ளைகளோடு, இறந்தனர் - மாண்டனர் : (பின்பு) வேல் வீரம் கூறி - தனது வேலின் பராக்கிரமத்தைப் புகழ்ந்து பேசி, அடு கணை மா மழை பெய் - கொல்லவல்ல அம்புகளாகிய பெருத்த மழையைப் பெய்த, காம்போசன் - காம்போஜதேச மன்னன் சுதீக்கணன் என்பவன், வீந்தான் - (அருச்சுனன் கையால்) இறந்துபட்டான் : (இப்படி) அருச்சுனனோடு—, எதிர்ந்து - எதிரிட்டுப்போராடி, யார் - எவர்தாம், ஆவி பெற்றுர் - உயிரோடு பிழைத்தவர் ? (ஒருவருமிலர்) ; (எ.று.)

வில்சுதர் என்றது - அவ்விருதம்பியரின் புதல்வர்களாகிய நியுதாயு தீர்க்காயு என்ற இருவரை. இந்தவிடத்து வியாசபாரதம் கூறுவதாவது - காலிங்கரான ச்ருதாயு அச்யுதாயு என்றவரிருவரும் அவர்கள் புத்திரரான நியுதாயு தீர்க்காயு என்ற இருவரும் முறையே அருச்சுனனுடன் எதிர்த்து மாண்டனர் என்பது. முன் - முன்பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். அடுகணை - வினைத்தொகை.

இதுமுதல் மூன்று கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரியவிருத்தங்கள். (16)

17. பின்பு பலஅரசர் திரண்டு அருச்சுனனை எதிர்த்தல்.

கண்டிதையாற் றிலனரசன் அழன்றங் கேவுங்
கலிங்கர்சோ னகயவனர் மிலேச்ச ராதி
மண்டலிக ரனிகமொடு வளைந்து வாளி
மழைபெய்தார் நரனகைத்து வாயு வாளி
கொண்டெய்தான் சூறைபட்ட சருகு போன்றுங்
கொடுவிடங் கண் டகலும்பர் குழாம்போன் றோட
அண்டர்பதி யிற்புகத்தெண் ணிலர்ச்செற் றப்பால்
அளப்பிலர்சூ ழலும்படையோ டாவி கொண் டான்.

(இ-ள்) இதைக்கண்டு - இங்ஙனம் பலபேர்கள் (அருச்சுனனுல்) கொல்லப்பட்டதைப்பார்த்து, அரசன் - துரியோதனராசன், ஆற்றிலன் - பொறுக்கமுடியாதவனுய், அழன்று-கோபித்து, அங்கு-அவ்விடத்து, ஏவும் - போரிடுதற்கு அனுப்பிய, கலிங்கர் - கலிங்க தேசத்தவர், சோனகர் - சீன தேசத்தவர், யனவர் - யவன தேசத்தவர், மிலேச்சர்- மிலேச்ச தேசத்தவர், ஆதி - முதலாய தேசத்தவர்களின், மண்டலிகர் - அரசர்கள், அனிலமொடு, வளைந்து- தத்தமது சேனைகளோடு சூழ்ந்துகொண்டு, (அருச்சுனன் மேல்) வாளி மழை பெய்தார்-அம்புமாரியைப் பொழிந்தார்கள்; (அப்போது) நரன்-அருச்சுனன், நகைத்து - (பரிகாசமாகச்)சிரித்து, வாயு வாளிகொண்டு எய்தான்-வாயவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்தான் : (அதனுல் வந்த தேசத்தரசர்கள்) சூறைபட்ட சருகு போன்றும் - பெருஞ்சுழற்காற்றி லகப்பட்ட உலர்ந்த இலைகளைப்போலவும், கொடு விடம் கண்டு அகல் உம்பர் குழாம் போன்று (உம்) - கொடிய ஆலகால விஷத்தைக் கண்டு நீங்கிப்போன தேவர்கள் கூட்டம் போலவும், ஓட - புற முதுகிட்டோடிப்போக, (மேலும்) எண் இவர் - கணக்கற்ற பல பேர்களை, அண்டர் பதியிற்புக - சுவர்க்கத்திற் போய்ச்சேரும்படி செற்று - கொன்றழித்து. அப்பால் - அதன்மேலும், அளப்பிலர் - அளவுபடாத பலபேர்கள், சூழலும் - தன்னைச் சூழ்ந்துவளைந்து கொள்ளவும் (அவர்களையெல்லாம்) படையோடு - (அவர்களது) சேனைகளோடு, ஆவி கொண்டான் - உயிரொழியச் செய்தான்; (எ.று.).

மிகப்பல அரசாற் சூழப்பட்ட அருச்சுனன் தான் ஒருவனுகவே அவ்வளவு பேரையும் எதிர்த்து வில்வளைத்து வாயவ்வயாஸ் திரத்தைத் தொடுத்து, காற்றிலகப்பட்டசருகு போலவும், ஆலங்கண் டஞ்சிய தேவர்போலவும் சிதறவோடவைத்தான் : மற்றும் எதிர்த்த பலரை வானுலகேற்றியும், வளைந்தபல்லோரை ஆவி போக்கியும் வென்று நின்ருன் என்றபடி. வாளிமழை - உருவகம். மூன்ரு மடியில் உவமையணி காண்க. அண்டர் பதியின் புகச் செற்று - மங்கல வழக்கு. நரன் நகைத்து என்ற விடத்து - 'உவரிளலிப் பகை நாக முயிர்ப்பக்' கெடும் என்ற குறளை நினைக, வாயவ்யாஸ்திரம்-வாயுவைத் தெய்வமாகவுடைய அஸ்திரம். (17)

18. படுகளப்புச்சிறப்பும் அருச்சுனன் அங்கு ஓர் தடாகம் உண்டாக்கலும் கூறுதல்.

சூழ்ந்தமர்செய் விந்தரனு விந்தர் தம்மைச்
சுடர்மவுலிச் சிரந்துணித்துத் துணையா வாரை
வீழ்ந்திடச்செற் றுதிரத்தின் வேலை பாய
விருந்தருந்தி யலகைநரி வெம்பு ளாலி

வாழ்ந்திட வெஞ் சமர்வென்ற நரனைப் பாய்மா
வனமருத்தில் வாவுமிக வெனமால் கிரீடி
தாழ்ந்தசடை யரனருண்மா மறையா லங்கோர்
தடஞ்செய்தான் வருணசரந் தனையுய்த் தம்மா.

(இ-ள்) சூழ்ந்து - தன்னை வளைந்து கொண்டு, அமர்செய்- போர் செய்கின்ற, விந்தர் அனுவிந்தர் தம்மை - விந்தர் அனு விந்தர் என்ற அவந்தியரசர்களை, அடர் மவுலிச்சிரம் துணித்து - ஒளிவிடுகின்ற கிரீடந்தரித்த தலை துணித்து, (மற்றும்) துணையாவாரை - அவர்களுக்குத் துணையாக வந்த அரசர்களையும், வீழ்ந்திடச் செற்று - தரையில் விழும்படி கொன்று, (அவர்களது) உதிரத்தின் வேலை பாய - இரத்தத்தின் அலைகள் பாயும்படி செய்து, (மேலும்) அலகை - பேய்களும், நரி - நரிகளும், வெம் புள் - கொடிய கழுகு முதலிய பறவைகளும், ஆலி - பூதங்களும், விருந்து அருந்தி - நிணம் தசைமுதலிய வற்றை விருந்தாகவுண்டு, வாழ்ந்திட - களித்து வாழும்படி செய்து, வெம் சமர் வென்ற நரனை - கடியபோரினைச் செயித்த அருச் சுனனை, மால்-கிருஷ்ணன் (பார்த்து) 'வனம் அருத்தில் - நீர் உண்பிப்பாயானல், பாய் மா - (உனது தேரிற்கட்டியுள்ள இந்தப்) பாய்ந்து செல்லும் குதிரைகள், (களைப்பு நீங்கி), மிக வாவும்- மேலும் மிகுதியாகத் தாவி விரையும்' என - என்று கூற, (அதனைக் கேட்ட) கிரீடி - அர்ச்சுனன், தாழ்ந்த சடை அரன் - தொங்குகின்ற சடைகளையுடைய சிவபெருமான், அருள் - கொடுத்த, மா மறையால் - சிறந்த மந்திரத்தால், அங்கு - அந்தப் போர்க் களத்தில், வருணசரம்தனை உய்த்து - வாருணாஸ்திரத்தை விடுத்து, ஓர் தடம் செய்தான் - ஒரு தடாகத்தையுண்டாக்கினான்; (எ.று.) அம்மா-வியப்பிடைச்சொல்.

விந்தரனுவிந்தர் - அவந்தியரசர்: இது வடநூலிற்கண்டது. வேலை - அலை: "வேலைப்புணரி" (திவ்யப்: திருவிருத்தம், 75) ஆலி - பூதம். வனம் - நீர்: வடசொல்.

அரன் அருளிய மறை - உருத்திரமந்திரம். வருணசரம் - வாருணாஸ்திரம்: நீர்க்கடவுளாகிய வருணனைத் தெய்வமாக வுடைய அஸ்திரம். அலகைநரிபுளாலி - உம்மைத்தொகை. மா வாவும் என இயையும். அம்மா - களத்துக் குளந்தொட்ட வியப்பு: இடைச்சொல். (18).

வேறு.

19. கிருஷ்ணன் தேர்க்குதிரைகளை நீர்பருகுவித்துத் தாமும் நீர் பருகி இளைப்பாறுதல்.

தேர்வாசியை நெகிழாவரி சிலையானொடு திருமாற்
பார்போற்றுறு மலர்வாவியிற் பரிக்கூட்டுபு தாமும்
நீர்மாந்தியங் கணைவார்தரு நிழற்கட்புகுந் தயர்வு
தீர்ந்தாரர சுணர்ந்தேநரன் றிறல்வென்னிடு மவரால்.

(இ-ள்) தேர்வாசியை - தேரிற்கட்டியுள்ள குதிரைகளை, நெகிழா - (கட்டுக்களை) அவிழவிட்டு, திருமால் - கிருஷ்ணன் வரி சிலையானொடு - வரிந்துகட்டப்பட்ட வில்லினையுடைய அருச்சுனனோடு, பார் போற்றுறும் மலர் வாவியில் - பூவுலகத்தவர் மெச்சும்படியான தாமரைத் தடாகத்தில், பரிக்கு ஊட்டுபு - குதிரைகளைக் குடிப்பித்து, தாமும் நீர் மாந்தி - தாமும் நீரருந்தி, அங்கு - அவ்விடத்து, தரு நிழற்கண் அணைவார் புகுந்து – ஓர் மரத்தின் நிழலிலே சேர்ந்தவராய் நுழைந்து, அயர்வு தீர்ந்தார் - களைப்பு நீங்கினார்கள் : (இஃது இங்ஙனாக) அரசு - துரியோதனன், வென்னிடும் அவரால் - புறமுதுகிட்டோடி வந்தவர்களால், நரன் திறல் உணர்ந்து - அருச்சுனனுடைய பராக்கிரமத்தை யறிந்து; (எ, று.) 'ஆற்றுதுள நொந்து'' என மேலைக்கவியிற்குளகமாய்த் தொடரும்.

கண்ணன் குதிரைகளை நீர்குடிப்பித்து அக் குதிரைகளின் இளைப்பைத் தீர்த்துத் தானும் நீர்பருகி இளைப்பாறினனென் பதாம். தாமும் - உம்மை இறந்தது தழீஇயது. இனி, நரனையுளப் படுத்தியதுமாம். நெகிழா - உடன்பாட்டெச்சம். ஊட்டுபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

இது முதல் ஐந்து கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச்சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** (19)

20. துரியோதனன் துரோணனையடுத்துக் குறை கூறுதல்.

ஆற்றுதுள நொந்தாரிய னடிசேர்ந்துப ணிந்தே
நீற்றுனல தியாரொப்பவர் நினைநீயிவ ணின்றென்
கூற்றுமென வமர்செய்நரன் கூர்வாளியி னமது
நாற்றுனையில் விறன்மன்னரி னண்ணாரில விண்மேல்.

(இ-ள்) (பொறுக்க முடியாமல்), ஆற்ருது - தமது சேனைகள் புறமிட்டோடி வந்ததற்குப் உளம் நொந்து - மனம் வருந்தி, ஆரியன் அடி சேர்ந்து - துரோணுசாரியன் திருவடிகளையடைந்து, பணிந்து - வணங்கி, நினை - உம்மை, நீற்ருன் அலது - சிவபெருமானேயன்றி, யார் ஒப்பவர் - நிகர்ப்பவர் எவர் (ஒருவருமிலர்): (அப்படிப்பட்ட) நீ - நீர், இவண் நின்று என் - இச்சேனை முகத்து நின்று என்ன பயன்? (ஒன்றுமில்லை): கூற்ருமென அமர் செய் நரன் - யமனென்னும்படி போரிடுகின்ற அருச்சுனனது, கூர் வாளியின் - கூர்மையான அம்பிருல், நமது நால் தானையில் - நம்முடைய நால்வகைச் சேனையில் உள்ள, விறல் மன்னரில் - வலிமைமிக்க அரசர்களுள், விண்மேல் நண்ணுர் இலை - சுவர்க்கஞ் சேராதார் இலர்: (அனைவரும் மாய்ந்தனர்). (எ. று.)

திரிபுரத்தையெரித்து நீறு செய்தவனுதலின், சிவபெருமானை 'நீற்ருன்' என்ருர். இனி, நீறு பூசியவன் என்றுமாம். என - உவமவுருபு. கூர்வாளி - உரிச்சொற்ருெடர். விண்மேல் நண்ணுரிலை - பிறதினவிற்சி. (20)

21.-22 துரோணன் பலகூறிக் கவசமளித்ததைக் கூறும்.

இரண்டு கவிகள் — ஒரு தொடர்.

இனுநின்றவர் தம்மோடெனதிளையாடலைவனையும்
முனைவென்றுயிரளியின்றென முனியோதுவன் முதுவர்
இனிதோதென மறுத்தாதவனீன்ருேனெடு மாமன்
தனைநம்புயெனைநொந்திடில் தரமோவெல நரனை.

(இ-ள்) இனும் நின்றவர் தம்மோடு - இன்னும் உயிரோடு இருக்கின்ற மன்னர்களோடு சேர்ந்து, எனது இளையாள் தலைவனையும் - என்னுடைய தங்கையாகிய துச்சளைகணவனையும் (சயத்திரதனையும்) முனைவென்று - (பகைவர்) முனைகளைச் செயித்து, இன்று உயிர் அளி என -, இன்றைத் தினம் (அவனுக்கு) உயிர் காப்பாற்றிக் கொடுப்பாய் என்று வேண்ட, (அது கேட்டு) முனி - துரோணன், ஓதுவன் - கூறுவான்: 'முதுவர் - வீடுமன் விதுரன் போன்ற பெரியோர்கள், இனிது ஓது என - இன்சொற்களைச்சொல் (வெஞ்சொல் பேசாதே) என்று சொல்லவும், மறுத்து - அவர் கூறிய நல்லுபதேசங்களையேற்க மறுத்து, ஆதவன் ஈன்ருேனெடு - கர்ணனேடு, மாமன் தனை நம்புபு - சகுனியையும் நம்பி, (அவர்கள் பேச்சையே கேட்டொழுகிய நீ), எனை நொந்திடில் -

(இப்போது) என்னைக் குறை கூறி வருந்துவாயானால், (அது) நரனை வெல தரமோ?- அருச்சுனனை வெல்லும் உபாயமாகுமோ? (ஆகாது) : (எ. று.)

வீடுமன் போன்ற பெரியோர் சொல்லைக் கேளாதுமறுத்து துட்டர் பேச்சைக் கேட்டொழுகிய நீ என்னைக்குறைகூறி நோதலில் பயனில்லையே எனக் குத்திக் காட்டியபடியென்க, இனும் - இன்னும் என்பதன் இடைக்குறை. அளி - முன்னிலைவியங்கோள். நம்புபு - செய்பு என்னும் வினையெச்சம். தரமோ, ஓகாரம்-எதிர்மறை. (21)

22. வலை பீறிய பெருவாளைகள் வான்பாய்ந்திளங்
கமுகின்
குலைசாய்த்தலர் மரைதுஞ்சிடு குளிர்செய் குருநாடா!
சிலையானரன் மொழிசூண் முடி வெவ்வாறென
வறியோம்
மலை போரினி யஞ்சேலென வழங்காவொரு கவசம்.

(இ-ள்) வலை பீறிய பெரு வாளைகள் - (தம்மைப்) பிடிக்க வீசிய வலையைக்கிழித்து வெளிவந்த பெருத்த வாளைமீன்கள், வான் பாய்ந்து - ஆகாயத்தில் உயரப் பாய்ந்து, (அங்ஙனம் பாயும் போது) இளங்கமுகின் குலை சாய்த்து - இளைய பாக்குமரங்களின் குலைகளைச் சிதற வீழ்த்தி, [பின்னர் தரைக்கு வந்து நீர்நிலையிலுள்ள] மரை அலர் துஞ்சிடும் - தாமரைமலரிலே உறங்குகின்ற, குளிர் செய் - குளிர்ச்சி பொருந்திய, குருநாடா! குருநாட்டின் அரசனே! - (துரியோதனனே!) சிலையான் நரன் - வில்வல்ல அருச்சுனன், மொழி - சொன்ன, சூள் - சபதத்தின், முடிவு - பூர்த்தி, எவ்வாறு - எப்படியாகும் என - என்று, அறியோம் - (நமக்குத்) தெரியாது; (எனினும்) இனி - இனிமேல், (நீ) போர் மலை- போர் செய்வாயாக: அஞ்சேல் - பயப்படாதே, என - என்று ஊக்கமூட்டி, ஒரு கவசம் - ஒரு (சிறந்த) கவசத்தையும், வழங்கா - கொடுத்து; (எ.று.). 'மடியாது' என மேலைக்கவியில் தொடரும்.

முதலிரண்டடிகளால் பெறலாகும் உள்ளுறை பொருள் — பகையணி வகுப்புக்களைப்பிளந்து மேலே பாய்ந்து அவர்களை வெட்டி வீழ்த்திப்பின் வெற்றியொடு பாசறை திரும்பி நிம்மதியாக உறங்குவாய் என்பது. மலை - முன்னிலையேவல்: அஞ்சேல் - முன்னிலையெதிர்மறை. (22)

23. கவசத்தின் சிறப்புக்கூறித் துரியோதனனை விடுப்ப, இருபாலாரும் போரிடலாதல்.

வரத்தாற்பெறு கவசம்மிது மடியாதமர்க் கேகென்
றுரைத்தான்மகிழ்ந் தரசேகின னுரைப்பர்முனி பொருபோர்
பரித்தேர்கரி பரியாளொடும் பாய்ந்தா ரிருபாலார்
தெரித்தாண்மைகள் மலைந்தாரிரு சேனுபதி களுமே.

(இ-ள்) இது வரத்தால் பெறு கவசம்-இந்தக் கவசம் சிவபிரான் அருளிய வரத்தாலே வரப்பெற்ற கவசமாகும்; அமர்க்கு மடியாது-போரில் அழியாது: (ஆகவே) ஏகு - (நீ போர்க்குச்) செல்வாயாக, என்று உரைத்தான் - என்று (துரோணன்) கூறினன்: அரசு - துரியோதனன், மகிழ்ந்து ஏகினன் - களிப்போடு (போர்க்களஞ்) சென்ருன்: முனி - வைசம்பாயன முனிவர், பொருபோர் - செய்த போரின் போக்கினை, உரைப்பர் - மேலும் (ஜனமேஜயனுக்கு) கதையுரைப்பார்:

பரித்தேர் கரி பரி ஆளொடும் - விரைந்து செல்லும் ரத கஜதுரகபதாதிகளோடும், இருபாலார் - இருபக்கத்துச் சேனையிலுள்ளாரும், பாய்ந்தார் - மோதினுர்கள்: (அப்போது) இரு சேனுபதிகளும் – இருபக்கத்துச் சேனைத்தலைவர்களாகிய திட்டத்துய்மனும் துரோணனும், ஆண்மைகள் தெரித்து - (தத்தம்) பராக்கிரமங்களை வெளிப்படையாகச் சொல்லி, மலைந்தார் - போரிட்டார்கள், (எ.று.)

முன்பு இந்திரன் முதலிய தேவர்கட்கும் விருத்திராசுரனுக்கும் நடந்த பெரும்போரில் அசுரனுற் சிதைவடைந்த தேவர்கள் திருமாலின் கட்டளைப்படி பிரமனுடன் மந்தரமலையையடைந்து சிவபிரானைச் சரண் புகுந்தனர்: அப்பெருமான் தனது மேனியினின்று தோன்றியதொரு சிறந்த கவசத்தை மந்திரபலத்துடனே அளித்தருளினுன்: எந்த ஆயுதத்தாலும் அழிக்கப்படாத அதனைத் தரித்துத் தேவேந்திரன் விருத்திரனையெதிர்த்துப் பொருது கொன்றனனென்றும், அதன்பின் இந்திரன் அக்கவசத்தை அங்கிரசுக்குக் கொடுக்க, அங்கிரசு தன் குமாரனுன பிருகஸ்பதிக்குத்தர பிருகஸ்பதி அக்னிவேச்ய முனிவனுக்கு அருள, அம்முனிவன் தன் மாணுக்கனுன துரோணனுக்கு ஈந்தருளினனென்றும் முதனூலில்

விவரங் கூறப்பட்டுள்ளது. 'உரைப்பர் முனி பொரு போர்' என்றது இடைப்பிறவரல் : கதைத் தொடர்ச்சி அப்போதைக்கப்போது ஞாபகமூட்டுதற்காக என்க. (23)

வேறு.

24. துரோணனும் திட்டத்துய்மனும் போரிட, சாத்தகி திட்டத் துய்மனுக்கு உதவ வருதல்.

மண்டலம்விண் டலமறையக் கறையா லம்பால்
வளைப்பவராய் முடியும்பர் துளக்கச் சென்னி
கொண்டுசிலை யிருவோருஞ் சமர்செய் காலைக்
குருசரத்தா லனற்பிறந்தோன் குனிவின் மாள
மண்டியெரிந் தெடுத்தீர்வாள் பலகை மற்றோன்
வயப்பரிநான் குந்துணித்தான் மணித்தேர் பாய்ந்தே
கண்டுமுனி வாட்டுணிப்பக் கைசோர் வானுங்
களிப்ப வொரு தேர்வருமாற் கனிட்டன் றன்னை.

(இ-ள்) மண்தலம் விண்தலம் கறையால் மறைய - பூமியும் ஆகாசமும் இரத்தத்தினால் மறையும்படி அம்பால் - அம்புகளினால், வளைப்பவராய் - சூழத்தடுப்பவராய், சிலை கொண்டு - வில்லினைக் கையிலேந்தி, இருவோரும் - துரோணனும் திட்டத்துய்மனும், முடி உம்பர் சென்னி துளக்க - கிரீடந்தரித்த தேவர்கள் தமது தலைகளையசைத்துப் பாராட்டும்படி, சமர் செய் காலை - போரினைச் செய்யும் பொழுது, குரு சரத்தால் - துரோணன் (விடுத்த) அம்பினால், அனல்பிறந்தோன் - திட்டத்துய்மனது, குனி வில் மாள - வளைத்த வில் முறிய, (அவன்) மண்டி - நெருங்கி, எரிந்து - கோபித்து, ஈர்வாள் பலகை எடுத்து - பிளக்கின்ற வாளையும் கேடயத்தையும் (கையில்) எடுத்து, மற்றோன் - துரோணனுடைய, மணித்தேர் பாய்ந்து - அழகிய தேரின் மேலே விரைந்து சென்று, வயப்பரி நான்கும் துணித்தான் - வலிய குதிரைகள் நான்கினையும் வெட்டி வீழ்த்தினான் : (இதனை) முனி கண்டு - துரோணன் பார்த்து, வாள் துணிப்ப - (அவன் கைப்பிடித்த) வாளைத்துண்டிக்க, கை சோர்வானும் - (அந்த அதிர்ச்சியால்) தனது கைகள் தளர்ந்து போன திட்டத்துய்மனும்,

களிப்ப - மனமகிழும்படி, (சமயத்தில் உதவுமாறு) ஒரு தேர் வரு- ஒரு தேரின் மேலேறி வந்த, மால்கனிட்டன் தன்னை-கிருஷ்ணனின் தம்பியாகிய சாத்தகியை; (எ.று) சுருதிமுனி "தடுத்தான்" என மேலைக்கவியில் தொடரும்.

தனது வில் அற்றுப்போகவே, திட்டத்துய்மன் வாள் கொண்டு பொர, அவ் வாளினையும் துண்டிக்கவே திட்டத்துய்மன் கை சோர்ந்தான். அப்போது சாத்தகி அவனுக்கு உதவ வந்தா னென்றபடி. போர்காணும் தேவர்கள் சென்னி துளக்குதல் - இருவர் பொருந்திறல் கண்டு. ஈர்வாள்பலகை உம்மைத்தொகை. "வய வலியாகும்" (தொல்: சொல் : உரி : 70)சோர்வான்-வினையாலணை யும்பெயர்.

இதுமுதல் பத்துக்கவிகள் — பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர் களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத் தங்கள். (24)

25. துரோணனும் சாத்தகியும் சமமாகப் போரிடுதல்.

சுருதிமுனி சரமழையாற் றடுத்தான் அன்னோன்
தோடுடிப்ப மனங்கொதிப்பத் துரோணம் வாங்கி
வருதியென வாயிரமம் புய்த்தா னயர்வு
மற்றவனோர் விலக்கி யொரு வாளி மார்பிற்
குருதியுக விடவரசோர் கணைமார் பெய்து
குலைத்திடத்தே ரையுமுனிபின் கொண்டோர் தேர்மேல்
மருதிடந்தோ னனுசன்தேர் சிலையும் போக்க
மற்றொருதேர் புகுந்தவனும் மலைந்தான் மன்னோ.

(இ-ள்) சுருதி முனி - துரோணாசாரியன், சரமழையால், - அம்பு மழையால், தடுத்தான் - (சாத்தகியைத்) தடை செய்தான். அன்னோன் - அந்தச் சாத்தகி, தோள் துடிப்ப - தனது தோள்கள் துடிக்க, மனம் கொதிப்ப - (கோபத்தால்) மனமழல, துரோணம்

வாங்கி - ஒரு வில்லை வளைத்து, வருதி என - (என்மேல்) வருவாயாக என்று கூறி, ஆயிரம் அம்பு உய்த்தான் - பல அம்புகளைச் செலுத்தினான் ; அயர்வும் அற்றவன் - (திட்டத்துய்மன் கை சோர்ந்து தளர்ந்தது போல்) தளராத துரோணனும், நேர் விலக்கி - அந்தப் பல அம்புகளையும் நேரே நின்று தள்ளி, (அதற்கு மாறாக) ஒரு வாளி - ஒரே ஒரு அம்பை, மார்பில் குருதி உக விட - மார்பினின்று இரத்தம் ஒழுகுமாறு செலுத்த, அரசு - சாத்தகி, ஓர் கணை மார்பு எய்து - ஒரே அம்பை (துரோணன்) மார்பின்மேல் பிரயோகித்து தேரையும் குலைத்திட - (அவனது) தேரையும் சிதைக்க, முனி-துரோணன், பின்-பிறகு, ஓர் தேர்மேல் கொண்டு - ஒரு தேரின் மேலேறிக்கொண்டு, மருது இடந்தோன் அனுசன் - [இரட்டை] மருதமரங்களைச் சாய்த்த கிருஷ்ணன் தம்பியாகிய சாத்தகியின், தேர் - தேரினையும், சிலையும் - வில்லையும், போக்க - அழிக்க, அவனும் - அந்தச் சாத்தகியும், மற்றொரு தேர் புகுந்து - வேறொரு தேரின் மேலேறி, மலைந்தான் — போரிட்டான் ; (எ.று.). மன், ஓ - ஈற்றசை.

சாத்தகியை அரசு என்றது - அவன் யதுகுலத்தரசர்களில் வசுதேவனுக்கு உடன்பிறந்த முறையாகின்றவனும் சிநியென்பவனது மகனுமான சத்தியகனது குமாரனாதலால் என்க. இவன் பிராயத்திற் கிருஷ்ணனினும் இளையனாதலால் கிருஷ்ணனுக்குத் தம்பி முறையாவன். இவனுக்கு யுயுதாநனென்றும். சைநேயனென்றும், இரு பெயர்களுண்டு. சரமழை - உருவகம். தோள் துடித்தல் ஈண்டு சினத்தினாலென்க. துரோணம் - வில் வருதி - முன்னிலையேவல் : அறை கூவலில் வந்தது, ஆயிரம் - பல என்றபடி. அற்றவன் - வினையாலணையும்பெயர்.

மருதிடந்தோன் என்பதிலடங்கிய கதை :-

ஒரு நாள், யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற் கட்டி ஓருரலிலே பிணித்துவிட கண்ணன் அவ்வுரலையிழுத்துக் கொண்டு தவழ்ந்து, அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவிலே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவிலே, முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன் மணிக்கிரீவன் என்னுங் குபேர புத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர் என்பதாம். (25)

26. துரோணனும் மதிக்கச் சாத்தகி போரிடல்.

சிரந்துளக்கச் சுரரரச ரம்ம வென்னச்
சிலைகோலிச் சாத்தகிப்பேர்த் திறலோன் கோடி
சரந்தொடுத்தான் குரவனழற் புங்க மொன்று
தனையெய்தான் எண்டிசைவான் றரைமற் றெங்கும்
பரந்தெழுந்து நாற்றானைக் காய்ந்து தன்மேற்
படர்ந்திடல்கண் டவன்வருணப் பகழி கோத் தான்
சொரிந்ததழ லவிந்தடங்கிற் றதுகண் டாசான்
தோன்றல்புய வலிமதித்தே துதித்திட் டானால்.

(இ-ள்) சிரம் துளக்க - தலையசைத்துப்பாராட்டும்படி சுரர் அரசர் - தேவர்களும் பூவுலகவரசர்களும், அம்ம என்ன -அதிசயிப்ப, சாத்தகிப்பேர்திறலோன் - சாத்தகியென்னும் நாமமுடைய வீரன், சிலை கோலி - (தன்) வில்லை வளைத்து, கோடி சரம் தொடுத்தான் - பல அம்புகளைத் தொடுத்துவிட்டான் : (அவைகளுக்குமாறாக) குரவன் - துரோணாசாரியன், அழல் புங்கம் ஒன்று-ஆக்நேயாஸ்திர மொன்றை, எய்தான் - பிரயோகித்தான் : (அந்த அஸ்திரம்) எண் திசை - எட்டுத்திக்குக்களிலும், வான் - ஆகாசத்திலும், தரை - பூமியிலும், மற்று எங்கும் - [பாதலம் போன்ற] ஏனைய இடங்களிலும், பரந்து எழுந்து - வியாபித்துப் பொங்கி, நால் தானை காய்ந்து - நாற்படைகளையும் எரித்தழித்து, தன்மேல் படர்ந்திடல் கண்டு - தன்மேல் எதிர்த்து வருதலைப் பார்த்து, அவன் - சாத்தகி, (அந்த அஸ்திரத்திற்கு மாறாக) வருணப் பகழி கோத்தான் - வாருணாஸ்திரத்தைத் தொடுத்தான், (அதனால்) சொரிந்த தழல் - (ஆக்நேயாஸ்திரம்) பொழிந்த நெருப்பு, அவிந்து அடங்கிற்று-தணிந்து ஒடுங்கியது அது கண்டு -(தான் விடுத்த அஸ்திரம்) ஒடுங்கிய அச்செயல் கண்டு, ஆசான் - துரோணாசாரியன், தோன்றல் - சாத்தகியின், புயவலி மதித்து - தோள்வலிமையைப் பெரிதும் மெச்சி, துதித்திட்டான் - போற்றினான்; (எ.று)ஆல் - ஈற்றசை.

ஆக்நேயாஸ்திரம் நெருப்பைச்சொரியும்; அதற்கு மாறாக வாருணாஸ்திரம் மழையைச்சொரியும் அழல் - நெருப்பு. புங்கம்-அம்பு. சொரிந்த - பெயரெச்சம். சாத்தகியின் புயவலி பகைவராலும்

மதித்துப்போற்றத்தக்கது என்றபடி. 'அம்ம' என்பது - அதிசயக் குறிப்பு, கோடி - பன்மை தெரிப்பது. பரந்து, எழுந்து, காய்ந்து என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'படர்ந்திடல்' என்ற தொழிற்பெய ரோடு முடியும். தோன்றல் - ஆண்பாற்சிறப்புப் பெயர். (26)

27. நகுலசகதேவரும் பின்னர் தருமனும் வந்து துரோணனுடன் போர்செய்தல்.

மாத்திரைபுத் திரரளப்பி லரச ரெய்தி
வளைதலினு ரழல்வேள்வி வளர்ப்போன் போர் செய்
சாத்தகிவிட் டவர்மிசைபாய்ந் தமரு டற்றத்
தளர்ந்தவர்வெந் தரவாற்றான் தமரு னெய்தி
காத்திரமுற் றரியன்விற் றுணித்தான் வேறோர்
கார்முகங்கொண் டவனிவன்தேர் கைவிற் போக்க
மாத்தடந்தே ரொன்றினின்மீட் டேறி மன்னன்
மறைமுனிமே லோச்சினனோர் வளங்கொள் சத்தி.

(இ-ள்) மாத்திரை புத்திரர் - மாத்திரியின் குமாரர்களாகிய நகுல சகதேவர், அளப்பு இல் அரசர் - கணக்கற்ற மன்னர்கள், எய்தி-வந்து, வளைதலினால்-சூழ்ந்து கொண்டதனால், அழல் வேள்வி வளர்ப்போன் - முத்தீயோம்பும் அந்தணனாகிய துரோணன், போர் செய் சாத்தகி விட்டு - போரிடுகின்ற சாத்தகியை விட்டு விட்டு, (அவனுக்குமாறாக) அவர் மிசை பாய்ந்து அமர் உடற்ற - அந்த நகுலசக தேவர் மன்னர்கள் ஆகியவர்கள்மேல் விரைந்து போரினைச் செய்ய, தளர்ந்து - சோர்ந்து, அவர் - அவர்கள், வெந் தர - முதுகிட்டுப்போக, - ஆற்றான் அதனைக்கண்டு சகியாது, தருமன் எய்தி - தருமராசன் வந்து, காத்திரம் உற்று - கோபமடைந்து, ஆரியன் வில் துணித்தான் – துரோணனது வில்லினைத் துண்டாக்கினான் : அவன் - அத்துரோணன், வேறு ஓர் கார்முகம் கொண்டு - வேறொரு வில்லைக் கொண்டு, இவன் தேர் கைவில் போக்க - இந்தத் தருமனுடைய தேரினையும் கைப்பிடித்த வில்லினையும் சிதைக்க, மா தட தேர் ஒன்றினின் - பெரிய விசாலமான பரப்பையுடைய

தேரொன்றின்மேல், மீட்டு ஏறி - மறுபடியும் ஏறிக்கொண்டு, மன்னன் - தருமராசன், மறைமுனி மேல் - துரோணன் மேல், ஓர் வளம் கொள் சத்தி-வெற்றி தரும் ஒரு சூலத்தை, ஓச்சினன் - வீசினான்; (எ.று.)

அழல் வேள்வி வளர்ப்போன்-அக்னி வளர்த்து ஓமஞ் செய்யும் அந்தணன் என்னவுமாம். காத்திரம்-கோபம். தடந்தேர்-உரிச்சொற்றொடர்-சத்தி-சூலம் : ''வித்தகக் கைவினைச் சத்தி'' (பெருங். மகத : 14, 153) : இனி, வேல் என்னவுமாம் : ''தாமேற்றழுத்திய சத்தி வாங்கி'' (பெருங்: மகத: 20, 63). வளம்-வெற்றி : ''வளந்தரும் வேலோய்'' (புற: வெ: 9, 9). (27)

28. தருமன் அயர்ந்து மீள, நகுலன் விகர்ணனோடும் சகதேவன் துன்முகனோடும் பொருதல்.

மாதிரங்க ளீரைந்து மழல்கள் சிந்தி
மண்டியடற் சத்திவர மலரோன் வாளி
வேதியன்விட் டதைவீழ்த்தோ ரையம் பெய்ய
வேந்தனதை விலக்கமுனி வெகுண்டு தேர்வில்
லாதியழித் தரசுய்த்த வணிமேற் பாய்ந்தான்
அயர்ந்திடுவேந் தனுசன்றே ரணுகி மீண்டான்
பூந்தலந்தீப் படவிகன னகுலன் வெம்போர்
புரிந்தார்சா தேவனுந்துன் முகன்மேற் பாய்ந்தான்.

(இ-ள்) மாதிரங்கள் ஈரைந்தும்-பத்துத் திசைகளிலும், அழல்கள் சிந்தி-நெருப்புப் பொறிகள் பரந்து, மண்டி-நெருங்கி, அடல் சத்தி வர-வலிய சூலாயுதம் வர, வேதியன்-துரோணாசாரியன், மலரோன் வாளி விட்டு-பிரமாஸ்திரத்தைத் தொடுத்து, அதை வீழ்த்து-அதைப் பயனிலவாக்கித் தள்ளி, ஓர் ஐ அம்பு எய்ய-ஓரைந்து அம்புகளைத் தொடுக்க, வேந்தன் அதை விலக்க-தருமராசன் அந்த ஐயம்புகளையும் தடுக்க, முனி வெகுண்டு-துரோணன் கோபங்கொண்டு, தேர் வில் ஆதி அழித்து-(தருமனது) தேரையும் வில் முதலியவற்றையும் சிதைத்து, அரசு-தருமன். உய்த்த-விடுத்த, அணிமேல்-படை வகுப்பின் மேல், பாய்ந்தான்-விரைந்து சென்றான் : அயர்ந்திடும் வேந்து-சோர்வுற்ற தருமன், அனுசன்தேர் அணுகி-தம்பி வீமனின் தேரைக் கிட்டி (ப் பிழைத்து), மீண்டான்-(தன்) பாசறைக்குத் திரும்பினான்;

[இஃது இங்ஙனாக] பூ தலம் தீப்பட - தரை நெருப்புப்பற்றிச் சுடும்படி, விகனன் நகுலன் - விகர்ணனும் நகுலனும், வெம்போர் - (தமக்குள்) கொடிய போரை, புரிந்தார் - செய்தார்கள் : சாதேவனும் - சகதேவனும், துன்முகன்மேல் - துன்முகன்மீது, பாய்ந்தான் - விரைந் தான்; எ.று.)

திசைகள் பத்து - அட்டதிக்கும் மேலும் கீழும் எனபன. மல ரோன் - பிரமன். துன்முகன் - துரியோதனன் தம்பி. (28)

29. சகதேவனும் வீமனும் பகைவரையழிக்க, கடோற் கசன் அலம்புசனையெதிர்த்தல்.

தேர்சிலைக டுணித்தவனைப் புறங்கண் டப்பாற்
றிகத்தன்மக னிகுத்தனிகஞ் செகுக்குங் காலை
போர்புரிசு யோதனன்வா கினிக ணான்கும்
பொடியாக வெண்டிசைவான் புவியோ ரஞ்ச
ஓர்புடைமா ருதிநமன்போற் றிரிந்து குத்தான்
உருத்தலம்பன் மேலிடும்பி யுயிர்த்தோன் பாய்ந்து
பார்நடுங்கத் திசைப்பால ரெஞ்ச நின்று
படைபொருதா னினிநரன்செய் படைசொல் வேமால்.

(இ-ள்) (சகதேவன்) தேர் சிலைகள் துணித்து - தேரினையும் விற் களையும் துண்டித்து. அவனை புறங்கண்டு - அந்தத் துன்முகனை முது கிடச் செய்து, அப்பால் - மேலும், திகத்தன் மகன் இகுத்து - திரிகர்த்த ராசனுடைய குமாரனாகியவனைக் கொன்று, அனிகம் செகுக்கும் காலை - (அவன்) படைகளையும் அழித்து வரும்போது, - ஓர் புடை - ஒருபக்கத்தில், மாருதி - வீமன், நமன் போல் திரிந்து - யமனைப்போலச் சஞ்சரித்து, போர் புரி சுயோதனன் - (தன்னோடு) போரிட வந்த துரி யோதனனின், வாகினிகள் நான்கும் - நாற்படைகளும், பொடியாக - தூளாகும்படி (செய்து), எண் திசை வான் புவியோர் அஞ்ச - எட்டுத்திக்கிலுள்ளாரும் மேல் கீழ் உலகத்தோர்களும் நடுங்கும்படி, உகுத்தான் - அழித்தான்: (அதே சமயத்தில்) இடும்பி உயிர்த்தோன் - கடோற்கசன், உருத்து - கோபித்து, அலம்பன் மேல் - அலம்புசன் மீது பாய்ந்து - மோதி, பார்நடுங்க - பூமியிலுள்ளோர் நடுங்கும்படியும், திசைப்பாலர் எஞ்ச - திக்குப்பாலகர்கள் குறையும்படியும் (ஒடுங்கும்

படியும்), நின்று-நிலைத்து நின்று, படை பொருதான்-சேனைகளோடு போரிட்டான். இனி-இனிமேல், நரன் செய் படை-அருச்சுனன் செய்கின்ற போரினைப்பற்றி, சொல்வேம் - கூறுவோம்; (எ.று.) ஆல்-ஈற்றசை.

கீழ் ஆறு செய்யுட்களில் அருச்சுனனைத் தவிர மற்றையோர் செய்த போர்களைப்பற்றிப் பேசினமையால், இனி அருச்சுனன் செய்யும் போரினைப்பற்றிச் சொல்வேனென்று கவிக்கூற்றாக அமைந்தது இச்செய்யுள் என்க. திகதத்தன் - திரிகர்த்தராசன் : இவனுக்கு ஸுசர்மாவென்பது பெயர். இவன் சஞ்சத்தகரிற் சேர்ந்தவன். இவன் மகன் பெயர் தெரியவில்லை. த்ரிகர்த்தமென்பது லாஹுர் ஜில்லாக் கருகிலிருப்பதான ஜலந்தர் (Jalandur) என்று வழங்கும் ஊர் என்பர். இடும்பி உயிர்த்தோன் - இடும்பி வயிற்றிற் பிறந்தவன் : கடோற்கசன். எஞ்சுதல்-குறைதல், ஒடுங்குதல்: படை-போர். (29)

30. கௌரவசேனை அருச்சுனனுண்டாக்கிய தடாகத்தில் இளைப்பாறுதலைக் கூறும்.

தாளமரை மார்பனருள் கவசம் வேய்ந்தோன்
  தளநான்கோ டெண்ணிறந்த தரணி வேந்தர்
காளமுர சிரைப்பநரன் முனைமேற் செல்வார்
  கண்டுளத்தி லதிசயித்துக் கடனே ரந்த
வாளையுக டெய்வீக வாவி நன்னீர்
  மாந்தியமு தென்பாரும் மலர்கொய் வாரும்
காளநிறக் கரிபரிநீ ருட்டு வாரும்
  கரைதோறும் பொழினிழலிற் களைதீர் வாரும்.

(இ-ள்) தாள மரை - நாளத்தையுடைய தாமரை மாலையைத் தரித்த, மார்பன் - மார்பையுடைய துரோணன், அருள் - கொடுத்த, கவசம் - கவசத்தை, வேய்ந்தோன் - தரித்த துரியோதனன், தளம் நான்கோடு - நால்வகைப் படைகளோடு, எண்ணிறந்த தரணி வேந்தர் - கணக்கற்ற அரசர்கள், காளம் முரசு இரைப்ப - ஊதுகொம்புகளும் முரசங்களும் ஒலிப்ப, நரன்முனைமேல் செல்வார் - அருச்சுனன் இருக்கும் போர்முனையிடத்துக்குச் செல்பவர், கண்டு (வழியிடையில் ஒரு தடாகத்தைப்) பார்த்து, உளத்தில் அதிசயித்து-மனத்திலே வியப்புக்கொண்டு, கடல் நேர் - சமுத்திரத்தை யொத்த,

வாளை உகள் - வாளை மீன்கள் துள்ளிக்குதிக்கின்ற, அந்த தெய் வீக வாவி - அந்தத் தெய்வத்தன்மை பொருந்திய தடாகத்தின், நன்னீர் மாந்தி - நல்ல நீரைக் குடித்து, அமுது என்பாரும் - அமிருதம் போல் இனியதென்பவர்களும், மலர் கொய்வாரும் - (அத்தடாகத்திலுள்ள) பூக்களைப் பறிப்பவர்களும், காளம் நிறம் கரி - மிக்க கரிய நிறத்தையுடைய யானைகளையும், பரி - குதிரைகளையும், நீர் ஊட்டுவாரும் - நீருண்ணச் செய்பவர்களும், (மற்றும்) கரைதோறும் - (அத்தடாகத்தின்) கரையிடங்கள் தோறும் உள்ள, பொழில் - சோலைகளின், நிழலில்- மரங்களின் நிழலில், களைதீர்வாரும் - இளைப் பாறுபவர்களும் (எ.று.) 'எய்த' என மேலைக்கவியில் இயையும்.

போர் முனைக்குச் செல்லும் வழியிடையில் சமுத்திரம் போல் பரந்த இனிய நீரையுடைய தெய்வீகத் தடாகத்தைக் காணவே அதிசயித்தனர் என்றபடி. மரை - தாமரை என்பதன் முதற்குறை. "தாளதாமரை" என்றார் நம்மாழ்வாரும். (9-3-10 : 10-1-1) தாமரை மலர் மாலை வேதியர்க்குரித்தாகலின், துரோணனைக்காட்டி வந்தது. "பைங்கமலத் தண்தெரியல் பட்டாபிரான்" என்றாள் கோதையும் வேதியராகிய தமது தந்தையார் பெரியாழ்வாரைப்பற்றி யென்பதை ஈண்டு நோக்குக. காளம் - எக்காளம், ஊதுகொம்பு, காளமுரசு கரிபரி – உம்மைத்தொகை. கடல் + நேர் -கடனேர், பொழில்+ நிழல் —பொழினிழல் "லன ....முன்றனவும் ஆகும் தநக்களாயுங்காலே', என்பது விதி (நன் : மெய்யீற் : 34) (30)

31. யாவரும் தன்னைச் சூழ்ந்ததை அருச்சுனன் கண்டு, தான் தேரிலேறுமலே அவர்களுடன் போரிட்டுப் பலரையழித்தல்.

இவ்வாறிங் கிவர்வாவிப் புனலுண் டெய்த
லெழில்விசய னுணர்ந்திரதத் தினிய வெள்ளை
வெவ்வாசி விசித்தமல வருநள் ளாரை
வீட்டியபி னிரதமிசை மேவு வோமென்
றெவ்வாத சிலைவாங்கிப் புவியின் மேனின்
றுய்த்தொருநான் குரதகயமா வுறுவா ராவி
அவ்வானம்விடுத்து பிணக் குன்று செய்தான்
அமருடைந்தோர்க் குயிரளித்தே யரியே றெப் பான்.

(இ-ள்) இவ்வாறு - இந்த வகையாக, இங்கு - இவ்விடத்திற்கு இவர் - இந்தத் துரியோதனன் படைஞர்கள், வாவிப்புனல் உண்டு எய்தல் - (தான் ஆக்கிய) தடாகத்தின் நீரையுண்டு இளைப்பாறி வருதலை, எழில் விசயன் உணர்ந்து - அழகுமிக்க அருச்சுனன் அறிந்து, இரதத்து - தன் தேரினில், இனிய வெள்ளை வெவ் வாசி விசித்து - கண்ணுக்கு இனியனவாகிய கடிய குதிரைகள் நான் கினையும் பூட்டி, அமல வரு நள்ளாரை நெருங்க - வருகின்ற பகை வர்களை, வீட்டியபின் - அழித்த பின்பு, இரதம் மிசை மேவுவோம் என்று - தேரின்மேலேறிக் கொள்வோமென்று முடிவுகொண்டு, ஒவ் வாத சிலை வாங்கி-ஒப்பற்ற தனது காண்டீபத்தை வளைத்து, புவியின் மேல் நின்று - தரையின் மீது நின்று கொண்டு, ஒரு நான்கு உய்த்து- நான்கு பாணங்களைச் செலுத்தி, ரத கய மா உறுவார் - ரதகஜதுரக, பதாதிகளின், ஆவி - உயிர்களை, அ வானம் விடுத்து - அந்த மேலு லகத்திற்கு அனுப்பி (இழக்கச் செய்து), பிணக்குன்று செய்தான் - பிணக்குவியல்களாக ஆக்கினான்: (யாவனெனில்) அமர் உடைந் தோர்க்கு - போரில் பின்னிட்டவர்களுக்கு, உயிரளித்து - உயிரை (வாங்காமல்) வழங்கி, அரி ஏறு போல்வான் ஆண் - சிங்கம் போன்ற வனாகிய அருச்சுனன் ; எ.று.

'மேவுவோம்' என்றது கிருஷ்ணனையும் உளப்படுத்தியென்க. அமலுதல் - நெருங்குதல் ரதகயமாவுறுவார் — உம்மைத்தொகை. உறுவார்-காலட்படைஞர்- ஆவி வானம் விடுத்து -பிறிதினைவிற்சி. பிணக்குன்று - இருபெயரொட்டு. உடைந்தோர் - வினையாலணையும் பெயர். (31)

32. பகைவரையழித்தபின் அருச்சுனன் கிருஷ்ணனுடன் தேரிலேறுதல்.

தேர்சிதைய தோல்சாய வாசி மாயச்
சிலைதுணிய பதாகையற படைகள் சிந்தப்
பார்சிவப்ப நிழலிடப்புள் ளலகை யாடப்
படைவீர ரிட்முதுகு பணிகே தெஞ்சக்
கார்சிலையம் புறைபொழியக் கண்கள் சேப்பக்
களமுழுதும் பவனிவருங் கழற்காற் பார்த்தன்
போர்செருந ருட்கவொலி செய்தே தேர்மேற்
புராரியென முராரியோடு புகுந்தான் மன்னே.

(இ-ள்) தேர் சிதைய-தேர்கள் முறிய, தோல் சாய-யானைகள் மடிய, வாசி மாய-குதிரைகள் இறக்க, சிலை துணிய-வில் முறிய, பதாகை அற-கொடிகள் அறுந்து பட, படைகள் சிந்த-காலாள்கள் அழிய -பார்சிவப்ப- (பெருகும் இரத்தத்தால்) களம் செந்நிறமடைய, புள் நிழலிட-கழுகு முதலிய பறவைகள் பறந்து (தமது சிறகுகளைப் பரப்பி) நிழலைச் செய்ய, அலகை ஆட-பேய்கள் கூத்தாட, படை வீரர் முதுகிட - (எதிரிட்ட) சேனை வீரர் புறமுதுகிட்டோட, பணி கேது - பாம்புக் கொடியையுடைய துரியோதனன், எஞ்ச - மன மொடுங்க, கழல் கால் பார்த்தன் - வீரக்கழலைக் காலிற்கட்டியுள்ள அருச்சுனன், கண்கள் சேப்ப-சினத்தால் கண்கள் சிவக்க, கார்சிலை அம்பு உறை பொழிய - (கைப்பிடித்த) மேகம் போன்ற வில் அம்பு மழையைப் பெய்ய, களம் முழுதும் பவனி வரும்- போர்க்களமுற்றும் உலாவருவான்: (அப்போது) போர் செருநர் உட்க ஒலி செய்து- போரில் பகைவர் பயப்படும்படி கோஷமிட்டு, தேர்மேல் - (தனது) தேரின்மேல், புராரி என-திரிபுரமெரித்த சிவபெருமானென்னும்படி- முராரியோடு - கிருஷ்ணனோடு, புகுந்தான் - ஏறினான்; (எ.-று.) மன், ஓ-ஈற்றசை.

பகைவரை முற்றும் எளிதில் அழித்தற்கும், சினமிகுதிக்கும் புராரி உவமை. முராரி-முரன் என்ற அசுரனைக் கொன்ற கிருஷ்ணன், முரன் - நரகாசுரன் மகன்: புராரி முகாரி-பிராசம். தோல்-யானை. எஞ்சுதல்-குறைதல், ஒடுங்குதல், கெடுதல். உறை-மழை. அம்புறை - உருவகம். சேத்தல்-சிவத்தல். பவனி வரும் -செய்யுமென்முற்று: இனி பெயரெச்சமாக் கொளினுமாம். சிதைய, சாய, மாய, துணிய அற, சிந்த, சிவப்ப, இட, ஆட, முதுகிட, எஞ்ச, பொழிய, சேப்ப என்ற வையடுக்கி 'பவனிவரும் என்பதோடு முடியும். செருநர், ந்-பெய ரிடைநிலை. (32

33. தேரிலேறிய அருச்சுனனைத் துரியோதனன் தயங் காது எதிர்க்கவர, அது கண்டு அருச்சுனன் கிருஷ் ணனைக் காரணம் வினவ, அவன் விடை கூறுதல்.

புகுந்திரதம் வருநரன்மே லிளைஞர் மாமன்
புறந்தந்த வரசரொடும் புகநாற் றானை
தகுந்திறல்வேந் தடைந்தியற்ற சமரன் னேன்மால்
தனையெனக்கோ ரோசனைமுன் தரியா னின்று

மிகுந்திறல்யா தடையவெனக் கவசந் துரோணன்
வேய்ந்தவலி யதுபடையால் விள்ளா தத்தை
யுகுந்திடத்து ணித்தியென விரத மெந்தை
யூர்ந்திடவில் வாங்கியுறை பெய்தான் மன்னோ.

(இ-ள்) இரதம் புகுந்து வரும் நரன்மேல் - தேரில் ஏறிவருகின்ற அருச்சுனன்மீது, இளைஞர் - (துரியோதனன்) தம்பியர்கள், மாமன் - சகுனி (இவர்கள்), புறந்தந்த அரசரொடும் புக-முதுகு காட்டிவந்த மன்னர்களோடும் புக, தகும் திறல் வேந்து - மேம்படுகின்ற பராக்கிரமத்தையுடைய அரசனாகிய துரியோதனன், நால்தானை அடைந்து - நாற்படைகளோடு வந்து, சமர் இயற்ற - போரினைச் செய்ய, அன்னோன் - அந்த அருச்சுனன், மால்தனை-கிருஷ்ணனை, (நோக்கி) எனக்கு ஓர் ஓசனை - எனக்கு ஒரு யோசனை (சிந்தனை): (அது யாதெனில்) முன் தரியான் - முன்னர் என் எதிரில் நிற்கவும் மாட்டாதவனாகிய துரியோதனன், இன்று - இன்றைய தினம், மிகும் திறல் அடைய யாது? - மிஞ்சிய பராக்கிரமத்தையடைதற்குக் காரணம் எது?, என-என்று வினவ, (அதற்கு விடையாகக் கிருஷ்ணன்) கவசம் - இந்தத் துரியோதனன் தரித்து வந்த கவசமானது, துரோணன் வேய்ந்த வலியது-துரோணன் தரித்திருந்த வலிமையுடையது: படையால் விள்ளாது-ஆயுதங்களால் துளைக்க முடியாதது: அத்தை - அதனை, உகுந்திட - உதிர்ந்து சிதையும்படி, துணித்தி-வெட்டித்துண்டாக்குவாய், என-என்று கூறி, எந்தை-எம்பெருமானாகிய கிருஷ்ணன்' இரதம் ஊர்ந்திட-தேரினைச் செலுத்த, (அருச், சுனன் அங்ஙனமே)வில் வாங்கி-தன் காண்டீபத்தை வளைத்து, உறை-அம்பு மழையை, பெய்தான்-பொழிந்தான்; (எ-று-) மன், ஓ- ஈற்றசை.

துரியோதனன் மிக்க யுத்தாவேசத்தோடு படையெடுத்து வந்ததனைக் கண்ட அருச்சுனன், கிருஷ்ணனை அதன் காரணத்தைக் கேட்க, அவன் விடை கூறினனென்பதாம்.

தகுதல்-மேம்படுதல் : பெண்ணிற் "பெருந்தக்க யாவுள" (குறள் 54). ஓசனை-யோசனையென்பது சிதைந்தது. தரியான் - வினையாலணையும்பெயர். துணித்தி-முன்னிலையேவல். உறை-மழை : அம்பு மழைக்கு இலக்கணை. (33)

வேறு.

34. அருச்சுனனம்புகளினுற் பகைவர்சேனை சின்ன பின்னப்பட்டுத்தோற்றுமுதுகிட, அதுகண்டு துரியோதனன் அருச்சுனனையெதிர்த்தல்.

சைவ சாசிச ரத்தினல் வகைதள
மழிந்து தரைப்படத் தம்பிமார் புறமிடச்
செய்வ ராலுக ளங்கர்கோன் சௌபலன்
சேதி வித்தகன் விற்கிரு பன்முதற்
கைவ லார்பலர் தேர்சிலை சிந்தவென்
காட்டி மெய்யிற்ச தையுகத் தம்முயிர்
உய்வ ராகியு டைந்தனர் கண்டரா
உயர்த்தோ னுற்றுது ருத்தெதிர்ந் தானரோ.

(இ - ள்) சைவசாசி சரத்தினல் - அருச்சுனன் விடுத்த அம்புகளால், வகை தளம் அழிந்து - பகுதிப்பட்ட சேனைகள் அழிந்து, தரைப்பட - தரையில் வீழ, தம்பிமார் புறமிட - (துரியோதனனின்) தம்பியர் முதுகிட்டோட, (மற்றும்) செய்-கழனிகளில், வரால் உகன்-வரால் மீன்கள் துள்ளும், அங்கர்கோன் - அங்கநாட்டிலுள்ளார்க்குத் தலைவனுகிய கர்ணன், சௌபலன் - சகுனி, சேதிவித்தகன் - சேதிநாட்டரசன், -வில்கிருபன் வில்லில்வல்ல கிருபாசாரியன், முதல் கைவலார் பலர் - முதலிய பழகிய வீரர்கள் பலர், தேர் சிலை சிந்த - தேரும் வில்லும் சிதைய, வென்காட்டி-முதுகுகாட்டி, மெய்யில் சதை உக - (தம்) உடம்பினின்று சதைகள் சிதைந்து சிந்த, தம் உயிர் உய்வராகி உடைந்தனர் - தமது உயிர் பிழைப்பதற்காகத் தோற்றுப் பின்னிட்டனர்: (இதனை) அரா உயர்த்தோன் - துரியோதனன்) கண்டு - பார்த்து. ஆற்றுது -(மனம்) பொறுது, உருத்து எதிர்ந்தான்- கோபித்துத்தானே அருச்சுனனை யெதிர்த்து வந்தான் ; (எ.று., அரோ - ஈற்றசை.

சைவசாசி - சவ்வியசாசியென்பதன் சிதைவு. கைவலார் - பழகித்தேர்ந்தவர் என்றபடி.

இதுமுதல் பதினன்கு கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும் மற்றைய விளச்சீர்களுமாய் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (34)

35. **அருச்சுனனம்புகளால் துரியோதனன்கவசம் பிளவு படாமைகண்டு, அவன்மேல் அருச்சுனன் சூரியாஸ் திரம் விட அதனை அசுவத்தாமன் துணித்தல்.**

பாகன் மேல்பரி மேனரன் மேல்கவிப்
பதாகை மேற்றனு மேற்கணை தூர்த்தலும்
நாகர் கோன்மக னெய்கணை பெய்துளி
நாக மேறிதெ றித்தென மன்னவன்
தேகம் வேய்கவ சம்பட்டு திர்ந்திடத்
திறலோன் மீட்டுதை யன்படை யோச்சினன்
வேகங் கொள்பரித் தாமன்று ணித்தனன்
வென்னிட் டாரமர் முன்னிட்டி யற்றினர்.

(இ-ள்) பாகன்மேல் - சாரதியின் மேலும், பரிமேல் - குதிரைகள் மேலும், நரன்மேல் - அருச்சுனன் மேலும், கவிப்பதாகை மேல் - குரக்குக்கொடியின்மேலும், தனுமேல் - காண்டீபத்தின் மேலும், கணை தூர்த்தலும் (துரியோதனன்) அம்புகளைத் தூவுதலும், (அவற்றிற் கெதிராக) நாகர்கோன்மகன்-தேவேந்திரன்குமாரனாகிய அருச்சுனன். எய் கணை-விடுத்த அம்புகள்,-பெய் துளி-பெய்கின்ற மழைத்துளிகள், நாகம் ஏறி தெறித்து என-மலையின்மேல் ஓங்கியுயர்ந்து விழுந்தது போல, மன்னவன்-துரியோதனராசனின், தேகம் வேய் கவசம் பட்டு - உடம்பில் தரித்துள்ள [தெய்விக] கவசத்தின் மேல் பட்டு, உதிர்ந் திட-கீழ்விழுந்திட, திறலோன் - அருச்சுனன், மீட்டு - மறுபடியும், உதையன் படை ஓச்சினன்-சூரியன் கணையை (சூரியாஸ்திரத்தை) விடுத்தான்: (அதனை) வேகம் கொள் பரித்தாமன் - (போரிடுதலிற்) பேருக்கங்கொண்ட அசுவத்தாமன், துணித்தனன் - துண்டாகும்படி செய்தான்: (அப்போது) வென் இட்டார் - (முன்னர்) முதுகுகாட்டி யோடிய (துரியோதனன்)படையினர், (இப்போது) அமர் முன்னிட்டு இயற்றினர் - போரில் முற்பட்டுச் சண்டையிடலாயினர்; (எ.று.)

மலையின்மேல் பெய்த மழைத்துளிகள் சிதறுவதுபோல, துரியோதனன் மேல் அருச்சுனன் விடுத்த கணைகள் சிதறிக் கீழ் உதிர்ந்தன. **உவமையணி.** மலை மாரித் துளிகளுக்குச் சலியாததுபோலத் துரியோதனனிட்ட கவசம் அம்புமாரிக்குச் சலியாததாயிற்று. "மால்வரைப் புயலினுண்டுளி விழுந்த பரிசாமென" என்றார் வில்லியும். உதையன் படை-சூரியனைத் தெய்வமாகக் கொண்ட அம்பு : 'இரவி

தன்கணை' என்றார் நல்லாப்பிள்ளை : (துரோண : பதினான் : 177). அவரைப் பின்பற்றினார் இவ்வாசிரியர். வில்லியார் இவ்விடத்து வேற்படையென்றார். (துரோண: பதினான்: 85) கவி = கபி : குரங்கு. குரங்குக் கொடி அருச்சுனனுக்கு அக்னிபகவானால் காண்டவதகனத் தின்போது கொடுக்கப்பட்டது. தனித்தனியாகப் 'பாகன்மேல்' 'பரிமேல்' என ஐந்து முறை குறித்தது, ஒவ்வொன்றன் மேலும் பல கணைகள் தூர்க்கவேண்டி வந்தது என்றபடி. நாகர்-தேவர். நாகம் - மலை. வென்னிட்டார் முன்னிட்டார்-சொன்னயம். (35)

36. அருச்சுனன் சோர்ந்துமயங்க, அது கண்டு கிருஷ்ணன் சங்கநாதஞ்செய்து அவனுக்குச் சிறந்த வேல்தருதல்.

பலருஞ் சூழ்ந்தமை கண்டமர் நீங்கிமாற்
 பதம்ப ணிந்தயர் வாகிடப் பற்குனன்
மலருந் தாமரை வாயினில் வெள்வளை
 வைத்த லைந்திட வான்புவி மாதிரஞ்
சலதி யண்டமேன் முகடும்பி ளந்திட
 தரிய லாரயர் வாகமு ழக்கிபோர்
மலைதி யென்றொரு வேல்விச யன்பெற
 வழங்கி னானெனை யாண்மணி வண்ணனே.

(இ - ள்) பற்குனன் - அருச்சுனன், பலரும் சூழ்ந்தமை கண்டு —[எதிரிகளிற்] பலரும் தன்னைச் சுற்றிக் கொண்டதைப் பார்த்து, அமர் நீங்கி - போரை நிறுத்தி, மால் பதம் பணிந்து - கிருஷ்ணனின் பாதங்களின் வணங்கி, அயர்வாகிட - சோர்ந்து மயங்கிட, (அப்போது கிருஷ்ணன்) மலரும் தாமரை வாயினில் - பூத்த தாமரை மலர் போல் சிவந்த (தன்) வாயினில், வெள்வளை - வெள்ளிய பாஞ்சசன்னியத்தை, வைத்து -, வான் புவி மாதிரம் சலதி அலைந்திட - ஆகாயம் பூமி திக்குக்கள் சமுத்திரம் முதலியன கலங்கிடவும், அண்டமேன் முகடும் பிளந்திட - அண்டகோளத்தின் மேலுச்சியும் (சங்கின் பேரொலியாலாகிய அதிர்ச்சியினால்) வெடித்திடவும், தரியலார் அயர்வு ஆக - பகைவர்கள் சோர்வடையவும், முழக்கி - ஊதி, (பின்னர்) போர் மலைதி - நீ போர் செய்வாய்', என்று - என்று கூறி, (உற்சாகப்படுத்தி) ஒரு வேல் - ஒரு சிறந்த வேற்படையை, விசயன்

பெற வழங்கினுன் - அருச்சுனன் பெறும்படி கொடுத்தான் ; (யாவ னெனில்) எனை ஆள் மணிவண்ணன் - என்னையாட்கொள்ளும் கிருஷ்ணபகவான் ; (எ.று.)

அருச்சுனன் அயர்வாகியதற்குக் காரணம் - பலருஞ்சூழ்ந்தமை கண்டதனுலும், தனது ஆயுதங்கள் பலவும் பயன்படாமையைக் கண்ட மனவெழுச்சிக்குறைவினுலும் ஆகும். செந்தாமரை மலர் போன்ற தனது வாயிலே வெள்ளிய சங்கத்தை வைத்து ஊதினுன் மணிவண்ணன் என்ருர். அலைந்திட, பிளந்திட, அயர்வாக என்ற எச்சங்கள் 'முழக்கி' என்ற வினையெச்சத்தோடு முடியும். சூழ்ந் தமை - தொழிற்பெயர். தாமரைவாய் - உவமைத்தொகை. தாமரை - அதன் மலர்க்கு முதலாகுபெயர். வெள்வளை-பண்புத்தொகை. வான் புவிமாதிரம்சலதி - உம்மைத்தொகை. இவை அலைந்திட, முகடு பிளந்திட என இயைத்துப் பொருள் கொள்க. மலைதி - முன்னிலை யேவல். மணிவண்ணன்-உவமைத்தொகை. மணி-நீலமணி. (36)

37. அருச்சுனன் துரியோதனன் கவசத்தைப் பிளந்து, தன்னையெதிர்த்த அசுவத்தாமனுதியரை வென்று ஓட்டுதல்.

ஐயன் றந்தவ யில்கொடு வீமன்சூ
  ளழிவு ருதவ ணுவியுய்ந் தேகுமா
றெய்ய மெய்க்கவ சம்பிளந் தங்கவ
  னேக லுந்தொடா திந்திரி யாயிரம்
வெய்ய வாளியில் வில்லையுந் தேரையும்
  வெட்டி வேந்தனை வெம்பரித் தாமனை
செய்ய கன்னனை மாமனை மன்னரைத்
  திரும்பி யோடிடச் செய்தணி நூறினுன்.

(இ-ள்) ஐயன் தந்த அயில் கொடு - கிருஷ்ணன் கொடுத்த வேலைக் கொண்டு, வீமன் சூள் அழிவுருது - வீமன் செய்துள்ள சபதம் கெடாதபடி, அவன் ஆவி உய்ந்து ஏகுமாறு - அந்தத் துரி யோதனன் உயிர் பிழைத்துப் போகுமாறு, எய்ய- (அதனைப்) பிரயோ கிக்க, (அதனுல்) மெய் கவசம் பிளந்து - தன் உடம்பில் தரித்திருந்த கவசம் பிளக்கப்பட்டு, அங்கு - அவ்விடத்தினின்று, அவன்-அந்தத் துரியோதனன், ஏகலும்-போகவும், இந்திரி - அருச்சுனன், தொடா -

(மீண்டும் அந்த வேலை அவன்மீது) எய்யாமல், (அதற்குப் பதில்) ஆயிரம் வெய்ய வாளியில் - பல கொடிய அம்புகளினால், வில்லையும், தேரையும் வெட்டி - (அவனது) வில்லினையும் தேரினையும் சிதைத்து, வேந்தனை - துரியோதனராசனையும், வெம் பரித்தாமனை - வலிய அசுவத்தாமனையும், செய்ய கன்னனை - (சினத்தால்) சிவந்த கர்ணனை யும், மாமனை - சகுனியையும், மன்னரை - துணைவேந்தர்களையும், திரும்பி ஓடச்செய்து - முதுகுகாட்டி ஓடும்படி செய்து, (மேலும்) அணி - படை வகுப்புக்களை, நூறினான் - அழித்தான்; (எ. று.)

அருச்சுனன் துரியோதனனது கவசத்தைப்பிளந்து வலியழித்து, அவனது வில் தேர்களையழித்து அவனுக்குத் துணையாய் வந்த மன்ன ரையும் வென்று துரத்தினமையைக் கூறினார். வீமன் சூளாவது - துரியோதனனைத்தான் கொல்வதாகச் சபதஞ் செய்தது. மீண்டும் வேல் தொடாமை கவசம் பிளந்துபோயினமையால் என்க. இந்திரன் மகன் : அருச்சுனன்: தத்திதாந்த நாமம். (37)

38. பலரும் அருச்சுனன்முன் அழிந்துபோக, உய்ந்த வர் புறமுதுகிடல்.

மார தர்பலர் பற்பல வாயிர
    மன்னர் தேர்கரி வாம்பரி யாள்பலர்
போரெ திர்ந்தனர் மாய்ந்தன ருய்ந்துளார்
    புறந்தந் தார்கடுச் சாதன ராதியோர்
பார தப்படை முற்றிடு மின்றுடும்
    பார்த்தன் சிந்துப திகொலு வானென
நார தன்முத லோர்சொலத் தெவ்வனை
    நரனு மாயனு நாடிச்செல் வேலையில்.

(இ-ள்) மாரதர் பலர் - மகாரத வீரர்கள் பலரும், பற்பல ஆயிர மன்னர் - பல்லாயிர அரசர்களும், தேர் கரி வாம்பரி ஆள் பலர் - ரதகஜ துரக பதாதிகளாகிய நாற்படையின், வீரர்கள் பலரும், போர் எதிர்ந்தனர் மாய்ந்தனர் - போரில் எதிரிட்டு நின்று இறந்து பட்டனர் : உய்ந்துளார் - (உயிர்) பிழைத்தவர்களாகிய, துச்சாதனர் ஆதியோர் - துச்சாதனன் முதலிய தம்பியர்கள், புறந்தந்தார்கள் - முதுகுகாட்டிப் பின்னிட்டார்கள் : (இப்படியாக) நாரதன் முதலோர் - [வானத்தில்நின்று போர் விநோதம் பார்த்துக் கொண்டிருந்த]

நாரதன் முதலிய முனிவர் தேவர்கள், 'இன்றுடும்-இன்றைய தினத் தோடும், பாரதப்படை - பாரதப் போர், முற்றிடும்-முடிந்து போகும் : பார்த்தன் - அருச்சுனன், சிந்துபதி கொலுவான் - சயத்திரதனை (நிச்சயம்) கொல்லப் போகிறுன், என-என்று, சொல-(தீர்மானமாகச்) சொல்ல. தெவ்வனை - பகைவனுகிய அந்தச் சயத்திரதனை, நரனும் மாயனும் - அருச்சுனனும் கிருஷ்ணனும், நாடிச்செல் வேலையில் - தேடிக்கொண்டு போகுஞ்சமயத்தில் ; (எ.று.) "அறன்மகன் ஐயமுற்று" என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

அருச்சுனனேடு பொருது அழிந்தவர் போக, உய்ந்தவர் புற முதுகிட்டனர் என்றபடி. பாரதப்படை - பாரதப்போர் : பரதவம்சத் தாருள் நிகழும் போர். படை - போர். திரிகால ஞானியாதலின், நாரதனை முற்கூறினுர். நாடிச் செல்லுதற்குக் காரணம்—சயத்திரதனை வெளிவிடாமல் அத்தமனமட்டும் மறைத்து வைத்திருத்தலாலாகும். **எதிர்ந்தனர் மாய்ந்தனர் - முற்றெச்சம். உய்ந்துளார் - வினையால** ணையும் பெயர். கொலுவான்-கொல்லுவான் என்பதன் இடைக்குறை சொல-சொல்ல என்பதன் தொகுத்தல். தெவ்வன் - பகைவன். (38)

39. கிருஷ்ணன் ஊதிய சங்கொலிகேட்டுத் தருமன் கலங்கிச் சாத்தகியைப் போய்க் கண்டுவரச் சொல்ல அவன் அச்சொற்படியே செல்லுதல்.

அறன்ம கன்வளை யோதையி னையமுற்

றனுச னங்கினை யானெனின் மைக்கடல்

நிறன்கு றிக்குமோ போயுரைத் தெய்தென

நின்ற சாத்தகி நின்னைவிட் டேகில்யான்

மறங்கொள் வானரன் யாவனு னக்கெதிர்

மன்ன! வென்னலு மற்றவ னீண்டெனைத்

திறங்கொள் மைத்துனன் காப்பனீ செல்கெனச்

சிரங்கொண் டச்சொலைச் சிலரொடு மேகினுன்.

(இ-ள்) அறன் மகன் - தருமபுத்திரன், வளை ஓதையின் ஐய முற்று - [கிருஷ்ணன் ஊதிய] சங்கத்தின் பேரொலி கேட்டுச் சந்தேகங்கொண்டு, அங்கு - அவ்விடத்து, அனுசன் - தம்பியாகிய

அருச்சுனன், இளையான் எனின் - (யுத்தத்தில்) இளைப்படையா மலிருந்தானெனில், மைக் கடல் நிறன் - கரிய கடல் போன்ற (நீல) நிறத்தவனான கிருஷ்ணன், குறிக்குமோ - தன் சங்கத்தை யூதுவனோ ?'(ஆகவே)போய்- நீ போய், உரைத்து -[யான் உன்னை] அனுப்பிய காரியத்தைச் சொல்லி, எய்து என - மீண்டு வருவாய் என்று கட்டளையிட, நின்ற - (தருமனுக்குக்) காவலாய் நின்ற. சாத்தகி—, 'யான்- நான், நின்னை விட்டு ஏகில் - உன்னைக் காப்பதை விட்டு (அங்கு)ப் போவேனானால், நரன் - (என்னைக்கண்டவுடன்) அருச்சுனன், மறம் கொள்வான் - கோபங்கொள்வான் : (அது கிடக்க) மன்ன! தருமராசனே ! உனக்கு எதிர் யாவன் - உனக்கு சமமானவன் எவனுளன் ! (ஒருத்தருமில்லை),' என்னலும் - என்று கூறியவுடன், அவன் – அந்தத் தருமன், ஈண்டு - இவ்விடத்து, என்னை —,திறங்கொள் மைத்துனன் - பராக்கிரமம் கொண்ட திட்டத்துய்மன், காப்பன் - காப்பாற்றுவான் ; நீ செல்க'' - நீ போய் வருவாயாக, என - என்று சொல்ல, அ சொலை - அந்தக் கட்டளை வார்த்தையை, சிரங்கொண்டு - தலைமேற்கொண்டு, சிலரொடும்- சில வீரர்களோடும், ஏகினான் - (சாத்தகி) சென்றான் ; (எ.று.)

''அதிஸ்நேஹ : பாபசங்கீ'' என்றபடி அருச்சுனன் பக்கல் தனக்குள்ள மிக்க அன்பினால் 'அவனுக்கு என்ன தீங்கு வருமோ !' என்று தருமன் சங்கொலிகேட்டவளவிலே சந்தேகமுற்றனன் என்க. அருச்சுனன் சபதத்தை நிறைவேற்றி உயிருய்தலைக் குறித்துத் தருமபுத்திரன் கவலை கொண்டிருக்குமளவில் சங்கொலி கேட்டதனால், மிகவும் கலங்கினன் என்றுங்கொள்ளலாம். 'யாவனவனுக் கெதிர் மன்ன!' எனவும் பாடங்கொள்ளலாம். அஞ்ஞான்று 'அந்த அருச்சுனனுக்கு யாவன் நிகராவன்' எனப் பொருள்படும். எய்து, செல்க - முன்னிலையேவல். (39)

40. சாத்தகி பலரையழித்துச் சலசந்தனை யொடுக்கி, துரியோதனன் தம்பியர் நால்வரையும் துரோணனையும் வென்று துரியோதனனை பாதசாரியாகப் போகச்செய்தமை.

போந்து தானைப்பி ளந்துநூ றுயிரர்
போக்கித் தார்சல சந்தனை வீட்டிதே
ரேந்து வில்லழித் தண்ணலி ளைஞரீர்
இருவ ரோடுகி றுதனையு மோட்டிநேர்

சாந்த மின்றித்த டுத்திடு மாரியன்
சமர வென்றணி சாடிச்செல் சாத்தகி
காந்த னென்னக்க லக்கிப்பொ ரும்படை
காவல் வேந்தனைக் கானடை யாக்கினுன்.

(இ-ள்) போந்து-(சாத்தகி) சென்று, தானைப் பிளந்து-(பகைவர்) சேனைகளைச் சிதறவடித்து, நூருயிரர் போக்கி-பலபேர்களைக்கொன்று, தார்-போர் மாலையைத் தரித்த,சலசந்தனை வீட்டி-சலசந்தனென்னும் அரசனை யொடுக்கி, (மேலும்) அண்ணல் இளைஞர் ஈர் இருவரோடு - துரியோதனனின் தம்பியர் நால்வரோடு, கிருதனையும் - கிருதவன் மனையும், தேர் ஏந்துவில் அழித்து - (அவனது) தேரினையும் கையேந் திய வில்லினையும் சிதைத்து, ஓட்டி- (புறமுதுகிட்டு) ஓடும்படிசெய்து, நேர்-(எதிராக வந்து), சாந்தமின்றித் தடுத்திடும் ஆரியன் - (வேதி யர்க்குரித்தாகிய) அமைதியின்றிப் போர்க்கு வந்து தகைந்திடும் துரோணனை, சமரம் வென்று-போரில் செயித்து, அணி சாடி-படை வகுப்புக்களை மோதியழித்து, செல் சாத்தகி-மேலும் (பகை) மேற் சென்ற சாத்தகி, பொரும் படை காவல் வேந்தனை-போரிடப் படை களோடு வந்த துரியோதனராசனை, காந்தன் என்னக் கலக்கி- கந்தன் (முருகன்) என்று சொல்லும்படி உழக்கி, கால்நடையாக்கி ருன்-கால்களால் நடந்துபோகும்படி செய்திட்டான்; (எ.று.)

நூருயிரர் என்றது - எண்குறியாது பலபேர் என்றபடி. வீட்டுதல் என்றது இங்கே ஒடுக்குதல் என்ற பொருளது. வேதியர்க்கு இயல் பில் உரியதல்லாத போர்த்தொழிலை மேற்கொண்டுள்ளான் துரோ ணன் என்ற கருத்துப்பட ''சாந்தமின்றித் தடுத்திடும் ஆரியன்'' என்றது. காந்தன்-கந்தன் என்பதன் நீட்டல். கந்தன் தேவசேனுதி பதியாயிருந்து சூரன் சேனையைக் கலக்கியது ஒப்பு. (40)

41. சாத்தகி பலரையும் வென்று அருச்சுனனைச் சாரவே, அவன் திரும்பிவாராமைகண்ட தருமன் வீமனையேவுதல்.

கிருத வன்மனைத் தேர்மிசைச் சாயவே
கிடத்தித் துன்முக னேடுதுச் சாதனன்
பரிதி முன்பனி யென்னப் படர்ந்திடப்
பதாதி யாக்கிப்பல் பாடையின் மன்னரை

விருது தேரழித் தும்பரி லேற்றியே
வித்த கற்கிளை பார்த்தன்கண் மேவுழிச்
சரதன் வீமனைக் கூயரிச் சங்கொலி
சார வேவினன் வந்திலன் சாத்தகி.

(இ.ள்.) கிருதவன்மனை - கிருதவர்மாவை, தேர்மிசை சாயவே கிடத்தி-தேரின் மேல் விழும்படி செய்து (சாத்தகியிருப்ப அப்போது) துன்முகனோடு துச்சாதனன் - (தன்) தம்பியாகிய துர்முகனோடு துச்சாதனன், பரிதிமுன் பனி என்ன படர்ந்திட - சூரியன் முன் பனி (வந்தது) என்னும்படி [போரிட] வந்திட, பதாதி ஆக்கி - கால்நடையாகப் போகும்படி துரத்தி, (மேலும்) பல் பாடையின் மன்னரை-பல பாஷகள் பேசும் தேசங்களின் துணை வேந்தர்களை, விருது தேர் அழித்து - (அவர்களது) கொடி தேர் முதலியவற்றைச் சிதைத்து, உம்பரில் ஏற்றி - (அவர்களைச்) சுவர்க்கலோகத்திற்குச் செலுத்தி (கொன்று என்றபடி), (பின்னர்) வித்தகற்கு இளை - பேரறிவாளனாகிய தருமனுக்குத் தம்பியாகிய, பார்த்தன்கண்-அருச்சுனனிடத்து, மேவுழி - அடைந்த பொழுது, சரதன் - சத்திய விரதனாகிய தருமன், சாத்தகி வந்திலன் - (தான் ஏவிய) சாத்தகி திரும்பி வரவில்லை (யென்று எண்ணி) வீமனைக் கூய் - வீமசேனனை யழைத்து, அரி சங்கொலி சார - (மீண்டும்) கிருஷ்ணனது சங்க நாதம் கேட்கவே, ஏவினன் -(அவனையும்) அனுப்பினான் ; (எ.று.)

தருமபுத்திரன் சாத்தகியைத் துணை யனுப்பின பின்பும், கிருஷ்ணனது பாஞ்சசன்னிய முழக்கம் கேட்கப்பட்டதனால், வீமனையும் அழைத்துத் துணை செல்ல ஏவினனென்பதாம். துன்முகன் - துரியோதனன் தம்பி. சூரியன் முன் பனியிரிவதுபோலச் சாத்தகி முன் துச்சாதனனாதியோர் இரிந்தனர் என்பது உவமையாற் பெறவைக்கப்பட்டது. பாடை-பாஷை : இலக்கணையால் அது பேசப் படுந் தேசத்துக்கு வந்தது. விருது-கொடி. உம்பரிலேற்றுதல்–பிறிதின விற்சி. வித்தகன் - பேரறிவாளன்: இங்கே தருமன். இளை -இளமை : இளையவன் என்ற பொருளில் வந்தது. சரதம் - உண்மை, மெய், சத்தியம். சரதன் - மெய்விரதன் : தருமன். கூய் - கூவி- வினையெச்சம். (41)

42. தருமன் ஏவலின்படியே வீமன் செல்லுதல்.

அருக்கன் மேற்கடைந் தானவ னும்பிமாற்
கடுத்த தென்னென வடைந்தறிந் தென்னுளந்
தரிக்க நீயரி நாதஞ்செய் அங்கெனச்
சமரில் யார்நர னுக்கெதிர் சாரயான்

குருக்க வர்ந்திடு மேநிணை யென்னலுங்
குரிசின் மைத்துன னிங்குளன் செல்கென
இருக்கு மன்னரி னுறுதிகொண் டேபணிந்
தேகி னன்படை யெய்திய வீமனே.

(இ-ள்) (தருமன்) 'அருக்கன் அவன்-சூரியன், மேற்கு அடைந்தான்-[அத்தமனமாவதற்கு] மேற்குத் திசையையடைந்துள்ளான் : உம்பி மாற்கு-உன் தம்பியாகிய அருச்சுனனுக்கும் [சங்கு முழக்கிய] கிருஷ்ணனுக்கும், அடுத்தது-நேர்ந்தது, என் என - என்னவென்று, அடைந்து - நீ போய், அறிந்து - தெரிந்து, என் உளம் தரிக்க-என் மனம் தெளிவுற, நீ அங்கு அரிநாதம் செய்-நீ அவ்விடத்தினின்று சங்கநாதஞ் செய்வாய், 'என - என்று கட்டளையிட, (அப்போது வீமன்)' சமரில் - போரில், நரனுக்கு எதிர் யார்-அருச்சுனனுக்கு நிகர் எவருளர்? (ஒருவருமிலர்) : யான் - [உமக்குக் காவலாயுள்ள] நான், சார.(அங்குச்) செல்வேனுயின், நிணை - உன்ணை, குரு கவர்ந்திடுமே-துரோணன் அகப்படுத்திக்கொள்வானே,' என்னலும்-என்று (வீமன்) சொல்லவும், குரிசில்-தருமன், 'மைத்துனன் - திட்டத்துய்மன், இங்கு உளன்-இவ்விடத்து (எனக்குப் பாதுகாவலாய்) உள்ளான்: (ஆகவே) செல்க-நீ போவாயாக,' என-என்று கூற, [வீமன்] இருக்கும் மன்னரின் உறுதிகொண்டு – அங்கிருந்த வேந்தர்களின் சூளுறவு பெற்று, பணிந்து - அவர்கணை வணங்கி, ஏகினுன் - சென்றுன். : (அங்ஙனம் சென்று) படை எய்திய வீமன்; - எதிரிகளின் படைமுணையை யடைந்த வீமன் ; (எ.று.) "அணைவரையும் செகுத்து" என மேலைக்கவியிலியையும்.

சூரியன் அத்தமிப்பின் அருச்சுனன் எரிபுகுவானுதலின் அதற்கு முன் வீமணைச் சென்று செய்தியறிந்து, அவனுக்கு ஊறு ஒன்றும் நேர்படாதிருப்பின் அதணையறிவித்தற்குச் சங்கநாதஞ்செய்யச் சொன்னுன் தருமன் என்பது அறியவேண்டுவது. அரி-ஆயுதம் (weapon) : இங்கே சங்கு எனலாம்- உறுதியாவது - தருமணைக் குரு கவராமல் காப்போம் என்ற சூளுறவு. அருக்கனவன், அவன்-முதல்வேற்றுமைச் சொல்லுருபு. மேற்கடைந்தான் - துணிவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொன்ன **காலவழுவமைதி.** கவர்ந்திடும் - செய்யுமென்முற்று. செய், செல்க-முன்னிலையேவல். செல்கென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (42)

43. **வீமன் கௌரவசேனையைச் சிதைத்து, துரியோதனன் தம்பியரில் எழுவரை மாய்க்க, துரோணன் வீமனெதிரில்வர அவன் அவரைவணங்கவும், அவர் தணியாமற்போர் தொடங்கவே, வீமன் அவரது தேரையெடுத்தெறிதல்.**

சீன ராரியர் மாளவர் கோசலர்
தெலுங்கர் வங்களர் யவனரொ
டான தேயர னேகரை யுஞ்செகுத்
தடுத்து மேல்வரு மந்தகன் மைந்தரில்
வான மாளவி டுத்தெழு வோரைநேர்
மறித்த துரோணனை வந்தனை செய்யவும்
ஏனை யோன்சிலை வாங்கலுஞ் சென்றுதேர்
இருக ரங்கொடெ டுத்தெறிந் தானரோ.

(இ-ள்) (வீமன்) சீனர்-சீனப்படைஞர், ஆரியர்-ஆரியப்படைஞர் மாளவர் - மாளவதேயப் படைஞர்! கோசலர் - கோசல நாட்டுப் படைஞர், தெலுங்கர் - தெலுங்க தேயப்படைஞர், வங்களர் - வங்க நாட்டுப்படைஞர், யவனரொடு-யவனதேயப் படைஞரோடு, ஆன - கூடிய, தேயர் அனேகரையும் - அனேக தேசப்படைஞர்களையும், செகுத்து - அழித்து, அடுத்து - (பின்னர்த்) தொடர்ந்து, மேல்வரும்-தன்மேல் எதிர்த்து வந்த, அந்தகன் மைந்தரில் - திருதராட்டிரன் பிள்ளைகளுள், எழுவோரை -ஏழுபேர்களை, வானம் ஆள விடுத்து - சுவர்க்கத்தையாளும்படியனுப்பி (கொன்று என்றபடி), (பின்பு) நேர் மறித்த துரோணனை- நேராக வந்து வழிதடுத்த துரோணாசாரியனை, வந்தனை செய்யவும் - நமஸ்கரிக்கவும், (அதைப் பொருட்படுத்தாது) ஏனையோன் - துரோணன், சிலை வாங்கலும் - (தன்) வில்லை வளைத்து போர் தொடங்கவும், சென்று - அவரை யெதிர்த்துச் சென்று, (வீமன்) இருகரங்கொடு - (தனது) இரண்டு கைகளைக் கொண்டு, தேர் - அவனது இரதத்தை. எடுத்து எறிந்தான் - தூக்கி வீசியெறிந்து சிதைத்தான்; (எ-று.) அரோ-ஈற்றசை.

பலதேசப்படைஞர்களை யொழித்துக் கொண்டு வீமன் வியூகத்தினுள் புகுந்து அப்பால் விரைவாகச் சென்றபோது தம்பியர் எழுவர் எதிர்த்து மாண்டனர் என்பது அறிக். மாண்ட ஏழுதம்பியரில் வில்லிபாரதத்தின்படி ஐவர் பெயர்கள் - விந்தன், விந்தரன்,

குண்டலபோசி, தீர்க்க லோசனன், சித்திரசேனன் என்பவர், வீமன் வணங்கவும், துரோணன் கைமிஞ்சி வில்லை வளைத்தனன் என்பதாம், தான் செய்த வணக்கம் துரோணனால் அங்கிகரிக்கப் படாமல் அலட்சியஞ் செய்யப்பட்டதனுல், மேலொன்றுங் கூருமல் அவன் தேரையெடுத்தெறிந்தான் என்க - வானம் ஆளவிடுத்தல் - பிறிதினவிற்சி, (43)

44. தேரும் துரோணனும் சிதையவே, பல தேய வீரர்கள் வீமனை வளைதல்.

அனிலன் மாமகன் வாரியெ றிந்ததேர்
    அமர ரஞ்சியொ துங்கிட மேற்செலா
முனிவ னென்புமு றிந்திட வாகினி
    முறையி டப்பரி பாகுசி தைந்துமண்
நனிபொ டிப்பட வீழ்ந்தது தேர்மிசை
    நண்ணி மேல்வரு வீமனை யெல்லினைப்
பனிவ ளைந்ததெ னவளைத் தாற்றரும்
    படைசெய் தார்பல பாடையி னேரெலாம்.

(இ-ள்) அனிலன்மா மகன் - வாயுபுத்திரனுகிய சிறந்த வீமன், வாரி - தூக்கி,எறிந்த தேர் - மேல் வீசிய தேரானது, அமரர் அஞ்சி ஒதுங்கிட - தேவர்கள் பயந்து ஒதுங்கும்படி, மேல் செலா - ஆகா யத்திற் சென்று, (பின்பு) முனிவன் என்பு முறிந்திட - துரோணனது எலும்புமுறியும்படியும், வாகினி முறையிட - படைகள் கதறும்படியும், பரி பாகு சிதைந்து - குதிரைகளும் பாகனும் அழியும்படியும், மண் - தரையானது, நனி பொடி பட - மிகவும் தூளாகும்படியும், வீழ்ந்தது- பூமியின் மேல் வந்து விழுந்தது : (இஃது இவ்வாருக) தேர்மிசை - தனது தேரின் மேலேறிக்கொண்டு, நண்ணி - கிட்டி, மேல்வரும் வீமனை - தங்கள் மீது எதிர்த்து வரும் வீமனை, எல்லினை பனி வளைந்து என - சூரியனைப் பனி சூழ்ந்ததுபோல, வளைத்து - சூழ்ந்து கொண்டு, பலபாடையினேர் எலாம் - பலபாஷைகளைப் பேசும் தேசப்படைஞர்களெல்லாம், ஆற்ற அரும் படை செய்தார் - பொறுத்தற்கரிய கடும்போரைச் செய்தனர் : (எ. று.).

ஈற்றடியில் வந்துள்ள உவமையால் வீமன்முன் பலதேச வீரர்களும் இரிந்தனர் என்பது பெறவைக்கப்பட்டது. ஒதுங்கிட முறிந்திட முறையிட, பொடிபட என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'வீழ்ந்தது' என்ற முற்றோடு முடியும். படை - போர், நனி - உரிச்சொல். (44)

45. வீமன் முன்சென்ற சாத்தகியோடு சேர்ந்து, இருவரு மாய்க் கிருஷ்ணார்ச்சுனரை யடுத்து நிற்ப, வீமன் தருமன் செவிப்படும்படி சங்கினை யூதுதல்.

வந்த மன்னரொ டுங்கிம டங்கிட
வாகை கொண்டடை மாருதி சாத்தகி
முந்த நோக்கிய வனுடன் மானரன்
முனையுற் றானிரு தேர்வரக் கண்டவர்
சிந்தை கொண்டர சேவலென் றன்புரு
தேவ சங்கமு ழக்கினர் வீமன்மைச்
சந்த மெய்யினர் தம்மைக்கண் டன்பொடு
தமையன் தன்செவி சாரச்சங் கூதினான்.

(இ-ள்) வந்த மன்னர் - (தன்னையெதிர்த்து) வந்த பலதேய வரசர்களும், ஒடுங்கி மடங்கிட - சோர்ந்து அடங்கிட, வாகை கொண்டு - வெற்றிபெற்று, அடை மாருதி - வருகின்ற வீமன் சாத்தகிமுந்த - சாத்தகி முன்செல்வதை, நோக்கி - பார்த்து, அவனுடன் - அச்சாத்தகியுடன், மால் நரன் முனை உற்றான் - கிருஷ்ணார்ச்சுனர் இருக்கும் முனையிடத்தைச் சார்ந்தான் : அவர் - அந்தக் கிருஷ்ணார்ச்சுனர், இரு தேர் வரக்கண்டு - (தம்மையண்டி இரண்டு தேர்கள் வருதலைப் பார்த்து, அவர் சிந்தை கொண்டு) அவ்விருவரும் மனத்திலெண்ணி, அரசு ஏவல் என்று - தருமராசனது கட்டளையாகும் இது என்று நிச்சயித்து. அன்பு உரு - அன்போடு, தேவசங்கம் முழக்கினர் - தேவதத்தம் என்ற சங்கினை யூதினர் : (பிறகு) வீமன்-, மை சந்தம் மெய்யினர் தம்மைக் கண்டு - கரிய நிறத்திருமேனியையுடைய கிருஷ்ணார்ச்சுனரைப் பார்த்து, அன்போடு-, தமையன்தன் செவி சார - தருமராசனின் காதுகளில் விழும்படி (உரக்கச்), சங்கு ஊதினான் - (தன்) சங்கினை யூதினான் : (எ- று.)

தேவசங்கம் என்று பொதுப்படக்கொண்டால் அருச்சுனன் தன் தேவதத்தம் என்னும் சங்கையும், கிருஷ்ணன் தன் தெய்வீக பாஞ்ச சன்னியம் என்னுஞ் சங்கையும் ஊதினர் என்னலாம், சந்தம் -அழகு. (45)

46. மூவரையும் பகைவர் பலரும் எதிர்க்க, அவர்களை வீமன் ஓடிடச் செய்ய, கர்ணன் வீமனுடன் பொருதல்.

மூவ ரென்னவே மூவருஞ் வெஞ்சுமர்
முற்றி னுர்பலர் மொய்த்தனர் மாருதி
யாவ ரும்முடைந் தோடிடச் சாடினுன்
இரவி தன்மத லைச்சமர் முந்தினுன்
தேவ ருள்ளந்தி கைத்திடச் சேடனுந்
திடுக்கி டத்திசை யெட்டும லைந்திட
ஏவு மாரிபொ ழிந்தமர் செய்தனர்
இருவ ருந்தமக் கியாரிணை யென்னவே.

(இ - ள்) மூவரும் - சாத்தகி வீமன் அருச்சுனன் மூவரும். மூவர் என்ன - திரிமூர்த்திகள் என்னும்படி, வெம்சமர் முற்றினுர் - கொடியபோரினைச் செய்யலானுர்: (அம்மூவரையும்) பலர் மொய்த்தனர் - பலபகைவர்களும் சூழ்ந்து கொண்டனர் : மாருதி - வீமன் [ஒருத்தனே), யாவரும் உடைந்து ஓடிட - எல்லாரும் தோற்று ஓடும்படி, சாடினுன் - மோதினுன் : (அதுகண்டு) இரவிதன் மதலை- சூரியகுமாரனுகிய கர்ணன், சமர் முந்தினுன் - போரில் முற்பட்டு வந்தான் : (அப்போது) இருவரும் - கர்ணனும் வீமனும், தமக்கு இணை யார் என்ன - தங்களுக்கு நிகர் (தாங்களே யல்லது) வேறு யாருளர் என்னும்படி),தேவர் உள்ளம் திகைத்திட -போர் காணவந்த தேவர்கள் மனம் நடுங்கும்படியும், சேடனும் - பூமியைத்தாங்கும், ஆதி சேடனும், திடுக்கிட - (பாரமிகுதியால், தலைநடுங்கும்படியும் திசை எட்டும் அலைந்திட - திக்குக்களும் கலங்கும்படியும், ஏவு மாரி பொழிந்த - அம்பினுலாகிய மழையைச் சொரிந்து, அமர் செய்தனர்- போர் செய்தனர் ; (எ-று.)

திசை - திசையிலுள்ளார்க்கு இடவாகு பெயர். ஏவு மாரி - உருவகம்- 'மூவரென்ன' என்ற விடத்து மூவர் - தொகைக்குறிப்பு : பிரமவிஷ்ணுருத்ரர்களைக்காட்டும் -திகைத்திட, திடுக்கிட. அலைந்திட என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'பொழிந்து' என்பதோடு முடியும். (46)

47. வீமனுல் கர்ணன் தேருடன் சிதைய, அக்கர்ணனுக்கு அவன் மகன் தன் தேரைக் கொடுக்க, அப்போதும் கர்ணன் தோற்கவே, துரியோதனன் துரோணனோடு கூறத் தொடங்குதல்.

செப்ப தீப்பொறி கண்ணுக சேவகத்
திறம றந்தமர் செய்பொழு தங்கர்கோன்
மாப்ப ரிக்கொடிப் பாகுதேர் சிந்திட
மாரு திக்குடைந் தேவிட சேனன்தேர்
வாய்ப்ப வந்தமர் தந்தவன் முந்துபோன்
மடங்க லால்கதை வல்லவ னுக்குளந்
தீப்ப டக்கொதித் தந்தகன் மைந்தன்போய்ச்
சிலைவ லாரிய னுக்கிது 'செப்புவான்.

(இ-ள்) செப்ப - (தமக்கு இணையில்லை யென்று) சொல்லி, தீப்பொறி கண் உக- (சினத்தால்) நெருப்புப் பொறி கண்களிலிருந்து சிந்த, (இருவரும்) சேவகத்திறம் மறந்து - வீரச்செயல்களின் கூறுபாடுகளையும் மறந்து வெகு உக்கிரமாக) அமர்செய் பொழுது - போரிடுங்காலத்து, அங்கர்கோன் - கர்ணனது, மாப் பரி - சிறந்த குதிரைகள், கொடி - துவசம், பாகு -பாகன், தேர் - இரதம், (இவை) சிந்திட - அழிந்து போக, மாருதிக்கு உடைந்து - வீமனுக்குத்தோற்று, (அச்சமயத்தில்) விடசேனன் - தன்மைந்தனுகிய விடசேனனது, தேர் வாய்ப்ப - தேர் கிடைக்க (அதனிலேறி), வந்து - முனைக்கு வந்து, அமர் தந்து -போரிட்டு, அவன்-அந்தக் கர்ணன், முந்துபோல் மடங்கலால் - முன்னர் தோற்றது போல் ஒடுங்கி மீளுதலால், (அதனைக்கண்ட) அந்தகன் மைந்தன் - குருடனுகிய திருதராட்டி ரனின் மகனுகிய துரியோதனன், அ கதை வல்லவனுக்கு உளம் தீப்படக் கொதித்து - அந்த வீமனிடத்தில் (தன்) மனம்அழலும்படி பொங்கிச்சினந்து போய் - அங்கினின்று அகன்று, சிலை வல் ஆரி யனுக்கு - வில்லில் வல்ல துரோணுசாரியனுக்கு, இது செப்புவான் - இவ்வார்த்தைகளைச் சொல்லலானுன் ; (எ-று) அவன் கூறியத் - மேலைக்கவியிற் காண்க.

சேவகத்திறம் மறத்தலாவது - கடுங்கோபத்தால் (ஆக்குரோ ஷத்தால்) யுத்ததருமங்களைமறத்தல், தீப்பொறிகண்ணுக - விழிக் கட்டியினன்'' என்ருர் கம்பரும். பரிக்கொடிபாகுதேர் - உம்மைத்

தொகை. விடசேனன் - கர்ணனது குமாரன். வல்லவனுக்கு - வல்லவன் விஷயத்தில் என்றபடி. (47)

வேறு.

48. துரியோதனன் கூறிய வார்த்தையும் துரோணனது பதிலும்.

தனஞ்செயன்சாத் தகிவீமன் றனைவிடுத்தாய்
அவரூழித் தழனீர் கால்போற்
சினஞ்செய்நம் படைமுழுதுஞ் சிதைக்கின்றார்
இன்றுய்ய வேநீர் உந்தன்
மனஞ்செய்துள் ளணிபுகுந்து காத்தியென
வெகுண்டாசான் வகுக்கு மங்கே
தினஞ்செய்வான் சுதன்சகுனி யிளைஞனொடு
நீயிருக்கச் செயிப்ப தியாரே.

(இ-ள்) தனஞ்செயன் - அருச்சுனனையும், சாத்தகி - சாத்தகியையும், வீமன் தனை - வீமனையும், விடுத்தாய் - தடுத்துநிறுத்தாமல் மேல் வர விட்டுவிட்டாய்: (அதனால்) அவர் - அம்மூவரும், ஊதித்தழல் நீர் கால்போல் - பிரளயகாலத்து நெருப்பு கடல்காற்றுப் போல் கடுமையொடு பொங்கியெழுந்து, சினம் செய் - கோபங்கொண்டு, நம் படை முழுதும் - நமது சேனைகள் முழுவதையும், சிதைக்கின்றார் - அழிக்கின்றார்கள்: (இனி) நீர் - சேனாதிபதியாகிய நீர், இன்று உய்ய - இன்றைய தினம் நம் படைகள் உயிர் பிழைக்கும் படி, உம் தன் மனம் செய்து - உம்முடைய மனத்தில் நிச்சயித்து, அணி உள் புகுந்து - (எதிரிகளின்) படைவகுப்பினுள்ளே ஊடுருவிச் சென்று (சிதைத்து), காத்தி - காப்பாற்றுவாயாக, என - என்று வேண்ட (அதற்கு) ஆசான் - துரோணன், வெகுண்டு - கோபித்து அங்கே - அவ்விடத்தே, வகுக்கும் - சொல்வான்: தினம் செய்வான் சுதன் - சூரியகுமாரனாகிய கர்ணன், சகுனி - மாமன்சகுனி, இளைஞனொடு - தம்பி துச்சாதனனோடு, நீ இருக்க - நீயும் (சேர்ந்து நால்வரும்) வீரர்களாயிருக்க, செயிப்பது - (அம் மூவரையும்) வென்றிடுவது, யார் ஏ - (உங்களையன்றி) வேறு யாரிருக்கின்றார்கள்? (என் ஒருத்தனால்முடியுமா?) (எ-று)

துரோணன் துட்டசதுட்டரையும் குத்திக்காட்டியபடி. நீங்கள் நால்வராயிற்றே, அவர்கள் மூவர்தாமே: எனவே நீங்கள் கூடி அவர்களை வெல்லலாமே என்று கூறியபடி. நீமனம் வைத்தால் காக்கலாம் என்று துரியோதனன் சொன்னதில், நீ மனப்பூர்வமாக யுத்தஞ்செய்யவில்லையென்பது நிஷ்டூரமாகத்தெரிவதால் துரோணன் வெகுண்டானென்க. முதலடியில் உவமையணி. காத்தி- வியங்கோள். வகுக்கும் – செய்யுமென்முற்று, யாரே, ஏ - வினு எதிர்மறை குறிக்கும்.

இதுமுதல் பதினெட்டுக் கவிகள் - பெரும்பாலும் முதல் நான்கும் காய்ச்சீர்களாகவும், ஏனைய இரண்டும் மாச்சீர்களாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட அறுசீராசிரிய விருத்தங்கள். (48)

49, துரியோதனன் உத்தமோசா உதாமன் இருவரோடும் போரிட்டுத் தன் தேரையிழத்தல்.

இவ்வணியா னின்றிலனேல் யாவரும்வந்
திகலியற்று மிறைவ ! நீசென்
றவ்வணிமைத் துனன்றனைக்கா வெனவிடுப்ப
வருநெறியி லகிகே தியாரும்
ஒவ்விநரன் றனைநேடும் உத்தமோசா
வுதாமனைக்கண் டுடற்றி வெம்போர்
அவ்விருவ ரிரதமழித் தவர்கதையாற்
றன்றேர்போ யகன்ருன் மன்னே.

(இ-ள்) யான் -நான், இ அணி நின்றிலனேல் - இந்தப்படை வகுப்பில் சேனைத்தலைவனுய் நின்று தடுக்காமலிருந்தால், இறைவ! - துரியோதனராசனே ! யாவரும் வந்து - எல்லோருமாக வந்து (ஒரு சேர) இகல் இயற்றுவர் - போரிடுவார்கள். (அப்போது யாம் உடைவோம்): [இப்போது] நீ சென்று நீ · போய், அ அணி - அந்தப் படை வகுப்பிலுள்ள, மைத்துனனைக் கா - சயத்திரதனைக் காப்பாற்றுவாயாக, என விடுப்ப - என்று சொல்லியனுப்ப, (அதன்படியே) அகி-கேது - பாம்புக் கொடியையுடைய துரியோதனன், வரு நெறியில் - தான் (சயத்திரதனை நோக்கி) வரும் வழியில்,

யாரும் ஒவ்வி நரன்தனை நேடும் - அனைவரும் ஒரு சேரமன மொப்பி அருச்சுனனை இலக்காகக் கொண்டு விரும்பி வரும், உத்தமோசா உதாமனைக் கண்டு - உத்தமோசாவையும் உதாமனையும் பார்த்து, -(அவ்விருவரோடும்) வெம்போர் உடற்றி - கொடிய போரினைச் செய்து, அ இருவர் இரதம் அழித்து - அந்த இருவருடைய தேர்களையும் சிதைத்து, அவர் கதையால் - அவ்விருவர் மோதிய கதாயுதத்தால், தன் தேர் போய் - தனது தேரும் சிதைந்து போக, அகன்றான் - அப்பாற் சென்றிட்டான்; (எ.று.) மன், ஓ - ஈற்றசை,

'யாரும் ஒவ்வி நரன்தனை நேடும்' என்றது - இருதிறத்தாரும் அருச்சுனனை இலக்காகக்கொண்டு விரும்பித் தேடி வருதல்கூறப் பட்டது. கௌரவர் படை விரும்பித் தேடுவது - அவனோடு பொருதற்கு: பாண்டவர் படை விரும்பித்தேடுவது - அவனுக்குத் துணைபுரிதற்கு என்க. உத்தமோசா உதாமன் இருவரும் பாஞ்சால தேசத்தவர்: பாண்டவர் பக்கத்தினர். கா - முன்னிலையேவல். ஒவ்வுதல் - ஒப்புதல், பொருந்துதல். (49)

50. **துரியோதனன் சயத்திரதனைச் சேர, உத்தமோசாவும் உதாமனும் அருச்சுனனைச் சேர, அப்போது வீமன் கர்ணனை வென்றதைத் துரியோதனன் கண்டு தன் தம்பி துர்ச்சயனை வீமன் மேல் ஏவுதல் :**

மத்திரனின் தேர்கிடைப்ப மைத்துனன்மாட்
டரசடைந்தான் மற்றோர் மீட்டும்
அத்தியென இருவர்செகுத் தவர்தேர்மேற்
புகுந்துநர னருகு சார்ந்தார்
சித்திரவி லங்கர்பதி சினத்தெதிர்ந்து
மாருதியாற் றேர்போய்ச் சேறல்
துத்திபணி கேதுணர்ந்து துர்சயனு
மிளையோனைத் தூண்டி னானால்.

(இ-ள்) மத்திரனின் - சல்லியனின், தேர் கிடைப்ப - தேர் சமீபிக்க, (அதனிலேறி) மைத்துனன் மாட்டு - சயத்திரதனிடத்தில், அரசு அடைந்தான் - துரியோதனன் சார்ந்தான் : மற்றோர் - ஏனைய

உத்தமோசாவும் உதாமனும், மீட்டும் - மறுபடியும், அத்தி எனயாஜனயென்னும்படி [தாக்கி], இருவர் செகுத்து - கௌரவர் பக்கத்திருவரைக் கொன்று, அவர் தேர் மேல் புகுந்து - அவ்விருவரின் தேர்மேல் (தாம் இருவரும்) ஏறிக்கொண்டு, நரன் அருகு சார்ந்தார் - அருச்சுனனிடத்தைச் சேர்ந்தார்கள்; (இஃது இவ்வாருக) சித்திரவில் அங்கர்பதி - அழகிய வில்லையேந்திய கர்ணன், சினத்து எதிர்ந்து - கோபித்துப் போரிட்டு, மாருதியால் - வீமனால், தேர் போய் - தன் தேரினையிழந்து, சேறல் - (தன்னுடைய பாசறையை) அடைந்ததை, துத்தி பணி கேது - புள்ளிகளையுடைய பாம்பினைக் கொடியில் எழுதியுயர்த்திய துரியோதனன், - உணர்ந்து - அறிந்து, துர்ச்சயனும் இளையோனை - துர்ச்சயன் என்னும் தம்பியை, தூண்டினான் - (வீமன்மேல்) பொர அனுப்பினான், (எ.று.).

கிடைத்தல் - சமீபித்தல், "கிடந்தானைக் கிடைத்திரு தடங்கை கூப்பினன்" (கம்ப : கிட் : கிட்கிந்தை, 23) அத்தி - ஹஸ்தி : யானை. கருக்கொண்டு செகுத்தலில் உவமை. சேறல் - தொழிற் பெயர். (50)

51. துர்ச்சயன் வீமனால் இறந்துபட, மற்றும் தம்பியர் அறுவரை வீமன் தொலைக்கக் கர்ணன்வந்து போரியற்றித் தேரிழந்து மீளுதல்.

வந்தவன்வெஞ் சமரியற்றி வானடைந்தான்
மீட்டலரி மகன்வந் தேபோர்
தந்துடனெந் திரதமொடு தான்மீண்டான்
அதுகண்டு தமைய னேவ
முந்தியமர்புரிந் தொருவன் முடியிழந்தான்
மீட்டைவர் முடிந்தார் கன்னன்
சிந்தைகொதித் தெதிர்ந்தரிய செருவியற்றித்
தேர்முன்போற் சிதைந்து மீண்டான்.

(இ-ள்) வந்தவன் - வந்த துர்ச்சயன், வெம் சமர் இயற்றி - கொடிய போரினைச் செய்து, வான் அடைந்தான் - இறந்து போனான்; மீட்டு - மறுபடியும், அலரிமகன் - சூரியகுமாரனாகிய கர்ணன், வந்து - வீமனையெதிர்த்து வந்து, போர் தந்து - சண்டை

யிட்டு, உடல் நொந்து - உடம்பு தளர்ந்து, இரதமொடு - தன் தேரினைக் கொண்டு, தான் மீண்டான் - தான் திரும்பினான்: அது கண்டு - கர்ணன் நைந்து திரும்பியதைப் பார்த்து, தமையன் - அண்ணனாகிய துரியோதனன், ஏவ-அனுப்ப, (தம்பியர் அறுவரில்) ஒருவன் - ஒருத்தன், முந்தி அமர் புரிந்து - முற்பட்டுப் போரைச் செய்து, முடி இழந்தான் - தலை துணிக்கப்பட்டான்: மீட்டு - மறுபடியும், ஐவர் - ஐந்து பேர்கள் [போரிட்டு] முடிந்தார் - இறந்து போனார்கள். (இதனைக் கண்ட) கன்னன் - கர்ணன், சிந்தை கொதித்து எதிர்ந்து - மனம் அழன்று எதிரிட்டு, அரிய செரு இயற்றி - செய்தற்கரிய கடிய போரினைச் செய்து, (அதன் பயனாக) முன்போல் - முன்னர் நிகழ்ந்தது போலவே, தேர் சிதைந்து - தேர் சிதைக்கப்பட்டு, மீண்டான்; (எ.று.)

கர்ணன் இருமுறை தோற்றுத் தேரழிந்து மீண்டமை கூறப்பட்டது. தம்பியரில் எழுவர் மாண்டுபோயினமை ஈண்டு கூறப்பட்டது காண்க. வந்தவன் - வினையாலணையும்பெயர். வெஞ்சமர், அரிய செரு - பண்புத்தொகைகள். (51)

52. பின்னும் தம்பியர் எழுவர் மாள, மீண்டும் கர்ணன் களம்புகுந்து வீமனிடம் தோற்று நிற்றல்.

மீட்டிளையோ ரெழுவரைவேந் தேவவவர்
அமரியற்றி விளிந்தார் முன்வென்
காட்டியவவ் வங்கர்பதி கனன்றடைந்து
சமரியற்றிக் கால்கொண் டோடி
பூட்டிசிலை தேர்தேடிப் புகுந்திருநா
ழிகைவெம்போர் புரிந்து கால்சேய்
நீட்டுகணைக் குடைந்து நெடுந்தேர்வில்
லழிந்தயர்ந்து நிலமே னின்றான்.

(இ-ள்) வேந்து - துரியோதனராசன், மீட்டு - மறுபடியும்) இளையோர் எழுவரை - ஏழுதம்பியரை, ஏவ - (போர் செய்யுமாறு) அனுப்ப, அவர் - அந்த எழுவரும், அமர் இயற்றி - போரினைச் செய்து, விளிந்தார்-இறந்தார்கள்: முன் - முன்னால், வென் காட்டிய-முதுகு காட்டியோடிய, அ அங்கர்பதி - அந்தக் கர்ணன் கனன்று - கோபித்து, அடைந்து - களம் வந்து, சமர் இயற்றி - போர் செய்து,

கால் கொண்டு ஓடி - (தோற்றுக்) கால் நடையாய் விரைந்து, (பின்பு) சிலை பூட்டி - வில்லினை வளைத்து, தேர் தேடிப் புகுந்து - தேரொன்றினைத் தேடியதனிலேறி, இரு நாழிகை வெம்போர் புரிந்து- இரண்டு நாழிகைகாலம் கொடிய போரினைச் செய்து, (அங்கு) கால்சேய் - வாயுபுத்திரனான வீமன், நீட்டு கணைக்கு உடல் நொந்து- நீள (தொடர்ச்சியாக) விடுத்த அம்புகளுக்கு உடம்பு வருந்தி, நெடும் தேர்வில் அழிந்து - பெரிய தேரும்வில்லும் சிதைந்து, அயர்ந்து - சோர்ந்து, நிலம் மேல் நின்றான் - தரையின்மேல் (செயலின்றி) நின்றான் ; (எ-று.)

காலகொண்டோடுதல் - பாதசாரியாதல். அங்கர்பதி - அங்க நாட்டார்க்கு அரசன் : கர்ணன். அ - பிரசித்திகாட்டுவது. தேர்வில்- உம்மைத்தொகை. (52)

53. கர்ணன் நிலைகண்டு துரியோதனன் தம்பியர் எழுவரையனுப்ப, அவர்களை வீமன் கொல்லவே, விகர்ணன் வீமனையெதிர்த்தல்.

நின்றவன்மீட் டாறியொரு நெடுஞ்சிலைகொண்
டடல்பேசி நிலத்தேர் கொண்டே
சென்றமர்செய் நிலைநோக்கிச் சினத்தரசன்
விடவெழுவர் சென்று வெம்போர்
நன்றியற்றிச் சிலைதேர்போய் நண்ணினர்விண்
ணூற்றுவரில் நல்லோ ரேத்தும்
வென்றிகொளும் விகருணன்வார் வில்வாங்கி
யெதிர்ந்திடலும் வீமன் சொல்வான்.

(இ-ள்.) நின்றவன் - தரையின்மேல் நின்ற கர்ணன், மீட்டு - மறுபடியும், ஆறி-சோர்வு நீங்கி, ஒரு நெடுஞ்சிலை கொண்டு - பெரிய தொரு வில்லையேந்தி, அடல்பேசி - வலிமை சொல்லியகங்கரித்து, நிலத் தேர் கொண்டு - தரையையே தேராகக் கொண்டு, சென்று- பாதசாரியாய்ச் சென்று, அமர்செய் நிலை நோக்கி - போர் செய்கின்ற நிலைமையைப் பார்த்து, அரசன் - துரியோதனன், சினத்து - கோபித்து, எழுவர் விட-ஏழு தம்பியரை (க்கர்ணனுக்கு உதவுமாறு) அனுப்ப, (அவர்கள்) சென்று - போய், வெம்போர் - கொடிய யுத் தத்தை, நன்று இயற்றி - நன்றாகச் செய்து, (வீமனொடு செய்த

அப்போரில்) சிலே தேர் போய் - வில்லும் தேரும் அழிந்து, விண் நண்ணினர் - வான் சேர்ந்தனர் (இறந்தனர்) : பிறகு) நூற்றுவரில் துரியோதனுதியர் நூறுபேருள், நல்லோர் ஏத்தும் - சான்ருேரால் (நல்லவனென்று) போற்றப்படும், வென்றி கொளும் விகருணன் - புகழைக்கொண்ட விகர்ணன், வார் வில் வாங்கி - (தனது) நீண்ட வில்லே வளைத்து, எதிர்ந்திடலும் - போரிடவருதலும், வீமன் சொல்வான் - வீமன் (அவனே நோக்கிச்) சொல்வானுயினுன் : (எ.று.) வீமன் சொல்வதை மேலேக்கவியிற்காண்க.

நிலத்தேர் - நிலத்தையே தேராக உருவகித்தபடி. சிலேதேர் - உம்மைத்தொகை. விண்நண்ணினர் - பிறிதினவிற்சி. வார்வில் - உரிச்சொற்ருெடர், (53)

54. வீமன் விகர்ணனேநோக்கி 'உன்னுடன் போர்செய்யேன்' என, அவன் வீமனே வலியப் போர்க்கு அழைத்தல்.

அன்றவையி னடுநிலேமை யறைந்திடலால்
நினேயென்சொல் லழிவுற் ருலும்
நன்றிமறந் துயிர்கவரேன் நடந்திடுநீ
யெனவிகன்ன னவில்வா னேய !
நின்றடக்கை யான்முன்னேர் நீங்கிடயான்
உய்குவனே நீகொ லென்றே
வென்றிசிலே குனித்தளப்பில் விசிகம்விடுத்
தனனவனும் வேற னேர்ந்தான்.

(இ. ள்) அன்று - சூதுபோர் நிகழ்ந்த அக்காலத்து, நடு நிலேமை அறைந்திடலால் - பட்சபாதமின்றி [நடுவு நிலேமையாகப்] பேசியதனுல், நினே - உன்னே, என் சொல் அழிவுற்ருலும் - (நான்) சொன்ன சபதம் தவறுதலானுலும், நன்றி மறந்து - (நீ செய்துள்ள) நன்மையை மறந்து, உயிர் கவரேன் - உயிர்போக்கமாட்டேன் : நீ நடந்திடு - நீ போவாய், என - என்று சொல்லி விடுப்ப, (அதற்கு) விகன்னன் - விகர்ணன், நவில்வான் - பதில் கூறுவான் : 'ஐய ! - பெரியோனே ! நின் தடக்கையால் - உன் பரந்த பெரிய கைகளால், முன்னேர் - நீங்கிட என் அண்ணன்மார் அனேவரும் இறந்துபட, யான் உய்குவனே - நான் ஒருத்தன் மாத்திரம் பிழைத்திருப்பேனே? நீ கொல் - நீ (என்னேயும்) கொல்வாயாக, என்று - என்று கூறி,

வென்றி சிலை குனித்து - வெற்றி பெறும் தன் வில்லை வளைத்து, அளப்பு இல் விசிகம் விடுத்தனன் - கணக்கற்ற அம்புகளைச் செலுத்தினான் : அவனும் - அந்த வீமனும். வேறல் - அவனை வெல்லுதலை, நேர்ந்தான் - மேற்கொண்டான்; (எ. று.)

துரியோதனன் முதலியோர் போலன்றிச்சபையில் நியாயம் பேசின விகர்ணன் விஷயத்தில் வீமன் நன்றி மறவாமையோடிருந்தனனாதலால், தன் சபதம் தவறினாலும் தவறட்டும் போர் செய்யேனென்றான். தனக்கு முன்னால்பலர் வீமனால் இறந்ததனாலும் மற்றையோரும் இறப்பரென்ற துணிவினாலும் 'நின்றடக் கையான் முன்னோர் நீங்கிட' என்றது. விகர்ணன்தான் இறுதிதம்பி யாவன், கொல் - முன்னிலையசைச்சொல். வேறல் - தொழிற்பெயர். நேர்தல் - உடன்படல், இசைதல். (54)

55. **வீமன் விகர்ணனைத் தலைதுணித்தல்.**

இருவரும்போர் விதமெல்லாம் இளையாமல்
இணையறச்செய் திடும்போ தூதை
தருமதலை யங்கேசன் தடங்கணெதிர்
பிறைமுகவெஞ் சரமொன் றேவி
பொருவிகன்னன் முடிதடிந்து புரந்தரன்வான்
பதமாளப் போக விட்டான்
சிரமிறைஞ்சா வேந்தனுசர் சேனுறலால்
விதுரன்மொழி சிந்தித் தேங்கும்.

(இ-ள்.) இருவரும் - வீமனும் விகர்ணனும், போர் விதம் எல்லாம் - போரிடும் வகைகளெல்லாம், இளையாமல் - சளைப்பில்லாமல், இணையற - ஒப்பில்லாதபடி, செய்திடும்போது —, ஊதை தருமதலை - காற்றின், மகனாகிய வீமன், அங்கேசன் தட கண் எதிர் - கர்ணனுடைய விசாலமான கண்ணுக்கு எதிராக, (அவன் கண்ணெதிரே என்றபடி), பிறைமுகம் வெம் சரம் ஒன்று ஏவி - அர்த்தசந்திரபாணம் ஒன்றினைச் செலுத்தி, பொரு விகன்னன் - போரிடுகின்ற விகர்ணனின், முடி தடித்து - தலையைத்துணித்து, புரந்தரன் வான்பதம் ஆள - தேவலோகத்துத் தேவேந்திரனுடைய பதவியைப் பெறும்படி, போகவிட்டான் - அனுப்பினான் : (இறக்கச் செய்தான் என்றபடி) (அப்போது) சிரம் இறைஞ்சா வேந்து -

வணங்காமுடி மன்னனாகிய துரியோதனன், அனுசர் - தம்பியர் பலர், சேண் உறலால் - வானுலகம் சேர்ந்ததனால் (வீமனால் கொல்லப்பட்டு ஒழிந்தமையால்), விதுரன் மொழி சிந்தித்து - முன் தன்சபையில் விதுரன் கூறிய நல்வார்த்தைகளை யெண்ணி, ஏங்கும் - வருத்தப் பட்டான் ; (எ.று.)

இந்திர பதவிப்பெறச் செய்தான் என்றது பிறிதினவிற்சி. மங்கல வழக்குமாம். சேணுறல் என்பதும் பிறிதினவிற்சி. வணங்காமுடி மன்னனும் தலைகுனிந்து ஏங்கினான் என்றார் ஈற்றடியில் அங்க+ ஈசன் = அங்கேசன் : குணசந்தி. தடங்கண் - உரிச்சொற்றொடர். இறைஞ்சா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஏங்கும் - செய்யு மென்முற்று. (55)

56. கர்ணன் துரியோதனனிடம் வஞ்சினங் கூறல்.

கன்னனுந்தன் கண்ணெதிரே கனிட்டரெலாம்
 ககனமுறக் கலங்கி மான்றேர்
மன்னியரச செதிரடைந்து வகுக்கின்றான்
 இளைஞர்தமை வதைத்த வீமன்
சென்னியறுத் திலனேலென் சிரமவன்கை
 கொடுப்பனிது திண்ணம் என்றே
பன்னிசிலை குனித்தெதிர்ந்தான் பவனனுயிர்த்
 தவனுமெதிர் பகழி கோத்தான்.

(இ.ள்.) கன்னனும் - கர்ணனும், தன் கண்ணெதிரே - தான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே (பிரதியட்சமாக), கனிட்டர் எல்லாம் துரியோதனன் தம்பியரெல்லாரும், ககனம் உற - வானுலகம் சேர (இறந்துபோக) கலங்கி - மனங்குழம்பி, மான் தேர் மன்னி - குதிரைகள் பூட்டிய தேரில் ஏறி, அரசு எதிர் அடைந்து - துரியோதனராசன் எதிரில் வந்து, வகுக்கின்றான் - கூறுவானாயினான்: இளைஞர் தமை - உன் தம்பியர்களை, வதைத்த - கொன்றொழித்த, வீமன் - வீமசேனனது, சென்னி - தலையை, அறுத்திலனேல் - துண்டிக்காமலிருப்பேனாயின், என்சிரம் - எனது தலையை, அவன் கை கொடுப்பன் - அவனது கையிலே நானே (அறுத்துக்) கொடுப்பேன் : இது திண்ணம் - இது நிச்சயம்', என்று பன்னி - என்று சூளுரைத்து, சிலை குனித்து - (தனது)

வில்லை வளைத்து, எதிர்ந்தான் - எதிர்த்துச் சென்றுன். (அது கண்டு) பவனன் உயிர்த்தவனும் - வாயுபுத்திரனுகிய வீமனும், எதிர் பகழி கோத்தான் - அவனுக்கு எதிராக அம்பு தொடுத்தான்; (எ.று.)

'என் தலைபோனுலும், வீமன் தலையையறுப்பேன்' என்று கர்ணன் சபதம் கூறித் துரியோதனனைத் தேற்றினுன் என்றபடி. ககனம் உறல் - பிறிதினவிற்சி. மான், ன்-சாரியை. (56)

57. வீமனும் கர்ணனும் எதிர்தல்.

கோற்றெடுத்து நரன்மொழியாற் கொடுத்தனுயி
    ரெனவீமன் கூறப் பல்காற்
றேற்றகல்பாற் கரன்மதலை தோடுடிப்ப
    விழிசேப்பச் சுடர்போற் சீறி
யேற்றரிகே தலக்கணுற விரதம்பா
    கிவுளியும்வீழ்த் திட்டான் பார்மேற்
காற்றளித்தோ னின்றொருவெங் கதையேந்திச்
    சிதைத்திட்டான் கன்னன் றேரை.

(இ.ள்.) கோல் தொடுத்து- அம்பு விடுத்து, வீமன் - வீமசேனன், (கர்ணனை நோக்கி) 'நரன் மொழியால் - அருச்சுனன் செய்துள்ள சபதவார்த்தையினுல், உயிர் கொடுத்தன் - (உனக்கு) உயிர் வழங்கினேன்' எனகூற -என்று சொல்ல- (அதனைக் கேட்டு), பல்கால் - பல தடவை, தோற்று அகல் - போரிடவந்து தோற்று மீண்ட, பாற்கரன் மதலை - சூரிய குமாரனுகிய கர்ணன், தோள் துடிப்ப-(தனது) தோள்கள் துடிக்கவும், விழி சேப்ப - கண்கள் சிவக்கவும், சுடர் போல் சீறி - நெருப்புப் போல் கோபித்து, ஏற்று - போரினை விரும்பியேற்று, அரி கேது - சிங்கக் கொடியையுடைய வீமன், அலக்கண் உற - துன்பம் அடையும்படி, இரதம் பாகு இவுளியும் - தேர் பாகன் குதிரைகள் இவைகளையும், பார்மேல்-தரையின் மேல், வீழ்த்திட்டான்-அழிய வீழ்த்தினுன்: [அப்போது] காற்று அளித்தோன் - வாயு குமாரனுகிய வீமன், நின்று - தரையில் நின்று கொண்டே, ஒரு வெம் கதை ஏந்தி- ஒரு கொடிய கதாயுதத்தைக் கையிற்பிடித்து, கன்னன் தேரை - கர்ணன் ஏறிவந்த தேரை, சிதைத்திட்டான் - அழித்திட்டான்; (எ-று).

முன்னர் அருச்சுனன் கர்ணனைக் கொல்வேன்' என்று பிரதிஜ்ஞை செய்திருப்பதால், வீமன் கர்ணனைக் கொல்லாது உயிரோடுவிட்டிட்டனன் என்பது. கொடுத்தன் - கொடுத்தனன் : அன்சாரியை கெட்டது. பாற்கரன் = பாஸ்கரன் : சூரியன். தோள்துடித்தல், விழி சிவத்தல் - சினத்தின் மெய்ப்பாடுகள், சிங்கக்கொடி வீமனுக்குரியது. அலக்கண் - சஞ்சலப்பட்ட கண்களையுடைமை என்ற காரியத்தின் பெயர் காரணமான துன்பத்தின்மேல் நிற்கும். (57)

58. **கர்ணன் வீமனை விற்குதையால் கட்டுதல்.**

காலினடந் தோடியொரு கந்துகத்தேர்
புகுந்தடையக் கன்னன் காலின்
பாலனுமீர் வாள்பலகை பற்றியவ
னிரதமிசைப் பாய்போய் தன்னோன்
மேலுறவான் வாடுணித்து மெய்முழுதுங்
கணையழுத்தி மெலிவுற் ருனைக்
கோலுறுவிற் குதையகட்டிற் கோத்தீர்த்துக்
குந்திவரங் குறித்தீ தோதும்.

(இ-ள்) காலின் நடந்து - பாதசாரியாய்ப் போய், ஓடி-, ஒரு கந்துகம் தேர் - குதிரைகள் கட்டிய ஒரு தேரில், புகுந்து - ஏறி, கன்னன் - கர்ணன் அடைய - போர்க்களத்திற்கு வர, காலின் பாலனும் - வாயுபுத்திரனாகிய வீமனும், ஈர் வாள் பலகை பற்றி - அறுக்கின்ற வாளோடு கேடகத்தையும் கையிலெடுத்துக்கொண்டு, அவன் இரதமிசை பாய் போது - அவனுடைய தேரின்மீது பாய்கின்ற சமயத்தில், அன்னோன் - அந்தக் கர்ணன், மேல் உறவால் - தான் [வீமனுக்கு] அண்ணன் முறையாவதால். [அவ்வீமனுடைய] வாள் துணித்து - வாளாயுதத்தைத் துண்டித்து, மெய் முழுதும் - (அவன்) உடம்பு முழுவதிலும், கணை அழுத்தி - அம்புகளைப் பொதிய வைத்து, (அதனால்) மெலிவுற்றானை - தளர்ந்து போன வீமனை, கோல் உறு வில் குதை -, அம்பு பொருத்தும், வில்லின் குதையால், அகட்டில் - வயிற்றில், கோத்து - சுற்றிக் கட்டி, ஈர்த்து - இழுத்து (பின் அவனை நோக்கி) குந்தி வரம் குறித்து - குந்திக்குத் தானீந்த வரத்தை (மனத்தில்) நினைத்து, ஈது ஓதும் - இந்த வார்த்தைகளைக் கூறுவானாயினான்; (எ, று.) கர்ணன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

மேல் உறவு - அண்ணனுதல். குந்திக்கு வரமீந்த போது அருச்சுனனைத் தவிர ஏனையநால்வரும் என் கையில் உய்வர் என்று உறுதி கூறியுள்ளதனுல், அதனை நினைந்து இப்போது வீமனைக் கொல்லாது விற்குதையால் கட்டியிருந்தான் அவ்வளவே. குதை - வில்லின் நாணியைக் கட்டியிருக்கும் அடிப்பகுதி. கந்துகம்-குதிரை. வாள் + துணித்து = வாடுணித்து : "ணளமுன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே" என்பது விதி : (நன் : மெய்யீற் : 34) மெலிவுற்ருன் - வினையாலணையும்பெயர். ஓதும் - செய்யுமென்முற்று. (58)

59. வீமனைக் கர்ணன் விடுவிக்க, சாத்தகி எதிர்ந்தோரைக்கொன்று குவித்தல்.

கடாவெனக்கான் திரிந்தருந்தக் கண்டதெலாம்
உணர்குவை போர்க்கருமந் தேராய்
அடாதுவலோ ருடன்பொருதல் அருச்சுனன்மாட்
டடைதியென வகற்ற வீமன்
விடாதுயிர்கொண் டிளையோன்கண் மேவினன்சாத்
தகியெதிர்ந்த வீரர்க் காவி
கொடாதழித்து நாற்ருனைக் கொன்றடுக்க
லெனப்பிணங்கள் குவித்திட் டானுல்.

(இ-ள்) கடா என கான் திரிந்து - எருமைக்கடா போலக் காட்டிலே திரிந்து, கண்டதெலாம் அருந்த உணர்குவை - கண்ணுற் காண்பனவெல்லாவற்றையும் (தரமறியாது) சாப்பிடத் தெரியும் : (ஆனுல்) போர்க்கருமம் தேராய் - யுத்தச் செயல் தெரியாது. (எங்ஙனேயென்னில்) வலோருடன் பொருதல் அடாது - (உன்னைக்காட்டிலும்) வலிமையுடையோருடன் போரிடுதல் தகாது : (ஆகவே யுத்தச் செயல் தெரிந்த) அருச்சுனன்மாட்டு - அருச்சுனன் பக்கத்தில், அடைதி - போய்ச்சேர்வாய், என - என்று கூறி, அகற்ற - அவனையனுப்பி நீக்க, வீமன் —, உயிர் விடாது கொண்டு - (நாணத்தால்) உயிரைமாய்த்துக் கொள்ளாமல், இளையோன்கண் - தம்பியாகிய அருச்சுனனிடத்து, மேவினன் - வந்து சேர்ந்தான் : (இஃது இங்ஙனுக) சாத்தகி —, எதிர்ந்த வீரர்க்கு தன்னையெதிர்த்த வீரர்களுக்கு, ஆவி கொடாது அழித்து - உயிர்

பிழைத்துப் போக விடாமல் [அவர்களைக்] கொன்று, (மற்றும்) நால் தானை கொன்று - சதுரங்கப் படைகளையும் அழித்தொழித்து, பிணங்கள் - செத்துப் போனவைகளை [சவங்களை], அடுக்கல் என - மலையென்னும்படி, குவித்திட்டான் கும்பலாக்கித் தொகுத்திட்டான் -; (எ. று.) ஆல் -ஈற்றசை.

கடாவைப்போல் திரிந்து கண்டதைத் தின்னத்தெரியுமேயன்றிப் போர்த்தொழில் தெரியாது என்று ஏசினன் கர்ணன் வீமனை யென்க. போர்த்தொழில் தெரியாது என்றது என்னையெனில், தன்னினும் வலியாரோடு பொரச்செல்லுதல் கூடாது என்று தெரியவில்லையே என்று குத்திக் காட்டியபடி. கர்ணன் தன்னை வீமனிலும் வலியுடையன் என்று குறிப்பித்தவாறு, சாத்தகியின் வென்றிச் சிறப்புக் கிளந்தவாறு. கண்டதெலாம் - ஒருமைப்பன்மைமயக்கம். அடைதி - ஏவல். (59)

60. சாத்தகியிடம் அலம்புசன் தோல்வியுற, அப்போது பூரிசிரவசு சாத்தகியை அறைகூவல்.

அடலிடும்பி மகற்குடைந்த வலாயுதன்வந்
தமரியற்றி யமலன் றம்பி
விடுமம்பிற் சிலையழிந்து மெய்துளைந்து
மீண்டிடவவ் வேலை தோன்றித்
தடைசெய்திக் கணமிகுப்பன் சமர்புரியென்
றிகல்பூரி சரர்சொற் றெண்ணிற்
படைதொடுப்பச் சாத்தகிவான் பதமாள
விடுப்பனெனப் பகர்ந்தேற் றுனே.

(இ-ள்) அடல் இடும்பி மகற்கு - வலிமை பொருந்திய இடும்பியின் மகனாகிய கடோற்கசனுக்கு, உடைந்த - தோற்றுப் போன, அலாயுதன் வந்து - அலாயுதன் திரும்ப வந்து, அமர் இயற்றி - போர் செய்து, அமலன் தம்பி விடும் அம்பில் - கிருஷ்ணன் தம்பியாகிய சாத்தகி செலுத்திய அம்பினால், சிலை அழிந்து - வில் சிதைந்து, மெய் துளைந்து - உடம்பு துளைக்கப்பட்டு, மீண்டிட - திரும்பிவர, அ வேலை தோன்றி - அந்தச் சமயத்திற்குச் சேர வெளிப்பட்டு, இகல் பூரிசரர் - பகைகொண்ட பூரிசிரவஸ் என்பவன், தடை செய்து - (சாத்தகியைத்) தடுத்து, 'இ கணம் இகுப்பன் - இந்தக்ஷணத்தில் கொல்வேன் : சமர் புரி' - போரினைச்

செய்வாய்' என்று சொற்று - என்று வீரவாதம் பேசி, எண் இல் படை தொடுப்ப - கணக்கற்ற ஆயுதங்களைச் செலுத்த, சாத்தகி—, (அப்போது அவனோடு) 'வான் பதம் ஆள விடுப்பன் - உன்னைத் தேவலோக பதவியாளும்படி அனுப்புவேன்' (கொல்வேன்) என - என்று, பகர்ந்து - சொல்லி, ஏற்றான் - எதிர்த்தான் ; (எ.று.) ஏ- அசை.

அலாயுதன் - ஓர் அரக்கன் : கன்ன சௌபலர்க்கு நண்பன். 'அலம்புதன்' என்று காணும் பாடத்திற்கு - ராஜவம்சத்தில் பிறந்து ராஜசிரேஷ்டன் என்னப்படும் அலம்புஸனைக் குறிக்கும் (குறிப்பு :- இந்த அலம்புசன் ராஜன் : இவன் பகாசுரன் தம்பியாகிய அலம்புசனினும் வேறு எனக் கொள்க). இருப்பன்-தன்மை யொருமை, புரி - ஏவல். இகல் - வலிமையுமாம். பூரிசரர் - பூரிச்ரவஸ் என்பதன் சிதைவு, இவன் அதிரதவீரன் : சோமதத்தன் மகன் என்ப. வான் பதமாள விடுப்பன் - பிறிதினவிற்சி. (60)

61. சாத்தகியும் பூரிசிரவசும் பொர, பூரிசிரவனைக் கொல்லும்படி கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுதல்.

வீரமொழிந் தமர்புரிவார் விற்பரிதேர்
பொடிபடலும் வெகுண்டு மேன்மேற்
பாரிழிந்தீர் வாளேந்திப் படைபுரிந்தார்
பூரிசராப் பலங்கண் டெந்தை
காருருபற் குனற்கதனைக் காட்டி யென
தனுசனுயிர் காத்தி யென்னப்
போரிருவர் செயவிளைத்தாற் குதவிசெயத்
தகுமோநீ புகறி யென்றான்.

(இ-ள்) வீரம் பொழிந்து - வீர வார்த்தைகளைப் பேசி, அமர் புரிவார் - போரிடும் இருவரும், வில் பரி தேர் பொடிபடலும் - (தங்களுடைய) வில்லும் குதிரைகளும் தேரும் சிதைந்து போகவும், வெகுண்டு - சினந்து, பார் இழிந்து - தரையில் குதித்து, மேன்மேல் - மேலும் மேலும், ஈர்வாள் ஏந்தி - அறுக்கின்ற வாளாயுதத்தைக் கையிலேந்தி, படைபுரிந்தார் - போரிட்டார்கள் : (அப்போது) எந்தை - ஸ்ரீ கிருஷ்ணன், பூரிசரா பலங்கண்டு - பூரிசிரவஸின்

வலிமையைப் பார்த்து, அதனை - அவன் வலிமையை, கார் உரு பற்குனற்குக் காட்டி - கருநிற உருவத்தைக் கொண்ட அருச்சுன னுக்குக் காட்டி, எனது அனுசன் உயிர் காத்தி - என் தம்பி சாத்தகி யின் உயிரைக்காப்பாற்றுவாயாக, என்ன - என்று வேண்ட, (அதற்கு அருச்சுனன்) "இருவர் போர் செய - இரண்டு பேர் தங்களுக்குள் போரிடும் போது, இனைத்தாற்கு உதவி செய - அவ்விருவருள் மெலிந்தவனுக்குச் சகாயமாக (வேறுருவன் போர் செய்து) உதவுவது, தகுமோ – முறைமையாகுமோ ? நீ புகறி - நீயே சொல்வாய்" ; என்றான் - என்று வினவினான் ; (எ.று.).

இங்ஙனம் கிருஷ்ணன் சொன்னது - சாத்தகியை உயிர்பிழைப் பிக்க வேறுவகையில்லாமையாலென்க. புரிவார், இனைத்தான் - வினையாலணையும்பெயர். விற்பரிதேர் - உம்மைத்தொகை. தகுமோ, ஓ - எதிர்மறை, காத்தி, புகறி - முன்னிலை வியங்கோள். (61)

62. அருச்சுனன் அரிதின் உடன்பட்டுப் பூரிசிரவசுவின் தோள் துணிக்க, அவன் இகழ்தல்.

அவ்வுரைக்கங் கரியுதவி யாயினருக்
குறுமிடுக்க ணகற்றிக் காவா
தெவ்வமிகுத் திடலறமென் றிசைப்பநர
னதற்குடன்பட் டெய்தோ ரம்பாற்
றெவ்வனட வோச்சியவாட் டிண்டோளைத்
துணித்திடவோர் செங்கை யானுஞ்
சவ்வியசா சியையிஃது தகுதிகொலென்
றிகழ்ந்துபல சாற்றி னானல்.

(இ-ள்) அ உரைக்கு - அருச்சுனன் வினவியவார்த்தைக்கு, அங்கு - அவ்விடத்து, அரி - ஸ்ரீகிருஷ்ணன், உதவியாயினருக்கு - (நமக்கு) உதவி செய்யவந்தவருக்கு, உறும் - நேரிடுகின்ற, இடுக்கண் - இடையூற்றை, அகற்றி-போக்கி, காவாது - தடையின்றி, எவ்வம் - (அவர்க்கு ஏற்பட்ட) துன்பத்தை, இகுத்திடல் - போக்குதல், அறம்- தருமமாகும், என்று இசைப்ப - என்று சொல்ல, நரன் - அருச்சுனன், அதற்கு உடன்பட்டு - அந்தக் கிருஷ்ணன் கூறிய சொல்லுக் கிசைந்து, எய்து - விடுத்து, ஓர் அம்பால் - ஒரு அம்பினாலே, தெவ்வன் - (தனக்குப்) பகைவனாகிய சாத்தகியை, அட - கொல்

வதற்காக, வாள் ஓச்சிய - வாளாயுத்தை வீசிய, திண் தோளை-வலிய தோளை, துணித்திட - துண்டிக்க, ஓர் செங்கையானும் - ஒரு கை [இரத்தத்தால்] சிவந்த கையையுடைய பூரிசிரவாவும், சவ்விய சாசியை - அருச்சுனனை, 'இஃது-(நீ செய்த)இச்செயல், தகுதிகொல் - முறையாகுமோ, என்று இகழ்ந்து - என்று பரிகசித்து, பல சாற்றினுன் - பல வார்த்தைகளைப் பேசினுன் ; (எ-று). ஆல் - ஈற்றசை.

நமக்கு உதவி செய்யவந்தவருக்கு ஒரு இடையூறு நேருமாயின் அதனைத்தடைதயக்கமின்றி முதலில் அகற்றிப்பின் அவர்க்கேற்பட விருக்கும் துன்பத்தைப்போக்குதல் தருமமாகும் என்றுன் கிருஷ்ணன் என்க. 'தெவ்வன் அடவாளோச்சிய திண்தோள்' என்றவிடத்து அறியவேண்டிய விவரம் - மற்போரில் பூரிசிரவசு சாத்தகியைக் கீழே தள்ளி அவன்மார்பின்மேலிருந்து உடைவாளை வலக்கையி லெடுத்துச் சாத்தகியின் தலையைத் துணித்தற்கு ஓச்சுமளவில், அங்ஙனமோச்சிய கையை அருச்சுனன் தோளளவும் துணித்திட்டனன் என்பது. ஓர் செங்கை - மற்றெருகையாகிய இடக்கை : பெருகிய குருதியால் அது சிவந்திருந்தது என்க. காத்தல் - தடுத்தல் ; "செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான்" என்ற விடத்துப்போல. சவ்வியசாசி - கருத்துடையடைகொளி : வலக்கையினுல் மாத்திரமன்றி இடக்கையினுலும் அம்பு தொடுப்பவன் என்று பொருள். அப்படி இருகையினுலும் அம்பு தொடுக்கும் நீ அம்பு தொடுக்கும் என் வலக்கை யொன்றையும் தோளோடு துணித் தனையே என்ற கருத்தையுள்ளடக்கியது என்க. உதவியாயினர் - வினையாலணையும்பெயர். செங்கை – பண்புத்தொகை. (62)

63. அருச்சுனன் பூரிசிரவாவுக்கு ஏற்ற விடை கூறுதல் - சாத்தகி பூரிசிரவாவைத் தலைதுணித்தல்.

வெற்றிநர னெமக்குதவி மேவினனுக்
கியானிடுக்கண் மேவா தோம்பல்
குற்றமதாம் நெருநலமர் குறித்தபிம
னைப்பலராய்க் குழுமிக் கோறல்
நற்றரும மெனும்பொழுது நாரணன்பின்
னவனுருத்தோர் நளினக் கையோ
டுற்றவனைச் சிரமறுத்தான் உபையருங்கை
யமைத்துநிலா தோடி வாளால்.

(இ-ள்) வெற்றி நரன் - (தோள்துணித்து) வெற்றி பெற்ற அருச்சுனன், "எமக்கு உதவி மேவினனுக்கு - எங்களுக்கு உதவி செய்யப்பொருந்தினவனுக்கு, யான் - (அவன் உதவிபெறும்) நான், இடுக்கண் மேவாது ஓம்பல் - இடையூறு நேராமல் (தடுத்துத் துன்பம்போக்கிக்) காத்தல், குற்றமதாம் - பழுதாகுமாம்: (ஆனால்) நெருநல் - நேற்றையதினம் அமர் குறித்து - போரிணையிட்டு, அபிமனே - (என்மகன்) அபிமன்யுவை, பலராய் குழூஉமி கோறல் - பல பேராய்ச் சேர்ந்து கொல்லுதல், நல் தருமம் (ஆம்)- (பழுதாகாது) நல்ல தருமமாகுமாம்: எனும் பொழுது - என்று சொல்லும் போது, நாரணன் பின்னவன் - கிருஷ்ணனின் தம்பியாகிய சாத்தகி, உருத்து - கோபித்து, உபையரும் - கிருஷ்ணார்ச்சுனர் இருவரும், கை அமைத்தும் - (தமது) கைகளாற் சைகைகாட்டி அடக்கவும், நிலாது ஓடி - நிற்காமல் விரைந்து - வாளால் - தன் உடைவாளினால், ஓர் நளினக் கையோடு உற்றவனை - தாமரைபோல் மெலிந்த ஒற்றைக் கையையுடைய பூரிசிரவனை, சிரம் அறுத்தான் - தலைதுணித்தான்; (எ று.)

'துணைபுரியவந்தவனுக்குத்துன்பம் போக்குதல் குற்றம்: பலரும் சூழ்ந்து ஒருத்தனாகிய அபிமனைக் கொல்லுதல் தருமம்' என்று பூரிசிரவனுக்கு உறைக்கும்படி அருச்சுனன் குத்திக்காட்டவே, அதனைக் கேட்ட சாத்தகி கோபம்விஞ்சி, கிருஷ்ணார்ச்சுனர் தடுக்கவும் நில்லாமல் ஓடிப்போய்ப் பூரிசிரவனின் தலையைத் துண்டித்தான் என்றபடி. குற்றமதாம், தருமமதாம் என்ற விடங்களில், சொல்லுவான் குறிப்பினாலே, ஆம் என்றது, எதிர்மறை குறிப்பது. தோள் துணிக்கப்படவே அதன்கூட ஒற்றைக்கையும் வீழவே, மற்றைக் கை மெலிந்தவனாயினன் என்றகருத்தில் 'நளினக் கையோடுற்றவன்' என்றார். கை யமைத்தல் - கையமர்த்துதல், கையாற் சைகைகாட்டி அடங்கச் செய்தல். இச்சொற்பின் உம்மை தொக்கது. மேவினன், உற்றவன் - வினையாலணையும்பெயர்கள். ஓம்பல், கோறல் - தொழிற்பெயர்கள்: (63).

64. அருச்சுனன் வீமனைச் சமாதானப்படுத்தி, பின்பு சாத்தகி பூரிசிரவசினிடம் தோற்றமைக்குக் கிருஷ்ணனைக் காரணம் வினவல்.

கறையாறும் பிணச்சேதுங் கடந்தரிபால்
அவனிளவல் கலந்தான் வீமன்
குறைவாக வினன்மதலைக் குறித்தமொழி
புகுந்துரைத்தான் குனிவில் பார்த்தன்

துறையோரான் புகன்றமொழி துளைக்குதென
துளத்தைச்சினந் துறலென் றேத்தி
அறைசோம தத்தன்மகற் கடலோன்றோற்
றமைவினவ வமலன் சொல்வான்.

(இ-ள்) (பூரிசிரவசின் தலைதுணித்தபின்) அரிபால் - கிருஷ்ணனிடத்து, அவன் இளவல் - அவன் தம்பியாகிய சாத்தகி, கறையாறும் - இரத்தநதியையும், பிணச்சேதும் - (அந்த நதியின் குறுக்கே யமைந்தது போன்ற) பிணங்களினாலாகிய அணையையும், கடந்து - தாண்டிவந்து, கலந்தான் - கூடினான்: (அப்போது) வீமன்—, (அருச்சுனனுக்கு) இனன் மதலை - சூரியகுமாரனாகிய கர்ணன், குறைவாக குறித்த மொழி - தன்னை இழிவாகப் பேசிய வார்த்தைகளை, புகுந்து உரைத்தான் - அவனிருந்த விடத்திற் சென்று கூறினான்: (அவற்றைக்கேட்ட) குனி வில் பார்த்தன் - வளைந்த வில்லையுடைய அருச்சுனன், துறை ஓரான் - போர்த்துறைகள் தெரியாத கர்ணன், புகன்ற மொழி - சொன்ன வார்த்தைகள், எனது உளத்தை துளைக்குது- என்னுடைய மனத்தை மிகவும் வருத்துகிறது: (ஆனால் நீ) சினந்துறல் - கோபப் படாதே,' என்று ஏத்தி - என்று (அவ்வீமனைப்) புகழ்ந்து கூறி, (பின்பு கிருஷ்ணனை நோக்கி) அறை சோமதத்தன் மகற்கு -சிறப்பித் துப் பேசப்படுகின்ற சோமதத்தனின் குமாரனான பூரிசிரவசுக்கு, அடலோன் - (மிக்க) வலிமையையுடைய சாத்தகி, தோற்றமை வினவ - தோற்று இளைத்தமைக்குக் காரணம் கேட்க, அமலன் சொல்வான் - கிருஷ்ணன் பதில் கூறுவான்; (எ-று). கிருஷ்ணன் கூறிய பதிலை மேலைச்செய்யுளிற் காண்க.

வீமனைக்கர்ணன் இழித்துப் பேசியதை முன்னர்வந்துள்ள 59 - ஆஞ்செய்யுளிற் காண்க. துளைக்குது - உலகவழக்குச் சொல். உறல் - அல்லீற்று வியங்கோள். கறையாறு, பிணச்சேது - உருவகப் படுத்தியபடி. (64)

65. **கிருஷ்ணன் காரணம் கூறல்.**

எனதன்னை சுயம்வரத்தி லெந்தைபுகு
நாளுடன்புக் கிவன்மூ தாதை
தனதுபகை கொண்டமரிற் றாழ்ந்தவனை
வெலச்சோம தத்தன் பல்லாண்

டினியதவம் புரியவர னெய்தியவன்
மகன்மகனை நின்சேய் வெல்வான்
எனவரந்தந் தனனதனு லிவனிளைப்ப
அவன்வென்ருனென்ருன் மன்னே.

(இ-ள்) எனது அன்னை - என் தாயாகிய தேவகியின், சுயம் வரத்தில் —, எந்தை - என் தந்தையாகிய வசுதேவர், புகும் நாள் - (மண்டபத்தில்) நுழைந்த நாளில், இவன் உடன்புக்கு - இந்தச் சோமதத்தனும் கூடவே புகுந்து, மூதாதை தனது பகை கொண்டு - [சாத்தகிக்குப்] பாட்டனுகிய சினியென்பவனின் விரோதத்தைப் பெற்று, அமரில் - (அவனோடு) செய்த போரில், தாழ்ந்து - தோற்று அவமானமடைந்து, (அதனுல்) அவனை வெல - அந்தச் சினியை வெல்வதற்காக, சோமதத்தன் —, பல்லாண்டு இனிய தவம்புரிய - பலவருடங்கள் [மனமுவக்கும்படி] இனிமையான தவத்தைச் செய்ய, அரன் எய்தி - சிவபெருமான் வந்து (பிரசன்னனுகி), அவன் - அந்தச்சினியின், மகன் மகனை - பேரனுகிய சாத்தகியை, நின் சேய் - உன்னுடைய மகனுகிய பூரிசிரவசு, வெல்வான் - (அவனை) ஜெயிப்பான், என வரம் தந்தனன் - என்று வர மீந்தான் : அதனுல் - அந்த வரபலத்தால், இவன் இளைப்ப - இந்தச் சாத்தகி (பூரிசிரவசோடு) பொருது தளர்ச்சியடைய, அவன் வென்ருன் - அந்தச் பூரிசிரவசு ஜெயித் தான், என்ருன் - என்று (காரணம்) கூறினுன் ; (எ-று) மன், ஓ - ஈற்றசை.

இங்கு அறிய வேண்டிய விவரம் பின்வருமாறு :— சந்திரவமி சத்தில் சூரன் என்ற அரசனுக்கு மகனுக வசுதேவர் பிறந்தார், அதே சூரன் குலத்தில் சினியென்ற வீரனும் பிறந்தான். தேவகியி னுடைய சுயம்வரத்திற்கு இருவரும் வந்தனர். அப்போது சோமதத்தன் என்ற அரசனும் வந்திருந்தான் : இங்ஙனம் சுயம்வர நிமித்தமாகப் பல அரசர்களும் ஒன்று கூடியிருக்கும் சமயத்தில், சினி எல்லா அரசர்களையும் ஜெயித்து வசுதேவருக்காகத் தேவகியை விரைவாக ரதத்தில் ஏற்றி வைத்தான். இதனைக்கண்ட சோமதத்தன் சினியோடு போருக்குவர, அவன் இந்தச் சோமதத்தனைப் பலாத் காரமாகப் பூமியில் தள்ளிக்கத்தியையெடுத்துத் தலைமயிரைப் பிடித்து நான்குபக்கங்களிலும் பார்த்துக் கொண்டிருக்கிற பல்லாயிர அரசர்களின் நடுவில் காலால் உதைத்தான் : பின்பு, அந்தச் சினி அருள்கொண்டு 'நீ பிழைத்துப் போ' என்று சொல்லி விட்டு விட்டான்- இந்த அவமானம் தாங்கமுடியாமல் சோமதத்தன்

சிவபிரானைக் குறித்துத்தவஞ்செய்ய, அவர் பிரதியட்சமாகி 'என்ன வரம் வேண்டும்' என்று கேட்க, சோமதத்தன் 'சினியின் பேரனை யுத்தத்தில் தள்ளி ஆயிரக்கணக்கான அரசர்களின் மத்தியில் காலால் உதைக்கத்தக்க புத்திரனை நான் விரும்புகிறேன்' என்று வரம்வேண்ட, சிவபெருமான் 'அவ்வாறே ஆகுக' என்று சொல்லி மறைந்தார். ஆகவே சோமதத்தனின் புத்திரனுகிய பூரிசிரவசு போரிட்டுச் சாத்தகியை அவன் இளைத்தபோது காலால் உதைத்து ஜெயித்தான் என்பது. சினியின் மகன் - சத்யகன் : அவன் மகன் சாத்தகி :எனவே சாத்தகியின் மூதாதை [பாட்டன்] சினியாவன். [கிருஷ்ணனுக்கும் சினி மூதாதையாவன் என்பதும் உணர வேண்டுவது]. (65)

வேறு.

66. அருச்சுனன் வீமனுடனும் சாத்தகியுடனும் கூடி, பகைவர் சேனையொடு பொருதல்.

சங்கொலிகேட் டிரவின்மொழிப் படிமால் சூதன்
சந்தனங்கோண் டங்கடைந்தான் சமர் யார்க் கேனும்
தங்கிரதம் வேண்டுமெனத் தரும னுய்ப்பச்
சார்ந்தவிரு தேரிருவர் தாம்புக் காங்கே
பங்கயமா முகமலர்ந்து மூவ ரென்னப்
பற்குனன்சாத் தகிவீமன் பகைவர் தானை
எங்குமொழித் தமர்புரிந்தார் விசயன் சீறி
இரவிமகன் றனைவளைந்தீ தியம்ப லுற்றுன்.

(இ-ள்) சங்கொலி கேட்டு - பாஞ்சசன்னியத்தின் ஒலியைச் செவியேற்று, இரவின் மொழிப்படியே - முன்னுட்போர் இரவில் (கிருஷ்ணன்) கூறியபடியே, மால் சூதன் - கிருஷ்ணனின் தேர்ப் பாகனுகிய தாரகன், சந்தனங் கொண்டு - தனது தேரினைக் கொண்டு, அங்கு அடைந்தான் - அவ்விடத்திற்கு வந்தான்: (இதனிடையில்) தருமன் - தருமராசன், சமர் - போரில் யாருக் கேனும் - (வீமன், அருச்சுனன், சாத்தகி என்ற மூவரில்) எவருக் கேனும், தங்கு இரதம் வேண்டும் என - சேமமாகத் தேரொன்று வேண்டியிருக்குமென்று எண்ணி, உய்ப்ப - (ஒரு தேரினை)

அனுப்ப, (இதனால்) இரு தேர் சார்ந்த - இரண்டு தேர்கள் வந்துள்ளன: [அந்த இரண்டு தேர்களிலும்] இருவர் தாம் புக்கு- இரண்டு பேர்கள் (வீமனும் சாத்தகியும்) ஏறி, ஆங்கே - அப் போர்க்களத்திடத்து, பங்கயம் மா முகம் மலர்ந்து - தாமரை மலர் போன்ற அழகிய முகம் பொலிவுபெற்று, மூவரென்ன - திரிமூர்த்தி கள் என்னும்படி, பற்குனன் சாத்தகி வீமன் - அருச்சுனன் சாத்தகி வீமன் ஆகிய மூவரும், பகைவர் தானை - பகைவருடைய சேனைகளை, எங்கும் ஒழித்து - எல்லாவிடங்களிலும் (பொருது) அழித்து, அமர் புரிந்தார் - கடிய போரினைச் செய்தனர் : (அப் போது) விசயன் - அருச்சுனன் சீறி - மிகவும் கோபித்து, இரவி மகன் தனை வளைந்து - சூரியபுத்திரனாகிய கர்ணனைச் சூழ்ந்து கொண்டு, ஈது இயம்பல் உற்றான் - இந்த வார்த்தைகளைக் கூறலாயினான்: (எ;று.) அவன் கூறியவற்றை மேலைக்கவியிற் காண்க.

மால்சூதன் - தாரகன் என்பவன். இவனுக்குக் கிருஷ்ணன் கூறியிருந்த கட்டளையை முன் சருக்கத்து 77- ஆஞ் செய்யுள் கொண்டறிக. மூவர்முகம் மலர்ந்ததற்குக் காரணம் - மூவர்க்கும் தேர் ஏறிப் போரிடும் வாய்ப்பு நேர்ந்தமையாலென்க. மூவர் - பிரமவிஷ்ணுருத்திரர் : தொகைக்குறிப்பு.

இது முதல் மூன்று கவிகள் — பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றையவை மாச்சீர்களு மாகிய எண்சீராசிரியவிருத்தங்கள். (66)

67. அருச்சுனன் கர்ணனை நோக்கிக் கூறியது.

வென்றலிளைத் திடல்வீரர்க் குளதென் முன்னேன்
விளம்பியதுண் டோவசைதேர் விற்போய் பல்கால்
சென்றவுனை யவனைவசை சொற்றாய் சாதி
தெரியாதோய் நின்குணத்தைத் தெரித்தாய் நென்னல்
வென்றியபி மன்கைசிலை துணித்த லால்யான்
விடசேனன் சிரமின்று வீழ்த்த நிண்ணம்
என்றினன்சே யுடன்முழுது மழுத்தி வாளி
யிருங்கொடிவிற் றுணித்தகற்றி யேகி னானல்.

(இ-ள்) வீரர்க்கு - போர் வீரர்களுக்கு, வென்றல் - ஜெயித்தாலும், இளைத்திடல் - சோர்ந்து விடுதலும், உளது - இயற்கையாகவுள்ளதே: பல்கால் தேர் வில் போய் சென்ற உனை - பல தடவை தேரினையும் வில்லினையும் இழந்து ஓடிப்போன உன்னை, என் முன்னோன் - எனது தமையனாகிய வீமன், வசை விளம்பியது உண்டோ - பழிச்சொல் பேசியிகழ்ந்தது உளதோ? (கிடையாது): அவனை - அப்படிப்பட்ட பெருந்தகையை, (நீ) வசை சொற்ருய் - பழித்து இழித்துப் பேசினுய்; சாதி தெரியாதோய் - நீ பிறந்துள்ள சாதி உனக்கே தெரியாதவனுவாய்: நின் குணத்தை தெரித்தாய் - உனது நீச குணத்தை வெளிப்படுத்தினுய்: நென்னல் - நேற்றைய தினம், வென்றி அபிமன் கை சிலை துணித்தலால் — வெற்றி பெற்ற (என் மகன்) அபிமன்யுவின் கைப்பிடித்த வில்லை (நீ) துண்டித்ததால், இன்று - இன்றையதினம், யான் - நான், விடசேனன் சிரம் வீழ்த்தல் திண்ணம் - (உன் மகன்) விடசேனனது தலையைத் துணித்து வீழ்த்துதல் நிச்சயம், என்று - என்று (இவ்வாறு) கூறி, (அருச்சுனன்) இனன்சேய் உடல் முழுதும் வாளி அழுத்தி - கர்ணன் உடம்பு முற்றும் அம்பினுல் பொதிய வைத்து, இரும் கொடி வில் துணித்து - பெரிய கொடியையும் வில்லையும் வெட்டி வீழ்த்தி, அகற்றி - அப்புறப்படுத்தி, ஏகினுன் - போயினுன்: (எ.று.) ஆல்-ஈற்றசை.

'பல தடவை தோற்ருேடியவுன்னை வீமன் இகழாது இருப்ப, நீ அவனை இகழ்ந்தது நியாயமாகாது: உன் சாதி உனக்கே தெரியாது: உன் நீசகுணத்தைப் பகிரங்கப்படுத்தினுய்' என்று அருச்சுனன் கர்ணனைக் குத்திக்காட்டியபடி. விடசேனன் - கர்ணனின் மூத்த மகன். இனன் - சூரியன். தெரியாதோய் - விளியென்னவுமாம். சொற்ருய், தெரித்தாய் - முன்னிலை வினைமுற்றுக்கள். நென்னல் - நெருநல் என்பதன் மரூஉ. கொடிவில் - உம்மைத்தொகை. (67)

68. **துரியோதனன் கர்ணனை நோக்கிக் கூறியது.**

சிந்துபதி தேடிகதை யவன்மாற் பின்னோன்
சென்றபொழு தெதிர்ந்தபடை சிதைத்துப் பார்த்தன்
முந்துதல்கண் டரவுயர்த்தோன் கன்னன் பாற்போய்
மொழியுமிளைத் திடினீயார் முனைவோ ருற்ற

தந்தியினஞ் சிலபோதென் னிளையா ளன்பன்
அளிக்கிலனற் குளிக்குநர னயத்தா மாநின்
மைந்தனுமத் திரன்கிருப னுடன்கா வென்ன
மற்றவன்வேந் தனுக்குறுதி வகுத்தெ ழுந்தான்.

(இ-ள்) கதையவன் - வீமனும், மால் பின்னோன் - சாத்தகியும், சிந்துபதி தேடி சென்ற பொழுது - சயத்திரதனைத் தேடிக் கொண்டு போன போது, பார்த்தன் - அருச்சுனன், எதிர்ந்த படை சிதைத்து- தன்னையெதிர்த்த சேனைகளையழித்து. முந்துதல் கண்டு - முற்பட்டு மேல் வருதலைக் கண்டு, அரவு உயர்த்தோன் - துரியோதனன், கன்னன் பால் போய் - கர்ணனிடத்துச் சென்று, மொழியும் - கூறுவான் : 'நீ, —இளைத்திடின் - போரினில் மெலிந்து பின்னிடைந்தால், (இனி) முனைவோர் யார்? போர்க்குச் செல்ல, முற்படுவோர் யாவருளர் : (ஒருவருமிலர்) : அந்தி உற்றது - மாலைப்பொழுது வரப்போகிறது : இனம் சில போது - இன்னுஞ் சில பொழுது, என் இளையாள் அன்பன் அளிக்கில்-என்னுடைய தங்கை துச்சளையின் கணவனைக் காப்பாற்றுவீரானால், நரன் - அருச்சுனன், அனல் குளிக்கும் - நெருப்பில் மூழ்குவான் : (ஆகவே நீயும்) நின் மைந்தனும் - உன் மகனாகிய விடசேனனும், அயத்தாமா - அசுவத்தாமன், மத்திரன் - சல்லியன், கிருபனுடன் - கிருபன் ஆகியவர்களுடன் ஒரு சேர விருந்து, கா- (சயத்திரதனைக்) காப்பாற்றுவாயாக, என்ன - என்று கூற, அவன் - கர்ணன், வேந்தனுக்கு - துரியோதனனுக்கு, உறுதி' வகுத்து - (தன்) திடத்தையெடுத்துரைத்து, எழுந்தான் - (போர் முனைக்குச் செல்லப்) புறப்பட்டான்; (எ. று.)

அஸ்தமிக்கிற சமயம் சமீபித்துள்ளது : ஆகவே இன்னுஞ் சில நேரம் சயத்திரதனைப் பாதுகாப்போமாயின், அருச்சுனன் தீக்குளிப்பன் என்று துரியோதனன் கர்ணனிடம் கூறினனென்க. சயத்திரதன் சிந்துதேசத்து அரசன் : துரியோதனன் தங்கை துச்சளையின் கணவன். வீமன் கதை - சத்ருகாதிநி எனப்படும். பின்னோன் - தம்பி. இனம் - இன்னம் : இடைக்குறை. கா - முன்னிலை வியங்கோள். (68)

வேறு.

69. கர்ணன் விட்ட பலபடைக்கலங்களையும் அருச்சுனன் துணித்திடல்.

வெய்ய வன்மகன் தேர்பு குந்துபல்
வேந்த ரோடுவில் வாங்கியே

பெய்யு மாமுகில் தானும் நாணுறப்
பெய்யு மம்புக ளுங்கொலை
செய்யும் வாளயி றோமரங் கதை
திகிரி யங்குச முசலமோ
டெய்யு லக்கைக லப்பை யாதிய
வேதி யுந்துணித் தேநரன்.

(இ-ள்) வெய்யவன் மகன் - சூரியகுமாரனாகிய கர்ணன், தேர் புகுந்து - (தன்) தேரிலேறிக் கொண்டு, பல் வேந்தரோடு, பல துணை மன்னர்களோடு கூடி, வில் வாங்கி - வில்லை வளைத்து- பெய்யும் மாமுகில்தானும் நாணுற - மழை பொழியும் கரிய காள மேகமும் வெட்கும்படி, பெய்யும் அம்புகளும் - சொரியும் அம்பு களையும், கொலை செய்யும் வாள் அயில் தோமரம் கதை திகிரி அங்குசம் முசலமோடு - கொல்லும்படியான வாள் வேல் பேரீட்டி கதை சக்கரம் தோட்டி முசலப்படையிவைகளோடு, எய் உலக்கை கலப்பை ஆதிய ஏதியும் - (பகைவர் மேல்) செலுத்துகின்ற உலக்கை அலப்படை முதலாகிய ஆயுதங்களையும், நரன் துணித்து - அருச்சுனன் சிதைத்து வீழ்த்தி; (எ.று.) "........தனுவிலே கணையேவியே" என மேலைக்கவியில் இயையும்.

முசலமோடு, ஓடு – பிரித்து முன்னருங் கூட்டப்பட்டது. முசலம் - உலக்கை: போரிற்பயன்படும் ஓராயுதம்: இதனால் மோதி மொத்துவர். எய் உலக்கையென்றது - சூலம் வேல்போல் எறியும் ஓர் ஆயுதம். கலப்பை - அலாயுதம்.

இதுமுதல் ஆறுகவிகள் - ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகி வந்த எழு சீராசிரியச் சந்தவிருத்தங்கள். (69)

70. அருச்சுனன் கணையேவி மேலும் அனைத்தையும் துகளாக்கிச் சிதைத்தல்.

தேய வேந்தர்க ளெத்த னைக்கொடித்
தேர்க ரீயய மெத்தனை
தீய வாளிகள் சிலைக ளெத்தனை
திகழ் முடிக்கல மெத்தனை

காய மாமதிக் குடைக ளெத்தனை
கவரி நீள்கொடி யெத்தனை
சாய வேபொடி யாக வேயொரு
தனுவி லேகணை யேவியே.

(இ-ள்) தேய வேந்தர்கள் எத்தனை - பல தேசத்து மன்னர்கள் எத்தனை பேர்கள் ! கொடி தேர் கரீ அயம் - கொடி கட்டிய தேர்கள், யானைகள் குதிரைகள் எவ்வளவு ! தீய வாளிகள் சிலைகள் - கொடிய அம்புகள் விற்கள், எத்தனை - எவ்வளவு : திகழ் - விளங்குகின்ற, முடிக்கலம் - கீரீடங்கள், எத்தனை - எவ்வளவு ! காயம் - உடலங்கள், மா மதிக்குடைகள் - சிறந்த சந்திரவட்டக் குடைகள், எத்தனை - எவ்வளவு ! கவரி - தேரிற் கட்டியுள்ள, நீள் கொடி - பெரியநீண்ட கொடிகள், எத்தனை - எவ்வளவு! (அவ்வளவு அனைத்தையும்) ஒரு தனுவில் கணை ஏவி - ஒப்பற்ற காண்டீபம் என்னும் வில்லினின்று அம்புகளைச் செலுத்தி, சாய - தரையில் விழும்படி, பொடியாக - சிதைந்து துளாகும்படி; (எ.று.) 'செய்தான்' என வினைமுற்று வருவித்து முடிக்கவும்.

கரீ - கரியென்பதன் நீட்டல்; ஒலிநயம் பற்றி நீண்டது. முடிக்கலம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. காயமதிக்குடைகள் - உம்மைத்தொகை. கவரி - தேர் (திவாகரம்). ஈற்றடியில் ஏகாரம் நான்முறை வந்தது சொன்னயம் பயப்பதற்கென்க. (70)

71. பின்பு மூவரும் கர்ணனோடு பொருதல்.

மீள யாவரும் நாலு தானையும்
ஏவ வேபுடை தாவியே
தாள தாமரை நாய கன்மகன்
தான்வ ளைந்திட மூவரும்
ஆளி யாமெனக் கோலி வெஞ்சிலை
யனேக வெங்கணை தூவியே
பூளை யொத்திடப் பொருது வாகினி
பொருந்தி னார்வளி போலவே.

(இ-ள்) [அனைத்தும் பொடிபடவே] மீள - மறுபடியும், யாவரும்- (எஞ்சியிருந்த) அனைவரும், நாலு தானையும் ஏவ - நாற்படைகளையும் அனுப்ப, (அவைகள்) புடை தாவி - பக்கங்களில் பாய்ந்துவர, (அவைகளைக் கொண்டு) தாள தாமரை நாயகன் மகன்-நாளத்தைக் கொண்ட தாமரைக்குத் தலைவனாகிய சூரியனின் புதல்வனாகிய கர்ணன், தான் வளைந்திட - தான் பகைவர் சேனையைச் சூழ்ந்து கொள்ள, (அதனைக்கண்டு) மூவரும் - அருச்சுனன் வீமன் சாத்தகி ஆகிய மூன்று பேரும், ஆளியாம் என - சிங்கமென்னும்படி, வெஞ்சிலை கோலி - கொடிய (தமது) விற்களைவளைத்து, அநேக வெம் கணை தூவி - பலகொடிய பாணங்களைச் செலுத்தி, வளிபோல- சூறைக்காற்றுப்போல உக்கிரமாக, வாகினி பூளை ஒத்திட பொருது- (கௌரவர்) படைகள் பூளைப்பூண்டுபோலச் சிதறும்படி போரிட்டு, பொருந்தினர் - (யுத்தகளத்தில்) தங்கியிருந்தனர் ; (எ.று.)

சூரியனைக் கண்டு தாமரை மலரு மாதலின், அதனைத் 'தாமரை நாயகன்' என்றார் : ''செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங் கமலம், அந்தரம் சேர்வெங்கதிரோற்கல்லால் அலராவால்'' என்றார் குலசேகராழ்வாரும். (பெருமாள் திருமொழி -5-6). என- உவமவுருபு. ''காற்றிடைப்பூளை கரந்தெனவரந்தையுறக் கடலரக்கர்தஞ்சேனைக் கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில்லிராமன்'' என்ற பாசுரம், ஈற்றடியிற் காணத்தக்கது. (பெரிய திருமொழி : 4—6) (71)

72. கர்ணன் அருச்சுனன்மேல் அம்பெய்ய, அவன் அவனைவென்று அணியை யூடுருவிச்செல்லுதல்.

ஆய காலையின் மாலு ரத்தினும்
அடல ருச்சுனன் மெய்யினும்
பாய வாளிமா மழைபெய் பாற்கரன்
பால னுதிமன் னவரெலாஞ்
சாய தேர்மிசை யயர்வோ டேற்றிடுந்
தானை வென்னிடப் பற்பல
தீய வாளிக ளேவி யுள்ளணி
சென்று ளானிடி யேறனுன்.

(இ-ள்) ஆய காலையில் - அப்படிப்பட்ட சமயத்தில், மால் உரத்தினும் - கிருஷ்ணனின் மார்பிலும், அடல் அருச்சுனன் மெய் யினும் - வலிய அருச்சுனனின் உடம்பிலும், பாய - பாயும்படி' வாளி மா மழை பெய் - அம்பாகிய பெரிய மழையைப் பொழிந்த, பாற்கரன் பாலன் - சூரிய புத்திரனாகிய கர்ணன், ஆதி மன்னவ ரெலாம் முதலாகிய உள்ளிட்ட மன்னர்களெல்லாரும், தேர்மிசை சாய - தேரின் மீது (அடிபட்டு) வீழவும் (மற்றும்) அயர்வோடு ஏற்றிடும் தானை - தளர்ச்சியோடு எதிரிட்ட படைகள், வென் இட - முதுகுகாட்டியோடவும், பற்பல தீய வாளிகள் ஏவி - அநேக கொடிய அம்புகளைச் செலுத்தி, இடி ஏறு அனான் - பேரிடி போன்ற வனான அருச்சுனன், அணி உள் சென்றுளான் - எதிரிகளின் அணி வகுப்பினைப் பிளந்து உள்ளே புகுந்தான் ; (எ.று.)

அருச்சுனன் பகைவர் வியூகத்தைப் பிளந்து ஊடுருவிச் சென்றமை கூறப்பட்டது. வாளிமாமழை - உருவகம். (72)

73. சயத்திரதன் தேரினைக்கண்டு அருச்சுனன் தாவிவர, அவனை யனைவரும் வளைந்துகொள்ள அவன் கிருஷ்ணன்முகம் நோக்குதல்.

வள்ளன் மைத்துனன் தேரி லாடிய
வராக வெங்கொடி கண்டுறுத்
துள்ள முன்பொடு தாவி மேனர
னுறுதல் கண்டர சன்படை
வெள்ள மோடயத் தாம னங்கர்கோ
வேந்தர் யாவருஞ் சூழவேழ்
கிள்ளைத் தேரனை நோக்கிப் பற்குனன்
கேச வன்முக நோக்கினுன்.

(இ-ள்) வள்ளல் மைத்துனன் - துரியோதனன் மைத்துனனாகிய சயத்திரதனின், தேரில் ஆடிய-தேரிற் கட்டியிருந்து ஆடிய, வராகம் வெங்கொடி கண்டு - பன்றிக்கொடியைக் கண்டு, உறுத்து - கோபங் கொண்டு, உள்ளம் முன்பொடு தாவி-மனத்துணிச்சலோடு பாய்ந்து, மேல்-அச்சயத்திரதன் மீது, நரன் உறுதல் கண்டு-அருச்சுனன் வரு தலைப்பார்த்து, அரசன் - துரியோதனன், படைவெள்ளமோடு - மிகுதியான படையோடு, அயத்தாமன்-அசுவத்தாமா, அங்கர்கோ - கர்ணன், வேந்தர் - துணைமன்னர்கள், யாவரும் சூழ - அனை வரும் (தன்னை) வளைந்து கொள்ள, (அப்போது) பற்குனன் -

அருச்சுனன், ஏழ் கிள்ளைத் தேரனை - ஏழு குதிரைகள் பூட்டிய தேரினைக்கொண்ட சூரியனை நோக்கி- (மேற்குத்திசையில்) பார்த்து, (பின்பு) கேசவன் முகம்- கிருஷ்ணனுடைய முகத்தை, நோக்கினன்- (அவனதுகுறிப்பறியப்) பார்த்தான்; (எ.று).

வராகக்கொடி சயத்திரதனுக்குரிய தென்பதை" சிந்துபதி முனைகொடேர்மிசையெழுந்து விண், தனிலியங்குறு வராகவெங் கொடிதனைத் தெரிந்து" என்ற நல்லாப்பிள்ளை பாரதத்தாலும் அறியலாம். (பதினன்காம் ;360) துரியோதனனை வள்ளல்- என்றது எள்ளல்பற்றியது, முன்பு- வலிமை, துணிவு. கிள்ளை- குதிரை : (திவாகரம்) சூரியனை 'ஏழ்பரித்தேரோன்' என்பர்: சூரியனைநோக்கியது - அத்தமிக்கும் நேரத்தையறிதற்கு. கிருஷ்ணனை நோக்கியது- தான் செய்ய வேண்டிய செயலின் திறமறிதற்கு என்க. யாவரும் அருச்சுனனைச் சூழ்ந்து கொண்டது - அத்தமித்தற்குள் சயத்திரதனை நெருங்கவொட்டாது தகையவென்க. தேரன் - பொருட்பெயர். (73)

74. **'அத்தமித்தற்குமுன் நான் சூரியனை மறைக்க, அத்தமித்ததென் றெண்ணிச் சயத்திரதன் வெளிப்படுவன்: அப்போது அவன் தலையைத்துணித்துவிடு' என்று கண்ணன் அருச்சுனனைச் சிவனளித்த வில்லோடு சித்தமாயிருக்கச் சொல்லுதல்.**

அந்தி வந்ததிங் கெண்ண மென்னபோ
 ராடொ ணாதர னேவினற்
சிந்து மன்றலை துணித்தி மாயையிற்
 செங்க திர்ச்சுட ரொளிப்பன்யான்
மைந்த வென்றரி வகுப்ப நன்றென
 வந்த வந்தவர் மடங்கிவென்
றந்தி டும்படி சிந்தி யம்பமர்
 தனஞ்செ யன்செயு சமையமே.

(இ-ள்) இங்கு - இப்போது, அந்தி வந்தது - சந்தியாகாலம் நெருங்கியுள்ளது: எண்ணம் என்ன - உன் நினைவு என்ன ? (அத்த மித்தபின்) போர் ஆடொணாது -போர் செய்தல் கூடாது - (ஆகவே) யான் - நான், (இப்போதே) மாயையில் - (என்) மாயாசக்தியினல், செங்கதிர்ச் சுடர் ஒளிப்பன் - சிவந்தகிரணங்களையுடைய சூரியனை

மறைத்து விடுவேன் : மைந்த - வலியோனே ! [நீ அத்தமித்து விட்டான் என்று எண்ணுமல்] அரன் ஏவிஞல் - (வரமாக முந்தின நாளில்) சிவபிரானிடம் பெற்ற வில்லிஞல், சிந்து மன் தலை துணித்தி - சயத்திரதன் தலையைத் துண்டித்திடுவாய், என்று அரி வகுப்ப - என்று கிருஷ்ணன் சொல்ல, (அதற்கு அருச்சுனன்) நன்று என - அப்படியே யாகுக என்று சொல்லி, வந்த வந்தவர்-தன்மேல் போரிட வந்து சூழ்ந்த அனைவரும், மடங்கி வென் தந்திடும்படி - தோற்றுப் புறமுதுகிட்டோடும்படி, அம்பு சிந்தி - அம்புகளைப் பொழிந்து, தனஞ்செயன் - அருச்சுனன், அமர் செயும் - போரினைச் செய்கின்ற, சமையம் - போது, (எ-று.) ''................ மாவேழான்றனைமறைத்து'' என மேலைக்கவியிற்றெடரும். துணித்தி - முன்னிலையேவல். ஒளிப்பன் - தன்மையொருமை. (74)

வேறு.

75. கிருஷ்ணன் தனது திருவாழியாற் சூரியனை மறைத்தல்.

தாவேழான் றனையெதிர்ந்தோன் தரைப்பொறைதீர்ந்
திடச்சிந்து தலைவன் மாள
நாவேழான் றனைப்புகுந்து நரனெடுநால்
வருந்துஞ்சார் நாளும் வாழ
மாவேழான் றனைமறைத்து மாய்கையினுற்
பணித்தலுந்தன் மலர்க்கை யாழி
கூவேழான் மலையரசர் கொடுங்களம்போற்
சிவந்ததகல் குடபான் மன்னே.

(இ-ள்) தாவு ஏழ் ஆன் தனை எதிர்ந்தோன் - பாய்கின்ற ஏழு எருதுகளை யடக்கினவனுகிய கிருஷ்ணன், தரைப் பொறை தீர்ந்திட - பூமியினது அதிபாரம் நீங்கிடவும், சிந்து தலைவன் மாள - சயத்திரதன் இறக்கும்படியும், நா ஏழான்தனை புகுந்து - ஏழு நாக்குகளைக் கொண்ட அக்னியில் மூழ்கி, நானெடு - அருச்சுனனேடு, நால்வரும் துஞ்சார் - ஏனைய பாண்டவர் நால்வர்களும் இறவாதவர்களாய், நாளும் வாழ - தினந்தோறும் நல்வாழ்வு வாழ்ந்திடவும், மா ஏழான் தனை - ஏழு குதிரைகள் கட்டிய தேரையுடைய சூரியனை, மாய்கையினுல் - மாயையினுல், மறைத்து - மறையவைத்து, தன் மலர்க்கை

ஆழி பணித்தலும் - தன்னுடைய செந்தாமரைமலர்போன்ற வலக்கையிலேந்திய சக்கரப்படையை [அங்ஙனமே மறைக்கும்படி] நியமிக்கவும், (அப்போது) அகல் குடபால் - அகன்ற மேற்குத்திக்கினிடங்களெல்லாம், கூ ஏழான் - ஏழுலகு காரணமாக, மலை - போரிடுகின்ற, அரசர் - மன்னர்களது, கொடும் களம் போல் - கொடிய போர்க்களம் (செந்நீர் நிறைந்து) சிவப்பதுபோல, சிவந்தது - செந்நிறமடைந்தன [இயல்பான சூரியாஸ்தமனகாலத்திற்போலச் செவ்வானம் பெற்றன]; (எ-று.) மன், ஓ - ஈற்றசை.

ஆன் - எருது:95 "ஆன்முகத்தனடற்கண நாயகன்"(கந்தபுராணு கோ:95 ஏழானெதிர்த்தகதை - கிருஷ்ணன் நப்பின்னைப்பிராட்டியைத் திருமணஞ்செய்து கொள்வதற்காக, அவள் தந்தையின் ஏற்பாட்டின்படி, யாவர்க்கும் அடங்காத அசுராவிஷ்டமான ஏழெருதுகளையும் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கித் தழுவினனென்பது. இவ்வரலாற்றினை "இமிலேற்றுவன் கூன் கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே" என்ற நம்மாழ்வார் திருவிருத்தத்தாலும் அறியலாம். (செ : 21) துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனத்திற்காகவே அவதாரங்கொண்டவனென்பது 'தரைப் பொறை தீர்ந்திட, என்றதன் தேர்ந்த பொருள். "பூபாரம் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு" என்ருன் சகதேவனும். (வில்லி : கிருட் : தூது: 34). அக்னிக்கு ஏழுநாக்கு என்பர். அவை : காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சதூம்பரவருணை, புலிங்கினி. விசுவருபி எனப்பெயர் பெறும். மாய்கை - மாயை, மாயம், பொய்த்தோற்றம் (illusion.) கூ - பூமி. மலைதல் - போரிடுதல். மலையரசர் - வினைத்தொகை, கொடுங்களம் - பண்புத்தொகை. ஈற்றடியில் உவமையணி.

இதுமுதல் பதினொரு கவிகள் - பெரும்பாலும் முதல் நான்கு சீர் காய்ச்சீர்களும் மற்றையிரண்டும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (75)

76. கௌரவப்படையினர் சயத்திரதனை வெளிக்கொணர, கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கிச் சயத்திரதனைக் கொல்லச் சொல்லுதல்.

சிவந்தகுட திசைநோக்கித் தெவ்வரரி
மாய்கையெனத் தெரியா தார்த்தார்
கவுந்திமரு மகன்சிந்து காவலனை
விசயனுக்குக் காட்டிச் சொல்வான்

துவந்தவிவன் றலைவீழ்த்து சுதன்றலைமண்
ணிடுவான்கந் துகளா மாறு
தவஞ்சிமந்த பஞ்சகத்திற் ருன்புரியும்
இவன்றந்தை தடங்கைக் கென்ருன்.

(இ-ள்) சிவந்த குடதிசை நோக்கி - செந்நிற மடைந்த மேற்குத் திக்கினைப் பார்த்து (செவ்வானம் நோக்கி), தெவ்வர் - பகைவராகிய கௌரவப்படையினர், அரி மாய்கை எனத் தெரியாது - கிருஷ்ணன் செய்த மாயம் இது என்பதையறியாமல், ஆர்த்தார் - (அத்தமன மாய்விட்டது : இனிமேல் சயத்திரதனை வெளிக்கொணரலாம் என மகிழ்ச்சியால்) ஆரவாரித்தார்கள் : (அப்போது வெளிவந்த) சிந்து காவலனை -சயத்திரதனை, கவுந்தி மருமகன் - குந்தியின் மருமாளுகிய கிருஷ்ணன், விசயனுக்கு - அருச்சுனனுக்கு, காட்டி - சுட்டிக்காண்பித்து, சொல்வான் - கூறுவாளுயினுன் : 'இவன் தந்தை - இவன் தகப்பளுகிய வ்ருத்தக்ஷத்ரன், சுதன் தலை - தன்பிள்ளையாகிய சயத்திரதனின் சிரசை, மண் இடுவான் - வெட்டித் தரையில் வைப்பவனுடைய,கம் - தலை, துகளாம் ஆறு - பொடிப் பொடியாகச் சிதைந்து போகுமாறு, சிமந்த பஞ்சகத்தில் -ஸ்யமந்த பஞ்சகம் என்ற மடுவின் கரையில், தவம் தான் புரியும் - தவஞ்செய்கின்ருன் : (அவன்) தட கைக்கு - பாந்த பெரிய கையில் விழும்படி, துவந்தம் - அம்பின்தொடர்பினுலே இரட்டைப்பட்டதாக (இரண்டு தூண்டாக, உடல்வேறு தலைவேருக) இவன் தலை வீழ்த்து - இந்தச் சயத்திரதன் சிரசையறுத்துத் தள்ளுவாய்,' என்ருன் - என்று கூறி முடித்தான்; (எ-று)

பின்னிரண்டடிகளில் சுருங்கக் கூறியதன் விரிவான விவரம் பின்வருமாறு : சயத்திரதனது தந்தையான வ்ருத்தக்ஷத்ரன் என்பவன் இவனைப் பெற்றபின் இவனது தலையைக் கீழே தள்ளி இடுபவனது தலை பொடியாச் சிதறி விடுமென்று ஆகாயவாணி வரமருளவும் பெற்று மகிழ்ந்து அப்பால் இவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டு வனம் புகுந்து ஸ்யமந்த பஞ்சகமென்ற மடுவின் கரையில் தன்மகனது ஆக்கம் முதலியவற்றைக் குறித்து அரியதவத்தைச் செய்து கொண்டிருக்கின்ருன் : இவன் தலையை நீ நேரிற் கீழேதள்ளாமல் தக்க அம்புகளை ஒன்றன்மேலொன்று விடாது தொடுத்து அவற்ருல் அத்தலையை உடம்பினின்று வேருக்கி அப்பாற் செலுத்தி, சூரியாஸ்தமனமாய் விட்டதென்று கருதி விரைவாக மாலைச்சந்திக்கடன் செய்யத் தொடங்கி அருக்கியசலமேந்தியுள்ள அத் தந்தையின் கையில் விழச்செய்வாயாயின் அவன் அத் தலையைத் தன் கையாற் கீழேயெறிந்து அதனுல் தன் தலை வெடித்து

இறப்பான் : உன் தலைக்கு அபாயமும் இலதாமென்று கிருஷ்ணன் அருச்சுனனுக்கு நல்லுபாயம் அறிவுறுத்தினன் என்பது. ஸ்யமந்தபஞ்சகம் — பரசுராமன் இருபத்தொருகால் அரசுகளைகட்டு அதன் பின் தருப்பிக்க அவர்களின் குருதிகொண்டு நிருமித்த ஐந்து மடுக்கள் ஸ்யமந்த பஞ்சகம் எனப்படும் : இது. குருக்ஷேத்திரத்தி லுள்ளது. துவந்தம் - தொடர்பு. இங்கே அம்புகளை ஒன்றன் மேலொன்று விடாது தொடர்ச்சியாகத் தொடுத்தலைக்குறிப்பது. அங்ஙன் தொடர்ச்சியாக அம்புகளைச் செலுத்தி அவன் தலையை உடம்பினின்று வேருக்கி அப்பாற்சென்று அவன் தந்தையின் கையில் விழும்படிசெய்தல் என்றபடி. கம் - தலை (திவாகரம்).(76)

77. அருச்சுனன் சயத்திரதனைக் கொன்றபின்கிருஷ்ணன் திருவாழி நீக்கச் சூரியன் விளங்குதல்.

சொற்றவணம் பசுபதத்தா றுணித்ததலை
புவிவீழாச் சுவேத வாகன்
பெற்றவன் கை வீழ்த்திடலும் பிள்ளைதலை
நிலத்திட்டே பிதாவு மாய்ந்தான்
பற்றலர்பற் குனன்தவிர்ந்தான் சொன்னமொழி
யெனவார்த்தார் பரம னீக்க
உற்றவிரு ளுடனாழி வுயரப்போ
துறநின்ரு னுதய னம்மா.

(இ-ள்) சொற்ற வணம் - கிருஷ்ணன் கூறியபடியே, பசுபதத்தால் -சிவனீந்த அஸ்திரத்தால், துணித்த தலை - வெட்டிய சிரசு,புவி வீழா -தரையில் விழாதபடி,சுவேதவாகன்-அருச்சுனன், பெற்றவன் கை வீழ்த்திடலும் - தந்தையாகிய வருத்தக்ஷத்ரன் கையில் விழும்படிசெய்ததும், பிதாவும் - தந்தையாகிய அவனும், பிள்ளை தலை நிலத்து இட்டு - தன்மகனுகிய சயத்திரதனின் தலையைத் தரையில் போகட்டு, மாய்ந்தான் -இறந்து போனன் :(இஃது இங்ஙனுக) பற்றலர் -பகைவராகிய கௌரவர், பற்குனன் - அருச்சுனன் , சொன்ன மொழி - சொல்லிய சபதத்தை , தவிர்ந்தான் நிறைவேற்ருது விட்டுவிட்டான், என - என்றுகூறி , ஆர்த்தார் - பேராரவாரஞ் செய்தார்கள் : (சமயத்தில்) பரமன் - ஸ்ரீகிருஷ்ணன், நீக்க- (சக்கரப்படையை) விலகச்செய்ய, உற்ற இருளுடன்-பொருந்தி

யிருந்த இருளோடு, ஆழி - சக்கரப்படையும், உயரப்போதுற - மேலே அகன்றுபோய்விட, உதயன் - சூரியன், நின்றான் - வெளிப்பட்டு விளங்கநின்றான்; (எ.று) அம்மா - வியப்பிடைச் சொல்.

சிவனளித்த ஆயுதத்தை ஈண்டு பசுபதம் எனக்குறித்தார் எனக்கொள்க. சுவேதவாகன் - வெண்ணிறமான குதிரைகளை யுடையவன்: காண்டவதகனஞ் செய்யுமாறு அநுமதி தரும்போது அக்னிபகவானாற் கொடுக்கப்படும் நான்குவெள்ளைக்குதிரைகளைப் பூண்ட தேரைப்பெறுதலால், இவனுக்கு இப்பெயர். ஆழிகொண்டு சூரியனை மறைக்கவே, இருள்வர அத்தமித்தது எனஎண்ணி அருச்சுனன் சொன்ன சபதமொழி தவிர்ந்தான் என்றார் பகைவர். அருச்சுனன் சொன்னசபதம் - சூரியாத்தமனத்திற்குள் சயத் திரதனைக்கொல்வேன், அதுதப்பின் அருங்கனலூடுகுதித்திடுவேன் என்றது. வணம்-வண்ணம் - என்பதன் தொகுத்தல். பெற்றவன் வினையாலணையும்பெயர். (77)

78. **துரியோதனன் சிலகூறிச் சேனையோடும் சென்று போர்தொடங் குதல்.**

கடுநாகம் விழுங்கிபினர் கக்கியபோற்
கதிர்தோன்றக் கண்ணுற் றன்று
குடைநாக மெடுத்தானின் குழாமளித்தக்
கொடும்பாவிக் கொடுமை யீதென்
றுடுநாகந் துரோபதியை யுரிவித்தா
னுளத்தெண்ணி யுருத்தி னறைவான்
படநாகம் படுத்திலனேற் படுவனெனத்
துணிந்தெதிர்தான் படைஞர் சூழ.

(இ-ள்) கடுநாகம் விழுங்கி - ராகுகேதுக்களால் பற்றப்பட்டு உண்டு, பினர்- பின்னர், கக்கிய போல்- வெளிப்பட உமிழ்ந்தது போல, கதிர் தோன்ற- சூரியன் வெளிப்பட, கண்ணுற்று- அச் சூரியனைப் பார்த்து, நாகம் உடு துரோபதியை- துகில் [வஸ்திரம்] உடுத்திருந்த திரௌபதியை, உரிவித்தான்- களையச்செய்த வஞ்சகிய துரியோதனன், 'ஈது- இந்த]அரிய] நிகழ்ச்சி, நாகம்

குடை எடுத்து- [கோவர்த்தன] மலையைக்குடையாகத் தூக்கி யெடுத்து , ஆனின் குழாம் அளித்த- பசுக்கூட்டங்களை (மழையால் துன்புறுமல்) காத்த, அக் கொடும்பாவி- அந்தக் கொடிய பாவியான கிருஷ்ணனின், கொடுமை- அநீதிச் செயலாகும் என்று உளத்து - எண்ணி என்று மனத்தில் நினைத்து , உருத்தின்- கோபத்தில் , அறைவான் - கூறுவானுயினுன் : (என்னவெனில்) [ஐவரையும்] நாகம் பட படுத்திலனேல் - சுவர்க்கம் புகும்படி கொல்லாமற்போவேனேயானுல் , படுவன்- இறந்துபோவேன், என- என்றுகூறி , படைஞர் சூழ - தன்சேனைவீரர்கள் சூழ்ந்துவர, துணிந்து எதிர்ந்தான்- (இரண்டில் ஒன்று)நிச்சயித்து (பாண்ட வரை) எதிரிட்டான் ; (எறு.)

ராகுகேதுக்களாகிய பாம்புகள் விழுங்குதலால், சூரியகிரகணம் ஏற்படுகிறதென்பது நூற்கொள்கை.அவையிரண்டும் சாயாகிரகங்கள். நாகம்என்ற ஒரே சொல் நான்கடிகளிலும் முறையே பாம்பு, மலை, ஆடை, சுவர்க்கம் என்ற வெவ்வேறுபொருளில் வந்தது - **சொற் பின்வருநிலையணி.** உரிவித்தான்-பிறவினை. துச்சாதனனைக்கொண்டு உரிவித்தான் என்றபடி.உருத்தின், இன்- ஏதுப்பொருளது. துரியோ தனன் கிருஷ்ணனைக்'கொடும்பாவி'யென்றது ரசிக்கத்தக்கது. இந்த இடத்து வில்லிபாரதமும்''குடையெடுத்துமழைதடுத்தும் வஞ்சனைக் கோர் கொள்கலமாங்கொடிய பாவி'' என்றதுகாண்க (பதினுன்காம் :172). துரோபதி-திரௌபதியென்பதன் சிதைவு. கடு - விஷம். (78)

79. 80. இருதிறத்தவரும் போர்செய்தல்.

இரண்டு கவிகள் ஒரு தொடர்.

கடுக்களத்தா னெனவரசன் கனன்றெழலும்
அரசரெலாம் கழறி யாண்மை
அடுகளத்தி னிடைநின்ரு ரமர்பொருதார்
அவணடுத்த அடல்கொண்மூவர்
தொடுக்களங்கான் றுடைமன்னர் தொகுதிகள்வா
னுறமலைந்தார் துரோணம் வாங்கி
உடுக்களங்கா தலன்மரபுக் கொளி விளக்காந்
தனஞ்செயன்கை யோச்சு மேவால்.

(இ . ள்) கடு களத்தான் என - விஷம்பொருந்திய கழுத்தையுடைய உருத்திரன் என்னும்படி, அரசன் - துரியோதனன், கனன்று எழலும் - சினந்து (போர்க்கு) வரவே, அரசர் எலாம் - (அவனுக்குத் துணைசெய்யவந்த) மன்னர்களெல்லாம், ஆண்மை கழறி - (தமது) வீரத்தைப் புகழ்ந்துபேசி, அடுகளத்தின் இடை நின்று - போர்க் களத்தின் நடுவில் நின்று, ஆர் அமர் பொருதார் - அரியபோரிட்டார்கள்: (அப்போது) அவண் அடுத்த - அங்குவந்துநெருங்கிய, அடல் கொள் மூவர் - வலிமைகொண்ட அருச்சுனன் வீமன் சாத்தகியாகியமூவரும், களம்தொடு - களாப்பூவினால்தொடுக்கப்பட்ட, கான் தொடை மன்னர் - வாசனைவீசுகின்ற மாலையையணிந்த அரசர்களின், தொகுதிகள் - படையணிகள், வான் உற - (இறந்து) சுவர்க்கம்போகும்படி, மலைந்தார், போரிட்டார்கள்: (அம்மூவருள்) உடுக்கள் அம் காதலன் மரபுக்கு - நட்சத்திரங்களின் அழகிய நாயகனாகிய சந்திரனின் வமிசத்திற்கு, ஒளி விளக்காம் - பிரகாசம்பொருந்திய தீபம்ஆகிய, தனஞ்செயன் - அருச்சுனன், தூரோணம் வாங்கி - (தன்) வில்லினை வளைத்து, கை ஒச்சும் ஏவால் - கையினால் செலுத்திய அம்புகளால்; (எ.று) ''அமர்போய் மீண்டார்'' என மேலைக்கவியில் குளகமாய்த் தொடரும்.

கடு - விஷம். களம்-கண்டம், கழுத்து; எனவே. கடுக்களத்தான் - சிவபிரான், உருத்திரமூர்த்தி. ஆண்மை - வார்த்தைகளுக்குப்பண்பாகுபெயர். அடுகளம் - வினைத்தொகை, ஆரமர் - பண்புத்தொகை. சந்திரனை நட்சத்திரங்களுக்குக் கணவன் என்பர். குருவமிசம் சந்திர வமிசமாகும். (79)

80. வல்லாலை வரைவென்ற மன்னவனு
தியர்விற்றே ரமர்போய் மீண்டார்
சொல்லாற்பார்த் தனைவென்ற சுடர்மைந்தன்
இருந்திடத்தே சோர்ந்தான் வாங்கும்
வில்லால்பாண் டவரனிகம் வென்றிடுமா
ரியன்மைந்தன் வென்னிட் டான்விற்
செல்லாலம் புறைபெய்யுந் திறற்கிருபன்
பொன்றவன்போற் றேர்மேற் சாய்ந்தான்.

(இ-ள்) வல்லால் - சூதாட்டத்தால், ஐவரை வென்ற - பஞ்ச பாண்டவரைச் செயித்த, மன்னவன் ஆதியர் - துரியோதனன் முதலானோர், வில் தேர் அமர் போய் - (தங்களது) விற்களையும் தேர்களையும் இழந்து போரை நிறுத்தி, மீண்டார் — திரும்பினார்கள்: பார்த்தனை சொல்லால் வென்ற - அருச்சுனனை (வில்லால் வெல்ல மாட்டாது) வீண் ஆரவாரப் பேச்சினால் செயித்த, சுடர் மைந்தன் - கர்ணன், இருந்திடத்தே - தான் நின்றிருந்த இடத்திலேயே, சோர்ந்தான் - தளர்ந்து வீழ்ந்தான் : வாங்கும் வில்லால் - வளைக்கும் (தன்) வில்லினால், பாண்டவர் அனிகம் வென்றிடும் - பாண்டவரின் சேனைகளை வெற்றிகொள்ளும், ஆரியன் மைந்தன் - துரோணாசாரியன் மகனாகிய அசுவத்தாமன், வென்னிட்டான் - புறமுதுகிட்டான் : வில் செல்லால் - வில்லாகிய மேகத்தால், அம்பு உறை- அம்பு மழையை, பெய்யும் - பொழியும், திறல் கிருபன்- பராக்கிரமம் மிக்க கிருபாசாரியன், பொன்றவன் போல் - இறந்தவன் போல், தேர் மேல் சாய்ந்தான் - (தன்) தேர்த்தட்டின் மீது சாய்ந்து வீழ்ந்தான் ; (எ.று.)

துரியோதனாதிய மன்னர்கள், கர்ணன், அசுவத்தாமன், கிருபன் ஆகிய அனைவரும் தோற்றமை ஈண்டு குறிக்கப்பட்டது. முதலடியில் மோது போரிலன்றிச் சூது போரில் வென்ற மன்னவன் என்று துரியோதனனை இகழ்ந்தபடி. கர்ணன் வாய்ப்பேச்சில் வீரன் என்பது பிரசித்தம். அசுவத்தாமன் பெரும்பாலும் வெற்றி பெறுவனென்பது 'வென்றிடும்' என்ற அடையால் உணரலாம். செல் - மேகம் : விற்செல் - உருவகம். உறை - மழை. அம்புறை-அம்புமாரி: உருவகம். இருந்திடத்தே- வகரவுடம் படுமெய்கெட்டு வந்தது. (80)

81. வஞ்சினம் முடித்த அருச்சுனன் கிருஷ்ணன் சொற்படி பாசறை புகுதல்.

கிருபனிறந் தனனெனவே கிலேசமுறு
நரற்கமலன் நினக்கு மாதி
குருவினுக்கோ ரயிர்ப்பிலைநீ கூறியவஞ்
சினமுடித்தாய் கோவே நின்னைப்
பொருமவர்யா ரினிமனைப்பாற் புகுதியெனத்
தூண்டிடத்தேர் பொருந்திப் பார்த்தன்
இருமருங்கு முத்தமோசா வுதாமனரி
பின்றன்முன் னெய்தச் சென்றான்.

(இ-ள்) கிருபன் இறந்தனன் என - கிருபாசாரியன் இறந்து போயினர் என்று, கிலேசம் உறு நரற்கு - மன வருத்தமுறும் அருச்சுனனுக்கு, அமலன் - கிருஷ்ணன், "நினக்கும் - உனக்கும், ஆதி குருவினுக்கு (உம்) - முதற்குருவாகிய கிருபாசாரியருக்கும், ஓர் அயிர்ப்பு இலே - சந்தேகப்பட வேண்டிய ஒரு குறையும் இல்லை; (அவர் இறக்கவில்லை), நீ - நீயும், கூறிய வஞ்சினம் முடித்தாய் - சொன்ன சபத மொழியை [நன்கு] நிறைவேற்றினாய் : கோவே ! தலைவனே ! இனி - இனிமேல், நின்னைப் பொருமவர் யார் ?-உன்னை, (வீரத்தில்) நிகர்ப்பவர் எவருளர்? (ஒருவருமிலர்). (ஆகவே இளைப்பாறுதற்கு) மனைப்பால் புகுதி - பாசறைக்குச் செல்வாய்," என - என்று சொல்லி, தூண்டிட - குதிரைகளையோட்ட, தேர் பொருந்தி - (அந்தத்) தேரில் ஏறியிருந்து, பார்த்தன் - அருச்சுனன், (தனக்கு) இரு மருங்கு - (வலமிடம் ஆகிய) இரு பக்கங் களிலும்), உத்தமோசா உதாமன் - உத்தமௌஜஸ் யுதாமந்யு என்ற இருவரும் [வர], அரிபின் - கிருஷ்ணனுக்குத் தம்பியாகிய சாத்தகி, தன் முன் எய்த - தனக்குமுன்னே போக, சென்றான்— (பாசறைக்குப்) போயினன் ; (எ. று.)

அயிர்ப்பு - சந்தேகம் : குறையென்றபடி, புகுதி - வியங்கோள். அரிபின் - நான்கனுருபு தொக்கது. பின்முன் - முரணழகு. (81)

82. தருமனை வணங்கி அருச்சுனன் சயத்திரதன் இறந்தசெய்தி சொல்ல, அதனையே துரியோதனனும் துரோணனுக்கு உரைத்தல்

நிணச்சேறும் கறையாறும் பிணச்சேதுங்
கடந்தேகி நிருபன் பாத
மணச்செந்தா மரைவணங்கி வகுத்தனர்சிந்
திறையிறத்தல் மகிழ்ந்தன் ஞேன்பாம்
பணைச்செல்வற் கின்சொற்புகன் றவரவரைத்
தழுவினன கிகேத னெய்தித்
திணிச்சிலையா ரியற்குரைத்தான் சிந்துபதி
யிறத்தலவன் றெளிந்து சொல்வான்.

(இ-ள்) நிணச்சேறும் - கொழுப்பினாலேயே சேறும், கறை ஆறும் - இரத்தமாகிய ஆறும், பிணச்சேதும் - பிணமாகிய அணை யும், கடந்து ஏகி - தாண்டிப்போய், நிருபன் - தருமராசனது, பாதம் மணம் செந்தாமரை - வாசனை பொருந்திய சிவந்த தாமரை

மலர் போன்ற திருவடிகளை, வணங்கி - பணிந்து, சிந்து இறை இறத்தல் - சயத்திரதன் இறந்துபோன செய்தியை, வகுத்தனர் - சொன்னுர்கள் : அன்னேன் - அந்தத் தருமன், மகிழ்ந்து - மனங் களிப்பற்று, பாம்பணைச் செல்வற்கு - ஆதிசேடனென்னும் பாம்பினைப் படுக்கையாகக் கொண்டுள்ள திருமாலாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்கு, இன் சொல் புகன்று - இனிய உபசார வார்த்தைகளைச் சொல்லி (நன்றிகாட்டி), அவரவரை - ஆங்குள்ள அனைவரையும் ஒவ் வொருத்தராக, தழுவினன் - அணைத்துக்கொண்டான். [இஃது இங்ஙனுக] அகிகேதன் - பாம்புக் கொடியையுடைய துரியோதனன், எய்தி - வந்து, சிந்துபதி இறத்தல் - சயத்திரதன் இறந்துபோன செய்தியை, திணி சிலை ஆரியற்கு - வலியவில்லையுடைய துரோணு சாரியருக்கு, உரைத்தான் - சொன்னுன் : அவன் தெளிந்து சொல் வான் - அந்தத் துரோணன் விளக்கமுறக் கூறலானுன் ; (எ.று.) துரோணன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

சயத்திரதன் சிந்து தேசாதிபதியென்பது நினைக. பாத தாமரை- உருவகம். இறத்தல் - தொழிற்பெயர். (82)

83. துரோணன் துரியோதனனை நோக்கிக் கூறியன.

பொறுத்துவெலு மறம்பாவம் புறந்தருமென்
பது முணர்ந்தாய் புகன்முன் ஞேர்சொல்
மறுத்திளைஞ ருரைக்கிசைந்தாய் வருமூழின்
விளைவிதுவே மன்ன! நின்னை
வெறுத்தலமு கலதெனைநீ வெறுத்திடிலென்
செய்வதினி வென்றேர் சென்னி
பறித்திடுவம் வம்மினெனப் பகர்ந்தெழவேந்
திரவிமகன் பாற்போய்ச் சொல்வான்.

(இ-ள்) "அறம் பொறுத்து வெலும் - தருமம் நாளடைவில் மெதுவாக வெற்றிபெறும் : பாவம் புறந்தரும் - (அப்போது) பாவம் முதுகு காட்டியோடும்" என்பதும் - என்ற உண்மையையும், உணர்ந்தாய் - (இப்போது) தெரிந்து கொண்டாய் : முன்னேர் - பெரியோர்கள், புகல் - உபதேசித்துச் சொன்ன, சொல் - நீதி மொழி களை, மறுத்து - (ஏற்காது) விலக்கி, இளைஞர் உரைக்கு - உன் தம்பியர் போன்ற சிறுவர்கள் வார்த்தைக்கு, இசைந்தாய் -

உடன்பட்டுச் செயலாற்றினுய்: (மேலும்) வரும் ஊழின் விளைவு - நிகழ்கின்ற விதியின் பயனும், இதுவே - இங்ஙனம் தோற்று அவமானமுறுதலேயாகும்: (ஆகவே) மன்ன! - ராசனே! நின்னை வெறுத்தல் அழகு - (உன் செயலின் விளைவுக்கு) உன்னையே நிந்தித்துக் கொள்ளுதல் நேரிது: அலது - அங்ஙனமன்றி, நீ —, எனை - என்னை, வெறுத்திடில் - நிந்தித்திடின், என் செய்வது— (யான்) என்ன செய்யமாட்டுவேன்?: இனி - இனியாவது, வென்ருேர் சென்னி - (நம்மை) செயித்த பாண்டவரின் தலைகளை பறித்திடுவம் - கொய்து விடுவோம், வம்மின் - வாருங்கள்' என - என்று, பகிர்ந்து எழ - சொல்லி யெழுந்திடலும், வேந்து - துரியோதனன், இரவிமகன்பால் போய் - கர்ணனுள்ள இடத்திற்குச் சென்று, சொல்வான் - கூறுவான்; (எ-று), அவன் கூறியதை மேலைச் செய்யுளிற் காண்க.

'அறம் வெல்லும் பாவந் தோற்கும்'' என்பது முதுமொழி, 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பதனை மறுத்து, துச்சாதனன் போன்ற இளைய நீசர் மொழி கேட்டு ஒழுகினுய். எல்லாம் விதியின்படியே நடக்கும்: உன்செயலின் விளைவுக்கு உன்னை வெறுத்துக் கொள்ளாது என்னை வெறுத்து என் பயன்? என்று துரோணன் துரியோதனனுக்கு அறிவுறுத்தினனென்க. வென்ருேர்-வினையாலணையும்பெயர். பறித்திடுவம் - உளப்பாட்டுத்தன்மைப்பன்மை. வம்மின் - முன்னிலையேவற்பன்மை. (83)

84. துரியோதனன கூறியவார்த்தைக்குக் கர்ணன் பதில் கூறுதல்.

பஞ்சவர்மேற் பொருமாறு போந்திட்டான்
அவர்க்கன்பு படைத்து நம்மை
வஞ்சனைசெய் துரோணனென வகுத்திடும்வேந்
தினுக்கிதனை வகுப்பான் வேந்தே!
நஞ்சருத்திக் கனலிட்டு நடத்தியுங்கா
னவர்க்கிடுக்க ணடைந்த துண்டோ!
வெஞ்சினத்தா வொருவரைநாம் வெறுத்தென் போர்
புரிவம்விதி வென்ருே ரியாரே.

(இ - ள்) 'நம்மை வஞ்சனை செய் துரோணன் - நம்மைக் கபடஞ் செய்த துரோணன், அவர்க்கு அன்பு படைத்து - நம் பகைவராகிய பாண்டவரிடத்து அன்புவைத்து, (மேலுக்கு) பஞ்சவர்மேல் -

அந்தப் பாண்டவர்மீது, பொருமாறு-போர்செய்திடுமாறு, போந்திட்டான் - வந்து சேர்ந்துள்ளான் :' என - என்று, வகுத்திடும் - வகைபடுத்திச்சொன்ன, வேந்தினுக்கு - துரியோதனனுக்கு, இதனை வகுப்பான் - இந்தவார்த்தைகளைக் கூறினுன் : 'வேந்தே' - மன்னனே ! (நாம்) நஞ்சு அருத்தி - விஷத்தைக் கொடுத்து, கனலிட்டு - நெருப்பிலிட்டு, கான் நடத்தியும் - காட்டுக்கு ஓட்டியும், அவர்க்கு - அந்தப் பாண்டவர்க்கு, இடுக்கண் - துன்பமானது, அடைந்தது உண்டோ ? - நேர்ந்ததுண்டோ ? (நேரவில்லை): (ஆகவே) ஒருவரை - ஒருத்தரை, நாம் வெம் சினத்தால் - நாம் கொடிய கோபத்தால், வெறுத்து - நிந்தித்து, என் ? - என்னபயன்? (ஒன்றுமில்லை) : (எனவே) போர் புரிவம் - (மேலும்) போரினைச் செய்வோம் : யார் விதி வென்றோர் ?-வகுத்த தலைவிதியை வென்றவர் யாவருளர் ? (ஒருத்தருமில்லை) : (எ-று.) - ஈற்றசை.

எல்லாம் விதியின்படியேதான் நடக்கும். ஒருவரையும் நிந்தித்துப் பயனில்லைஎன்று கர்ணன் தெருட்டினுனென்க. நஞ்சருத்தியது - ஒருநாள் துரியோதனன் வீமனுக்கு விருந்து வியாஜமாக மிகக விஷத்தைக் கொடுத்து உண்பித்து அதனுல் மயங்கியிருக்கிற சமயத்தில் அவனைக் கயிற்றுற்கட்டிக் கங்கையில் அமிழ்த்த,பாதாளஞ் சென்ற வீமனை அங்குள்ள நாகங்கள் கடிக்க, அதனுல் முந்தின விஷம் நீங்க வீமனுக்கு வாசுகி ஆதரவளிப்ப அவனிடத்து எட்டு நாள் தங்கியிருந்து மீண்டு அத்தினபுரிவந்தான் என்பது கீழ் ஆதிபருவத்து வாரணுவதச் சருக்கத்தில் வந்த கதை (செய்யுள்-4). கனலிட்டது - அரக்குமாளிகையில் பாண்டவரையிருக்கவைத்து அதனைத் தீப்பற்றவைத்து அவர்களை எரித்துக் கொல்லத்திட்டமிட்டது : இதனைக்கீழ் வாரணுவதச் சருக்கத்துக் காண்க (செய்யுள் : 56), கான் நடத்தியது - சூதாடித்தோற்ற பின்னர் : இதனைச் சபா பருவத்துச் சூதுபோர்ச்சருக்கச் செய்யுள் 139 இல் காண்க. விதிவென்றோரிலர் என்ற விடத்து'' நான்முகத்தொருவற் சூழினும், ஊழ்வினையொருவரால் ஒழிக்கற் பாலதோ'' என்ருர் கம்பரும். (அயோத் : நகர்நீங்கு : 164) புரிவம் - உளப்பாட்டுத் தன்மைப்பன்மை. (84)

85. கர்ணன் போர்க்கெழ, துரோணன் சபதஞ்செய்து போரிடவர, பாண்டவர் எதிர்தல்.

என்றுரைத்துப் பணைமுழங்க விருமருங்கா
      ரியன்படையோ டேனை யோரும்
சென்றிடப்பாற் கரன்மைந்தன் சினந்தெழுந்தான்
      ஆசிரியன் தெவ்வர் செற்றல்

பொன்றுதலன் றினிப்பாடி புகுதேனேன்
றருஞ்சபதம் புகன்ருன் யாரும்
வென்றிடுவோ மெனச்சூழ்ந்தார் மேவலுணர்ந்
தைவரெதிர் மேவி நின்ருர்.

(இ-ள்) என்று உரைத்து - என்று சொல்லி, பணை முழங்க - வாச்சியங்கள் ஒலிக்க, இருமருங்கு-,வலம் இடம் ஆகிய இரண்டு பக்கங்களிலும்,ஆரியன் படையோடு-துரோணனுடைய சைந்யத்தோடு, ஏனையோரும் - மற்றவேந்தர்களும், சென்றிட - போரிடப் போக, (அப்போது) பாற்கரன் மைந்தன் – சூரியகுமாரனுகிய கர்ணனும், சினந்து எழுந்தான் - கோபித்துப் (போரிடப்) புறப்பட்டான் : ஆசிரியன் - துரோணன், தெவ்வர் - பகைவரை, செற்றல் - அழித்தல், (அலது) பொன்றுதல் - (தான்) இறத்தல், அன்றி - இந்த இரண்டிலொன்றல்லது, இனி - இனிமேல் (புறங்காட்டி) பாடி புகுதேன் - பாசறைக்குத் திரும்பமாட்டேன், என்று, அரும் சபதம் புகன்ருன் - அரிய சபதத்தைச் செய்திட்டான் : (அதுகேட்டு) யாரும் - அனைவரும், வென்றிடுவோம் - (பகைவரைச்) செயித்து விடுவோம், என - என்று வீரம்பேசி, சூழ்ந்தார் - அந்தத் துரோணனைச் சுற்றி மொய்த்து வந்தார் : ஐவர் - பஞ்சபாண்டவர்கள், மேவல் உணர்ந்து - (துரோணன் முதலானோர்) படையுடன் தம்மேல் வருவது தெரிந்து, எதிர் மேவி நின்ருர் - அவர்களை யெதிர்க்கப் பொருந்தி நின்ருர்கள்; (எ-று).

துரோணன் செய்த சபதம் குறிக்கொள்ளத்தக்கது ;செற்றல், பொன்றுதல், மேவல் - தொழிற்பெயர்கள். ஐவர் - தொகைக்குறிப்பு. புகுதேன் - தன்மையொருமையெதிர்மறை. வென்றிடுவோம் - தன்மைப்பன்மை. (85)

வேறு.

86. **தருமனும் துரியோதனனும் மலைதல்.**

இகலி யுடையர்க ளனிக மெதிர்பொழு
திருக ணிலிமக னினியுயிர்
அகல்வ னிவனெனத் துணிபொ டெதிர்தலும்
அவனெ டறன்மக னணுகினுன்

உலக ரிமையவ ரலைகொள் சலதியும்

முரச மொடுமிப மலைவுற

சிலைபெய் கணைகளின் திசைகண் மறைபடத்

திறலொ டிருவரு மிகல்செய்தார்.

(இ-ள்) உபையர்கள் - இருதிறத்தவரும், இகலி - தம்முள் மாறுபட்டு, அனிகம் எதிர்பொழுது (தத்தம்) சேனைகளோடு எதிர்த்தபோது, இரு கண் இலி மகன் - இரண்டு கண்பார்வையுமில்லாத பிறவிக்குருடனுகிய திருதராட்டிரனின் பிள்ளையான துரியோதனன், இனி இவன் உயிர் அகல்வன் என - இனிமேல் இந்தத்துரோனன் [போரில்] உயிர் நீங்கப் பெறுவான் என்று, துணிபொடு எதிர்தலும் - துணிச்சலோடு எதிரிட்டுவரலும், அவனொடு - அந்தத் துரியோதனனேடு, அறன்மகன் - தருமபுத்திரன், அணுகினுன் - நெருங்கினுன் ; உலகர் - நிலவுலகத்தவரும், இமையவர் - தேவர்களும், அலை கொள் சலதியும் - அலைகளைக் கொண்டுள்ள கடலும், உரகமொடு - அட்ட நாகங்களோடு, இபம் - அட்டதிக்குயானைகளும், அலைவுற - வருந்தும்படி, சிலை பெய் கணைகளின் - வில்லினின்று சொரிந்த அம்புகளால், திசைகள் மறைபட - திக்குக்கள் மறையும்படி (உக்கிரமாக) இருவரும் - தருமனும் துரியோதனனும், இகல் செய்தார் - போரிட்டார்கள் ; (எ-று.)

விண்ணும்மண்ணும் கடலும் அட்டதிக்குக்களும் அலைவுறும்படி கணைகள்பெய்து இருவரும் வெகு உக்கிரமாகப் போரிட்டமை கூறிய படியென்க. கணைகளின், இன் - ஏதுப்பொருளது,

இதுமுதல் மூன்றுகவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும் ஏனைய நான்கும் விளச்சீர்களுமாகி வந்த எழுசீராசிரியச்சந்தவிருத்தங்கள். தனன தனதன தனன தனதன தனன தனதன தனதன என்றது சந்தக் குழிப்பு, (86)

87. துரியோதனன் கர்ணன் முதலியோர் தருமனுக்குத் தோற்றுப் போதல்.

தருமன் மகன்விடு கணையில் பரிகொடி

தனுவில் வலவனுந் தறிபட

உருவி கணைபுய மயர்வு குறுகிட

உரக முயரிய னிரிதர

பருதி மகன்முத லரச ரதுபொரு
படைசெய் தலரிமுன் னிருளென
முரச முயரிய வரசு கணைகளின்
முனைவிட் டுயிர்கொடு முறியவே.

(இ-ள்) தருமன் மகன் விடு கணையில் - தருமபுத்திரன் தொடுத்த அம்புகளால், பரி கொடி தனு வில் வலவனும் தறிபட - குதிரை கொடிவில்லும் தேர்ப்பாகனும் துண்டிக்கப்பட, கணை புயம் உருவி - அந்த அம்பு (மேலும்) தோள்களைத் துளைத்து, அயர்வு குறுகிட - தளர்ச்சியேற்பட, உரகம் உயரியன் - பாம்புக்கொடியைத்தூக்கிய துரியோதனன், இரிதர – சிதறியோட, (அதேசமயத்தில்) பருதிமகன் முதல் அரசர் - சூரிய புத்திரனாகிய கர்ணன் முதலாகிய மன்னர்கள், அது பொரு - அந்தத் துரியோதனன் தோற்றிரிந்ததைப் பொறுக்கமுடியாமல், படை செய்து - போரினைச்செய்து, அலரி முன் இருள் என - சூரியன் முன் இருட்டு இரிதல்போல, முரசம் உயரிய அரசு கணைகளின் - முரசவாத்தியத்தைப் படமெழுதிக் கொடியில்தூக்கிய தருமனின் அம்புகளால், முனைவிட்டு - போர்முனையை நீத்து, உயிர்கொடு முறிய - உயிரைக்கொண்டு பிழைத்து ஓடிப்போக; (எ. று.). "......சிலைமுனிசீறியெதிர்வர" என மேலைக்கவியில் இயையும்.

வலவனும் - உம்மைமுன்னரும் கூட்டப்பட்டது, தனுவில் - ஒருபொருட்பன்மொழி. இரிதர, தா - துணைவினை. படை - போர். அலரி - சூரியன் (பிங்கலந்தை). மூன்றுமடியில் உவமை – இருந்த விடம்தெரியாமல் ஒழித்தற்கு வந்தது. கணையில், கணைகளின் -, இல், இன் ஐந்தனுருபு ஏதுப்பொருளது. (87)

88. துரோணன் திட்டகேதுவைக்கொன்று வீமனோடு பொருதல்.

மீள சிலைமுனி சீறி யெதிர்வர
விறல்கொ டுருபதன் மகன்மகன்
ஆளி யெனவெகுண் டமர்செய் தவன்விடு
மம்பி லம்பர மடையகால்

காளை யொருபுடை சாடி பொருபடை
காலனெனவுல வளவிலவ்
வேளை நிகர்பவன் தேர்வி றுணிசெய
வேந்தொ டொருபதி னாயிரர்.

(இ-ள்) மீள - மறுபடியும், சிலைமுனி - வில்பிடித்த துரோணன், சீறி - கோபித்து, எதிர்வர - எதிர்த்துவர (அப்போது) விறல் கொடு துருபதன் மகன்மகன் - வலிமையோடு துருபதன் பேரனாகிய திட்டகேது, ஆளி என வெகுண்டு - சிங்கமென்னும்படி கோபித்து, அமர்செய்து - போரிட்டு, அவன் விடும் அம்பில் - அந்தத் துரோணன் விட்ட அம்பினால், அம்பரம் அடைய - (இறந்து) வீர சுவர்க்கம்சேர, (பிறகு) கால் காளை - வாயுபுத்திரனாகிய வீமன், ஒரு புடை சாடி - ஒரு பக்கத்தில் பகைவர்களையழித்து, பொரு படை காலன் என உலவு அளவில் - போரிடும்ஆயுதத்தையேந்திய யமன் என்னும்படி களமுழுதும் உலவிவருஞ்சமயத்தில், அ வேளை நிகர்பவன் - அந்த முருகக்கடவுளையொத்தவனாகிய துரோணன், தேர் வில் துணி செய - (அவ் வீமனது) தேரையும் வில்லையும் சிதைக்க, (அச்சமயம்) வேந்தொடு ஒரு பதினாயிரர் - துரியோதனராசனோடு பதினாயிரம்வீரர்கள்; (எ-று.) "வந்தார்கள்" எனவினைவருவித்து முடிக்க.

துருபதன்மகன் - திட்டத்துய்மன்; அவன் மகன் - திட்டகேது. இது ஸ்ரீவிஷ்ணுபுராணத்தால் விளங்கும். அம்பரமடைதல் - இறத்தல்; பிறிதினவிற்சி. கால் - காற்று, வாயு, காளை - மகனுக்கு உவமவாகுபெயர், ஆளியென, காலனென, என - உவமவுருபு, தேர்வில் - உம்மைத்தொகை. (88)

வேறு.

89. வீமன் செய்த போரில் பலரழிதல்-

மதாசலத்தான் மதாசலத்தை மான்றேரான்
மான்றேரை மாவான் மாவைப்
பதாதியராற் பதாதியரைப் பற்றியெற்றி
யளைமத்தாற் படல்போ லொன்னார்

நிதானமழி தரவுழக்கி நிருபனிளை
யோரிருவர் ஆவி நீக்கிச்
சதாகதிசேய் வெறுங்கரத்தாற் சமர்செய்போ
தனிகமுமே வென்ற தம்மா.

(இ-ள்) மதாசலத்தான் - யானையால், மதாசலத்தை - யானையை, மான்தேரான் - குதிரைபூட்டிய தேரால், மான்தேரை - குதிரை பூட்டியதேரை, மாவான்-குதிரையால், மாவை - குதிரையை, பதாதியால் - காலாட்படைஞரால், பதாதியரை-காலாட்படைஞரை, பற்றி-பிடித்திழுத்து, எற்றி-வீசியெறிந்து, மத்தால் அலைபடல்போல் மத்தினுல் தயிர் சிதறுதல்போல, ஒன்னுர் - பகைவர்களது, நிதானம் - படையை, அழிதர - சிதறி அழிந்து போகும்படி, உழக்கி - கலக்கி, நிருபன் - துரியோதனராசனது, இளையோர் இருவர் - தம்பியர் இருவரது, ஆவி நீக்கி - உயிரையொழித்து, சதாகதிசேய் - வாயுபுத்திரனுகிய வீமன், வெறும் கரத்தால் - தன்கைகளை மாத்திரம் கொண்டே, சமர் செய் போது - போரிடும் பொழுது, அனிகமும் - அவனதுசேனையும், வென்றது - ஜெயித்தது (என்னலாயிற்று); (எ.று.) அம்மா - வியப்பிடைச் சொல்- அசையுமாம்.

வெறும்கையினுலேவீமன் சமர்செய்துவென்றதால் ஏற்பட்ட வெற்றி, அவன் சேனைக்கும் அதுவென்றதுபோல் புகழளித்தது என்றபடி, மத அசலம்=மதாசலம்: மதம்பெருக்கும்மலை; எனவே யானை: தீர்க்கசந்தி. மான், ன் - சாரியை: 'ஆ மா கோ னவ்வணையவும்பெறுமே "என்பதுவிதி: (நன் : உருபு : 9) ஆள்- மூன்றனுருபு கருவிப்பொருளது, 'ஆயர் மத்தெறி தயிரினுயினுர்" என்றது சிந்தாமணியும் (கோவிந்தை: 13) நிதானம் - படை [திவாகரம்:] ஸதாகதி–எப்பொழுது சஞ்சரித்தலுடையவன்: வாயு இங்கே வீமனை "சதாகதிசேய்" என்ற பெயரால் கூறினது - பிதுச் சதகுணம் புத்ர: என்றவாறு தந்தையாகிய வாயுவினும் பலமடங்கு அதிகமாக விரைந்து நடந்து சமர்செய்யும் வல்லமை யுள்ளான் என்பதற்கு: கருத்துடையடைகொளி.

இதுமுதல் ஆறுகவிகள் - பெரும்பாலும் முதல்நான்குசீர்கள் காய்ச்சீர்களும் ஏனைய இரண்டும் மாச்சீர்களுமாகிவந்த அறுசீராசிரியவிருத்தங்கள். (89)

90. சோமதத்தன் சாத்தகியிடம் தோற்க, அசுவத்தாமன் போர்க்கு முனைதல்.

தனையனைச்செற் றிடுமிகலாற் சாத்தகிமேற்
சோமதத்தன் சமர்செய் தன்னேன்
புனைசிலைபெய் புங்கமதிற் பொன்றினன்போல்
அயர்ந்துவிழப் பொற்றேர்ப் பாகன்
அனையபொழு திரதமொடு அவன்றனைக்கொண்
டயலடைந்தா னணியோ டியாரும்
முனையழிந்து வென்னிட்டார் முனிமைந்தன்
உணர்ந்துருத்து முனைந்திட் டானே.

(இ-ள்) சோமதத்தன்—, தனையனை - தன் மகனுகிய பூரிசிரவசை, செற்றிடும் - அழித்திடும், இகலால் - பகைமையினுல், சாத்தகிமேல் சமர் செய்து - சாத்தகியோடு போரிட்டு, அன்னேன் - அந்தச் சாத்தகி, புனை சிலை பெய் புங்கமதில் - தரித்திருந்த வில்லினின்று எய்த அம்புகளால், பொன்றினன் போல் - இறந்தவன் போல, அயர்ந்து விழ - சோர்ந்து விழ, (அது கண்டு) பொன் தேர்ப்பாகன் - அழகிய (அவனது) தேரின் பாகன், அனைய பொழுது - அந்தச் சமயத்தில், இரதமொடு - [அவன் ஏறியிருந்த] தேரோடு, அவன் தனைக்கொண்டு - அவனை உடன்கொண்டு, அயல் அடைந்தான் - பக்கத்தில் போய்ச் சேர்ந்தான்: யாரும் - ஏனைய அனைவரும், அணியோடு - (தத்தம்) படைவகுப்புக்களோடு, முனை அழிந்து - போர்முனையில்நிற்கமாட்டாது, இட்டார் - முதுகிட்டனர்: (இதனை) முனி மைந்தன் - அசுவத்தாமன், உணர்ந்து - அறிந்து, உருத்து - கோபித்து, முனைந்திட்டான் - போர்க்கு வந்தான்; (எ.று)

போரிடும்போது தலைவனைச் சமயமறிந்து உயிர்காத்தல் அவனது தேர்ப்பாகன் கடமையாதலின், சோமதத்தனை அவனது தேர்ப்பாகன் உடன்கொண்டு அயலடைந்தான் என்றூர். வென் = வெந் : முதுகு. (90)

91. வீமனெடு போரிட்டுத்துரியோதனன் வலிகுன்றிமீள, அசுவத்தாமன் கடோற்கசன் மகனைக்கொல்லக் கடோற்கசன் பொங்கியெழுதல்.

அங்கவனே டிகல்புரிய வடல்வீம
னெதிர்ந்தளவி லரவ கேதன்
துங்கவயி லரசருடன் றுணையாகிச்
செருவில்வலி தோற்று மீண்டான்
பங்கமொடு மவணின்றான் பரித்தாமன்
அவனெடு படைசெய் தன்னேன்
புங்கமதிற் றன்மதலை பொன்றிடலாற்
கடோற்கசன் பொங்கி யேற்றான்.

(இ-ள்) அங்கு - அந்தப்போர்க்களத்தில், அவனேடு இகல்புரிய- அந்த அசுவத்தாமனேடு, போரிட, அடல் வீமன் - வலிய வீமசேனன், எதிர்ந்த அளவில் - எதிரிட்ட போது, அரவகேதன் - துரியோதனன், துங்கம் அயில் அரசர் உடன் துணையாகி - கூரிய வேல்படையையுடைய மன்னர்கள் தன்னுடன் துணையாகி வரவும், செருவில் வலி தோற்று - போரில் வலிமையிழந்து, மீண்டான் - திரும்பினன்: (அப்போது) பரித்தாமன் - அசுவத்தாமன், பங்கமொடு - நாணத்தோடு, அவண் நின்றான் - அம்முனையிடத்து நின்றான்: அவனெடு - அந்த அசுவத்தாமனேடு, படை செய்து - போரினைச்செய்து, அன்னேன் புங்கமதில் - அவனுடைய அம்பினல், தன் மதலை பொன்றிடலால் - தன்பிள்ளையாகிய அஞ்சநபத்மன் இறந்ததனல், கடோற்கசன்—, பொங்கி ஏற்றான் - சினந்து எழுந்தான்; (எ.று.)

அசுவத்தாமன் பங்கமொடு நின்றதற்குக் காரணம் - தன் அரசனாகிய துரியோதனன் வலி தோற்று மீண்டமையாலென்க. படை - போர், கடோற்கசன் மகன் பெயர் அஞ்சநபத்மன் என்பது.

(91)

92. கடோற்கசனை அசுவத்தாமன் அடித்து வீழ்த்துதல்.

எற்றிபல வரைகொணர்ந்தங் கிகல்செய்ய
கடோற்கசனவ் விவுளித் தாமன்
அற்றிடவங் கவைநூறி யங்கவனை
யொருகணையா லவனி வீழ்த்தான்
மற்றவனுந் தெளிந்தெழுந்து மற்றொருதேர்
புகுந்தெதிர்ந்து மலைதல் காணா
வெற்றிமுனி மகனவனை வென்னிடச்செய்
தரக்கர்படை வீட்டுங் காலை.

(இ-ள்) கடோற்கசன்—,பல வரை கொணர்ந்து எற்றி - பல மலைகளைக்கொண்டுவந்து வீசியெறிந்து, அங்கு - அவ்விடத்து, இகல் செய்ய - போரிட, அ இவுளித்தாமன் - அந்த அசுவத்தாமன், அங்கு - அவ்விடத்திலேயே, அவை நூறி - அந்த மலைகளைத் துகளாக்கி, (மேலும்) அங்கு - அங்கேயே, அவனை - அந்தக் கடோற்கசனை, ஒரு கணையால் - ஒரு பாணத்தால், அவனி வீழ்த்தான் - பூமியில் விழச்செய்தான். அவனும் - [வீழ்ந்த] கடோற்கசனும், தெளிந்து எழுந்து - கலக்கம் நீங்கியெழுந்து, மற்றொரு தேர் புகுந்து - இன்னொரு தேரின் மேலேறி, எதிர்ந்து - எதிரிட்டுவந்து, மலைதல் காணா - போரிடுதலைப் பார்த்து, வெற்றி முனிமகன் - வெற்றிகொள்ளும் துரோணனின் மகனாகிய அசுவத்தாமன், அவனை வென்னிடச்செய்து - அந்தக் கடோற்கசனை முதுகுகாட்டியோடச் செய்து, அரக்கர் படை - (அவனது) அரக்கச் சேனையை, வீட்டும் காலை - அழிக்கும் போது; (எ. று.) "சோமதத்தன் தெளிந்தெழுந்து" என மேலைக்கவியில் தொடரும்.

இவுளித்தாமன் - அசுவத்தாமனுக்குப் பரியாயப்பெயர். காணா- உடன்பாட்டெச்சம். (92)

93. சோமதத்தன் அயர்ந்துவிழ, அவன்தந்தைபாகிலீகன் இறந்துபட வீமன்போரிட்டு மேலும் துரியோதனன்தம்பியர் பதின்மரை மாய்த்தல்.

முன்னயர்ந்த சோமதத்தன் தெளிந்தெழுந்து
சாத்தகிமேன் முனைய வீமன்
அன்னவனை மீட்டிரதத் தயர்ந்திடச்செய்
தனனாற்று தவன்றன் தந்தை
பன்னுபெயர் வாகுலிகன் படைபுரிந்து
மாருதியாற் பட்டு வீழ்ந்தான்
மன்னிளைஞர் பதின்மரதற் காற்றுதுற்
றமரியற்றி மடிந்திட்டாரால்.

(இ-ள்) முன் அயர்ந்த சோமதத்தன் - முன்னர் சாத்தகியொடு செய்த போரில் தளர்ந்துபோன சோமதத்தன், தெளிந்து எழுந்து - தளர்ச்சி நீங்கியெழுந்து, சாத்தகிமேல் முனைய - சாத்தகி மீது போரிடவர, வீமன் —, அன்னவனை - அந்தச் சோமதத்தனை, மீட்டு - மறுபடியும், இரதத்து - (அவனது) தேரில், அயர்ந்திடச் செய்தனன் - தளர்ச்சியடையும்படி செய்தனன் : அவன் தன் தந்தை - அந்தச் சோமதத்தனின் பிதாவாகிய, பன்னு பெயர் வாகுலிகன் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற பாகிலீகன் என்பவன், ஆற்றுது - மனம் பொறுமல், படை புரிந்து - போரினைச் செய்து, மாருதியால் - வீமனால், பட்டு - இறந்து, வீழ்ந்தான் - தரையின்மேல் விழுந்தான் : அதற்கு ஆற்றுது - பாகிலீகன் இறந்ததற்கு மனம் பொறுமல், மன் இளைஞர் பதின்மர் - துரியோதனன் தம்பியர் பத்துப்பேர், உற்று - களத்திற்கு வந்து, அமர் இயற்றி - போர் செய்து, மடிந்திட்டார் - இறந்துபோயினர் ; (எ. று.) ஆல் - ஈற்றசை.

சோமதத்தன் தந்தை பாகிலீகன் எனப்படுவன்: இவன் குரு வமிசத்தவனான பிரதீபனுடைய புத்திரர் மூவருள் ஒருவன் : பாகிலீகன் என்பது வாகுலிகன் எனச் சிதைந்தது. அன்னவன் - குறிப்புவினையாலணையும்பெயர். (93)

94: அசுவத்தாமன் போரும், சூரியாஸ்தமனமும்.

தொடைக்குந்தி போசனருட் சுதரிருவோர்
அமரியற்றித் துரங்கத் தாமன்
விடுமம்பி லுயிரிழந்தார் விடாப்பகைகொல்
நரன்வலவன் விரகா லாழிப்
படையொடுங்கி மறைந்ததனுற் பழித்திடுநம்
மதலையெனப் பழிக்காற் ருன்போற்
குடதிசையின் றடங்கடலிற் குதித்திட்டான்
ஓராழிக் கொடிஞ்சித் தேரோன்.

(இ-ள்) தொடை - மாலையைத்தரித்த, குந்திபோசன் அருள் சுதர் இருவோர் - குந்திபோசராசன் பெற்ற புத்திரர் இரண்டுபேர், அமர் இயற்றி - போர் செய்து, துரங்கத்தாமன் - அசுவத்தாமன், விடும் அம்பில், - செலுத்திய அம்பினுல், உயிர் இழந்தார் - இறந்துபோயினர் : விடா(து) - தப்பாமல், பகை - (எதிர்த்த) பகைவனே, கொல் - கொல்லுகின்ற நரன் - அருச்சுனனது, வலவன் தேர்ப்பாகனுகிய கிருஷ்ணனது, விரகால் - சூழ்ச்சியினுல், ஆழிப் படை ஒடுங்கி மறைந்ததனுல்-அவனது சக்கராயுதத்துள் அடங்கித் தோன்ருதொழிந்ததால், நம் மதலை - நம் புத்திரனுகிய கர்ணன், பழித்திடும் - (நம்மை) நிந்திப்பான், என - என்று எண்ணி, பழிக்கு ஆற்ருன்போல் - (தனக்கு ஏற்பட்ட) அவமானத்தைப் பொறுக்க முடியாதவன் போல், குடதிசையின் - மேற்குத் திக்கின், தட கடலில்-பரந்த சமுத்திரத்தில், ஓர் ஆழி கொடிஞ்சித் தேரோன்- ஒற்றைச் சக்கரத்தையும் கொடிஞ்சியென்னும் உறுப்பிணையும் உடைய தேரைக்கொண்ட சூரியன், குதித்திட்டான் - மூழ்கி மறைந்திட்டான் : (எ. று.)

குந்திபோசன் - குந்தியின் வளர்த்த தந்தை. சூரியன் அத்தமித்தல் மேல்கடலில் மூழ்கி மறைதல் போலத் தோன்றுகிற இயல்பினிடத்து, அச் சூரியன் கிருஷ்ணனது கைச்சக்கரத்தினுள் அகப்பட்டு ஒடுங்கி மறைந்ததனுல் தன்பிள்ளை கர்ணன் பழித்திடுவனே என்று [மறைபட்ட] அவமானத்துக்கு ஆற்ருது நாணிக் கடலில் குதித்தானென்று கவி தானுக ஒரு காரணங் கற்பித்துக் கூறினமையால், ஏதுத்தற்குறிப்பேற்றவணி. துரங்கத் தாமன் - பரியாயப்பெயர். கொடிஞ்சி - கைக்குதவியாகத் தேர்த்

தட்டின் முன்னே நடப்பட்டுத் தாமரைப்பூ வடிவுள்ள அலங்கார உறுப்பு. விடா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். தடங்கடல்- உரிச்சொற்றொடர். "கொற்றவெய்யோன் ஓராழித் தேர்மறைத் தான்" என்றார் திவ்யகவியும் (அழகரந்தாதி: செ : 1) (94)

இனி, இராத்திரி யுத்தம்

வேறு.

95: துரியோதனன் தன்சேனைமுழுவதும் நிறைய விளக்கெடுப்பிக்க, தருமனும் அங்ஙனமே செய்தல்.

சுடர்மறைத்தங் கிருடோன்ற வசையா ஆண்மைச்
சுயோதனன்பற் குனன்பரித்தேர் தூண்டுஞ் (சூதன்
இடர்செய்தான் பகலையிர வாக்கி யானிவ்
விரவினையப் பகலாக்கி யிகல்செய் வேனென்
றடர்நிழலு மறத்தீப மெடுக்க வென்றே
அமர்க்கெழுந்தான் அவனைவ ரறிந்தீ தெங்கும்
துடர்விளக்க விளக்கிவுளி யானை தேர்கள்
தொறுமெடுத் திடவியங்க டொனிப்ப நின்றார்.

(இ. ள்.) சுடர் மறைத்து - சூரியனை (ஆழியால்) மறைத் தலால், அங்கு இருள் தோன்ற - அவ்விடத்து இருட்டு வர, அசையா ஆண்மை சுயோதனன் - சலித்தலில்லாத பராக்கிரம முள்ளவனான துரியோதனன், பற்குனன் - அருச்சுனனுடைய, பரித்தேர் தூண்டும் சூதன் - குதிரைகள் கட்டிய தேரினைச் செலுத்துகின்ற பாகனாகிய கிருஷ்ணன், பகலை இரவாக்கி - பகலிலே இரவை வரும்படி செய்து, இடர் செய்தான் - துன்பத்தை விளை வித்தான் : யான்-நான், (அதற்கு மாறாக) இ இரவினை அ பகலாக்கி - இந்த இராத்திரிப்பொழுதை அந்தப் பகற்பொழுது போல ஒளிபெற வாக்கி, இகல் செய்வேன் என்று - போரிடுவேன் என்று நிச்சயித்து, அடர் நிழலும் அற தீபம் எடுக்க - நெருங்கிய சாயையும் நீங்கும்படி (ஒரே வெளிச்சமாகவிருக்கும்படி) விளக்குகளை ஏற்றுவீராக, என்று - என்று கட்டளையிட்டு, அமர்க்கு எழுந்தான் - போருக்குப் புறப்பட்டான்: (அப்போது)

அவண் - அவ்விடத்து, ஐவர் ஈது அறிந்து - பஞ்சபாண்டவர் இதனைத் தெரிந்து, எங்கும்-எல்லாவிடங்களிலும், இவுளி யானை தேர்கள் தொறும் - குதிரை யானை தேர்கள் என்னும் இவற்றி லெல்லாம், துடர் விளக்கம் விளக்கு - சங்கிலிபோல் தொடர்ச்சியாக விளங்குகிற விளக்குக்களை, எடுத்திட - ஏற்றி வைக்கச் செய்து, இயங்கள் தொனிப்ப நின்றுர் - பலவகை வாச்சியங்களும் ஒலிக்கும்படி [போர்க்களத்துச்] சித்தமாய் நின்றுர் ; (எ. று.)

சயத்திரதனைக்கொல்லும்பொருட்டுக் கிருஷ்ணன் பகலில்இரவை வருவித்தபடியால் அதற்கு மாருகத் துரியோதனன் இரவிற் பகலை வரச் செய்தற்கு நினைத்து இருளென்பது சிறிது மில்லாதவாறு சாயைகூடத் தெரியாதபடி சுடர் விளக்கெடுக்க என்று கட்டளை யிட்டானென்க: **தற்குறிப்பேற்றவணி.** துடர் - சங்கிலி : (Chain)

இது முதல் இச்சருக்க முடியமளவும் பத்தொன்பது கவிகள்— பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர் களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (95)

96: இருதிறத்துவீரரும் தனித்தனி எதிர்த்துப்போர்தொடங்குதலைத் தெரிவிக்கும்.

இருதிறவர் படைகளெதிர்ந் திகல்செய் காலை
இணையறுபற் குனனுடன்போ ரியற்றிக் கன்னன்
வரிசிலைமான் றேரழிந்து வெட்கி வந்த
வழிமீண்டான் அறத்தின்மகன் மழைநேரேவாற்
கிருதவன்ம னுடற்சோரி யுகவென் றந்தான்
கேசரிபோ லாசிரியன் கிட்டிப் பற்பல்
செருவியற்றித் தருமனமர்க் குடைந்தான் வீமன்
சிலிமுகத்தா லரவுயர்த்தோன் திகைத்து மீண்டான்.

(இ-ள்) இருதிறவர் - இருதிறத்தவரும், படைகள் எதிர்ந்து - சேனைகள் எதிரிட்டு, இகல்செய் காலை - போரிடும் போது, இணை அறு - ஒப்பற்ற, பற்குனனுடன் - அருச்சுனனுடன், போர் இயற்றி - போரைச்செய்து, கன்னன் - கர்ணன், வரி சிலை மான்

தேர் அழிந்து - கட்டப்பட்ட வில்லும் குதிரையும் தேரும் சிதைந்து, வெட்கி - நாணமுற்று, வந்த வழி மீண்டான் - வந்த வழியே திரும்பினுன் : அறத்தின் மகன் - தருமபுத்திரன் (விடுத்த), மழை நேர் ஏவால் - மழைபோல் பொழிந்த அம்புகளால், கிருதவன்மன்—, அடிபட்டு, உடல் சோரி உக - தேகத்தினின்று இரத்தம் பெருக, வென் தந்தான் - முதுகு காட்டியோடினுன் : (பிறகு) ஆசிரியன் - துரோணன், கேசரி போல் கிட்டி - சிங்கம் போல நெருங்கி, பற்பல செரு இயற்றி - பலப்பல விதமான போர்த்திறங்களைச் செய்து, (இறுதியில்) தருமன் அமர்க்கு உடைந்தான் - தருமன் (தன்னோடு செய்த) போரினில் தோற்றுப் போனுன் : வீமன் சிலீ முகத்தால் - வீமசேனனுடைய அம்பினுல், அரவு உயர்த்தோன்- துரியோதனன், திகைத்து - மயங்கி, மீண்டான் - திரும்பினுன் ;

அருச்சுனனிடத்துக் கர்ணனும், தருமனிடத்துக் கிருதவர்மாவும், வீமனிடத்துத் துரியோதனனும் தோற்ருர்கள் என்றபடி. திறவர் - திறத்தவர் : அத்துச்சாரியை கெட்டு வந்தது. நேர் - உவமவுருபு. சிலீமுகம் - வடசொல் : கூர்மையுள்ள நுனியையுடையது என்பது பொருள். (96)

97: கர்ணனை மேலும் போரிடத் துரியோதனன் வேண்ட, தற்பெருமைபேசியகர்ணனைக் கிருபன் பரிகசித்தல்.

புறந்தந்த வரசிரவி மதலைபாற் போய்ப்
போற்றலரா ஞற்றுனை பொன்ரு துய்ய
மறந்தரும்போர் முனைபுகுந்தின் றளியென் ருேத
மற்றவனு மெனக்கெதிர்யார் மலைவோ ரைவர்
இறந்திடச்செற் றரசளிப்பேன் நினக்கின் றஞ்சேல்
இறைவவெனக் கிருபன்பொரு திகழும் நின் சொற்
குறைந்திடுமோ வென்றிடுவை யாம்போர் வென்ற
கொள்கையுணர் வோமெனவே கொதித்துக் கன்னன்.

(இ-ள்) புறம் தந்த - முதுகுகாட்டி வந்த, அரசு - துரியோதனராசன், இரவி மதலை பால் போய் - சூரிய புத்திரனை கர்ணனிடத்துச் சென்று, போற்றலரால் - பகைவர்களால், நால்

தானை - நான்கு படைகளும், பொன்றுது - இறந்து படாமல், உய்ய - பிழைக்குமாறு, மறம் தரும் போர்முனை புகுந்து - வீரஞ்செறியும் போரிடத்துச் சென்று, இன்று - இன்றைத்தினம், அளி - கருணை புரிவாய் என்று ஓத - என்று, சொல்லிவேண்ட, அவனும் - அந்தக்கர்ணனும், 'எனக்கு எதிர் மலைவோர் யார்? - எனக்கு எதிராக நின்று போரிடும் வீரர் யாவருளர்? (ஒருவருமிலர் : ஆகவே) இன்று - இன்றைய தினம், ஐவர் இறந்திடச் செற்று - பாண்டவர்கள் பொன்றும்படி கொன்று, நினக்கு அரசு அளிப்பேன் - உனக்கு அரசாட்சியைக் கொடுப்பேன், இறைவ! - மன்னனே! அஞ்சேல் - பயப்படாதே,' என - என்று (தன் புகழ்ச்சிதோன்றச்) சொல்ல, அதனைக்கேட்டு) கிருபன் - கிருபாசாரியன், பொருது - மனந்தாளாமல், இகழும் - இகழ்வானுயினன் : (எங்ஙனென்னில்) நின் சொல் குறைந்திடுமோ? - நீ கூறும் வார்த்தை பழுது படுவதுண்டோ? (கிடையாது : ஆகவே) வென்றிடுவை - (நிச்சயமாகச்) செயிப்பாய், யாம் - நாம் இருவரும், போர் வென்ற கொள்கை - யுத்தத்தில் செயித்த தன்மையினை, உணர்வோம் - (இன்று) அறியப் போகிறோம், என - என்று (குத்தலாகச்) சொல்ல, கன்னன் - கர்ணன், கொதித்து - சினந்து; (எ,று.) "நாத் துணிப்பன்" என மேலைக்கவியில் தொடரும்.

'உன்சொல் பழுதுபடும் : நீ தோற்பாய்: அதனைக் காணத்தான் போகிறோம்' என்று பிறகுறிப்புப் பொருள்படும்படி கிருபன் கூறிய திறம் பாராட்டத்தக்கது. போற்றலர் - பகைவர் : வினையாலணையும் பெயர். அளி - முன்னிலை வியங்கோள். அஞ்சேல் - முன்னிலை யேவல். இகழும் - செய்யுமென்முற்று. வென்றிடுவை - முன்னிலை வினைமுற்று. உணர்வோம் - தன்மைப் பன்மை. (97)

98. அசுவத்தாமன் கர்ணனைச் சீற, துரியோதனன் அவனையடக்க, கர்ணன் அருச்சுனனை யெதிர்த்துத் தோற்றல்.

பிறருரைக்கி னுத்துணிப்பன் குருக்க ளென்றிப்
பிழைபொறுத்தே னெனத்துரோணன் பிள்ளை சீறி
அறைகுவனிங் கமர்வெல்லா யென்னப் பல்கால்
யானுறுத்தேன் வென்றனையோ என்ன மன்னன்

மறையுணர்ந்த நீர்முனித னன்றே வெம்போர்
மலைந்தரசெற் களிமினென மறிப்பக் கன்னன்
செறியமர்வந் தியற்றிநரன் றொடையால் விற்றேர்
சிதைந்திடப்போய் மீண்டுபல்கால் செயித்தற்
கேற்றான்.

(இ-ள்) பிறர் உரைக்கின் – வேறு ஒருத்தர் சொல்லியிருந்தால், நா துணிப்பன் - அவரது நாக்கைத் துண்டித்திருப்பேன் : (நீர்) குருக்கள் என்று - ஆசிரியர் என்று கொண்டு, இ பிழை பொறுத்தேன் - இந்தத் தவற்றினைப் பொறுத்தேன் : என - என்று கூற, (அதனைக் கேட்ட) துரோணன் பிள்ளை - அசுவத்தாமன், சீறி - கோபித்து, அறைகுவன் - சொல்லலானான் : 'இங்கு - இப்போது, அமர் வெல்லாய் - (நீ) போரில் ஜெயிக்கமாட்டாய், என்ன - என்று, பல் கால் - பல தடவைகள், யான் உறுத்தேன் - நான் மனத்தழுந்தச் சொன்னேன் : வென்றனையோ - ஜெயித்தாயோ? (ஒரு தடவை கூட ஜெயிக்கவில்லை)', என்ன - என்று கூற, (அது கேட்டு) மன்னன் - துரியோதனன், 'மறை உணர்ந்த நீர் - வேதங்கள் தெரிந்துள்ள நீர், முனிதல் நன்றோ - கோபிப்பது தக்கதோ? (தக்க தன்று ; அதற்கு மாறாக) வெம் போர் மலைந்து - கொடிய போரினைச் செய்து, எற்கு - எனக்கு, அரசு அளிமின் - அரசாட்சியை நிலை பெறச் செய்யும்,' என - என்று வேண்ட, (அதனைக் கேட்ட) கன்னன் - கர்ணன், மறிப்ப - திரும்பவும், செறி அமர் வந்து இயற்றி - நெருங்கிய போரினை வந்து செய்து, நரன் தொடையால்- அருச்சுனனின் அம்புகளினால், வில் தேர் சிதைந்திட - (தனது) வில்லும் தேரும் அழிந்திட. போய் - திரும்பிச்சென்று, மீண்டு - மறுபடியும், பல்கால் - பல தடவைகள், செயித்தற்கு - வெற்றி பெறுவதற்கென, ஏற்றான் - எதிரிட்டு வந்தான்; (எ.று.)

உறுத்துதல் - மனத்தழுந்தச் செய்தல். வெல்லாய் - முன்னிலை யெதிர்மறை. முனிதல் - தொழிற்பெயர். அளிமின் - முன்னிலை வியங்கோள். மறித்தல் - திரும்பச் செய்தல். வில்தேர் - உம்மைத் தொகை. (98)

99. அசுவத்தாமனைப் போர் செய்யத் துரியோதனன் தூண்டுதல்.

இவ்வகையே யழிந்தழிந்தோ ரயில்விட் டந்த
விற்கயிறும் பொடிபடவென் னிட்டான்மன்னன்
அவ்வகைகண் டருச்சுனனோ டெதிர்ப்பான் சேறல்
ஆதிகுரு கண்டுரைப்ப அயத்தா மன்போய்

வெவ்விடமா சுணமுயர்த்தோய்!விசயன் வெம்போர்
வெல்லலரி திருந்துணர்யாம் வெல்வது என்ன
தெவ்வனிடத் தன்புந்தைக் குளதா னின்பாற்
சினம்பிறவா தெதிர்க்கினினைச்செயிர்ப்பர் யாரே

(இ-ள்) இ வகையே - இப்படியே, அழிந்து அழிந்து - தோற்றுப்போய் தோற்றுப்போய், ஓர் அயில் விட்டு - ஒரு கூரிய அம்பினைச் செலுத்தி, அந்த வில்கயிறும் பொடிபட - அந்த வில்லையும் கயிற்றையும் (அருச்சுனன் விடுத்த பாணத்தால்) துகளாகும்படி செய்ய, வென்னிட்டான் - புறமுதுகிட்டுத் திரும்பினன்: (அப்போது) மன்னன்-துரியோதனன், அ வகை கண்டு - அந்த வென்னிட்டதைக் கண்டு, அருச்சுனனோடு எதிர்ப்பான் - அருச்சுனனோடு பொரும் பொருட்டு, சேறல் - போதலை, ஆதி குரு கண்டு - கிருபாசாரியன் பார்த்து, உரைப்ப - சொல்ல, அயத்தாமன் - அசுவத்தாமன், போய் - சென்று, 'வெவ்விடம் மாசுணம் உயர்த்தோய்!- கொடிய விஷத்தைக் கொண்ட பாம்பினைக் கொடியாகத் துக்கிய துரியோதனனே! விசயன் - அருச்சுனனை, வெம்போர் வெல்லல்- கொடிய போரில் செயிப்பது, அரிது - இயலாதது: (ஆகவே) யாம் வெல்வது - நாம் ஜெயிப்பதை, இருந்து உணர் - பொறுமையாயிருந்து பார்ப்பாய், என்ன - என்று கூற, (அதற்குத் துரியோதனன்) உந்தைக்கு - உன் தந்தையாகிய துரோணனுக்கு. தெவ்வனிடத்து - பகைவனுகிய அருச்சுனனிடத்து, அன்பு உளதால் - விசுவாசம் இருப்பதால், நின்பால் - (அவர் மகனுகிய) உன்னிடத்தும், சினம் பிறவாது - (அந்த அருச்சுனன் மேல்) கோபம் வராது: (அப்படியின்றிக் கோபம் வந்து நீ) எதிர்க்கின் - எதிரிடுவாயானுல், நினை செயிர்ப்பர் யார்? - உன்னைப் போரிடுபவர் எவருளர்? (ஒருத்தருமில்லை); (எ.று) ஏ - ஈற்றசை.

அயில் - கூர்மை: அதனையுடைய அம்புக்காகியது: பண்பாகு பெயர். வில் கயிறும் - உம்மை முன்னரும் கூட்டுக. சேறல் - தொழிற்பெயர். எதிர்ப்பான் - பானீற்று வினையெச்சம். உந்தை - உன் தந்தையென்பதன் மரூஉ. 'தந்தையின் குணம் தனயனுக்குமுண்டு' என்றபடி. செயிர் - போர்: ''செயிர்மேற்கனல் விழிப்பச் சீறி'' (புற. வெ. 7, 4.) (99)

100: துரியோதனனுக்கு மேலும் அறிவூட்டி அசுவத்தாமன் போர்க்கு முனைதல்.

என்றரச னுரைப்பவயத் தாமன் கேட்டிவ்
விணையினரன் வன்மையுணர்ந் திடலா லெந்தை
வென்றிடுத லரிதென்ன வன்பா யுண்மை
விளம்புவனம் மொழியினைநீ வேருய்க் கொண்டாய்
வன்றிறலோ டெதிர்க்கினும்யா னவரை வெல்ல
வாய்ப்பதரி திம்முனைபார் மன்ன ! வென்று
சென்றுருமி ணெலிசெய் தனேகம் வாளி
செலுத்திபல ரிரியதிரட் சிதைத்திட் டானல்.

(இ-ள்) என்று அரசன் உரைப்ப - என்று துரியோதனன் சொல்ல, அயத்தாமன், கேட்டு - அசுவத்தாமன் செவியுற்று, 'இ இணைஇல் நரன் - இந்த ஒப்பற்ற அருச்சுனனது, வன்மை உணர்ந்திடலால் - வலிமையைத் தெரிந்திருத்தலால், எந்தை - என் தந்தையாகிய துரோணர், வென்றிடுதல் அரிது என்ன - (அந்த அருச்சுனனை) வெல்லுதலென்பது கடினம் என்று, அன்பாய் - (உன்னிடத்துக் கொண்ட) விசுவாசத்தோடு, உண்மை விளம்புவன் - மெய்ம்மையாகச் சொன்னுன்: நீ—, அ மொழியினை - அந்த வார்த்தையினை, வேருய் கொண்டாய் - எதிர்மாருகப் பொருள் வேறு கொண்டாய்: (அது போகட்டும்) யான் - நான், வன் திறலோடு எதிர்க்கினும் - வலியபராக்கிரமத்தோடு எதிர்த்துப் போரிட்டாலும், அவரை - அந்தப் பாண்டவரை, வெல்ல வாய்ப்பது - ஜெயிக்க ஏற்படுவதென்பது, அரிது - இயலாதது: (இருப்பினும்) 'மன்ன,- துரியோதனராசனே! இ முனை பார் - இந்தப் போரினைக் காண்பாய்' என்று - என்று கூறி, சென்று - (அருச்சுனன் மேற்) போய், உருமின் - இடிபோல, நாண் ஒலி செய்து - வில்லின் நாண் கயிற்றை டங்காரத் தொனி செய்து, அனேகம் வாளி - பல அம்புகளை, செலுத்தி - விடுத்து, பல இரிய - பலபேர்கள் சிதறியோட, திரள் - பகைவர் சேனைத் தொகுதியை, சிதைத்திட்டான் - அழியச் செய்தான்; (எ.று.) ஆல் - ஈற்றசை.

எந்தை - என் தந்தை என்பதன் மரூஉ. வாய்ப்பது - வினையாலணையும்பெயர். முனை - போர் : ''கடுநெறி முனையகன் பெரும் பாழ்'' (பதிற்றுப் : 25, 9). (100)

101: அசுவத்தாமன் பலரையும் வெல்லுதல்.

இரதமிப மயம்வீரர் மடிதற் காற்று
தெரிபிறந்தோன் முனிசுதனோ டியம்பியாண்மை
பொருதுநெடும் பொழுதிரத மிழந்தெய்த் தோடி
பொற்றேர்வே றேறியமர் பொருது மீட்டுங்
குருதியுகு வுடலயர்ந்து தேர்மேற் சாய்ந்தான்
கொதித்துமருத் துவர்மைந்தர் கொடும்போர் செய்யப்
பரிதிமுனம் பனியெனவங் கவரை யோட்டிப்
பரித்தாமன் பற்குனன்மேற் படைசெய் தானால்.

(இ-ள்) இரதம் இபம் அயம் வீரர் - ரதகஜதுரகபதாதிகள், மடிதற்கு ஆற்று - இறத்தற்குப் பொருது, எரி பிறந்தோன் - திட்டத்துய்மன், முனி சுதனோடு - அசுவத்தாமனோடு, ஆண்மை இயம்பி - வீர வார்த்தைகளைப் பேசி, நெடும் பொழுது பொருது - நீண்ட நேரம் சண்டையிட்டு, இரதம் இழந்து - தேரிழந்து - எய்த்து - இளைத்து, ஓடி —, பொன் தேர் வேறு ஏறி - அழகிய வேறொரு தேரின் மேலேறி, அமர் பொருது - போர் செய்து, மீட்டும் - மறுபடியும், குருதி உகு உடல் அயர்ந்து - இரத்தம் சொரியும்படி தேகந் தளர்ந்து, தேர்மேல் சாய்ந்தான் - தேரின்மேல் விழுந்தான்: (அதனைக்கண்டு) மருத்துவர் மைந்தர் கொதித்து - அசுவினி தேவர்களின் புத்திரர்களாகிய நகுலசகதேவர் கோபங்கொண்டு, கொடும் போர் செய்ய - உக்கிரமான போரைச் செய்ய, பரித்தாமன் - அசுவத்தாமன், அங்கு - அவ்விடத்து. அவரை - அந்த நகுலசக தேவரை, பரிதிமுனம் பனி என ஓட்டி - சூரியன் முன்பனியிரிவது போலச் சிதறவோட்டி, பற்குனன் மேல் - அருச்சுனன் மீது, படை செய்தான் - போரிட்டான்; (எ,று.) ஆல் - ஈற்றசை.

அசுவத்தாமன் திட்டத்துய்மனையும் நகுலசகதேவரையும் வென்றானென்றபடி, மருத்துவர் - தேவவைத்தியர் : அசுவினி தேவர்கள் இரண்டு பேர், பரிதிமுனம் பனியென - **உவமையணி** இரதமிபமயம் வீரர் - உம்மைத்தொகை. (101)

102. தருமன்படையினர் வெல்லுதல்.

சுதனுடன்போர் புரிநரன்மே லாசான் வெம்போர்
தொடங்கினன்சாத் தகிதன்மேற் சோம தத்தன்
விதியுந்த வந்தெதிர்ப்ப வவனை வீட்டி
மீட்டெதிர்ந்த பூரியையும் விண்ணா டுய்த்தான்
கதையவனுய்த் திடுங்கதையா லிரதம் வாசி
கயங்களழிந் தனபலர்விண் கலந்தார் பாருக்
கதிபரளப் பிலர்தருமன் கணையால் விற்றேர்
அழிந்துடனொந் திரிந்தனரங் கடிகள் கன்ற.

(இ-ள்) சுதனுடன் - மகனாகிய அசுவத்தாமனோடு, போர் புரி - சண்டைசெய்கின்ற, நரன் மேல் - அருச்சுனன்மீது, ஆசான் - துரோணன், வெம் போர் தொடங்கினன் - கொடிய போரைச் செய்ய ஆரம்பித்தான்: சோமதத்தன்—,சாத்தகி தன்மேல் - சாத்தகிமீது, விதி உந்த வந்தெதிர்ப்ப - ஊழ்வினைசெலுத்த எதிர்வந்துபோரிட, அவனை - அந்தச்சோமதத்தனை, வீட்டி - சாத்தகி கொன்று, மீட்டு- மறுபடியும் (இரண்டாம் முறையாக)எதிர்ந்த பூரியையும் - எதிரிட்ட பூரிசிரவாவையும், விண் நாடு உய்த்தான் - வானுலகஞ்செலுத்தினான் (கொன்றான் என்றபடி) : (இங்ஙனமாக)கதையவன்- வீமசேனன், உய்த்திடும் கதையால் - வீசுகின்ற கதாயுதத்தினால், இரதம் வாசி கயங்கள் அழிந்தன - தேர்கள் குதிரைகள் யானைகள் இறந்தொழிந்தன : பலர் விண் கலந்தார் - பலர் வான் புகுந்தனர் : அளப்பிலர் பாருக்கு அதிபர் - கணக்கிடமுடியாத புவிமன்னர்கள், தருமன் கணையால் - தருமபுத்திரன் விடுத்த அம்புகளால், வில்தேர் அழிந்து - வில்லும் தேரும் சிதைந்து, உடல் நொந்து - தேகம் வருந்தி, அங்கு- அப்போர்க்களத்தினின்று, அடிகள் கன்ற - பாதங்கள் சிவப்பேற, இரிந்தனர் - (கடுமையாகச்)சிதைந்தோடினர், (எ.று.)

துரோணன் அருச்சுனனோடு போரிட்டான்; சாத்தகிபோரிட்டுச் சோமதத்தனையும் அவன்மகன் பூரிசிரவாவையும் கொன்றான். வீமன் நாற்படைகளையும் சிதைத்தான் : தருமன் பகைமன்னர்களைப் புறங்காட்டியிரியும்படி ஓட்டினான் என்று கூறியவாறு. விண்நாடு உய்த்தல், விண் கலத்தல் -பிறிதினவிற்சி. கன்றுதல் - சிவப்பேறுதல். (102)

103: சல்லியனைச் சதானிகனும் அசுவத்தாமனைக் கடோற்கசனும் வெல்ல, கர்ணன் சகாதேவனைப் புறங்கண்டு போகவிடுதல்.

மத்திரனைச் சதானிகன்வென் கண்டா னாசான்
மகனிடும்பி மகனயிலால் வருந்தி மீண்டான்
மித்திரனந் தனனொடுவா ளமர்சா தேவன்
விளைத்திரதம் வில்லழிப்ப வெகுண்டங் கேசன்
கைத்தலவா டுணித்தவன்மீட் டெய்த வேலுங்
கதையையுமங் கழித்துப்பல கணைக ளாகந்
தைத்திடவுய்த் தயர்வொடுநின் றவனை வின்னாண்
தன்னிலிழுத் தன்னைவரந் தன்னை யுன்னி.

(இ-ள்) மத்திரனை - மத்திரநாட்டரசனான சல்லியனை, சதானிகன் - சதாநீகன், வென் கண்டான் - முதுகுகாட்டியோடச் செய்தான்: ஆசான், மகன் - துரோணாசாரியன் மகனாகிய அசுவத்தமான், இடும்பி மகன் அயிலால் - கடோற்கசன் விடுத்த வேலாயுதத்தால், வருந்தி மீண்டான் - வருத்தமுற்றுத் திரும்பினான்: மித்திரன் நந்தனனொடு - சூரியகுமாரனாகிய கர்ணனோடு, வாள் அமர் சாதேவன் விளைத்து - வாட்போரினைச் சகாதேவன் செய்து• இரதம் வில் அழிப்ப - அவனுடைய தேரினையும் வில்லினையும் சிதைக்க, அங்கேசன் வெகுண்டு - அங்கதேசாதிபதியாகிய கர்ணன் கோபித்து, கைத்தல வாள் துணித்து - சகாதேவன் கையிலிருந்த வாளினைத் துண்டித்து, அவன் மீட்டு எய்த - அந்தச்சகாதேவன் மறுபடியும் விடுத்த, வேலும் கதையையும் - வேலாயுதத்தையும் கதாயுதத்தையும், அங்கு அழித்து - அவ்விடத்திலேயே சிதைத்து, (மேலும்) பல கணைகள் (ஆகம்) தைத்திட உய்த்து - பல அம்புகளை (அவனது) உடம்பில் பொத்தும்படி செலுத்தி, அயர்வொடு நின்றவனை - சோகத்தோடு இருந்த சகாதேவனை, வில் நாண்தன்னில் இழுத்து - வில்லின் நாண்கயிற்றாலே பற்றியிழுத்து, (அவனைக்கொல்லாமல்) அன்னை வரம் தன்னை உன்னி - அன்னையாகிய குந்திதேவி தன்னிடம் கேட்டுப் பெற்ற வரத்தை நினைத்து, (எ-று) ... உயிரளித்தான் என மேலைக் கவியில் தொடரும்.

மித்திரன் - சூரியன். அங்க+ஈசன்=அங்கேசன் குணசந்தி. கைத்தலம் - இருபெயரொட்டு. நின்றவன் - வினையாலணையும் பெயர். அன்னைகேட்ட வரமாவது - அருச்சுனனைத் தவிர ஏனைய நால்வரையும் போரில் கொல்லக்கூடாது என்பது. (103)

104: கர்ணனும் திட்டத்துய்மனும் போரிடல்.

வல்லவரோ டெற்றிட நீ வலனோ பார்த்தன்
மருங்கெய்தென் றுயிரளித்தான் மடங்கி னானவ்
வெல்லைபல வரசருடன் றிட்டத்தூய்மன்
எய்தியம ருடற்றியின னீன்றோ னோடே
வெல்லவுட னுறுமரசர்க் கனிக மோடும்
வேந்தர்பல ருடைந்திறைபான் மேவக் கன்னன்
நில்லுமெனக் கையமைத்து தருமன் றானை
நிலைகுலைந்தெண் ணிலர்மடிய நெடும்போர்
செய்தான்.

(இ-ள்) வல்லவரோடு - (உன்னைக்காட்டிலும்) வலிமை மிகுந்தவரோடு, எற்றிட - போரிடுதற்கு, நீ - பாண்டவரில் (இளையவனான) நீ, வலனோ - பலமுள்ளவனோ? (இல்லை: ஆகவே) பார்த்தன் மருங்கு எய்து - அருச்சுனன்பக்கல் செல்வாய், என்று-என்று சொல்லி, உயிரளித்தான் - உயிரோடு போக விட்டான்: மடங்கினான் - சகாதேவனும் மீண்டான்: அ எல்லை - அந்தச் சமயத்தில், திட்டத்தூய்மன் - திருஷ்டத்யும்நன், பல அரசருடன் எய்தி - பல துணைவேந்தர்களுடன் வந்து, இனன் ஈன்றோனோடு-சூரியன் பெற்ற கர்ணனோடு, அமர் உடற்றி வெல்ல - போரைச் செய்து வெற்றிபெற, உடன் உறும் அரசர்க்கு - திருஷ்டத்யும் நனோடுவந்த துணைவேந்தர்கட்கு, வேந்தர்பலர் - கௌரவர்பக்கத்து மன்னர்கள் அநேகர், அனிகமோடும் - தத்தம் படைகளோடும், உடைந்து - தோற்றுமீண்டு, இறைபால் மேவ - துரியோதனராசனிடம் வர, (அதனைக்கண்டு) கன்னன் - கர்ணன், நில்லும் என கை அமைத்து - (அவர்களைப்பார்த்து) நில்லுங்கள் என்று கையால் சைகைகாட்டி, (பின்னர் தருமன் தானை - தருமனின்சேனை, நிலை குலைந்து - சிதறுண்டு, எண்ணிலர் மடிய - கணக்கற்றவர் இறந்து போக, நெடும்போர் செய்தான் - நீண்டபோரினை நிகழ்த்தினான்; (எ-று)

திட்டத்துய்மன் வென்றிச்சிறப்புக் கூறப்பட்டது. வல்லவர், ஈன்றேன், எண்ணிலர் - வினையாலணையும்பெயர்கள். எய்து, நில்லும் - முன்னிலையேவல். மடங்குதல் - மீளுதல். இனன் - சூரியன். வலனே, ஓ - வினு, எதிர்மறை. (104)

105: கர்ணனும் கடோற்கசனும் பொருதல்.

கன்னனிகுத் திடற்காற்ரு தறத்தின் மைந்தன்
கனன்றரியோ டுரைப்பவதைக் கனிட்டன் கேட்டங்
கன்னவனைத் துணிப்பன்றேர் கடவென் ருேத
அச்சுதன்மற் றவற்றடுத்தே யரக்கர்க் காண்மை
துன்னிரவி லதிகமென விடும்பி சேயைத்
தூண்டவவன் பலவரசர் சூழ வேகி
மன்னனிக மிகுத்துதயன் மகனே டேற்ருன்
மற்றவனு மிவன்சிலையை மண்ணில் வீழ்த்தான்.

(இ-ள்) கன்னன் இகுத்திடற்கு ஆற்ருது - கர்ணன் [தன் படைகளை] அழித்திடுதலுக்குந் தாங்கமுடியாமல், அறத்தின் மைந்தன் - தருமபுத்திரன், கனன்று - கோபித்து, அரியோடு உரைப்ப - கிருஷ்ணனிடம் சொல்ல, அதை - அவன் சொல்லியதை, கனிட்டன் - தம்பியாகிய அருச்சுனன், கேட்டு - செவியேற்று, அங்கு - அவ்விடத்து (அப்போதே) அன்னவனை - அந்தக் கர்ணனை, துணிப்பன் - வெட்டிடுவேன்; தேர் கடவு - தேரினைச்செலுத்துவாய், என்று ஓத - என்று சொல்ல, அச்சுதன் - கிருஷ்ணன், அவன் தடுத்து - அவ் அருச்சுனனை நிறுத்தி, 'அரக்கர்க்கு - இராக்கதர்களுக்கு, ஆண்மை - பராக்கிரமம், துன் இரவில் அதிகம் என - நெருங்கிய இருட்டில் அதிகமடங்குபெருகும்' என்று கூறி, இடும்பி சேயை - கடோற்கசனை, தூண்ட - அனுப்ப, அவன் - அந்தக் கடோற்கசன், பல அரசர் சூழ ஏகி - பல மன்னர்கள் தனக்குதவியாகச் சூழ்ந்து வரப் போய், மன் அனிகம் இகுத்து - துரியோதனன் படைகளையழித்து, உதயன் மகனேடு - சூரியகுமாரனுன கர்ணனேடு, ஏற்ருன் - போரிடலானுன்: அவனும் - அந்தக் கர்ணனும், இவன் சிலையை - இவனுடைய வில்லை, மண்ணில் வீழ்த்தான் - தரையில் அறுத்துத் தள்ளினுன்; (எ-று)

நிசாசரர் ஆதலின் அரக்கர்க்கு நடுநிசியில் பலமதிகமாகும் என்பர். துணிப்பன் - தன்மையொருமை. கடவு-முன்னிலையேவல் (105)

106: கடோற்கசன் அலம்புதனைக் கொல்லுதல்.

வில்லுகவோர் கதைகொடினன் மகனை யோட்டி
மேவுகடோற் கசன்மிசைப்போய் வெகுண்டு பாய்ந்து
கல்லுறழ்தோ ளலம்புதன்வெஞ் சமர்செய் தேதி
களையிழந்து மல்லமர்செய் காலை வீமன்
செல்வனவ னடிபிடித்துக் கிழித்துச் சென்னி
திருகியொடித் தச்சிரத்தை யெறிந்திவ் வண்ணங்
கொல்வனினன் சுதனையுமென் றார்த்தான் தானை
குலைந்திரிந்த வதிசயித்தான் குருகுலேசன்.

(இ-ள்) வில் உக - தனது வில் வீழ்த்தப்பட, [அதற்கு மாறாக] ஓர் கதைகொடு - ஒரு கதாயுதத்தைக்கொண்டு, இனன் மகனை - கர்ணனை, ஓட்டி- துரத்தி, மேவு - மேலும் வருகின்ற, கடோற்கசன்மிசை - கடோற்கசன்மேல், கல் உறழ் தோள் அலம்புதன், - மலையையொத்த தோளையுடைய அலம்புசன், போய்-சென்று, வெகுண்டு - கோபித்து, பாய்ந்து - விரைந்து தாவி, வெஞ்சமர் செய்து - கொடிய போரினைச் செய்து, ஏதிகளை இழந்து -ஆயுதங்களையிழந்து, (பின்னர்) மல் அமர் செய் காலை - மல்யுத்தஞ் செய்தபோது, வீமன் செல்வன் - வீமனது மகனாகிய கடோற்கசன், அடி பிடித்து கிழித்து - அவனது கால்களைப்பற்றி உடலைக் கிழித்து, சென்னி திருகி ஒடித்து - இவனது தலையைத் திருகி முறுக்கி வேருக்கி, அ சிரத்தை - அந்தத் தலையை, எறிந்து - வீசி இனன் சுதனையும் -கர்ணனையும் இ வண்ணம் - இந்தப்படியே, கொல்வன் - கொன்றுபோடுவேன், என்று - என்று வீரம்பேசி, ஆர்த்தான் - ஆரவாரித்தான் : (அப்போது) தானை - சேனைகள் குலைந்து இரிந்த - நிலைகெட்டு ஓடின : (இதனைக்கண்டு) குருகுலேசன் - துரியோதனராசன், அதிசயித்தான் - ஆச்சர்யமுற்றான் ; (எ-று)

கடோற்கசன் அலம்புசன் தலையைக்கிள்ளியெறிந்த ஆற்றலைக் கண்டும், தன்படைகள் இரிந்தது கண்டும் துரியோதனன் அதிசயித்தான் என்றபடி. உறழ் - உவமவுருபு. கல் - மலைக்கு இலக்கணை. ஏதி - ஆயுதம், படைக்கலம். (106)

107: அலாயுதன்வந்து வீமனோடு பொருதல்.

அக்கணமி ராக்கதர்நூ றயுத ரோடும்
அலாயுதன்வந் தரசடிதாழ்ந் தைவர் தம்மை
இக்கணஞ்செற் றரசீவ னென்றே யாண்மை
யிசைத்தேகி நரனொடெதிர்த் திளைத்து வீமன்
பக்கமடுத் தனேகவிதச் சமர்செய் தெய்யும்
படையிரத மிழந்தடுக்கல் பலகொண் டோச்சிக்
கொக்கரித்தான் அவைகள்பொடி படவே தண்டங்
கொண்டடித்தான் விண்டளித்த குமர னம்மா.

(இ-ள்) அ கணம் - அந்தச் சமயத்தில், இராக்கதர் நூறு ஆயுத ரோடும் - பத்து லட்சம் அரக்கரோடும், அலாயுதன் வந்து —, அரசு தாழ்ந்து - துரியோதனன் காலிற்பணிந்து, 'ஐவர் தம்மை - பாண் டவர்களை, இ கணம் செற்று - இந்த க்ஷணத்திற்கொன்று, அரசு ஈவன் -உமக்கு அரசாட்சி நிலையுறக் கொடுப்பேன், என்று ஆண்மை இசைத்து - என்று வீரம் பேசி, ஏகி - களஞ்சென்று, நரனொடு எதிர்த்து - அருச்சுனனோடு போரிட்டு, இளைத்து - சோர்வடைந்து, வீமன் பக்கம் அடுத்து - (அருச்சுனனை விட்டு) வீமன்மேல் நெருங்கி வந்து, அநேக விதம் சமர் செய்து - பல விதமான போர்த்திறங்களைக் காட்டிச் செய்து, (பின்னர்) எய்யும் படை - செலுத்தும் படைக்கலங் கள், இரதம் - தேர், இழந்து - இவற்றைத் தோற்றுக் கைவிட்டு, அடுக்கல் பல கொண்டு ஓச்சி - குன்றுகள் பலவற்றைக் கொண்டு வீசி, கொக்கரித்தான் - ஆரவாரித்தான் : (அப்போது) விண்டு அளித்த குமரன் - வாயு பெற்ற மகனாகிய வீமன், அவைகள் - அக் குன்றுகள், பொடி பட - தூளாகும்படி, தண்டம் கொண்டு - கதாயுதத்தைக் கொண்டு, அடித்தான் - மோதினான் (எ.று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

அலாயுதன் என்னும் அரக்கன் தன் பெரும்படையுடன் வந்து வீமனொடு போரிட்டுத் தோற்றான் என்றபடி. அயுதம் - பத்தாயிரம். ஐவர் - தொகைக்குறிப்பு. ஈவன் - தன்மையொருமை. ஆண்மை - பண்பாகுபெயர். அடுக்கல் - கற்பாறைகள் எனினுமாம். விண்டு - வாயு. (107)

108: வீமனைவிடுத்து அலாயுதன் கடோற்கசனோடு பொருதல்.

அனையபொழு தயத்தாமன் பொன்ற னென்ன
அயில்விடுத்த கடோற்கசனவ் வமர்விட்டத்தன்
முனையணுகி யிவனுயிர்மாற் றுவனென் றேற்றான்
முனிந்தவலா யுதனுமெதிர் முனைந்தான் நாட்டங்
கனலுகவிண் ணவரஞ்ச வுயிர்க ளெஞ்சக்
கனமெனவார்த் திதழதுக்கிக் கைவில் வாள்வே
லினுமமர்செய் திருவோரு மிணையா ரென்ன
இகலிமற்போர் விதமெல்லா மியற்று மேல்வை.

(இ-ள்) அனைய பொழுது - அந்தச் சமயத்தில், அயத்தாமன், அசுவத்தாமன், பொன்றான் என்ன - இறந்தான் என்னும்படி- அயில் விடுத்த கடோற்கசன் - வேலெறிந்த கடோற்கசன், அ அமர் விட்டு - அசுவத்தாமனோடு செய்த அந்தப் போரினை நீத்து, அத்தன் முனை அணுகி - தந்தையாகிய வீமனிருக்கும் களம் குறுகி, 'இவன் - இந்த அலாயுதனை, உயிர் மாற்றுவன்' - உயிர் போக்குவேன்; என்று ஏற்றான் - [என்று [ஆண்மை பேசி] எதிரிட்டான்: முனிந்த அலாயுதனும் - கோபித்த அலாயுதனும், எதிர் முனைந்தான் - எதிரிட்டு வந்தான்: இருவோரும் - கடோற்சன் அலாயுதன் ஆகிய இருவரும், நாட்டம் கனல் உக - கண்களில் தீப்பொறி பறக்க, விண்ணவர் அஞ்ச - தேவர்கள் பயப்பட, உயிர்கள் எஞ்ச - பிராணிகள் இறக்க, கனம் என ஆர்த்து - மேகத்தின் இடியெனப் பேரொலி செய்து, இதழ் அதுக்கி - உதடுகளைக் கடித்துக்கொண்டு, கை வில் வாள் வேலினும், - கையிற்பிடித்த வில்லினாலும் வாளினாலும் வேலினாலும், அமர்செய்து - போரிட்டு, இணை யார் என்ன - நமக்கு ஒப்பாவர் யாவர் (ஒருவருமிலர்) என்று சொல்லுமாறு, இகலி - (தம்முள்) மாறுபட்டு, மற்போர் விதம் எல்லாம் இயற்றும் ஏல்வை - மல்யுத்தத்தின் திறங்களை யெல்லாம் காட்டிப்போரிடும் சமயத்தில்; (எ-று.) "வீழ்த்து" என மேலைக்கவியில் தொடரும்.

ஈற்றிரண்டடிகளில் கடோற்கசனும் அலாயுதனும் சரிசமானமாகப் பொருதார் என்பது பெறவைக்கப்பட்டது. உக, அஞ்ச, எஞ்ச, ஆர்த்து, அதுக்கி, அமர்செய்து இகலி, இயற்றும் ஏல்வை

என இயையும். கனம் - மேகம்: இடியைக்காட்டியது, இதழ துக்குதல் - சினக்குறி, பொன்றுன் - காலவழுவமைதி. மாற்றுவன் - தன்மையொருமை, வில் வாள் வேலினும் - உம்மை கூட்டப்பட்டது. மற்போர் - ஆயுதமின்றி உடல் வலிமையாற் செய்யும் போர். (108)

109: கடோற்கசன் பலவுருவங்கொண்டு பொருது பலவகை மாயை புரிதல்.

மீதலமவ் வலாயுதன்புக் கிடவீழ்த் தாங்கு
 மேவரக்கர் படைமுழுதும் வீட்டி வீமன்
காதலனங் கொருகோடி யுருவங் கொண்டு
 காவலன்வா கினிகளைமற் கடங்கைக் கொண்ட
தாதலங்கற் போற்கலக்கி வாயு தேயு
 சலதிமுகி லிருளசலந் தானாய்த் தோன்றிப்
பூதலத்தோர் மதிமயங்க வனேக மாய்கை
 புரிந்தனன்வல் லபமும்பர் புகழ்ந்து வாழ்த்த.

(இ-ள்) மீ தலம் - வானுலகத்துக்கு, அ அலாயுதன் - அந்த அலாயுதன், புக்கிட - சேரும்படி, வீழ்த்து - கொன்று, ஆங்கு - அப்போது, மேவு அரக்கர் படை முழுதும் - மேல் வந்த அரக்கர் சேனை முழுவதையும், வீட்டி - அழித்து, வீமன் காதலன் - கடோற்கசன், அங்கு ஒரு கோடி உருவம் கொண்டு - அவ்விடத்து மிகப்பலவான வடிவங்கொண்டு, காவலன் வாகினிகளை - துரியோதனன் சேனைகளை, மற்கடம் கைக்கொண்ட தாது அலங்கல் போல் - குரங்கு கையில் கொண்ட தேனையுடைய பூமாலை போல், கலக்கி - நிலைகலங்கச் செய்து, (மேலும்) வாயு - காற்று, தேயு - அக்னி, சலதி - கடல், முகில் - மேகம், இருள் - , அசலம் - குன்று, (இவற்றின் வடிவத்தில்) தானாய் தோன்றி - தானொருத்தனாகவே தோன்றி, பூதலத்தோர் - நில வுலகத்தோர், மதிமயங்க - புத்தி கலங்கும்படியும், உம்பர் - தேவர்கள், வல்லபம் - (இவனது) திறமையை, புகழ்ந்து வாழ்த்த - பாராட்டி வாழ்த்தும்படியும், அநேக மாய்கை புரிந்தனன் - பல மாயைகளைச் செய்தான்; (எ,று)

கோடியென்றது - மிகப்பல என அறிவித்தற்கு, மற்கடம் = மர்க்கடம்: குரங்கு, மர்க்கடங்கைக்கொண்ட அலங்கல் - உலக

நவிற்சியணி, வாயுதேயுசலதிமுகிலிருளசலம் - உம்மைத்தொகை. மாய்கை - மாயை, உம்பர் - மேலிடம்: அங்குள்ள தேவர்க்கு இடவாகுபெயர். தாது - தேன்: 'தாதுசேர்கழுநீர்'' (சிலப்: 13,119) (109)

11. கடோற்கசனை வேலினாற்கொல்லும்படி துரியோதனன் கர்ணனோடுகூறல்.

வடவையனற் படும்புழுப்போன் மடியத் தானை
மனத்தாற்ரு தங்கேசன் மருங்குற் றியார்க்கும்
முடிவணங்கான் கடோற்கசனை வலாரி தந்த
முனைவேல்விட் டடுதியென மொழிய மற்ருேன்
சுடருதிக்கி லிவனையொரு கணையாற் கொல்வன்
சுடர்வேல்பார்த் தனுக்கென்னத் தோன்றற் கங்குல்
விடியுமள விருந்திடில்யாம் விசயன் றன்னை
வீட்டுவம்வீட் டிவனையிங்கவ் வேல்விட் டென்ருன்.

(இ-ள்) வடவை அனல் படும் புழுப்போல் - வடவைத்தீயில் விழுந்துஇறக்கும் புழுப்போலேதுடித்து, தானை மடிய - சேனைகள் இறந்துபோக, மனத்தாற்ருது - மனம்பொருமல், யார்க்கும் முடி வணங்கான் - எவர்க்கும் தலைவணங்காத துரியோதனன், அங்கேசன் - கர்ணன், மருங்குற்று - பக்கத்தையடைந்து, (அந்தக்கர்ணனை நோக்கி) கடோற்கசனை -, வலாரி - இந்திரன், தந்த --கொடுத்த, முனை வேல் விட்டு - கூரிய வேலாயுதத்தைச்செலுத்தி, அடுதி - கொல்வாயாக, என - என்று; மொழிய - சொல்ல (அதற்கு) 'மற்ருேன்-கர்ணன்', சுடர் உதிக்கில் - சூரியன் தோன்றின், இவனை, (அரக்கனுகிய) இந்தக் 'கடோற்கசனை, ஒரு கணையால் - ஒரே அம்பினுல், கொல்வேன் -; (ஆகையால்) சுடர் வேல் - ஒளிவிடும் இந்த வேலாயுதமானது, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்காக (வைத்திருக்கிறேன்)' என்ன - என்று கூற, (அதற்குத்) தோன்றல் - துரியோதனன், யாம் - நாம் அனைவரும், கங்குல் விடியும் அளவு இருந்திடில் - இரவு போய்ப் பொழுது விடியும் வரையில் உயிரோடிருப்போமாயின், (அப்போது) விசயன் தன்னை - அருச்சுனனை, வீட்டுவம் - நாம் கொல்லுவோம்: இங்கு - இப்போது, அ வேல் விட்டு - (இந்திரன் கொடுத்த) அந்த வேலினைச் செலுத்தி, இவனை வீட்டு-இந்தக் கடோற்கசனை வீழ்த்துவாய், என்ருன் - என்று கூறினுன்; (எ.று)

இந்திரன் கிழமுனிவன் வடிவங்கொண்டு சென்று கர்ணனை யிரந்து அவனது கவச குண்டலங்களைப் பெற்றவுடன் சிறந்ததொரு வேற்படையை அவனுக்குக் கைம்மாருகத் தந்தனனென்பது கீழ் ஆரணியப் பருவத்து 'கன்னனது கவசகுண்டலம்கவர்ந்த சருக்கம்' செய்யுள் 6 - இல் கூறப்பட்டுள்ளது அறிக, அந்த வேலினைக் கொண்டு அருச்சுனனைக்கொல்லவேண்டுமென்றுகர்ணன் வைத் திருந்தனனுதலின், இப்போது அதனைக்கொண்டு கடோற்கசனைக் கொல்லேனென்று மறுத்தனென்க. கடோற்கசனது மாயப்போர் பகலில் அங்ஙனஞ் செல்லாது எனக்கொண்டு 'சுடருதிக்கில் இவனையொரு கணையாற்கொல்வன்' என்ருன். வடவையனல் - கடலினிடையே பெண்குதிரையொன்றின் முகத்திலுள்ளதும், மழை முதலியவற்ருல் வருகிற நீரினுல் கடல் பொங்காதபடி அந்நீரை உறிஞ்சுவதும், யுகாந்தகாலத்தில் அங்குநின்று எழுந்து உலகங் களையொழிப்பதுமாகிய தீ : படபா - பெண்குதிரை: அது வடவை யென வந்தது. வலாரி - இந்திரன்: பலாரியென்றவடசொல்திரிந்தது, வலனை இந்திரன்வென்ற கதை பின்வருமாறு :— சிவபெருமானைக் குறித்து அரியதவஞ்செய்து போரில் யாவரையும் வெல்லும் ஆற்றலையும், தரன் இறப்பின் தன்னுடைய உடம்பிலுள்ள தாதுக் கள் நவரத்தினமாதல்வேண்டுமென்பதையும் வரமாகப்பெற்ற பலாசுரனென்பவன், இந்திரனைப் போருக்கு அழைக்க இரு வர்க்கும் பெரும்போர் நிகழ்ந்தது: அப்போரில் முன் நிற்கமாட்டாது தோற்ற இந்திரன் பின்பு அவனை வஞ்சனையால் வெல்லக் கருதிச்சென்று புகழ்ந்து குறையிரந்து வேண்டி யாகபசுவாக வரித்து உடன்பட்டுவந்த அவனை யூபஸ்தம்பத்திற்கட்டிக் கொன்ருன் என்பது கதை.

"இப்போது இவ்வேலினுல் கடோற்கசனைக் கொல்வாய்: காலைவரையில் எம்மையும் எமதுசேனையையும் பிழைப்பித்தால், பின்பு அருச்சுனனை வேறு வகையாற் கொல்லலாம்" என்று கூறித் துரியோதனன் கர்ணனை நிர்ப்பந்தித்தான் என்க. 'விடியுமள விருந்திடில்' என்றதால் இன்றிரவே அனைவரும் ஒழிந்துபோவோம் என்ற குறிப்பினது. முதலடியில் உவமையணி : துடித்து உருத் தெரியாமற் போவதற்கு உவமை. துரியோதனனுக்கு "வணங்கா முடி மன்னன் "என்ருேர் பெயருண்டு. அடுதி, வீட்டு - முன்னிலை யேவல். கொல்வன் - தன்மையொருமை. பார்த்தனுக்கு - நான்கனு ருபு தகுதிப்பொருளது. வீட்டுவம் - உளப்பாட்டுத்தன்மைப்பன்மை. (110)

111: கடோற்கசன் இறக்க, கிருஷ்ணன் பாண்டவர்க்குச் சமாதானங் கூறல்.

தேசிரவி மகனிசைவுற் றெயவேல் வீமன்
செல்வனுரம் பிளந்துயிர்விண் சேர்த்தி மீண்டு
வாசவன்பா லடைந்ததொன்னூர் மகிழ்ந்தா ரைவர்
மகன்படுதற் கிரங்கவரி வடிவங் கொய்தன்
ருசுகுண்ட லங்களளித்தங்கர் கோமான்
அமரேச னிடத்திற்கொண் டருள்வே லவ்வேல்
வீசியிவன் றனைக்கொல்லா விடிலிப் பார்த்தன்
வீவனெனப் புகன்றவர்கண் மெலிவு தீர்த்தான்.

(இ-ள்) தேசு இரவிமகன் இசைவு உற்று -ஒளி பொருந்திய சூரியனின் குமாரனாகிய கர்ணன் மனமொப்பி, வேல் எய - வேலைச் செலுத்த, (அது) வீமன் செல்வன் - வீமசேனனது மகனாகிய கடோற்கசனின், உரம் பிளந்து - மார்பினைப் பிளந்து, உயிர் விண் சேர்த்தி - அவனுயிரை வானுலகு சேர வைத்து (கொன்று என்றபடி) மீண்டு - திரும்பவும், வாசவன்பால் - (தனக்குரியவனான) இந்திரன்பக்கல், அடைந்தது - வந்து சேர்ந்தது : ஒன்னார் - பகைவராகிய கௌரவர்கள், மகிழ்ந்தார் - களித்தார்கள்: ஐவர் - பாண்டவர்கள், மகன் படுதற்கு இரங்க - தமது பிள்ளை கடோற்கசன் இறந்ததற்கு வருந்த, அரி - கிருஷ்ணன், 'அன்று - தான் தூது சென்ற அப்போது, அங்கர் கோமான் - கர்ணன், வடிவம் கொய்து - தன் உடலுறுப்புக்களையறுத்து, ஆசு - கவசத்தையும், குண்டலங்கள் - (காதில் அணிந்திருந்த) குண்டலங்களையும், அளித்து - கொடுத்து, (அவற்றிற்குக் கைம்மாறாக) அமரேசனிடத்தில் - இந்திரனிடத்தில், கொண்டருள் - (அவன் கொடுக்கப்) பெற்ற, வேல் - வேலாகும் (அது) : அ வேல் வீசி - அந்த வேலை வீசியெறிந்து, இவன் தனைக் கொல்லாவிடில் - இந்தக் கடோற்கசனைக் கொல்லாமலிருந்தால், இ பார்த்தன் வீவன் - (அந்த வேலால்) இந்த அருச்சுனன் (நிச்சயம்) இறந்துபடுவான், என புகன்று - என்று உண்மை சொல்லித்தெளிவித்து, அவர்கள் மெலிவு தீர்த்தான் - அந்தப்பாண்டவர்களது துயரத்தைப்போக்கினான் ; (எ.று)

அருச்சுனன் நாகாஸ்திரத்துக்குத் தப்பியுய்வனுயின், அப்போது அவன்மேல் இந்தவேலைக் கர்ணன் எறிவானுனுல் அவன் தவருது இறந்திடுவனுதலால், அங்ஙனஞ்செய்யாமல் இப்பொழுதே போக்கி யமைபற்றி, உமக்குக் கர்ணன் நன்மைசெய்தான் என்று சொல்லித் தெளிவித்துப் பாண்டவரை யாற்றுவித்தான் கிருஷ்ணன் என்க. எய - எய்ய என்பதன் குறுக்கல். ஆசு- கவசம் : Armour (திவாகரம்) (111)

112. துரோணன் பல அரசரோடு விராடனையும் துருபதனையும் தலைதுணிக்க, திட்டத்துய்மன் 'மறுநாள் துரோணனைக் கொல் வேன்' என்ன, அருச்சுனன் துரோணனை வெல்லுதல்.

அரவுயர்த்தோ னேவலினிற் ருனை சூழ
ஆரியன்புக் கனேகரிகுத் தமரி னேற்ற
விராடன்றுரு பதன்சிரங்கொய் திட்டான் மைந்தன்
வேந்தனையெந் தையையென்முன் வீழ்த்த நின்னை
இராவிடியின் நின்மகன்மு னடுத றிண்ணம்
என்றுரைத்தான் மாதுலனுக் கிரங்கிப் பார்த்தன்
புராந்தகன்போல் வெகுண்டெட்டற்ரு ரியன் வெந் காட்டப்
பொழிந்தனனு சுசுமும்பர் புகழ வம்மா.

(இ.ள்) அரவுயர்த்தோன் ஏவலினில் - துரியோதனனின் கட்டளையினுல், தானை சூழ - படைகள் சூழ்ந்துவர, ஆரியன் - துரோணுசாரியன், புக்கு - போர்க்களம் புகுந்து, அமரின் அனேகர் இகுத்து - (செய்த) போரில்பல பேரைக்கொன்று,ஏற்ற - விண்ணிலேறச் செய்து, (பின்னர்)விராடன் துருபதன்சிரம் கொய்திட்டான் - விராடராசனையும் துருபதனையும் தலைதுணித்திட்டான் : (அதுகண்ட) மைந்தன் - திட்டத்துய்மன், வேந்தனை - விராடராசனையும், எந்தையை - என் தந்தையாகிய துருபதனையும், என் முன் வீழ்த்த நின்னை - என்கண்ணெதிரிலேயே கொன்ற உன்னை, இரா விடியின் - பொழுதுவிடிந்துகாலையில், (மறுநாட்போரில்), நின் மகன்முன் அடுதல் திண்ணம் - உன்மைந்தனுகிய அசுவத்தாமன் கண்ணெதிரிலேயே கொல்வது நிச்சயம், என்று உரைத்தான்-என்றுவஞ்சினம்

மொழிந்தான் : (அதேசமயத்தில்)பார்த்தன் - அருச்சுனன், மாதுலனுக்குஇரங்கி - மாமனாராகிய துருபதனுக்கு வருந்தி, புராந்தகன் போல் வெகுண்டு ஏற்று - திரிபுரமெரித்த சிவபெருமானைப்போலக் கோபங்கொண்டு எதிரிட்டு, ஆரியன் வெந் காட்ட - துரோணன் முதுகுகாட்டியோட, உம்பர் புகழ - (அதனைக்கண்டு) தேவர்கள் பாராட்ட, ஆசுகம் பொழிந்தனன் - அம்புகளைச்சொரிந்தான்; (எ.று) அம்மா - வியப்பிடைச்சொல்.

பாண்டவர் பக்கலான இருபெரு வேந்தராய விராடனையும் துருபதனையும் துரோணன் தலையறுத்தமை நினைவிலுறுத்தற்குரியது, ஆசுகம் - விரைந்துசெல்லுவது என அம்புக்குக் காரணப்பெயர். புராந்தகன்போல் வெகுண்டு **உவமையணி**. விராடன்துருபதன் - - உம்மைத்தொகை: இருபெயர் ஈற்றிலும் ஐயுருபு தொக்கது. வேந்தனை எந்தையை - ஐயுருபீற்றில் ஈரிடத்தும் உம்மைதொக்குவந்தது. அடுதல் - தொழிற்பெயர். (112)

113. கௌரவர் தோற்க, அருச்சுனன் சொற்படி அனைவரும் போர் நிறுத்திக் களத்திலேயே துயில, மறுநாட் சூரியனுதித்தல்.

சாத்தகியால் விடசேனன் பதாதி யானான்
சகுனிபரி நகுலனுக்குத் தளர்ந்து மீண்டான்
பார்த்தனிரு திறத்தவருந் துயிலான் மாளல்
பார்த்துருமின் குரனீட்டிப் படுபோர் யாரும்
நீத்திடுமின் இனனெழுந்தாற் பொருவ மென்ன
நிகழ்த்துமுன ரமரொழிந்து நிருபர் யாரும்
மாத்தடந்தேர் கரிபரிமண் டுயின்றார் வெய்யோன்
வந்தனன்பா சறையணுகார் மதலை காண்பான்.

(இ-ள்) சாத்தகியால் - சாத்தகியோடு போரிட அவனால், விடசேனன்-, பதாதி ஆனான்-பாதசாரியாய் நடக்கலானான், சகுனி-, பரி நகுலனுக்கு - அசுவசாத்திரத்தில் வல்ல நகுலனுக்கு, தளர்ந்து - சோர்வுற்று, மீண்டான் -திரும்பினான் : பார்த்தன் - அருச்சுனன், இருதிறத்தவரும் - இருபக்கத்தவரும், துயிலால் மாளல் பார்த்து - தூக்கத்தால் அவதிப்படுதலைப்பார்த்து, உருமின் குரல் நீட்டி - இடிபோலப் பெருத்த குரலெழுப்பி, 'யாரும் - இரு பக்கத்து அனைவரும், படுபோர் - கடியபோரை, நீத்திடுமின் -

நிறுத்திடுங்கள் : இனன் எழுந்தால் - சூரியனுத்தித்த பின்னர், பொருவம் என்ன - போரிடுவோம்' என்று சொல்ல, நிகழ்த்து முனர் - (அங்கன்) சொன்னவுடனே, அமர் ஒழிந்து-போரை நிறுத்தி, நிருபர் யாரும் - மன்னர்கள் அனைவரும், மா தட தேர் - பெரிய விசாலமான தேர்த்தட்டின் மேலும், கரி - யானை மேலும், பரி குதிரை மேலும், மண் - தரையின் மேலும், துயின்றார் - தூங்கினார் கள் : வெய்யோன் சூரியன், மதலை காண்பான் - தன் மைந்தனாகிய கர்ணனைப் பார்க்கும் பொருட்டு, வந்தனன் - உதித்தான் ; பாசறை அணுகார் - (தத்தம்) படைவீடுகளுக்குச் செல்லாமல் அங்கங்கே உறங்கினவர்கள் ; (எ.று.) " துயிலகன்றெழுந்து" என அடுத்த சருக்கத்து முதற்செய்யுளில் இயைந்து தொடரும்.

விடசேனன் - கர்ணனின் மூத்த மகன். உருமின், உருமு -இடி. இன் - ஐந்தனுருபு : ஒப்புப்பொருளது. துயிலான் மாளல் - தூக்க மயக்கத்தில் சரிவரப் போரிட முடியாது இறத்தல் எனினுமாம். நீத்திடு மின் - முன்னிலைப் பன்மையேவல். நிகழ்த்து முனர் - விரைவு குறிப்பது. கரி பரிதூங்க அவற்றின் மேல் தாமும் உறங்கினர் என்றபடி. யான் இவ்விரவினைப் பகலாக்கியிகல்செய்வேன் (செ : 95) என்ற துரியோதனனின் அறிவின்மை காண்க. ஈற்றடியில் ஏதுத் தற்குறிப்பேற்றவணி. மாளல் - தொழிற்பெயர். அணுகார் - வினையாலணையும்பெயர். (113)

பதினான்காம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதினைந்தாம் போர்ச் சருக்கம்

வேறு.

1. இருதிறத்தவரும் போர்க்கு எழ, வாலவீமன் அருச்சுனனால் அழிதல்.

துயில கன்றெ ழுந்து பானு
தொழுதி யங்க ளெழவமர்
பயில்க ளத்தி னின்றி ரண்டு
படையு மெற்ற போதுதஞ்
செயல்க ளற்று வால வீம
செம்ம லெண்ணின் மன்னரும்
புயமு மார்பு நரனெய் யம்பு
புதைய வோடி னரரோ.

(இ-ள்) துயிலகன்று எழுந்து - (மறுநாட்காலை) தூக்கத்தினின்று எழுந்து, பானு தொழுது - சூரியனை நமஸ்கரித்து, இயங்கள் எழ - வாச்சியங்கள் முழங்க, அமர் பயில் களத்தில் நின்று - போர்க்களத்தில் வகுத்துநின்று, இரண்டு படையும் எற்ற போது - இருதிறத்துப்படைகளும் மோதியபொழுது, வால வீம செம்மல் - வாலவீமன் என்ற அரசனும், எண்ணில் மன்னரும் - (மற்றும்) கணக்கற்ற அரசர்களும், தம் செயல்கள் அற்று - தம்முடைய போர்த்தொழிலைவிட்டு, நரன் எய் அம்பு - அருச்சுனன் செலுத்திய அம்புகள், புயமும் மார்பும் புதைய - (தங்களுடைய) தோளிலும் மார்பிலும் தைக்க, ஓடினர் - புறங்காட்டியோடிப் போயினர்; (எ-று) அரோ - ஈற்றசை.

வாலவீமன் - துரியோதனனுக்கு உதவவந்த வேந்தன். வாலவீமசெம்மல் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

இதுமுதல் நான்கு கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சீரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. அருச்சுனன் பகைவரை வெல்ல, குந்திபோசன் துரோணனுடன் எதிர்த்தல்.

வெற்றி சொற் றெதிர்ந்த வீரர்
　　வீரமோடு தேர் சிலை
முற்று மற்று சொர்க்க மேற
　　முனிவில் வென்று ளானரன்
கொற்ற முற்ற மன்னர் சூழக்
　　குந்திபோசன் குருவினோ
டுற்று கற்ற சமர்செய் தானெவ்
　　வுயிரு மஞ்சி யுட்கவே.

(இ-ள்) வெற்றி சொற்று - தங்கள் ஜெயத்தைச் சொல்லிக் கொண்டு, எதிர்ந்த வீரர் - (அருச்சுனனோடு) எதிரிட்ட வீரர்கள், வீரமோடு தேர் சிலை முற்றும் அற்று - தங்கள் ஆண்மையோடு தேர் வில் முதலியன முழுவதும் போய், சொர்க்கம் ஏற - விண்ணுலகு போக, முனிவில் - கோபத்தோடு, நரன் - அருச்சுனன், வென்றுளான் -வெற்றிபெற்றுளான் : கொற்றம்முற்ற-(அவன் பெற்ற) வெற்றிமேலும்பூர்ணமாம்படி, குந்திபோசன் -, மன்னர்சூழ - வேந்தர்கள் சூழ்ந்துவர, குருவினோடு உற்று - துரோணனோடு எதிரிட்டு, எ உயிரும் அஞ்சி உட்க - எந்தப்பிராணியும் பயந்து நடுங்கும்படி, கற்ற சமர் செய்தான் - தான்தெரிந்த திறங்களைக் காட்டிப்போரிட்டான் ; (எ-று.)

குந்திபோசன் - குந்தியை வளர்த்த தந்தை. சொர்க்கம் ஏற - பிறிதினவிற்சி (2)

3. இருதிறத்திலும் பலர் பலரோடு எதிர்த்தல்.

தருமன் மத்[தி]ரன் மீது மாள
　　வன்றன் மீது சாத்தகி
பரியி னுமன் விசயன் மீது
　　பரிதி மைந்தன் வீமன்மேல்

பொருதி னூர்க ளிந்த வாறு
புகலு மேனை யரசருஞ்
செருவி யற்றி னூர்க ளாண்மை
செப்ப லாகு மளவதோ.

(இ-ள்) தருமன் -, மத்திரன் மீதும் - சல்லியன் மேலும், சாத்தகி -, மாளவன் மீதும் - மாளவநாட்டரசனான இந்திரவர்மா மேலும், பரியின் நாமன் - அசுவத்தாமன், விசயன் மீதும் - அருச்சுனன் மேலும், பரிதி மைந்தன் - கர்ணன், வீமன் மேல் - வீமன்மேலும், பொருதினூர்கள் - போரிட்டார்கள் : இந்தவாறு - இந்தவிதமே, புகலும் ஏனை அரசரும் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற மற்றைய அரசர்களும், [ஒருவரோடொருவர்] செரு இயற்றினூர்கள் - போர்விளைத்தார்கள் : (அவர்களது) ஆண்மை - வீரம், செப்பலாகும் அளவதோ? - புகழ்ந்து பேசும் அளவினை யுடையதோ? (அளவுகடந்ததுஎன்றபடி); (எ.று)

அவர்கள் ஆண்மை பேச்சுக்கு நிலமன்று என்றபடி. பரி-, குதிரை: அசுவம். பரியின் நாமன் - அசுவத்தாமன். அளவதோ ? ஓ - வினா, எதிர்மறை. (3)

4. பாண்டவர் சேனை தோற்க, அச்சமயத்தில் முனிவர்பலர் துரோணனிடம் வருதல்.

அந்த வேலை தரும ராசன்
அனிக முற்று முடைதரச்
சிந்தி தேவ ரத்தி ரங்கள்
செருச்செய் துரோ ணன் றன்னுழை
வந்த னேக முனிவ ரங்க
வன்செய் பூசை கைக்கொளா
விந்த வாய்மை யங்க வற்கெ
டுத்தி யம்பன் மேயினூர்.

(இ-ள்) அந்த வேலை - அந்தச் சமயத்தில், தருமராசன் - தருமனது, அனிகம் முற்றும் உடைதர - சேனைகள் முழுதும் சிதறிப்போகும்படி, தேவர் அத்திரங்கள் - தெய்வாஸ்திரங்களை,

சிந்தி - சொரிந்து, செருச்செய் - போரிடுகின்ற, துரோணன் தன் உழை - துரோணனிடத்து, அனேக முனிவர் வந்து - அநேக இருடிகள் வந்து, அங்கு - அவ்விடத்து, அவன் செய் பூசை கைக்கொளா - அத்துரோணன் செய்த உபசாரங்களையேற்று, (பின்) இந்த வாய்மை - இந்த உண்மையான வார்த்தைகளை அங்கு - அப்போது, அவற்கு - அத் துரோணனுக்கு, அடுத்து - (மனத்திற்பதியும்படி) சாரமாகவெடுத்து, இயம்பல் மேயினர் - சொல்லத்தொடங்கினர்கள்; (எ.று.) முனிவர்கள் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

உடைதரல் - தோற்றுநிலைகுலைதல். தா - துணைவினை. முனிவர்கள் சூக்ஷ்மரூபங்கொண்டு வந்தனரென்று முதனூலால் அறிக. கைக்கொளா - உடன்பாட்டெச்சம். (4)

வேறு.

5. முனிவர்கள் துரோணனுக்கு உபதேசஞ்செய்ய, அவன் போரொழிந்துநிற்றல்.

சுருதிநூற் றவமெய்ஞ் ஞானந்
துறந்துநீ யரசர் செய்கை
புரிவது தகுதி யன்று
பொன்னுல குறுமா றுள்ளம்
ஒருவழிப் படுதல் நன்றென்
றுரைத்தருந் தவர்கள் போனார்
குருவுமவ் வண்ண நின்றான்
கொடுஞ்சமர் தொழினீத் தம்மா.

(இ-ள்) சுருதிநூல் - வேதசாத்திரங்கள், தவம் - தவஞ்செய்தல், மெய்ஞ்ஞானம் - தத்துவஞானம்பெறுதல் முதலியன, துறந்து - கைவிட்டு, நீ—, - அரசர் செய்கை புரிவது - க்ஷத்திரியர்க்குரிய (போர்த்) தொழிலைச்செய்வது, தகுதி அன்று - நீதியாகாது: (ஆகவே,இனிமேலாவது) பொன் உலகு உறுமாறு - வீட்டுலகம் சேருமாறு, உள்ளம் ஒருவழிப்படுதல் நன்று - மனத்தையொருமுக மாச்செலுத்துதல் நல்லது, என்று உரைத்து - என்று உபதேசித்து அருந்தவர்கள் - அரியதவத்தைச்செய்த அம்முனிவர்கள், போனார்-

சென்றார்கள் : (அவர்கள் உபதேசித்தபடியே) குருவும் - துரோணாசாரியனும், கொடும் சமர் தொழில் நீத்து - கொடிய போர்த் தொழிலைக்கைவிட்டு, அ வண்ணம் நின்றான் - அந்த அந்தணர் நெறியில் (பொறுமையை மேற்கொண்டு) நிலைத்து நின்றான்; (எ று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

அந்தணனாகிய நீ அரசர்க்குரிய போரைக்கைவிட்டு முனிவரர்க்குரிய வேதசாத்திரங்கள் முதலியவற்றைக் கைக்கொண்டு மேலுலகம் புகுவாயாக என்று உபதேசித்தபடி, பொன்னுலகு - விண்ணுலகு, மேலுலகம், வீட்டுலகம். உள்ளம் ஒருவழிப்படுதல் - ஏகாக்கிரசித்தனாதல். "மறைகெழுநாலுந் தேசுமாசிலாத்தவமுஞானம், உறைவருமுணர்வுமல்லான் முனிவரர்க்குறுதியுண்டோ, துறைகெழுகலைகள் வல்லாய் துன்னலர்ச்செருக்கும் போரும், நிறைதருவலியும் வாழ்வு நிருபர்தம்மியற்கையன்றோ" என்ற வில்லிபாரதம் ஈண்டு நினைக.

இதுமுதல், ஆறுகவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும் மற்றையவை மாச்சீர்களுமாகிய அறுசீராசிரியவிருத்தங்கள். (5)

6. துரோணனைக் கொல்ல இதுவே சமயமென்று கருதிக் கிருஷ்ணன் திட்டத்துய்மனைத் துரோணன்மேலேவித் தருமனோடு பேசல்.

மாரண கால மோர்ந்து
மறையவ னிற்ற னோக்கி
நாரணன் அவியிற் றோன்று
நரேசனை யவன்மீ தேவிக்
காரணத் தரும னோக்கிக்
கலைமுனி கேட்ப மாப்பேர்
வாரணம் விழலா லப்பேர்
மாறிநீ புகறி யென்றான்.

(இ-ள்) மாரணம் காலம் ஓர்ந்து - (தனக்கு ஏற்படவிருக்கும்) மரணவேளையை யறிந்து, மறையவன் நிற்றல் நோக்கி - துரோணன் [சாந்தமாய்] நிற்கின்ற நிலையினைப்பார்த்து, நாரணன் - கிருஷ்ணன், அவியில் தோன்றும் நரேசனை - வேள்வித்தீயுணவின் பயனாகத் தோன்றிய திட்டத்துய்மனை, அவன்மீது ஏவி - அந்தத்

துரோணன்மேல் (போரிட) அனுப்பி, (பின்பு) கார் அண் அ தருமன் நோக்கி - மேகம்போன்ற அந்தத் தருமனைப்பார்த்து, ‘கலைமுனி கேட்ப - துரோணன் காதில் கேட்கும்படி (உரக்க) மா பேர் வாரணம் விழலால் - அசுவத்தாமா என்ற பேரை யுடைய யானை இறந்து விழப்போவதால், நீ -, அ பேர் - அந்த அசுவத்தாமா என்ற பேரை, மாறி - மாறுபாடாக, புகறி - சொல்லு வாயாக’, என்ருன் -என்று சொல்லிமுடித்தான் ; (எ.று.)

மாளவநாட்டரசனுன இந்திரவர்மாவின் அசுவத்தாமாவென்னும் யானை இறந்த உண்மையைத் துரோணபுத்திரனுன அசுவத்தாமா இறந்ததாகத் தோன்றும்படி நீ துரோணனுக்குக் கூறி, அதனுல் அவன் மனம் வருந்திப் போரொழிந்து இறக்கும்படி செய்திட வேண்டுமென்று கிருஷ்ணன் தருமனுக்குக் கூறினுன் என்பது விவரம். நர+ஈசன்= நரேசன் : குணசந்தி. கார்—மேகம். அண் - போன்ற. அ - அந்த. தருமன் - மேகம்போல் கைம்மாறுகருதாது கொடுப்பவன் தருமன் என்றபடி; ‘காரணக்கொடையான்கம்பன்’ என்றதும் நினைக. மா - அசுவத்தாமா: நாமைகதேசம். பேர்மாறு தலாவது - யானையென்பதற்கு மாறி மகன் என்பது. புகறி - (புகல்+த்+இ) முன்னிலையொருமைவினைமுற்று. (6)

7. தருமன் உடன்படாதிருக்க, கிருஷ்ணன் சமாதானங் கூறல்.

மெய்யினுன் கிளையும் வாழ்வும்
மெய்யும்புண் ணியமுங் குன்றிப்
பொய்யினுல் வருவ திந்தப்
புவிகொலோ வென்று நக்கான்
ஐயனேர் பயனுக் காய் பொய்
யறையிலப் பொய்யும் மெய்யாம்
வெய்யபோர்க் குருநா ளாசான்
விளம்பிய மொழியு மோர்வாய்.

(இ-ள்) மெய்யினுன் - சத்தியவிரதனுன தருமன், கிளையும் வாழ்வும் மெய்யும் புண்ணியமும் குன்றி - சுற்றத்தாரும் நல்வாழ்வும் சத்தியமும் நல்வினைப்பயனும் குறைந்து தேய்ந்து, பொய்யினுல் வருவது இந்தப் புவி ஓ - பொய்பேசியதால் (நமக்கு) வரப்போவது இந்த உலக ஆட்சியோ? என்று - என்று கூறி, நக்கான் - சிரித்

தான்: (அப்போது) ஐயன் - கிருஷ்ணன், ஓர் பயனுக்காய் - ஒரு நல்லபயன் விளைவதற்காக, பொய் அறையில் - பொய்பேசுவதால், அ பொய்யும், - அந்தப் பொய்யும், மெய்யாம் - சத்தியமாகும்: (இச்சந்தர்ப்பத்தில்) வெய்ய போர்க்கு- கொடியபோரினை, உறுநாள் - தொடங்கிய முதல்நாளில், ஆசான் விளம்பிய - துரோணன் சொல்லிய. மொழியும் ஓர்வாய் - வார்த்தையும் நினைந்தறிவாய்; (எ.று) கொல் - அசை.

பொய்பேசினால் கிளையும்வாழ்வும் சத்தியமும் புண்ணியமும் குன்றிப்போகும்: அப்படிக்குன்றிப்போகும்படி பொய்பேசி நாடு பெறுவது தகுதியோ என்றுபரிகாசமாகச்சிரித்தான் தருமன் என்க. நகுதல் எள்ளல்பற்றியது, மூன்றுமடியினால், பெரிய ஆபத்துக் காலத்தில் அதனை நீக்கும்பொருட்டும் நற்பயன்கருதியும் பொய் கூறலாமென்று வற்புறுத்தியபடி, ''பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்'' என்றதுங் காண்க. இதனால் அசுவத்தாமா இறந்தானென்பது ஒருவகையான் பொய் யாயினும் நன்மைபயத்தலால் மெய்போன்றதே யென்று கூறிய வாறு. ஆசான் விளம்பிய மொழியினைப் பீஷ்மபருவத்து முதற் போர்ச்சருக்கத்து மூன்றுஞ் செய்யுளாலறிக. அஃது பின்வருமாறு:- ''ஆரியன் சீடர் தம்மோடு அமரடாதென மூவைந்தாம், போரினில் தருமன் என்சேய்பொன்றினனென்றுவந்தென், நேரியம்பிடில்விற் பற்றேன்நேரலன் திட்டத்துய்மன், கூரிய விசிகத்தாவிகொண்மி னென்றேவினனே'' என்பது. (7)

8. கிருஷ்ணன் மேலும் சமாதானங்கூற, தருமன் துரோணனருகிற் பிழையறக் கூறத்தொடங்குதல்.

ஓதுபே ரழலுக் கீரம்
　　உருதொரு பொய்க்கே தேதம்
காதமர் மாள வன்பேர்
　　கடகரி மடித லானும்
நீதவ றுரைக்க வேண்டா
　　நிகழ்வெடுத் துரைக்க வென்றான்
பூதலத் தரசுட் கொண்டே
　　புகலுமீ தாசான்முன் போய்.

(இ-ள்) ஓது - சிறப்பித்துப்பேசப்படுகின்ற, பேர் அழலுக்கு - பெருநெருப்புக்கு, ஈரம் உருது - ஈரத்தாலாகும் அபாயம் ஏற்படாது: (அதுபோல) ஒரு பொய்க்கு - ஒரு (புல்லிய) பொய்க்கு, ஏதம்ஏது? தோஷம் (குற்றம்) ஏது?(கிடையாது) : (மற்றும்) காது அமர்-மோதிச் செய்கின்ற போரில், மாளவன் - மாளவநாட்டரசனுடைய, பேர் கடகரி-பெரிய மதயானையான அசுவத்தாமா என்பது, மடிதலானும் - இறத்தலாலும், நீ - தருமனாகிய நீ, தவறு உரைக்க வேண்டா — பொய்யாகியபிழையைச் சொல்லவும் வேண்டாம்: (ஏனெனில்- அசுவத்தாமா என்றபேரையுடையது இறந்தது உண்மையன்றோ) [ஆகவே] நிகழ்வு எடுத்து உரைக்க - நடந்த உண்மை நிகழ்ச் சியையெடுத்துச் சொல்வாய், என்றான் - என்றுகூறிமுடித்தான் (கிருஷ்ணன்) : (பின்னர்) பூதலத்து அரசு - பூமியைக்காக்க விருக்கும் அரசனாகிய தருமன், உட்கொண்டு - (கிருஷ்ணன் கூறியதை) மனத்துக்கொண்டு, ஆசான் முன் போய் - துரோண னுக்கு முன்னே சென்று. ஈது புகலும் - இந்த வார்த்தையைச் சொன்னான்: (எ.று) அவன் கூறியதை மேலைக்கவியிற்காண்க.

பெருநெருப்புக்குச் சிறியஈரத்தினால் சிறிதும் கெடுதியில்லாத வாறுபோல, பெரியோர்கூறிய அறங்களெல்லாம் நின்னிடத்து ஒருங்கே அமைந்துள்ளதனால், இச்சிறுபொய்யினாற் சிறிதும் தவறுண்டாகாது என்றபடி : எடுத்துக்காட்டுவமையணி. 'பெருநெருப்புக்கு ஈரமில்லை'; என்பது பழமொழி. மாளவன் - இந்திரவர்மா என்பவன். அவன் ஏறிவந்த யானைக்கு 'அசுவத் தாமா' என்றுபெயர். அசுவத்தாமா இறந்தமை கூறுதல் நிகழாதது கூறலன்றி நிகழ்ந்ததனையே கூறுதலாதலால், 'நீ தவறுரைக்க வேண்டா நிகழ்வெடுத்துரைக்க' என்றான்கிருஷ்ணன். அரசுபுகலும் என இயையும். (8)

9. தருமன் பிழையறக் கூறிய வகைகேட்டுத் துரோணன் படைக் கலம் கைவிட்டு ஏகாக்கிரசித்தனாய் நிற்றல்.

விஞ்சுமச் சுதன்பே ராண்மை
வெம்பரித் தாமா வீழ்ந்த
குஞ்சர மென்னு முன்மால்
குறித்தனன் சங்கவ் வோதைக்

கெஞ்சியோர் கோடி தானை
இறந்தவேந் துரைகேட் டாசான்
செஞ்சிலைக் கணையும் வீழ்த்திச்
சிந்தையொன் ருக நின்ருன்.

(இ-ள்) [தருமன்] விஞ்சும் அசுதன் -வீரத்தில் எல்லாரினும் மேலான அந்த மகனுகிய, பேராண்மை வெம்பரித்தாமர், - மிக்க பராக்கிரமமுடைய கொடிய அசுவத்தாமா, வீழ்ந்த குஞ்சரம் - இறந்தயானை [யாவன்], என்னும் முன் - என்று கூறியவுடனே, மால் - கிருஷ்ணன், சங்கு-(தன்) பாஞ்சன்னியத்தை, குறித்தனன் - ஊதினன் : அ ஓதைக்கு எஞ்சி - அந்த ஓசைக்குக் கெட்டு, ஓர் கோடி தானை - ஒரு கோடி சேனை, இறந்த - மாண்டுபோயின : (அப்போது) ஆசான் - துரோணன், வேந்து உரை கேட்டு - தருமன் கூறிய மொழியினைக்கேட்டு, செஞ்சிலை கணையும் வீழ்த்தி - செவ்வியவில்லையும் அம்பையும் எறிந்து போகட்டு, சிந்தையொன்ருக நின்ருன்; (எ.று.)

''பேராண்மை வெம்பரித்தாமா வீழ்ந்த குஞ்சரம்'' என்ற தொடரில், ''வீழ்ந்த குஞ்சரம் வெம்பரித்தாமா'' என்றும், வீழ்ந்த குஞ்சரமாவன் வெம்பரித்தாமா'' என்றும் கவர்பொருள்படக்கூறிய நயம் அறிக. எஞ்சுதல் - கெடுதல், குறைதல், ஒழிதல். (9)

10. அச்சமயத்தில் திட்டத்துய்மன் துரோணன் தலையைத் துணித்தல்.

தூயவன் சிரத்தெ ழுந்தோர்
சோதிமீப் பொலிந்து தோன்றிக்
காயமே றுன்ன லைவர்
களங்கிலார் மாலுங் கண்டார்
ஆயபோ தோடிப் பார்த்தன்
அங்கையாற் றடுத்து மம்பாற்
றீயவ தரித்தான் ஆசான்
சிரத்தினை வீழ்த்தா னந்தோ.

(இ-ள்) தூயவன் சிரத்து - துரோணன் தலையினின்று, ஓர் சோதி எழுந்து - ஒரு பேரொளி கிளம்பி, மீ பொலிந்து தோன்றி சிரசின்மேலே விளங்கித்தோன்றி, காயம் மேல் துன்னல் - ஆகாயத்தின்மேல் நெருங்கிப்போதலை, ஐவர் களங்கிலார் - குற்ற மற்றவராகிய பாண்டவரைவரும், மாலும் - கிருஷ்ணனும், கண்டார் - தரிசித்தனர் : ஆய போது - அங்ஙனாகிய சமயத்தில், பார்த்தன் ஓடி - அருச்சுனன் விரைந்தோடி, அம் கையால் தடுத்தும் - அழகிய (தனது) கைகளால் தடுத்துநிறுத்தியும், தீ அவதரித்தான் - வேள்வித்தீயில் தோன்றிய திருஷ்டத்யும்நன், அம்பால் - (தான்விடுத்த) அம்பினால், ஆசான் சிரத்தினை வீழ்த்தான் - துரோணாசாரியனின் தலையையறுத்துத் தள்ளினான்; (எ.று) அந்தோ - இரக்கக் குறிப்பிடைச்சொல்.

துரோணன் சிரசினின்று சோதி போகும்போது திட்டத் துய்மன் அவன் சிரத்தைக் கொய்ததற்குக் கவி 'அந்தோ' என இரங்குகின்றார். துன்னல் - தொழிற்பெயர். ஐவர் - தொகைக் குறிப்பு. தடுத்தும்திட்டத்துய்மன் துரோணன்தலையைக்கொய்தமை - தன்தந்தை துருபதனின் மனோரதம்நிறைவேறுதற்கும், தான் வேள்வியில் அவதரித்தபயனையுறுதற்கும் என்க. காயம் - ஆகாயம் என்பதன் முதற்குறை. தீயவதரித்தான் - கருத்துடையடை கொளி. (10)

வேறு.

11\. அசுவத்தாமன் பித்ருசோகத்தால் புலம்பி, பின் தன் தந்தையைக் கொன்றோனைக் கொல்வேனெனல்.

தானைநா யகன்வீய்ந்தா னெனநொந் தண்ணல்
தளமடைய பிதாவுழிமாத் தாம னெய்தி
வானையோ புரந்திடச்சென் றனைநீ யென்னை
மறந்தைய வுன்பினிதோ வந்தே னென்றே
சோனைமா ரியில்விழிநீர் கலுழ விம்மச்
சுயோதனன்கண் ணீர்துடைத்தச் சோப மாற்ற
ஏனையோ னுருத்தெந்தை வீழ்த்தோன் யாவன்
இயம்புகெனக் கிருபனிகழ் வெல்லாஞ் சொல்வான்.

(இ-ள்) தானை நாயகன் - சேனைக்குப் பதியாகிய துரோணன் வீய்ந்தான் என - இறந்துவிட்டான் என்று, நொந்து - மனம்வருந்தி அண்ணல் - துரியோதனராசன், தளம் அடைய - (தன்து) சேனை யிடத்து வர, (அப்போது), மாத்தாமன் - அசுவத்தாமன், பிதாவழி எய்தி - தந்தையாகிய துரோணன் (இறந்த) இடத்தை யடைந்து, 'நீ -, என்னை மறந்து - (உன் அன்புக்குரிய) மகனாகிய என்னை நினைவிற்கொள்ளாது நீத்து, வானையோ புரந்திடச் சென்றனை- விண்ணுலகத்தைக் காப்பதற்கோ (ஆங்குச்) சென்றுள் ளாய்: ஐய — பெரியோனே! இதோ உன் பின் வந்தேன் - இப்போதே உனக்குப் பின்னால் விண்ணுலகம் வருகின் றேன்,' என்று - என்று கதறி, விழிநீர் -கண்களிலிருந்து பெருகிய நீர், சோனைமாரியில் கலுழ-பெருத்த மழைபோலக் கலங்கியொழுக, விம்ம- வாய்விட்டுப் புலம்ப, சுயோதனன்-துரியோதனன், கண்ணீர் துடைத்து - (அவனது) கண்ணீரைப் போக்கி, அ சோபம் ஆற்ற - அந்தத்துக்கத்தைப்போக்க, ஏனையோன் - மற்றவனாகிய அசுவத் தாமன், உருத்து - கோபித்து, எந்தை வீழ்த்தோன் யாவன் - என் தந்தையைக் கொன்றவன் எவன்? இயம்புக - சொல்லுங்கள், என - என்று (பக்கத்திலிருந்தவரை) வினவ, (அப்போது) கிருபன் - கிருபாசாரியன், நிகழ்வு எல்லாம் - நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம், சொல்வான் - கூறுவானாயினன்; (எ.று.) அவன் கூறியதை மேலைக் கவியிற் காண்க.

அசுவத்தாமன் புலம்பியவகை உள்ளம் உருக்குகின்றது என லாம். உழி - ஏழனுருபு:இடப்பொருளது. வானை புரந்திடச் செல்லல் - மங்கல வழக்கு; பிறிதினவிற்சி, மாரியில், இல் - ஐந்தனுருபு ஒப்புப் பொருளது; இயம்புகென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். நிகழ்வு - தொழிற்பெயர்.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் பன்னிரு கவிகள் - பெரும் பாலும் - ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண் சீராசிரிய விருத்தங்கள். (11)

12. கிருபன் சொன்னது கேட்டு அசுவத்தாமன் வெகுண்டுவர, தருமன் கிருஷ்ணனை வினவல்.

முராரிபுகன் மொழிக்கிசைந்து தருமன் பொய்ம்மை
மொழிந்திடலா லுந்தைசிலை முனிவு நீத்து
நிராயுதனாய் நின்றபொழு தனலிற் றேன்று
நிருபனிகுத் தனனெனவே நிகழ்த்த வன்னேன்

புராரியென வெகுண்டொருதேர் புகுந்து யாரும்
புடைசூழ வணுகுதலாற் பொய்யில் வேந்தன்
அராவணையான் றனைநோக்கி யிவனு றுன்பம்
அணுகிடுமோ வெனவவனு மறைவ தானுன்.

(இ-ள்) முராரி புகல் மொழிக்கு இசைந்து - கிருஷ்ணன் சொன்ன வார்த்தைக்கு உடன்பட்டு, தருமன்—, பொய்ம்மை மொழிந்திடலால் - பொய்பேசியமையால், உந்தை - உன் தந்தை யாகிய துரோணன், சிலை முனிவுநீத்து - வில்லையும் கோபத்தையும் விட்டு, நிராயுதனுய் - ஆயுதமில்லாதவனுய், நின்ற பொழுது - ஏகாக்கிரசித்தனுய். நின்ற சமயத்தில், அனலில் தோன்றும் நிருபன் - வேள்வித்தீயில் தோன்றிய திட்டத் துய்மன், இகுத்தனன் - கொன்ருன், என நிகழ்த்த - என்று சொல்ல, அன்னேன் - அந்த அசுவத்தாமன், புராரி என வெகுண்டு - திரிபுரமெரித்த ருத்திரனைப்போலக் கோபித்து, ஒரு தேர் புகுந்து - ஒரு தேரிலேறி, யாரும் புடைசூழ அணுகுதலால் - அனைவரும் பக்கத்தில் சுற்றி வர நெருங்குதலால், (அதனைக்கண்டு) பொய் இல் வேந்தன் - சத்திய விரதனுகிய தருமராசன், அராவணை யான்தனை நோக்கி - பாற்கடலிற் பள்ளிகொள்ளும் திருமாலாம் கிருஷ்ணனைப் பார்த்து, 'இவனுல் துன்பம் அணுகிடுமோ என - இந்த அசுவத்தாமனுல் இடையூறு வந்து சேருமோ என்று வினவ, அவனும்-அந்தக் கிருஷ்ணனும், அறைவதானுன் - கூறுவானுயினுன்; (எ.று.) கிருஷ்ணன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

நிராயுதனைக் கொன்ருனென்றதால் மேலும் வெகுளி பொங்கப் புராரியென வெகுண்டானென்க.

முர + அரி = முராரி : முரனென்னும் அசுரனுக்குப் பகைவன் என்று பொருள்படும் : இவ்வசுரன், நரகாசுரனுக்கு மந்திரி : இவனைக் கிருஷ்ணன் கொன்ருன். புர + அரி — புராரி : புரம் - திரிபுரம் : இரண்டும் தீர்க்கசந்தி. பொய்யில்லாத வேந்தன் என்ற பொருளில் 'பொய்யில் வேந்தன்' என்ருராயினும், இச் சொற்ருெடர் சந்தர்ப்பம் நோக்கிச் சமத்காரமாக வைக்கப் பட்ட நயம் ஓர்க. (12)

13. கிருஷ்ணன் தருமனுக்குப் பதில் கூற, அருச்சுனன் திட்டத்துய்மனை வெகுளல் கூறும்.

பரமனருள் பெற்றவன்வா னவர்க டங்கள்
படைக்கலங்க ளெலாம்வாய்த்தோன் படர்ந்தான் யாவர்
பொருதுவரிங் குள்ளபடி முடிவ தஞ்சேல்
புரவல!வென் றிடமகவான் புதல்வன் யான்முன்
குருவெனவே தடுப்பநிலாச் சவந்து ணித்துக்
கொடுமையெமக் களித்தைவரு குமரன் றன்னால்
வருவதறி யோமெனமைத் துனனைச்சீறி
வடுவுரைப்ப வவனிவன்மேல் மறங்கொண் டோதும்.

(இ-ள்) பரமன் அருள் பெற்றவன் - (இந்த அசுவத்தாமன்) பரமசிவனுடைய அருளைப் பெற்றவனுவன் : (மற்றும்) வானவர்- தேவர்கள், தங்கள் படைக் கலங்கள் எலாம் - தங்களுடைய ஆயுதங்களையெல்லாம், வாய்த்தோன் - பெறும் பாக்கியமுடைய வன் : (அப்படிப்பட்டவன்) படர்ந்தான் - (இப்போது) எதிரிட்டு வந்துள்ளான் : இங்கு - இப்போது, யாவர் பொருதுவர் - யார் அவனேடு போரிடுபவர் ? (ஆகவே) புரவல - தருமனே ! உள்ள படி முடிவது - நடக்கிறபடி நடந்து முடியட்டும் : அஞ்சேல் - நீ பயப்படாதே : என்றிட - என்று கிருஷ்ணன் கூறிமுடிக்க, மகவான் புதல்வன் - இந்திர குமாரனுகிய அருச்சுனன், (திட்டத்துய்மனை நோக்கி) யான் முன் குரு எனவே தடுப்ப - நான் முன்னமே யே ஆசிரியர் (நமக்கு) என்று சொல்லித் தடுக்கவும், நிலா - நீ (சரம் விடுதலை) நிறுத்தாமல், சவம் துணிந்து - பிணம்போல் அசைவற்று நின்ற துரோணனைத் தலைதுண்டித்து, எமக்கு கொடுமை அளித் தை - எங்களுக்குத் தீங்கு செய்து வைத்தாய் : (இனி) வரு குமரன் தன்னுல் - (எங்கள் மேல்) எதிரிட்டு வருகின்ற முனி குமாரனுகிய அசுவத்தாமனுல், வருவது அறியோம் - நிகழப்போவது தெரிகிலேம், என - என்று, மைத்துனனைச் சீறி - திட்டத்துய்மனைக் கோபித்து, வடு உரைப்ப - வெவ்வுரை சொல்ல, அவன் - அந்தத் திட்டத்துய்மன், இவன்மேல் - இந்த அருச்சுனன் மீது, மறம் கொண்டு - சினங்கொண்டு, ஓதும் - கூறுவான்; (எ.று) - திட்டத் துய்மன் கூறியதை மேலைக்கவியிற் காண்க.

அசுவத்தாமன் சிவனருளால் தோன்றியவனுதலின் 'பரமனருள் பெற்றவன்' என்ருர். துரோணனுக்குக் கிருபியினிடம் சிவாமிச மாகப்பிறந்த பிள்ளை அசுவத்தாமனென்னும் நூற்கொள்கையுண்டு. 'கந்தமகவையீன்ற காளகண்டனருளால் வந்த மகவிம்மகவு'' என்ருர் வில்லியாரும்: (ஆதி: வாரணு: 42), மற்றும், ''பேரறிவாற் பெரும் போர் வலியாற் பிறப்பான் மெய்த் தேசாலியற்றும் பல படையாற்றிண்டோள் வலியால்.... மைந்தன் இவன்'' என்றதும் வில்லிபாரதம் (ஆதி: திரௌ: 38) பொருதுவர் - பொருபவர் என்றபடி. துரோணன் சிரத்தினின்று சோதியெழுந்து ஆகாயத்திற் சென்றதை அருச்சுனன் கண்டனனுதலின் அதன்பின் திட்டத் துய்மன் தலைதுணித்தனனுதலின் ''சவந் துணிந்து'' என்ருன். அளித்தை - முன்னிலை வினைமுற்று. ஆருது கிடத்தலால் 'வடு' என்ருர். மறம் - சினம் (பிங்கலந்தை) ''மேவார் மறத்தொடு......... கடந்த காளை'' (பு. வெ. 9, 4) ஓதும் - செய்யுமென்முற்று. (13)

14. திட்டத்துய்மன் நிஷ்டூரமாகக் கூறியபின், வீமன் கூறியது.

மற்றவனைக் கொலவலவோ வுதித்தேன் வேள்வி
மச்சர்பதி யெந்தையொடெம் மரபை முற்றுஞ்
செற்றவனைக் கொலல்பவமே நீமூ தாதைச்
செற்றதற மோவருமித் திறலோன் றன்மேல்
உற்றமர்வெல் குவனன்றி வீவ னீவிர்
உதவிசெய வேண்டாமென் றுரைப்ப வீமன்
வெற்றிசிலை புரிசராக்கை வீழத் தேம்பி
விறல்பகதத் தனைக்கொலனீ விதியோ வென்
றுன்.

(இ-ள்) [திட்டத்துய்மன்] அவனைக்கொல அலவோ - அந்தத் துரோணனைக் கொல்லுவதற்காகவன்ருே, வேள்வி உதித்தேன் - யாகாக்னியில் [யான்] தோன்றினேன்: [இது நிற்க] மச்சர்பதி (ஒடு) - விராட மன்னனேடு, எந்தையொடு - என் தந்தையாகிய துருபதனேடு, எம் மரபை - என்னுடைய வமிசத்தையும், முற்றும் - முழுவதுமாக, செற்றவனை - அழித்தொழித்தவனை, கொலல் - கொல்லுதல், பவமே - பாவமாகுமோ? (ஆகாது: ஆனல் நீ

பாவம் என்கிருயே!) நீ - பேரனுகிய நீ, மூதாதை - பெரிய பாட்டனாகிய வீடுமனை, செற்றது - (சிகண்டியை முன்னிட்டு வைத்துக்) கொன்றது, அறமோ - தருமமாகுமோ! (ஆகாதே): (எதுவாயினும்) வரும் இ திறலோன் தன்மேல் உற்று - என்மேல் வரும் இந்த அசுவத்தாமன் மீது சென்று, அமர் வெல்குவன் - போரிட்டு செயிப்பேன்: அன்றி - அங்ஙனன்றி தோற்பேனுயின், வீவன் - இறந்து படுவேன்: நீவிர் - நீங்களொருத்தரும், உதவி செய வேண்டாம் என்று உரைப்ப - (எனக்குச்) சகாயமாக வந்து போரிட வேண்டாம் என்று (திட்டத்துய்மன் நிஷ்டூரமாகச்) சொல்ல,(அப்போது), வீமன்-(அருச்சுனனை நோக்கி நேற்றைய போரில்) நீ—, வெற்றி சிலை புரிசரா கை வீழ தேம்பி - வெற்றி பொருந்திய வில்லைப் பிடித்திருந்த பூரிசிரா வாவின் கையை (க்கிருஷ்ணன் சொற்படி அவன் தம்பி சாத்தகியுயிரினைக்காக்க) வெட்டி வீழ்த்தியபோது (இது தகுமோ என) வருந்தி, (அதற்கு இரண்டுநாள் முன்னர் செய்த போரில்) விறல் பகதத்தனை - பராக்கிரமமிக்க பகதத்தனை, (கிருஷ்ணன் கொடுத்த கணையைக்கொண்டு கொன்ருயே! அங்ஙனம்) கொலல் - கொல்லுதல், விதியோ -நீதியோ? (அதற்கு ஏன் வருந்தவில்லை—), என்ருன்- என்று குத்திக்காட்டினுன்; (எ-று).

அருச்சுனன் மைத்துனன் திட்டத்துய்மனைச் சீறி வடுவுரைத்தது வீமனுக்குப் பிடிக்கவில்லையாதலின் அவன் அவ்வருச்சுனன் செய்த செயல்களைச் சுட்டிக் காட்டினுனென்க. இது ரசிக்கத்தக்க இடம், பூரிசிராவின் கையை வீழ்த்தியது - பதினுன்காம் நாட்போரில் (செ; 62). பகதத்தனைக் கொன்றது - பன்னிரண்டாம் நாட்போரில் (செ: 22) என்பது நினைக. 'எந்தையொடு' என்றவிடத்துள்ள 'ஒடு' முன்னர் 'மச்சர்பதி'க்கும் கூட்டப்பட்டது. கொலவலவோ, ஓ - வினு சிறப்பு. பவமே, ஏ - வினு எதிர்மறை குறிப்பது. அறமோ, விதியோ, ஓ - வினு எதிர்மறை. செற்றவன், திறலோன் - வினையாலணையும் பெயர்கள். கொலல், செற்றது - தொழிற் பெயர்கள். வெல்குவன், வீவன் - தன்மையொருமை வினைமுற்றுக்கள், புரிசரா - பூரிசிரவா என்பதன் சிதைவு. (14)

15. தருமன் சமாதானப்படுத்த, கிருஷ்ணன் அசுவத்தா மனையெதிர்க்க வகைசெய்தல்.

புரிவேள்விக் குயிரிகுத்தல் போற மாயோன்
புகன்மொழிகொண் டிகுத்ததெலாம் புனித மென்றே
தருமனுரைத் தனன்விசயன் குருவென் றோராச்
சாற்றினனிங் கானதொழில் தனக்கென் னெண்ணம்
வருமவனை வெல்லும்வகை குறிமி னென்றே
வகுத்தனிகம் புடைசூழ மகவான் சேயோ
டரவணையா னெழுந்திட்டான் முனிவ னீன்றோ
னுடரவத் துவசனுக்கீ தறைவ தானுன்.

(இ-ள்) தருமன்—, புரி வேள்விக்கு - செய்கின்ற யாகங்களில், உயிர் இகுத்தல் போல் - யாகப் பசுக்களை உயிர் போக்குதல்போல், நாம்—, மாயோன் புகல் மொழி கொண்டு - கிருஷ்ணன் சொன்ன வார்த்தையின்படி, இகுத்தது எலாம் - இறக்கச் செய்தனவெல்லாம்., புனிதம் - பவித்திரமேயாகும் (தோஷமன்று), என்று உரைத், தனன் - என்று (தன்) முடிவு கூறினுன் : (பிறகு கிருஷ்ணன்) 'விசயன்—,குரு என்று ஓரா-துரோணனை(அனைவர்க்கும்) ஆசிரியன் என்று எண்ணி, இங்குத் தனக்கு ஆன தொழில் சாற்றினன் - இப் போது தனக்குகந்த காரியம் இது என (த் திட்டத்துய்மனை நோக்கிக்) கூறினுன் : (இனி) என் எண்ணம் - என் கருத்து யாதெனில், 'வரும் அவனை - எதிரிட்டு வரும் அசுவத்தாமனை, வெல்லும் வகை குறிமின் - ஜெயிக்கும் விதத்தைச் சொல்லுங்கள்', என்று - என்று கூறி, அனிகம் வகுத்து - (பாண்டவர்) சேனையை அணிவகுத்து, புடைசூழ - (நாற்படைகளும்) சூழ்ந்துவர, மகவான் சேயோடு - இந்திர குமாரனுகிய அருச்சுனனோடு, அரவணையான் - கிருஷ்ணன், எழுந்திட்டான் - புறப்பட்டான் : (அப்போது) முனி வன் ஈன்றோன் - துரோணன் பெற்ற அசுவத்தாமன், ஆடு அரவத் துவசனுக்கு - படமெடுத்தாடும் பாம்பினைக் கொடியிலெழுதித் தூக்கிய துரியோதனனுக்கு, ஈது அறைவது ஆனுன் - இந்த வார்த்தையைச் சொல்லலானுன் ; (எ.று.) அசுவத்தாமன் சொல்லி யதை மேலைக்கவியிற் காண்க.

வேள்வியின்கண் அவிஸ் சொரிவதற்கு ஒரு விலங்கின் உயிரைப் போக்குதல் புனிதச் செயலாகக் கருதப்படுவதுபோல, நாமும் பரமனுகிய கிருஷ்ணன் மொழிப்படியே போரில் பலரைச் செகுத்தோமாதலின், அவையும் போர் நீதிப்படி புனிதச் செயல்களே யாகும் என்று தருமன் சமாதானங் கூறினுன். விசயன் தனக்குரிய தொழிலையே செய்தான் என்று கிருஷ்ணன் உடன்பாடு தெரிவித்தான் என்க. கிருஷ்ணன் 'மேலும்' என் எண்ணம் வருமவனை வெல்லும் வகை குறிமின்' என்றது என்னையெனில், முன்னர்த் தூதுபோனபோது அசுவத்தாமனை நோக்கி "அரசன் சேனுபதி யாகாது ஐவர் நீயோம்பு (செ. 96) என மோதிரம் வீழ்த்ததை யெண்ணி என்க. (குறிப்பு - சேனுபதியாகக் கூடாது என்றுனே யொழிய போரில் போரிடாதே என்று கூறவில்லையென்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது). ஓரா - ஓர்ந்து; உடன்பாட்டெச்சம். குறிமின் - முன்னிலை வியங்கோள். இகுத்ததெலாம்-ஒருமைப்பன்மை மயக்கம். (15)

16. அசுவத்தாமன் நாராயணுஸ்திரத்தைப் பிரயோகிக்க கிருஷ்ணன் கட்டளைப்படி அனைவரும் படைக்கலமும் வாகனமும் ஒழிந்து அதனை வணங்குதல்.

எந்தையைக்கொன் றவனெடுபாண் டவரை யோரம்
பெய்துதுணித் தரசுனக்கின் றீவ னென்றே
வந்தரிய மறையொடுநா ராய ணன்றன்
வாளிதொடுத் தனனந்த வாளி யாருஞ்
சிந்தைகலங் கிடப்புவிவான் திசைக ளெட்டுந்
தீப்படப்பாண் டவர்மீது செல்போ தார்தி
சந்தசிலை யாரும்விடுத் திருமென் றெந்தை
தணந்திரத நரனெடுகை தலைமேற் கொண்டான்.

(இ-ள்) எந்தையைக் கொன்றவனெடு - என் தந்தையாகிய துரோணனைக் கொன்ற திட்டத்துய்மனேடு, பாண்டவரை - பஞ்சவரை, ஓர் அம்பு எய்து துணித்து - ஒரே அம்பினுலே சிதைத்து, இன்று - இன்றையதினம், உனக்கு அரசு ஈவன் - உனக்கு-அரசாட்சியை நிலைபெறச் செய்வேன், என்று - என்று (வீரம்) பேசி, வந்து- போர்க்களம் - வந்து, அரிய மறையொடு - அருமையான மந்திரப் பிரயோகத்துடனே, நாராயணன் தன் வாளி தொடுத்தனன் - நாராயணுஸ்திரத்தை ஏவினன் : அந்த வாளி - அந்த அஸ்திரம்,

யாரும் - அனைவரும், சிந்தை கலங்கிட - மனம் நடுங்கும்படியும், புவி வான் திசைகள் எட்டும் தீப்பட - நிலம் ஆகாயம் அட்ட திக்குக்கள் எல்லாம் நெருப்புப்பற்றி யெரியும்படியும், பாண்டவர்மீது செல்லும்போது - பாண்டவர்கள்மேல் வரும்போது, எந்தை - ஸ்ரீ கிருஷ்ணன், ''யாரும் - எல்லாரும், ஊர்தி சந்தம் சிலை விடுத்து இரும் - வாகனங்களையும் அழகிய வில்லையும் நீக்கிவிட்டு நில்லுங்கள்'', என்று - என்று கட்டளையிட்டு, (தானும்) இரதம் தணந்து - தேரினைவிட்டு இறங்கி, நரனோடு - அருச்சுனனோடு, கை தலைமேற்கொண்டான் - தன் கைகளையும் சிரசின் மேல்கொண்டு கூப்பி வணங்கினான்;. (எ-று)

நாராயணாஸ்திரம் மந்திரபலத்துடனே எதிர்ப்பக்கத்தவரனை வரையும் அழித்தற்கு வர, அனைவரும் கைகள் குவியத் தலைமேல் வைத்தனரென்க. அரியமறை – வேறு எந்த மந்திராஸ்திரபலத் தினாலுந் தடுக்கமுடியாத பேராற்றலையுடைய மந்திரம் என்றபடி. இரும் - முன்னிலையேவல். எந்தை - ஆசிரியரின் கிருஷ்ணபக்தி தெரிப்பது. (16)

17. நாராயணாஸ்திரம் வீமன்மேற்செல்ல, அவன் அதைப் பலவாறு தடுத்தல்.

மாருதியன் றியாருநிரா யுதராய்நின் றார்
வருமாலம் போரொருவர் மயிர்க்கா றோறும்
ஓரொருவெங் கணையாய்வந் தியாரு மேதி
யொழிதலுணர்ந் தொருவன்மிசை யுறவவ் வீமன்
தேரூர்ந்தே யனேகவிதப் படையாய் வந்த
திறல்வாளிக் கெதிர்வாளி செலுத்தி மாற்ற
நேரில்படை மீட்டவன்கை காரேண் மூச்சால்
நெடுமொழியா லலைப்புண்டு நிறம்பாய்போது.

(இ-ள்) மாருதி அன்றி - வீமனைத்தவிர, யாரும் - அனைவரும், நிராயுதராய் நின்றார் - (கையிற்) படையெடாதவராய் (வணங்கி) நின்றார் : வரும் மால் அம்பு - மேல்வந்த நாராயணாஸ்திரம், ஓர் ஒருவர் மயிர்க்கால்தோறும் ஓர் ஒரு வெம் கணையாய் வந்து - ஒவ்வொருவரது (உடம்பிலுமுள்ள) மயிர்க்காலொவ்வொன்றுக்கும்

ஒவ்வொரு கொடிய அம்பாய்ப்பெருகிவந்து, யாரும் ஏதி ஒழிதல் உணர்ந்து - (எதிரிலுள்ள) அனைவரும் படையின்றி நிற்றலையறிந்து, ஒருவன் மிசை உற - (போர்க்குரிய ஆயுதத்தையேந்தியுள்ள) வீமன்மேல்வர, அ வீமன் - அந்த வீமன், தேர் ஊர்ந்து - (தன்) தேரைச்செலுத்தி, அநேக விதப் படையாய் வந்த திறல் வாளிக்கு - அநேகவடிவங்களோடு தெய்வாஸ்திரங்களாய்ப் பரிணமித்துவந்த வலிய நாராயணாஸ்திரத்துக்கு, எதிர் வாளி செலுத்தி - அதற்குப்பகையான எதிரம்புகளைவிடுத்து, மாற்ற - விலக்க, மீட்டு - மறுபடியும், நேரில் - [அவனுக்கு] நேர் எதிராக, படை - அந்த நாராயணாஸ்திரம், அவன் - அவ்வீமனது, கை கால் தோள் மூச்சால் நெடுமொழியால் அலைப்புண்டு - கைகளாலும் கால்களாலும் தோள்களாலும் மூச்சுக்காற்றினாலும் வீரவார்த்தைகளாலும் அலைக்கப்பட்டு வருந்தி, (இறுதியில்) நிறம் பாய் போது - (அவனது) மார்பினில் பாய்கின்றசமயத்தில்; (எ.று.)

அந்தச்சிறந்த நாராயணாஸ்திரத்திற்கு படையெடாதவர்மேற் புக்குத் தொழில்செய்யாமை இயல்பென்க. நாராயணாஸ்திரம் அலைப்புண்டது திருமாலின் அருளாலென்க. கை கால் தோள் மூச்சால் - மூன்றனுருபு முன்னருங் கூட்டப்பட்டது. நிறம் - மார்பு: ''செற்றார்நிறம் பாய்ந்தகணை'' (கலித்.57) (17)

18. **கிருஷ்ணன் வீமனையும் அந்த அஸ்திரத்துக்குத் தப்புவிக்க, அசுவத்தாமன் மீளுதல்.**

மாசுணப்பைத் தலையினடித் தவன்போய் வீமன்
வாகனவா யுதங்களையு மாற்று விப்பக்
கேசவனுத் திரமடங்கி நாணித் தன்பாற்
கிட்டிடக்கண் டயத்தாமன் கிளரேழ் நாவோன்
ஆசுகமோச் சினனதுமா திரங்க ளெங்கும்
அழற்சொரிந்து மேவவதை யலரோ னேவால்
வாசவன்சேய் தடுப்பபடை மடங்க வாசான்
மகன்சிலையம் பெறிந்தெறிந்து மடங்கிப்போனன்.

(இ-ள்) மாசுணம் பைத்தலையில் நடித்தவன் - காளியன் என்னும் பாம்பின் படங்கொண்ட தலையின்மேல் நடனஞ்செய்த கிருஷ்ணன், போய் - விரைந்துசென்று, வீமன் - வீமனது, வாக

னம் ஆயுதங்களையும் மாற்றுவிப்ப - வாகனங்களையும் படைக்கலங்களையும் நீக்குவிக்க, (அப்போது) கேசவன் அத்திரம் - நாராயணாஸ்திரம், மடங்கி - ஒடுங்கி [சாந்தமாகி], நாணி - (அவ்வீமனைக் கொல்லுதற்கு) வெள்கிப்போய், தன்பால் கிட்டிட கண்டு - தன்னிடத்தே திரும்பிவருதலைப் பார்த்து, அயத்தாமன் - அசுவத்தாமன், கிளர் ஏழ் நாவோன்ஆசுகம் - பொங்கியெழுகின்ற ஏழுநாக்குக்களையுடைய அக்னியின் அத்திரத்தை, [ஆக்நேயாஸ்திரத்தை], ஓச்சினன் - வீசியெய்தான் : அது - அந்த அஸ்திரம், மாதிரங்கள் எங்கும் - திக்கினிடங்களிலெல்லாம், அழல் சொரிந்து மேவ - நெருப்பைக்கக்கிக்கொண்டு பொருந்திவர, அதை - அந்த ஆக்நேயாஸ்திரத்தை, அலரோன் ஏவால் - பீரமனது அம்பினால் (பிரம்மாஸ்திரத்தினால்), வாசவன்சேய் - இந்திரன்மகனாகிய அருச்சுனன், தடுப்ப - தடுத்துநிறுத்த, படை மடங்க - அந்த அஸ்திரம் ஒடுங்க, (அதுகண்டு) ஆசான் மகன் - துரோணன் மகனாகிய அசுவத்தாமன்,சிலை எறிந்து - வில்லைவீசியெறிந்து, அம்பு எறிந்து - அம்புகளை வீசியெறிந்து, மடங்கிப்போனான் - திரும்பிச்சென்றான் ; (எ.று)

வீமனை நாராயணாஸ்திரம் கிருஷ்ணன் செய்வித்த தந்திரச் செயலாற் கொல்லாமலொழிந்தது. ஏழ்நாவோன் - அக்னி : அக்னி ஏழுநாவையுடையோன் என்பர் : அவைகளின்பெயர் - காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சுதூம்பரவருணை, புலிங்கினி, விசுவரூபி என்பன. சிலையம்பு எறிந்தெறிந்து - தனித்தனிபிரித்துக் கூட்டிப்பொருள்கொள்ளப்பட்டது. அடுக்கு - வெறுப்பினைத்தெரிப்பது. மடங்குதல் - ஒடுங்குதல், மீளுதல், திரும்புதல். (18)

19. அசுவத்தாமனிடம் வியாசன்வந்து சமாதானங் கூறுதல்.

இரண்டு கவிகள் - ஒரு தொடர்.

பொருமுகம்விட் டகலாசான் சுதன்பால் வியாதன்
புகுந்தெவணீ புகுதலுரை புதல்வ ! வென்ன
செருமுனையின் மந்திரம்பொய்த் தேதி யாற்றல்
சிதைந்ததொன்னார்க் கடங்கிடலாற் றேவி லென்றே
கருதிதவஞ் செயவகன்றேன் மறைகண் மாய்ந்த
காரணஞ்செப் பையவெனக் கற்கித் தாமா
இருகைகுவித் திடமுனிவன் திட்டத் துய்மன்
எரிமகத்தி லுதித்ததுந்தை யிகுத்தற் கோர்தி.

(இ-ள்) பொருமுகம் விட்டு அகல் - போர்முனையைவிட்டுச் சென்ற, ஆசான் சுதன்பால் - அசுவத்தாமாவினிடத்து, வியாதன் புகுந்து - வியாசன்வந்து, 'புதல்வ! - மகனே! நீ புகுதல் எவண்! - நீ எங்கே போகப்போகிருய், உரை - சொல்வாய், என்ன - என்று வினவ, (அதற்கு அசுவத்தாமன்) செருமுனையின் - போர்க் களத்து, மந்திரம் பொய்த்து - (அஸ்திரங்களைப்பிரயோகிக்கும்) மந் திரங்கள் பழுதுபட்டு, ஏதி - ஆயுதங்கள், ஆற்றல் சிதைந்து - வலிமைகெட்டு, ஒன்ருர்க்கு அடங்கிடலால் - பகைவர்க்குத்தாழ்ந்து அடங்கிப்போவதால், தேவு இல் என்று கருதி - தெய்வமே இல்லை யென்று எண்ணி, தவம் செய அகன்றேன் - தவத்தை மேற்கொள் ளப்போகின்றேன் : மறைகள் மாய்ந்த - வேதங்கள் இல்லையாயின : (இவ்வாறு ஆவதற்கு) ஐய - பெரியோனே ! காரணம் செப்பு - கார ணம் என்னவென்று கூறுவாயாக, என - என்று வினவி, கற்கித் தாமா - அசுவத்தாமா, இரு கை குவித்திட - இரண்டு கைகளையும் கூப்பி வணங்க, முனிவன் - வியாசன், திட்டத்துய்மன் - திருஷ்டத் யும்நன், எரிமகத்தில் உதித்தது - யாகாக்னியில் தோன்றியது, நுந்தை - உன் தந்தையாகிய துரோணனை, இகுத்தற்கு - கொல் வதற்காகவே : (இதனை) ஓர்தி - அறிந்துகொள் ; (எ.று.)

துருபதன்பெற்றவரத்தினுல் அவன் செய்வித்த வேள்வித்தீயி னின்றுதோன்றிய திட்டத்துய்மன் உனது பிதாவான துரோண னைக்கொல்வதற்காகவே சமைந்தான் என்பதையறிக என்றுவியா சன் அசுவத்தாமனைத்தெருட்டினுன். இதனுல் 'தேவு இல்லை' என்ருே, 'மறைகள் மாய்ந்த' என்ருே கூறுவது தவறு எனக் காட்டியபடி, கற்கி - குதிரை, அசுவம்: கற்கித்தாமா - பரியாயப்பெயர் உதித்தது - குறிப்புவினையாலணையும்பெயர். உந்தை - மரூஉ. ஓர்தி - முன்னிலைவினை முற்று. (19)

20: ஆதலினு லவனிகுத்தா னன்றி யாவர்
அடுப்பவர்க ளுந்தையைமுன் னரணைப் போற்று
சீதரனுந் திதித்தொழிலைச் செய்வான் மெய்யிற்
செனிப்பித்த நரநாரா யணரே வந்து
பூதலத்தி னரன்மாலா யுதித்து மெய்ம்மைப்
புரவலனுக் கரசளிப்பான் பொருந்தி ஞர்மேற்
காதமர்செய் துட்டரட லவர்பாற் சேருங்
கடவுளரு மவர்தமக்கே கருணை செய்வார்.

(இ-ள்) ஆதலினால் - , அவன் இருத்தானன்றி - அந்தத் திட்டத்துய்மன் கொன்றானேயன்றி, உந்தையை - உன்தந்தை யாகிய துரோணனை, அடுப்பவர்கள் யாவர் - கொல்பவர்கள் எவருளர்? (ஒருவருமிலர்): முன் அரனைப் போற்று - இனி முன்பாக [பிறவித்துன்பம்நீங்க] சிவபிரானைத்தியானிப்பாய்: சீதரனும் - திருமாலும், திதித்தொழிலைச்செய்வான் - (குருசிஷ்யகிரமத்தைக் காட்டிக்) காக்குந் தொழிலைச்செய்யும்பொருட்டு, (தாமே) மெய்யில் செனிப்பிதத - (தமது) உடம்பினின்று தோற்றுவித்த, நர நாராயணரே வந்து - நரன் நாராயணர் என்ற இருவருமாக இறங்கிவந்து, பூதலத்தில் – இந்த நிலவுலகத்தில், நரன் மாலாய் உதித்து - அருச்சுனன் கிருஷ்ணனாய் அவதரித்து, மெய்ம்மைப் புரவலனுக்கு - சத்தியவிரதனான தருமராசனுக்கு, அரசு அளிப்பான் பொருந்தினார் - அரசாட்சியை வழங்குவதற்காகத் துணிந்துள்ளார்: மேல் - மற்றும், காது அமர் செய் துட்டர் அடல் - மோதுகின்ற போரைச்செய்யும் துஷ்டர்களது வலிமை, அவர்பால் சேரும் - அந்த நரநாராயணர்பக்கல் போய் அடையும்: கடவுளரும் - தேவர்களும், அவர்தமக்கே - அவ்விருவர்கே,கருணைசெய்வார் - தயைபுரிவார்கள்; (எ.று.)

இச்செய்யுளில் பின்மூன்றடிகளிற்குறித்தசெய்தி, பூமிபாரந் தீர்த்தற்கு நரநாராயணர் கிருஷ்ணார்ச்சுனராய்த்தோன்றினரென் பது. முன்னொருகாலத்தில் குருசிஷ்யகிரமத்தை உலகத்தில் அனை வர்க்கும் விளக்கும்பொருட்டு நரனென்னும் சிஷ்யனும் நாராயண னென்னுங்குருவுமாகப் பதிரிகாச்சிரமத்தில் திருமால் தோன்றிச் சிஷ்யனுக்குக் குரு தத்துவப்பொருள்களை யுபதேசிப்பதற்காக வீற் றிருக்கின்றனர்: "நரநாரணனாயுலகத்தறநூல், சிங்காமை விரித்தவ னெம்பெருமான்" என்பது பெரியதிருமொழி. அவர்கள்தாமே இங்கு முறையே அருச்சுனனும்கண்ணனுமாக அவதரித்தவர்; இங்கும் அருச்சுனனைச்சிஷ்யனாக்கிக் கிருஷ்ணன் குருவாய்நின்று தத்துவம் விளக்கியருளுதல்காண்க. இதுபற்றியே அருச்சுனனுக்கு நரனென்று ஒருபெயர். திதி - ஸ்திதி: நிலை பெறக்காத்தல் என்றபடி, திருமால் காத்தற்கடவுளாவன். அரசளிப்பான் - பானீற்றுவினையெச்சம். (20)

21 : வியாசன் உபதேசித்து மீள, இருதிறத்தவரும் மலைதல்

ஆனதினாற் கைதவங்கொள் அரசுக் காய்நீ
அமர்செயலான் மந்திரமா சுகமும் வாளா
போனதென வுணர்தியர வுயர்த்தோ னாவி
பொன்றியபின் தவம்புரியப் போதி யென்று

சேனையுறுங் களத்துறுவித் தாய்ந்தோன் மால்பாற்
சென்றிதெலாம் உரைத்தகன்ருன் சினத்து மீட்டும்
வானவருட் கிடவுபய வர்க்கத் தோரும்
மலைதலினெண் ணறுதானை மடிந்த வம்மா.

(இ-ள்) ஆனதினுல் - ஆகையால், கைதவம் கொள் அரசுக்காய் - கபடம் மிக்க துரியோதனராசனுக்காக, நீ — , அமர்செயலால் - போரிடலால், மந்திரம் ஆசுகமும் - மந்திரங்களும் (அவற்றைச் செபித்துப்பிரயோகித்த) அஸ்திரங்களும், வாளாபோனது - வீணுய்ப் போய்விட்டன : உணர்தி - நீ தெரிந்துகொள்வாய் : அரவுயர்த்தோன் ஆவி பொன்றியபின் - துரியோதனன் உயிர்நீத்தபின்னர், தவம் புரிய போதி-நீ தவஞ்செய்யப்போவாய்,என்று என்றுஇவ்வாறு, சேனை உறும் களத்து - போர்க்களத்து, உறுவித்து - உபதேசித்து, ஆய்ந்தோன் - வேதங்களை வகுத்த வியாசமுனிவன், மால்பால் சென்று - கிருஷ்ணனிடம் போய், இது எலாம் உரைத்து - இவற்றையெல்லாம்சொல்லி, அகன்ருன் - போயினுன் : (பிறகு) மீட்டும் - மறுபடியும், சினத்து - கோபித்து, உபயவர்க்கத்தோரும் - பாண்டவர்கௌரவராகிய இருதிறத்தவரும், வானவர் உட்கிட - தேவர்களும் அஞ்சும்படி, மலைதலின் - போரிடுதலால், எண்ணறு தானை - கணக்கற்ற சேனை, மடிந்த - இறந்தன ; (எ.று.) அம்மா - வியப்பிடைச்சொல்.

கைதவம் - கபடம், பொய், பொய்யனுக்காகப் போரிட்டால் மந்திரமும் பலிக்காது என்பது பெறவைக்கப்பட்து. (21)

22: சூரியன் அஸ்தமிக்க இருதிறத்தவரும் படைவீட்டையடைதல்.

நென்னலின்வை கறைபுகுந்தின் றந்தி காறும்
நெடும்போர்செய் திடுமயர்வா னிருதர் தன்னை
இன்னமகன் றிலனெனநேர்ந் தொறுப்ப ரென்ன
ஏகுவன்போ லத்தகிரி யினன்போய்ச்சார்ந்தான்
அன்னபொழு திருவருக்கத் தவரும் பாடி
அனிகமொடுஞ் சென்றடைந்தார் ஐந்து நாட் போர்
பன்னுமிந்தத் துரோணபர் வத்தின் செய்யுட்
பகரிருநூற் றெழுபத்தெட் டாய தன்றே.

(இ-ள்) நென்னலின் - நேற்றையதினம், (வைகறை) புகுந்து - விடியற்காலையில் (போர்க்களம்) புகுந்து, இன்று - (மறுநாளாகிய) இன்றையதினம், அந்தி காறும் - மாலைவரையில் (இடைவிடாமல் நேற்றிராத்திரியுட்பட) நெடும் போர் செய்திடும் அயர்வால் - நீண்ட போரைச் செய்த களைப்பினால், நிருதர் - அரக்கர்கள், தன்னை - (சூரியனாகிய) தன்னை, இன்னம் அகன்றிலன் என நேர்ந்து - இன்னமும் அத்தமித்து நீங்கிற்றிலனே என்று ஒருப்பட்டு, ஒறுப்பர் என்னா - வருத்துவர் என்றுஎண்ணி, ஏகுவன் போல் - செல்பவன்போல, இனன் - சூரியன், அத்தகிரி போய்ச் சார்ந்தான் - அத்தமனமலையைப்போய்ச்சேர்ந்தான் : (அத்தமித்தான்என்றபடி) அன்ன பொழுது - அந்தச் சமயத்தில், இருவருக்கத்தவரும் - இருதிறத்துவேந்தர்களும்: அனிகமொடும் - தத்தம சேனைகளோடும், பாடி சென்று அடைந்தார் - படை வீட்டினைச்சென்று சேர்ந்தார்கள்: (இங்ஙனாகி) ஐந்துநாள் போர் பன்னும் - ஐந்துநாட்கள் நடந்த போரினைப்பற்றிச்சொல்லும், இந்தத் துரோணபர்வத்தின் செய்யுள் - இந்தத் துரோணபர்வத்திலுள்ள மொத்த செய்யுட்கள், பகர் - சிறப்பித்துப்பேசும்படியுள்ள, இருநூற்றெழுபத்தெட்டு ஆயது - இருநூற்றெழுபத்தெட்டாகும்; (எ.று.) அன்றே - ஈற்றசை : தேற்றமுமாம்.

துரியோதனன் நான் 'இவ்விரவினையப்பகலாக்கியிகல்செய்வேன்' (செ: 95 பதினான்காம் போர்ச்சருக்கம் என்று கூறி இராத்திரியெல்லாம் விடாமல் போரைநடத்தி, மறுநாளும் காலை முதல் மாலை வரை நடத்தியதால், 'நென்னல்வைகறை புகுந்து இன்று அந்திகாறும் நெடும்போர்செய்தனர்' என்பது விளங்கும். நிருதரேஅயர்ந்தனர் என்பது போரின் கடுமை காட்டும். அரக்கர்கள் அலாயுதன் கடோற்கசன் இவர்கள்பக்கல்நின்று போரிட்டனர் என்பது நினைக. 'ஒறுப்பர்என்னா ஏகுவன்போல்' என்றது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி. நென்னல் - நெருநல் என்பதன் மரூஉ. அயர்வு - தொழிற்பெயர். (22)

பதினைந்தாம் போர்ச்சருக்கம் முற்றிற்று.

துரோணபருவம் முற்றிற்று.

துரோண பருவத்தின் அபிதான சூசிகையகராதி

அசுவத்தமன் —துரோணன் மகன், 11-3; அபிமனுக்குப் புறமிடல், 13-43; அருச்சுனன் விடுத்த சூரியாஸ்திரத்தைத் துணித்தல், 14-35; கடோற்கசன் மகனைக்கொல்லுதல், 14-91; துரியோதனனுக்கு அறிவூட்டுதல், 14-100; கடோற்கசனிடம் தோற்றல், 14-103; பித்ரு சோகத்தால் புலம்புதல், 15-11; நாராயணஸ்திரம் பிரயோகித்தல்' 15-16; வியர்சர் சமாதானம் செய்தல், 15-19

அஞ்சனபத்மன் —(கடோற்கசன்மகன்) அசுவத்தாமனால் கொல்லப்பட்டான், 14-91.

அநுவிந்தன் —அவந்தியரசன் ; அருச்சுனனால் தலைதுணிபடல், 14-18.

அபிமன் —இலக்கணகுமாரனெடு பொருதல், 11-19; அவனைத்தேரிற்பிணித்தல், 11-20; புதனையொத்தவன் 11-20; சக்கரவியூகம் பிளந்து வெல்லப்போதல், 13-6 படைஞர்பலர் தோற்றழிதல், 13-10; அபிமனிடம் தோற்றபெரும்படைத்தலைவர்கள், 13-13,14. துரோணனே பாராட்டுதல், 13-15; அபிமனைப்பலர்வளைதல், 13-26; நாற்படைகளும் களத்தவித்தல், 13-29; பல அரசிளங்குமரர் புறமிடச்செய்தல், 13-30; கந்தனெனநின்றவன், 13-30: இலக்கணகுமாரனையழித்தல், 13-33; துரோணனை மும்முறை தோற்கடித்தவன், 13-41; தேருருளையைச் சக்கரப்படையாகக் கொண்டு பொருதல், 13-42; அசுவத்தாமன் புறமிடல், 13-43; துச்சனியால் இறத்தல்,13-45; துட்டசதுட்டர் தவிர ஏனையோரனைவரும் இரங்கிக் கண்ணீர்சொரிதல், 13-47.

அருச்சுனன் —தருமனின் கவலை போக்கல், 11-11. பகதத்தனைக்கொல்லுதல், 12-22; காந்தாரரைத்தொலைத்தல், 12-23; சகுனி சுதரைக்கொல்லுதல், 12-23; அபிமன் இறந்தமைக்குப் புலம்பி அரசரை வெகுளுதல், 13-57, செய்த சபதங்கள், 13-62,63,64. கிருஷ்ணனோடு கைலைசேர்தல், 13-79; சிவனைத்துதித்தல், 13-81,82; உருத்திர மந்திரம் நூறுதரம் ஜபித்தல், 13-86; நாகமாகிய வில்லினைச் சிவன்முன்வைத்தல், 13-86; சிவ பிரானிடம் முட்டிநிலைகற்றல், 13-87; கிருஷ்ணன் மேலிட்ட மலர்களைச் சிவனிடம்காணல், 13-89; துன்மருடணனை யெதிர்த்துப் புறமிடச் செய்தல், 14-7,8; களத்தில் தடாகம் உண்டாக்கல்,14-18 ; பூரிசிரவாவின் தோள்துணித்தல், 14-62 ; சயத்திரதன் தலைதுணித்தல், 14-77; களத்திலேயே துயிலச்சொல்லுதல், 14-113; திட்டத் துய்மனை வெகுளல், 15-13.

அலம்புசன் —கடோற்கசனையெதிர்த்தல், 14-29; கடோற்கசனால் கொல்லப்படல், 14-106.

அலாயுதன் —வீமனோடு பொருதல், 14-107; கடோற்கசனோடு பொருதல், 14-108.

இந்திரவர்மா —மாளவநாட்டரசன்; இவனது யானையின்பெயர் அசுவத்தாமா, 15-6;

இலக்கண குமாரன் —துரியோதனன் மகன், 11-19; அபிமனோடு பொருதல், 11-19 ; அவனால் தேரிற் பிணிக்கப்படுதல், 11-20; அபிமனால் தலையிழத்தல், 13-33.

உத்தமோசா —அருச்சுனனோடு புடைசூழ்ந்துபோதல், 14-7; துரியோதனனைத் தேரிழக்கச்செய்தல், 14-49.

உத்தரை —அபிமனுக்குக்கலுழ்தல்; கிருஷ்ணன் தேற்றுதல், 13-75.

உதாமன் —அருச்சுனனோடு புடைசூழப்போதல், 14-7; துரியோதனனைத் தேரிழக்கச்செய்தல், 14-49.

கங்கை —வீடுமனைப்பெற்றவள், 11-4.

கடோற்கசன் —அலம்புசனையெதிர்த்தல், 14-29 ; தன் மகனிறக்கவே போருக்கு அசுவத்தாமனேடு வர, அவன் இவனையடித்துவீழ்த்துதல், 14-92; அசுவத்தாமனை வெல்லுதல்; 14-103; அலம்புசனைக் கொல்லுதல், 14-106, கர்ணன் எறிந்தவேலால் இறத்தல்,14-111.

கர்ணன் —சூரியபுத்திரன், 11-3; துரோணனைப் பரிகசித்தல், 12-26; அபிமனிடம் தோற்றல், 13-17; அபிமன் கையில்லைத்துணித்தல், 13-37; அபிமனின் கேடகத்தைப் பயனிலதாக்குதல், 13-41; துரோணனிடம் வஞ்சினம் கூறுதல், 14-56; வீமனை விற்குதையால் கட்டுதல், 14-58; வீமனை இகழ்ந்து பழித்தல், 14-59; சொல்லால்பார்த்தனை வென்றவன், 14-80; கடோற்கசனை வேலாற்கொல்லுதல், 14-111.

காம்போசன் —அருச்சுனனேடு பொர வருதல், 14-11.

கிருஷ்ணன் —துவாரகையதிபன், 11-1, அருச்சுனனுக்குத் தேர்ச்சாரதி, 11-24; பகதத்தன் எறிந்தவேல் மார்பில் மாலையாய் விளங்குதல், 12-20; பகதத்தனுயிர் கவர அருச்சுனனுக்கு அம்புகொடுத்தல், 12-22; அருச்சுனன் கையில் ஆயுதமிலாதபடி செய்தல், 13-55; அருச்சுனனைத்தேற்றுதல் 13-61; தருமனைத்தேற்றுதல், 13-67; சுபத்திரை, திரௌபதி, உத்தரை இவர்களைத்தேற்றுதல், 13-75' சிவனும்யானும் ஒருவரேயாவோமெனல், 13-76; தன் தேர்ச்சாரதி தாருகனை நோக்கிக்கூறுதல், 13-77; அருச்சுனனுடன் கைலைசேர்தல், 13-79; சிவனைத்துதித்தல்,13-81, 82; துரோணனைவிலக்கித் தேரை முன்செலுத்துதல், 14-10; சுதாயுவிட்டகதையைத் தன்மார்பில் ஏற்றல், 14-15; தேர்க்குதிரைகளை நீர்பருகுவித்தல், 14-19; அருச்சுனனுக்கு வேல் தருதல், 14-36; சாத்தகி பூரிசிரவாவிடம் தோற்றமைக்குக் காரணம் கூறுதல், 14-65; திருவாழியால் சூரியனை மறைத்தல், 14-75; ஆழிநீக்கச்சூரியன் விளங்குதல், 14-77; பகலையிரவாக்கினேன்,

14-95; துரோணனைக்கொல்ல இதுவே சமயமென்று திட்டத்துய்மனிடங்கூறுதல், 15-6; தருமனை அசுவத்தாமா என்ற பேரை மாறுபாடாகச்சொல்லச்சொல்லுதல், 15-6; நாராயணாஸ்திரத்தை வணங்கச் சொல்லல், 15-16. வீமனை நாராயணாஸ்திரத்திலிருந்து தப்புவித்தல் 15-18.

கிருதவர்மன் —சல்லியனை உய்யக்கொண்டுபோதல், 11-22; அருச்சுனனை எதிர்த்தல், 14-12; அருச்சுனனுக்கு உட்குதல், 14-13.

கிருபன் —அபிமனுக்குப் புறமிடல், 13-35; பொன்றினன் போல் தேர்மேற்சாய்தல், 14-80; கர்ணனைப் பரிகசித்தல், 14-97

குந்திபோசன் —துரோணனை எதிர்த்தல், 15-2

சகதேவன் —சகுனியுடன் பொருதல், 11-15; அபிமனிறந்ததனால் புலம்புதல், 13-49; துன்முகனோடு பொருதல், 14-28

சகுனி —சகதேவனுடன் பொருதல், 11-15; தருமனுக்குப் பின்னிடல், 12-24; அபிமனுக்குப் புறமிடல், 13-35;

சஞ்சத்தகர் —வென்றிகொள்ளும் வல்லமையுடையர், 11-24; சபதமுரைத்தல், 11-25.

சதானிகன் —சல்லியனை வெல்லுதல், 14-103

சதாயு —(சுதாயுவின் தம்பி) அருச்சுனனையெதிர்த்து அழிதல், 14-16

சயத்திரதன் —சிந்து அரசன், 11-20; சிவனருளால் அனைவரையும் விஞ்சுதல், 13-25; அருச்சுனன் சபதத்திற்குக் கவலல், 13-68; துரியோதனன் தேற்றுதல், 13-69; அருச்சுனனால் தலைதுணிக்கப்படல், 14-77

சல்லியன் —வீமன் மேல் வருதல், 11, 16; வீமன் கதையால் தரையில் விழுதல், 11-22; சதானிகனிடம் தோற்றல், 14-103;

சலசந்தன் —சாத்தகியால் ஒடுக்கப்படல், 14-40;

சாத்தகி —தருமனுக்குக் காப்பாதல், 14-6; திட்டத் துய்மனுக்கு உதவ வருதல், 14-24; துரோண னுடன் சமமாகப் போரிடல், 14-25; அவரால் மதிக்கப்படல், 14—26; கிருஷ்ணன் ஊதிய சங்கொலி கேட்டு மன்ங்கலங்கிய தருமனுல் கண்டு வர அனுப்பப்படல், 14-39; சலசந்தனை யொடுக்குதல், 14-40; துரியோதனனைக் கால் நடையினருக்குதல், 14-40; பூரிசிரவாவைத் தலை துணித்தல், 14-63; பூரிசிரவாவிடம் முதலில் தோற்றமைக்குக் காரணம், 14-65,

சுதாயு —மகரவியூகத்தில் நிற்றல், 13-1, அருச்சுனன் மேல் கதாயுதம் எறிதல், 14-14; தான் விட்ட கதையைக் கிருஷ்ணன் மார்பில் ஏற்கத் தான் இறத்தல், 14-15.

சுபத்திரை —அபிமனிறந்தமைக்குப் புலம்பல், 13-74; கிருஷ் ணன் தேற்றுதல் 13-75.

சுவணெட்டி —(ஸ்வர்ணஷ்டீவி) இவன் கதை, 13-52,53,54.

சோமதத்தன் —சிகண்டியிடம் தோற்றல், 11-18.

தருமபுத்திரன் —(உதிட்டிரன்) அருச்சுனனை உக்கிரமாய்ப் பொரச் சொல்லுதல், 11-10; மண்டலவியூகம் வகுத்தல், 12-2; படையிழந்த துரோணனை யேகுமாறு சொல்லல், 12-10; தன் சேனையழிதல் கண்டு கிருஷ்ணனை நினைத்தல் 12-18; திட்டத் துய்மனுக்கு இதமுரைத்தல், 13-4; சக்கர வியூகத்தைப் பிளந்து வெல்ல அபிமனை யனுப்புதல், 13-5; அபிமனிறந்தமைக்குப் புலம்பு தல், 13-48; அருச்சுனனைக் கிருஷ்ணனிடம் அடைக்கலமீதல், 14-2; தருமனுக்குச் சாத்தகி

காப்பாதல், 14-6; துரோணனோடு பொருது அயர்ந்து மீளல், 14-28; மனங்கலங்கிச் சாத்தகியை யனுப்புதல், 14-39; தருமன் இரவில் விளக்கெடுப்பித்தல், 14-95; பொய் சொல்ல உடன்படாமை, 15-7.

தாருகன் —கிருஷ்ணன் தேர்ச்சாரதி, 13-79.

திட்டகேது —திருஷ்டத்யும்நன் மகன் : துரோணனால் கொல்லப்படல், 14-88.

திட்டத்துய்மன் —கிரௌஞ்சவியூகம் வகுத்தல், 11-13; துரோணனை யெதிர்த்தல், 12-5; மகரவியூகம் வகுத்தல், 13-2; துரோணனுக்கு வில்கவசம் துவசம் இழத்தல், 13-3; இராசமண்டலமாய் வியூகம் வகுத்தல், 14-3; துரோணனது தலையைத் துணித்தல், 15-10; அருச்சுனனை நிஷ்டூரமாகக் கூறுதல் 15-14.

திரிகர்த்தன் —சஞ்சத்தகரில் ஒருவன், 11-24.

திரௌபதி —அபிமனிறந்தமைக்குக் கலுழ்தல், கிருஷ்ணன் தேற்றுதல், 13-75.

துச்சனி —துச்சாதனன் மகன்: அபிமனைக் கொன்று தானும் இறத்தல், 13-45.

துச்சாதனன் —அபிமனுக்குத் தோற்றல், 13-16

துர்ச்சயன் —துரியோதனன் தம்பி, 14-50; வீமனால் இறந்துபடல், 14-51

துரியோதனன் —(சுயோதனன்) தருமனையகப்படுத்தத் துரோணனை வேண்டுதல், 11-6; தன் மகன் தாழ்வுக்கு இரங்கித்துயிலாதிருத்தல், 11-23; சஞ்சத்தகரைச் சிறப்பித்தல், 11-25, மகரவியூகம் படுத்தல், 12-3; அபிமனிடம் தோற்றல், 13-17; வீமனையும் அபிமனையும் பிரித்தே பொருதல்

நன்று எனல், 13-21; இருவரையும் சேராதபடி விலக்கச் சயத்திரதனைச் சொல்லுதல், 13-23; மகனிறந்தமைக்குப் புலம்பல், 13-34; துரோணனிடம் கவசம் பெறல், 14-22; உத்தமோசா உதாமன் இருவரோடும் போரிட்டுத் தன் தேரினையிழத்தல், 14-49; வல்லால் ஐவரை வென்றவன், 14-80; இரவில் விளக்கெடுப்பிக்கச் செய்தல், 14-95; கடோற்கசனை வேலினுற் கொல்லும்படி கர்ணனேடு கூறல், 14-110.

துருபதன் —பகதத்தனேடு பொருதல், 11-18; இவன் சிலையைத் துரோணன் துணித்தல், 12-6; துரோணனுல் தலைதுணிக்கப்படல், 14-112.

துரோணன் —ஆரியன், 11-3; சேனுபதியாதல், 11-5; சகடயூகம் வகுத்தல், 11-13; தருமனுக்குப் படையிழத்தல், 1210; பதுமவியூகம் வகுத்தல், 13-1; திட்டத்துய்மனின் துவசம் வில் கவசம் அழித்தல், 13-3; அபிமனைப் பாராட்டுதல், 13-15. அபிமனுக்கு மும்முறை தோற்றனன் 13-41; அபிமனின் கைவாளினைத் துணித்தல், 13-41; சூசிகா வியூகம் வகுத்தல், 14-3; அருச்சுனனின் விநய மொழி கேட்டு அவனை விட்டிடல், 14-11; துரியோதனனுக்குக் கவசம் அளித்தல், 14-22; சாத்தகியோடு சமமாகப் போரிடல், 14-25; அவனை மதித்து மெச்சுதல், 14-26; செய்யும் சபதம், 14-85; திட்டகேதுவைக் கொல்லுதல், 14-88; விராடனையும் துருபதனையும் தலைதுணித்தல், 14-112; முனிவர் உபதேசத்தால் போரொழிந்து நிற்றல், 15-5; படைக்கலம் கைவிட்டு நிற்றல், 15-9; தலைதுணிக்கப்படல், 15-10.

துன்மருடணன் —அருச்சுனனுக்குப் புறமிடுதல், 14-8.

துன்முகன் —சகதேவனேடு பொருதல், 14-28

நகுலன் —சல்லியனைத் தகைதல், 11-16; சல்லியனை வெல்லுதல், 11-1 ; அபிமனிறந்தமைக்குப் புலம்புதல், 13-49; விகர்ணனேடு பொருதல், 14-28,

பகதத்தன் —துருபதனோடு பொருதல், 11-18; வீமனோடு பொருதல், 12-16; வீமன் சேனையையழித்தல், 12-17; இவன் எறிந்த வேல் கிருஷ்ணன் மார்பில் மாலையாய் விளங்குதல், 12-20. இந்திரன் இவனுக்கு ஈந்த வரம், 12-21; அருச்சுனனால் கொல்லப்படல்,12-22

பூரிசிரவசு —சாத்தகியை அறைகூவல், 14-60; சாத்தகியால் தலை துணிக்கப்படல், 14-63; சாத்தகியை முதலில் தோற்கடித்தமை, 14-64.

வபுட்டை —ஜனமேஜயன் மனைவி, 11-2.

வாகுலிகன் —(பாகிலீகன்) சோமதத்தன் தந்தை; வீமனால் கொல்லப்படல், 14-93.

வாலவீமன் —அருச்சுனனால் கொல்லப்படல், 15-1

விகர்ணன் —நகுலனோடு பொருதல், 14-28; வீமனோடு பொருது இறத்தல், 14-55

விடசேனன் —(கர்ணனின் மூத்த மகன்) அருச்சுனன் இவனை வீழ்த்தல் திண்ணம் எனல், 14-67; சாத்தகியால் பதாதியாதல், 14-113;

விந்தன் —அவந்தியரசன்: அருச்சுனனால் தலை துணிபடல், 14-18.

வியாசன் —தருமனைத் தேற்றுதல், 13 -52,53,54; அசுவத்தாமனிடம் வந்து சமாதானம் கூறல், 15-19 அவனுக்கு உபதேசித்தல், 15-21.

விராடன் —துரோணனால் தலை துணிக்கப்படல், 14-112

வீடுமன் —கங்காபுத்திரன், 11-4

வீமசேனன் —வாயுவின் மகன், மாருதியெனப்படுவன், 11-22; தருமனை நோதல், 13-19; துரியோதனன் தம்பியர்

எழுவரை மாய்த்தல், 14-43; தருமன் செவிப் படும்படி சங்கினை யூதுதல், 14-45; மேலும் துரி யோதனன் தம்பியர் அறுவரை மாய்த்தல், 14-51; மற்றும் துரியோதனன் தம்பியர் எழுவரை மாய்த் தல், 14-52; மேலும் எழுவர் தம்பியரைக் கொல்லு தல், 14-53; விகர்ணனைத் தலைதுணித்தல், 14-55; துரியோதனன் தம்பியர் பதின்மரை மாய்த்தல், 14-93; அருச்சுனனை நிஷ்டூரமாகக் கூறுதல், 15-14; இவன் மேல் நாராயணாஸ்திரம் விடுதல், 15-17.

வைசம்பாயனன்—ஜனமேஜயனுக்குத் துரோணபருவத்தின் கதையைக் கூறியவன், 11-2.

ஜனமேஜயன் —வபுட்டை கேள்வன், 11-2.

———

துரோண பருவத்தின் அரும்பதவகராதி முதலியன

அ·பிரசித்தி காட்டுவது, 11-52

அகடு-வயிறு, 13-52

அகி-பாம்பு, 11-16

அசி-வாள், 11-19

அடுதல்-கொல்லுதல், 11-8

அண்டர்-ஆயர், இடையர், 11-1

அண-போன்ற, 15-6

அத்தி-ஹஸ்தி; யானை, 14-50

அந்தகன்-குருடன், 14-43

அம்பரம்-வானம், தேவலோகம், 13-80

அமரேசன்-இந்திரன், 14-111

அயம்-குதிரை, 14-70

அயர்வு-களைப்பு,15-22

அயிர்ப்பு-குறை, 14-81

அயில்-கூர்மை, அம்பு, 14-99

அயுதம்-பதினாயிரம், 12-22; 14-107

அரன்-சிவபிரான், 15-20

அரன் அருளிய மறை-உருத்திரமந்திரம், 14-18

அராவணையான்-பாம்புப்படுக்கையன்,கிருஷ்ணன், 15-12

அரி-பகை,சத்துரு, 12-12; விஷ்ணு,13-31. சிங்கம்,13-32. ஆயுதம், சங்கு, 14-42.

அரிமருகன்-அபிமன்,13-31.

அருக்கன்-சூரியன், 14-42

அலக்கண்-துன்பம்,14-57

அலகை-பேய்,14-32

அலரி-சூரியன்,14-87

அலரோன்-பிரமன், 11-11; 15-18

அலாயுதன்-பலராமன், (அலம்-கலப்பை),13-8

அவ்வியம்-வஞ்சனை, 11-7

அழல்புங்கம் - ஆக்னேயாஸ்திரம்,14-26

அளறு-சேறு, நரகம், 13-64

அறம்பொறுத்துவெல்லும், பாவம்புறந்தரும், 14-83

அனிகபூபன்-சேனைத்தலைவன், 12-6

அனிகம்-சேனை, 11-3

அனிலம்-காற்று, 13-21

அனுசர்-தம்பியர்,13 . 26

ஆகுதல்-செய்தல், 14-74

ஆசு-கவசம்; (Armour), 14-111

ஆசுகம்-அம்பு, 11.17

ஆசை-திக்கு, 14-15

ஆண்மை-பிரதாபம், 12-12; பராக்கிரமம், 13-32

ஆர்ப்பு-ஆரவாரம், 13-68

ஆரணம்-வேதம், 13-51

ஆரம்-சந்தனம், 11-1

ஆரியன்-துரோணாசாரியன், 11-3

ஆலி-பூதம், 14-18

ஆழி-சக்கரப்படை, 14-75

ஆளி-சிங்கம், 14-88

ஆன்-எருது,14-75

இகுத்தல்-கொல்லுதல், 15-19

இதம்-உபசாரவார்த்தை, 13-4

இதழி-கொன்றை, 13-87

இந்திரி-அருச்சுனன், 14-37

இபம்-யானை, 13-22

இயம்-வாச்சியம், 11-12

இரவி-சூரியன், 14-97

இல்பொருளுவமையணி, 13-79

இவுளி-குதிரை, 11-12

இனன்-சூரியன், 13-70; 14-104

ஈமக்கடன்-இறுதிச்சடங்கு, 13-53

உட்குதல்-நடுங்குதல், 15-2

உடற்றுதல்-போரினைச்செய்தல், 13-18

உடு-நட்சத்திரம், 14-79

உடுக்கள் காதலன்-சந்திரன், 14-79

உததி-சமுத்திரம், 12-3,16

உதயன்-சூரியன், 14-77; [உதையன் எனவும் வரும்-14-35]

உதையன்படை-சூரியாஸ்திரம், 14-35

உபையர்-(இருவர்) இருதிறத்தவர், 14-86

உம்பர்-தேவர்கள், 14-24

உயிரிகுத்தல்-உயிர்போக்குதல், 15-15

உரகம்-பாம்பு; 14-86

உருத்தல்-கோபித்தல் 14-78

உருத்திரம்-ஓர் மந்திரம், 13-86

உலுத்தர்-உலோபிகள், 13-64

உவமையணி, 13-21

உள்ளம் முன்பு-மனத்துணிச்சல், 14-73

உறழ்-ஒத்த, (உவமவுருபு), 14-106

உறை-கவசம், 14-12

ஊழித்தழல்-பிரளயகாலத்து நெருப்பு; 14-48

எச்சம்-மிச்சம்,12-19

எஞ்சுதல்-குறைதல், ஒழிதல், கெடுதல், 15-9

எடுத்துக்காட்டுவமையணி, 15-8

எரிமகம்-யாகாக்னி, 15-19

எவ்வம்-துன்பம், 14-62

எற்றுதல்-வீசியெறிதல், 12-13

ஏதி-ஆயுதம், படைக்கலம், 14-106; 15-19

ஏதுத்தற்குறிப்பேற்றவணி, 11-22; 14-113

ஏதுவணி,11-10

ஏமம்-தங்கம், 13-52

ஏர்-நன்மை, 14-5

ஏல்வை-சமயம், 12-17; 14-108

ஏழ்நாவோன்-அக்னி, 15-18

ஒருமைப்பன்மைமயக்கம், 13-35

ஒருவுதல்-விட்டுநீங்குதல், 13-74

ஒவ்வுதல்-ஒப்புதல், பொருந்துதல், 14-49

ஒகோ-ஐயோ (அவலச்சொல்), 12-25

ஓசனை-யோசனை (சுமார்பத்துமைல்), 14-33

ஓதம்-சமுத்திரம், 13-56

ஓதை-ஓசை, ஒலி, 13-56

ஓம்படுத்தல்,-பாதுகாக்குமாறு சேர்த்தல், 14-4

ககனம்-ஆகாசம், 14-56

ககனர்-வானோர், 13-8

கங்குல்-இரவு, 14-110

கடு-விஷம், 14-79

கபடு-வஞ்சனை, 12-26

கருணி-மலை, 11-18

கருணிகை-தாமரைப்பொகுட்டு, 13-1

கருத்துடையடைகொளி, 12-26; 13-11: 14-62; 15-10

கலப்பை-அலாயுதம், 14-69

கவந்தம்-தலையற்ற உடல், 11-17

கவரி-தேர் (திவாகரம்), 14-70

கவுந்தி-குந்தி, 13-47
களம்-கழுத்து, கண்டம்; களாப்பூ, 14-79
கற்கிமா-அசுவத்தாமா; 15-19 (கற்கி-குதிரை)
கறையாறு-இரத்தநதி, 14-64
கன்றுதல்-சிவப்பேறுதல், 14-102
கனம்-மேகம், 14-108
கனிட்டன்-தம்பி, 14-24
காத்திரம்-கோபம், 14-27
காயம் - ஆகாயம், 15-10
கால்-காற்று, வாயு, 14-88
கிருஷ்ணனைத் துரியோதனன் கொடும்பாவியென்றது, 14-78
கிலேசம்-வருத்தம், 14-81
கிள்ளை-குதிரை, 13-37 ; 14-73
கிளை-சுற்றத்தார், 15-7
குசை-தருப்பை, 13-76
குஞ்சரம்-யானை, 15-9
குடபால்-மேற்குத்திசை, 14-75
குடிலை-பிரணவம், 13-86
குணக்கு-கிழக்கு, 11-25
குணம்-நாண்கயிறு, 13-9
குருவமிசம்-சந்திரவமிசம்' 14-79
குருளை-குட்டி, 13-39
குரைதல்-ஒலித்தல், 13-50
குறித்தல்-ஊதுதல், 13-43 ; 15-9
குறைந்திடுதல்-பழுதுபடுதல், 14-97
கூ-பூமி, 14-75
கூளி-பேய், 13-46
கேசவன் அத்திரம்-நாராயணாஸ்திரம், 14-18
கேது-கொடி, 13-20

கைதவம்-கபடம், வஞ்சனை, பொய், 11-9 ; 15-21

கைம்மா-யானை, 12-8

கைமுறிதல்-கையை நெரித்தல், 13-74

கையமைத்தல்-கையமர்த்துதல் ; கையாற்சைகை காட்டி அடக்குதல், 14-63

கொக்கரித்தல்-ஆரவாரித்தல், 14-107

கொடிஞ்சி-தேர்உறுப்பு, 14-94

கொள்ளை-செல்வம், 13-37

கோல்-அம்பு, 14-57

கோளரி-சிங்கம், 13-39

சகத்திரம்-சகஸ்ரம் :ஆயிரம், 14-4

சத்தி-சூலம், வேல், 14-27

சதாகதி-காற்று, 14-89

சந்தம்-அழகு, 14-45

சந்தனம்-தேர், 11-20

சம்பு-சிவபிரான், 11-11

சயந்தனம்-தேர், 13-6

சரதம்-உண்மை, மெய், சத்தியம், 14-41

சரதன்-தருமன், 14-41

சலதி-சமுத்திரம், 14-36

சிமந்தபஞ்சகம்-ஸ்யமந்தபஞ்சகம் என்ற ஐந்து மடுக்கள், 14-76

சிலிமுகம்-அம்பு, 14-96

சீதரன்-திருமால், 15-20

சுதன்-மகன், 11-20

சுரபி-பசு, 11-10

சுவணெட்டி-ஸ்வர்ணஷ்டீவி என்பான், 13-52

சூசிகாவியூகம், 14-3 : (சூசி-ஊசி)

சூள்-சபதம், 12-3

செகுத்தல்-கொல்லுதல், 11-8

செத்தை-சருகுக்குப்பை, 13-20

செய்ய-சிவந்த, 12-27

செருநர்-பகைவர், 14-32

செல்-மேகம், 14-80

சென்னி-தலை, 13-15

சேது-அணை, 14-82

சேயரி-சிவந்தவரிகள், 11-2

சேவகத்திறம்-வீரச்செயலின் கூறுபாடு, 14-47

சைவசாசி - சவ்வியசாசி: அருச்சுனன், 14-13

சொல்லெச்சம், 13-29

சொற்பின்வருநிலையணி, 14-78

சொற்பொருட்பின்வருநிலையணி, 13-29

சோரி - இரத்தம், 14-96

சோணமாரி-பெருத்த மழை, 15-11

தகும் - அங்கீகாரப்பொருளது, 13-73

தடிதல் - கொல்லுதல், 12-23

தண்டம் - கதாயுதம், 14-15

தண்டோன் - வீமன், 12-2

ததி - தயிர், 11-1

தரணி - சூரியன், 13-17

தரியலர் - பகைவர், 13-88

தழிஞ்சி, 12 - 10

தளம் - சேனை, 11-8

தனுர்வேதி - வில்வேதத்தில் வல்ல துரோணாசாரியன். 12-5

தனையன் - மகன், 14-90

தாமரை நாயகன் - சூரியன், 14-71

திதி - ஸ்திதி : நிலைபெறக்காத்தல், 15-20

திரிபதகை - கங்கை 11-4

தினகரன் - சூரியன், 13-1

துகள் - பொடி, 14-76

துடர் - சங்கிலி (chain), 14-95

துத்தி - புள்ளி, 13-20

தும்பைப் பூமாலை சிவபிரானுக்குரியது. 12-1

துரங்கத்தாமன் - அசுவத்தாமன், 14-94

துரங்கம் - குதிரை, 14-10

துரோணம் - வில், 14-25

துவந்தம் - தொடர்பு, 14-76

தூரி - தூரியம், பறை, 13-65

தெவ் - பகைவர், 11-7

தேசிகன் - ஆசிரியன், 14-11

தேற்று - தேற்றுங்கொட்டை, 13-60

தொடை - அம்பின் தொகுப்பு, 13-44

தோல் - யானை, 14-32

தோன்றல், ஆண்பாற்சிறப்புப் பெயர், 14-26

நந்தனன் - குமாரன், 13-47

நந்துதல் - சாதல், 12-22

நரன் - அருச்சுனன், 11-10

நரேசன் - நரர்களிற்சிரேட்டன், திட்டத்துய்மன், 15-6

நள்ளார் - பகைவர், 14-31

நளினம் - தாமரை, 13–61

நாகம் - விண்ணுலகம், 13-18; 14-78; மலை, 13-38; 14-78; பாம்பு, ஆடை, 14-78

நாகர் - தேவர், 14-35

நாராயணன்தன் வாளி - நாராயணாஸ்திரம், 15-16

நாவேழான் - அக்னி, 14-75

நிதானம் - நிறைவேற்றும் நேர்மை, 12-26.

நிபந்தம் - நிபந்தனை, 12-9

நிறம் - மார்பு, 14-17

நெடுமொழி - வீர வார்த்தை, 15-17

நென்னல் - நேற்றைத் தினம், 14-67; 15-22
நேர்தல் - உடன்பட இசைதல், 14-54
பகழி - அம்பு, 14-26
படி - பூமி, 13-40
படுத்தல் - கொல்லுதல், 14-78
படை - போர், 14-29
பதாதி - காலாள், 11-17; 14-89
பயசு - நீர், 12-21
பரிசை - கேடயம், 13-38;
பரியின் நாமன் - அசுவத்தாமன், 15-3
பலகை - கேடயம், 14-24
பவம் - பாவம், 15-14
பற்குனி – அபிமன், 13-29
பாடி - படைவீடு, பாசறை, 11-23
பாதவம் = பாதபம்: மரம், 13-59
பாம்பணை - பாம்புப் படுக்கை, ஆதிசேடன், 14-82
பாற்கரன் = பாஸ்கரன்: சூரியன், 14-57
பிணச்சேது - பிணத்தினாலாகிய அணை. 14-64
பிதாமகன் - பாட்டன், வீடுமன், 11-4
பிராசம், 13-34
பிறகுறிப்பு, 13-11
பிறிதினவிற்சி, - 13-19; 14-102
பின்னோன் - தம்பி 11-5
புங்கம் - அம்பு, அஸ்திரம், 14-26, 91
புரந்தரன் - தேவேந்திரன், 14-55
புராந்தகன் - சிவபெருமான், 14-112
புராரி - ருத்திரன், சிவன், 15-12
புனிதம் - பவித்திரம், பரிசுத்தம், தூய்மை, 15-15
பூரணன் - சத்வகுணசம்பன்னன், 12-4
பொய்யில் வேந்தன் - பொய்யில்லாத அரசன், தருமன், 15-12

பொய்யுடையான் - துரியோதனன், 12-1

பொருமுகம் - போர் முனை, 15-19

பொலன் - பொலிவு, விளக்கம், அழகு, 13-90

பொன்றுதல் - இறத்தல், 13-18

பொன்னுலகு - வீட்டுலகம், 15-5

மகம் - யாகம், 12-5

மங்கலவழக்கு, 13-22

மட்டு - தேன், 13-87

மடங்கல் - சிங்கம், 13-27

மண்டலவியூகம், 12-2 (வியூகம் - படை வகுப்பு)

மதாசலம் - யானை: 14-89

மதிக்குடையவன் - மன்மதன், 11-1

மருங்கு - பக்கம், 14-110

மருத்துவர் - அசுவினிதேவர்கள், 14-101

மவுலி - கிரீடம், 13-33

மற்கடம் = மர்க்கடம்: குரங்கு, 14-109

மறம் - சினம், (பிங்கலந்தை), 15-13

மன்றல் - படுக்கை, 13-76

மா-குதிரை, 14-89

மாசுணம் - பாம்பு, 15-18

மாதங்கம் - யானை, 11-12

மாதிரம் - திசை, 14-28

மாய்கை - மாயை, 14-75

மாரணகாலம் - மரணவேளை, 15-6

மாருதி - வீமன், 11-24

மிடல் அமர் - வலியபோர், 14-16

மித்திரன் - சூரியன், 14-103

முக்கணன் - சிவபிரான், 13-89

முகடு - மேலுச்சி, 14-36

முகுந்தன் — விஷ்ணு, கிருஷ்ணன், 13-5

முசலம் - உலக்கை, போரிற் பயன்படும் ஓர் ஆயுதம், 14-69

முட்டிநிலை - கைப்பிடி நிலை, 13-84

முராரி - கிருஷ்ணன், 14-32; 15-12

முளரி - தாமரை, 12-27

முன்னவன் - தமையன், 12-5

முனிதல் - கோபித்தல், 14-98

முனிவு - கோபம், 15-12

மெய்விரதன் - தருமபுத்திரன், 11-6

மைச்சந்தம் - கருநிறம், 14-45

மைந்து - வலிமை, 13-30

மையாழி - கருநிறக்கடல், 12-3

மொய்ம்பு - வலிமை, 13-20

யோசனை சுமார் பத்துமைல் தூரம், 14-4

வச்சிரபாணி - இந்திரன், 13-5

வஞ்சினம் - சபதம், 13-67

வண்டில் - சக்கரம், 13-42

வராகக்கொடி, சயத்திரதனுக்கு உரியது, 14-73
(வராகம் - பன்றி)

வருணப்பகழி - வாருணாஸ்திரம், 14-26

வருதினி - சேனை, 13-26

வல் - சூது, சூதாட்டம், 14-80

வல்லபம் - சாகசம், 12-14

வலம்புரி - நந்தியாவட்டை (நஞ்சாவட்டை) 13-47

வலவன் - பாகன், சாரதி, 12-18

வளி - வாயு, காற்று, 13-21

வளை - சங்கு, 14-36

வன்னி - பிரமசாரி, வீடுமன், 11-3; அக்னி, 11-13.

வனம் - நீர், வடசொல், 14-18

வாகினி - சேனை, 11-22

வாசவன் - இந்திரன், 14-111; 15-18

வாசி - குதிரை, 14-19

வாணர் - வாழ்பவர், 13-80

வாயுவாளி - வாயவ்யாஸ்திரம், 14-17

வாரணக்கை - தும்பிக்கை போன்ற நீண்ட கை, 12-4

வாரணம் - யானை, 13-51

வாரி - சமுத்திரம், 11-13

வாளி - அம்பு, 13-13

விக்கிரமம் - பராக்கிரமம், 12-19

விசிகம் - அம்பு, 13-22

விடை - இடபம், எருது, 13-84

விண்டு - வாயு, 14-107

வெண்மையுடையார் - சிவபிரான், 12-1

வெந் = வென்; முதுகு; (நகரனகரமாறி வந்தது) 11-21; 14-90

வெந்நல்கிடல் - புறமுதுகிடல், 11-15

வெய்யோன் - சூரியன், 11-22

வேலை - கடல், 11-1

வேள் மன்மதன், 11-18

வேற்றுப்பொருள்வைப்பணி, 13-53

—

துரோண பருவத்தின் சில அருந்தொடர்கள்

வழக்கோரமுரைத்தார் நரகெய்துவர், 11-24

பெற்றவருக் கனமளியாது இல்லாளோடும் பீடுறவாழ்பவர் நரகிலாழ்வர், 11-25

வாய்மைநிதானம் மறையவர்க்கேது ? - 12-26

பன்னுமாரியனைப்பழித்தவன், 13-15

கன்னியாடை தொட்டவன், 13-15

உருவுண்டேல் அழிவுண்டு, 13-53

அத்திரமென் கைச்சிலையென் குடையென் பூணென், அரசரெனும் விறற்பெயரென் அழகுக்கோ ?, 13-58

நன்னிலத்திற் சுகதுக்கஞ் சமமாய்க்கொண்டு நளினமுநீரென வாழ்தல் நல்லோர் கொள்கை, 13-61

பரிந்தயலவர்த்தழீஇப் படுங்கருவழிக்க மருந்துநுகர்வார் அதை வழங்குபவர் நரகெய்துவர், 13-63

அழைத்தே விருந்தினில் விடந்தனை விளைப்பவர் நரகெய்துவர், 13-63

பாவலர்தமிழ்க்குதவு பான்மையில் உலுத்தர், கேவலம் இளைத்தவர் கெடக்கருதும் கீழ்கள் நரகில் உறுவர், 13-64

இகலைக்கொன்றேயிறந்த அரசரின் மனைவியர்க்குக் குலமாதர் கொள்கை ஏலாது, 13-75

மூதறிவிஞோர்க்குச் செக்கர்நிறன்மாலும் ஒரு தேவு எனத்தெளிந்தான், 13-89

நிராயுதர்மேல் படைவிடுதல் தகாது, 14-16

அன்றவையில் நடுநிலைமை யறைந்திடலால் நன்றிமறந்துயிர் கவரேன், 14-54

கடாவெனக்கான் திரிந்து அருந்தக்கண்டதெலாம் உணர்குவை போர்க்கருமம் தேராய் ; அடாது வலோருடன் பொருதல், 14-59

போரிருவர் செய இளைத்தாற்கு உதவிசெயத்தகுமோ, 14-61

உதவியாயினருக்கு உறும் இடுக்கண் அகற்றிக் காவாது எவ்வம் இருத்திடல் அறம், 14-62

எமக்குதவி மேவினனுக்கு யான் இடுக்கண் மேவாது ஓம்பல் குற்றமதாம்; நெருநல் அமர்குறித்து அபிமனைப் பலராய்க்குழுமிக் கோறல் நற்றருமம், 14-63

வென்றல் இளைத்திடல் வீரர்க்குளது, 14-67

குடைநாகமெடுத்தாளின் குழாமளித்த கொடும்பாவி, 14-78

வல்லால் ஐவரை வென்ற மன்னவன், 14-85

நிணச்சேறும் கறையாறும் பிணச்சேதும் கடந்தேகி, 14-82

பொறுத்துவெலும் அறம்; பாவம்புறந்தரும், 14-83

முன்னோர்சொல் மறுத்து இளைஞருரைக்கு இசைந்தாய், வரும் ஊழின் விளைவிது, 14-83

மன்ன! நின்னை வெறுத்தல் அழகு: எனை நீ வெறுத்திடில் என் செய்வது, 14 83

விதி வென்றோர் யாரே? 14-84

உலகர் இமையவர் அலைகொள்சலதியும் உரகமொடும் இபம் அலைவுற திசைகள் மறைபட கணைகளின் இகல்செய்தார், 14-86

ஆழிப்படையொடுங்கி மறைந்ததனாற் பழித்திடும்நம் மதலையெனப் பழிக்காற்றுன்போற் குடதிசையின் தடங்கடலிற் குதித்திட்டான் ஓராழிக்கொடிஞ்சித் தேரோன், 14-94

பிறருரைக்கில் நாத்துணிப்பேன் குருக்களென்றிப் பிழைபொறுத் தேன், 14-98

சுருதிநூற் றவமெய்ஞ் ஞானந்துறந்துநீ அரசர் செய்கை புரிவது தகுதியன்று, பொன்னுலகுறுமாறுள்ளம் ஒருவழிப்படுதல் நன்று, 15-5

ஓர்பயனுக்காய் பொய்யறையில் அப்பொய்யும் மெய்யாம், 15-7

ஓதுபேரழலுக்கீரம் உருது; ஒரு பொய்க்கு ஏது ஏதம்? 15-8

புரிவேள்விக் குயிரிகுத்தல்போல் நாம் மாயோன் புகன்மொழிகொண் டிகுத்ததெலாம் புனிதம் என்றே தருமன் உரைத்தனன், 15-15

மந்திரம்பொய்த்து ஏதியாற்றல் சிதைந்தது, ஒன்னார்க் கடங்கிடலால் தேவு இல், - என்றே கூறுவது தவறு, 15-19

கைதவம்கொள் அரசுக்காய் அமர்செயலால் மந்திரமும் ஆசுகமும் வாளாபோனது, 15-21

—

துரோண பருவத்தின் செய்யுண்முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்
அக்கணமிராக்கதர்நூறயுத	245
அங்கவனேடிகல்புரிய	228
அச்சமுறுமுட்டிநிலை	132
அட்டதிக்ககலம்பரம்புவி	56
அடலிடும்பிமகற்குடைந்த	194
அடிபணிந்துதிட்டிரன்அனுசன்	113
அத்தனேயுயிர்க்குயிராகி	125
அத்திதேர்பரிமொய்த்த	67
அதியுக்கிரமுடையதிது	41
அந்தவேலைதருமராசன்	257
அந்திமுன்சிந்துபதிதுணித்	135
அந்திவந்ததிங்கெண்ண	209
அப்படைகளிளுலெப்படைகளும்	140
அம்பரவாணர்பல்லருந்தவத்தவர்	124
அம்பருதகூடுற்றவென்னினன்	53
அரசினை ஏர்வெந்தந்தார்	84
அரவுயர்த்தோனே வலினிற்ருனை	251
அரன்யானுமொன்றதறிவிப்ப	120
அருக்கன்மேற்கடைந்தானவ	175
அருணனிற்றேர்கடவியமன்	79
அருந்தவனுரைத்தல்கேளா	3
அவ்வணஞ்சேனைநாதன்	6
அவ்வுரைக்கங்கரியுதவி	196
அவ்வுரைக்கிருதோளோங்கி	5
அவிரொளிகைலைசென்றதும்	134

செய்யுள்	பக்கம்
அறன்மகன்வளை யோதையி	172
அன்றருளுநின்படையா	126
அன்றவையினடுநிலைமை	188
அனிலன்மாமகன்வாரி	178
அணையபொழுதயத்தாமன்	246
ஆடநிவந்தகவந்தம்பேய்	30
ஆதலிருலவனிகுத்தானன்றி	275
ஆயகாலையின்மாலுரத்தினும்	207
ஆயிரமிரதர்தேரை	86
ஆரியன்சுதனங்கர்பூபதி	54
ஆற்ருதுளநொந்தாரியனடி	151
ஆனதிருற்கைதவங்கொளரசு	276
இகலியுபையர்களனிகமெதிர்	222
இணையில்பகதத்தனுலும்	37
இத்தனைபேரிருந்தளியாதபிமன்	106
இந்தமொழிகேட்டிடுமினென்	110
இந்தவாறுசமர்செய்காலை	34
இரதமிபமயம்வீரர்	239
இருதிறத்துநின்றமன்னர்	32
இருதிறவர்படைகளெதிர்ந்	233
இருவரும்போர்விதமெல்லாம்	189
இலக்குவனுமிராவணியுமெதிர்ந்	81
இவ்வகையேயழிந்தழிந்தோரயில்	236
இவ்வண்ணமிவரிருப்ப	26
இவ்வணியானின்றிலனேல்	183
இவ்வாறமர்முக்காலடைந்	89
இவ்வாறிங்கிவர்வாவிப்	163

செய்யுள்	பக்கம்
இவ்வா றிங்கிவரிரங்க	95
இவனுற்றவரையட்டசிலே	38
இனுநின் றவர் தம்மோடென	152
உததியினுதித்தயானையுருபுவி	35
உருத்திரமதோர்சதமுரைப்ப	128
உலகுபுகழ்சுவணெட்டியிறந்தே	99
உற்றவிண்ணவரந்தணன்	138
எண்ணில்சேவகர் நண்ண	66
எதிர்ந்தபோது சைவசாசி	145
எந்தையைக்கொன் றவனேடு	271
எற்றிபலவரை கொணர்ந்தங்	229
எறிசக்கரம் பறிபோனபின்	90
என் றரசனுரைப்பவயத்தாமன்	238
என் றரசுரைத்திட இரவிநந்தனன்	116
என் றவன் பின்போபிருகணே	141
என் றுநரன் வஞ்சினமியாவரும்	112
என் றுருத்துப்பலவாய்மை	46
என் றுரைத்துப்பணேமுழங்கவிரு	221
என்றேசுபத்திரை யெனுமா தரற்ற	118
என்னடற்காண்டியென் றியம்ப	117
என்னநரன் புலம்பவுடன்	109
எனதன்னே சுயம்வரத்திலெந்தை	199
எனவங்கியம்பிகுசைபாயல்துஞ்சும்	122
ஏவுதண்டமாசைபத்தும்	146
ஏவுவாளிபட்டு மார்பில்	144
ஐயசுதன் கள்வர் கொலநரகமெய்தல்	102
ஐயன் றந்த வயில்கொடுவீமன்	170

செய்யுள்	பக்கம்
ஐவர் விஞ்சையோடமலன்	55
ஒருசிலையிற்றமை வென்றேன்	80
ஒருவணுநரன் சிறுவணுற்றள	58
ஒவ்விலார்துதி தனக்குகந்து	126
ஒற்றினுமார்பினும் உணர்ந்த	114
ஓதமதிலொலித்திடு நம்பாடி	104
ஓதமொத்தியங்களொலிப்ப	139
ஓதுபேரழலுக்கீரம்உருதொரு	261
கங்குன்முற்றுறங்கா	133
கடாவெனக்கான்றிரிந்	193
கடுக்களத்தானெனவரசன்	215
கடுநாகம்விழுங்கிபினர்கக்கிய	214
கண்டிதையாற்றிலனரசன்	148
கயரத துரங்கவீரர்	71
கவளக்களிறும்பகதத்தக்	42
கறையாறும்பிணச்சேதுங்	198
கன்னனிகுத்திடற்காற்ருதறத்தின்	243
கன்னனுந்தன்கண்ணெதிரே	190
காலினடந்தோடியொரு	192
கிருதவன்மனும்கிருபனுஞ்சிலை	61
கிருதவன்மனைத்தேர்மிசைச்	174
கிருபனிறந்தனனெனவே	217
குதித்தலுஞ்சுழற்றிவாளைக்	87
குந்திபோசர்மச்சராதி	32
குருவிளைத்திடமன்னர்வாகினி	57
குறைந்தறிவுபுலன்கலங்கி	108
கூளியெர்டுகவந்தங்கள்கூத்தாடப்	93

செய்யுள்	பக்கம்
கேசவனரனிவர்கிரீசன்	124
கைதவமனேகங்கோடி	8
கொடிசிலைதுரங்கநாலுமறுபடக்	75
கொள்ளைதந்திரதஞ்சாபங்	85
கொற்றமொடு ஐவரும்போய்த்	19
கொற்றவரிபாஞ்சசனியத்தொனி	113
கோற்றெடுத்துநரன்மொழியாற்	191
சகுனிமீதைவர்பின்னோன்	13
சங்கொலிகேட்டிரவின்மொழிப்படி	201
சதாகதிசந்ததிக்கிளையா	45
சந்தனம் அறுபதாயிரங்	136
சாத்தகியால்விடசேனன்	252
சிந்துபதிதேடிகதையவன்மாற்	203
சிரந்துளக்கச்சுரரரசரம்ம	158
சிலராயுதங்களொடு காப்ப	121
சிவந்தகுடதிசைநோக்கித்தெவ்வர்	211
சீனராரியர்மாளவர்	177
சுடர்மறைத்தங்கிருடோன்ற	232
சுதனுடன்போர்புரிநரன்மேல்	240
சுருதிநூற்றவமெய்ஞ்ஞானந்	258
சுருதிமுனிசரமழையாற்றடுத்தான்	156
சூழ்ந்தமர் செய்விந்தரனுவிந்தர்	149
செங்களமனிகத்தோடுஞ்	4
செப்பதீப்பொறிகண்ணுக	181
சென்றணிசக்கரமுடைத்துட் புகுந்து	107
சென்றவைகொணர்ந்திடில்	127
சென்னியோடுகைகால்களற்றுடல்	62

செய்யுள்	பக்கம்
சைவசாசிசரத்திஞல்	167
சொற்றவணம் பசுபதத்தால்	213
சோரரிகுத்தெறி பிணங்கண்	100
ததிக்குடைமுல்லே	2
தந்தையுரைப்படிசென்று	96
தப்புருனரன்மொழிசபத	114
தரணிமைந்தனேற்றுருவி	64
தரியலரைவென்றமர்	129
தருமன் மகன்விடுகணேயில்	223
தருமன்மத்திரன்மீதுமாளவன்	256
தருமனனிகங்கள்சூறைவளி	73
தருமனிச்செயல்களொற்றர்	9
தருமனேச்செகுக்கிற்பார்த்தன்	8
தனஞ்செயன்சாத்தகி வீமன்	182
தவர்வலமுனிவல்லாரே	10
தளமுதலிழந்துநொந்து	15
தன்மகன்மீதமர்புரிசல்லியன்	18
தனிவரைபுரைதிண்டேரினரும்	29
தனேயனேச்செற்றிடுமிகலாற்	227
தாவேழான்றனேயெதிர்த்தோன்	210
தாளமரைமார்பனருள்கவசம்	162
தானேநாயகன்வீய்ந்தானெனை	264
தினகரனேத்தொழுதாசிரியன்	49
துயிலகன்றெழுந்துபானு	255
துரங்கத்தேரிரண்டு	142
துரியோதனன் பின்னவர்வெகுளி	44
துருபதன்மைந்தனேவென்ற	52

செய்யுள்	பக்கம்
துவர்வாயிதழ்மடியார்விழி	92
தூயவன்சிரத்தெழுந்தோர்சோதி	263
தெவ்வரையினியாம்வென்று	11
தெவ்வைவென்றரசீயென்ன	7
தென்றிசையிற்றிகத்தனெடு	103
தேசிகன்றெடர்ந்துபின்	143
தேசிரவிமகனிசைவுற்	250
தேயவேந்தர்களைத்தணைக்	205
தேர்சிதையதோல்சாயவாசி	164
தேர்சிலைகடுணித்தவனைப்புறங்கண்	161
தேர்முதலிழந்துபாறு	70
தேர்வாசியைநெகிழாவரிசிலை	151
தேரணிமுதலியசேனைசூழச்	16
தேரணியாதியவணியைச்	25
தேரிபம்பரியாளோரிரண்	137
தொடைக்குந்திபோசனருட்	231
தொடையொன்றினிலிடுவேனென	91
நமதனிகமுற்றுநூறுமபிமனை	68
நரனெடுதானுமரனீடுகைலை	123
நலம்புரியுங்கவுந்திசுதர்	94
நாரணகோபாலரொடுநவில்	26
நாளைமேற்றிசையினன்	115
நிணச்சேறும்கறையாறும்	218
நித்தலுந்தன்னெதிர்வருமாமகனை	105
நின்றவன்மீட்டாறியொரு	187
நென்னலின்வைகறைபுகுந்தின்றந்தி	277
பஞ்சவர்க்கவையெலாம் பகர்ந்து	116

செய்யுள்	பக்கம்
பஞ்சவர்மேற்பொருமாறு	220
பட்டுவாளிமார்புதிரம்	60
படையெடுத்தெதிர்ந்த மன்னர்	33
பரமனருள்பெற்றவன்வானவர்	267
பரிகொளிரதத்திலேறி	36
பரிந்தயலவர்த்தழீஇப்	111
பரிரதவிபங்கள் ஆள்கள்	74
பலருஞ்சூழ்ந்தமைகண்ட	169
பற்பலமதக்கரிகள்பற்பல	77
பற்றிடமுனையில்வருமுனியை	31
பாகன்மேல்பரிமேனரன்மேல்	168
பாவலர்தமிழ்க்குதவுபான்மையில்	111
பிரளயத்திலெழுமுகிலும்	83
பிறருரைக்கினுத்துணிப்பன்	235
பின்றிரிபதகைசேயாம்	4
பின்னிட்டகலுஞ்சகுனி	43
புக்கனேகதேயமன்னர்	144
புகுந்திரதம் வருநரன்மேலினைஞர்	165
புயமுற்றவயிலணியினெளி	40
புரிவேள்விக்குயிருகுத்தல்போல்	270
புறந்தந்தவரசிரவிமதலைபாற்	234
பூந்தார்ப்பாண்டவரணிக	28
பெற்றவருக்கனமளியாதில்லாளோடும்	22
பொய்யுடையாணெண்ணமெலாம்	24
பொருதபிமனெருசிலைக்கே	97
பொருமுகம் விட்டகலாசான்சுதன்	274
பொறுத்துவெலும்அறம்பாவம் புறந்தரும்	219
பொன்றிடாதுயிர்கொண்டிரிந்	65

செய்யுள்	பக்கம்
போந்துதானைப்பிளந்து	173
மட்டிதழிவேய்ந்த சடை	129
மண்டலம்விண்டலமறையக்	155
மத்திரனின்தேர்கிடைப்ப	184
மத்திரனைச்சதானிகன்வென்கண்டான்	241
மதனைவென்றருளழகபிமன்	17
மதாசலத்தான் மதாசலத்தை	225
மற்றவனைக் கொலவலவோவுதித்தேன்	268
மாசுணப்பைத்தலையினடித்தவன்	273
மாத்திரைபுத்திர ரளப்பிலரச	159
மாதிரங்களீரைந்துமழல்கள்	160
மாதேவனிகர்முனிவன்	28
மாரதர்பலர்பற்பலவாயிர	171
மாரணகாலமோர்ந்து	259
மாருதியன்றியாரு நிராயுதராய்	272
மிசையுற்றசிலைமீளிவிடுமேவில்	39
மீட்டிலாயோரெழுவரைவேந்	186
மீதலமவ்வலாயுதன்புக்கிட	247
மீளசிலைமுனிசீறியெதிர்வர	224
மீளயாவருநாலுதானையும்ஏவவே	206
முக்கணனோடடல் வச்சிரபாணி	52
முராரிபுகன்மொழிக்கிசைந்து	265
முன்னயர்ந்தசோமதத்தன் தெளிந்	230
முன்னவனை நரகனல	27
முன்னோனை நோக்கியண்ணுவெனக்	117
மூவரென்னவே மூவரும்வெஞ்சமர்	180
மெய்யினுன்கிளையும்வாழ்வும்	260
மைக்கடனிறத்தனிடை	130

செய்யுள்	பக்கம்
மைந்தனிறந்திடவோர்ந்து	82
மைந்துடையமன்னனுள நொந்து	78
மொய்த்தமன்னவருடன் முனையு	17
வடவையனறப்படும் புழுப்போல்	248
வந்தமன்னர் மன்னுதி	34
வந்தமன்னரொடுங்கி மடங்கிட	179
வந்தவன் வெஞ்சமரியற்றி	185
வந்தனேகமம்பேவி	63
வந்துமாயவன் தங்கை	59
வரத்தாற்பெறுகவசம்மிது	154
வல்லவரோடெற்றிட நீவலனே	242
வல்லாலவரைவென்றமன்னவ	216
வலஞ்செய்தரனுலயம்	131
வலைபீறியபெருவாளைகள்	153
வள்ளன்மைத்துனன்தேரிலாடிய	208
வன்னியிலுதித்தோன்றனை	12
வன்றிறல்மாருதிவிசயன்	20
வாய்ந்தவாகினிகள் சூழ	12
வார்முரசகேதினேடு கதையவன்	72
வார்முரசாதியியங்கள்	51
வாரணமன்னவர் தேற்ற	98
வாள்கேடயம்துகளாயுக	90
விடவகிக்கொடியும் வில்லும்	14
விடுமவனைப்படையடல்யாதென	147
விடுவாளிகள்பொடியாயுக	88
விஞ்சுமச்சுதன் பேராண்மை	262
விதிமுறையின்றிரணுலும்	50

செய்யுள்	பக்கம்
வில்லுகவோர்கதைகொடினன்	244
விழிகனலுகுப்பவாகு துடிதர	69
வீரமொழிந்தமர்புரிவார்விற்	195
வெய்யவன்மகன்றேர் புகுந்து	204
வெற்றிசொற்றெதிர்ந்த வீரர்	256
வெற்றிநரனெமக்குதவி	197
வென்றலிஊத்திடல்வீரர்க்குளதென்	202
வேட்கிணதுருபதேய்ன்	15

சுபம்.